www.tamilarangam.net

# எக்ஸில்



11


EXIL

ஆகஸ்ட் 2001

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனைத்து விமர்சனங்களுக்கும் அப்பால்!



அல்ஹாஜ் எம்.எச்.எம். அஷ்ரஃப்

நெருக்கடிமிகு வரலாற்றுச் சூழலில் சிக்கித்தவித்த இலங்கை முஸ்லிம் சமூகத்திற்கு 'முஸ்லிம் தேசம்' என்கின்ற விதையை ஊன்றிய இந்த ஆளுமைமிகு தலைவன் இன்றில்லை. அவனது பலமான குரலை இழந்து நிற்கும் முஸ்லிம் சமூகத்தின் துயரத்தில் நாமும் பங்கெடுக்கிறோம்.

-எக்ஸில்-

www.tamilarangam.net

# 10 கறுப்பு ஆண்டுகளைத் தாண்டியும்...

நம் தேசத்தில் 1983இல் இருந்து உக்கிரம் பெற்ற தமிழீழ விடுதலையின் பெயரிலான போர் இன்று வரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. விடுதலைப் பாதையில் வேள்விகளும் அவசியம் என்ற நிலைமாறி வேள்விகள் மட்டுமே எமது வரலாறாய் எஞ்சி நிற்கின்ற இலங்கைத் தீவில் தமிழ்பேசும் மக்கள் அரசபடையினரால் அனுபவிக்கின்ற துன்பங்கள் சொல்லிமாளா. அதேவேளை அப்பாவிச் சிங்கள, முஸ்லீம், தமிழ் மக்கள் மீது விடுதலையின் பெயரில் புலிகள் மேற்கொண்டு வருகின்ற வன்முறைகளும் எந்தவகையிலும் குறைந்தவையல்ல. எல்லைக்கிராமங்களில் சிங்கள மக்களை கொன்று குவிக்க புலிகள் போர்க் காரணங்களை போலியாகக் காட்டலாம். ஆனால் வடகிழக்கு எல்லைக்குள்ளேயே காலாகாலமாக வாழ்ந்துவரும் இஸ்லாமியரை 24மணி நேர அவகாசத்தில் துரத்தியடித்தமையையும் பல பள்ளிவாசல் படுகொலைகளை கோரத்தனமாக மேற்கொண்டமையையும் எக்காரணம் கொண்டும் எந்தவிடுதலையின் பெயராலும், எந்த அரசியலின் பெயராலும் நியாயப்படுத்திவிட முடியாது. இவ்விதம் முஸ்லிம்கள் என்கின்ற ஒரே காரணத்துக்காக அவர்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாரிய மனிதஉரிமை மீறல்கள் சுமார் 10 கறுப்பாண்டுகளைத் தாண்டியும் பொறுப்புமிக்க எந்த முயற்சிகளிலும் தமிழ்தேசியவாதத்தின் பெயரில் பாசிஸ்டுகளாய்ப் போன புலிகள் ஈடுபடவில்லை. மாறாக இன்றுவரை கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம்களின் சமூக பொருளாதார செயற்பாடுகள் மீது சட்டாம்பிள்ளைத்தனம் பண்ணும் துப்பாக்கி அடாவடித்தனங்கள் புலிகளால் தொடரப்பட்டே வருகின்றது. இது முஸ்லிம்களின் மத, கலாச்சார, சமூகபொருளாதார, பண்பாட்டு அம்சங்களில் தமிழ் தேசியம் தன் மூக்கை நுழைத்து அச்சமூகத்தின் தனித்துவத்தை, சுயத்தை, சமூக ஆளுமையை சிதைக்கின்ற முயற்சி. மற்றைய இனத்தின் மீது மேலாட்சி பண்ணும் பாசிச அணுகு முறைகளும், சிறுபான்மை இனமொன்றின் தனித்துவத்தை குழிதோண்டிப் புதைக்க எத்தனிக்கும் அனைத்து அதிகாரப் போக்குகளும் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியவை. இவ்வித அதிகாரப் போக்குகளுக்கு எதிராக இலங்கை முஸ்லிம்கள் தங்களை ஓர் தேசிய இனமாக இனம்கண்டு போராடி வருகின்ற இன்றைய சூழலில் "இவர்களது போராட்டத்திற்கான" தார்மீக ஆதரவுக்குரல்களில் ஒன்றே எக்ஸிலின் இந்த இஸ்லாமியச் சிறப்பிதழ்.

அனைத்து அதிகார வடிவங்களுக்கும் எதிராக...

எக்ஸில்.

www.tamilarangam.net

# எக்ஸில்

VOL: III - No:11
Aug - 2001

EXIL

எக்ஸில் 11
"முஸ்லிம் சிறப்பிதழ்"

தொடர்புகட்கு:
EXIL
B.P-204
92604 ASNIERES CEDEX
FRANCE

E-MAIL: exil-inba@infonie.fr
exil.jeba@wanadoo.fr

No d'enreg: 13022670

COVER DESIGN -
A.M.RASHMY & KARUNA


4- வடக்கு கிழக்கு முஸ்லிம்கள் இன்று...
—சிஷ்யன் — இலங்கை
9- மலையைப்பார்த்து இருகுரைத்தல்கள்
—றியாஸ் குரானா— அக்கரைப்பற்று
10- மீண்டும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய...
—கொ.றொ.கொண்ஸ்ரன்ரைன்
இலங்கை
12- காலமும் அகாலமும்
—எம்.கே.எம்.ஷகீப் — ச.அரேபியா
18- இடைமறிப்பு
22- அறிக்கை
-வடகிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு
27- அனிசா ஒரு அறிமுகம்
—அரவிந் அப்பாத்துரை— பிரான்ஸ்
29- வேறு வேறு
30- முஸ்லிம் தேசம் X தமிழ் பாஸிஸ்டுகளின்...
—எம்.ஆர்.ஸ்ராலின் — பிரான்ஸ்
37- எங்கள் தாயகமும் வடக்கே
39- போதும் என்ற மனமே
—ஏ.இக்பால் — இலங்கை
40- இலங்கை முஸ்லிம்கள் கடந்துவந்த...
ஏ. ஜீ. எம்.ஸதக்கா —
50- இன்னும் சில இடைமறிப்புகள்
54- யார் அழித்தாரோ
எஸ்.நஸீறுதீன்
59- Notes by mithila
62- சூபிகள் குறித்து தொடரும் உரையாடல்
—ஹெ.ஜீ.ரசூல்
71- காவாரின் விமர்சனச் சித்திரங்கள்
72- மேலப்பாளையம் முஸ்லிம் மக்கள் மீதான...
சாந்தி— திருநெல்வேலி
89- நூல் விமர்சனம்
பெண்ணே போற்றி - நாதன்—பிரான்ஸ்
யுத்தத்தின் இரண்டாம் பாகம்-தமிழரசன்—பேர்ளின்
100- ஈறல்
— அனார் -சாய்ந்தமருது
101- சதுரங்கம்
—செல்மா பிரியதர்ஸன்— இந்தியா
102- இலங்கை முஸ்லிம்களை நசுக்கும்...
—சுஹறா — ஓட்டமாவடி
108- ஈறல்-
—எஸ்.நளீம்— மீறாவோடை
109- முஸ்லிம்களின் இனத் தனித்துவத்தின்...
எம்.எஸ்.எம்.அனஸ்—பேராதனை
116- கடதாசி மனிதர்கள்
—சோலைக்கிளி — இலங்கை
117- கலைக்கப்பட்ட தேன்கூடுகள்
—தேவா— ஜேர்மனி
120- சாவகச்சேரி முஸ்லிம்கள் -சிலகுறிப்புகள்
—உதயகுமார் — பிரான்ஸ்
122- கவிதை
—ஜெபா — பிரான்ஸ்
123- இலங்கை முஸ்லிம்களின் வாழ்வு...
—பாலைநகர் ஜிஃப்ரி —இலங்கை
126- Un Poéme de Mahieddine Nabet -பிரான்ஸ்
127- முஸ்லிம் தேசியவாதத்தை நிராகரி...
—அழகு குணசீலன்— சுவிஸ்
133- இரண்டு- பிரதிகளுடான வெற்றுப்...
—கற்சுறா —பிரான்ஸ்
137- கலாமோகன் கவிதை- பிரான்ஸ்
138- எங்கே போவோம்
—ஜாபீர் எஸ். முகம்மது—இலங்கை




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




சிஷ்யன்

கடந்த ஐம்பது வருட கால இன ஒடுக்குதல் இன்று விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்திருந்தாலும், இப்போராட்டம் இரு தசாப்தங்களாகவே ஆயுதப் போராட்டமாக கூர்மையடைந் திருக்கிறது. இந்நிலையில் வடகிழக்குத் தாயகத்திலுள்ள முஸ்லீம்கள் பற்றிய தீர்மானகரமான எண்ணங்களை தமிழ்ப் பெரும்பான்மை போராட் டத் தலைமை இதுவரை வெளிப்படுத்தாதிருப்பது இப்பிராந்திய முஸ்லீம்களது சுயாதிபத்திய உணர்வுகளை மீட்டி விடுவதாகவே உள்ளது.

இந்நாட்டு முஸ்லீம் தேசியத்தை சிங்கள, தமிழ் தேசிய வாதத்துள் கரைத்து விடுகின்ற பேரினவாதச் சதியை அன்றைய மேல்த் தட்டு வர்க்க முஸ்லீம் தலைமைகள் இனங்காணத் தவறியிருந்தார்கள்.

அன்று தொடக்கம் இன்றுவரையும் முஸ்லீம் தேசிய வாதச் சிந்தனையும் எழுச்சியும் திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்படாமையின் விளை வுகள் எதிர்காலம் பற்றிய தொடர்ச்சியான அச்சத்தை முஸ்லீம் மக்களிடம் தோற்றுவித்துள்ளது. தமிழ் மக்கள்(சிங்கள) பேரினவாத நெருக்குதல்களுக்கு மாத்திரம் முகம் கொடுக்க நேரிட்டது. முஸ்லீம்களது நிலையோ, (சிங்கள, தமிழ்) பேரினவாதங்களின் இருமுனை அடக்குமுறைக்குள்( பாக்கு வெட்டிக்குள் அகப்பட்டதைப் போல) நசுங்குண்டிருக்கிறது.

கொழும்பிலுள்ள முஸ்லீம்களது வர்த்தக ஏகபோகத்தை ஒடுக்கியதும் இன அடர்த்தியைச் சிதைத்து, கலாச்சார சிதைவுக்குட் படுத்தி வருவதும், இந்நாட்டில் ஒரேயொரு முஸ்லீம் பெரும்பான்மை மாவட்டமான அம்பாறை, கல்லோயா குடியேற்றத்திட்டம், தீக வாவி புனிதப் பிரதேசம் போன்ற திட்டமிட்ட நடவடிக்கைகளால் முஸ்லீம் மக்களது காணிகள் முஸ்லீம் பெரும்பான்மை வளம் என்பன சிதைவுண்டிருப்பதும் திட்டமிட்ட பல்தேசிய கொள்கைகளால் முஸ்லீம் களை மாற்றாந்தாய் மனப்போக்கில் நடாத்துவதும் என சிங்கள பேரினவாதத்தின் தீய விளைவுகளை நாம் சுதந்திரத்திற்குப் பிற்பட்ட நிலவரங்களில் கண்டுகொண்டோம். அவை பெரும்பாலும் முஸ்லீம்களது பௌதீக, மற்றும் உரிமைப் பிரச்சனைகளாகவே அமைந்திருந்தன.

இவை விடுதலைப் போராட்டத்திற்கு முற்பட்டதான நிலைமைகள் என்று நாம் கருத்தில் கொண்டால் போராட்டத்திற்குப் பிற்பட்ட நிலைமைகள் இதைவிட மிகவும் துயரமானவை என்பது நிதர்சனமான உண்மை. அது முஸ்லீம் மக்களது ஜீவாதார உரிமை மறுப்பில் இருந்து எதிர்கால இருப்பு, உயிர்வாழும் உரிமை என்ற மிக



எதிர்காலத்தில் முஸ்லீம் சமூகத்தை தமது சொந்த வாழ்விடத்தில் நிம்மதியற்றதாகவும் அடிமைத்தனத்தை எதிர்கொள்வதற்கான மனநிலையைப் பேணத்தக்கதாகவும் மாற்றுவதற்கு போராட்டத்தின் பெயரால் அடிப்படை மனித உரிமைகளைக்கூட புறமொதுக்கித் தள்ளும் பணிகளே நிதர்சனமாகத் தெரிகின்றன. இது எப்போது மாறும் என்ற மாறாத தாகமும் நெஞ்சை அடைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அடிப்படையான பிரச்சனைகளிற்கு அச்சுறுத்தலான காலகட்டமாக அமைந்தவை.

இந்நிலைமை முஸ்லீம்கள் தனியான அரசியற் கட்சியினூடாக புதிய அரசியல் பாதையை தேர்ந்தெடுத்ததால் மேலும் அதிகரித்துள்ளது. தமிழ், முஸ்லீம் மக்களுக்கிடையிலான இன நல்லுறவில் பாரிய விரிசல்களை ஏற்படுத்தியுள்ளதை காணமுடிகிறது. இது முஸ்லீம் மக்களது தேசிய எழுச்சியினால் தமிழ் பெரும்பான்மை கொண்டுள்ள குழப்பமான மனப்போக்கை காட்டுவதாக உள்ளது. இந்த யதார்த்தத்தை அளவுகோலாகக் கொள்வதற்கு கிழக்கு மாகாணத்தில் நாம் மட்டக்களப்பு மாவட்டத்து முஸ்லீம்களது நிலைமைகளை ஆராய்தல் பொருத்தமாகும். வடக்கு முஸ்லீம்கள் தங்களது தாயகத்தை துறந்து வெளியில் இருப்பதால் கிழக்கில் அதாவது முஸ்லீம்கள் மிகவும் சிறுபான்மையாக வாழ்கின்ற மட்டக்களப்பு மாவட்ட நிலைமை நமக்கு இப்பிராந்திய எதிர்கால நிலவரங்களை அளவீடு செய்ய பொருத்தமாக அமையலாம்.

மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்கள் கிழக்கு மாகாணத்தின் மத்திய பகுதியில் மட்டக்களப்பு மாவட்டம் அமைந்துள்ளது. மாவட்டத்தில் மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய மூன்று தேர்தல் தொகுதிகள் உள்ளன. இதில் மட்டக்களப்புத் தொகுதியில் காத்தான்குடி பிரதேசத்திலும் ஏறாவூர் பிரதேசத்திலும் கல்குடா தொகுதியில் ஓட்டமாவடிப் பிரதேசத்திலும் வாழைச்சேனைப் பிரதேசத்திலும் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

1994இல் மேற்கொள்ளப்பட்ட இடைக்கால சனத்தொகை கணக்கெடுப்பின்படி மாவட்டத்தில் மொத்த சனத்தொகை 462,000 ஆகும். இதில் முஸ்லீம்கள் தொகை சுமார் 116,096 ஆகவுள்ளது. இது மொத்த சனத் தொகையில் 24வீதமாகும்.

இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 3.8 பகுதிகளைக் கொண்டிருக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பு 2464.4 ச.கி. மீற்றராகும். இதில் சுமார் 50ச.கி. மீற்றர் பரப்பிலே முஸ்லீம்கள் வாழ்கிறார்கள்.

இதன்படி மாவட்டத்தில் 76%ஆன தமிழ் மக்களுக்கு 98%ஆன நிலப்பரப்பும் 24%உள்ள முஸ்லீம் மக்களுக்கு ஏறக்குறைய 2% நிலப்பரப்பும் உள்ளது. இது இம்மாவட்ட முஸ்லீம் மக்களுக்கு நிலவளப் பங்கீட்டில் எத்துனை அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை காட்டுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு ச.கி.மீற்றர் பரப்பெல்லைக்குள் வதியும் சனத்தொகை( 3417) காத்தான் குடிப் பிரதேசத்திலும், குறைந்த சனத்தொகை(33) வாகரைப் பிரதேசத்திலும் காணப்படுகிறது.(ஆதாரம்- மட்டக்களப்பு மாவட்ட புள்ளிவிபரவியல் கையேடு 1995)

மேலும் மாவட்டத்தில் 12 பிரதேச செயலாளர் (நிருவாகப்)பிரிவுகள் உள்ளன. இதில் மூன்று முஸ்லீம் பகுதிகளுக்குரிய பிரிவுகளாகும். மாவட்டத்திலே கல்வித் திணைக்களத்தை தவிர்த்து ஏனைய அனைத்து அரச திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்களில் பணி புரியும் முஸ்லீம் ஆளணியின் எண்ணிக்கை சுமார் 2%த்திற்கும் குறைவானதாகவே காணப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்திலே 12 உள்ளூராட்சி அமைப்புகள் உள்ளன. இதில் காத்தான்குடி நகரசபை, ஏறாவூர் பட்டினசபை, ஓட்டமாவடி பிரதேசசபை ஆகிய 03 உள்ளூராட்சி அமைப்புகள் முஸ்லீம் பகுதிகளில் உள்ளவை. இம் மூன்று உள்ளூராட்சிஅமைப்புகள் தவிர முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழும் ஒரு உள்ளூராட்சி அமைப்பு கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச சபைப் பிரிவிலாகும். இங்கு சுமார் 23,000 முஸ்லீம்கள் உள்ளார்கள். இது இப்பிரதேச சபைப் பிரிவின் மொத்த சனத்தொகையில் 40%ஆகும்.

இப்பிரதேச முஸ்லீம்களது பிரதான தொழில் விவசாயமும், மீன்பிடியுமாகும். கணிசமான விவசாயக் காணிகள் கோறளைப் பற்று வடக்கு (வாகரை)ப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேசத்திற்கு அடுத்த நிலையில் முஸ்லீம்கள் கோறளைப்பற்று வடக்கு (வாகரை) ப்பகுதியில் வாழ்ந்து வந்தார்கள்.

1981ம் ஆண்டைய சனத்தொகைக் கணக்கெடுப்பின்படி வாகரைப் பகுதியில் மொத்த சனத்தொகை 13,892ஆகவும் முஸ்லீம்களின் சனத்தொகை 1011ஆகவும் காணப்பட்டது. இது மொத்த சனத்தொகையில் 7.2% ஆகும். 1985 ஏப்பிரலில் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாகவும் 1990களில் ஏற்பட்ட பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாகவும் 20க்கு மேற்பட்ட தங்களது குடியிருப்புகள், விவசாயம், மேட்டு நிலக்காணிகள், கால்நடைகள் என்பவற்றை இழந்து சுமார் 5000 முஸ்லீம்கள் அகதிகளாக வெளியேறியிருந்தார்கள். இன்று அவர்கள் அகதிகளாக எல்லைக் கிராமங்களில் மீள் குடியேற்றம் செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கான இழப்பீடுகள் எதுவும் இதுவரை வழங்கப்படவில்லை.

1990ம் ஆண்டு ஏற்பட்ட பாதுகாப்பற்ற சூழ்நிலை காரணமாக கோறளைப்பற்று (வாழைச்சேனை) பிரதேச முஸ்லீம்களது நிருவாக விடயங்களில் பின்வரும் மாற்றங்கள் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

1. இப்பிரதேச முஸ்லீம்கள் தங்களது குடியிருப்பு, தேர்தல் நடவடிக்கை, வரிசெலுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துதல் என்பவற்றுக்காக கோறளைப்பற்று (வாழைச்சேனை) எனும் தமது பூர்விகப்பகுதியில் இணைந்திருந்தார்கள்.

2.தங்களது நாளாந்த நிருவாக (பிரதேச செயலகப்) பணிகளுக்காக கோறளைப்பற்று மேற்கு (ஓட்டமாவடி) பிரதேசத்துடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

3.தங்களது விவசாயக் காணிகள், பயிர் செய்கைத் தொழில் நடவடிக்கைகளுக்கு கோறளைப் பற்று வடக்கு (வாகரை) பிரதேசத்துடன் தொடர்புபட்டவர்களாக உள்ளார்கள்.

இவ்வாறான நிருவாகக் குளறுபடிகள் முஸ்லீம்களது சமூக, அரசியல், பொருளாதார, கல்வி, நிருவாகத் தொழில் துறைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருவதால், இப்பிரதேச முஸ்லீம்கள் நீண்ட காலமாக இன்னலுக்குட்பட்டவர்களாக உள்ளார்கள்.

அத்தோடு வாழைச்சேனைப் பிரதேச சபையில் முஸ்லீம்களது நிலைமையை அறிய அங்குள்ள ஆளணி, விபரம், அபிவிருத்தித் திட்டங்கள் பற்றிப் பார்ப்போம்.

அட்டவணை-01

| வழங்கப்பட்ட வேலைவாய்ப்புகள் (ஆளணி) | தமிழர்கள் | முஸ்லீம்கள் |
|---|---|---|
| 39 | 37 | 02 |

அட்டவணை-02

| வருடம் | மொத்த அபிவிருத்தி திட்டங்கள் | தமிழ்ப் பிரதேசத்தில் | முஸ்லீம் பிரதேசத்தில் |
|---|---|---|---|
| 1994 | 08 | 07 | 01 |
| 1995 | 03 | 02 | 01 |
| 1996 | 17 | 15 | 02 |
| 1997 | 08 | 06 | 02 |
| 1998 | 22 | 20 | 02 |

(மேலே தரப்பட்ட அட்டவணையின்படி முஸ்லீம் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட எந்த வேலைத் திட்டத்திற்கும் ஒரு இலட்சம் ரூபாவுக்கு மேல் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆதாரம்- பிரதேச சபையின் வருடாந்த அறிக்கைகள்)

இவ்வாறான புறக்கணிப்புகள், இழப்புகள் தாங்கள் நிருவாக ரீதியாக அநாதைகளாக்கப்பட்டதன் காரணமாக ஏற்பட்டவையே என்பதை உணர்ந்து கோறளைப்பற்று வடக்கு (வாகரை) பிரதேச முஸ்லீம் மக்களும், கோறளைப்பற்று (வாழைச்சேனை) முஸ்லீம் மக்களும் தங்களது பிரதேசங்களிலுள்ள தமது குடியிருப்புக் காணிகளையும், விவசாய நிலங்களையும், தமது தொழில் நிலவரங்களையும் பேணத்தக்க நில ரீதியாக ஒன்றிணைந்த ஒரு புதிய நிருவாக அலகைக் கோரி கடந்த பத்து வருடங்களாக போராடி வருகிறார்கள்.

நீண்டகால முயற்சியின் பயனாக அண்மையில் இலங்கை அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட புதிய பிரதேச செயலகங்களை உருவாக்குவதற்கான ஆணைக்குழு, இவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டுள்ளது. இதன்படி மட்டக்களப்பு மாவட்டத்தில் இரண்டு புதிய பிரதேச செயலகங்கள் உருவாக்குவதெனவும்

1. கோறளைப்பற்று மத்தி (வாழைச் சேனை) எனும் பிரிவு வாழைச்சேனை, வாகரைப் பிரதேச முஸ்லீம்களுக்காகவும்,

2. கோறளைப் பற்று தெற்கு(கிரான்) எனும் தற்போதைய உப பிரதேச சபையையும் பிரதேச செயலகங்களாக்குவதெனவும் தீர்மானித்துள்ளது.

மட்டக்களபபு மாவட்டத்தில் முஸ்லீம்களுக்காக ஒரு புதிய பிரதேச செயலகம் உருவாக்கும் விடயம் தற்போது பல தரப்பட்ட தமிழ்த் தலைமைகளால் நிராகரிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களது பலத்த எதிர்ப்பையும் தேடிக் கொண்டுள்ளது. இது இந்த மாவட்டத்தில் குறுகிய நிலப்பகுதியில் பெருகிய சனநெரிசலுக்குட்பட்டு கூட்டுப் புழுக்களாய் அவதியுறும் முஸ்லீம் மக்களது எதிர்கால வாழ்வு, இருப்பு புதிய குடியேற்றம் என்ற அபிலாசைகளுக்கு தீ வைத்துள்ளது. மனச் சாட்சியிழந்த தயவு தாட்சண்யமற்ற நிலையில் தமிழ் தலைமைகள் முன் வைக்கும் காரணங்கள் மிகச் சாதாரணமானவை, அநீதியானவை.

புதிய முஸ்லீம் பிரதேச அலகு அமைக்கப்படும் போது அதில் வாகரைப் பகுதியிலுள்ள ஒரேயொரு கிராம சேவைப் பிரிவு மாத்திரமே உள்ளடங்குகிறது. அப்பகுதி தமிழ் மக்களது பண்டைய நிலம் என்பதும், அங்கு ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கோயில் இருந்ததாகவும் நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் வசித்து வருவதாகவும் எதிர்ப்புக்கான காரணமாக முன் வைக்கப்படுகிறது.

குறித்த கிராம சேவையாளர் பிரிவு கோறளைப்பற்று வடக்கி (வாகரை) லுள்ள புணானை கிழக்கு கி.சே. பிரிவாகும். தற்போது அக்கிராம சேவையாளர் பிரிவிலுள்ள றெதிதென்ன, ஜெயந்தியாவ, கேனிமடு போன்ற பகுதிகளில் சுமார் 2000 முஸ்லீம்களும், இப்பிரிவிலுள்ள ஆலம்குளம் என்ற பகுதியில் சுமார் 400 தமிழ் மக்களும் வாழ்கின்றனர். மேலும் 03 முஸ்லீம் பாடசாலைகளும், ஒரு தமிழ்ப் பாடசாலையும், 04 பள்ளிவாயல்களும், 01 கோயிலும் காணப்படுகின்றன. பதிவு பெற்ற 03 முஸ்லீம் கிராம அபிவிருத்தி சங்கங்கள் உள்ளன. இவ்வாறான சாத்தியங்களையும் மீறி இப்பகுதி முஸ்லீம்களுக்குரித்தாகக் கூடாது என சாதிப்பது இம் மாவட்ட முஸ்லீம்களது அரசியல், கலாச்சார இருப்புக்கான உத்தரவாதத்தை கேள்விக்குட்படுத்திய விடயங்களில் ஒன்றாகிறது.

வாகரைப் பிரதேசத்தில் நூற்றாண்டுகளுக்கு மேலாக முஸ்லீம்கள் கொண்ட பந்தத்துக்கு காரமுனை எனும் இடத்தில் முஸ்லீம் பெரியார் ஒருவரின் நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முந்திய கல்லறை முக்கிய சான்று, அது தவிர அங்குள்ள முஸ்லீம் மக்களது கடந்த கால வாழ்விடங்களான சுமார் 20க்கு மேற்பட்ட சிறு குக்கிராமங்கள் ஆதாரமாக உள்ளன.

ஒரு பிரதேசத்தில் பூர்வீகமாக தாங்கள் வாழ்ந்து வந்த தமக்குரித்தான நிலங்களை பெற்றுக் கொள்வதற்குள்ள இப்பிரச்சினை, இம் மாவட்ட முஸ்லீம்களது எதிர்கால இருப்புடன் தொடர்புபட்டு காணப்படுவதால் தமிழ் நியாயவான்கள், நேர்மையான சிந்தனையாளர்கள் தீர்ப்புக்காக இது முன்வைக்கப்படுகிறது.

இது இன்று முழு மாவட்டத்திற்கும், ஏன் வடகிழக்குக்கும் பொதுவான பிரச்சினை. நீண்டகாலமாக அடிமைப்பட்டுக் கிடந்து, இன்று அடிமைத்தளைகளை உடைத்தெறியத் துணிந்த தமிழினம், தாம் அடிமைப்படுத்தாள்வதற்கான இனமாக முஸ்லீம்களை கருதிக் கொண்டுள்ளதோ என்ற ஐயம் எழாமலில்லை.

இன்றுமட்டக்களப்பு மாவட்டத்திலே செய்கை பண்ண முடியாமல் வழியற்றுக்கிடக்கும் ஒரு இலட்சம் ஏக்கர்களுக்கு மேற்பட்ட முஸ்லீம்களது விவசாயக் காணிகள், பிழைப்புக்கு மார்க்கமின்றி கடன் பெற்று விவசாயம் செய்கின்ற போதும் ஒரு ஏக்கருக்கு செலுத்தப்படும் 500ரூபா வரி, மாவட்டத்திலுள்ள சுமார் 400க்கு மேற்பட்ட மீன்பிடி படகுகளுக்காக மாதாந்தம் 1500ரூபா வீதம் வரிகட்டும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம் மீனவர்கள், மாதாந்த வரி செலுத்தும் முஸ்லீம் வியாபாரிகள்... (வரி யாருக்கு என்று மாத்திரம் கேட்காதீர்கள், மூச்...!)



Muslim Area In Batticaloa District

கடந்த 1990களில் காத்தான்குடிப் பள்ளிவாயல்களில் வணக்கத்தில் இருந்தவர்கள் மீது, ஏறாவூர் நித்திரையிலிருந்த அப்பாவிகள் மீது, கிரான் குளத்தில் கொல்லப்பட்ட 67 ஹஜ்ஜாஜிகள், அழிஞ்சிப் பொத்தான, அகமட்புர, பள்ளியகொட கிராமத்தின் அப்பாவி மக்கள்... (இவர்கள் எந்த விதத்தில் போராட்டத்திற்கு இடைஞ்சலாக இருந்தார்கள் என்று கேட்கக்கூடாது. மூச்...!) உத்தியோக பற்றற்ற கணக்கெடுப்பின்படி, மட்டக்களப்பு மாவட்ட முஸ்லீம்களின் உயிரிழப்புக்கள் சுமார் 1000க்கும் அதிகமாகும்.இதுவரை மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லீம்கள், கடத்தப்பட்டும் கண்ணிவெடியிலும், துப்பாக்கிச் சூட்டிலுமாக மரணித்தவர்கள் அநேகம்...(இதில் கணிசமான புத்திஜீவிகளும் முஸ்லீம் தலைவர்களும் அடங்குவர்.)

இவ்வாறான தாக்குதல்கள் மேலெழுந்தவாரியாக இராணுவ சாகசத்தை வெளிப்படுத்துகின்ற அடையாள தாக்குதல்தாம். மாறாக, திட்டமிட்ட அடிப்படையில் கருத்தியல் ரீதியாக இம்மாவட்ட முஸ்லீம்கள் மீதாக நடாத்தப்பட்டு வரும் இனவிரோதக் கருத்துக்கள், சிந்தனைகள் போராட்டத்துக்கென பரப்பப்படுகின்ற மிகைப்படுத்தல்கள் மிகவும் அபாயகரமானவை.
(ஒரு நாளைக்கு எல்லாரும் எழும்பி ஓடப் போறீங்கள்)

போராட்டம் முனைப்பைக் கொண்ட ஆரம்ப கால கட்டம் தொட்டே முஸ்லீம் வாலிபர்களின் அர்ப்பணிப்புடனான பங்குபற்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றுதல்களும் பொதுமக்கள், உள்ளூர் பிரமுகர்களின் ஒத்துழைப்புக்கள் என்பனவும் மிகவும் திட்டமிட்டே மறைக்கப்பட்டிருப்பதும் இவ்வகையில் சேர்க்கத்தக்கதே.

எதிர்காலத்தில் முஸ்லீம் சமூகத்தை தமது சொந்த வாழ்விடத்தில் நிம்மதியற்றதாகவும் அடிமைத்தனத்தை எதிர்கொள்வதற்கான மனநிலையைப் பேணத்தக்கதாகவும் மாற்றுவதற்கு போராட்டத்தின் பெயரால் அடிப்படை மனித உரிமைகளைக்கூட புறமொதுக்கித் தள்ளும் பணிகளே நிதர்சனமாகத் தெரிகின்றன. இது எப்போது மாறும் என்ற மாறாத தாகமும் நெஞ்சை அடைக்கிறது.

இறுதியாக கடந்த கால நடவடிக்கைகளை சீர்தூக்கிப் பார்ப்பதன் மூலம் தமிழ்த் தலைமைகள் திறந்த மனதுடனான கலந்துரையாடலுக்கு முஸ்லீம் தலைமையுடன் முன்வர வேண்டும். முஸ்லீம்களுக்கான உரிமை விடயத்தில் தமிழ்த் தலைமைகள், கனவான்கள் பாத்திரத்தைத் தாங்க வேண்டும். முஸ்லீம்களது எதிர்கால விமோசனம்

* முஸ்லீம்கள் ஒரு தேசிய இனம்
*வடகிழக்கு தமிழ் பேசும் மக்களின் தாயகம்.
* வடகிழக்கில் உள்ள முஸ்லீம்களுக்கு நீதியான, சமத்துவமான அரசியல் தீர்வு .
*அவர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்துவது.

எனும் நான்கு அம்சங்களில் நின்றும் ஒரு தீர்வாகப் பிறக்க வேண்டும் என யாசிக்கிறோம்.

எந்தப் போராட்டமும் எக்காலமும் ஒரே பாதையில் பயணிப்பதில்லை. மானுட நீதியைப் பேணும் சமத்துவ நிலை இங்கு என்றைக்காவது உருவாகத்தான் வேண்டும் என்ற அடிப்படை நம்பிக்கையிலிருந்து பிறந்ததே இந்த யாசகம்..

## காணாமல் போனவர்கள்



தொடர்புகட்கு:

37, Dhankanatta Rd
Mabola, Wattala
Srilanka

யாத்ராவின் நான்காவது வெளியீடான அஷ்ரப் சிஹாப்தீன் அவர்களின் காணாமல் போனவர்கள் என்ற இந்த கவிதைத் தொகுதி கிட்டத்தட்ட 20வருட காலத்தில் எழுதிய கவிதைகளில் காணாமல் போனவை தவிர்த்து 41 கவிதைகள் பதிவாகியுள்ளன. இந்தக் கவிதைகள் மரபுக் கவிதையின் சாயலிலும் புதுக்கவிதையின் சாயலிலும் மாறி மாறித் தோன்றினாலும் சந்தங்களைக் கவனத்தில் கொண்டு அநேக கவிதைகள் எழுதப்பட்டுள்ளன. ஈழத்துக் கவிதை உலகின் பாரம்பரியம்தான் இது என்று இன்னமும் சொல்லிக் கொண்டிருந்தால், நாம் சமகாலக் கவிதையின் வளர்ச்சிப்போக்கை எட்டாது கோட்டை விட்டவர்களாவோம்.

இங்கே சமூக ஒழுங்கமைவு , சீரழிவு, சீரழிவின் மீதான கோபம். எரிச்சல், மௌனம். என்று சமூகத்தின் வழமையான யதார்த்த கவிதைகளையே அதிகம் காணமுடிகிறது. ஆனாலும் கடந்து வந்த வரலாற்றில் முஸ்லீம்கள் எதிர்கொண்ட வாழ்வு ,எதிர் நீச்சல், இழப்புக்கள், இடப்பறிப்புக்கள் என எல்லாமே ரணகளமாயிருக்கும் போது அங்கே தோன்றும் கோபம் ஆக்ரோசமாகவே இருக்கும். அந்தவகையில் அஷ்ரப் அவர்கள் தனது கவிதைகளில் தொட்ட யுத்தம், சமாதானம். வறுமை, மனிதம்.... என்பவற்றை தனது இஸ்லாம் மார்க்கத்தின் உணர்வினூடாக நின்று ஆக்ரோசமான கவிதைகளாகச் சொல்லியிருக்கிறார்.ஆரம்பத்திலிருந்து முடுக்கிவிடப்பட்ட தமிழ்- முஸ்லீம் கலவரங்கள் இன்றைக்கு கொழுந்து விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. இறுதித் தீப்பந்தம் மிக இறுமாப்புடன் ஏற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த தமிழ் முஸ்லீம் உறவு விரிசலின் தொடக்கத்தில் எழுதப்பட்ட ஸெய்த்தூன் கவிதை, மிகுந்த கோபக்கனல் மேவிட ஏற்பட்ட தாங்க முடியாத வலியினால் கலவரங்களில் காணாமல் போன சகோதரிகளுக்காக எழுதப்பட்டது. முஸ்லீம் சமூகத்தில் ஸெய்த்தூன் என்பது ஒலிவ் மரத்தைக் குறிக்கும். ஒலிவ் மரம் சமாதானத்தைக் குறிக்கும். சமாதானத்தைக் குறிக்கும் இந்தப் பெயரை முஸ்லீம்கள் தங்களின் பெண் குழந்தைகளுக்குச் சூடுவார்கள். இவ்வாறு முஸ்லீம் மக்களின் வழ்வோடு ஒன்றிப் போன ஒலிவ் மரத்தையும் சமாதானத்தையும் இழந்து போகும் போது ஏற்பட்ட வலி அஸ்ரப்பின் கவிதைகள் முழுவதிலும் தெறிக்கின்றது. எப்போதாவது தீரும் என்ற ஒரு ஏக்கத்தில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மலையைப் பார்த்து இரு குரைத்தல்கள்

01.
என்னுடைய சொற்களுக்குள்ளிருந்து
சப்தங்களை ஏன் தோண்டியெடுத்தாய்
உதடுகளின் அசைவுகள்
உன்னுடைய வறண்ட பாறையை
உடைத்துவிடாதென்ற நம்பிக்கையிலா
நான் பேசிக்கொண்டேயிருக்கிறேன்
வாயைச் சப்புவதாய் நீ நினைக்கலாமா
மௌனத்தின் குகை என்னை வெருளச்செய்துவிடுமென்று
உன்னுடைய பாதையின் வரைபடத்தை வரைந்தாயா
நீ சுமத்திய வெற்றுவார்த்தைகள்
பொருமிக்கொண்டிருக்கும் ஓரினத்தின் ஆண்மையை
மழுங்கச் செய்துவிடுமென்றால்,
இன்னுமெதை என்னிடமிருந்து பிரிக்கப்போகிறாய்

என்னுடைய சொற்களை
நீயாவது ஒரு முறை சப்தத்துடன் சொல்லிக்காட்டு

02.
கல்லின் சிறையில் அடைபட்டுக்கிடக்கும்
எனது இனத்தின் குரலை
பள்ளத்தாக்கில் புலம்பிக்கொண்டிருக்கும்
எதிரொலியின் ஆதி சப்தத்தை
நிரந்தரத்தின் தளராத பிடியிலிருந்து
அமைதியாய் நான் மீட்பேன்
கல்லின் உட்சுவர்களில் வரையப்பட்டிருக்கும்
எங்கள் முள்ளந்தண்டிலிருந்து கொடூரமாய் பிரிக்கப்பட்ட வர்ணத்தை
கல்லின் ஆழத்தில் உறங்காது ஓயாது துடிக்கும்
சிற்றலைகளைக் கொண்ட எங்கள் நதியை நான் மீட்பேன்

முடிவற்ற காலத்தின் வேர்களில் ரகசியமாய் புதைந்திருக்கிறது
எனது புலம்பல்

நிவால் தாரணி



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் ஈழத் தமிழர் வரலாறு



யாழ் முஸ்லீம்கள் இப்பொழுது ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் அகதிகளாகவே வாழ்ந்து வருகிறார்கள். இவர்களும் புலம்பெயர்ந்தவர்கள்தான். அதிலும் புலம் பெயர்க்கப்பட்டவர்கள். இவர்களது வாழ்வின் துன்பியலும் இலக்கியப் பதிவுகளாக வெளிவந்துள்ளன. இவையும் புகலிட இலக்கியங்கள்தான். இவையும் ஈழத்துத் தேசிய இலங்கியங்கள்தான். இவையும் எதிர்ப்பிலக்கியங்கள்தான்.

கொ. றொ. கொண்ஸ்ரன்ரைன்

நான் வாழும் ஒவ்வொரு கணமும் நான் தமிழனாக உணர்ந்து கொண்டிருக்கிறேன். காரணம் நான் வாழும் ஒவ்வொரு கணமும் நான் தமிழன் என்பது எனக்கு உணர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. நான் தெருவில் செல்கையிலும் வாகனத்தில் பயணிக்கையிலும் வீட்டில் இருக்கையிலும் வேலைத் தளத்திலும் என ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நான் தமிழன் என்பதை எனக்கு மீண்டும் மீண்டும் உணர்த்தப்பட்டுக் கொண்டிருக்கிறது.

இதுதான் ஈழத் தமிழரின் போராட்டத்திற்கான நியாயப்பாட்டின் அடித்தளமாக நான் உணர்கிறேன்.

சிங்களப் பேரினவாதத்தின் பல்வேறு வடிவங்கள் பற்றியும் ஈழத்தமிழர் வாழ்வின் துன்பியல் பற்றியும் நிறையவே பேசப்பட்டும் எழுதப்பட்டும் வந்துள்ளது. இந்த போராட்டத்திற்கான தேவையையும், நியாயப்பாட்டையும் பறைசாற்றும் நிகழ்வுகளை அடுக்கிக்கொண்டே போகலாம்.

ஈழத்தமிழரின் ஆயுதப் போராட்டமானது தீர்க்கப்படாத ஒரு அரசியல் பிரச்சனையின் தவிர்க்கப்படமுடியாத ஒரு பரிணாமமேயாகும். வரலாறு கண்டு வந்த பல போராட்டங்களைப் போல இதுவும் அரசியல் போராட்டமாக ஆரம்பித்து ஆயுதப் போராட்டமாக மாறி இன்று ஒரு சிக்கலான நிலையை அடைந்துள்ளது.

ஈழத்தமிழரின் போராட்டம் ஈழத்தமிழ் தேசியம் என்ற கட்டமைப்பினை அடித்தளமாகக் கொண்டே செயற்படுகிறது. ஈழத்தமிழ் தேசியத்தின் அடிப்படை வரையறாக்களாக வடக்குக் கிழக்கு இணைந்த 'தாயக' க் கோட்பாடும், தமிழ் பேசும் ஈழத்தவர் அனைவரையும் உள்வாங்கும் ஈழத் தமிழர் கோட்பாடும் திகழ்ந்தன.

வடக்குக் கிழக்கு இணைந்த தாயகக் கோட்பாடு மீண்டும், மீண்டும் வலியுறுத்தப்பட்டு கேள்விகளுக்கு அப்பாற்பட்ட ஒரு கருத்தாக்கமாகவே இருந்து வருகிறது.இது எந்த ஒரு பேச்சுவார்த்தைக்கும் ஒரு அடிப்படை அம்சமாகி பேச்சு வார்த்தைகள்முறிவடைவதற்கும் காரணமாக அமைந்து வந்திருக்கிறது.

வடக்கு கிழக்கு இணைந்த தாயகம் என்ற கோட்பாட்டைப் போல ஈழத்தமிழர் என்ற கருத் தாக்கம் முதன்மை பெறாது போய்விட்டது அல்லது முதன்மைப்படுத்தப்படாது போயிற்று. இதனால் இக்கருத்தாக்கமானது ஈழத்தமிழரின் போராட்டத்திலே தக்க செயலுருவம் பெறத் தவறிவிட்டது.

ஈழத்து தமிழ்ச் சமூகம் பல்வேறு உட்பிளவுகளைக் கொண்ட ஒரு சமூகம். பிரதேச ரீதியாகவும் பண்பாட்டு ரீதியாகவும் இவ்வுட்பிளவுகள் மிகவும் இறுகிப் போன ஆழப்பதிந்த பிரிவுகளாகவே இருந்து வருகின்றன. ஈழத்தமிழர் சிங்கள மேலாண்மை என்ற ஒரு பொது எதிரியை நோக்கி ஒரு போராட்டத்தில் ஈடுபட்டதன் காலாக இந்தப் பிளவுகள் தற்காலிகமாக மறைக்கப்பட்டோ அல்லது மறக்கப்பட்டோ உள்ளன. இந்த உட்பிளவுகளின் தாக்கம் அரசியலில் கூட அவ்வப்போது தலைகாட்டவே செய்கிறது. இருப்பினும் இவை பூசி மெழுகப்பட்டுவிடுவது வழக்கம்.

ஈழத்தமிழரின் அரசியல் உணர்ச்சிகரமான பேச்சுக்களால் மெருகூட் டப்பட்ட ஒரு அரசியல். பேச்சு வன்மை கைவரப் பெற்ற அரசியல்வாதிகள் குறிப்பாக வழக்கறி ஞர்கள் ஈழத்து அரசியலில் முதன்மை பெற்றமை இதற்கான ஒரே காரணமாக இருக்கலாம். இப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யான ஒரு உணர்ச்சிவசப்பாட்டுக்கு பேரினவாத சிங்கள அரசுகளும் பேரினவாத சக்திகளின் நடவடிக்கைகளும் முக்கிய உந்து சக்திகளாகத் தொழிற்பட்டன. இதனால் ஈழத்து தமிழரசு அரசியல் ஒருவழிப்பாதையாவது தவிர்க்கப்பட முடியாததாயிற்று.

இப்படியான ஒரு பின்புலத்தில் ஈழத் தேசிய போராட்டத்தின் பேரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பெருமளவு விவாதத்திற்கு உட்படுத்தப்படாது ஏற்றுக் கொள்ளப் படத் தொடங்கியது ஒன்றும் வியப்பல்ல. விடுதலைக்காக ஏந்தப் பட்ட துப்பாக்கி எமது குரல்வளையை நோக்கி திருப்பப்பட்ட போதுதான் இந்தப் போராட்டம் ஒரு புதிய பரிமாணத்தை எட்டத் தொடங்கியிருந்தது. இந்தக் காலகட்டத்தில் புத்திஜீவிகள் ஓரங்கட்டப்பட்டு மாற்றுக் கருத்துக்கள், விமர்சனங்கள் அற்ற ஒரு பாழ் வெளியில் ஈழத்தமிழர்கள் போராட்டம் தள்ளப் பட்டது ஈழத் தமிழரின் போராட்டத்தின்பேரால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் பரந்த களத்தில் ஆராயப் படுவதும் விவாதிக்கப்படுவதும் இக்காலத்தின் தேவையாகும். எத்தனையோ தியாகங்களுக்கூடாக வளர்ந்த இந்தப் போராட்டம் இன்னும் பல தியாகங்களுக்கூடாகத்தான் செப்பனிடப் படவேண்டும்.



இந்த வகையில் யாழ் முஸ்லீம்களின் வெளியேற்றமும் தமிழ் பேசும் முஸ்லீம்கள் பற்றிய நிலைப்பாடும் ஈழத் தமிழ்த் தேசியத்தின் முன் நிற்கும் மிக முக்கியமானதும் அடிப்படையானதுமான பிரச்சனைகளாகும். யாழ் முஸ்லீம்களின் வெளியேற்றம் நியாயப்படுத்தப்படக் கூடியதோ ஏற்றுக் கொள்ளப் படக்கூடியதோ அல்ல. இந்த வெளியேற்றத்திற்கு இன்ன பிற காரணங்கள் கூறப்படினும் அவர்கள் வெளியேற்றப்பட்ட விதம் ஈழத்தமிழ்த் தேசியம் என்ற அடிப்படைக் கருத்துருவாக்கத்தைப் பற்றியும் அதன் செயற்பாட்டு வடிவம் பற்றியும் சில அடிப்படையான கேள்விகளை எழுப்பவே செய்கிறது.

முஸ்லீம்களிற்கும் ஏனைய தமிழர்களிற்கும் இடையில் முறுகல் நிலை அவ்வப்போது குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் ஏற்பட்டு வந்தது நாம் அறிந்ததே. இருந்தாலும் காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலையும் யாழ் முஸ்லீம்களின் வெளியேற்றமும் இந்த விரிசலை நிரந்தரமாக்கிவிடுமோ என்று அஞ்ச வேண்டியுள்ளது.

யாழ் முஸ்லீம்களின் வெளியேற்றத்திற்கு எதிராக பலரும் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்கள். இருப்பினும் இந்த வெளியேற்றத்திற்கான காரணங்கள் பற்றியோ அல்லது அது தவறு என்றோ அல்லது அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணத்தினுள் அனுமதிக்கப்படுவார்கள் என்றோ சம்பந்தப்பட்டவர்களிடத்திலிருந்து உத்தியோக பூர்வமான அறிக்கை ஏதும் வெளியிடப்படாதது பல சந்தேகங்களையும் அச்சங்களையும் எழுப்பவே செய்கிறது.

யாழ் முஸ்லீம்கள் இப்பொழுது ஏனைய மாவட்டங்களில் பெரும்பாலும் அகதிகளாகவே வாழ்ந்து வருகிறார்கள். இவர்களும் புலம் பெயர்ந்தவர்கள்தான். அதிலும் புலம் பெயர்க்கப் பட்டவர்கள். இவர்களது வாழ்வின் துன்பியலும் இலக்கியப் பதிவுகளாக வெளிவந்துள்ளன. இவையும் புகலிட இலக்கியங் கள்தான். இவையும் ஈழத்துத் தேசிய இலங்கியங்கள்தான். இவையும் எதிர்ப்பிலக்கியங்கள்தான். இவை பற்றி எமது கவனத்தை திருப்புவது அவசியம். ஈழத்து தமிழ்த் தேசியம் குறுகிவிடக்கூடாது அதன் குறும் பார்வை அகலப்படுத்தப்பட வேண்டும். நெருக்கடியான சூழ்நிலையும் உணர்ச்சிகரமான மனநிலையும் நியாயபூர்வமான அணுகு முறைக்கு ஏற்ற களமல்ல. எப்பொழுது போராட்ட உத்வேகம் நியாயமான அணுகு முறையை மீறுகிறதோ அப்பொழுது மனிதம் நசுங்கித் தொலைவது தவிர்க்கப்படமுடியாதது.

ஈழத்தமிழரின் போராட்டம் சிங்கள மேலாதிக்கத்திற்கு எதிரான ஒரு போராட்டம். அந்த மேலாதிக்கத்தை எதிர்க்க கிளம்பிய ஒரு போராட்டம் தன்னகத்தே ஒரு மேலாதிக்கப் பண்பினை உருவாக்கும் அபாயத்தை நாம் இனங்கண்டு கொள்ளவேண்டும். நாம் எதனை எதிர்த்துப் போராடுகிறோம் என்பதனைவிட நாம் எதனை உருவாக்கப் போராடுகிறோம் என்பதைப் பற்றி சற்று உரத்தே சிந்திக்க வேண்டிய காலகட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். வரலாறு எமக்கு கற்றுத்தந்த பாடங்கள் பல. போராட்டங்கள், ஒடுக்கு முறைகள் இப்படிப் பலவற்றை வரலாறு எமக்குக் காட்டி நிற்கிறது. வரலாற்றிலிருந்து நாம் கற்றுக் கொள்ளத் தவறினால் நாம் வரலாற்றினை மீண்டும் வாழவேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காலமும் அகாலமும்

## ஒரு நினைவேட்டின் சில பக்கங்கள்

— எம்.கே.எம்.ஷகீப்

தொட்டிலில் கிடக்கும் பிள்ளையின் மூத்திரம் பட்டுத்தெறித்து தூக்கத்தின் ஆரம்ப முயற்சிகள் குழம்புகின்றன. சற்றுத் தள்ளிப் படுத்துக் கொண்டு ஈரம் பட்டுச் சிணுங்கும் மகனை ஆட்டுகிறேன். சின்னச் சிணுங்கலுடன் மீண்டும்கண்ணயர்கிறான். எனக்குத் தூக்கம் கலைந்து விட்டது. மீண்டும் அதற்கான பிரயத்தனங்களில் இறங்க வேண்டும். அது ஒன்றில் குப்புறப்படுத்துக்கொண்டு தலையணையை இறுகப் பற்றியதாகவோ, அல்லது கோணங்கியின் நாவலைப்போன்று விளங்கக் கடினமானதொன்றை வாசித்துக்கொண்டதாகவோ இருக்கவேண்டும். அது மீண்டும் முதல் முயற்சி யாகப் போய்விடும். தூக்கம் தானாக வருகிற சாமான். காலையில் 5 மணிக்கு எழும்பி செய்யத் தொடங்கிய வேலைகளை இப்போது தான் முடித்துவிட்டு மனிசி எதிர்வீட்டுக்காரியுடன் கதைக்கத்தொடங்கி யிருக்கிறாள். அவளின் வேலைகளாவன:

1.இரவுக் கூடலின் அழுக் கைக் களைய குளிப்பது.
2.எனதும் பிள்ளையினதும் ஊர்ப்பட்ட ஊத்தை உடுப்புக்களை கழுவுவது.
3.வேலைக்குப் போகும் எனக்காக காலை யுணவையும், பகலுணவையும் சமைப்பது.
4.பிள்ளைக்கு உணவும் குளிப்பாட்ட சுடுதண்ணீரும் வைப்பது.
5.வீட்டைப் பெருக்கிச் சுத்தம் செய்வது.
6.பிள்ளை எழும்பியதிலிருந்து அதற்குத் தேவையான அனைத்தும் செய்வது
7.மற்றும் ஏனையவைகள்

(இதெல்லாம் எனக்கு எப்படி சரியாகத் தெரிகிறது என்கிறீர்களா? நான்தானே . அவளின் கல்லும் புல்லும்!) எனது தூக்கத்தின் முயற்சிகள் மேலும் மேலும் சிதைவுற்றுச் செல்கின்றன. கற்பனைகளில் பலர் விதம் விதமாய் வருகிறார்கள். நில்பாவுக்கு திரும்பவும் ஒபரேஷனாம் என்ற எதிர் வீட்டு மனிசியின் கதை என்னை இழுக்கிறது. யாரிந்த நில்பா? அவளைத் தெரிந்து கொள்ளவும், அவளோடான கதைக்கும் நான் கொஞ்சம் தமிழ்ப் படங்களில் மாதிரி பிளாஷ்பெக்கில் செல்ல வேண்டியிருக்கிறது.

(அப்படியே விழிகளைத் திறந்து வைத்துக் கொண்டு நான் அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருப்பதாக நீங்கள் கற்பனை செய்து கொள்ளுங்கள். ஒரு சுழற்சியான நிழல் வட்டம் ஒன்று எங்கேயோ தொடங்கி என் கண்களுக்குள், உங்களால் கேட்க முடியாத ஒரு பின்னணி இசையுடன் போய்க் கொண்டிருக்கிறது).

(இத்துடன், ஒரு வித்தியாசமான சிறுகதைக்கான பீடிகையுடன் தொடங்குவதாக நான் நினைத்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துக் கொண்டிருந்த பந்தி முடி வடைந்தது...இனி அறுவைதான்!)

000

அது ஒரு கலகலப்பான காலம். மீசைகள் எனக்கும் என் நண்பர்களுக்கும் அப்போதுதான் மெல்ல அரும்பத்தொடங்கியிருந்தது. (மறைவிடங்களில் எல் லோருக்கும் எப்பவோ மசிர் முளைத்துவிட்டது). அடையாளங்கள் எங்களில் வளர நாங்கள் ஹீரோக்களாகிக் கொண்டிருந் தோம். இருந்தும் அது பத்தாம் வகுப்புக் காலம்தான். டியூஷனுக்கு வரும் பெட்டைகளைத் தவிர வேறெவரிலும் இதுவரை யாருக்கும் பார்வை போகவில்லை. காதலின் தொடக்கங்கள் எங்களுக்கு கலவன் பாடசாலைகளாக அமையவில்லை. தனித் தனியே கட்டிப் போட்டிருக்கி றான்கள் ஆண்கள், பெண்கள் பாடசாலையென! கடைசியில் அதுவும் ஓ.எல் காலத்தில் தான் எல்லோருக்கும் இந்தக் கலவன் டியுஷன் அதிஷ்டம் அடிக்கும். எங்களூர் நகரத்தின் மையத்தில் இருந்தபடியால் பக்கத்து ஊர்களிலிருந்தெல்லாம் நிறையப்பேர் இங்கே வந்து தங்கிப் படித்தார்கள். அப்படித்தான் ஜெசீமும் வந்தான். வசதியுள்ள குடும்பத்தைச் சேர்ந்தவன். என்றாலும் அதற்கான எந்த இளவயதுப் பகட்டோ, ஆடம்பரமோ அவனிடமிருக்கவில்லை. அவனுக்கு மார்க்க பக்தியும் எங்களெல்லாரையும் விட அதிகமிருந்தது. எங்கள் வீடுகளுக்குப் பக்கத்திலேயே பெரிய பள்ளிவாசலும் அமைந் திருந்தது. நாங்கள் தவறாது தொழுதும் வந்தோம். படிப்பு விஷயத்தில் எந்தப் பிர காசங்களும் எங்களில் ஜொலிக்கவில்லை. ஓ.எல் பரீட்சைதான் அங்காலேயா இங்காலேயா என்ற எல்லை களைத் தீர்மானிப்பதாக இருந்தது. இந்த ஓ.எல் காலத்தை நினைக்கையில் கிரிஷாந்திதான் எல்லாருக்கும் முன்னா் வந்து நிற்பாள். நல்ல அழகென்று சொல்லத் தகுந்தவளாய் அவள் ஒருத்திதான் எங்கள் வகுப்பில் இருந்தாள் (மற்ற வகுப்பு நண்பிகள் மன்னிக்கவும்). அவளுக்கு தன் அழகில் கா்வம் இருந்திருக்க வேண்டும். யாருடனும் பேசமாட்டாள். படிப்பில் தான் குறியாய் இருந்தாள். அப்படி படிப்பி லேயே குறியாய் இருப்ப வா்கள் எங்களுக்கு கா்வமுள்ளவா்களாய்த்தான் தெரிந்திருப்பார்கள். அவளை வளைக்க எங்களில் கொஞ்சம் அழகானவா்கள் முயன்று தோற்றுப் போனார்கள். வீட்டுக் கணக்குகளை மறுநாள் கரும் பலகையில் எல்லார் முன்னிலையிலும் செய்ய வேண்டிய விடயத்தில் கூட எங்களால் அவளையும், மற்றப் பெட்டைகளையும் மிஞ்ச முடியவில்லை. அதுவே இடைவெளிகளை ஏற்படுத்திக் கொண்டு சென்றது. யாருக்கும் எங்கள் வகுப்பிலேயே ஒருத்தியை வளைத்துப்போட முடியாது போயிற்று. சிலர் அடுத்த வகுப்புக்களில் சீனியர் தனத்துடன் நுழைந்து துணை தேடிக்கொண்டார் கள். நாங்கள் ஆண், பெண் கலப்பு என்று மாத்திரம் இருக் காதது இன்னொரு விடயம். இந்து முஸ்லிம் கிறிஸ்தவம் என மதக்கலப்புகளும் கொண்டிருந்தோம். அந்த வயதில் இது எதுவும் தடைகளாக யாருக்கும் தெரியவில்லை. கலப்புக் காதல் உச்சத்தைத் தொட்டு வீடுகளுக்கு தெரியும் போது ஓட்டத்தில் முடிகின்றன. இப்படி ஓடிப் போன காதலர்கள் எண்ணிக்கை எங்களூரில் அதிகம்.. என் வீட்டிலும் தான்!

எனக்கு கிரிஷாந்தி மேல் பார்வை போனது. பின்னால் மனதும் போனது. கடைசி வரை வார்த்தை மட்டும் போகவில்லை. இப்படிப் பலர் இருந்தார்கள் என்பது அவள் திடீரென்று தலைமறைவான போதுதான் தெரிந்தது. எங்களின் வாழ்க்கை இப்படி உப்புச் சப்பற்றுக் கழிகையில் மற்றொரு பக்கத்தில் உப்புச் சப்புடன் சிலரின் வாழ்க்கை போனது. எனக்குத் தெரிந்தவா்களில் கோபியும், கிரிஷாந்தியும், சக்தியும் வேறு வாழ்க்கை தேடிக் கொண்டவா்கள். அப்போ தெல்லாம் நிறையப்பேர் அங்குமிங்குமென இயக் கத்துக்குப் போய்க் கொண்டிருந்தார்கள். இதில் என்னுடன் படித்ததில் முதலில் தலைமறைவாகியது கோபிதான். நல்லாப் படித்தவன். மாணவர் தலைவனாயும் இருந்தான். போய்விட்டான். பின்னர் கடலுக்கடியில் செத்தும் போய்விட்டான். கிரிஷாந்தி போனபோதுதான் எல்லோருக்கும் கவலையாகி விட்டது. எங்களில் ஒருத்தி போனதான உணர்வு. அவள் ஏன் போனாள் என்பதற்கு தனிப்பட்ட காரணங்களை விட பொதுக்காரணங்கள் தான் அதிகமிருந்தது. சக்தி போனது நாங்கள் விளையாடிக் கொண்டிருந்த பிக் பூட் டீம் நல்ல கோல் கீப்பர்

காலமும் அகாலமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இல்லாமல் தத்தளித்த போது தான் தெரிந்தது. பின்னர் அவன் ஊருக்கு தோளில் துப்பாக்கியோடு எங்களூர்ப் பொறுப்பாளராக வந்தான். கடைசி மட்டும் கிரிஷாந்தியைக் காணக் கிடைக்கவுமில்லை, அவள் பற்றிய எந்தத் தகவலுமில்லை. அவளுக்கிருந்த திறமைகள், ஆளுமைகளால் இயக்கம் நல்ல இடத்தை வழங்கியிருக்கும் என்பது மட்டும் அடிமனதில் ஒரு நம்பிக்கையாக இருந்து கொண்டிருந்தது.
ஜெஸீமுக்கு இரண்டு தங்கைகள் இருந்தார்கள். ஒருத்தி நில்பா. கடைசித் தங்கை அவள்தான். கடைசித் தங்கையென்று உறுதியாகச் சொல்லலாம். ஏனெனில் அவனது வாப்பா மௌத்தாகி விட்டிருந்தார். உம்மாவுக்கும் வயதாகிவிட்டிருந்தது. நில்பாவுக்கு அப்போது ஒரு ஏழு வயது தானிருக்கும். ஜெஸீமுடன் தான் எப்போதும் சைக்கிளில் ஏறிக்கொண்டு சுற்றுவாள். அவனுக்கு அவ்ளில் நல்ல இரக்கம்.
ஓ.எல். பரீட்சை என்பது எங்களையெல்லாம் கொலைக் களத்துக்கு இட்டுச் செல்கிற ஒன்றாய் இருந்தது. எங்கள் இமேஜ் பெட்டைகளிடத்தில் சரியத் தொடங்குவதற்கான முதல்படி அதுதான். சுழட்டப் போகையிலும் கையில் புத்தகங்களுடன் போய் வீட்டாரையும், ஊராரையும் ஏமாற்றியதின் பெறுபேற்றுக்கான தீர்ப்புகள் எங்களை நெருங்கிக் கொண்டிருந்தது. இந்த நேரத்தில் உனைஸ் அவனின் வாப்பா அவ்னை எச்சரித்த ஒரு வழியை ஞாபகப்படுத்தினான்.
அவர் துறைமுக அதிகார சபையில் வேலை செய்து கொண்டிருந்தார். கஷ்டமான தொழில். பிள்ளைகள் இப்படிக் கஷ்டப்படக் கூடாதென்ற எல்லா வாப்பாக்களுக்குமிருக்கும் அக்கறை அவருக்கும் இருந்தது. அவனை ஒரு முறை சைக்கிளில் ஏற்றிக் கொண்டு பெருந்தெருப்பக்கம் போயிருக்கிறார். அப்போது சரியான கோடைகாலம். அனல் காற்று வீசிக் கொண்டிருந்த நேரம். அந்தப் பெருந்தெரு அப்போது செப்பனிடப்பட்டுக் கொண்டிருந்தது. அந்தக் கொடும் வெயிலில் வியர்க்க வியர்க்க தார் ஊற்றிக் கொண்டிருந்த தொழிலாளர்களை கொஞ்ச நேரம் நன்றாகப்பார் என்றிருக்கிறார். இவனும் ஒன்றும் விளங்காமல் பார்த்துக் கொண்டிருந்திருக்கிறான். சற்று நேரத்தில்:
நல்லாப்பாரு நாளைக்கு இப்படித்தான் ஏதாவது வேலை செய்யோனுமென்டா விளையாடிட்டிரு.. நல்லவேல ஏதாவது கெடக்கோனு மென்டா ஒழுங்காப்படி: என்று மிகப் புத்திசாலித்தனமான தத்துவம் சொல்லியிருக்கிறார். இதை அவன் எங்களிடம் சொல்லியபோது மிகவும் பீலிங்குடன்தான் சொன்னான்.
நாங்கள் நினைத்தோம் இனி அவன் எங்களுடன் சேர்ந்து திரியமாட்டானென்று. ஆனால் அவன் அப்படியெல்லாம் துரோகம் செய்யவில்லை.
கடைசியாக ஓஎல் பரீட்சையும். வந்தது. எல்லோரும் எழுதினோம். அதன் பிறகும் கொஞ்ச நாட்கள் நாங்கள் நல்ல சந்தோஷத்துடன் திரிந்து கொண்டிருந்தோம். பரீட்சை முடிவுகள் வருவதற்கு மாதக் கணக்காகும். ஆனாலும் டியூஷனுக்கு வந்த பெட்டைகளை எங்களால் காணக்கிடைக்காதது கவலை தந்தது. அவள்களில் சிலர் நம்பிக்கையுடன் ஏ எல் டியூஷனும் போகத் தொடங்கியிருந்தார்கள். அந்தளவு நம்பிக்கை எங்களில் யாருக்கும் வரவில்லை. ரிசல்ட் வந்த பிறகும் கூடத்தான்.
எல்லோரும் ஏஎலுக்குத் தேவையான முக்கிய பாடங்கள் ஏதாவது ஒன்றில் கோட்டை விட்டு அருந்தப்பில் ஓரளவு தகுதி பெற்றிருந்தோம். கலைப் பிரிவில், பெயிலான பாடத்தை எடுத்துத் தர வேண்டுமென்ற நிபந்தனையுடன் ஓரிருவருக்கு அனுமதிகிடைத்தது. என்னை வாப்பா மீண்டும் படிக்கும்படி கூறினார். நான் ரிபீட்டர்ஸ் வகுப்பில் சேர்ந்து மீண்டும் படிக்க ஆரம்பித்தேன். இந்த நாட்களில்தான் எனதும் ஜெஸீமினதும் கவனம் வேறு பக்கம் திரும்பியது. எங்களை மார்க்கப் பாடசாலையில் சேர்த்து விடுவதென்று வீட்டார்கள் முடிவெடுத்தார்கள். (பொதுவாக குழப்படி பண்ணு பவர்களைத்தான் இவ்வாறு சேர்த்து விடுவார்களென்று ஊரில் கதைப்பார்கள். ஆனால் நாங்கள் இருவரும் அந்தளவுக் குக் குழப்படிகாரர்கள் அல்ல.)





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதற்கும் ஓஎல் தகுதி வேண்டுமென்றிருந்தாலும் எங்களிடம் இருந்தவை போதுமானவையாக இருந்தன. பின்னர் நானும் ஜெஸீமும் ஊரைவிட்டும் வெளியூர்களில் படிக்கப்போயிருந்தோம். லீவுகள்தான் எங்களுக்கு சந்திப்புக் காலங்களாயிருந்தன.

000

ஒரு விடுமுறையில் நாங்கள் ஊரில் ஒன்றாய்ச் சந்தித்தோம். எங்களுக்குள் நிறைய வித்தியாசங்கள் ஏற் பட்டிருந்தன. பக்குவப் பட்டுப் போயிருந்தோம். ஜெஸீம் சிறிய தாடி வைத்திருந்தான். அவன் மார்க்கத்தில் ஏற்கனவே இருந்த ஆர்வத்துடன் மேலும் அறிவையும் வளர்த்திருந்தான். அவன் எங்களுக்கு ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்தான். அவனுடன் எங்களுக்குள்ளேயே ஒரு மரியாதையுணர்வு ஏற்பட்டது. எங்களைத் தவிரவுள்ள மற்ற நண்பர்கள் ஊர் வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதில் அழகாய் இருந்த ஒருவன் காதல் வயப் பட்டுமிருந்தான். அவளின் பெயர் ஷோபா. தமிழ்ப் பெட்டை.. இதெல்லாம் எங்களூரில் பெரிதான விடயமாக இருக்கவில்லை. அன்று சித்திரைப் புத்தாண்டுக்கு முதல் நாள். தமிழ், சிங்களவர்கள் கொண்டாடத் தயாராகிக் கொண்டிருந்தார்கள். எங்கள் வீதியில் நான்கைந்து சிங்களக் குடும்பங்கள் இருந்தன. அவர் களெல்லாரும் வீட்டில் அவர்களுக்கிடையேதான் சிங்களம் கதைத்தார்கள். வெளியில் எல்லாரும் தமிழ்தான். மார்டின் ஐயா சிறிய கடையொன்று போட்டிருந்தார். அப்போது எங்கள் வீதியில் இருந்த ஒரே சில்லறைக் கடை அவருடையதுதான். அவரின் பிள்ளைகளும் திருமணமாகி வேறிடங்களில் இருந்தார்கள். ஊரில் பிரச்சினைகள் மெது மெதுவாய் வரத்தொடங்கிய காலத்தில் சில குடும்பங்கள் வெளியேறத் தொடங்கி விட்டன. மார்டின் ஐயாவும், லக்ஷ்மி பேக்கரிக்காரர் களும்தான் கடைசிவரை யிருந்து வன்செயலில் அடிபட்டுச் சென்றார்கள். அந்த பேக்கரிதான் எங்கள் அரைவாசி ஊருக்கு காலை மற்றும் இரவு உணவுகள் வழங்கியது. கடைசியில் அதைத் தீயிட்டுக் கொளுத்தி விட்டார்கள். இயக்கங்கள் ஊருக்குள் வந்த பின்தான் அங்கிருந்த சிங்களவர்கள் அடித்து விரட்டப்பட்டார்கள். எங்கள் வீதியில் டெலோக்காரர்கள் ஒரு சிங்கள வீட்டில் அலுவலகம் வைத்திருந் தார்கள். எங்கள் வீதியில் இருந்து பிரியும் சாரதா வீதித் தொங்கலில் ஈரோஸ்காரர்கள் இருந்தார்கள். அப்போது அந்த இயக்கம் மட்டும்தான் பண்பாடான இயக்கமாக இருந்தது. மற்ற இயக்கங்கள் எல்லாம் அடி தடியும் வெட்டும் குத்தும்தான். இயக்கங்கள் ஊருக்குள் வந்த பிறகு சில முஸ்லிம் பெடியன்களும் அதில் சேர்ந்து கொண்டார்கள். உனைஸ் ஈரோஸில் சேர்ந்தான். அவனுக்கு ஆயுதப் பயிற்சியும், அரசியல் கலை இலக்கியத் துறையில் வாசிப்புப் பழக்கத்தையும் ஏற்படுத்தினார்கள். சங்கப் பலகை என்ற சஞ்சிகையை அவர்கள் வெளியிட்டார்கள். ஷரீப் டெலோவில் சேர்ந்து இராணுவத்தனத்துடன் நடந்து கொண்டான். யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு செய்த சேட்டைகளை பின்னாளில் அவன் எங்களுக்குக் கூறினான். மார்டின் ஐயா மட்டும்தான் கடைசியில் மிஞ்சிப்போனார். அவரின் வயதுதான் அதற்குக் காரணம். இருந்தாலும் பிறகு சிங்களவர்கள் பெரும் பான்மையான இடங்களில் செய்த அட்டகாசங்களால் இங்கிருந்த தமிழர்களுக்கும் கோபமேட்பட்டு சிங்களவர் களை அடிக்கவெளிக் கிட்டனர். இந்தக்கோபம் முஸ்லிம்களுக்கும் ஏற்பட்டு விட்டது. அதற்கிடையில் ‘ஹபரனையிலிருந்து சிங்களக் காடையர்கள் லொறிகளில் வருகிறார்களாம் என்றவுடன் இன்னும் கோபம். அன்று ஊரே தூங்கவில்லை. ஏதோ அவசரப்பணிக்கு எல்லோரை யும் அழைத்தமாதிரி எங்கள் வயசுப் பெடியன்களெல்லாம் கையில் கிடைத்த பொல்லுதடிகளுடனும், கத்திகளுடனும் ஊர்ப் பாதுகாப்புக்குக் கிளம்பி விட்டார்கள். நான், அனுஷன், உனைஸ், சாபி, நிசார் என்று எங்கள் செட்டும் புறப்பட்டது. நான் இடுப்புக்குள் மீன் வெட்டும் கத்தியைச் சொருகியிருந்தேன். ஆட்களும் கையில் ஏதோ ஆயுதமும் இருக்கையில் எங்கிருந்தோ வீறாப்பு வந்து ஏறிக் கொள்கிறது. இதற்கிடையில் இன்னொரு சிக்கல். மார்டின் ஐயாவைக் காப்பாற்ற வேண்டும். அவர் வயதான அப்பாவி. ஏற்கனவே அவரின் கடையை நொருக்கி விட்டார்கள். அந்த நேரத்தில் எங்களால் ஒன்றும் செய்து கொள்ள

காலமும் அகாலமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முடியவில்லை. கடைசியில் அவரைத் தேடிக்கொண்டு சிலர் வந்தபோதுதான் அவரைக் காப்பாற்ற வேண்டுமென்று அவருடன் நன்றாகப் பழகிய சிலர் நினைத்தார்கள். உண்மையில் இது ஒரு இக்கட்டான நிலை. இவ் வாறான நிலைகள்தான் எங்களுக்கு தொப்பி பிரட்டிகள் என்ற அழியா இழிவை ஏற்படுத்தியு மிருக்கிறது. என்ன செய்வது? ஒரு புறம் நாங்கள் எல்லோரும் தமிழ்ப் பெடியன்களுடன் சேர்ந்து சிங்களவர்கைள எதிர்க்கத் தயாராக இருக்கிறோம். மறுபுறம் சிங்களவரான இவரையும் காப்பாற்ற வேண்டும், கடைசில் மார்டின் ஐயாவுக்கு பர்தா போடப் பட்டது. அவரை இருவர் யாருக்கும் தெரியாமல் கடற்படை ஏரியாவில் கொண்டுபோய் விட்டு விட்டு வந்தனர். அங்கே சிங்கள அகதிகள் ஏற்கனவே தஞ்சம் புகுந்திருந்தனர். சிறு ஆயுதக் குழுவாக மாறிய நாங்கள் ஊரைச் சுற்ற ஆரம்பித்தோம். அப்போது ஊரில் எந்த எதிரி களுமே இல்லை. எல்லோரும் ஓடி நேவியில் தஞ்சம் புகுந்து விட்டார்கள். என்றாலும் ஹபரணைக் காடையர்கள் வருவார்கள் என்ற காரணத்தால் ஊர் தயாராயிருந்தது. கடைசியில்



தூக்கமின்றி இரவுபோனது தான் மிச்சம். எங்கள் கத்திகளுக்கும் பொல்லுகளுக்கும் வேலையிருக்கவில்லை. கடைசியில், சில வீடுகளின் மதில்களுக்கு மேலால் தளைவிட்டிருந்த குரோட்டன் செடிகளை வெட்டிக்கொண்டு வந்தோம். இதற்கு மறுநாள்தான் லக்ஷ்மி பேக்கரியை கொழுத்தி அங்குள்ள சாமான்களை யெல்லாம். கொள்ளையிட்டார்கள். அது முஸ்லிம்கள் அதிகமிருக்கிற ஏரியாவில் இருந்ததால் அங்குள்ள சாமான்களை எங்கள் ஆட்கள்தான் அதிகம் ஏப்பம் விட்டார்கள். அந்தக் கொள்ளையின் சுவையான நிகழ்வொன்றை பின்னர் ஒருநாள் யாரோ சொன் னார்கள். அங்கிருந்த சாமான்களை ஒருவர் அவசர அவசரமாக எடுத்துக் கொண்டிருந்தாராம். முடிகிற நேரமாய்ப் பார்த்து அவரது மகன் அங்கு வந்திருக்கிறான். வாப்பாவுக்குக் கோபம். கொஞ்சம் முந்தி வந்திருந்தானென்றால் இன்னும் சாமான் தூக்கி யிருக்கலாமென்று. வாங்க இப்பவா வாறீங்க.. எல்லாம் முடிஞ்சொடனாய வாறீங்க: என்று திட்டினாராம். ஏதோ மகன் முக்கியமான ஒன்றுக்கு வரத் தாமதமாகிவிட்டது போல!

000

கொண்டாட்டத்துக்கு ஊர் தயாராகிக் கொண்டிருந்தது. கடைசிநேர புதுவருட வியாபாரம் எல்லாக் கடைகளிலும் களை கட்டியிருந்தது. சிங்களவர்களே ஆதிக்கம் செலுத்தும் மார்க்கெட்டிலும் புதுவருட வியாபாரம் நடந்து கொண்டிருந்தது. ஜெஸீமும் நில்பாவை சைக்கிளில் ஏற்றிக்கொண்டு போனான். அவன் மார்க்கெட்டுக்குப் போகையில் நான் பள்ளிவாசலுக்கு முன்னால் நின்று கொண்டிருந்தேன். போகையில் சலாம் சொல்லிவிட்டுக் கைகாட்டிக் கொண்டு போனான். நில்பா சின்னப் பிள்ளைச் சிரிப்புடன் போனாள். சரியாகப் பதினொரு மணியிருக்கும்.. பெரிய வெடிச் சத்தம் கேட்டது. கணநாட்களுக்குப் பிறகு இப்படியொரு பெரிய குண்டுச் சத்தம். ஊர் திடீரென்று களேபரமானது. சிலர் மார்க்கெட் பக்கம்தான் குண்டுச் சத்தம் கேட்டதென்று சொல்ல எல்லோருக்கும் மேலும் பதட்டமாகி விட்டது. அந்த நேரத்தில் பெரும்பாலாக ஊரிலுள்ள அரைவாசிக் குடும்பத்தி லிருந்து மார்க்கெட்டுக்குச் சென்றிருப்பார்கள். மார்க் கெட்டுக்குச் செல்வதற்கான பிரதான வழிப்பாதைகளில் ஒன்றாக எங்கள் வீதியும் இருந்தபடியால் அங்கும் கூட்டம் குழுமத்தொடங்கி விட்டது. நாங்கள் மூன்று பேர் ஒன்றாகச் சேர்ந்து விட்டோம். முதலில் எங்கள் வீடுகளிலிருந்து சென்றார்களா சென்றவர்கள் திரும்பி விட்டார்களா என்பதை ஊர்ஜிதப்படுத்தினோம்.. எனக்கு ஜெஸீமின் ஞாபகம் வர உனைசிடம் சொன்னேன். வா போய்ப்பார்ப்பம் என்று அவனின் வீட்டுக்கு அழைத்துச் சென்றான். அவனின் உம்மா வாசலில் நின்று அழுது கொண்டிருந்தா. எங்களைக் கண்டதும் தம்பி போய்ப் பாருங்க தம்பி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜெஸீமும் நில்பாவும் போனாங்க என்று சத்தம் போட்டு அழத் தொடங்கி விட்டா. நாங்கள் சைக்கிளை எடுத்துக் கொண்டு சாரதா வீதியால் திரும்பியபோது டவுனுக்குள் கடை போட்டிருக்கும் அவனின் மற்றொரு நானா வந்தார். அவர் பதட்டமாயிருந்தார். கண்கள் சிவந்திருந்தது. என்ன விஷயம் என்று கேட்டோம். மணிக்கூண்டுக் கோபுரத்துக்கருகே வெடித்திருக்கிறது. ஐம்பது அறுபதுபேர் செத்திருக்காங்க எல்லாரையும் நேவி ஹொஸ்பிடலுக்குக் கொண்டு போயிருக்காங்க: என்றார். ஜெஸீமக் கண்டீங்களா? என்றோம். இல்ல நா இப்ப நேவி ஹொஸ்பிடலுக்குத்தான் போறன் என்று விட்டுப் போய்விட்டார்.

எங்களுக்கு நேவி ஹொஸ்பிடல் போகும் அளவுக்கு துணிவில்லை. குண்டு வெடிப்பின் ஆரவாரங்களோடு வீதியில் நின்றே கதைத்துக் கொண்டிருந்தோம்.

பகல் இரண்டு மணிபோல் ஜெஸீமின் நானா அழுது கொண்டு வந்து உம்மாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதார். "உம்மா.. தம்பி போய்ட்டாம்மா.." என்று சொல்ல அந்த வீட்டில் ஒப்பாரிச்சத்தம் பெரிதாக ஒலிக்கத் தொடங்கி விட்டது. "நில்பா எங்கேடா?" என்று அழுகைக்கிடையில் யாரோ கேட்க அதுக்கும் சரியான காயம். ஹொஸ்பிடல்ல இருக்கு என்று சொல்லி திரும்பவும் ஹோவென்று அழுதான். எங்களுக்கு அதப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. வெளியே வந்து விட்டோம். ஊராக்கள் ஜெஸீமின் வீட்டில் நிறையத் தொடங்கி விட்டார்கள்.

000

வெளியில் மஹ்மூத் கத்திக் கொண்டிருந்தான். ரெண்டு பேரையென்டாலும் வெட்டாம விடமாட்டேன்டா என்று ஆக்ரோஷமாக பொரிந்து தள்ளினான். என்ன என்று நின்றவர்களை விசாரித்தோம். அவன்ட நானாவும் மௌத்தாப் போய்ட்டார் என்றார்கள். அவர் மார்க்கெட்டில் இருந்த ஒரு கடையில் வேலை செய்து கொண்டிருந்தார். அன்று எங்களூரின் அதிகமான வீடுகளில் இந்த மரண ஓலம் தான் கேட்டுக் கொண்டிருந்தது. இதற்கிடையில் இரண்டு மூன்று தமிழர்களை மார்க்கெட் சிங்களவர்கள் வெட்டிவிட்டார்கள் என்று கதையும் வந்தது.

பின்னேரம் ஐந்து மணிக்கிடையில் பள்ளிவாசலுக்கு ஐந்து மையத்து வந்தது. மூன்று வியாபாரத்துக்கு வந்த வெளியூர்க்காரர்களது. மற்றது ஜெஸீமினதும் மஹ்முத்தின் நானாவினதும்.

ஜெஸீமினதைத் தவிர மற்றெல்லாரது உடம்பும் ஓரளவு முழுமையாகக் கிடந்தது. ஜெஸீமை ஒரு பொலித்தீன் பையில் கொண்டு வந்தார்கள். அதற்குள் அடையாளம் காணத்தக்க எதுவும் இருக்கவில்லை. இறைச்சிக் கடையில் கலவன் இறைச்சி வாங்கினால் தருவார்களே அதே போன்று இருந்தது. அவனின் நாடிப் பகுதியும் அவன் வைத்திருந்த தாடியும் தான் அவனை ஓரளவுக்காவது இனம் காட்டியிருந்தது. மற்ற உறுப்புக்கள் இவனுடையது தானா என்று சொல்லும் உத்தரவாதங்களில்லை.

நாங்கள் அடக்க முதல் மையத்தைக் குளிப்பாட்ட வேண்டும். இது அதற்கான வடிவத்தில் இல்லை. தண்ணீரைத் தொட்டு தோல் தெரிந்த இடங்களிலெல்லாம் தடவினார் அவனின் நானா. நாங்கள் பெரியவர்களுக்கிடையில் இருந்து கொண்டு எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தோம். எனக்கு தலை சுற்றியது. பயம் வேறு. எனக்கு சும்மா ஒரு மையத்தைப் பார்க்கவே பயம். இப்படி ஒரு குரூரமான நிலையிலுள்ள மையத்தைப் பார்ப்பதற்கு எவ்வளவு துணிவு வேணும்?

அன்று பகலும் தான் இரவும் தான். என்னால் சாப்பிட முடியவில்லை. ஜெஸீமின் அந்தச் சிதறுண்ட உடல் தான் கண்ணுக்குள் வந்து போனது. ஏன் நீ மையத்தக் குளிப்பாட்டக்குள்ள பாக்கப் போனாய்? என்று உம்மா ஏசினார்கள்.

000

(இதன் தொடர்ச்சி எங்காவது எப்போதாவது எழுதப்படும்.)

பீடிகையின் பிளாஷ்பெக்கிலிருந்து அவசரமாகத் திரும்ப விரும்புவோர்க்கு: குண்டுவெடிப்பில் படுகாயமடைந்த நில்பாவுக்கு பல வருடங்களுக்குப் பின்னும் நிகழும் பதினோராவது அறுவைச் சிகிச்சை அது.

காலமும் அகாலமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு இடை மறிப்பு:




**❑ உங்களது இ.அ.அ. சம்மேளனம் எந்த நோக்கத்தின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டது என்பதனைக் கூற முடியுமா?**

ஆம்.குறிப்பாக வடமாகாணத்திலிருந்து 1990 ஒக்டோபர் மாதம் 30ம் திகதி முஸ்லீம்கள் அனைவரும் விரட்டியடிக்கப்பட்டு அகதிகளாக்கப்பட்டார்கள். அதன் பின் அவர்கள் சொல்லொணாத் துயரங்களுக்கு உள்ளானார்கள். அத்துயரங்களின் சுமையைக் குறைப்பதற்காக எமது சம்மேளனம் 1991இல் உருவாக்கப்பட்டது.

**❑ அந்நோக்கங்கள் நிறைவேறக்கூடிய சாத்தியக்கூறுகள் உங்களைப் பொறுத்த மட்டில் எவ்வாறுள்ளது?**

உண்மையில் எமது சம்மேளனம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட



மக்களுக்காகவே தன்னை இதய சுத்தியுடன் அர்ப்பணித்துக் கொண்டு வருகிறது. பல உதவிகளையும் செய்து கொண்டு வருகின்றது. ஆனால் எமது நோக்கம் எம் மக்கள் இருக்கும் முகாம்களில் தற்காலிகமான அத்தியாவசியத் தேவைகளை நிறைவேற்றிக் கொடுத்தல்.அவர்களின் சொந்த இடத்திற்கு சென்று மீண்டும் சுயநிர்ணய கௌரவத்துடன் போய் வாழ வேண்டும். நாம் ஆட்சிப் பொறுப்பில்லாதவர்கள். எனவே நாங்கள் சாதாரணமாக ஒரு அமைப்பை வைத்து இயங்கிக் கொண்டிருப்பவர்கள். எங்களால் எல்லா அத்தியாவசிய தேவைகளையும் நிறைவேற்றிக் கொடுக்க முடியாது. அப்படியிருந்தும் எங்களால் சமூக சேவை நிறுவனங்களையும் அமைச்சர்களையும் இவ் அகதிகளுடன் தொடர்புபடுத்தும் ஒரு இணை நிறுவனமாகவே இயங்க முடிகின்றது.

**❑ வடமாகாண முஸ்லீம்கள் விரட்டப் பட்டதற்கு காரணம் ஏதும் உண்டா?**

இக் கேள்வியைப் பொறுத்தவரையில் எமக்குத் தெரிந்த வரையில் புலிகளிடமே கேட்க வேண்டும். காரணம் நாங்கள் வடமாகாணத்தில் இருந்து வந்த காலங்களில் தமிழ் மக்களுடன் அந்நியோன்நியமாகவே வாழ்ந்து வந்தோம். தமிழ் மக்களின் உரிமைக்காகப் போராடி வரும் சகல தமிழ்ஆயுதக் குழுக்களுக்கும் எந்த வகையிலும் எதிராக நடந்ததேயில்லை என்றே கூறலாம்.

**❑ எவ்வாறான நிலையில் முஸ்லீம்கள் வெளி யேற்றப்பட்டார்கள்?**

வடமாகாண முஸ்லீம்கள் என்றுமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிர்பாராத அந்த துரதிஷ்ட வசமான அந்நிகழ்வு இன்றும் நினைக்கும் பொழுது கூட உள்ளம் அழுது சலிக்கிறது. அதாவது மைதானத்திற்கு அனைவரையும் வருமாறு வேண்டினார்கள். பின்னர் உங்களுக்கு 2மணி நேரம் தரப்பட்டிருக்கிறது என்று கூறிஅந்த 2மணி நேரத்திற்குள் அனைவரும் தங்களது அசையும் அசையாச் சொத்துக்களை ஈழத்தில் விட்டுச் செல்லுமாறும், அணிந்திருந்த ஆடையுடன் எங்களை அவர்கள் குறிப்பிட்ட அந்தப் பாதையால் வருமாறு பணித்ததுடன் அனைவரும் பரிசோதனை செய்யப்பட்டு பெண்கள் அணிந்திருந்த ஆபரணங்கள் அனைத்தும் பறிக்கப்பட்ட நிலையில் எங்களை அனுப்பி வைத்தார்கள். அதன்பின்னர் பலமைல்கள் பெண்கள், குழந்தைகள், வயோதிகர்கள் உட்பட அனைவரும் காட்டு வழிகளால் நடந்து வவுனியா வந்தடைந்தோம். பின்னர் அனைவரும் புத்தளத்திற்கு அனுப்பப் பட்டோம்.

❑அவ் வெளியேற்றப்பட்ட மக்கள் எங்கெல்லாம் குடியேறினார்கள்?

மதவாச்சி, அநுராதபுரம், புத்தளம், கொழும்பு, நீர்கொழும்பு, பாணந்துறைஆகிய பிரதேசங்களில் குடியேறிவாழ்கின்றனர். பெரும்பாலானோர் புத்தளத்திலே வாழ்கின்றனர்.

❑அம்மக்கள் சாதாரணமாக எதிர் நோக்கும் பிரச்சனைகள் என்ன?

சாதாரணமாக அம்மக்கள் 1990ம் ஆண்டிலிருந்து இன்று வரையும் எந்தவொரு அடிப்படை வசதிகளுமின்றி மிகவும் வறுமையில் வாடுகின் றனர். பெரும்பாலான அரசியல் வாதிகள் வந்து போகின்றார்கள். செய்து தருகிறோம் என்கிறார்கள். ஆனால் அனைத்தும் தேர்தல் காலப் பிரச்சாரமே. அதற்குப்பின் அவர்களைச் சந்திப்பது கஸ்டமாகவேயுள்ளது. கல்வியைப் பொறுத்த வரையில் கல்வி கற்க வேண்டிய பல சிறுவர்கள் குடும்ப வறுமை காரணமாகக் கல்வியைத் தொடர முடியாமல் உழைக்கின்றனர். இது சிறுவர்களைப் பொறுத்த வரையில் மனம் பாதிக்கப்பட்ட ஒரு விடயமாகும்.

❑கடந்த காலங்களில் உங்களுக்கென ஒரு பாராளுமன்ற உறுப்பினரைத் தெரிவு செய்தீர்களே அதன் மூலமாகப் பயன் எதுவும் பெற முடியவில்லையா?

அதாவது எங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராக இருந்தாலும் கூடுதலாகப் புத்தளத்தில் அகதி மக்கள் வாழ்ந்து வந்ததனால் அப்பிரதேசத்திலே புனருத்தாரனம் செய்யப்பட்டது. அதனால் எங்களுக்கு பெரிதாகப் பிரியோசனப்படா விட்டாலும் எங்களை அரவணைத்த புத்தளம் மக்களுக்கும் அது உதவியதையிட்டு என்றும் சந்தோசமடைகிறோம்.

❑அகதி மக்களுக்காக வழங்கப்படும் உலர் உணவு எல்லோருக்கும் வழங்கப் பட்டுள்ளதா?

உலர் உணவு நிவார ணம் பெரும் பாலான மக்களுக்கு நிறுத்தப் பட்டுள்ளது.



**அக்குடும்பங்கள் மிகவும் துயரத்துடன் எந்தவொரு உதவியுமின்றி கஸ்டத்துடன் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு அரசாங்கம் கூட எந்தவொரு விஷேட சலுகையும் காட்டவில்லை. இவர்களின் குடும்பத்தைப்பற்றி எதிர்காலத்திலாவது அரசு கவனம் எடுக்க வேண்டும்.**

❑அப்படியானால் அதனைப் பெற்றுக் கொடுப்பதற்கு உங்களது சம்மேளனத்தால் முயற்சி ஏதும் எடுக்கவில்லையா?

நிறுத்தப்பட்ட உலர் உணவு நிவாரணத்தை தொடர்ந்து பெற்றுக் கொடுப்பதற்காக எமது சம்மேளனம் தொடர்ந்தும் முயற்சிகள் எடுத்து வருகின்றது.

❑புலிகளால் யாழ்ப்பாண முஸ்லீம்களில் ஒரு சிலரை தடுத்து வைத்திருப் பதாகவும் பின்னர் அவர்கள் விடுதலை செய்யப்பட்டதாகவும் அறிந்தோம். அது எந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## யாழ்ப்பாணத்தில் புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விபரங்கள்.

| | |
|---|---|
| 1- முஹிதீன் அப்துல் காதர் ருஸான் | முஸ்லீம் அகதி முகாம் D தில்லையடி- புத்தளம். |
| 2- நெய்னாமுகம்மதுருஸான் | முஸ்லீம் அகதி முகாம் A கடையா மோட்டை-மதுரங்குளி |
| 3- சீனி அலியார் ரலீஸ்கான் | முஸ்லீம் அகதி முகாம்-பாலாவி |
| 4- சீனி அலியார் ஐனுதீன் | முஸ்லீம் அகதி முகாம் பாலாவி |
| 5- அப்துல்ஜப்பார் பைரூஸ் | முஸ்லீம் அகதி முகாம்- P.T எண்ணை ஆலை குருநகல் வீதி சேனைக் குடியிருப்பு புத்தளம். |
| 6- முகம்மது அப்துல் காதர் வாபிர் | முஸ்லீம் அகதி முகாம்- P.T. எண்ணை ஆலை குருநகல் வீதி சேனைக் குடியிருப்பு புத்தளம். |
| 7- முகம்மது கமால் அஜ்மீன் | 38/9ரகுமானா பாத் நீர்கொழும்பு |
| 8- அப்துல் கபூர் நகீப் | 38/9ரகுமானா பாத் நீர்கொழும்பு |
| 9- அப்துல் வஹாப் அஸ்வாத் | முஸ்லீம் அகதி முகாம் A தில்லையடி- புத்தளம். |
| 10- இஸ்மாயில் ரயீஸ் | மதீனா பாடசாலை அகதிமுகாம் நொச்சியாகம் அநுராதபுரம். |
| 11- பதுறுதீன் ஜலீல் | மதீனா பாடசாலை அகதிமுகாம் நொச்சியாகம் அநுராதபுரம். |
| 12- பதுறுதீன் சிறாஜ் | மதீனா பாடசாலை அகதிமுகாம் நொச்சியாகம் அநுராதபுரம். |
| 13- ஜமால்தீன் பாறுாக் | சோல்டன் II மன்னார் வீதி புத்தளம் |
| 14- அப்துல் லதீப் ரமீஸ் | சோல்டன் I மன்னார் வீதி புத்தளம் |
| 15- அப்துல்லதீப் ரஜப் | சோல்டன் I மன்னார் வீதி புத்தளம் |
| 16- சாகுல் கமீது தன்ஸீல் | முஸ்லீம் அகதி முகாம் A தில்லையடி- புத்தளம். |
| 17- மீரான் முகிதீன் நஜீப் (முத்து) | முஸ்லீம் அகதி முகாம் பாலாவி புத்தளம் |
| 18- வாப்பா சகிபு பாறுாக் | முஹாஜரின் அகதி முகாம் மட்டக்குழி கொழும்பு15 |
| 19- ஜெய்னுல் ஆபதீன் பரதௌஸ் | முஹாஜரின் அகதி முகாம் மட்டக்குழி கொழும்பு15 |
| 20- முகம்மது ஹம்ஸா | முஹாஜரின் அகதி முகாம் மட்டக்குழி கொழும்பு15 |
| 21- ஜமால் ரபீக் | முஸலீம் அகதி முகாம்.A கடையா மோட்டை மதுரங்குளி |
| 22- அப்துல் ரஜீம் ஜப்ரின் | முஸலீம் அகதி முகாம்.யுகடையா மோட்டை மதுரங்குளி |
| 23- அப்துல் மஜீத் ஜலீல் | 12 மஹா உனுப்பிட்டி நீர் கொழும்பு |
| 24- அப்துல் மஜீத் நஜீப் | முஜாதீன் பள்ளி வீதி புத்தளம். |
| 25- முகம்மது சமீன் நியதஸ் | முஸ்லீம் அகதி முகாம் B தில்லையடி புத்தளம் |
| 26- முகிதீன் தம்பி ஜபருள்ளா | முஸ்லீம் அகதி முகாம் E 2ம் குறுக்கு தில்லையடி புத்தளம் |
| 27- அப்துல் ஜப்பாஇ சுபைர் | 218ஜம்மாப் பள்ளி வீதி போரதோட்ட கொச்சிக்கடை நீர் கொழும்பு |
| 28- பதுறுஸமான் ரம்ஸீன் | மன்னார் வீதி புத்தளம் |
| 29- அகன் கனி மிலான | ரகுமத் கிராமம் கனமுல மதுரங்குழி |
| 30- சுபைர் ஆஸாத் | அகதிமுகாம் இந்திரிக் கொல்லாவ |
| 31- சுபைர் ஜான்ஸிர் | அகதிமுகாம் இந்திரிக் கொல்லாவ |
| 32- முகம்மாது உசன் முகம்மது நிஸார் | முஸ்லீம் அகதி முகாம் B மரிக்கார் சேனை மதுரங்குழி |
| 33- அப்துல்ஜப்பர் அன்துஸ | அகதி முகாம் கனேமுல மதுரங்குழி |
| 34- அப்துல் ஜப்பார் சப்ரின் | அகதி முகாம் கனேமுல மதுரங்குழி |
| 35- சரிப்தீன் பசீர் | அகதி முகாம் கனேமுல மதுரங்குழி |

ளவுக்கு உண்மை யானது என்று கூறமுடியுமா?

அதிலும் உண்மை உண்டு. இதை விரிவாகப் பார்க்கப் போனால் , விரட்டப்படுமுன் இவர்கள் அனைவரும் கைது செய்யப்பட் டார்கள்.ஏனெனில் கைதுசெய்யப்பட்டவர்களில் சமூகத்தின் முக்கிய பிரமுகர்களும் அடங் குவர்.ஒருவேளை அவர்களுக்கு விரட்டப்பட விருக்கும் விடயம் தெரியக்கூடாது என்பதற்கா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டதாகவும் அறிந் தோம். அது எந்தளவுக்கு உண்மை மூன்று வருடத்திற்குப் பின் விடுதலை செய்யப் பட்டார்கள். மிகுதியாக சுமார் 35பேர் இன்னமும் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

❑அப்படியாயின் உங்களிடம் மிகுதியாக தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்களின் விபரங்கள் இருக்கின்றதா?

ஆம். எங்களிடம் சகல விபரங்களும் இருக்கின்றன ஒருசில விபரங்களை உங்களுக்குத் தருகின்றோம்.(பார்க்க அட்டவணை)

❑தடுத்து வைக்கப்பட்டுள்ள 35 பேரின் குடும்ப நிலை என்ன?

அக்குடும்பங்கள் மிகவும் துயரத்துடன் எந்தவொரு உதவியுமின்றி கஸ்டத்துடன் வாழ்கின்றார்கள். இவர்களுக்கு அரசாங்கம் கூட எந்தவொரு விஷேட சலுகையும் காட்டவில்லை. இவர்களின் குடும்பத்தைப்பற்றி எதிர்காலத்திலாவது அரசு கவனம் எடுக்க வேண்டும்.

❑தாங்கள் விரட்டப்பட்ட விடயமாக .மேலதிகமாக ஏதும் கூற விரும்புகிறீர்களா?

1990ம் ஆண்டு வடபகுதியை விட்டு வெளியேற்றினார்கள். அதைப்பற்றி தெளிவாக மேலே கூறியிருந்தோம். இந்த நிலையில் தொடர்பு சாதனங்கள் மிகவும் கவலையுடன் அறிக்கைகள் வெளியிட்டன. உங்களுக்குத் தெரியும் உலகத் தமிழோசை ஒலித்துக் கொண்டிருக்கும் (பி.பி.சி.) சேவை, இது மட்டும் முஸ்லீம்கள் விரட்டப்பட்ட விடயமாக இருட்டடிப்புச் செய்தது. அது ஒரு வேதனை தரக்கூடிய விடயம். இந்த நேரத்தில் பிரான்ஸில் இருந்து வெளியாக இருக்கும் எக்ஸில் என்ற பத்திரிகையில் விரட்டப்பட்ட முஸ்லீம்கள் சம்பந்தமாக 10வருடங்களுக்குப் பின்னாவது குரல் கொடுப்பதை நினைக்கும் பொழுது மகிழ்ச்சியடைகிறோம்.அத்துடன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறோம்.

**SRI LANKA REFUGEES'DEVELOPMENT FEDERATION**
Head office: 29/44 pothuseva Mawatha,
Sarikkamulla,
Panadura,Sri lanka
Phone: 077-3042000
34-981881

## உயிர்ப்பிலிருந்து...



கடந்த காலத்தில் தமிழர் விடுதலை அமைப்புகள் முஸ்லீம் மக்களை ஒரு தனித்துவமான சமூகமாக ஏற்றுக்கொள்ள மறுத்துள்ளன. இன்றுவரை பல அமைப்புக்கள் தீவிர முஸ்லீம் விரோத அமைப்புகளாகவே செயற்பட்டு வருகின்றன. இவற்றுள் விதிவிலக்காக செயற்படுவதாக கருதப்படும் சிலர்கூட முஸ்லீம் மக்களை "வளர்ந்து வரும் தேசமாக" வரையறுக்க முனைவதைக் காணலாம். இந்த "வளர்ந்து வரும் தேசம்" என்ற கருத்தாக்கமானது வினோதமானதாகும். எந்த நிபந்தனைகளை இவர்கள் கையாண்டு இந்த வளர்ச்சியை அளக்கின்றார்கள். எந்த நிபந்தனைகளை முஸ்லீம் மக்கள் நிறைவு செய்தால் வளர்ந்து விட்ட தேசமாவார்கள் என்பதை இவர்கள் கூறுவதில்லை. உண்மையில் இந்தக் கருத்தாக்கமானது, இவர்கள் தமது பழைய சிந்தனை முறைகளில் இருந்து இன்னமும் முறித்துக் கொள்ளாமல் இருப்பதைத்தான் காட்டுகிறது. இப்படிப்பட்ட நிலைப்பாடுகள், இவர்கள் முஸ்லீம் மக்களை தனித்துவமான ஒரு சமூகமாக அங்கீகரிக்க மறுத்த கடந்த கால நிலைப்பாடுகளின் ஒரு தொடர்ச்சியாகவே கருதப்பட வேண்டும். அத்துடன் ஒரு தேசத்தை புறநிலை அம்சங்களால் கறாராக வரையறுத்துவிட முனையும் மரபார்ந்த குறைபாடும் இங்கு வெளிப்படுவதைக் காணமுடிகிறது. ■



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம் தேசத்தின் ஓர் அறிக்கை

எமது சிறப்பிதழுக்காக "வடகிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பினரால்" அனுப்பிவைக்கப்பட்ட இவ்வறிக்கை 1999ம் ஆண்டு சுவீடனில் நடைபெற்ற சமாதானத்துக்கான மாநாட்டில் "முஸ்லிம் தேசத்தின் ஓர் அறிக்கை" எனும் பெயரில் மேற்படி அமைப்பினரால் இலங்கை முஸ்லிம்கள் சார்பில் சமர்ப்பிக்கப்பட்டதாகும்.

## அறிமுகம்

இலங்கையில் இடம்பெற்றுவரும் இனப்பிரச்சினைக்கான தீர்வு எவ்வாறு எய்தப் பட்வேண்டும் என்ற வினாவிற்கான விடையினைத் தேடி பல ஆண்டுகள் பல தளங்களில் விவாதிக்கப் பட்டாயிற்று. இப்பிரச்சினைக்கான தீர்வு யுத்தத்தால் காணப்பட முடியாதது. மாறாக அரசியல் ரீதியாக பேச்சுவார்த்தைகளின் இணக்கப்பாட்டினாலேயே ஈட்டப்படமுடியுமென்பது அனைத்துக் கருத்துத் தளங்களினதும் உள்ளார்ந்த உடன்பாடாகும்.

இந்தவேளையில் இனப்பிரச்சினையில் பங்குகொண்டிருக்கும் இலங்கையின் தேசிய இனங்களுள் இரண்டாவது சிறுபான்மைத் தேசிய இனமான முஸ்லிம்களின் பிரச்சினைகள் மற்றும் அத்தேசியத்திற்கான தீர்வுகள் பற்றி ஆராயப்படல் வேண்டும்.

இப்பிரச்சினையின் கோர விளைவு களுக்கும் அழிவுகளுக்கும் மூன்று தேசிய இனங்களும் முகங்கொடுத்தபோதும் மொத்தச் சனத்தொகைப் பரம்பலில் ஒப்பிட்டுப் பார்க்கும் போது அதிகூடுதலான இழப்புக்களைச் சந்தித்திருக்கும் ஒரு சிறுபான்மைத் தேசியமே முஸ்லிம் சமூகமாகும். இந்நிலையில் இனப்பிரச்சினை தொடர்பில் எட்டப்படவிருக்கும் தீர்வுகளில் முஸ்லிம்களுக்கு நியாயமான முடிவுகள் கிடைக்க வேண்டும். முஸ்லிம் தேசியத்திற்குக் கொடுபடும் தீர்வுகள் அதிகாரப்பகிர்வுகள் எல்லாம் இன்னொரு தேசியத்தின் உரிமைகளைப் பாதிப்பதாகவோ அல்லது உரிமைக்காகப் போராடுகின்ற தேசியங்களின் உணர்வுகளை மலினப் படுத்துவதாகவோ அமையக்கூடாது.

அதேவேளை, தமிழினத்திற்கு வழங்கப் படும் அதிகாரப்பகிர்வுகளும் தீர்வுகளும் முஸ்லிம்களின் உரிமைகளைப் பாதிப்பதாகவோ அல்லது நியாயமான அரசியல் பலத்தை சிதைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொச்சைப்படுத்துவதாகவோ அமையக்கூடாது.

## முஸ்லிம்களின் பூர்வீக மும் பரம்பலும்

இலங்கையின் முஸ்லிம்களின் இருப்பையும் பூர்வீகத்தையும் கொச்சைப் படுத்துவதன் மூலமும் அவர்களின் வரலாற்று ஆதாரங்களை மூடி மறைப்பதன் மூலமும் சிங்கள, தமிழ் இனவாதத் தலைமைகள் தங்களது மேலாண்மையினை நிறுவமுயன்றனர்.

வரலாற்று ஆதாரங்களின்படி 8ம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கையில் முஸ்லிம்களின் குடியேற்றம் இடம்பெற்றுள்ளது. இன்னும் அரேபியாவில் இஸ்லாம் மார்க்கம் தோன்றுவதற்கு முன்பே அரேபியர்கள் இலங்கையுடன் நெருங்கிய வர்த்தகத் தொடர்பைக் கொண்டிருந்தனர். இந்த வர்த்தகத் தொடர்பூடான காலப்பகுதி கி.பி. 8ம் நூற்றாண்டிற்கு மிக முற்பட்டதாகும்.

தொடக்கத்தில் முழு இலங்கையையும் தழுவியதாக கிட்டத்தட்ட எட்டு பிரதான இடங்களில் முஸ்லிம்கள் குடியேறியதாக அறியப்பட்டுள்ளது. அரேபியாவின் அதிகாரப்போட்டியின் காரணமாக வெவ்வேறு குலப்பிரிவினரிடையே ஏற்பட்ட மோதல்களின் விளைவாக "ஹாஸீம்' பிரிவைச் சேர்ந்த சில நூறு அரேபிய முஸ்லிம்கள் இலங்கையில் குடியேறியதாக வரலாற்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

இதேவேளை, தென்னிந்தியாவைச்சேர்ந்த முஸ்லிம்களும் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு பல்வேறு சந்தர்ப்பங்களில் இலங்கையில் குடியேறியமை வரலாற்று ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள மிகப் பெரும்பாலான முஸ்லிம்கள் (முற்றிலும் சிங்கள மக்கள் மத்தியில் சிறியளவில் வாழும் முஸ்லிம்கள்கூட) தமிழ் மொழியைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பதையும் இலங்கை முஸ்லிம்களின் பல கலாசார அம்சங்கள் தென்னிந்திய முஸ்லிம்களினதும் இலங்கைத் தமிழர்களினதும் கலாசார கூறுகளுடன் ஒத்த தன்மையைக் கொண்டிருப்பதும் கவனிக்கப்படும்போது இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தில் தென்னிந்திய வருகை முக்கிய பங்கு வகித்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

இதனடிப்படையில் இலங்கை முஸ்லிம்களின் பூர்வீகத்தை அரேபியப் பாரம்பரியத்துடன் முக்கியமாக தென்னிந்திய முஸ்லிம்களின் இடம்பெயர்வையும் இணைத்தே விளங்கிக் கொள்ளவேண்டும். எவ்வாறாயினும் முஸ்லிம்களின் பூர்வீகம் குறித்து எதிர்காலத்தில் எழக்கூடிய சர்ச்சைகள் முஸ்லிம்களின் தனித்துவத்தை நிராகரிப்பதாக ஆகிவிடாது. ஏனெனில் அவர்களின் தனித்துவம் அடையப்பட்டதொன்றாகும். அரசியல் ரீதியில் நிலைநாட்டப்பட்டு விட்டதொன்றாகும்.

முஸ்லிம்களின் பரம்பலை எடுத்து நோக்கும்போது வடகிழக்குப்பிராந்தியம் மிக முக்கியத்துவம் பெறுகின்றது. இதில் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணமொன்றில் மொத்த சனத்தொகையில் 17 சதவீதத்தினர் முஸ்லிம்கள். இதேவேளை கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்களின் சனத்தொகை 31 வீதமாகும்.

ஆனால் இவ்விகிதாசாரம் வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிந்த நிலையிலும், மாகாண மட்டத்திற்குக் கீழ்நிலையிலுள்ள நிர்வாகப்பிரிவு மட்டத்திலும் எண்ணிக்கை ரீதியாகவும் விகிதாசார ரீதியாகவும் வேறுபட்டுக் காணப்படுகின்றது. உதாரணமான கிழக்கு மாகாணத்தில் மொத்தமாக மூன்று மாவட்டங்களில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாகக் காணப் படுகின்றனர்.

இதுபோல் கிழக்கு மாகாணத்தில் ஏனைய மாவட்டங்களிலும் (வடமாகாணத்திலும் பல மாவட்ட மட்டத்திற்கு குறைந்த நிர்வாக மாவட்டத்தில்) பிரதேச ரீதியாக முஸ்லிம்கள் செறிந்து பெரும்பான்மையாக வாழ்கின்றனர்.

அகில இலங்கை ரீதியாக 1981 இல் மேற்கொள்ளப்பட்ட குடிசன மதிப்பீட்டின்படி மொத்த முஸ்லிம் சனத்தொகையில் அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் 41.53 வீதத்தினரும் மட்டக்களப்பு மாவட்டத்தில் 28.97 வீதத்தினரும் மன்னார் மாவட்டத்தில் 26.62 வீதத்தினரும் வாழ்கின்றனர். ஆனால் திட்டமிட்ட பெரும்பான்மை இனங்களின் குடியேற்றங்களாலும், காணிச்சுவீகரிப்பினாலும் முஸ்லிம்களின் பரம்பலும் செறிவும் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது.

## முஸ்லிம்களின் வாழ்வுப் பரப்புகள் மீது மேற்கொள்ளப்பட்ட அத்துமீறிய குடியேற்றங்களும் அரசியற்பல நலிவும்.

முஸ்லிம்களின் பாரம்பரிய நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தல், முஸ்லிம்களின் செறிவைக்குறைத்தல், அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரீதியில் அவர்களைப் பலவீனப்படுத்தல் அவர்களின் பொருளாதார முயற்சிக்குத் தடைகளை ஏற்படுத்தல், கல்வி மற்றும் கலாசார நிகழ்வுகளின் வளர்ச்சிகளைத் தடுத்தல், முஸ்லிம் பிரதேச அபிவிருத்திகளை ஒதுக்குதல், போன்ற பல்வேறு வழிகளிலும் பௌத்த சிங்கள இனவாதம் இலங்கை முஸ்லிம்களை ஒதுக்கி வந்திருக்கிறது.

சுதந்திரத்தின் பின்னர் வரண்ட வலய குடியேற்றத்திட்டத்தின் கீழும் பசுமைப்புரட்சி திட்டத்தின் கீழும் முஸ்லிம்களின் பாரம்பரிய எல்லைக்குள் அடங்குகின்ற பல ஆயிரக்கணக்கான ஏக்கர் வளமான நிலங்களில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு அந்நிலங்களும் காட்டு வளங்களும் சிங்களவர்களுக்குச் சொந்தமானவைகளாக மாற்றப்பட்டுள்ளன.

குறிப்பாக திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் முஸ்லிம்களுக்கு மொத்தமாக உள்ள நிலங்களுடன் ஒப்பிடுகையில் பலமடங்கு பரப்பு அதிகமான நிலங்கள் குறைந்த எண்ணிக்கையில் உள்ள குடியேற்றப்பட்ட சிங்களவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் சிங்கள மக்கள் செறிந்து வாழ்கின்ற பிறமாவட்டங்களைச் சேர்ந்த பகுதிகள் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பகுதிகளுடன் இணைக்கப்பட்டதன் காரணமாக முஸ்லிம்களின் செறிவு திட்மிட்ட ரீதியில் குறைக்கப்பட்டு வந்துள்ளது.

குறிப்பாக இலங்கை முஸ்லிம்கள் செறிவாக வாழ்கின்ற ஒரேயொரு மாவட்டமான அம்பாறை மாவட்டத்துடன் மொனராகலை மாவட்ட சிங்களப்பிரதேசங்கள் இணைக்கப்பட்டதன் காரணமாக அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் பெரும்பான்மைப்பலம் கணிசமான அளவு குறைக்கப்பட்டுள்ளது.

இதேபோல் திருகோணமலை மாவட்டத்தில் முஸ்லிம் - தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்திய இரட்டை அங்கத்தவர் தொகுதியான மூதூர் தனி அங்கத்தவர் தொகுதியாக மாற்றப்பட்டு இங்கு சிங்கள மக்களுக்கென சேருவில எனும் புதிய தொகுதியை உருவாக்கி தமிழ் - முஸ்லிம்களுக்குரிய நிலங்களுடன் ஒப்பிடுகையில் மூன்று மடங்கிற்கும் அதிகமான நிலம் சிங்களவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**பின்வரும் உதாரணத்தின் மூலம் கிழக்கு மாகாணத்தில் சிங்கள முஸ்லிம் குடிசன வீதம் எவ்வாறு மாற்றப்பட்டு வந்திருக்கின்றது என்பதைப் புரிந்து கொள்ளலாம்.**

திருகோணமலை மாவட்டத்தில் 1921ஆம் ஆண்டு வரை நான்கு வீதமாக (4%) இருந்த சிங்களவர்களின் சனச்செறிவு 1952இல் பதினெட்டு வீதமாகவும் (18%) 1981இல் முப்பத்து நான்கு வீதமாகவும் (34%) உயர்த்தப்பட்டது.

இதே நேரத்தில் 1921இல் முப்பத்தேழுவீதமாக (37%) இருந்த முஸ்லிம்களின் செறிவு 1952இல் முப்பத்து நான்கு வீதமாகவும் (34%) 1981இல் இருபத்தெட்டு வீதமாகவும் (28%) குறைக்கப்பட்டு வந்திருக்கின்றது.

ஒட்டுமொத்தமாக கிழக்கு மாகாண விகிதாசாரத்தைக் கவனித்தால் 1921 வரை 4.69 வீதமாக இருந்த சிங்களவர்களின் செறிவு 1981 இல் 25.8 வீதமாக உயர்த்தப்பட்டது. ஆனால் முஸ்லிம்களின் செறிவோ 1921இல் 40.55 வீதமாக இருந்து 1981இல் 32.2 வீதமாக குறைக்கப்பட்டது.

இதேபோன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களின் காரணமாக ஆங்காங்கே சிறு எண்ணிக்கையில் வாழ்ந்த தெற்கு முஸ்லிம்களின் செறிவானது மேலும் ஐதாக்கப்பட்டு தென்னிலங்கையில் முஸ்லிம்கள் கணிசமான செறிவில் வாழ்ந்த புத்தளம் மாவட்டத்தின் சனத்தொகையின் வீதம் கிட்டத்தட்ட முப்பது வருட காலத்தில் முற்றாக மாற்றியமைக்கப்பட்டு விட்டது. 1946இல் 31 வீதமாயிருந்த முஸ்லிம்களின் செறிவு 1981இல் 9.72 வீதமாக குறைக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு திட்டமிட்ட ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சிங்களக்குடியேற்றங்களினால் முஸ்லிம்களுக்குச் சொந்தமான வளமான காணிகளும், காட்டு வளங்களும் பறிக்கப்பட்டிருப்பதோடு அவர்களது பொருளாதார முயற்சிகளும் கடுமையாக பாதிப்படைந்துள்ளன.

இவற்றோடு இத்தகைய சிங்களக் குடியேற்றங்களினால் முஸ்லிம்களின் அரசியல் பலம் நலிவடைந்துள்ளது. இலங்கை அரசியல் பாராளுமன்றப் பெரும்பான்மைக்கும் அரசியல் அதிகாரத்தில் மேலாண்மை செலுத்துவதற்கும் இடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

*அதேநேரத்தில் ஒரு சமூகத்தின் பாராளுமன்றப் பிரதிநிதித்துவமானது அதன் குடிசனச் செறிவிலும் பரம்பலிலும் தங்கியிருக்கின்றது. இந்நிலையில் ஒரு சமூகத்தின் அரசியல் பலத்தை சிதைப்பதற்கு அதன் குடிசனச் செறிவைக் குறைப்பதே போதுமானது.* இவ்வாறான உபாயங்களால் முஸ்லிம்களின் அரசியலை இலக்குவைத்த சிங்கள இனவாதத்தையும் மீறி முஸ்லிம்களின் இருப்பை அடியோடு அறுத்துவிட்ட வடபுல முஸ்லிம்களின் பெயர்வும், முஸ்லிம் கிராமங்கள் மீதான படுகொலைகளும் முஸ்லிம் தேசியத்தின் இருப்புக்கும் அரசியலுக்கும் நேர்ந்த அதிர்ச்சிதரும் திருப்பங்களாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**முஸ்லிம்கள் மீதான தமிழ் ஆயுதக்குழுக்களின் வல்லாதிக்கமும் வலுப்பெற்று வரும் முஸ்லிம் தேசத்திற்கான தேவைகளும்.**

வடக்கு கிழக்கில் இறுக்கமான உறவுகளோடு வாழ்ந்துவந்த தமிழ் முஸ்லிம் உறவு, ஆயுதம் தாங்கிய தமிழ் குழுக்களின் நடவடிக்கைகளால் படிப்படியாக சிதைக்கப்பட்டது. இந்த நிலை 1990களில் வலுப்பெற்று பரஸ்பரம் இவ்விரு இனங்களும் முறுகலோடும் சந்தேகத் தோடும் வாழ்வதற்கு வழிகோலியது.

1982இல் இருந்து வடகிழக்கில் வாழும் முஸ்லிம் சிறுபான்மையினரின் தனிமனித உரிமை, இன தனித்துவம், பொருளாதார, அரசியல் சுதந்திரங்கள் ஆயுதம் தாங்கிய குழுக்களால் துச்சமாக மதிக்கப்பட்டு வருகின்றன.

இந்த குரோதத்தன்மை .வலுவடைந்து 1990ஆம் ஆண்டு காத்தான்குடி பள்ளிவாயல்களில் 122 அப்பாவி முஸ்லிம்கள் தொழுது கொண்டிருக்கும் போது சுட்டுக்கொல்லப்பட்டனர். இந்தச் சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு புனித ஹஜ்ஜுக்குச் சென்றுவந்த ஹாஜிகள் உட்பட 150 இற்கு மேற்பட்ட முஸ்லிம்கள் மட்டக்களப்பு குருக்கள்மடத்தில் வைத்து கடத்தப்பட்டு பின் கொல்லப்பட்டனர்.

இரண்டாவது பெரிய படுகொலை ஏறாவூர் சதாம் ஹுசைன் கிராமத்தில் நடந்தது. தூங்கிக் கொண்டிருந்த அப்பாவி முஸ்லிம்கள் சுட்டும் வெட்டியும் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். இதில் 164 பேர் பலியாயினர். காத்தான்குடி பள்ளிவாயல் படுகொலைகள் இடம்பெற்று இரண்டு வாரங் களுக்குள் இக்கொடூரம் நிகழ்ந்தது.

இதுபோல் 1992 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அழிஞ்சிப் பொத்தானையில் இடம்பெற்ற முஸ்லிம் படுகொலையும் இதேவருடம் ஆகஸ்ட் மாதம் பள்ளித்திடல் முஸ்லிம் கிராமத்தின்மீது மேற் கொள்ளப்பட்ட படுகொலையும் மொத்தமாக 300 இற்கும் அதிகமான முஸ்லிம் ஆண், பெண் சிறார்களைக் காவுகொண்டது.

இவ்வாறான படுகொலைகளைத் தொடர்ந்து பாதுகாப்பற்ற பல சிறிய முஸ்லிம் கிராமங்கள் ஆயுதக்குழுக்களின் நேரடியானதும் மறைமுமானதுமான அச்சுறுத்தல்களுக்கு இலக்காகின. இதனால் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட முஸ்லிம் மக்கள் இடம்பெயர்ந்து முஸ்லிம்கள் செறிவாக வாழும் இடங்களை நோக்கி அகதியானார்கள்.

*இவ்வாறு சிறிய முஸ்லிம் கிராமங்கள் ஆயுதக் கொடூரத்தின் நிழலுக்கஞ்சி நகர்ந்து கொண்டிருந்த வேளை ஒட்டுமொத்த வடக்கு முஸ்லிம்களின் இருப்பும் வேரறுக்கப்பட்ட கொடிய சம்பவம் நடந்தது.*

1990ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இறுதிப்பகுதியில் வடமாகாணம் முழுவதும் வாழ்ந்த 75000 இற்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் ஆயுதமுனையில் சுயவாழ்வுரிமை, சொத்துக்கள், கருத்துவெளிப்பாடு போன்ற அத்தனை சுதந்திரங்களும் பறிக்கப் பட்டவர்களாக ஊசலடியாகிய உயிர்களை மாத்திரம் தாங்கிப்பிடித்தபடி வெளியேற்றப்பட்டார்கள்.

இலங்கையின் இனப்பிரச்சினை வரலாற்றில் இவ்வாறானதொரு இனச்சுத்திகரிப்பு நடை பெற்றதில்லை. ஒரு தேசியத்தின் முற்றான இருப்புரிமை மறுக்கப்பட்டு அடியோடு வாழ் பரப்புக்களின் உரிமை பறிக்கப்பட்டது இதுவே முதற்தடவையாகும். இதனூடாக குறிப்பிட்ட ஆயுதக்குழுவினர் வடக்கு கிழக்கு பிரதேசத்தில் விகிதாசார ரீதியாக முஸ்லிம்களின் முக்கியத் துவத்தைக் குறைத்துவிட முயன்றுள்ளனர்.

முஸ்லிம்களின் மீதான ஆயுத அடந்தேறலில் தமிழ்த்தாயகத்திற்காய்ப் போராடும் ஆயுதக்குழுவினர் கணிசமான பங்கு செலுத்தி யுள்ளனர். ஒரு இனத்தின் விடுதலைக்காகப் போராடும் போராளிகள் தனது சகோதர இனத்தின் உணர்வுகளையும் உரிமைகளையும் துச்சமாக மதித்ததும் அவற்றை சிதைப்பதற்கு முயன்றதும் நியாயமற்றது.

சிங்களப்பேரினவாதத்தின் கொடுங்கோல் தன்மைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த தமிழ்த்தேசியப் போராட்டம் தனக்கு அடுத்ததாய் வாழும் முஸ்லிம் சிறுபான்மைத் தேசியத்தை எவ்விதத்திலும் அடக்கியாள முனையக்கூடாது. தமிழ்த்தாயகப் போராட்டத்தில் தோளோடு தோள் நின்று முஸ்லிம் இளைஞர்களும், புத்திஜீவிகளும் பாடுபட்ட காலப்பகுதிகளிலேயே முஸ்லிம் தேசியத்தின் மீதான விடுதலைப் போராளிகளின் ஆயுத அடர்ந்தேறல் இடம்பெற்றது. இது நியாயப்பரப்புகளுக்குள் எதிர்வினைகளை வலுவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விதைத்துவிட்டது.

தமிழ்த்தாயகத்திற்காய் போராடும் ஆயுதக்குழுவினர் தங்களது போராட்டத்தை காட்டிக்கொடுப்பதாக கருதுகின்றவர்களை கவனமாக இனங்கண்டு தண்டித்து வந்திருக்கின்றனர்.இன்றும் கூட தமிழ் தரப்பில் முன்னர் போராளிக்குழுக்களாக இருந்து பின்னர் ஜனநாயகப் பாதையில் இணைந்துகொண்ட ஆயுதக்குழுக்கள் தங்களுக்கெதிராகச் செய்கின்ற நடவடிக்கைகளுக்காய் அவர்களை இனங்கண்டு தண்டிக்கின்ற போது முஸ்லிம்கள் மீதான வேரறுப்புகளுக்கு விடுதலைப்புலிகள் சிலபோது சொன்ன காரணங்கள் ஏற்கமுடியாதவை.

திருமலை புல்மோட்டைப் பிரதேசத்தில் கடற்புலிகளைக் காட்டிக் கொடுத்ததாக அப்பிரதேசக் கரையோரவாசிகளை சந்தேகித்த விடுதலைப்புலிகள் அவர்கள் மீது மேற்கொண்ட கடின நடவடிக்கைகள் ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தையும் இலக்குவைத்தது. இந்த நியாயங்களின் பின்புலத்தில் எழுகின்ற கேள்வி இதுதான். தமிழ்த் தாயக விடுதலைக் கோட்பாட்டுக்காய் உடலியல் ரீதியாகவும் பொருளாதார ரீதியாகவும் முஸ்லிம்கள் பங்குகொண்டிருந்தபோது முஸ்லிம் தேசத்தின் மீதான அடக்குமுறையும் அழிவு நடவடிக்கைகளும் விடுதலைப்புலிகளால் மேற்கொள்ளப்பட்ட நியாயந்தான் என்ன?

அதுபோல, காட்டிக் கொடுப்புகள், குழிபறிப்புகள் போன்றவற்றிற்காய் தமிழ்த்தரப்பிலே தனிப்பட்டவர்கள் அல்லது குறிப்பிட்ட ஆயுதக் குழுக்கள் தண்டிக்கப்படும்போது இந்த துரோகங்களின்பால் நிறுவன ரீதியாக முஸ்லிம் சமூகம் செயற்படாத வேளை, முஸ்லிம் தேசத்தின் மீதான இவ்வாயுத அடக்குமுறைகள் பிரயோகிக்கப்பட்ட காரணம் என்ன?

எனவே, விடுதலைப்புலிகளாலும் ஏனைய தமிழ் ஆயுதக்குழுக்களாலும் அழிவுகளையும் இழப்புகளையும் சந்தித்த முஸ்லிம் தேசம் இனப்பிரச்சினையில் பேசப்படும் முக்கிய பங்காகிவிட்டது. எனவே வழங்கப்படவிருக்கும் தீர்வுகள் அல்லது அதிகாரப்பகிர்வுகள் எல்லாம் முஸ்லிம் சமூகத்தின் விருப்பு வெறுப்புக்களை கருத்திற்கொண்டே செய்யப்படவேண்டும், என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. இந்த நிலையில் இலங்கையில் சமாதான காலத்தில் பரஸ்பர புரிந்துணர்வோடு சந்தேகங்களுக்கு அப்பால் இனப்புழக்கம் நிகழவேண்டுமாயின் அந்த தேசியங்களுக்குரிய சுய நிர்ணய உரிமைகள் வழங்கப்பட்டேயாக வேண்டும்.

மாறாக ஒரு இனக்குழுமத்திற்குள் இன்னொரு இனத்தினைப் புதைப்பதினூடாகவோ அல்லது ஒரு தேசியத்தை இன்னொரு தேசியத்தின் உப குழுவாகக் கருதுவதன் மூலமோ நிரந்தர தீர்வையும் சமாதானத்தையும் பெற்றுவிட முடியாது. இங்கே, தீர்வு முயற்சிகளில் கவனிக்கப்பட வேண்டியது, சண்டை பிடித்துக்கொண்டிருக்கும் இரண்டு தேசியங்களின் உரிமைகளையும் பிரச்சினைகளையும் மாத்திரமல்ல. மாறாக, இலங்கையின் இனப்பிரச்சினையில் நேரடியானதும் மறைமுகமானதுமான பாதிப்புக்களைச் சந்தித்திருக்கும் அனைத்து தேசியங்களும் கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இதனடிப்படையில் இனப்பிரச்சினையின் கோர விளைவுகளால் ஆறாத ரணப்பட்டுப்போயிருக்கும் முஸ்லிம் தேசத்தின் பாதிப்புக்கள் மிகக்குறிப்பிடத்தக்கவை. எனவே, தீர்வுகளைப்பற்றிப் பேசும்போது பாதிப்புக்குள்ளான முஸ்லிம் தேசத்தின் பிரச்சினைகள் நன்கு கவனிக்கப்பட்டு தீர்வுகள் வரையப்படவேண்டும். ஆகவே, *பிரச்சினையில் சம்பந்தப்பட்டிருக்கும் மூன்று பிரதான தேசியங்களுக்கும் நீதியானதும் சமாந்தரமானதுமான தீர்வுகளைப்பற்றி சிந்திக்கவேண்டிய அரசியல் தருணம் இது.*


**உசாத்துணைகள்:**

- முஸ்லிம் தேசமும் எதிர்காலமும் - விக்டர்
- இலங்கை அதிகாரப்பரவலாக்கலும் முஸ்லிம்களின் அபிலாசைகளும் - கலாநிதி . எஸ்.எச்.ஹிஸ்புல்லா
- தமிழ் குறுந்தேசிய வாதமும் முஸ்லிம்கள் மீதான அடக்கு முறையும்- ஸ்டாலின்



முன்னட்டை ஓவியம் - எ.எம்.றஷ்மி - இலங்கை
பின்னட்டை, அட்டைவடிவமைப்பு - கருணா - கனடா
ஓவியங்கள், ஓவிய எழுத்துக்கள் :-
கருணா-கனடா, தேவதாஸ்-பிரான்ஸ், நஸீம்-இலங்கை.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அனிசா மொஹமெதி ஒரு அறிமுகம்:

அனிசா மொஹமெதி 1967ஆம் ஆண்டு அல்ஜீரியாவின் தலைநகரான அல்ஜேவில் பிறந்தார். தீசி- ஊசு நகரில் உயிரியல் பிரிவில் பல்கலைக்கழக பட்டம் பெற்று அதே நகரில் பிரெஞ்சு மொழி ஆசிரியையாக பணியாற்றினார். "பெருமூச்சு" என்ற தலைப்பில் பிரசுரமான அவருடைய கவிதை தொகுப்பு 1996ஆம் ஆண்டு Poéciades de Bejaïa என்ற பரிசு பெற்றது. நாம் பிரசுரிக்கும் "எழுது பெண்ணே" என்ற கவிதை அவருடைய "நிசப்தத்தின் குரல்" என்ற கவிதைத் தொகுப்பில் அடங்கும் படைப்புகளில் ஒன்று. இத்தொகுப்பு 1998ஆம் ஆண்டு Poésiades de Bejaïa எனும் பரிசை வென்றது. 1999ஆம் ஆண்டிலிருந்து அனிசா பாரிசில் வசிக்கிறார். ஒடுக்குமுறை பிரச்சனைகளுக்கு உள்ளாகிவரும் கபிலியில் வளர்ந்துவரும் இளம் கவிஞர்களில் அனிசாவுக்கு தனி இடம் உண்டு. இவர் எழுத்துக்களில் பெண்நிலைவாத கருத்துக்கள் முக்கிய இடம் வகிக்கின்றன. இஸ்லாமிய உலகில் பெண்ணின் அடையாளத்தை இனங்கண்டு பெண்களின் அவல நிலையை விவாதப் பொருளாக்கி பெண் இனத்துக்கான விடுதலைக்காக போராடும் தொனியை இவர் படைப்புக்களில் காணலாம்.

## 1. எழுது பெண்ணே

எழுது பெண்ணே
கங்குகரையின்றி ஓடவிடு
வார்த்தைகளின் சினத்தை
எழுது, எதிரொலியை திகைக்க செய்.

எழுது பெண்ணே
உன் சிற்றத்தின் அதீரத்தை
உன் அழுகைகளை உன் துக்கத்தை
ஆறாத உன் உணர்ச்சிகளை.

எழுது பெண்ணெ
அபாயத்தில் சிக்கிக் கிடக்கும்
உன் கனவுகளை
புலம் பெயரும் உன் ஆசைகளை
உன் பட்டாம்பூச்சிக் குரலை.

எழுது பெண்ணே
ஒடுக்கப்பட்ட உன் நம்பிக்கைகளை
கிழித்தெறியப்பட்ட உன்பிரபஞ்சத்தை
தடை செய்யப்பட்ட உன் இருத்தலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

2. எழுது பெண்ணே



எழுது பெண்ணே
உன் பயங்களை நீ படும் துன்பங்களை
எழுது, ஆபாசமான பார்வைகளை குருடாக்கிவிடு
உன் சங்கிலிகளிலிருந்து விடுபடும்வரை எழுது.

எழுது பெண்ணே உன்னைப் புகழ்ந்து
உன் கனவுகளின் சௌந்தர்யத்தை எழுது
எழுதி, பொய்களை செயலிழக்கச் செய்.

எழுது பெண்ணே
தன்மையை
எழுது, ஆபாசத்தின் தோலை உரித்திடு
எழுது இறுதிவரை.

எழுது பெண்ணே
உடைத்திடு திரிந்தோடுவதை
வெடிகளின் ஜுவாலையை கட்டவிழ்த்துவிடு
நிறமிழந்த தொடுவானத்திற்கு ஒளிகாட்டு
எழுது, திருவிழாவாகட்டும் உன் வாழ்வு.

## 3.எழுது பெண்ணே

எழுது பெண்ணே
உன் கௌரவத்தை செதுக்கிடு
ஏழுது, புதைபொருளை குறித்துவை
மயக்கம் மயங்கிவிழும்வரை எழுது

எழுது பெண்ணே
சமுதாயத்தால் தடுக்கிவிழுந்த உன் மனதின் ஓலத்தை
உன் வேதனைகளின் விசும்பலை
எழுது, தேவலோகம் திருப்தியடையும்வரை.

எழுது பெண்ணே
உன் சிறை நொருங்கியதால் உண்டான இடிசல்கள்ால்
இயற்றிய ஜண்டாக்களை அலங்கரி
உன் கிரீடத்தை அவற்றால் உருவாக்கு
எழுது பெண்ணே
என் பெண்மனதில் எரிந்திடும்,
ஜுவாலைகளின் பிரகாசத்தால்
ஆன்மாக்களை கொதிக்கச் செய்யும்வரை

எழுது பெண்ணே
அல்ஜீரியாவுக்கும்
நீ வாழத்துடிப்பதை.

தமிழில் அர்விந் அப்பாத்துரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வேறு.......வேறு

இலங்கையின் சிறுபான்மை முஸ்லிம்கள் மீதான எமது கருசனை குறித்து புகலிட இலக்கியச் சூழலில் இதுவரை இரு மாற்றுக் கருத்துக்கள பதிவாகியுள்ளன. அவற்றை சைவவேளாள தமிழ் தேசியக் கருத்தியலின் வெளிப்பாடாகவே நாம் கருதுகின்ற போதும்; கருத்துரிமையை உறுதிசெய்யும் வண்ணம் இங்கே அவற்றை மீள் பிரசுரம் செய்கிறோம்.

## உயிர் நிழலில் வாசுதேவன்

வடஇலங்கையில் இருந்து புலிகளினால் இஸ்லாமியர்கள் விரட்டப்பட்டதுபற்றி எனது இலக்கியச் சந்திப்பு நண்பர்கள் கூறும் காரணங்களாவன:

1) இதுவொரு புலிகளின் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கை.

அவ்வாறெனில் புலிகள் வடஇலங்கை முஸ்லிம்களை எந்த இனமாகக் கருதி இனச்சுத்திகரிப்பில் இறங்கினார்கள்? திராவிடர்களாக, ஆரியர்களாக...? (இஸ்லாம் என்ற ஒரு இனம் இருந்ததாக நான் அறியவில்லை.)

2) யாழ்ப்பாண இந்துவேளாளத் தூய்மைக்காகப் புலிகள் நடாத்திய மதச்-சாதியச் சுத்திகரிப்பு

அவ்வாறெனில் புலிகள் ஏன் முஸ்லிம்களை மட்டுமல்லாது கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதத்தவர்களையும் நாத்திகவாதிகளையும் நாடு கடத்தவில்லை?

வடஇலங்கை முஸ்லிம்கள் சாதாரண முஸ்லிம்கள் என்ற தனிக்காரணத்துக்காக இவர்கள் அழவில்லை.அவ்வாறெனில் இன்று உலகின் பல பாகங்களில் பொஸ்னியாவில் கொசொவாவில் செச்சனியாவில் பன்மடங்கு கோரங்களுக்குட்பட்ட அனைத்து இஸ்லாமியர்களுக்காகக் கண்ணீர் வடித்திருப்பார்கள்.

## சமரில் றயாகரன்

*முஸ்லீம் மக்களையிட்டு அவர்களின் விடுதலை மீது அக்கறை கொள்பவன் தமிழ் மக்களையிட்டும் அக்கறை கொள்ளவேண்டும். இங்கு இரட்டை வேடம் இருக்கமுடியாது. எக்ஸில் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்தபடி (இதை எழுத்தில் வைக்க வக்கற்றவர்கள்) அதைக் கொச்சைப்படுத்தியபடிதான் முஸ்லீம் மக்களைப் பற்றி மூக்கால் அழுது சிறப்பிதழ் வெளியிட முனைகின்றனர். உண்மையில் இதைத்தான் புலிகளுக்கெதிராக பெருந்தேசிய சிங்கள இனவாதமும்செய்கின்றது. இங்கு தமிழ், முஸ்லீம், மலையகம் என அணுகு முறையில் அவற்றிற்கிடையில் வேறுபட முடியாது.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேற்கத்திய நாடுகள் தங்களது காலனித்துவ ஆக்கிரமிப்புகளை நியாயப்படுத்துவதற்காக குடியேற்ற நாடுகள் மீது பல நவீனமயப்படுத்தல் கருத்துக்களை முன்வைத்து செயற்பட்டனர். மத உணர்வுகளில் இருந்து மனிதன் உறங்குவதுவரை வளர்ச்சி, முன்னேற்றம், நாகரீகம், அறிவு என்றவாறாக எல்லோரையும் நாகரீகப்படுத்துகிறோம் அல்லது நவீனமயப்படுத்துகிறோம். என்ற கோசங்கள் முன்வைக்கப்பட்டன.

இந்த முன்னேற்ற நாகரீக செயற்பாடுகளின் பெயரில் வெள்ளைமனிதன் என்பவன் கறுப்பர்களை விட உயர்ந்தவன் என்கின்ற கருத்துருவம் பரப்பப்பட்டது. ஒரு நவீன மனிதன் என்பவன் எப்படி உண்ண உடுக்க செயற்பட பழகிக்கொள்ள வேண்டும் என்று அறிவுறுத்துகின்ற நவீனத்துவத்தின் பணிகள் மீது ஒரு மதிப்புமிகு புனிதம் கட்டமைக்கப்பட்டது. இதுபோன்றுதான் தேசிய எழுச்சிகளின் போதும் இன விடுதலைப் போராட்டங்களின்போதும் உலகின் அனேகமான ஒவ்வொரு நாடுகளும் ஒவ்வொரு இனங்களும் ஒவ்வொரு மொழிபேசும் சமூகக் குழுக்களும் தங்களை மட்டுமே உயர்ந்தவர்களாக நாகரீகம் மிக்கவர்களாக கட்டமைக்கும் பணியை மேற்கொண்டு வந்தன. இந்திய உபகண்டத்திலும் மன்னராட்சிகளைத் தொடர்ந்து சேர, சோழ, பாண்டிய பொற்காலக் கனவுகளும் அதன் நீட்சியாக கட்டபொம்மனின் தமிழ்வீரச் சொல்லாடல்களும் தமிழினத்தின் மீதும் தமிழ்மொழியின்மீதும் ஒரு புனிதத்தைக் கட்டமைத்தது. இவ்வாறாக உருவான "மறத்தமிழன்" மீதான மாண்பின் வாரிசாகவே இலங்கைத் தமிழ்த் தேசியமும் சிங்கள பேரினவாத அரசுக்கெதிரான போராட்டப் பாதையில் தனது பூர்வீகக் கோட்பாட்டை உயர்த்திப்பிடித்தது.

தமிழரசுக் கட்சிக் காலத்தில் இருந்து இந்தப் பூர்வீகக் கோட்பாடு ஊட்டி வளர்க்கப் பட்டது. **"ஆண்ட பரம்பரை மீண்டுமொரு முறை ஆள நினைப்பதில் என்ன குறை?"** என்று உணர்ச்சிக்கவிஞன் அந்த

> 26 வது இலக்கியச் சந்திப்பு (10-11, ஜூன்-2000) ஜேர்மன் ஸ்ருட்காட் நகரில் நடைபெற்றபோது வடபுலத்தில் இருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்களின் 10ஆண்டு நினைவையொட்டிய எனது உரை பிரசுரத்துக்காக சில திருத்தங்களுடன் எக்ஸில் வாசகர்களுக்காக:-
>
> **எம்.ஆர்.ஸ்ராலின்**

# முஸ்லீம் தேசம் X தமிழ் பாசிஸ்டுகளின் கருத்தியல் தளம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காசிஆனந்தன் வடகிழக்கின் மூலை முடுக்கெல்லாம் முழங்கினான். எப்போதும் ஒன்றின் வளர்ச்சிக்கு மற்றவற்றின்மீதான ஒப்பீடும், மற்றவற்றை எதிரியாகக் கட்டமைத்தலும் அவசியமாகின்ற காரணத்தால் இலங்கைத் தமிழ்த் தேசியமும் தன் ஒப்பீட்டையும், எதிரியைக் கட்டமைக்கும் பணியையும் செய்யத் தவறவில்லை. சிங்களவர்களை முரடர்களாகவும் சிங்களத்தை முரட்டு மொழியாகவும் உருவகித்து தனது எதிரியை எவ்வளவு தூரம் கீழ்நிலைப்படுத்தியதோ அதேபோன்றே தன் தேச எல்லைக்குட்பட்ட பகுதிகளில் முஸ்லிம்களை எதிரியாகத் தேர்ந்து கொண்டது. முஸ்லிம்களின் அன்றாட செயற்பாடுகள் ஒவ்வொன்றும் கீழ்த் தரமானவையாக, துரோகம் நிறைந்தவையாக கதைகள் பரப்பப்பட்டன. தமிழனும் சைவனுமே என்றுமே மேலானவன் என்பதை தொடர்ந்து பேண இஸ்லாமியர்கள் மாட்டிறைச்சி தின்பவன், தொப்பிபிரட்டுபவன், தனது வியாபாரத் தந்திரத்தால் ஏமாற்றிப் பிழைப்பவன். அசுத்தமானவன் இவை எல்லாவற்றுக்கும் மேலாக எங்கிருந்தோ வந்து குடியேறியவன் என்றவாறான பழிச்சொற்கள் கருத்தாடல்களாக முன்வைக்கப்பட்டன. ஆறுமுகநாவலரால் 19ஆம் நூற்றாண்டில் தொடங்கப்பட்ட சித்தாந்த இயக்கமானது சைவம் என்றால் தமிழ், தமிழ் என்றால் சைவம் என்று தமிழ்த்தேசிய சைவ புனிதத்தை கட்டமைத்ததை நாம் அறிந்ததே. இந்த சித்தாந்த இயக்கத்துக்கு அரசியல் வடிவம் கொடுத்தது சேர்.பொன்.இராமநாதனின் அரசியல் செயற்பாடுகளேயாகும். “இந்தியாவில் மதம் மாறிய இழிந்தசாதி இந்துக்களின் பரம்பரையினரே இலங்கை முஸ்லிம்கள்” என்றவாறாக இலங்கை முஸ்லிம்கள் குறித்து கீழ்த்தரமான எண்ணங்களை ஏற்படுத்தும் நோக்கோடு அவரது செயற்பாடுகள் அமைந்தன. இப்படியாக தமிழர்களை தூய்மைப்படுத்தும் நோக்கில் சைவம் அல்லாத இஸ்லாமியத் தமிழர்கள் இழிந்த எதிரியாக உருவகிக்கப்பட்டனர். “கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்தகுடியென தமிழ்க்குடி” மீண்டும் ஒருமுறை நிரூபிக்கப்பட்டது.

தமிழனின் பாரம்பரிய புனிதத்துவத்துக்கு எதிரானதாக ஒவ்வொரு இஸ்லாமியனும் முன்நிறுத்தப்பட்டான். தமிழன் X சோனி (சோனகர்களை கொச்சையாக அழைக்கின்ற மொழி) என்கின்ற முரண்பாடுகள் கூர்மையாக்கப்பட்டன. தமிழ்த் தேசியம் தனது கற்பிதங்களாக பலவகைக் கதையாடல்களை தமிழன்மீது இனிய சுமையாகக் குவித்தது. தமிழ்மொழி கன்னித் தமிழாகவும் தமிழினம் புறநானூற்று மறவர் குலமாகவும் தனது அடையாளங்களை முன்னிறுத்திய போது தமிழர்களின் மதமாக இலங்கை பெரும்பான்மைத் தமிழர்கள் பின்பற்றும் மதமாகிய சைவத்தை தனது மத அடையாளமாக்கியது.



இவ்வேளையில் கிறிஸ்தவ, முஸ்லிம் என்கின்ற பலமதங்களைப் பின்பற்றும் தமிழர்களை மறுதலித்து தமிழன் என்பவன் சைவனே என்கின்ற ஒற்றை அடையாளத்தை தமிழ்த்தேசியம் மறைமுகமாகப் பிரேரித்தது. இலங்கையின் வடகிழக்குச் சூழலில் கல்வி, பொருளாதார, சமூக, அரசியல் ரீதியாக மேட்டிமைச் சக்திகளான யாழ்ப்பாணத்து சைவர்களே இதனூடாக தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதிகளாக முன்நிறுத்தப்பட்டனர். அதிலும் குறிப்பாக சாதிய ரீதியாக பிளவுண்டு கிடந்த / கிடக்கின்ற யாழ்ப்பாணச் சூழலில் அங்கு ஆதிக்க சக்திகளான சைவ-வேளாளர்களிடையே தமிழ்த் தேசியம் தனது வேர்களைத் தேடியது. இதற்கான அரசியற் செயற்பாடுகளில் தமிழரசுக் கட்சியும் அதைத் தொடர்ந்து தமிழர் விடுதலைக் கூட்டணியும் நிறைந்த பங்கு வகித்தன.

தனது சொந்தத் தொகுதியிலேயே தோல்விகண்ட யாழ் வேளாளரான அமிர்தலிங்கம் தொடர்ந்து த.வி.கூட்டணியின் தலைமைப் பொறுப்பை. தன்னிடம் தக்கவைப்பதற்கு வசதியாக 25 வருட காலமாக கிழக்கு மக்களின் ஏகோபித்த தலைவனாய் இருந்துவந்த செ.இராஜதுரையை தோற்கடிக்க வைக்கும் முயற்சியில் காசிஆனந்தனையும் இராஜதுரையையும் ஒரே தொகுதியில் மோதவிட்டார். கிழக்குத் தலைமைகளை சின்னாபின்னமாக்கும் இம்முயற்சி 1977 தேர்தலில் நடந்தது. இதேபோன்றே தனது அரசியல் எதிரியான அல்பேட் துரையப்பாவினால் நிர்மாணிக்கப்பட்ட யாழ் பல்கலைக்கழகத்தினை வெறும் கௌரவப் பிரச்சனைக்காகவே முழுமூச்சாய் எதிர்த்த தமிழர்சுக் கட்சியினர் தங்களது எதிர்ப்புக் கூட்டங்களில் “இது சங்கிலியனின்வாள்” ஒரு வாளைக் காட்டி உணர்ச்சிமிகு பிரச்சாரங்களை தளபதி அமிர்தலிங்கம் மூலம் செய்தனர். சங்கிலியன் மதம்மாறிய 1000 கணக்கான கிறிஸ்தவத் தலித்துகளை கொன்று குவித்தது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அந்த வாளினால்தான் என்பதில் எவ்வித வெட்கமும் படவில்லை. காரணம் தமிழன் என்பவன் சைவ வேளாளனே என்பது இயல்பாகவே அவர்களது மனதில் நிறைந்திருந்தது.

பலவழிகளிலும் ஒரு தலைநகருக்குரிய அம்சங்களைக் கொண்டிருந்த கிழக்கிலங்கை திருகோணமலை எதிர்காலத் தமிழீழத்தின் தலைநகர் என்பதை தமிழரசுக்கட்சி ஒப்புக்கு ஏற்றுக்கொண்டபோதிலும் யாழ் நல்லூரில் உள்ள சங்கிலியன் தோப்பே தமிழீழப் பாராளு மன்றமாகும் என த.வி.கூட்டணியினர் சூளுரைத்து வந்தமையையும் நாம் இவ்வகையில்தான் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது. இப்படி எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாக தமிழ்த் தேசியம் தமது பூர்வீகத்தை யாழ்சைவ வேளாளரிடையே மையப்படுத்தி தூய்மையான தாக முன்நிறுத்தியதோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக பாசிசக் கூறுகளை தமிழன் உளவியலில் பதித்தது என்பதுதான் உண்மை.

இந்தப் புனிதப்படுத்தப்பட்ட பெருமை மிகு அடையாளங்கள்தான் கடந்த 20 வருட வரலாற்றில் வடகிழக்கு முஸ்லிம்கள்மீது ஏராளமான கொடுமைகளைச் செய்து முடிக்க தமிழ் தேசியத்தின் பெயரால் தூக்கப்பட்ட துப்பாக்கிகளுக்கு உளவியல் ரீதியான பலத்தை அள்ளிக்கொடுத்தது.

போராளிகள் என்போர் தங்கள் சொந்த பந்தங்களை விட்டுவிட்டு நாட்டுக்காகப் போராடப் புறப்பட்டவர்கள். அவர்கள் எது செய்தாலும் அது விடுதலையின் பெயரால் கேள்வி கேட்க முடியாததாக விமர்சிக்க முடியாததாக ஆக்கப் பட்டது. அதையும்தாண்டி போரராளிகள் ஹீரோக்கள் ஆக்கப்பட்டு சமூகத்தின் மீது நீதி செலுத்துவோராக சட்டஒழுங்கைப் பேணுபவராக அதிகாரங்களைக் கையில் எடுத்துக் கொண்டனர். இந்நிலையில் தமிழ்ச் சமூகத்தின் ஒவ்வொரு தனிமனிதனும் விரும்பியோ விரும்பாமலோ அரசிடம் இருந்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை விடுதலை இயக்கங்கள் கையகப் படுத்திக் கொண்டதை ஏற்றுக் கொண்டு மௌன மானான்.விடுதலை இயக்கங்கள் என்ற நிலையில் இருந்து இறங்கி உருமாறிப்போன அதிகார அமைப்புகளில் அங்கமாக செயற்படத் தொடங்கினான். இது காலப்போக்கில் ஆயுதம் தூக்கியோரின் எதேச்சையதிகாரத்துக்கும் அத்துமீறல்களுக்கும் வழிதிறந்துவிட்டது. சக இயக்கப் போராளிகளை அழித்தொழிக்க மேற்படி எதேச்சையதிகாரம் எப்படி வசதியானதோ அதுபோன்றே சிறுபான்மை முஸ்லிம்கள் மீதும் இன அழிப்பை மேற்கொள்ள ஏதுவாயிற்று. இவ்வாறுதான் தனது சிறுபான்மைச் சமூகம் ஒன்றின் மீது இனஅழிப்புக்கு அடிகோலிட்ட தமிழ்த் தேசியத்தின் சித்தாந்தத் தளம் அதன் அடையாளங்கள் என்பவற்றோடு இவ்வகை தமிழ்பாசிச செயற்பாடுகளுக்கு துணைபோகும் கருத்தாடல்களை முன்மொழிவோரும் அதனைப் பேணிக்காக்க முயல்வோரும் குறித்து எச்சரிக் கையாய் இருக்கவேண்டியது அவசியமாகும். அவ்வகையில் மிகவும் தந்திரோபாயமாக தமிழ் பாசிசக் கருத்தாடல்கள் சிறுபத்திரிகைச் சூழல்களிலும் நடமாடத் தொடங்கியுள்ளன. இவர்கள் அடையாளம் காணப்பட வேண்டும்.



இலங்கை முஸ்லிம்கள் மீதான தமிழ்ப் பாசிஸ்டுகளின் ஒடுக்குமுறையும் அதனைத் தொடர்ந்து முஸ்லிம் தேசியம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கான தேவையும் ஏற்பட்ட சூழ்நிலைகள் நாம் கடந்து வந்தவையே.

பல்விதப் பிற்போக்கு அம்சங்களையும் கொண்டு வெறும் இராணுவத் தலைமையின் கரங்களில் இறுகிப்போய் நிற்கும் தமிழ்த் தேசியத்தின் பாசிசப் போக்கை தொடர்ந்து பாதுகாக்கவும் முஸ்லிம்களின் எழுச்சிகளை அவசியமற்றதாகவும் காட்டமுனையும் கருத்தாடல்கள் தமிழ் புத்திஜீவித் தரப்பில் இருந்து இன்றும் வெளிக்காட்டப்பட்டு வருகின்றமை மிக வேதனை அளிக்கும் விடயங்களாகும். இந்தக் கருத்தியல் ஆதரவுத்தளமே மிக அபாயகரமானது.

இஸ்லாமியர் எனும் ஒரே காரணத்துக்காக தங்கள் மீது இழைக்கப்பட்ட பாரிய மனிதஉரிமை மீறல்களைத் தொடர்ந்து தங்களை ஒரு சிறுபான்மைத் தேசிய இனமாக முன்நிறுத்திப் போராடும் இலங்கை முஸ்லிம்களின் உணர்வுகளை அவசியமற்றதாகவும் அபாயகரமான தாகவும் காட்டுகின்ற புத்திஜீவித உளறல்கள் தமிழ்ப் பாசிஸ்டுகளுக்கு மென்மேலும் ஊக்கமளிப்பதேயாகும். இவ்விதமாக அதிகாரத்தைக் கையில் வைத்திருக்கும் புலிகளைப் பாதுகாக்கவும் முஸ்லிம்களின் நியாயமான தேசிய உணர்வுகளை பலவீனப்படுத்தவும் சேவைசெய்து வருகின்ற தமிழ்ப் புத்திஜீவிகளின் வரிசையில் அண்மைக் கால சில வெளிப்பாடுகளின் ஊடாக நான் இருவரது குரல்களை அடையாளம் காண்கின்றேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேர்ச் நிறுவனத்தின் சார்பில் நடத்தப்பட்ட (27, 28 - மார்ச்-1999) "இலங்கை முஸ்லிம்களின் தேசிய அடையாளங்களும் அரசியல் தலையீடும்" எனும் கருத்தரங்கில் வி.ரி.தமிழ் மாறன் தெரிவித்த கருத்துக்கள் மிகவும் கண்டிக்கத்தக்கவை. போதாக்குறைக்கு அப்போதைய சரிநிகரின் 177 இதழ் அழகான படங்களுடன் இவரது பேச்சை பிரசுரித்திருந்தது.

அவர் முன்வைக்கும் கருத்துக்களாவன:-

* தமிழ்-முஸ்லிம் ஒற்றுமை என்பது அவர்களை ஒரே அரசியல் ஆளுகைக்கு உட்பட்டவர்களாக மட்டும் இருக்கும் வரையில் நன்றாகத்தானிருந்தது.

* தமிழ்மக்களின் அபிலாஷைகள் ஒன்று திரண்டு (crystallized) அவை தமிழ்த்தேசிய இனத்தின் அடிப்படைக் கோட்பாடுகளாக மாறிய போது முஸ்லிம்கள் அந்த அடையாளத்துக்குள் தங்களைக் கொண்டு வர மறந்துவிட்டார்கள். மொழியால் ஒன்றுபட்டவர்கள் நாங்கள் சகோதரர்கள் என்று இதுகாறும் வலியுறுத்தி வந்தவர்கள் திடீரென்று - மொழியால் ஒன்று இனத்தால் வேறு என்று குரல் எழுப்பினார்கள்.

இப்படியான கேள்விகள் தமிழ் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் முஸ்லிம்களின் தனித்துவத்தையும் ஒற்றுமையான பங்களிப்பையும் இருட்டடிப்பு செய்யும் நோக்கத்தில் இருந்து எழுபவைதான். ஆயிரக்கணக்கான முஸ்லிம் இளைஞர்கள் தமிழீழ விடுதலை இயக்கங்களில் சேர்ந்திருந்த வரலாறு எல்லாம் மறக்கடிக்கவைக்கும் முயற்சியின்றி வேறென்ன?

மேலும் அவர்:-

* முஸ்லிம்கள் தங்களை ஓர் இனமென்று அடையாளப்படுத்தி - அதனையே அரசியல் சக்தியாகவும் மாற்ற வேண்டிய அவசரமும் ஏற்பட்டு விட்டது.

* முஸ்லிம் காங்கிரசின் தோற்றம் அவசியமற்றது என்று தென்னிலங்கை முஸ்லிம்கள் சிலர் அபிப்பிராயப் படுகின்றனர்.

* மொழியைப் பொறுத்தளவில் அதனைத் தங்களது அடையாளத்தின் ஓர் அம்சமாக அவர்கள் கருதியிருந்தால் மொழிப் போராட்டத்தின் போது முஸ்லிம்களின் பங்களிப்பு எப்படி இருந்தது என ஆராயவேண்டிய தவசியம்.இனிப் பிரதேசமும் தங்கள் அடையாளத்தின் ஓர் அம்சமெனக் கருதினார்களாயின் அதற்கான போராட்டமும் அவசியம். இதையும் தவிர்த்து மத ரீதியில் மட்டும் தங்களை முதலில் அடையாளப் படுத்தியவர்கள் பின்பு இனரீதியில் அடையாளப்படுத்த எடுத்த முயற்சிதான் அதிக எதிர்ப்புகளைக் கொண்டுவந்தது. இதுவே பள்ளிவாசல்கள் மீதான தாக்குதல்களுக்குக் காரணமாகலாம்.



மேற்படி கருத்துக்களின் ஊடாக தமிழ்த்தேசியத்தின் தூய்மையை அழகாகக் காப்பாற்றி அதேவேளை முஸ்லிம்களின் உரிமைக் கோரிக்கை மீதும் தனித்துவத்தின் வளர்ச்சிமீதும் சேறு பூசும் நோக்கம் அப்பட்டமாகத் தெரிகிறது. முஸ்லிம்களின் தனித்துவம் காலாகாலமாக பேரளவிற்கேனும் நிலைநாட்டப்பட்டுவந்த வரலாற்றுச் சம்பவங்கள் குழிதோண்டிப் புதைக்கப்படுகின்றன.

அ. 1956 ஆம் ஆண்டு தமிழரசுக்கட்சி தீர்மானம்.
ஆ- 1976வட்டுக்கோட்டைத் தீர்மானம்
இ. 1988 ஆம் ஆண்டு முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணி - புலிகள் ஒப்பந்தம்.
ஈ. ஈ.பி.ஆர்.எல்.எப் அரசியல் அறிக்கை
உ. பி.எல்.ஓ.ரி இன் பொலிட் பீறோ உறுப்பினர் ஒதுக்கீடு.

என்று முஸ்லிம்களின் தனித்துவம் ஒவ்வொருகட்டத்திலும் குறைந்தபட்சமேனும் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்துள்ளது. இங்கு புதிதாக ஒன்றும் தனித்துவக்குரல் எழும்பவில்லையே. அதுமட்டுமின்றி கிழக்கில் நடந்தேறிய பள்ளிவாசல் படுகொலைகளுக்கு தத்துவார்த்த விளக்கம் கொடுக்கும் அளவிற்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமே முன்வரவில்லை. இங்கே தமிழ்மாறன் எவ்வளவுதூரம் பாஸிஸ்ட்டுகளின் தத்துவ ஆசிரியனாக தன்னை தயார் படுத்தியிருக்கிறார் என்பதை புரிய முடிகிறது. சிலவேளை தமிழ்மாறன் போன்றோர் இப்படியும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

* இன்றைய முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அஸ்ரப் 1976 ம்ஆண்டு தமிழீழக் கோரிக்கைக்கு வித்திட்ட வட்டுக் கோட்டைத் தீர்மானத்தில் கலந்து கொண்டது எதற்காக?

* வித்தியாசமான மதகலாச்சாரப்ப ண்பாட்டு அம்சங்களை கொண்டிருந்த போதும் தமிழ்த் தேசியத்துடன் பின்னிப் பிணைந்திருந்த முஸ்லிம்களை உதா சீனப்படுத்தி அவர்களின் தனித்துவத்தை மறுதலித்து ஒற்றுமை உணர்வை சீர்குலைத்தது விடுதலை இயக்கங்கள் அன்றி வேறு யார்?

என்பன குறித்து மௌனம் சாதித்து இவர் சொல்லவருவது என்னவென்றால் ‘தமிழ்த்தேசியமானது தேவையின் அடிப்படையில் எழுந்தது. முஸ்லிம் தேசியமானதோ தேவை யற்றது.’ இதற்காக அவர் முன்வைக்கும் கேள்விகள் பின்வருமாறு ‘இலங்கை முஸ்லிம்கள் என்ற அடையாளத்தின்கீழ் தமிழ் மொழியின் நிலமை என்ன? இக்கேள்வியை வலுப்படுத்த அவர் ராசிக் பரிட் என்ற (இறந்துபோன) தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரை சாட்சிக்கு அழைக்கிறார். காரணம் அந்த ராசிக் பரிட் இலங்கை சிங்கள தேசியக் கட்சிகளின் சார்பில் செயற்பட்டவர். ஆனால் அவர் முழுக்கமுழுக்க பிரதிநிதித்துவப் படுத்தியது தென்னிலங்கை முஸ்லிம்களையே என்பதையும் அப்போதெல்லாம் வடகிழக்கின் பெரும்பான்மையான முஸ்லிம்கள் தமிழரசுக் கட்சியுடனே ஒன்றித்து இருந்தனர் என்பதையும் ஏனோ கவனத்தில் எடுக்கவில்லை. போட்டியின்றியே யாழ் மாநகர முதல்வராக ஒரு முஸ்லிம் தெரிவுசெய்யப்படும் அளவிற்கு வடகிழக்கு முஸ்லிம்கள் தமிழர்களாகவே தங்களை அடையாளப் படுத்தியிருந்தனரேயன்றி ராசிக் பரிட் போன்ற தென்னிலங்கை முஸ்லிம் தலைமைகளின் கீழ் அணிதிரண்டிருக்கவில்லை. அந்தக் காலத்துக்கும் சமகாலத்துக்கும் இடையே இலங்கை முஸ்லிம்களின் அரசியல் அபிலாசைகளையும் அவற்றை நெருக் கடிக்குள்ளாக்கக்கூடிய புற அரசியற்



செயற்பாடுகளையும் கண்டுகொள்ளாது கடந்த கால முஸ்லிம் தலைமையொன்றின் அரசியல் வர லாற்றை மாறாத ஒற்றைப் போக்காக பார்ப் பதும், இலங்கை எங்கும் பரந்து வாழும் எல்லா முஸ்லிம் களுக்கும் பொது மைப்படுத்துவதும் எப்படிச் சரியானதாய் இருக்கமுடியும். இன்று ஒருலட்சம் முஸ்லிம்கள் குடிபெயர்க்கப்பட்டு தென்னிலங்கை எங்கும் அகதிகளாக அலைந்து திரியும் நிலையில் கிழக்குப் பள்ளிவாசல்கள் மீது நூற்றுக் கணக்கான படுகொலைகள் நிகழ்த்தப் பட்டபின்பும் இவை அனைத்துக்கும் தமிழ்த் தேசியமே காரணமாய் இருக்கின்ற நிலையிலும் கிழக்கு முஸ்லிம்களுக்கென ஒரு பலமிக்க தலைமையாக முஸ்லிம் காங்கிரசின் உருவாக் கம் அவசரமானது என்றும், “இலங்கை முஸ்லிம்கள்” என்ற அடையாளத்தில் தமிழ் மொழியின் நிலைமை என்னவென்றும் குத்தகை மனப்பான்மையில் பேசும் தமிழ்மாறன் சிலவற்றைத் தெரிந்துகொள்ள வேண்டும். தனிச் சிங்களச் சட்டத்துக்கு எதிராக 1956ல் கடும் கண்டனங்களை வெளியிட்டு தனது கட்சியில் இருந்தே வெளியேறிய ஏ.எம்.ஏ.அஸீஸ் போன்றோர் முஸ்லிம்கள் இன்றி வேறுயார்?

குறித்தவொரு மொழியின் ஊடாகத் தான் ஒரு தேசிய இனம் தன்னை அடையாளப் படுத்த முனையவேண்டும் என்பது அன்றைய சோவியத் சூழ்நிலைகளுக்கேற்ப ஸ்ராலின் சொன்ன வரையறைகளே தவிர இது எக் காலத்துக்கும், உலகின் எந்த மூலைக்கும் பொருந்தக்கூடிய பொன்மொழியல்ல. இப்படியான தேசிய இனஅடையாளங்கள் குறித்து நிரந்தரக் கோட்பாடுகளை கார்ல்மார்க்சோ, லெனினோ எக்காலத்திலும் முன்வைக்கவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

இன்று இலங்கை முஸ்லிம்களின் தேசியக் குரலுக்கு ஒரு மொழிமட்டும்தான் அடையாளம் தருவதாக இருக்க வேண்டும் என்று யாரும் நிர்ப்பந்திக்க முடியாது. அதேவேளை தமிழ்த் தேசியப் பெருங்கதையாடல்களுக்குள் அடங்க மறுத்து தன் மதத்தினூடு அடையாளம் கொள்ளும் முஸ்லிம் தேசியமானது தமிழைத் தனது மொழி அடையாளமாக கொள்ளக்கூடாது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் யாரும் வற்புறுத்த முடியாது. ஏதோ ஓர் அடையாளம் அவர்களின் அரசியல் வெளிப்பாடுகளினூடாகதன்னை முன்னிறுத்தும் போது ஓர் சமூகக் குழுவானது அவ்வடை யாளத்தின் பெயராலே இனம் காணப்படுகிறது. அல்லது எந்த ஒரு அடையாளத்தின் பேரில் குறித்த சமூகக் குழுவொன்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் வண்ணம் அரசினாலோ அன்றி, அதிகாரக் குழுக்களினாலோ அடையாளம் காணப்படுகின்றதோ அந்த அடையாளத்தின் ஊடே அச்சமூகத்தை ஓர் தேசிய இனமாக நாம் இனம்காண வேண்டும்.

இவ்வகையில்தான் இலங்கை முஸ்லிம்களை தமிழ்த்தேசியம் தன்னிலிருந்து வேறுபடுத்த, தமிழினத்தை சுத்திகரிக்க எதை முன்னிறுத்தியது என்றால் அது அவர்களது மதத்தையேயாகும். (வடக்கு முஸ்லிம்கள்) குறிப்பாக 1000 ஆண்டு வரலாற்றைக்கொண்ட தமிழையே தாய்மொழியாக, தமிழையே மூச்சாக கொண்டிருந்தபோதும் அவர்கள் பின்பற்றியது இஸ்லாம் என்கின்ற ஒரே காரணத்துக்காக 24 மணிநேர அவகாசத்தில் உடுத்த துணியோடு வடக்கை விட்டுத் துரத்தப்பட்டனர். அப்படி யிருக்க இந்தியாவில் இருந்து வெளியாகும் ஆறாந்திணை என்கின்ற இன்ரநெட் சஞ்சிகையில் வ.ஐ.ச.ஜெயபாலன் சொல்லியுள்ளதை கீழே பார்க்கலாம்.

இலக்கியச் சந்திப்புக்களில்தான் அழுது புலம்புகிறார் என்றால், பேட்டியிலும் இப்படி அறளை பேர்ந்து புலம்பியிருக்கிறாரே.

* "மாநிலத்தின் விடுதலைக்காகப் போராடுபவர்கள் தமிழர்களையும் முஸ்லிம்களையும் வென்றெடுக்க வேண்டும்."

* "ஆனால் அத்தகைய இணைந்த போராட்டத்தை முன்வைப்பதில் தமிழ் அமைப்புகள் தோல்வி கண்டிருக்கின்றன."

தமிழ் அமைப்புகளின் தோல்விக்காக அழும் தமிழ்தேசியம் ஜெயபாலன் முஸ்லிம் களுக்கு நடந்த எத்தனையோ மனித உரிமைமீறல்கள் குறித்து இப்பேட்டியில் வாய்திறக்கவில்லை. ஆனால் முஸ்லிம்களின் தலமை குறித்து இப்படிச் சொல்கிறார்..

ஒற்றுமை என்பது ஒன்றில் ஒன்றைக் கரைத்துவிடுவதல்ல. ஒவ்வொரு இன சமூகக் குழுக்களினதும் தனித்துவங்களை மதித்து ஒன்று சேர்வது. அது தங்கள் உயிர்களுக்கே பாதுகாப்பற்ற நிலையில் இருப்பு என்பதே

* "முஸ்லிம்கள் சிதறியிருக்கிறார்கள். அவர்களுக்குள்ளே இணைப்பை ஏற் படுத்துவது சாதாரண முஸ்லிம்களின் கையில் இல்லை, அதற்கான அமைப்பும் அவர்களிடத்தில் இல்லை."

இங்கேதான் காலாகாலமாக முஸ்லிம் களையும் கிழக்குத் தமிழர்களையும் தொடர்ந்து ஏமாற்றிவருகின்ற யாழ்வேளாள மேட்டுக்குடி சித்தாந்தத்தின் நீட்சியாக வ.ஐ.ச ஆஜரா கின்றார். தங்களைத் தவிர யாராலும் தலைமை என்கின்ற பொறுப்பை ஏற்க முடியாது நானே விடுதலை, நானே ஒளி, நானே சொர்க்கம், அனைத்துக்கும் வழிகாட்டி நானே என்கின்ற சுவிசேஷ பாணியில் கடை விரிக்கின்றார். ஏன் முஸ்லிம்களுக்கான ஓர் தேசிய குரலாக முஸ்லிம் காங்கிரசையும் இன்னும் பல முஸ்லிம் அமைப்புகளையும் தமிழ் மாறனைப் போல் இருட்டடிப்புச் செய்யவேண்டும். 1986ல் இருந்து முஸ்லிம் காங்கிரசின் உதவியுடன் தேசியரீதியில் அணிதிரண்டிருக்கும் லட்சக்கணக்கான முஸ்லிம்களை அவமதிப்பதன் நோக்கம் என்ன? முஸ்லிம்களின் அரசியல் செயற்பாடு குறித்து மௌனம் சாதிப்பது அன்றி மட்டம் தட்டுவது என்றவாறாக செயற்பட்ட சேர்.பொன்.இராமநாதன் செய்ததற்கும் இன்று தமிழ்மாறன், ஜெயபாலன் போன்றவர்களின் செயற்பாட்டுக்கும் என்ன வித்தியாசம். தொடர்ந்து அது சிறு பிரச்சனை சமாளிக்கலாம் என்றவாறு கூறிச்செல்வது நீங்கள் தமிழர்கள் அல்ல தமிழர் என்பது சைவர்கள் மட்டுமே என்று செயலில்காட்டிய புலிகளின் கொடூரங்களை மறைத்து அதன்பின்பு தங்களை ஓர் முஸ்லிம்கள் என்ற அடையாளத்தின் கீழ் தனித்துவம் மிக்க ஓர் சமூகக் குழுவாக, சிறுபான்மைத் தேசிய இனமாக உணரத் தொடங்கிய முஸ்லிம்களை, அவர்களின் நியாயமான தேசியக் கோரிக்கைகளை மறுத்து மீண்டும் ஒருமித்த தமிழீழக் கதையாடல்களுக்குள் பயன்படுத்தத் துடிக் கும் பிற்போக்கான தமிழ்த்தேசியத்தின் புத்திஜீவித பணியைத்தான் இவர்கள் செய்து வருகிறார்கள் இனங்களின்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்விக்கிடமான போது தங்களது அடையாளங்களை காப்பாற்றிக் கொள்ளத் துடிக்கும் ஓர் சிறுபான்மையினத்தின் கோரிக்கைகளையும், அபிலாசைகளையும் அங்கீகரித்தவாறு உருவாகும் ஒற்றுமை வேறு அச்சிறுபான்மையினத்தினரை மூன்றாம்தரப் பிரஜைகளாக, எடுப்பார் கைபிள்ளைகளாகப் பாவித்து தமது தமிழ் தேசிய முகமூடிக்குள் அமிழ்த்தி உருவாகும் ஒற்றுமை வேறு என்பதை நான் ஜெயபாலனுக்கு சொல்லித் தர வேண்டியிருப்பது இன்றைய காலத்தின் கட்டாயம்.

இவர் சொல்லவருகின்ற இன ஒற்றுமை என்பது இவர்கள் கருத்தில் ஒடுக்கப்பட்ட முஸ்லீம் சிறுபான்மை தேசிய இனத்தின் மீது இழைக்கப்பட்ட கொடுமைகளை மறைத்து விட்டு அல்லது மறக்கச் செய்துவிட்டு மீண்டும் ஒரு படி நிலை ஏற்றத்தாழ்வுகளை ஏற்றுக்கொண்ட ஒற்றுமையாகத்தான் இருக்கிறது. மாறாக முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட அநீதிகளுக்கு மன்னிப்புக் கோரலோ, சுய விமர்சனமோ இன்றி இப்படியான புத்திஜீவிகளால் கட்டியமைக்கப்படும் ஒற்றுமை யாழ்பாணத்து சைவ, வேளாள மேலாதிக்கத்தை தமிழ்மொழி பேசும் மற்றய சமூகக் குழுக்கள்மீது தொடர்ந்து மேலாட்சி செலுத்த வழிபண்ணுகின்ற ஒற்றுமைதான். இல்லாவிடின் இஸ்லாமியர் என்கின்ற முஸ்லிம்களின் தனித்துவங்களை அங்கீகரிக்க வழிபண்ணுவதே ஜனநாயகத்தின் அடிப்படையாக இருக்க முடியும். நடந்தவற்றுக்கு மன்னிப்புக் கோரலும், நட்ட ஈடுவழங்குதலும் என்றவாறாக மனந்திரும்புதல்களின் அடையாளங்களை செயற்படுத்த வேண்டுமேயன்றி நடந்தவற்றை மறைத்து விட்டு அல்லது சிறுபிரச்சனையாக்கிவிட்டு இனங்களை ஒன்றாக்க முயல்வது இது தமிழர்களை நோக்கி சிங்கள இனவாதிகள் பேசுகின்ற "இலங்கை மக்கள்" என்கின்ற ஒற்றுமைதான். இது மென்மேலும் அடக்குமுறைக்கும், இன மேலாதிக்கத்துக்கும் மட்டுமே வழிவகுக்கும்.

புலிகள் நாளை இல்லாமல் போகலாம் ஆனால் இவ்வித தமிழ்ப் பாசிச கருத்துக்களை சுமந்து திரியும் மனிதர்களால் நிரம்பியிருக்கின்ற தமிழ் தேசியத்தின் இன்றைய சூழல் இன்னும் இன்னும் அதிகமாக பல பாசிஸ்ட்டுகளை உருவாக்கி விடும் அளவிற்கு ஆபத்து நிரம்பியதாய் உள்ளது.

ஜெயபாலன் தனது பேட்டியில் அடிக்கடி சிங்கள அரசை மட்டுமே எதிரியாக நிலைநிறுத்துகின்ற போலி அரசியலானது தமிழர்களிடையே ஒடுக்கப்பட்ட முஸ்லிம்களை ஏமாற்றி இன்று 'தமிழ் தேசியம் மையம் கொண்டிருக்கின்ற யாழ்ப்பாணிய சைவ வேளாள ஆதிக்கப்பிரிவினரின் கரங்களிலே மீண்டும் மீண்டும் அதிகாரத்தைக் குவிப்பதற்கு வழிகோலும்.

இது மற்றையவற்றின் அதாவது சிறுபான்மை முஸ்லிம்களின் அடையாளங்களை மறுதலிக்கின்ற போக்கு. இவ்வகையில் மதஸ்தலங்களை தாக்கி ஓர் சமூகத்தையே பிய்த்தெறிந்து அதன் எதிர்காலத்தையே சூனியமாக்கிவிட்ட நிலையில் அவற்றை மறைத்துவிடுவதும் மறக்கச்செய்வதும் அல்லது நியாயப்படுத்துவதுமான செயற்பாடுகள் புத்திஜீவித மட்டத்தில் இன்னும் இருப்பதானது, முஸ்லிம் தேசத்தின் குரலை அங்கீகரிக்க மறுப்பதோடு தமிழ்த் தேசியத்தின் பாசிஸக் கூறுகளுக்கு ஒருவகை செவ்வியல் நெறிப்படுத்தலையே கட்டியமைக்கும் செயலைச் செய்துவருகிறது.

ஆனால் இவை அனைத்தையும் மீறிதமிழ் பாசிஸத்தின் பிடியில் இருந்து முஸ்லிம் சமூகம் தன்னை விடுவிக்கும் காலம்வரும். அன்று முஸ்லிம் தேசம் தனது தலைவிதியை தானே தீர்மானிக்கும் அது காலத்தின் கட்டாயம்.

●

## மாவனல்லை

முஸ்லீம்கள் மீதான சிங்கள இனவாதிகளின் திட்டமிட்ட தாக்குதல்களின் தொடர்சியாக நடந்தேறியிருக்கின்ற கொலைகள் சொத்தழிப்புக்கள் மற்றும் பள்ளிவாசல்கள் மீதான காட்டுமிராண்டித்தனமான தாக்குதல்களை எக்ஸில் வன்மையாகக் கண்டிக்கிறது. 1915,1976,1982 ஆண்டுகளின் அழித்தொழிப்பு நடவடிக்கையின் தொடர்சியே இது.

-எக்ஸில்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “எங்கள் தாயகமும் வடக்கே”






இது ஒரு பாடவேண்டிய பரணி. தேசம் விட்ட தவறுக்காய் வேதனைப்படவேண்டி வரும். பாடவேண்டிய இந்தப் பரணியை என்றோ ஒருநாள் ஒரு கவிஞன் காவியமாக்கலாம். அந்தக் காவியத்துக்காக எடுத்துக்கொடுக்கப்படும் முதல் அடியே இந்தக் கவிதை வரியாகும்.

-இளைய அப்துல்லாஹ்-

**“123 பள்ளிவாசல்கள், 26 புனித பிரதேசங்கள், 189 அரபு மதரசாக்கள், 65 அரசாங்க பாடசாலைகள், ஆயிரக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்கள், 1400 வர்த்தக கைத்தொழில் நிலையங்கள், 15 ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள், வீட்டுச்சாமான்கள், ஆடுகள், மாடுகள் என்ற எங்கள் சொத்துக்களை யார்வந்து மீட்பர்? யார் கொணர்ந்து தருவர்? யாருக்கு விளங்குமிது?”**

பட்டவனுக்குத்தான் தெரியும் இவ்வளவு இழப்புகளையும் சுமந்து கொண்டு கிட்டத்தட்ட ஒரு லட்சம் முஸ்லிம்கள் வடபுலத்தில் இருந்து புலிகளால் துரத்தியடிக்கப்பட்டபோது அதற்குள் இந்தக் கவிஞனும் இருந்தான். தன்மக்களின்

“கதையெல்லாம் கண்ணீராய்...
கண்ணீரெல்லாம் கதையாய்”

எண்ணவொண்ணா சோகத்தை தன் இதயத்தில் எழுதிக்கொண்டான்.

“பூநகரி வீதியில்
மேடு பள்ளம் தாண்டி
புங்கடியா புளியடியா
கண்கட்டி வித்தையிலே
கைதேர்ந்து”

“குதிரை மலைக்கு
குறுக்காக வரும்போது - குளிரில்
தாயின் கைவிறைத்து
குழந்தை விழுந்து
நடுக்கடலில் மாண்டகதை”

என்று ஒவ்வொன்றையும் தனக்குள் பதிந்துகொண்டான். பின் புத்தளத்தில் ஒவ்வொரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அகதிமுகாம்களிலும் அவர்கள் படும் சோகங்கள் அவன் "எட்டஇருந்து கேட்டவை அல்ல கிட்ட இருந்தே பார்த்தவை" யாக அவ்வப்போது எழுதிய கவிதைகள் சுமார் ஏழாண்டு முடிவில் தொகுக்கப்பட்டது.

கேள்விகளாலே நிரம்பியிருக்கும் இக்கவிதை வரிகள் மட்டுமல்ல இன்னும் விடையின்றி காத்திருப்பது இந்தப் பத்தாண்டு முடிவிலும் அந்த மக்களுந்தான்.

ஏமாற்றம் தந்த ஏக்கப் பெருமூச்சு, நினைந்தழல், பரிதவிப்பு என்று பல்வித மன உணர்வுகளின் சங்கமமாய் லட்சத்துக்கும் மேலான அகதிகள் உள்ளத்தில் கனன்று கொண்டிருக்கும் உணர்வுகள் கேள்வியெழுப்புகிறது. அந்த கொடிய துப்பாக்கி மனிதர்களை நோக்கி...

"சொந்த பூமியில் சுதந்திரம் கொண்டாட என்ன இருக்கிறது
சுவடுகளை அழித்துவிட்டு?"
"சொந்த சகோதரரின் மையத்தின்மீதா சந்தோஷக்கொடி நாட்டுவது?"
"கந்தையாவோடு காதரும் உட்கார்ந்து குந்தியிருந்து கூழ்குடிக்க எண்ணியது நடந்ததா?"
"ஒன்றாய் இருந்து உருவாகும் நாட்டை ஒற்றுமையாய்ப் பார்க்க எண்ணியது நடந்ததுவா"


ஆனாலும் நம்பிக்கையொன்றையே நம்பி...

"பற்றை தட்டி தூசு விலக்கி பள்ளிவாசலுக்கு பசிய நிறம் பூசி
மற்றும் ஒருமுறை அல்லாஹ்கு அக்பர் என்று வாங்கு சொல்லி
மீண்டும் எம்மண்ணை ஆரத்தழுவி கொண்டாடிக் குதூகலித்து
மனம் லயிக்கும் காலம் வரவேண்டும்"

என்று அவன் வேண்டுகையில் எதிர்காலம் மலர 'இனி ஒரு விதி செய்வோம்' என்று கொதித்தெழுந்த பாரதி போல் போர்முரசு கொட்டுகிறான்...

இனி எழுவோம்
எழும் எங்கள் உணர்வு
எழும் எங்கள் வேட்கை
எழும் எங்கள் தாகம்
எழும் எங்கள் தாயகம்
எங்கள் தாயகமும் வடக்கே!

அவர்கள் தாயகமும் வடக்கே.




-எக்ஸில்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# போதும் என்ற மனமே போதும்

ஏ.இக்பால்

எல்லைக்கு அப்பால் சென்று
தேடுதற் கெதுவுமில்லை
பல்லைக் கடித்துப் பரந்திருக்கும்
வான் எல்லையைப் பார்!
உள்ளோ வெளியோ ஒட்டாமல் செல்லும்
மேகக் கூட்டங்கள் ஓடுவதெங்கே?
இன்னுமேன் இருப்பதற்கொரு வீடு
உனக்கெதற்கு?
கண்ணுக்குத் தெரிகின்ற பரப்புனக்குக்
காணாதா என்ன?
காணாது போனால் இன்னுமின்னும்
கேட்பதாரிடத்தில்!
சொல்கிறேன் இனிமேல் உனக்கெதுவும்
சுகிப்பதற்குத் தேவையில்லை!

மேய்த்து நின்ற கால்நடைகள்
தொகை கண்ட மாத்திரத்தில்
சேர்த்துவிடத் துடித்தவர்கள்
சனத்தினையே விரட்டி ஒதுக்க வந்தார்!
மேய்ச்சல் நிலமும் மிகையான
விளைச்சல் நிலத்தினையும்
சேர்த்தவர்கள் எங்கள் நிலம்
என்றுரியவரை ஒதுக்கி விட்டார்
பார்த்துடனே இச்சூழ்ச்சிகட்குப்
பகைப் புலமே தேடிநின்றார்!

ஏய்த்துப் பிழைப்போர்கள் எல்லோரும்
இப்போது ஆயுதம் ஏந்தி யெம்மை
அடக்கி ஒடுக்கி விட்டால்
யாரிடத்தில் கூறி அபயம் தேடுவது?

பேரினமாய்த் திரண்டவர்கள்
பெரிதாக எல்லாம் எமதென்பதும்
யாரிவர்கள் எங்கள் பங்கு
எல்லா விடங்களிலும் உண்டென்று
ஆயுதத்தால் மிரட்டுவதும்
பார்த்தலுத்துப் பரந்து கிடக்கும்
ஒருலகில் கால் பதித்து
எல்லை வகுக்காது எங்கெல்லாம்
ஓடியாடித் திரிகின்றார்
ஓடுதலும் ஆடுதலும் இயற்கை
அவர்களுக்களித்த பலன் அது போதும்
போதும் என்ற மனமே போதும்!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை முஸ்லீம்கள்: கடந்து வந்த வரலாற்றுப்பாதையில்...

ஏ. ஜீ. எம்-ஸதக்கா

●●●

வரலாற்றுத் தரவுகளினடியாக இலங்கைச் சோனகர் எனப்படும் இலங்கை முஸ்லீம்களின் மூதாதையர் அராபியரே என்பதும் அவர்கள் தனியான பண்பாட்டு மதக் கோட்பாட்டைக் கொண்டவர்கள் என்பதும் தமது சமுதாயத்தின் தனித்துவத்திற்காகவும் தனது சமூகத்தின் இருப்புக்காகவும் வரலாற்றில் அவர்கள் கொடுத்து வந்த, வருகின்ற விலைகள் மிக அதிகம் என்பதும் அனைத்து தரப்பு மக்களாலும் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும்.

●●●

இலங்கை முஸ்லீம்கள் இன்று தமது நதி மூலத்தை அடையாளங்காண வேண்டிய வரலாற்றுத் தேவைக்குட்பட்டிருக்கிறார்கள். இந்நாட்டு வரலாற்றில், முஸ்லீம்கள் வகித்திருந்த பாத்திரம் அல்லது முக்கியத்துவம் இதுவரை இருட்டடிப்புச் செய்யப்பட்டு வந்துள்ளதால், இது தொடர்பான சில சரித்திரக் குறிப்புகளை நமது அவதானத்திற்குட்படுத்துவது இலங்கை முஸ்லீம்களின் தேசிய நீரோட்டப் பாதையில் பயனுள்ள தரிசனமாக அமையும்.

இலங்கை முஸ்லீம்கள் 'இலங்கைச் சோனகர்' என்றே அடையாளப்படுத்தப்படுகிறார்கள். 'சோனகர்' என்ற பதம் எப்படி உருவானது?

சோனகர் என்ற பெயர் இந்திய துணைக் கண்டத்தில் இலங்கை முஸ்லீம்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டு வந்துள்ளது. அரேபிய நாடு தமிழ் மொழியில் 'சோனகம்' என்றும், சமஸ்கிருத மொழியில் 'யவன' என்றும், பாளி மொழியில் 'யொன்ன' என்றும் அழைக்கப்பட்டது. பழந்தமிழ் இலக்கியங்களிலிருந்து இது உறுதியாகிறது. இதன் மூலம் 'இலங்கைச் சோனகர்' என்ற சிறப்புப் பெயரே இலங்கை முஸ்லீம்களை பிறநாட்டு முஸ்லீம்களிலிருந்து வம்சாவழியால் பேதப்படுத்தி, அவர்கள் அரேபியர்களின் வழித்தோன்றல்களே என்பதை உறுதிப்படுத்தும் சான்றாகத் திகழ்கிறது.

திரு.ரொட்லர் தமது தமிழ் ஆங்கில அகராதியில், ஹிந்து புவியியலில் குறிப்பிட்டுள்ள 56 தேசங்களில் சோனகமும் ஒன்றென்றும் அது அரேபியாவையே குறிக்கிறதென்றும் வலியுறுத்தியுள்ளார். இதன்படி அரேபியாவிலிருந்து வந்தவர்களும் அவர்கள் வழி வந்தவர்களுமே சோனகர் என அழைக்கப்பட்டனர். எனவேதான் 'இலங்கை முஸ்லீம்கள்' என்ற பதம் இஸ்லாத்தைப் பின்பற்றும் இலங்கைச் சோனகர்கள், காலக்கிரமத்தில் இஸ்லாம் மதத்தைத் தழுவிய





.Sathakka1-P1.assg

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உள்ளூர்வாசிகள் தென்னிந்தியாவிலிருந்து வந்த முஸ்லீம்கள் மற்றும் மலாயர்கள், மேமன்கள், போராக்கள் ஆகிய முஸ்லீம் இனக் குழுமங்களையும் ஒன்றிணைத்த ஒரு பரந்துபட்ட சமுதாயத்தை குறித்து நிற்கிறது எனலாம்.

## அரேபியருடைய இலங்கை வருகை

இலங்கைக்கு இஸ்லாத்தை அறிமுகப்படுத்தியவர்கள் அரேபியர்களே. அரேபியரது இலங்கை வருகை திட்டவட்டமாக எங்கே எப்போது நிகழ்ந்தது என்பவற்றுக்கான போதிய தொல்லியல் சான்றுகள் கிட்டவில்லை. கிடைத்த சான்றுகளைக் கொண்டு சரியானதோர் வரலாற்று ஒழுங்கு உருவாக்கப்படாமையும் நமது துரதிஷ்டமே.

வரலாற்று நூல்களில் இது பற்றிய பல விபரங்கள் விரவிக் காணப்படுகின்றன. இலங்கைக்கு விஜயனும் அவனது 700 தோழர்களும் வருகை தருவதற்கு முன்பே அரபிகள் இங்கு வருகை தந்ததாக திரு சி. சுந்தரலிங்கம் தனது ஆய்வில் குறிப்பிடுகிறார். அதற்கு ஆதாரமாக ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முன் (கி.மு. 326-327) மகா அலெக்சாந்தர் மன்னனின் ஆணைப்படி இலங்கையின் பூகோள வரைபடத்தை வரைந்த கிரேக்க மாலுமியான 'ஒனெஸ் கிறிட்டொஸ்' என்பவர் இன்றைய புத்தளத்தோடும் அதைச் சுற்றியுள்ள பாகத்தோடும் பொருந்துகின்ற பிரதேசத்தில் "சோனாள்"களின் குடியேற்றங்களைக் கண்டார் என்ற குறிப்பை முன்வைக்கிறார். எனவே ஒனெஸ் கிரிஸ்டொஸ் இந்தத் தீவுக்கு விஜயம் செய்து தீவைக் கப்பலில் சுற்றி வந்த போது இலங்கையில் ஈரினங்களையே, அதாவது தமிழ்க் குடிகளையும் (சோனாள் அல்லது சோனகர்) என அறியப்பட்டவர்களுமான அரபுக் குடிகளையுமே கண்டிருக்க வேண்டும் என ஆய்வாளர்கள் அபிப்பிராயம் கொள்கின்றனர்.

முன்னாள் சுவடிகள் திணைக்கள ஆணையாளரான கலாநிதி பாலேந்திரா இது பற்றிக் குறிப்பிடும் போது "ஆரியர்கள் இலங்கை வரும் போது இருந்த வேடுவர்களுடன் சேர்ந்த வரலாற்றை உடையவர்களே அரேபியர்". இவர்கள் இலங்கையில் "ஆதிக் குடிவாசிகள்" என்றும் இன்னும் பேராசிரியர் ஆந்திரியேஸ் பகல் கி.மு.377இல் இலங்கையில் இருந்த அரேபியர்களுக்கு அனுராதபுரத்தில் புறம்பாக ஓரிடம் ஒதுக்கப்பட்டிருந்தது என்றும் கூறுகின்றார்.

மேலும் ஐரோப்பிய எழுத்தாளர் பிலினி என்பவரது நூலில் கி.பி. முதலாம் நூற்றாண்டில் அரேபியர் காணப்பட்டதாகக் கூறும் குறிப்பையும் கொஸ்மஸ் என்பாரும் அவர்கள் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் இருந்ததாகக் கூறும் குறிப்பையும் சேர் ஜேம்ஸ் டெனன் என்பவரின் 'இலங்கை' எனும் நூலில், "முஹம்மது நபி(ஸல்) அவர்கள் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளிற்கு முன்னர் அரேபியர்கள் வர்த்தகர்களாக இங்கு அறியப்பட்டிருந்தனர். என்ற தகவலையும் வைத்து நோக்கும் போது இலங்கைக்கும் அரேபியர்களுக்குமான வரலாற்றுப் பாரம்பரியம் மிகத் தொன்மையானது என்ற முடிவுக்கு நாம் வரலாம்.

அத்தோடு கி.பி. 9ம் நூற்றாண்டில் வாழ்ந்த அல்- பலஸீரி என்ற வரலாற்றாசிரியர் தனது புதூஹில் புல்தான் எனும் நூலில் இஸ்லாம் அதிகாரம் பெறுவதற்கு வழிகோலியாக ஒரு சம்பவத்தை எழுதியுள்ளார்.

இலங்கையில் காலஞ்சென்ற அரபு வணிகர்களின் பெண்மக்களை இலங்கை அரசன் டமஸ்கஸ்ஸில் உமையாக்களின் பலமிக்க இராஜ பிரதானிகளின் ஹஜ்ஜாஜ் இப்னு யூசுபிடம் அனுப்பி வைத்துள்ளான். அவர்கள் சென்ற கப்பலை கடற்கொள்ளையர்கள் தைபுல் (தற்போதைய கராச்சி) என்னும் இடத்தில் வைத்து தாக்கினார். இந்த அநாதரவான அரபு பெண்கள் மீது புரியப்பட்ட அட்டுழியமானது, இந்தியாவின் முக்கியத்துவம் வாய்ந்த பகுதிகளை இஸ்லாமிய பொதுநலவரசுக் குடியரசுடன் இணைக்கப்படாது விட்டால் எதிர் காலத்தில் பஸராவுக்கும், இலங்கைக் குமான கடற் பாதை பாதுகாப்பற்றதாகவே அமையும் என அரேபியர் உணரத் தலைப்பட்டனர்.

இதன் காரணமாகவே கி.பி. 815இல் (சிந்து) இந்தியா, முஸ்லீம்களால் வெற்றி கொள்ளப்பட்டு இஸ்லாமிய குடியரசுடன் இணைக்கப்பட்டதாக கூறப்படுகிறது. இந்நிகழ்வு பண்டைய காலத்தில் அரேபியர்கள் இங்கு குடும்பங்களாக வாழ்ந்து வந்தமைக்கு சான்று பகர்கிறது.

இந்நிகழ்ச்சிக்கு எண்ணற்ற ஆண்டுகளுக்கு முன்பே தென்னிந்தியாவிலும், இலங்கையிலும் முஸ்லீம்கள் காணப்பட்டதாக அறிஞர் செய்யித் சுலைமான் நத்வி அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

அரேபியர்களது குடியேற்றங்கள் துறைமுகங்களை அண்டியே காணப்பட்டன. இலங்கையில் 10ம் நூற்றாண்டின் பின் கரையோரத் துறைமுகங்களின் ஆதிக்கம் சோழர்கள் வசமே காணப்பட்டன. எனவே அரேபியர்களது இனக்கலப்பு தமிழ் வழித் தொடர்பாலே அதிகம் நிகழ்ந்திருக்க வேண்டும். அத்தோடு தென்னிந்திய இலங்கை முஸ்லீம்களது பண்பாட்டுத் தொடர்பு நீடித்திருந்ததும் இலங்கைச் சோனகர்களது தாய் மொழியாக தமிழும் கலாச்சார ஒத்திசைவும் காணப்பட ஏதுவாய் அமைந்துள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**அரேபியரது வருகைக்கான நோக்கம்:**

கீழைத்தேய நாடுகளில் அரேபியர்களுக்கு குறிப்பாக இலங்கையுடனான மிகவும் நெருங்கிய தொடர்புக்கான காரணம் என்னவென்று ஆராய்கின்ற போது, இரு அடிப்படைக் கருத்துக்களை நாம் அறிய முடிகிறது. இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபியர்கள் சிலைகளையும் கற்களையும் வணங்குபவர்களாக இருந்தனர். மேலும் இலங்கையிலுள்ள பாவாத மலை என்பது உலகின் முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களது பாதம் பதிந்த இடம் என்ற நம்பிக்கையின் காரணமாக அதனைத் தரிசிக்க பேரார்வத்தோடு இங்கு வந்துள்ளனர். இலங்கை ஒரு வர்த்தக கேந்திர நிலையமாக காணப்பட்டதால் வர்த்தக நோக்கத்திற்காகவும் அரேபியர்கள் அதிக எண்ணிக்கையில் இங்கு வருகை தந்தனர்.

இலங்கைக்கு அரேபியர்களின் வருகை ஆக்கிரமிப்பு நோக்கத்திற்காக அல்ல என்ற கருத்தையும் பாவாத மலைக்கு அவர்கள் வழங்கியுள்ள முக்கியத்துவத்தையும் பின்வரும் சம்பவம் நமக்கு உறுதிப்படுத்துகிறது.

கி.பி.1334, 1335 காலப்பகுதியில் இலங்கை வந்த புகழ் பெற்ற தேசாந்திரியான இப்னு பதூதாவை ஆரியச் சக்கரவர்த்தி புத்தளத்தில் வரவேற்று அவருக்கு வியக்கத்தக்க 'நீல மணிக்கல்' ஒன்றை பரிசளித்தான். அத்தோடு அரச இரத்தினப் பொக்கிசத்திலிருந்து வேண்டியதை எடுக்குமாறு அவர் மன்னனால் வேண்டப்பட்ட போது அதனை மறுத்துவிட்ட இப்னு பதூதா. "நான் இரத்தினக் கற்களைச் சேகரிக்க வரவில்லை நான் றுகன மலை மீதிருக்கும் மனித குலத்தின் ஆதி பிதாவினது புனித பாத அடையாளத்தைத் தரிசிக்க வந்துள்ள யாத்திரிகனாவேன்" என்று பதிலளித்தார்.

அக்கால கட்டத்தில் அரேபியர்களால் செரந்தீப், சைலான், தப்ரபேன் அல்லது சங்கல்தீப் என்றெல்லாம் பெருமையோடு பேசப்படும் இலங்கையின் கீர்த்தி, டமஸ்கஸ், பக்தாத் அரச தர்பார்களில் கவிஞர்களால் பாடல்களாக பாடப்பட்டபோது அவை மத்திய ஆசியாவிலிருந்து கஸ்பியன் கடலிலிருந்து சகாராவின் இறுதி எல்லை வரை உறைந்த மக்களுக்கு அறிமுகமற்ற பெயரைக் கொண்ட ஒரு தூர தேசமாக விளங்கவில்லை எனக் கூறப்படுகிறது.

இலங்கையில் இஸ்லாம் மதத்தின் வருகையை பின்வரும் இரண்டு சரித்திர குறிப்புகள் மூலம் அறிய முடியும்.

"கி.பி. எட்டாம் நூற்றாண்டில் அரேபியாவில் இஸ்லாம் உதயமான போது, அது பற்றிய விபரம் அறிவதற்கு சிங்கள மன்னர், இருவரைக் கொண்ட நல்லெண்ணத் தூதுக்குழுவை அரேபியாவுக்கு அனுப்பியதாகவும் அங்கு முஹம்மது நபி (ஸல்) அவர்களும், கலீபா அபூக்கர் (ரழி) அவர்களும் மரணித்திருந்ததால் தூதுக்குழுவினர் கலீபா உமர் (ரழி) அவர்களைச் சந்தித்துவிட்டுத் திரும்பியதாகவும் வரும் வழியில் பல்கீஸ்தான் எனும் இடத்தில் தூதுக்குழுவின் தலைவர் மரணித்துவிட்டதாகவும் அவருடன் கூடச் சென்ற வேலையாளே இஸ்லாத்தைப் பற்றி அறிந்து இங்கு வந்து சொன்னதாகவும்" இப்னு காரிய்யா எனும் அரபு வரலாற்றாசிரியர் தனது அஜாவஹிபுல் வஹிந் என்ற தனது நூலில் எழுதியுள்ளார். அத்தோடு சேர். அலெக்சாந்தர் யோன்சுதன் அவர்களது ஆய்வுக்கூற்று இஸ்லாத்தின் வருகைக்கு இன்னொரு உறுதியான சான்றாக அமைகிறது.

முதன்முதலில் இலங்கையில் குடியேறிய முஸ்லீம்கள் ஹாஷீம் கிளையைச் சேர்ந்தவர்களாவர். இவர்கள் எட்டாம் நூற்றாண்டில் அரசோச்சிய கலீபா அப்துல் மலிக் மர்வான் காலத்தில் அவரது கொடூரமான ஆட்சி முறையினால் அரேபியாவிலிருந்து வெளியேறினர். இவ்வாறு வெளியேறியவர்களில் சிலர் கொங்கணத்திலும் சிலர் தென்னிந்தியாவிலும் சிலர் மலாக்காவிலும் சிலர் இலங்கையிலும் குடியேறினர்.

இலங்கையை வந்தடைந்தோர் இலங்கையின் வடகிழக்கு, வடக்கு, மேற்குப் புறங்களிலுள்ள எடஹடு இடங்களில் தங்கினர். திருகோணமலை, யாழ்ப்பாணம், மாதோட்டம், மன்னார், குதிரை மலை, புத்தளம்,கொழும்பு, பர்பறின், காலி முனை ஆகிய இடங்களில் குடியேறினர்.

இந்த நிகழ்ச்சியைப் பற்றி ஜேம்ஸ் டெனன்ட் என்ற ஆய்வாளரும் தனது 'இலங்கை' எனும் நூலில் பதிவு செய்துள்ளார்.

**வர்த்தக செல்வாக்கு**

வர்த்தக ரீதியாக அரேபியர்கள் அடைந்திருந்த செல்வாக்கை 'பண்டைய ஈழம்' என்ற நூலில் திரு.வே.க.நடராசா பின்வருமாறு எழுதுகிறார்.

அரேபியர் எடுத்த பெரும் முயற்சியினால் பத்தாம் நூற்றாண்டளவில் கீழை நாட்டு வணிகத்தை தமது தனியுரிமையாக்கிக் கொண்டனர். இலங்கையில் இவ்வியாபாரத் தொடர்பின் காரணமாக முஸ்லீம் வணிகக் கூட்டமொன்று குடியேறி வாழ்ந்து வந்ததாக நம்பப்படுகிறது. இலங்கையின் மேற்குத் தெற்கு கரையோரங்களிலுள்ள பிரதான துறைமுகங்களை அடுத்து இக்குடியேற்றங்கள் இதே காலத்தில் ஏற்படலாயின. மன்னார், புத்தளம் சிலாபம், நீர்கொழும்பு,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொழும்பு, காலி திருகோணமலை, களுத்துறை, பேருவலை முதலியவற்றில் இக்குடியேற்றங்கள் ஏற்பட்டன.

ஏழாம் நூற்றாண்டில் அரேபிய வர்த்தகர்களின் செல்வாக்கிலேயே இலங்கையில் மேலைநாட்டு வணிகம் நடைபெற்றது. இவர்களின் தொடர்பாலே பின்னர் கொழும்பு ஒரு பெரும் துறைமுகமாகியது.

பிந்திய அநுராதபுர காலத்திலே ஏழாம் நூற்றாண்டிலிருந்து அரேபியர் மேலைக் கடலில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியதும், இலங்கைக்கும் மேலை நாடுகளுக்குமான வணிகம் அவர்கள் கைக்கு மாறியது. பத்தாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலே கொழும்பில் தமது ஆதிக்கத்தை செலுத்தத் தொடங்கி விரைவில் இலங்கையின் ஏற்றுமதி வணிகம் முழுவதையும் அரேபிய வணிகரே கட்டுப்படுத்தினர்.

இலங்கையில் வாழ்ந்த (அரேபிய) முஸ்லீம்களை இலங்கை மக்கள் அந்நியரெனக் கருதவில்லை. இலங்கை முஸ்லீம்கள் பல புதிய நாடுகளுடன் இலங்கைக்கு உறவுகளை உண்டாக்கியமையாலும் தமது வர்த்தக மேலாண்மை காரணமாக இலங்கை மன்னர்களுக்கு அதிக வருவாய் ஈட்டிக் கொடுத்தமையாலும் மன்னர்களும் கௌரவத்துக்குரிய பிரஜைகளாக அவர்கள் கருதினர். முஸ்லீம்களுக்கிருந்த வெளிநாட்டு இராஜதந்திர அனுபவத்தை கருதி சிங்கள மன்னர்களால் வெளிநாட்டு வர்த்தக தூதுக் குழுக்கள் முஸ்லீம்களின் தலைமையில் அனுப்பப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

அத்தோடு, கப்பலோட்டுவதிலுள்ள திறமையாலும் புதிய தொழில்களையும் மாணிக்கக் கற்களை பட்டை தீட்டுவது, புதிய தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியதாலும், வைத்தியம், நெசவு, சித்திரம், சங்கீதம், போன்ற நுண்கலைகளில் கொண்ட சிறப்பான ஆற்றலாலும் தவளம் போன்ற புதிய போக்குவரத்து முறைகளை அறிமுகப்படுத்தியதாலும் விவேகம்,நல்லிணக்கம் இவற்றுக்கப்பால் இயல்பான அவர்களது வீரத்தன்மையாலும் கவரப்பட்டே சிங்கள மக்களாலும், மன்னர்களாலும் அக்கால முஸ்லீம்கள் பெரிதும் மதிக்கப்பட்டார்கள்.

## அரசியல் முக்கியத்துவம்

பண்டைய இலங்கையில் சோனக முஸ்லீம்கள் பெற்றிருந்த அரசியல் சமூக முக்கியத்துவம் பற்றிய எண்ணற்ற குறிப்புகள் வரலாற்றில் பதியப்பட்டிருந்தன.

இரண்டாம் புவனேகபாகு எனப்படும் வஸ்துஹிமி என்ற சோனக மன்னன் (கி.பி.1288-1290) குருநாகலையைத் தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்தான். இதனை மகாவமிசம் "அறம் செய்வதன் மூலம் நன்மை பெற விளைந்த ஆட்சியாளன்" எனக் குறிப்பிடுவது இதற்கு சான்று பகருகிறது. இம்மன்னன் தனது ஆட்சியில் முஸ்லீம்களுக்கு அதிக சலுகைகள் அளிப்பதாக சந்தேகித்ததால் அவனது அமைச்சர்கள் அவனை நயவஞ்சகமாக கொலை செய்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

'ஸேர் எட்லின் விஜயரட்ன' அவர்கள் தனது ஆய்வுக் கட்டுரை ஒன்றில், ஒரு சிங்கள மன்னனின் அரசவையில் நான்கு முஸ்லீம் உறுப்பினர்கள் இருந்துள்ளதாக குறிப்பிடுகிறார். இவ்வாறானதொரு சான்றை 'இந்தியன் நேய்பரிஞ் டெரிடெரிஸி எனும் நூலில் எல்.இத்ர்ஸ் என்பவரும் முன்வைக்கிறார். பொலன்னறுவை ஆட்சிக் காலத்தில் அமைச்சரவையில் நான்கு பௌத்தரும், நான்கு கிறிஸ்தவரும், நான்கு முஸ்லீம்களும் அமைச்சர்களாக இருந்துள்ளதாகவும் மேலும், அதே காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப் பகுதிகளில் முஸ்லீம் இளவரசர்களது ஆட்சி காணப்பட்டதாகவும் அவர் எழுதியுள்ளார்.

முதலாம் புவனேகபாகுவின் (1273- 1284) காலத்தில் எகிப்துடன் வர்த்தக ஒப்பந்தங்களை ஏற்படுத்த இலங்கை சார்பான தூதுக்குழுவுக்கு தலைமை தாங்கிச் சென்றவர் அல்ஹாஜ் அபூ உஸ்மான் என்பவராவார்.

மேலும் 3ம் விஜயபாகு காலத்தில் பேருவலை அமைச்சராக இருந்த மீராலெப்பை என்பவர் இந்தியாவில் இருந்து 8பேர் கொண்ட நெசவுத் தொழிலாளர்களை அழைத்து வந்து இலங்கையில் ஆடைத்தொழில் உற்பத்திக்கான பயிற்சியை வழங்கியதாக சரித்திரம் சான்று பகருகின்றது.

கி.பி.1392இல் மன்னன் விஜயபாகு தனது அதிகாரத்தை விரிவுபடுத்திக் கொள்ள முஸ்லீம் இளவரசர்களுடன் போரிட்டதாக "நிகாயா சங்கரயா" வில் எழுதப்பட்டுள்ளது.

கி.பி.1477ல் வரையப்பட்ட 'தொலமி'யின் வரைபடத்தின் படி "இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் தற்போதைய கல்முனை நகருடன் பொருந்துகின்ற ஒரு சோனக அரசு அல்லது காவல் நிலையம் இருந்ததாகவும் போர்த்துக்கேயரது துன்புறுத்தல் காரணமாக சோனகருக்கு கண்டிய மன்னன் ஒருவன் தஞ்சமளித்து அவர்களை அனுப்பிய இடம் கல்முனையாகும்" என்று திரு. சி. சுந்தரலிங்கம் 'சோனகர் தமிழர் அல்லது சிங்களவர் பரம்பரையா? 'எனும் தனது ஆய்வுக் கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மேலும், தொலமியின் வரைபடம் வார்த்தேம பதிப்பை (கி.பி.1506) ஆதாரங்காட்டி "இலங்கையில் முடிசூடிய மன்னர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நால்வர் இருந்தனர் எனவும் அவர்களில் ஒருவர் முஸ்லீம்" என்று குறிப்பிடுவதாகவும் திரு. சி. சுந்தரலிங்கம் மேலும் எழுதியுள்ளார்.

கி.பி.9ம் நூற்றாண்டிற்கு முற்பட்ட சுலைமான் என்ற தேசாந்திரி தனது பயணக் குறிப்பில் இலங்கையுள்ளிட்ட பல தீவுகளை பெண்களே ஆண்டதாக குறிப்பிட்டுள்ளார். இப்னு பதூதாவும் பெண்கள் ஆட்சி செய்ததை உறுதிப்ப டுத்தியுள்ளார். அவரது சான்றின் படி அவர் குறிப்பிடும் அரசியின் பெயர் கதீஸா. அவளுக்கு முன் அத்தீவுகளுக்கு அரசனாய் இருந்தவன் பெயர் சலாகுத்தீன் உமர். அவனது மரணத்திற் குப்பின் அவனது மகன் ஆட்சிக்கு வந்தான். அவன் முறைகேடாக நடக்க முற்பட்ட போது அவனை அகற்றிவிட்டு கதீஸா அரசியானாள், என்கிறது இப்னு பதூதாவின் பயணக் குறிப்பு.

அக்காலத்தில் ராசசிங்க மன்னன் கொழும்பைக் கைப்பற்றுவதற்கு முஸ்லீம் இளவர சர்கள் கப்பல்களைக் கொடுத்து உதவியதாக 'நிக்காயா சங்கராயா' வில் காணப்படும் ஒரு குறிப்பு அரசாட்சியோடு முஸ்லீம்கள் கொண்டி ருந்த படைபலத்திற்கும் சான்று பகருகிறது.

1505ல் போர்த்துக்கேயர் இலங்கை வரும் போது இந்த நாடு பல அரசுகளாக பிரிந்து யுவ, ராஜ, எப, யாப்ப, என பல மாகாணங்களாகவும், நகரங்களாகவும் அவை காணப்பட்டதாகவும் இவ்வாறு பிரிந்திருந்த பகுதிகளை சிங்கள, தமிழ், முஸ்லீம் இளவரசர்கள் ஆட்சி செய்து கொண்டி ருந்ததாகவும் கூறப்படுகிறது.

மேலும் 1518ல் போர்த்துக்கேயருக்கு தர்ம பராக்கிரமபாகு மன்னன் இடம் கொடுக்க முன்வந்த போது, இதனால் ஏற்படக் கூடிய ஆபத்துக்களை முஸ்லீம்கள் முன்கூட்டியே எச்சரித்ததாகவும் மாவம்சம் கூறுகிறது. அத்தோடு போர்த்துக்கேயரை எதிர்த்த முஸ்லீம் வீரர்கள் தமிழ் மன்னர்களோடும் சிங்கள மன்னர்களோடும் இணைந்து போரிட்டார்கள் என யாழ்ப்பாண முஸ்லீம்கள் வரலாறும் பண்பாடும் எனும் நூலில் அப்துல் ரஹீம் எழுதியுள்ளார். கோட்டே இராட்சியத்தில் போர்த்துக்கேயர் நுழைவதை முதலில் எதிர்த்தவர்கள் முஸ்லீம் களே. யாழ்ப்பாண மன்னனும் மாயாதுன்னை மன்னனும் அவனது மகன் இராஜசிங்கனும் இதே கொள்கையைக் கொண்டிருந்ததால் பெரும்பான் மையான முஸ்லீம்கள் இவர்களுடன் இணைந்து ஏகாதிபத்தியத்துக்கு எதிராகப் போரிட்டனர். இவ்வாறானதொரு போரில் முஸ்லீம் படை யொன்றை உருவாக்கி பயிற்சி வழங்கி தலைமை தாங்கி வழிநடாத்தியது மல்வானையைச் சேர்ந்த மௌலானா முதலி எனும் முஸ்லீம் தளபதியாகும் என மகாவம்சத்தில் கூறப்பட்டுள்ளது.

எனவேதான், இலங்கை போர்த்துக்கேய கால னித்துவ ஆதிக்கத்திற்கு உட்பட்டபோது அதற்கு எதிராக முதன்முதலில் எதிர்ப்புப் போராட்டம் நடாத்தியவர்கள் முஸ்லீம்களே என்பது வரலாறு கூறும் உண்மையாகும்.

இன்று இலங்கையின் தேசியக் கொடி யாக விளங்கும் சிங்கக் கொடிகூட ஒரு அரேபிய அன்பளிப்பு என்பதற்கான ஒரு மரபு வரலாறு உள்ளதாகவும் அதனை சிங்கள ஆய்வாளர்கள் கூட உறுதி செய்துள்ளதாகவும் எஸ்.ஈ. ஏன். நிக்கலஸ் என்பவர் தனது ஆய்வில் குறிப்பிடுகின் றார்.இவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தது போல் 'இலங்கை' என்ற நூலில் சேர் ஜேம்ஸ் டெனன்ட் என்பவர் கூறுவதைப் பார்ப்போம்.

"சோனகர்கள் அனுபவித்த வாய்ப்புகள், மலபார்கள் (திராவிடர்கள்) அனுபவித்த வாய்ப்பு களை ஏற்கனவே மிகைத்திருந்ததை பார்க்கும் போதும் சிங்கள ஆட்சியாளர்கள் மீது அவர்கள் தீவிரமாக அடைந்து வந்த ஆதிக்கத்தை நோக்குமிடத்தும் இலங்கைத் தீவில் கிறிஸ்தவ அரசுகளின் இவ்வுரிய நேரத் தோற்றம் ஏற்படா விடில் இலங்கை யாராவது ஒரு அரேபிய வெற்றி வீரனின் கீழ் முஹம்மதிய்ய முடியாட் சிக்குட் பட்டிருக்கும் என்பது பகுத்தறிவுக்கு அப்பாற்பட்ட ஊகமாக இருக்கமாட்டாது."

இக்கருத்தை பண்டைய இலங்கையில் முஸ்லீம்களின் செல்வாக்கை வெளிப்படுத்து கின்ற ஒரு ஆங்கிலேயரின் நேர்மையான விமர்சன மாக கொள்ள முடியும்.

## காலனித்துவத்தில் முஸ்லீம்கள்

காலனித்துவ காலம் என்பது இலங் கைத் திருநாடு அந்நியராட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்த காலப்பகுதியாகும். இது கிபி.1505ம் ஆண்டு தொடக்கம் 1048வரை ஆகும். இக்காலப் பகுதியில் இலங்கை தனது சுயாதிபத்திய உரிமை களை படிப்படியாக இழந்து வந்திருக்கிறது. காலனித்துவ ஆட்சிக் காலம் இலங்கை முஸ்லீம் களது வரலாற்றில் இருண்டயுகம் என்றால் மிகையில்லை.

இலங்கைக்கு முதலில் வந்தவர்கள் போர்த்துக்கேயர் ஆவார்கள். அவர்கள் இங்கு வந்தபோது இங்குள்ள முஸ்லீம்களை அரபிகளின் வழித்தோன்றலாகவே கருதினர்.அவர்களே இலங்கை முஸ்லீம்களை 'மூர்' என்று அழைத தனர்.

(Moor என்பது மொரக்கோ என்ற அரபு நாட்டைக் குறிப்பதற்குப் போர்த்துக்கேயர் பயன்படுத்திய சொல் வழக்கு. எனவேதான் மொரக்கோ நாட்டுக் குடிகளை ஒத்த முஸ்லீம் களை இங்கு அவர்கள் கண்டிருக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதன் காரணமாகவே 'மூர்ஸ்' (மொரோக்கோவைச் சேர்ந்தவர்கள்) என்ற அர்த்தத்தில் பெயர் சூட்டி அழைத்தனர். அதுவே இன்று வரை நிலைத்து விட்டது.)

ஏகாதிபத்திய சக்திகளாக இலங்கைக்குள் ஊடுருவிய போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் முஸ்லீம்களை தமது பரம வைரிகளாகவே நோக்கினர்.

சிலுவைப் போர்களால் ஏற்பட்ட பகைமை உணர்வும் கிழக்கிந்திய நாடுகளில் வர்த்தக ஏகபோகத்தை முஸ்லீம்கள் கொண்டிருந்தமையும் அவர்கள் தமது கிறிஸ்தவ சமயத்திற்கெதிரான கொள்கையாக அன்று உலகை ஆட்டிக்கொண்டிருந்த இஸ்லாம் மதத்தைப் பின்பற்றுபவர்கள் எனும் காரணங்களால் இந்தப் பகைமை உணர்வு அவர்களுக்குள் நிலவியது. இதன் காரணமாக அவர்கள் முஸ்லீம்களை ஒழித்துக் கட்ட எண்ணினர்.

வியாபார நோக்கத்திற்காக இலங்கை வந்த போர்த்துக்கேயர் இங்கு காலூன்றுவதற்கு சீதாவாக்கையை ஆண்ட மாயாதுன்னை, கோட்டையை ஆண்ட புவனேகபாகு ஆகிய சகோதர மன்னர்களுக்கிடையேயான அதிகாரப் போட்டியும் ஒரு காரணம் எனலாம். புவனேகபாகு போர்த்துக்கேயரைச் சார்ந்திருந்ததால், முஸ்லீம்கள் மாயாதுன்னையை ஆதரித்தார்கள். இயல்பிலேயே வீரனான மாயாதுன்னை போர்த்துக்கேயரை எதிர்ப்பதற்காக முஸ்லீம்களின் உதவியைக் கோரினான். அன்று தமக்கிருந்த இராஜதந்திர செல்வாக்கைப் பயன்படுத்தி முஸ்லீம்கள் கள்ளிக் கோட்டை அரசிலிருந்து கடற்படை உதவியை பெற்றுக் கொடுத்தனர். அப்படையின் தளபதிகளாக முஸ்லீம்களே காணப்பட்டனர். கோட்டை இராட்சியத்தைப் பாதுகாக்க ஏழாம் விஜயபாகுவுடன் சேர்ந்து முஸ்லீம்கள் போர்த்துக்கேயருக்கெதிராக சண்டையிட்ட போது, அவர்கள் பீரங்கிகளை பிரயோகித்து எதிர்த்ததாக தெரியவருகிறது.

கி.பி. 1526ல் கோட்டை வீழ்ந்ததும் போர்த்துக்கேயர் முஸ்லீம்களை முடிந்தளவிற்கு கொன்று குவித்தனர். அதனை 'தைரியத்துடனும் முன்யோசனையுடனும் செய்யப்பட்ட படுகொலை' என மென்சிர் என்ற வரலாற்றாசிரியர் கூறுகிறார். இதில் ஆயிரக்கணக்கான முஸ்லீம்கள் கொல்லப்பட்டதாகவும் அறிய முடிகிறது. இதற்குப் பிறகும் போர்த்துக்கேயரை எதிர்ப்பதற்காக சிங்கள அரசர்களுக்குத் துணைநிற்க முஸ்லீம்கள் பின்னிற்கவில்லை.

அக்காலத்தில் போர்த்துக்கேயர் கத்தோலிக்க மதத்தை பின்பற்றக் கோரி ஏனையோரைக் கட்டாயப்படுத்தினர். சலுகைகள், பலாத்காரம் என்பவற்றோடு கல்வியை மத மாற்றத்திற்கான கருவியாகப் பயன்படுத்தினர். கத்தோலிக்கராக மதம் மாறியவர்களுக்கு தொழில்கள் வழங்கப்பட்டன. பாடசாலைகள் கத்தோலிக்க மத கலாச்சார மையங்களாக மாற்றப்பட்டன. முஸ்லீம்களில் எவருமே இந்த வலையில் மாட்டிக் கொள்ளவில்லை என அறிய முடிகிறது.

1575ல் வெலிகமயிலும் மீண்டும் மிகப் பெரிய படுகொலைச் சம்பவம் நிகழ்த்தப்பட்டது. இதில் இருப்பிடமிழந்து பீதியோடு வெளியேறிய முஸ்லீம்களை கண்டியை ஆண்ட செனறத் மன்னன் வரவேற்று அவனது இராச்சியத்தில் அடைக்கலம் கொடுத்தான். அத்தோடு சுமார் 4000 பேரளவில் கிழக்கில் மட்டக்களப்பு பிரதேசத்தில் குடியமரச் செய்தான் எனவும், கிழக்கிலங்கையில் ஓரளவான சன அடர்த்திக்கு இக்குடியேற்றமே காரணம் எனவும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

அதேவேளை இலங்கையில் தங்களுக்கெதிரான கிளர்ச்சிகளுக்கு முஸ்லீம்களே காரணம் என்று தொடர்ச்சியாக கொண்டிருந்த வெறுப்புக் காரணமாக போர்த்துக்கேயர், 1626ல் தமது ஆளுகைக்குட்பட்ட முஸ்லீம்களை கொன்று குவித்து சொத்துக்களை பறிமுதல் செய்து துரத்தியடித்தனர். மேலும், 1646ல் ஒல்லாந்தருக்கும் போர்த்துக்கேயருக்குமான சண்டையில் முஸ்லீம்கள் ஒல்லாந்தரை சார்ந்திருப்பதாக சந்தேகித்த போர்த்துக்கேயர், மீண்டும் மாத்தறையில் முஸ்லீம் பெண்கள், குழந்தைகள் உட்பட எண்ணற்ற முஸ்லீம்களை கண்டதுண்டமாக வெட்டிக் கொன்றதாகவும், எஞ்சியோர் அங்கிருந்து அடிமைகளாக கொழும்புக்கு அனுப்பப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவ்வாறான கொலை வெறிச்சம்பவங்கள் காரணமாக சுமார் 20,000க்கு மேற்பட்ட முஸ்லீம்கள் போர்த்துக்கேயரால் கொல்லப்பட்டிருக்கலாம் என்பது ஆய்வாளர்களது கருத்தாகும். (இவ்வாறான திட்டமிட்ட படுகொலைகள் முஸ்லீம்களின் இனத்துவப் பரம்பலில் இன்று தாக்கம் செலுத்துவதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.)

போர்த்துக்கேயர் முஸ்லீம்களின் இருப்பைச் சிதைத்து உயிர் வாழும் உரிமையை மறுத்தபோது 1650களில் ஒல்லாந்தர் முஸ்லீம்களை வேறு விதமாக வதைத்தனர். முஸ்லீம்களை மரண வரிக்குட்படுத்தினர். அவர்களது குடிமை நிலை அடிமை நிலையிலேயே காணப்பட்டது.

கட்டாய வேலை என்ற பணியின்படி இழிந்த வேலைகளைச் செய்யும்படி முஸ்லீம்கள் பணிக்கப்பட்டார்கள். முஸ்லீம்களது வர்த்தகங்கள் தடைசெய்யப்பட்டன. அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொந்தமாக காணி வாங்க முடியாதென தடை விதிக்கப்பட்டதோடு, ஒல்லாந்தரின் நிருவாகப் பகுதிகளிலிருந்து 1670களில் திட்டமிட்ட வெளியேற்றங்கள், சொத்துக்கள், காணிகள் சுவீகரிப்பு என எண்ணற்ற கொடுமைகள் இழைக்கப்பட்டதாக வரலாறு கூறுகிறது.

அத்தோடு, குடிசன மதிப்பீடு காலத்திற்குக்காலம் மேற்கொள்வதன் மூலம் முஸ்லீம்களின் சனத்தொகையை கட்டுப்படுத்த ஒல்லாந்து அதிகாரிகள் முயற்சி செய்தனர். இக்காலப் பகுதியில் இலங்கைக்கு வருகை தந்த ஒரு தொகை தென்னிந்திய முஸ்லீம்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டது. கட்டாய மதமாற்றங்களும் இடம் பெற்றன. சொந்த கலாச்சார நடவடிக்கைகள் தடை செய்யப்பட்டன. கல்வி இங்கும் மதமாற்றத்துக்கான கருவியாக பயன்படுத்தப்பட்டது.

சுமார் 03 நூற்றாண்டு காலமாக நிலவிய மிகக் கொடூரமான வாழ்வு நிலை கல்வி, கலாச்சார, சமூக பாதிப்புகள் 18ம் நூற்றாண்டில் சிறிது தளர்ந்ததாக அறிய முடிகிறது. அதே சமயம், கண்டியரசரிடம் தஞ்சம் கோரிச் சென்ற முஸ்லீம்கள், மன்னர்களால் கௌரவிக்கப் பட்டார்கள். முஸ்லீம்களிடமிருந்த பல்வேறு துறை சார்ந்த அறிவையும் அனுபவங்களையும் தமது அரச நலனுக்காக அவர்கள் பயன்படுத்தினர். ஒல்லாந்தர்களிடமும், மொகலாயர்களிடமும் இராஜதந்திரத் தூதுவர்களாக முஸ்லீம்கள் அனுப்பப்பட்டதாக தெரிய வருகிறது. தமது ஒத்துப் போகும் தன்மை காரணமாக முஸ்லீம் களுக்கு இங்கு கௌரவம் கிட்டியது.

இக்காலப் பகுதியில் இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர்கள் முஸ்லீம்கள் விடயத்தில் மட்டு மல்ல, அனைத்து இன மக்களிடமும் மிதவாதப் போக்கைக் கைக்கொண்டனர். முஸ்லீம்களிடம் காணப்பட்ட வர்த்தக அறிவு, இராஜ தந்திரத் திறமை, கடல் கடந்த நாடுகளுடனான பரிச்சயம் என்பவற்றை ஆங்கிலேயர் தமது வர்த்தக நலன்களுக்காக பயன்படுத்திக் கொண்டனர். முஸ்லீம் வர்த்தகர்கள் தாங்கள் இது வரை இழந்த வர்த்தக மேலாண்மையை ஓரளவு தக்க வைத்துக் கொண்டனர் என்றே சொல்ல வேண்டும். ஆயினும், இரண்டரை நூற்றாண்டு காலப்பகுதியில் கல்வி இருண்டு போன நிலையில் முஸ்லீம்களால் பிரித்தானியர் அறிமுகம் செய்த அரச நிருவாக, நிறுவனங்களில் பங்கு கொள்ள முடியவில்லை.

அத்தோடு முழு நாட்டையும் ஆதிக்கத் திற்குட்படுத்திய ஆங்கிலேயர் கல்வி, அரசியல், நிருவாகக் கட்டமைப்புகளில் பாரிய மாற்றங் களைக் கொண்டு வந்தனர். இவற்றில் உரிய பிரதிநிதித்துவம் அற்ற நிலையில் முஸ்லீம்கள் மிகவும் பின் தங்கிய சமூகமாக மாறியிருந்தனர். போர்த்துக்கேயர் ஒல்லாந்தரிடம் பெற்ற அனுபவம் காரணமாக 19ம் நூற்றாண்டில் அங்கிலமும் ஒரு மதத்துக்குரிய மொழி என்ற அச்சம் முஸ்லீம் களிடம் நீண்ட காலமாக நிலவியதால், முஸ்லீம் களது கல்வி வளர்ச்சி இன்னும் பின்னடைவைக் கண்டது. ஆயினும் எகிப்திய அறிஞர் ஒராபி பாஷா, அறிஞர் சித்தி லெப்பை, வாப்பிச்சி மரைக்கார், ஐ.எல்.எம்.அஸீஸ் போன்றோரின் இடைவிடாத முயற்சியினால் முஸ்லீம்களின் மிகச் சிறிய தொகையினர் கல்வி கற்கத் தொடங்கினர்.

## தனித்துவ (மான) சிந்தனை

1905ல் ஏற்பட்ட துருக்கித் தொப்பி போராட்டமும் 1915ல் நிகழ்ந்த சிங்கள, முஸ்லீம் கலவரமும் முஸ்லீம்களின் வரலாற்றில் குறிப்பிடத் தக்க நிகழ்வுகளாகும்.

இலங்கை முஸ்லீம்களின் முதலாவது பட்டதாரியும், வழக்கறிஞருமான எம்.சீ. அப்துல் காதர், உயர் நீதிமன்றத்தில் துருக்கித் தொப்பி அணியக் கூடாதென்று பிரதம நீதியரசர் விதித்த தடைக்கெதிராக அன்றைய முஸ்லீம்கள் ஒன்று பட்டு போராடினார்கள்.

மருதானைப் பள்ளிவாயல் முன்பு முஸ்லீம் தலைவர்கள் ஒன்று கூடி நடாத்திய பொதுக் கூட்டத்தில், இந்த அநீதியான கட்ட ளையை வாபஸ் பெறுமாறு இங்கிலாந்து அரச ருக்கு ஒரு விண்ணப்பம் அனுப்புவதெனத் தீர்மா னிக்கப்பட்டது. இப்பிரச்சினை பற்றி நாடு பூராவும் சுமார் 30 கூட்டங்கள் அளவில் நடைபெற்றன. அன்றைய டைம்ஸ் பத்திரிகை கொழும்பில் மாபெ ரும் கூட்டம் நடைபெற்றன, ஆனால் இது போன்ற கூட்டம் இது வரையில் நடைபெறவில்லை, என்று எழுதியது. இறுதியில் முஸ்லீம்களின் ஒற்று மையான தனித்துவமான கலாச்சாரத்தையும் அடையாளப்படுத்திய முக்கிய வரலாற்று நிகழ் வாகும்.

1915ல் நிலவிய கலவரம் ஆயிரமாம் ஆண்டுகளுக்கு மேலான இன நல்லுறவைப் பேணி வந்த சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்கும் மிகப் பெரிய சோதனையை உண்டு பண்ணியது. தாம் ஒரு ஆதரவற்ற சிறுபான்மை சமூகம் என்ற உணர் வை முஸ்லீம்களுக்கு ஏற்படுத்திய வகையில் இக்கலவரம் முக்கியமானது.

19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் பௌத்த, சிங்கள எழுத்தாளர்கள், அறிஞர்கள் சிங்கள பௌத்த உணர்வுக்கான ஆதாரங்களை பண்டைய நூல்களில் தேடினர். இங்கு தேசிய உணர்வு என்பது இன, மத உணர்வாகவே வெளிப்பட்டது. இக்காலப் பகுதியிலே சிங்கள இன உணர்வின் பிதா மகனான அநாகரிக தர்மபாலா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வின உணர்வைத் தூண்டியதோடு மட்டுமல்ல, பிற இனங்களையும் சாடினார். 'அந்நிய நாட்டு வர்த்தகர்கள், பூமியின் புத்திரர்கள்' என்ற கருத்துக்களை முன்வைத்தார். மேலும் கிறிஸ்தவ சிறுபான்மையினம் அரச உயர் பதவிகளையும் அனுபவித்து வந்ததால், சிங்களவர்கள் அவர்கள் மீதும் வெறுப்புக் கொண்டனர்.

பொருளாதாரத்திலும், வர்த்தகத்திலும் பின்தங்கி காணப்பட்ட சிங்கள மக்கள் இக்கருத்துக்களால் ஈர்க்கப்பட்டனர். 1880ம் ஆண்டு பர்குசன் டிரக்டரியின் படி, கொழும்பு புறக் கோட்டை வர்த்தகர்களில் 86 செட்டியார்களும், 64 முஸ்லீம்களும் ஒரு சில சிங்களவர்களுமே இருந்தார்கள் என்பது சிங்கள மக்களின் வர்த்தக பின்னடைவைக் காட்டுகிறது.

முஸ்லீம் வர்த்தகர்கள் சிங்கள மக்களை சுரண்டுவதாகவும், முஸ்லீம்கள் அந்நிய இனத்தைச் சேர்ந்தவர்கள் என்றும், எங்களின் பரம விரோதிகள் முஸ்லீம்களே என்றெல்லாம் அன்றைய பத்திரிகைகள் எழுதின.

இந்தப் பின்னணியிலும், கம்பளையில் முஸ்லீம்களின் முன்யோசனையற்ற தன்மையினாலும் ஏற்பட்ட சிறு கலவரம் முழு நாட்டுக்கும் பரவி, நூற்றுக்கணக்கான முஸ்லீம் மக்களை பலி கொண்டது. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. மீன்கள் வெட்டி அரிவது போல் கராவ சாதி சிங்களவர் முஸ்லீம்களை கொலை செய்ததாக தேசாதிபதியின் அறிக்கை கூறுகிறது. பல சிங்கள இனவாதிகள் ஆங்கிலேயரசால் கைது செய்யப்பட்டனர். இவை சிங்கள முஸ்லீம் உறவில் மாறாத வடுவாக மாறிவிட்டது.

கலவரத்தில் முஸ்லீம்களுக்கேற்பட்ட பொருட் சேதம் 55 இலட்சம் என மதிப்பிடப்படுகிறது. இக்கலவரம் பற்றி சட்ட சபையில் குறிப்பிடும் போது, சேர். பொன் இராமநாதன் கலவரத்துக்கு மூல காரணம் முஸ்லீம்களே என்றார். இதன் மூலம் அவர் சிங்கள மக்களிடமும், தலைவர்களிடமும் பெருமதிப்புப் பெற்றார். அதுவரை 'முஸ்லீம்களும் தமிழர்களே, அவர்களுக்கென்று தனியான அரசியல் பிரதிநிதித்துவம் தேவையில்லை' என்று கூறி, முஸ்லீம்களுக்குரிய பிரதிநிதித்துவத்தை தாமே கொண்டிருந்த தமிழ் தலைமை ஒரு முக்கியமான காலகட்டத்தில் தம்மை கைவிட்டது, முஸ்லீம்களிடம் தமிழ் பெரும்பான்மையினர் மீதான நம்பிக்கையை சிதைத்து விட்டது.

இந்நிலையில் சிங்கள, தமிழ் சமூகங்களின் தலைமைகளால் புறமொதுக்கப்பட்ட நிலையில் தமது எதிர் கால நடவடிக்கைகளை சுயாதீனமாக மேற்கொள்வதற்கான நிர்பந்தம் முஸ்லீம்களுக்கேற்பட்டது. இக்கால கட்டத்தில் அவர்களது அரசியல் நோக்கம் தம்மை பாதுகாத்துக் கொள்வதாகவே அமைந்திருந்தது. இந்நிலையில் முஸ்லீம் தலைவர்கள் தமது சமுதாயத்தின் தனித்துவத்தைக் காக்க முஸ்லீம் விவாக, விவாகரத்துச் சட்டம், மரபுரிமை வகுப்புச் சட்டம் என்பவற்றை ஏற்படுத்தும் படி ஆங்கில அரசைக் கோரினார்கள். அக் கோரிக் கைகள் ஏற்கப்பட்டன. தமக்கென தனியான கல்வி நிறுவனங்களை உருவாக்க வேண்டுமென முஸ்லீம்கள் மும்முரமாக பாடுபட்டார்கள். அத்தோடு இது காலவரையில் தாங்கள் இழந்திருந்த தனியான அரசியல் பிரதிநிதித்துவத்தைக் கோரி அதனை அடைந்து கொண்டார்கள்.

1919ல் இலங்கையின் தேசிய இயக்கத்தின் மறுபதிப்பான இலங்கைத் தேசிய காங்கிரசின் முதலாவது தலைவராக சேர்.பொன் அருணாசலம் தேர்ந்தெடுக்கப்பட்டபோது அவ்வமைப்பிலிருந்து முஸ்லீம்கள் ஒதுங்கியிருந்தார்கள்.

1921ல் மேல் மாகாணத்தில் தமிழ் பிரதிநிதித்துவம் உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை உதாசீனம் செய்யப்பட்ட போதே சிங்கள, தமிழ் முரண்பாடு தலைதூக்கியது. இதன் பிறகு தமிழ், முஸ்லீம் சமூகம் ஓரளவுக்கு ஒத்திசையும் போக்கு ஏற்படுகிறது.

போதிய அரசியலறிவு, அனுபவம் அற்றிருந்த முஸ்லீம் சமூகத்திலிருந்து 1889ல் சட்ட சபைக்கு நியமனம் பெற்ற எம். சி. அப்துல்றஹீமானும், 1897ல் நியமனம் பெற்ற மட்டக்களப்பைச் சேர்ந்த ஏ. எம்.சரீபும், 1900-1916 வரை உறுப்பினராக இருந்த டபிள்யு. எம். அப்துல்றஹீமானும் சட்டமன்றத்தில் பேசாமடந்தைகளாக, 1915ல் பொன். இராமநாதனுக்கெதிராக வாதாடும் திறமையற்றிருந்தார்கள். பின்பு, சட்ட சபைக்கு நியமனம் பெற்ற என். எச். எம். அப்துல் காதர், சேர். பொன். இராமநாதன் முஸ்லீம்களை "ஹம்பயா" என்று இழித்துரைத்த போது, "உம்மை வன்னியன் என்று அழைத்தால் எப்படியிருக்கும்" என்று பதலுரைத்தார். பின்பு இராமநாதன் அந்தச் சொல்லை வாபஸ் வாங்கிக் கொள்ள நேர்ந்தது. அக் காலத்தில் சட்டசபையில் மிக ஆற்றலுள்ள விவாதங்களை முன்வைத்தவர் கற்றறிந்த டி.பி.ஜாயா அவர்கள்தான்.

## முஸ்லீம்களின் கல்வி நிலை

அதேவேளை, இலங்கையில் கல்வித் துறையில் மிகமிக பின்தங்கிய சமூகமாக முஸ்லீம்களே விளங்கினர். 1939ல் அரசாங்க உதவி நன்கொடைப் பாடசாலைகளில் கிறிஸ்தவ பாடசாலைகள் 1183 ஆகவும், பௌத்த பாடசாலைகள் 300ஆகவும் இந்துப் பாடசாலைகள் 102 ஆகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தன. முஸ்லீம் நன்கொடைப் பாடசாலைகள் ஒன்றுமே இருக்கவில்லை என்ற அரசாங்க அறிக்கையிலிருந்து முஸ்லீம்களது கல்வி நிலைமை தெளிவாகுகின்றது.

1900ல் அரச நன்கொடைப் பாடசாலைகள் கிறிஸ்தவப் பாடகாலைகள் 1317களும், பௌத்தர்களுக்கு 142 பாடசாலைகளும், இந்துக்களுக்கு 45 பாடசாலைகளும் இருந்த அதே வேளை, முஸ்லீம்களுக்கு நான்கு பாடசாலைகளே இருந்தன. இன்னும் 1874, 1875களில் நாட்டில் இரண்டு முஸ்லீம் ஆசிரியர்கள் மாத்திரமே இருந்ததாக அரசாங்க அறிக்கை கூறுகின்றது.

அதேவேளை 1939ல் அன்றைய சனத்தொகையில் 9.3% ஆக இருந்த கிறிஸ்தவர்களுக்கு கல்விக்காக அரசு ஒதுக்கிய தொகை 25.2% ஆகவும், ஏனைய 90.7% ஆக இருந்த பௌத்த, இந்து, முஸ்லீம் மக்களது கல்விக்கு அரசு ஒதுக்கிய தொகை 24.8% ஆகும். இந்த ஏற்றத்தாழ்வு முஸ்லீம்களை மட்டுமல்ல அனைத்து இனங்களையும் பாதித்தது. இதற்குப் பரிகாரம் தேடியே இலவசக் கல்வித் திட்டம் அமுலுக்கு கொண்டுவரப்பட்டது.

அன்றைய கல்வி மந்திரியாகவிருந்த கன்னங்கராவிடம் டி.பி. ஜாயா, சேர்.ராஸிக் பரீத் ஆகியோர் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, முஸ்லீம் கிராமங்களில் பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அறிஞர் ஏ.எம்.ஏ. அஸீஸ் தாபித்த முஸ்லீம் கல்விச் சகாய நிதி மிகப் பெரிய அனுகூலமாக முஸ்லீம்களுக்கு அமைந்தது.

ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளில் முஸ்லீம்கள் கல்வியில் கண்ட பின்னடைவு மிகப் பெரும் அவலமாக இன்று வரை அவர்களது சமூக, அரசியல், நிருவாகத் துறைகளில் பாரிய தாக்கத்தை விளைவித்திருக்கிறது.

அதேசமயம் அரசியல் ரீதியாக 1936ல் டொனமூர் அரசியல் திட்டத்தின்படி நடந்த பொதுத் தேர்தலில் தமக்கென ஒரு பிரதிநிதித்துவத்தையேனும் பெற்றுக் கொள்ளத் தவறிய முஸ்லீம்கள், அதன் பின் தமது அரசியல் நிலைப்பாட்டில் சமயா சமயங்களுக்கேற்ற யுக்திகளை கையாளத் தொடங்கினர்.

1944 சோல்பரிக் குழுவினரிடம் ஜி.ஜி. பொன்னம்பலம் தலைமையில் இயங்கிய தமிழ்க் காங்கிரஸ் 50க்கு 50 என்ற கோஷத்தை முன் வைத்தது. மிக முக்கியமான இக்கால கட்டத்தில் முஸ்லீம்களது உரிமைகள் பற்றிய உத்தரவாதத்தை முன்வைக்காமல் அவர்களை உதாசீனம் செய்ததோடு மட்டுமல்லாது, முஸ்லீம்களின் ஒத்துழைப்பையும் கோரினர் தமிழ்த் தலைவர்கள்.

திரு. பொன்னம்பலம் தமது திட்டத்தின்படி, 'இலங்கைத் தமிழருக்கு 17 ஆசனங்களும், இந்தியத் தமிழர்களுக்கு 13 ஆசனங் களும், பறங்கியர்களுக்கும், ஐரோப்பியர்களுக்கும் 8 ஆசனங்களும் (நியமனங்கள்), எஞ்சியிருந்த 12 ஆசனங்களும் ஏனைய எல்லா சிறு பான்மை இனங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும்' என்றார்.

இதற்குப் பதிலளித்த டாக்டர். கலீல், "எங்களை என்னவென்று எண்ணினீர்கள் ஏனையோருக்கு வழங்கும் எஞ்சியுள்ள ஆசனங்களைத்தானா எங்களுக்கு கொடுக்க முன் வருகிறீர்கள்? உங்களுக்குச் சமமாக எங்களுக்கும் ஆசனங்கள் வழங்க வேண்டும்" என்றார்.

இத்திட்டம் பின்னர் கைகூடவில்லை. இதனால் விரக்தியடைந்த முஸ்லீம்கள் மீண்டும் சிங்கள சார்புப் போக்கையே அரசியலில் கையாளத் 'தொடங்கினர். இவ்வாறான சார்பு நிலை முஸ்லீம் அரசியலில் இன்று வரை தொடர்கிறது. உண்மையில் இலங்கைஅரசியல் வரலாற்றில் சாதி வெறியும், வகுப்பு வாதமும், இனத்துவேசமும் கொண்ட தலைவர்களால்தான் எமது நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது, சுபீட்சமிழந்தது. மாறாக அன்னியர்களால் அல்ல.

## தொல்லியல் சான்றுகள்

இலங்கை முஸ்லீம்களது இருப்பு, சிறப்பு பற்றியதான தொல்லியல் சான்றுகள் போதியளவு கண்டெடுக்கப்படவில்லை. இலங்கை வரலாற்றில் அலைக்கழிக்கப்பட்ட காலணித்துவத்தில் நாடோடிகளாக்கப்பட்ட முஸ்லீம்களது வாழ்வு, ஏனைய இனங்களைப் போன்றதாக அமையவில்லை. அவர்கள் தமது வாழ்வு, இருப்பிடம் சொத்துக்களோடு தமது வரலாற்றுத் தடயங்களையும் தொலைத்து விட்ட சமூகமாகவே காணப்படுகின்றனர்.

கிடைத்துள்ள தொல்லியல் சான்றுகளைக் கொண்டு இலங்கை முஸ்லீம்களது ஆயிரம் வருடங்களுக்குட்பட்ட வரலாற்றை Muslims in sri lanka எனும் நூலில் கலாநிதி எம். ஏ. எம். சுக்ரி அவர்கள் ஆதாரப்படுத்தியுள்ளார்கள்.

சேர் அலெக்சாந்தர் ஜோன்சன் பிரித்தானிய அரச ஆசியக் கழகத்திற்கு சமர்ப்பித்த அறிக்கையில், 'சுமார் ஏழு நூற்றாண்டுகளுக்கு முன் சிங்கள மன்னன் ஒருவன், இந்தியாவிலிருந்து புடைவை நெய்வோரை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியதற்காக பேருவலையைச் சேர்ந்த பெரிய முதலியார் மரைக்கார் என்ற முஸ்லீம் வணிகருக்கு எக் காலத்திற்குமான அவரது பரம்பரைக்காக சில சிறப்புரிமைகளைக் குறித்து வழங்கப்பட்ட செம்பாலான பட்டயம் தனக்கு கிடைத்துள்ளதாக' கூறியிருக்கிறார்.

அவ்வறிக்கையில், ஒரு கூபிக் கல்வெட்டு பற்றியும் அவர் குறிப்பிட்டுள்ளார். அக்கல்வெட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கி.பி. 12ம் நூற்றாண்டுக்குரியதாகும். இலங்கை முஸ்லீம்களுக்கும், பக்தாத் கலீபாவுக் குமிடையிலான சமூகத் தொடர்பும், அரச சபையில் முஸ்லீம்களுக்கு ஆசனம் வழங்கப்பட்ட விபரமும் இங்குள்ள முஸ்லீம்களின் நலனில் அக்கறை கொண்டு எகிப்திய கலீபா இலங்கை அரசனுக்கு எழுதிய கடிதமும், கலீபா வெகுமதிகள் அனுப்பி வைத்தார் என்ற விபரமும் அக்கல் வெட்டு மூலம் அறிய முடிகிறது என்கிறார்.

இலங்கையில் லெதின்ஸ் என்ற அரபு நாணயங்கள் இங்குள்ள வணிகர்களாலும், மக்களாலும் பாவிக்கப்பட்டிருப்பதை அரும் பொருட் காட்சி சாலையில் நாணயங்கள் மூலம் அறிய முடிகிறது.

சிங்கள அரச நிருவாகத்தில் அரபு நாணயங்கள் புழக்கத்தில் இருந்தததையும் அரபு முஸ்லீம்களின் வணிக முயற்சிகள் வளர்ந்தோங்கியதையும் இலங்கையில் கண்டெடுக்கப்பட்ட 9-10ம் நூற்றாண்டைச் சேர்ந்த அரபு நாணயங்கள் உறுதிப்படுத்துகின்றன.

கொழும்பு தேசிய நூதன சாலையிலுள்ள மிகப் பழைய கல்லறை நடு கற்களில் ஒன்று, கொழும்பு முஸ்லீம்களுக்கு இஸ்லாம் மதத்தின் கோட்பாடுகளை போதிப்பதற்கு பக்தாத் கலீபாவால் அனுப்பப்பட்ட அறிஞரும், பக்திமானுமான காலித் இப்னு அபூ பக்காயா எனும் பெரியாரும் கல்லறையின் மீது 10ம் நூற்றாண்டில் (ஹிஜ்ரி 337)ல் நடப்பட்ட அரபு அட்சரங்கள் அடங்கிய கல்லறையின் நடு கல்லாகும்.

அத்துடன், கொழும்பு நூதன சாலையில் மீரா லெப்பை மேஸ்திரியார், சேகாதி மரைக்கார் எனும் பிரசித்தி பெற்ற சோனக வைத்தியரின் உருவப்படமுமுள்ளது. ஒல்லாந்த அரசால் கருவாப் பட்டை கழற்றுவோர் காவற்படையினருக்கும், சோனகப் படையினருக்கும் மருத்துவராக நியமிக்கப்பட்டவர், மேலும் பிரித்தானியரால் உயர் நீதி மன்றத்தில் அதிகாரத்தின் கீழ் மருத்துவத் துறையின் சுதேச அத்தியட்சகராக நியமிக்கப் பட்டிருந்தவர்.

மேற்படி தகவல்களை முன்னால் தேசிய நூதன சாலை திணைக்கள உதவிப் பணிப்பாளர் சீ. எம். ஒஸ்ட்ரின் சில்வா (பி. எ. லண்டன்) தனது கடந்த கால நினைவுகள் என்ற கட்டுரையில் எழுதியிருந்தார்.

இவை தொல்லியல் சான்றுகள் பற்றிய சிறு குறிப்புகளே. தனிப்பட்ட ரீதியாக பல குடும்பங்கள், முஸ்லீம் வைத்தியர்கள், அதிகாரிகள் சிங்கள அரசர்களால் அளிக்கப்பட்ட பட்டயங்கள் அதிகமாக அறியப்படாமலே உள்ளன. இது தொடர்பாக உரிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும்.

முடிவாக இந்த வரலாற்றுத் தரவுகளினடியாக இலங்கைச் சோனகர் எனப்படும் இலங்கை முஸ்லீம்களின் மூதாதையர் அராபியரே என்பதும் அவர்கள் தனியான பண்பாட்டு மதக் கோட்பாட்டைக் கொண்டவர்கள் என்பதும் தமது சமுதாயத்தின் தனித்துவத்திற்காகவும் தனது சமூகத்தின் இருப்புக்காகவும் வரலாற்றில் அவர்கள் கொடுத்து வந்த, வருகின்ற விலைகள் மிக அதிகம் என்பதும் அனைத்து தரப்பு மக்களாலும் கவனத்தில் கொள்ள வேண்டிய அம்சங்களாகும். இந்த விலைகள், நீதமான மீளாய்வுக் குட்படுத்த வேண்டியதோடு, அதன் மூலம் இந்நாட்டு முஸ்லீம் மக்களது இருப்புக்கும் அவர்களது உரிமைக்கும் கௌரவமான அந்தஸ்திற்கும் உத்தரவாதம் கிட்ட வேண்டும் என்ற சிந்தனையை முடிவாக கூறவேண்டியுள்ளது.

*20.12.2000*

**உசாத்துணை**

- இலங்கைச் சோனகர் பற்றிய கடந்த கால நினைவுகள்.
  -(சோனக இஸ்லாமிய கலாசார நிலைய வெளியீடு)
- ஒரு சிறுபான்மை சமூகத்தின் பிரச்சினைகள்
  -அ. முஹம்மது சமீம் B.A (Hons).
- இலங்கையில் இஸ்லாம்.
  -அறிஞர் ஏ. எம். ஏ. அஸீஸ்.
- இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கட்டுரைக் கோவை.
  -(அனைத்துலக இஸ்லாமியத் தமிழிலக்கிய மூன்றாவது மாநாட்டுச் சிறப்பு மலர்.)
- முஸ்லீம் தேசமும் எதிர்காலமும்
  -விக்ரர்-
- வர்த்தக நோக்கோடு வந்த அரேபியரின் முதல் குடியேற்றம் எங்கே?
  -அ. அன்வர்தீன் B.A
- இலங்கை முஸ்லீம்களுடைய இனத்துவ ஆய்வு
  -முஹிர்ரஹ்மான்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னும் சில இடைமறிப்புகள்: 1

ஸ்ராலின்:- கதைப்போமா?

எஸ்.பொ:- முஸ்லிம்களினுடைய அரசியல் நிலைப்பாடு பற்றி முதலில் பேசுவோம்.

ஸ்ராலின்:– ஆம்.

எஸ்.பொ:– ஆரம்ப காலம் தொட்டு உதாரணமாக 1959 களில் இருந்தே தமிழ் அரசியல் தலைமைத்துவம் குறிப்பாக எஸ்.ஜே.வி.செல்வநாயகம் முஸ்லிம் மக்களையும் இணைத்து அரசியல் நடாத்த வேண்டும் என்ற பெரும் கோரிக்கையை முன்வைத்து 'தமிழ் பேசும் மக்கள்' என்று அடையாளப்படுத்தி முஸ்லிம்கள் தமிழர்களின் ஒரு பிரிக்க முடியாத அங்கம் என்று பிரகடனப்படுத்தியிருந்தார். அந்த பிரசாரத்தினாலும் கல்முனைத் தொகுதியில் எம்.எஸ்.காரியப்பரும் நிந்தவூர்த் தொகுதியில் முஸ்தபாவும் வெற்றி பெற்றார்கள். அவர்கள் வெற்றி பெற்ற பிறகு என்ன செய்தார்கள்?

அப்ப காலம் காலமாகவே அந்தத் தமிழ் இனத்துடன் ஒரு பிரிக்க முடியாத அங்கம் என்று பேசிவிட்டு அதை மாற்றினார்கள். அது ஒன்று. இரண்டாவதாக நாம் முக்கியமாக கவனிக்க வேண்டியது இந்த 'எழுத்துப் படைப்பாளிகள்' தனித்துவமாக நெறிப்படுத்தவும் முன்வந்தார்களா? என்று ஒரு கேள்வி! மருதூர்க்கனி போன்ற இலக்கியவாதிகள் எல்லோரும் அஸ்ரப்புடன் இணைந்து அரசியல் பிழைப்பு நடத்த முன்வந்தார்கள். எனவே இலக்கியவாதிகள் கூட கலையில் ஈடுபட்டோர் கூட முஸ்லிம் மக்களுடைய மனப்பான்மையிலே 'முஸ்லிம் மக்களுடைய' (அழுத்தமாகச் சொல்கிறார்) மனப்பான்மையிலே ஒரு மாற்றத்தைக் கொண்டு வர சத்திய சிரத்தை ஊன்றவில்லை. இது ஒரு கொடுமை. என்றுதான் நான் கருதுகின்றேன். மற்றது புலவர்மணிப் பெரியதம்பிப்பிள்ளை தன்னுடைய பேச்சுகளிலே அடிக்கடி குறிப்பிடுகிறார். இந்த் புட்டும் தேங்காயும் போல ஒன்றாய் இருக்கின்ற கதையை. அதாவது கிழக்கு மாகாணம் பூராவும் தமிழர்களும் முஸ்லிம் மக்களும் செறிந்தும் சௌகன்ஜயம் பேணியும் அன்பு பாராட்டியும் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுடைய வாழ்க்கை அமைப்பிலே கூட ஒரு சகாயமான, நட்பு ரீதியான உறவுகளை வைத்துக் கொண்டால்தான் இரு இனங்களுடைய பொருளாதார வளங்களும் சுபீட்சங்களும் மேன்மைபடும். இது யதார்த்தம். இந்த யதார்த்த உண்மைகளைக் கூட எண்ணிக்கையில்

இந்திரிய எழுத்தாளர் என்று பெயரெடுக்கக் காரணமான "தீ" நாவலை எழுதி கலகத்தை எற்படுத்திய எஸ்.பொன்னுத்துரை அவர்கள் நற்போக்கு இலக்கியத்தின் பிதாமகர். ஈழத்து எழுத்துலகின் சிம்பசொற்பனம். 20 வருடங்களுக்கு மேலாக வெளிநாடுகளில் வாழ்ந்துவருகிறார்.



எஸ்.பொன்னுத்துரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசியல் நடத்த விளையும் முஸ்லிம் தலைமைத்துவம் நிராகரித்தும் அல்லாவிட்டால் சில வேளைகளிலே Exploit பண்ணியும் பயன்படுத்தியும் வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.

ஸ்ராலின்:- இதற்கு காரணமா வந்து ஏன் சில வரலாற்றுப் படிப்பனைகள் பின்னணியில் இருக்கக் கூடாது. உதாரணமாக சேர்.பொன்.இராமநாதன் 1915- சிங்கள முஸ்லிம் கலவரத்தின் பின் எடுத்த முடிவுகள் முஸ்லிம்களுக்கெதிராக இருந்தது. அதைத்தொடர்ந்து சுதந்திர காலகட்டங்களில் ஜி.ஜி.பொன்னம்பலம் 50 : 50 கோரிக்கையை முன்வைக்கும்போதும் முஸ்லிம்களை கணக்கில் எடுக்கவில்லை. சிறுபான்மையினருக்காக கோரிய 50 வீதத்தில் 17% தமிழர்களுக்காகவும் 13% மலையகத் தமிழருக்காகவும் 8% வீதம் ஐரோப்பிய பறங்கியருக்காகவும் என்ற மாதிரியாகத்தான் பிரிக்கப்பட்டிருந்தது. அதன்பின்னர்.
(இடைமறிக்கிறார்)

எஸ்.பொ:- ஒரு தமிழன் என்னுடைய பணிகள் மிக அகலமானவையாக இருக்கிறது. விசாலமானவையாக இருக்கிறது. என்னுடைய வாழ்க்கைப் பயணத்தில் சத்தாக இன்னும் இன்னும் படைக்க வேண்டிய படைப்புகள் ஏராளம். எனவே எல்லாப் பிரச்சனைகளிலும் நான் சிரத்தை கொண்டு உழைக்க முடியாது.

1915ம் ஆண்டு சிங்கள - முஸ்லிம் இனக்கலவரத்தின் போது இராமநாதன் நடந்துகொண்டது மிகப் பிழையானதொரு செயற்பாடு. அது என்றென்றும் முஸ்லிம் மக்களுக்கு தமிழ் தலைமைத்துவத்தின் மீது ஒரு நிராகரிப்பினையும் ஒரு சந்தேகத்தினையும் ஏற்படுத்தியது. அதைத் திருத்த பின்வந்த அரசியல் தலைமைகளும் முனையவில்லை. சேர்.பொன்.இராமநாதனுடைய அரசியல் பங்களிப்பு மீள்பார்வை செய்து சரிப்படுத்தப்பட வேண்டும்.

படித்தவர்களுக்கான முதலாவது பிரதிநிதியாக சேர்.பொன்.இராமநாதன் தெரிவு செய்யப்பட்டார். அது நிகழ்ந்ததற்கு பின்னணியான அம்சத்தை சற்று பதிவு செய்யவேண்டும். மாக்கஸ் பெர்னாண்டோ என்கின்ற சிங்களவர்தான் இராமநாதனுக்கு எதிரான போட்டியாளராய் இருந்தார். (குரலைத் தாழ்த்திச் சொல்கிறார்) மாக்கஸ் பெர்னாண்டோ ஒரு கரையார். இந்த இராமநாதன் ஒரு வேளாளன். உயர்குல சிங்களவரான ஜே.ஆர் ஈடாக அந்த பரம்பரை ஜெயவர்த்தனாவின் முன்னோர்கள் எல்லோரும் இராமநாதனை ஆதரித்தார்கள்.

அப்ப 1915 இல் இராமநாதன் மேற்கொண்ட அரசியல் தலைமைத்துவம் பலவழிகளிலும் தமிழ் மக்களுக்கு பெரும் இடையூறுகளை பிற்காலத்தில் ஏற்படுத்தக் கூடியதாக இருந்தது.

1) அவர் தெரிந்தோ தெரியாமலோ, அல்லது தெரிந்துதான் இந்து வேளார்களுடைய ஆதிக்கத்தை அரசியலில் நிலைநாட்ட வேண்டும் என்று எடுத்த முடிவுகள்.
2) முஸ்லிம் மக்களுக்கு எதிராக அந்த இனக்கலவரத்தினை வைத்து செயற்பட்டமை.

அதற்குப் பின்னர் வந்த தமிழ் தலைமைத்துவமும் பிழைப்பு நடத்தும் வணிகமாக புகழ், பணம், செல்வாக்கு, அதிகாரம் இவற்றை நாடியதொன்றாகத்தான் அரசியலைப் பார்த்தது.

ஸ்ராலின்:- நு.்.மான், இளம்பிறை ரஹ்மான் மற்றும் சமீம் என்று பல தரப்பட்ட முஸ்லிம் எழுத்தாளர்கள் மத்தியில் நிறைந்த அனுபவம் கொண்ட நீங்கள் கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் மக்களுடன் அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்த நீங்கள் இவ்வளவு கால எழுத்துத்துறையில் ஒரு முக்கிய பங்களிப்பை செய்து வருகின்றீர்கள். தற்போதைய நிலையில் இலங்கை வடகிழக்கு அரசியலில் முஸ்லிம்களின் தலைமைத்துவங்கள் சீரழிந்தும் சீரழிக்கப்பட்டும் போன நிலையில் முஸ்லிம்களுக்கு மிகுந்த அநியாயங்கள் விடுதலை இயக்கங்களால் செய்யப்பட்டிருக்கின்றது. அதே நேரத்தில் இவ்வநியாயங்களில் முக்கிய பங்கு வகித்த புலிகளினதும் தமிழீழக் கோசத்தினதும் சிறந்த அபிமானியாக உங்களை அடையாளம் காட்டி வருகிறீர்கள். இன்னிலையில் முஸ்லிம்களின் மீதான பள்ளிவாசல் படுகொலைகளுக்கும் துரத்தியடிப்புகளுக்கும் எதிராக அல்லது அவை குறித்த உங்கள் கருத்து என்ன?

எஸ்பொ:- தனிமனிதன் தவறு செய்வது உண்டு. நான் எவ்வளவோ தவறு செய்திருக்கிறேன். அந்தத் தவறுகளை உணர்ந்துகொண்டு மன்னிப்புக் கேட்டிருக்கிறேன். சிலவேளை மன்னிப்புக் கேட்கவில்லை என்றாலும் அந்தத் தவறுகளை மீண்டும் செய்வதில்லை என்று திருந்தியிருக்கிறேன். தனிமனிதனைப் போலவே இயக்கங்களும். இயக்கங்களும் சில ஆவேசங்களிலும் சில அவசரங்களிலும் தவறு விடுவதுண்டு. இந்த முஸ்லிம்களுக்கெதிராக தொடுக்கப்பட்ட அநியாயங்கள் கண்டிக்கத்தக்கவை. இந்த அநியாயங்களுக்கு பிராயச்சித்தம் தேடியிருக்க வேண்டும். இது ஒரு பார்வை. இன்னொரு பார்வையும் இதில் உண்டு. எத்தனையோ முஸ்லிம்களை எனக்குத் தெரியும் நான் எத்தனையோ படைப்பாளிகளுடன் வாழ்ந்திருக்கிறேன். அவர்கள் தங்களை அடையாளப்படுத்தும் போது நான் மொழியால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழன், மதத்தால் முஸ்லிம் என்று சொல்கிறார்கள். அந்த எழுச்சியும் அந்தப் புரிந்துணர்வும் கிழக்கிலங்கை வாழ் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவத்துக்குக் கிடையாது. முஸ்லிம் அரசியல் தலைமைத்துவம் எப்பொழுதும் எரிகிற வீட்டிலே புடுங்குதல் ஆதாயம் என்று எந்தத் தமிழர்களுக்கும் சிங்களவருககும் ஏற்பட்டுள்ள இன முரண்பாட்டினை முதன்மைப் படுத்தி தங்களுக்கு அதீதமான சலுகைகளைப் பெற்றுக் கொள்பவர்களாக வாழ்கிறார்கள். அண்மைக்காலத்து அஸ்ரப்பினுடைய அரசியல் குத்துக்கரணங்களும் மோசடிகளும் இதனை மிகவும் அம்பலப்படுத்தும். இந்த அரசியலுடன் ஒட்டியது போலவே தமிழர்களுடைய போராட்டத்தை நசுக்கவும் அவர்களை ஒழித்துக் கட்டவும் சிங்களப் பேரினவாதம் முஸ்லிம்களை ஓர் அணியாகப் பயன்படுத்தியது வரலாறு. அவர்கள் ஊர்காவல் படையில் இருந்து செய்த அநியாயங்கள் ஏராளம். எனவே ஒரு கட்டத்திலே இவர்களுடைய அரசியல் நிலைப்பாடு மட்டுமல்ல அவர்களுடைய போராட்ட அணிகூட திசை மாறப்பட்டு இருந்தது. இந்த ஒரு தெளிவற்ற, 'மகரிப்'ல வரும் உருவங்கள் போன்ற ஒரு தெளிவற்ற தன்மையில் சில தவறுகள் நடந்திருக்கின்றன. இந்தத் தவறுகள் நடந்துவிட்டன. எனவே போராட்ட இயக்கம் மகா கொடியது என்று சொல்லி பிரச்சாரம் செய்து அதனைக் கொச்சைப் படுத்துவது இன்னொருவகையில் அநியாயமானது. ஒரு அநியாயத்துக்கு எதிராக இன்னொரு சைட்டில் அநியாயம் நடத்தப்படுவது நியாயத்தை நிறுவுவதற்கு உதவும் என்று நான் நம்பவில்லை.

எவ்வாறு முஸ்லிம்கள் சொல்லொண்ணா இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டார்களோ அது அநியாயம். ஆனால் இந்த இன்னல்களைக் கொடுத்ததினாலே இந்தப் போராட்டம் நடத்துபவர்கள் எல்லாம் மிலேச்சர்கள் அவர்கள் அநாகரிகர்கள் என்று உரக்கக் கூச்சலிடுவதும் நியாயமாகாது.

கற்சுறா:- இது ஒரு எதேச்சையாக நடந்த சிறு தவறு எனச் சொல்லமுடியாது. ஏனென்றால் இது திட்டமிட்டு செய்யப்பட்டது. இதன் தொடர்ச்சியாகவும், அதற்கு முன்னரும் செய்யப்பட்ட கொலைகள் அனைத்துக்கும் பின்னால் ஒரு அரசியல் இருப்பதை மறைக்கமுடியாது.

எஸ்.பொ:- ஆமாம், நான் வந்து தற்செயலாகவோ, தவறுதலாகவோ நடந்தது என்று சொல்லவரவில்லை. போராட்டத்தின் பொழுது சில நிதர்சனங்களை உள்வாங்கி அமைக்கப்பட்ட திட்டங்களிலே பிழை ஏற்படுகிறது. அத நான் நேர்மையாக ஒத்துக்கொள்கிறேன்.

ஸ்ராலின்:- நீங்கள் இதை ஒத்துக் கொள்கிறீர்கள். கண்டிக்கத்தக்க செயல் என்றும் ஒத்துக் கொள்கிறீர்கள். ஆனால் நாங்கள் தொடர்ந்து இது பற்றிக் கதைப்பதை போராட்டத்துக்கு குந்தகமானது என்றும் சொல்கிறீர்கள்.

எஸ்.பொ:- ஆம், அதாவது இந்த Amenmens இத வைத்துக்கொண்டு அநியாயச் சாவு என்று பிணத்தை வைத்துக்கொண்டு பிழைப்பு நடத்துவதுபோல் அரசியல்வாதிகள் சமூக அக்கறை உள்ளதாக காட்டிக்கொள்வோர்கள் அல்லது ஏதோ ஒரு காரணத்தினால் போராட்ட நோக்கங்களில் இருந்து முரண்பட்டு நிற்பவர்கள் இதை ஆதாயமான விடயமாக பயன்படுத்துகிறார்கள்.

ஸ்ராலின்:- அப்படி நீங்கள் சொல்லும்போது நீங்கள் புரிந்துகொள்வது போலோ அல்லது நாங்கள் இவற்றைக் கண்டிப்பதுபோலோ குற்றமிழைத்த விடுதலையின் பேரால் ஆன அமைப்புகள் குறிப்பாக புலிகளைப் பொறுத்தவரைக்கும் இக்கொடுமைகள் பிழை என்பதாக ஒத்துக் கொள்ளலோ அதற்காக பிராயச்சித்த முயற்சிகளோ உத்தியோக பூர்வமாக இல்லாமையுடன் தொடர்ந்த நியாயப்படுத்தல்கள் இவ்வக்கிரமங்கள் குறித்து இருந்து கொண்டிருக்கும் வரை அதை நாங்கள் தொடர்ந்து பேசவேண்டிய தேவையிருக்கிறது.இல்லையா?

எஸ்.பொ:- அதத்தம்பி நீங்க அவர்களிடம் கேட்கவேண்டும். என்னைப் பொறுத்தவரை நான் புலி இயக்கத்தைச் சேர்ந்த போராளி அல்ல. இதை நீங்கள் தெளிவாக அறிந்து கொள்ளவேண்டும். இயக்கத்தினுடைய தீர்மானங்களை ஓரளவேனும் Imidence பண்ணக்கூடிய அளவுக்குக்கூட நான் இல்லை. என்னைப் பொறுத்தவரை நான் ஒரு இலக்கியப் போராளி. இன்றைய நிலையில் தமிழர்களுடைய குறிப்பாக ஈழத்தமிழருடைய எழுத்து வல்லவங்களும் முனைப்புகளும் மடிந்துவிடக்கூடாது. அது சேமமாக வளர்த்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் தலைமை ஊழியனாக என்னைப் பிரகடனப்படுத்தி வாழ்கிறேன். அதை நீங்கள் நன்றாகப் புரிந்துகொள்ள வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இன்னும் சில இடைமறிப்புகள்: 2

34 ஆண்டுகளாக "மல்லிகை" சஞ்சிகையை வெளியிட்டுவரும் டொமினிக்ஜீவா அவர்கள் 50 வருடகால அனுபவமிக்க படைப்பாளி. யாழ் சைவவேளாள ஆதிக்கத்துக்கெதிராய் கட்சி ஊழியன், களப்போராளி, எழுத்தாளன் எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு தலித் என்ற அடையாளங்களோடு முகம்கொடுத்துப் போராடிவரும் மனிதர்.



டொமினிக்ஜீவா

**ஸ்ராலின்:**
தோழமைமிகு டொமினிக்ஜீவா அவர்களே! தமிழ் இலக்கியப் பரப்பில் மறுக்கமுடியாத முத்திரை பதித்து ஒடுக்கப்பட்ட மக்கள் சார்பில் ஓங்கிஎழுந்த எழுத்துகளின் முக்கிய சொந்தக்காரன் நீங்கள். அந்த வகையில் இன்று தமிழ்த் தேசியத்தின் பேரால் இலங்கையின் சிறுபான்மை முஸ்லிம்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறைகள் மிக அறிந்ததே. யாழ்ப்பாணத்தில் இருந்து துரத்தப்பட்ட ஒரு லட்சத்துக்கும் மேலானோர் திட்டமிட்ட பள்ளிவாசல் படுகொலைகளினால் மாண்ட ஆயிரத்துக்கும் மேலானோர் குறித்த உங்கள் கருத்துக்கள் அல்லது விமர்சனங்கள் ஏதும் உண்டா?

**டொமினிக்:**
எங்களைப் பொறுத்தவரையில் இளங்கீரன்போன்ற மிக அற்புதமான தமிழ் முன்னோடி எழுத்தாளர்களை, முஸ்லிம் எழுத்தாளர்களை யாழ்ப்பாணந்தான் உருவாக்கினது. அது எங்களுக்கு மிகப்பெரிய பெறுமதி மிக்க சாதனை என்று நாங்கள் நினைச்சநாங்கள். அதுமாத்திரமல்ல மல்லிகையினுடைய கடந்த 35 வருச வாழ்க்கையில வெறும் யாழ்ப்பாணம் அல்ல இலங்கையில் இருக்கக் கூடிய பட்டி தொட்டியெல்லாம் இருக்கக்கூடிய சிங்களமக்களால் சூழப்பட்ட பிரதேச முஸ்லிம் மக்களின் படைப்புகளை "மல்லிகை" தேசத்தின் சொத்தாக தந்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். அதோட மிக முக்கியமான எழுத்தாளர்களுடைய பசீர், திக்குவலைக் கமால், மேமன்கவி, கெக்கிரா சகானா போன்ற மிகமுக்கியமான இளம்தலைமுறை எழுத்தாளர்களுடைய நூல்களை மல்லிகைப் பந்தல் வெளியிட்டு அதிகமான மக்கள் மத்தியில் அந்த முஸ்லிம் எழுத்தாளர்களைக் கொண்டுசென்று இருக்கிறது.

அந்த அளவில யாழ்பாணத்து சகோதரங் களான எங்களோடு எங்களாக தமிழோடு தமிழாக இருந்தவர்கள் துரத்தப்பட்டது ஓர் பெரிய ஜனநாயக விரோதமான செயல் என்று அப்பவே நாங்கள் குமிறி இருக்கின்றோம். அதில் எந்தவிதமான சமரசத்துக்கும் இடமில்லை. இது எக்காரணம் கொண்டும் நியாயப்படுத்த முடியாதது. பெரும்பான்மையினம் எங்களை நசுக்குகிறது என்றுகொண்டு எங்களுக்கான சிறுபான்மை யினத்தை நாங்கள் துரத்திறது என்கிறது எங்களுடைய ஆத்மீக, தார்மீக நேர்மையிலேயே சந்தேகத்தை ஏற்படுத்தும். அந்த அளவில நாங்கள் அதுக்குப் பிராயச்சித்தமாகத்தான் கலையிலக்கியத் துறையில் நாங்கள் செய்த தவறுக்கு மாற்றாக அந்தப்பகுதி புத்திஜீவிகள் அறிவாளிகள் சிந்தனை யாளர்களுக்கு முக்கியமான தேசிய அந்தஸ்தும் தமிழ் அங்கீகாரமும் கொடுக்க வேலை செய்து கொண்டிருக்கிறோம். நான் நினைக்கிறேன் மல்லிகை அந்த விசயத்தில ஏதோ ஒரு வழியில் தங்களுடைய மக்கள் செய்த தவறுக்கு மாற்றாக ஒரு சரியான நிலைப்பாடு எடுத்து கடந்த 10 வருடங்களாக செய்து வருகின்றது என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

# யார் அழித்தாரோ...?

சாய்ந்தமருதூரின் ஒதுக்குப் புறமாக அந்த ஆறு ஓடிக் கொண்டிருந்தது. ஊரை நீள வாக்கில் பிளவு படுத்தியதாக ஓடி கடைசியில் கடலில் வந்து கலக்குமது. கரைவாகு ஆற்றின் கடைசிக் கிளையது. அதன் இரு புறமும் எல்லாப் பரப்பிலும் ஓங்கி உயர்ந்தபடி தென்னை மரங்கள் நின்றிருந்தன. கடலின் ஓய்வில்லாத சப்தம் கேட்டபடியே இருக்கும். மக்கள் இன்னமும் அதை வெற்றுக் காணிகளாகவே விட்டு வைத்திருந்தனர். ஆண்டு தொள் ளாயிரத்து தொண்ணூற்றொன்று. ஆவணியின் ஒரு திங்களிரவு. நள்ளிரவு நேரம். தென்னை மரங்களிடையே அந்த வாடி தனித்துத் தெரிந்தது. பனிரெண்டு பேரளவில் அங்கு நெருக்கமாக உட்கார்ந்து கொண்டிருந்தனர். யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற ஆவல் அவர்களில் தெரிந்தது. இரவின் இருட்டு, அவர்களின் மௌனம் எல்லாமாகச் சேர்ந்து ஒரு பயந்த நிலையை அவ்விடம் தோற்றுவித்திருந்தது. எனினும் பிறந்த போதே, கத்தியபடி வந்த மனுஷனுக்கு மௌனித்திருத்தல் சாத்தியமானதா? 'கச முசா' வென்ற உரையாடல் துவங்கிற்று. ஒரு வேளை தத்தமது அச்சத்தை அகற்றுகின்ற நிகழ்வாகவும் அது இருக்கக்கூடும். திடீரென சபை மௌனமாயிற்று. சற்றுத் தூரத்தே வெள்ளையுடை தரித்த அவர்களின் 'நீதிபதி' வந்து கொண்டிருந்தார். 'கடல் லாம்பு கொழுத்தப்பட்டது. அறையில் முகங்கள் விளங்கத் துவங்கின.

'நீதிபதி' - லத்தீப் மௌலவி மண் சுவரில் முதுகு படும்படி வாகாக உட்கார்ந்தார். 'ஜூரி'கள் என்கின்ற இரு மௌலவிகள் அவரின் இரு புறமுமாக உட்காந்தனர். நீதிமன்றம் துவங்கிற்று.

லத்தீப் மௌலவி நீண்ட ஆகிருதியான உடலைக் கொண்டிருந்தார். வெள்ளை நிற அரைக் கைச்சட்டை, அதே நிறத்தில் லோங்ஸ், அழகிய சிறிய தாடி: இன்னமும் மொத்தமாக வெளுக்கவில்லை, பூ வேலைகளுடன் கூடிய வெண் தொப்பி, நீண்ட நாசி, தீட்சண்யம் மிக்க கண்கள், நீளவாக்கில் ஐந்து மடிப்புக்களையும் தொழுகையால் ஏற்பட்ட கூட



- எஸ். நஸீறுதீன் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மடிப்புக்களையும் தொழுகையால் ஏற்பட்ட வடுவையும் தாங்கிய நெற்றி, அழகான சாந்தத்திற்குரிய அவரின் முகம் குழந் தைக்குரியதாய் இருந்தது. பேச்சின் போது கூட வயது வேறு பாடின்றி எல்லோரையுமே 'வாப்பா' என்கின்ற மிருதுத் தன்மை. இப்போதைக்கு இது நிற்கட்டும்; அவர்களின் விசாரணை துவங்கியாயிற்று.

முதல் வழக்கின் எதிரி முன்னே வர, அவனின் மீதான குற்றப்பத்திரிகை வாசிக்கப் பட்டது. கண்கள் மூடிக்கிடக்க லத்தீப் உள்வாங்கினார். கொடுக்கல், வாங்கல் பிரச்சினை. 'நீதிபதி' எதிரியைக் கேட்டார்.

"இதைப்பற்றி ஏதும் சொல்ல விரும்புறாயா வாப்பா?"

எதிரி மௌலவியை வெறித்துப் பார்த்தான். பதில் சொல்ல வில்லை. இது அவனுக்கு அவமானகரமானது. ஊரில் தன்னைப்பற்றிய ஒரு பயந்த நிலையை உருவாக்கியிருப் பதாக நம்பியதை தவிடு பொடியாக்குகின்ற நிகழ்வு இது. 'சண்டியன் சயிது' வைக் குற்றவாளியாக்கி இன்னொ ருத்தர் கேள்வி கேட்பதா? ஆத்திரமாயிருந்தது அவ னுக்கு.ஆயினும் ஊர் கூடி- பள்ளிவாயிலினூடு ஏற்படுத் தப்பட்ட நீதிமன்றம் இது. 'ஊரைப் பகைக்க வேண்டாம்- பகிரங்கமாக' என முடிவு செய்திருந்தான். தன்னுடைய சகாக்கள் மூவரையும் தேடிக் கண்களை அலையவிட்டான். பின்புறமாயிருந்து திடீரென குழப்பமான குரல்கள் கிளம்பின. மௌலவி சத்தம் வந்த திசையில் பார்வையைச் செலுத் தினார்.

"யாரு வாப்பா அது? என்ன சப்தமங்க?"

பின்னாலிருந்து ஒருவன் எழும்பி னான். சபைக்கே அவன் 'ஊருக் குப் புதுசு' என்பது விளங்கியது. மௌலவி பார்த்தபடி இருந்தார். அவனின் குரல் காட்டமானதாக இருந்தது.

"உங்களுக்கு யார் இந்த அதிகாரம் தந்தது? அவர் எதுக்காக உங்களுக்குக் கட்டுப்படவேணும்?"

சபை திடீரென விறைத்து பின் எழுந்தது. 'ஏய், என்ன பேச்சுப் பேசுறாய் நீ...? என ஆத்திரக் குரல்கள் எழும்பின. மௌலவி அமைதியாக்கினார். பரிந்து வந்தவனை நோக்கினார்.

"தம்பி, நீ ஆரு வாப்பா? ஊருக்குப் புதுசா?"

"நான் இவரோட மூத்தம்மாட சாச்சிட மகள்ள மகன். இதுவ ரையும் கொழும்பில இருந்திட்டு நேற்றுத்தான் இங்க வந்தது."

"நல்லது. இதுல என்ன பிழையிருக்குதுண்டு கண் டாய்?"

"இதுகள விசாரிக்க கோர்ட்டும், பொலிசுமிருக்க உங்களுக்கு அதிகாரம் ஆர் தந்தது?"

"தம்பி முதல்ல ஊர் நிலைமை உங்களுக்குத் தெரியுமா?"

"அப்படியென்ன நிலைமை? இங்க என்ன பொலிசில்லியா? கோர்ட்டில் லியா? நாம இலங்கையில தானே வசிக்கிறம்?" மௌலவிக்குச் சிரிப்பு வந்து விட்டது. வாயைத் தனது வலது கை விரல்களால் மூடிக்கொண்டார். பின்பு புன்னகை சிந்திய படியே சொன்னார். " தம்பி, இப்ப வட- கிழக்கு நிலைமையே வேற 'வாப்பா'. பொலிசு, கோர்ட்டு எல்லாமே ஸ்ரேசனுக்குள்ள அப்படியே அடங்கிப்போச்சு. சகல நிருவாகங்களையும் இப்ப அவங்கதான் பொறுப்பெடுத்திருக் காங்க தெரியுமா...?"

"நிருவாகம் சரி இதையுமா?"

"ம்! இதையும் தான். நம்முட பக்கத்து மாளிகைக் காட்டுல ஒரு காரியாலயம் திறந்திருக்காங்க. அங்க வந்து பிரச்சினைகளத் தீர்த்துக்கச் சொல்லியிருக்காங்க தம்பி."

தம்பி சற்று நேரம் மௌனமாய் இருந்தான். இதை அவனிடம் சயிது சொல்லவில்லை. 'அவர்களின்' ஆதரவு சயிதுக்கு இருப்பதாகச் சொல்லியிருக் கிறான். இந்தக் 'கிழவன்' விசயதாரி போலிருக்கிறது. தம்பி மீளவும் கேட்டான்;

"சரி, அப்படியானால் அவர் களைப்பகைத்துக்கொள்வதா? ஏன் அவர்களிடம் முறையிட முடியாது?"

மௌலவியின் முகம் வெறித்தது. 'தம்பி' யை முறைத்துப் பார்த்தார். பதில் கறார்த்தனமாய் இருந்தது.

"தம்பி, நீ கூடப் பேசுறாய். நம்முட ஊரால, பள்ளியால எடுத்த தீர்மானம் இது. நம்முட பிரச்சினையை அவங்கள் எப்பிடித் தீர்க்கிறது?"

"ஏன் தீர்க்கேலாண்டு சொல்றியள்? இத அவங்க அனுமதிப்பாங்களா?"

சபை பொறுமையை இழக்க ஆரம்பித்திருந்தது. 'இச்' கொட்டுகிற சப்தமும் 'இவனென்ன கேள்வி கேட்கிற து' என்ற வகையிலான குசுகுசுப்பும் கிழம்பிற்று. ஆனால் மௌலவி அசரவில்லை.

"அனுமதிக்கமாட்டாங்க. அனுமதி கேட்கத் தேவையு மில்லை. அவங்கட அதிகாரத்த கேள்விக்குட்படுத்திறதா நினைப்பாங்க.நம்மள விரோதியாவே பார்க்கிறாங்க..."

"அவங்ககிட்ட சரியான நீதி கிடைக்காதுங்கிறியளா?"


"அப்பிடி மொத்தமாச் சொல்லேலா 'வாப்பா'. முஸ்லீம்களுக்கென்று தனியான பொருளாதார, விவாக, தாபரிப்பு எண் டெல்லாம் ஏகப்பட்ட சட்டங்கள் அல்லாஹ்வால குர்ஆனில சொல்லப்பட்ட படிதானே தீர்க்கனும். இதுல மனுசன்ர புத்திட தீர்ப்ப நாம



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒத்துக்கலாமோ? ரஜீவ் காந்தி கூட 'சரிஆ' சட்டத்த மாத்தப் போய் தோத்துப்போனல்லியா? அதனாலயும் தான் இது." தம்பி உட்காந்து கொண்டான்.
விசாரணை மீளவும் துவங்கிற்று. லத்தீப் மௌலவிக்கு ஊரையே தலைமேல் வைத்துச் சுமக்கும் படியாயிற்று. மன்று துவங்கி ஆக இரு மாதங்கள்தான். அதற்குள்ளேயே ஊரின் பிரச்சினைகளைக் கண்டு மலைத்துப் போனார். எத்தனை வகை மனிதர்கள். பிரச்சினைகள். அதைவிடவும் தீர்ப்புச் சொன்னவுடனேயே ஒருசாரார் முகம் கொடுத்துப் பேசாதிருப்பதை எண்ணக் கவலையுமாயிற்று அவருக்கு. ஊரின் மிகப்பெரிய சொத்து அவர். இறை பயமும், பக்தியும் மனிதருள் புனிதராக அவரை ஆக்கியிருந்தன. அவரின் மனைவி - ஆசிரியை சுல்பிகா கூட அவரின் பாரங்களைத் தாங்குவதில் துணையாயிருந் தார். பிள்ளைகள், தனது கவலைகள் அவரை எட்டவிடாத படி பார்த்துக்கொண்டார். மௌலவி ஊரின் கவலைகளை வீட்டின் பாரமின்றி இதனால் ஓரளவு சுமக்கக் கூடியதாக இருந்தது. ஆயினும் ஒரு சாரார் கோபவயப்பட்டிருப்பது அவரில் கவலையைக் கூட்டிற்று.
'அல்லாஹ்வுக்கான தீர்ப்பை வழங்குகிறோம் அவன் பார்த்துக் கொள்வான்' என்ற திருப்தியும் ஓரளவு அவருக்கிருந்தது. இதுவும் அவனின் ஏற்பாடானால் ஏற்றுக் கொள்வோம் என்ற எண்ணம் இருந்தது. ஆயினும் என்ன?
அவர், அன்று காலை சைக்கிளை வீதியில் இறக்கவும், 'அவர்களை' எதிர்கொள்ளவும் நேரம் சரியாகவே இருந்தது. 'பிக் அப்' வாகனம் அவர் அருகில் வந்து நின்றதும், அவருக்கு நிலைமை புரிந்து போயிற்று. முன்கதவைத் திறந்தபடி ஒருவன் இறங்கினான். சாதாரண உடை. பின்னிருந்த கதவிலிருந்து திடீரென மற்றவர்கள் வெளிவந்தனர். அவர்கள் வேறுபட்ட அளவிலான துப்பாக்கிகளைக் கொண்டிருந் தனர். சாதாரண உடை- (தலைவனாயிருக்க வேண்டும்.) மௌலவியை நெருங்கினான்.
"பெரியவரே, உங்களுடன் சற்றுப் பேசவேண்டியிருக்கிறது. எங்களுடன் வருகிறீர்களா?"
"நான் இப்ப பாடசாலைக்குப் போறன் பின்னேரமாய்ப் பேசலாமே"
சாதாரண உடையின் முகம் இறுகிற்று. இதுவரை இப்படி யாரும் இடக்காகப் பேசியதில்லை.
"இங்கே பாரும். நீங்கள் எங்களைக்கண்டு பயப்பட வேண்டாம். சற்று நேரத்துள் நாங்களாகவே கொண்டு வந்து விட்டுவிடுவோம்."
குரலின் காட்டத்தை மௌலவி உணர்ந்தார். பயப்படவேண்டாம்



என்கிறான், பின் எதற்காக இத்தனை ஆட்களை ஆயுதங்களுடன் நிறுத்தி வைத்திருக்கிறான். மௌலவிக்கு பயம் எழவில்லை. ஆயினும் அவ்விடம் ஆட்கள் சேர்ந்துகொள்ள தன்னால்- தனக்காக வேண்டிக் குழப்பம் ஏற்பட்டுவிடுமோ என்ற தயக்கம் இருந்தது. படிப்படியாக ஆட்களின் எண்ணிக்கை கூடிக்கொண்டே வந்தது. மௌலவி முடிவு செய்தார். சைக்கிளை மீண்டும் வளவினுள் வைத்துப் பூட்டினார்.
"சரி! வருகிறேன்"
'பிக்கப்' பினுள் ஏறி உட்கார்ந்தார். அது வேகம் எடுத்தது.
லத்தீப் மௌலவிக்கு அந்த இடம் எதுவெனத் தெரியவில்லை. தன்னுடன் கூடவாய் ஒரு காத்தான்குடிப் பையனை (அடைத்து) வைத்தது ஓரளவு மன ஆறுதலை அவருக்குத் தந்தது. இங்கு வந்து மூன்று மாதமாயிற்று. ஜிப்ரி மட்டும் இல்லாது போயிருந்தால் அவருக்கு பைத்தியமே பிடித்துப் போயிருக்கும். மனைவி, பிள்ளைகளின் ஞாபகத்தில் மனசு பித்துப் பிடித்து அலைந்திருப்பார். ஆனால் ஜிப்ரி அவருக்கு நிறைய ஆறுதலாய் இருந்தான். உள்ளே அவரைத் தள்ளியபோது முழங்கால், கை, கன்னங்கள், கண், இரைப்பை, காதின் ஓரம் எல்லாமே நொந்து தவித்தன. அப்போதே அவருக்கு ஒத்தடம் தந்து இதமளித்த ஜிப்ரி இன்றுவரை அவரைப் பாத்துக் கொள்கிறான். அதைவிட அல்லாஹ் தனக்களிக்கின்ற சோதனையாகவே இதனையும் அவர் கருதியிருந்தார்.
ஜிப்ரிக்கு மௌலவியின் மீது ஏகப்பட்ட மதிப்பு உரு வாகியிருந்தது. நேரந் தவறாது ஐவேளையும் தொழுதார். நிறைய நேரங்களை தனியாகவே களித்தார். வீண் பேச்சு என்று எதுவும் பேசியது இல்லை. முகம் முழுக்க சோகத்தில் ஆழ்ந்திருந்தது. ஜிப்ரிக்கு பிள்ளைகளைப் பற்றிச் சொல்வார். அப்போது குரல் கரகரக்க, கண்கள் கண்ணீரைச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்.

www.tamilarangam.net

சொரியும். ஜிப்ரி தவித்துப் போவான். இரவில் எத்தனைக்குத் தூங்குகிறார், காலையில் எத்தனைக்கு விழித்தெழுகிறார் எதுவுமே ஜிப்ரிக்குத் தெரியாது. அவரின் சாதுத்தனம் கண்டு மனதுள் குமுறினான் ஜிப்ரி.

அவர்களின் காவலுக்கென இருவர் ஏவப்பட்டிருந்தனர். மௌலவியின் நடத்தைகள் அவர்களைக்கூட ஓரளவு மாற்றியிருந்தன. முதலில் இருந்த முக இறுக்கம் அவர்களில் இப்போது இல்லை. அவரில் ஓரளவு மதிப்பு வைத்திருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் எதையும் இலகுவில் வெளிக்காட்டிவிடாதபடி இறுக்கமாகவே நடந்து கொண்டனர். மௌலவி எதைக் கேட்டும் அவர்கள் இதுவரை மறுக்கவில்லை. தொழ, தூங்கவெனப் பாய், ஒரு குவளை, வேண்டியளவு நீர் கொண்ட பிளாஸ்ரிக் வாளி, நுளம்புச் சுருள், பெனடோல் மாத்திரைகள்...

நாட்கள் மிக மெதுவாகவும் ஆயாசமாகவும் கடந்துகொண்டிருந்தன. அன்று வியாழன் இரவு. மௌலவி இஷாத் தொழுகையை முடித்துவிட்டு சுன்னத்துத் தொழுகையை மேற்கொண்டிருந்த வேளை ஜிப்ரி பாயில் தலைக்கு கையைக் கொடுத்தவனாகப் படுத்திருந்தான். கண்கள் கிடுகு வேலியினூடான நட்சத்திரங்களை வெறித்தபடி பார்த்திருந்தன. அறையில் சிறிய விளக்கு காற்றுக்கு ஆடி ஆடி எரிந்தபடி இருந்தது. திடீரென துப்பாக்கியின் வெடியோசைகள் கிளம்பின. மௌலவி சலாம் கொடுத்துவிட்டிருந்தார். அவர்களின் இருப்பிடம் திடீர் பரபரப்புக்குள்ளாயிற்று. வெளியே வெளிச்சங்கள் அணைக்கப்பட்டன. ஜிப்ரி எழுந்தான். தவழ்ந்தபடி சென்று அறை விளக்கை அணைத்தான். எல்லா இடமுமே இருளாயிற்று. எந்த முகமுமே புலப்படவில்லை. ஆனால் மௌலவியின் வெள்ளை நிறச் சாறம், சேர்ட், தொப்பி என்பவை மங்கலாக அவரை அடையாளப்படுத்தின. அவரும் தரையில் சாய்தவராகக் கிடந்தார். திடீரென அவரின் காதருகில் ஒரு முகம் முளைத்தது. முணுமுணுத்தது.

"எஸ்.ரீ.எவ். முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். ஐயா, ஜிப்ரியுடன் சேர்ந்து மேற்காக தப்பிச் செல்லுங்கள். காத்தான்குடி வரும். சீக்கிரமாக வெளியேறுங்கள்."

அவனின் கை மேற்கின் திசையைச் சுட்டி நின்றது. ஜிப்ரி ஆயத்தமானான். மௌலவியின் கையைப் பிடித்தபடி வெளியே வந்தான். மௌலவிக்கு கண்களை இடுக்கிக் கொண்டு பார்க்க வேண்டியிருந்தது.

"என்ன 'வாப்பா' இது, இப்படி இருண்டு கிடக்கு?"

"ஷ்... பேசாதங்கோ உங்கட உடுப்பக் கழட்டிற்று சாறன



மடிச்சுக் கட்றிங்களா?"

"சரி 'வாப்பா'... என்றபடி பட்டனை அவிழ்த்த போது மீளவும் வெடியோசை கிளம்பிற்று. காதைக் கிழிக்கின்ற தொடரான சப்தங்கள். ஜிப்ரி தரைக்குத் தாவினான்.

"என்ர அல்லாஹ்வே..., லா இலாஹ..."

மௌலவியின் உரத்த குரலினால் ஜிப்ரி துவண்டான். மௌலவி தரையில் கிடந்தார். அவரது வலது கை நெஞ்சில் கிடந்தது. வாய் குழறிற்று.

"வாப்பா, நீ ஓடிரு... என்னப் பார்க்காத ஓடு 'வாப்பா'..."

லத்தீப் மௌலவியின் ஆகிருதியான உடல் அசைவற்றுக் கிடந்தது. பரந்த மார்பு மூச்சு விட மறந்து கிடந்தது. ஜிப்ரி கண்ணீர் வடியத் திரும்பியவன், ஓடத்துவங்கினான். எந்தப் பக்கமாக யார் சுடுகிறார்கள் என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. ஆயினும் தவழ்ந்தபடி அவன் ஓடினான். காலம் பொல்லாதது. எத்தனை ராஜாக்களை, மேதைகளை, சண்டியர்களை அழகு தேவதைகளை அது கண்டு விட்டிருக்கிறது. அதற்கு யாரும் எதுவும் பொருட்டில்லை.

காலத்தின் கோரப்பிடி மிகப் பயங்கரமானது. அது காந்தியை, மார்ட்டின் லூதர் கிங்கை, கெல்லரை, ஹிட்லரை, கிளியோபட்ராவை... இப்படி எல்லோரையுமே தன் கீழ் போட்டு மறக்கடிக்கச் செய்திருக்கிறது. முன்னரைவிட இப்போதைக்கு தன்தேவை., தன் சுகம் என்பதாகவே ஓடிக்கொண்டிருக்கின்ற மனுஷனுக்கு இன்னமும் இலகுவான விஷயமது. தனது ஊரைப் போலவே, சாய்ந்தமருது விலும் மனித மனங்களில்-முகங்களில் செழிப்பில்லா திருப்பதை ஜிப்ரி கண்டான். பத்து மணியிலிருந்து மௌலவியின் மனைவி சுல்பிகா ரீச்சருக்காக அவன் காத்துக் கொண்டிருந்தான். எந்த முகங்களும் நேசம் செய்ய வில்லை. எல்லோருமே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சி.புஸ்பராசா

1973இல் "தமிழ் இளைஞர் பேரவை"யை ஸ்தாபித்தவர். தமிழீழ விடுதலை இயக்கங்களில் ஆரம்ப கர்த்தாக்களில் ஒருவரான சி.புஸ்பராஜா அவர்கள் சுமார் 20 வருடகாலமாக புகலிடத்தில் வாழ்ந்து வருகிறார். புகலிட இலக்கிய நிகழ்வுகளில் அதிக அக்கறைகொண்டு உழைத்து வருபவர்.

## இடைமறிப்பு – 3

8 ம் நூற்றாண்டில் இருந்து வாழ்ந்து வந்த ஒரு இனத்தை 24 மணிநேரத்தில் இரண்டு பவுண் நகையும், 2000ரூபா பணமும் மட்டுமே எடுத்துக் கொண்டு செல்லும் அனுமதியுடன் துரத்தப்பட்ட கொடுமைக்காக தமிழன் என்பதற்கும் அப்பால் ஒரு மனிதனாய்ப் பிறந்ததற்காக நிச்சயம் நாம் வெட்கப்படவேண்டும். இது குறித்து இரக்கப்படுகிறோம், மிக வேதனைப்படுகிறோம், வன்மையாகக் கண்டிக்கிறோம். மீண்டும் வந்து முஸ்லிம்கள் தங்களது பிரதேசங்களுக்கு எதுவித நிபந்தனையும் இன்றி திரும்பிச் செல்ல அனுமதிக்கப்படவேண்டும். அப்போதுதான் நாம் எமது விடுதலை குறித்து கதைக்கவோ, அல்லது எங்கள்மீது நடத்தப்படகின்ற வன்முறை குறித்து, இன அழிப்புகள் குறித்து கண்டனம் தெரிவிக்கவோ தார்மீக உரிமையிருக்கும். அதுவரை அந்த மக்கள் வாழாத எமது பிரதேசம் எங்களுக்கும் தேவையற்ற பிரதேசமேயாகும்.

---

அவசரமாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

ஜிப்ரிக்கு ஒரு வகையில் இந்த நடத்தை மாற்றம் சரியான தாகவே பட்டது. ஏனெனில் ஒரு தமிழர் தனக்கு ரீச்சரின் வீட்டை-அடையாளம் காட்டியதுமன்றி இருக்கக்கதிரையும் அவனுக்குக் கொடுத்திருந்தார். 'இவர்களின் முடி வெட்டுகிற தேவை பழைய ரணங்களை கோபங்களை ஆற்றிவிட்டதுவா? நிச்சயமாக மன்னிப்பால் அல்ல இந்த இணக்கம். நாளை மீண்டும் கலவரம் என்று வரும்போது இவர்கள் இருபுறமும் கொஞ்ச லத்தீப்புக்களை இழக்க வேண்டிவரும். ஆதலால்தான் இன்றைக்கு பில் கேட்சை, பில்கிளின்ரனை தூக்கி வைத்துக் கொண்டாடுகிறார்கள். ஆனால் காலம் பொல்லாதது. எந்தக் கொம்பனையும் அது விட்டுவைப்பதில்லை. மறக்கடிக்க வைத்துவிடும். எந்தத் தெனாவெட்டும் அதன் முன் நின்றுபிடிக்காது. இவையெல்லாவற்றையும்விட மறதி என்கிற ஒன்றைத் தந்த அல்லாஹ் பெரியவன்தானே'

"தம்பி, அந்தா வாறாங்க - அந்த ஓட்டோதான் தம்பி." கடைக்காரனின் கூற்றால் சிந்தனை தடைப்பட்டது ஜிப்ரிக்கு. கடைக்காரருக்கு நன்றி சொன்னான். சுல்பிகா முதலில் இறங்க பிள்ளைகளிரு வரும் ஓட்டோவிலிருந்து அடுத்து வெளியாகினர். சுல்பிகா வெள்ளை நிற 'ஒயில்' சாறியிலிருந்தார். பிள்ளைகள் வெள்ளை உடுப்பில் சந்தோசமாக வீட்டினுள் ஓடிப் போயினர். சுல்பிகாவின் முகம் புன்னகையுடன் இருந்தது. ஆனால் ஜிப்ரிக்கு அந்தக் கண்களினூடான நிரந்தர சோகம் தெரியாமலுமில்லை. ஜிப்ரி முன்னேறினான்.

இப்போதே வெள்ளை உடுக்கிறதெண்டால் தெரிந்து போயிற்றா? எப்படி? இருக்காதே! கடத்தப்பட்ட தினமே மரண தினமாகிப் போனதுவா? சுடப்பட்ட தினத்தை சொல்லி ஆகவேண்டுமே...

சே... சொல்வதனால் என்ன பலன் ஆகிவிடப்போகிறது. ஏற்கனவே ஓதப்பட்ட (குர்ஆன் ஓதி, துஆச் செய்தல்) ஏழாம், முப்பதாம் கத்தங்களை மீளச் செய்ய உதவும். இன்று மூன்றாம் கத்தம் ஓதவேண்டியிருக்கும்.ஆனால்... சுல்பிகாவும், பிள்ளைகளும் மறந்து விட்ட ரணத்தை கிழறுவதாகாதா? தன்னைக் கண்டு, விஷயம் தெரிந்ததும் ஆறுதலா கிடைக்கப்போகிறது? மீண்டுமொரு முறை இன்றைய தினத்தில் மௌலவியைக் கொலை செய்து-சுல்பிகாவைச் சீகுலைய வைக்கப் போகிறோமே! ம்ஹீம் அவர்களின் மறதி வளரட்டும். வாழ்க மறதிக்குணம்...

ஜிப்ரி சுல்பிகாவின் வீட்டையும் தாண்டி நடந்தான். இனி அவனுக்கு அங்கு எந்த வேலையுமில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்ஜீரியாவின் அரசியல் பதட்டமானது, இது சுதந்திரமடைந்த தினத்திலிருந்து மதக்கொலைகளும் அரச கொலைகளும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மதத்தின் பெயரால் கடந்த காலங்களில் மிகவும் மோசமாக நடத்தப்பட்ட கொலைகளில் பலவற்றின் பின்னே இராணுவம் இருந்துள்ளது என பல தகவல்கள் கிடைத்துள்ளன. அல்ஜீரியாவின் இஸ்லாமிய வாழ்வியல் கட்டமைப்பை உடைக்க அமெரிக்க-ஐரோப்பிய அரசுகள் இத்தகைய கொலைகளை ஊக்குவிக்கின்றன எனக் கருதவும் வாய்ப்புள்ளது. கலைஞர்கள் பலர் இங்கே கொல்லப்பட்டுள்ளனர். மக்கள் பாடகரான Cheb Hasni 29 செப்டம்பர் 1994ல் கொல்லப்பட்டார். இவர் செய்த தவறு என்ன? மது பற்றிப் பாடியதா? பாலியல் பற்றிப் பாடியதா? இவரது பாடலைக் கேட்டு இளம் சந்ததி ஆடியதா? இவைகள் தப்பாக இருக்குமாயின் பாரசீகக் கவிஞன் ஓமார் கய்யாம் ஏன் கொல்லப்படாது விட்டார் எனவும் நாம் கேள்வி கேட்கலாம். Hasni இறந்த அதே ஆண்டில் ஓர் கொமாண்டோவினால் கடத்தப்பட்ட இன்னொரு அல்ஜீரியப் பாடகரான Lounés Mathoub 25 ஜுன் 1998இல் கொல்லப்பட்டார். இவர் ஓர் அரசியல் பாடகராக அறியப்பட்ட போதும், கொலை செய்யப்படுவதற்கு முன்னர் வெளிவரவிருந்த இவரது அல்பத்தில் உள்ள ஓர் பாடல் அல்ஜீரிய தேசிய கீதத்தை மாற்றி எழுதியதாகும். அரசியல் அவதானிகள் இவர் கொல்லப்பட்டதற்கான வலுவான காரணமாக இந்த "புதிய தேசிய கீதத்தை"க் கருதுகின்றனர். Lounes அல்ஜீரியாவில் பல நூற்றாண்டுகளாக தடைசெய்யப்பட்டிருந்த கபிலிய மொழியில் பாடியவர் என்பது குறிபிடத்தக்கது.





Cheb Hasni

மிரட்டல்களுக்கு பயப்படாத கலைஞர்கள் அல்ஜீரியாவில் உள்ளனர். கபிலிய கலாச்சாரத்திற்காகப் போராடுவதும், சர்வதேசரீதியாக அறியப்பட்டவரும், 1975ஆம் ஆண்டிலிருந்து பிரான்சில் வாழ்பவருமான Idir இன்று வரை கபில் மொழியிலேயே பாடி வருகின்றார். இவரது இசை நிகழ்ச்சி ஒன்று முடிந்த தடவையில், இஸ்லாமிய ஆமிக்குழு (GIA)வின் அங்கத்துவர் ஒருவர் பின்வருமாறு மிரட்டியுள்ளார்: "அனைத்து உரைகளைக் காட்டிலும், நீ எங்களைப் பொறுத்தமட்டில் மிகவும் அபாயகரமானவன். ஏனெனில் நீ உணர்வுகளைப் பாடுகின்றாய்".



Idir

இந்த மூவரைக் காட்டிலும் மிகவும் பழையவர் பாடகி WARD. அரபு உலகின் கனவுப் பாடகி. பெய்ரூத்தில் 1958 இல் அகதியாக இருந்தவர். அராபிய ஒருமைத்துவம், அரபுப் பெண்களின் நிலைமைகள் மீது பாடிவரும் இவர் 1963இல்தான் தனது அகதி வாழ்க்கைக்கு முற்றுப் புள்ளி வைத்து அல்ஜீரியா திரும்பியவர். அல்ஜீரிய தேசியவாதத்தின் ஓர் நட்சத்திரமாக இவர் கருதப்படுகின்றார்.



WARDA



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்ஜீரிய எழுத்தாளியாக அறியப்பட்ட Yasmina Khadna ஓர் ஆணின் புனைபெயர் என்பது 1999இலேயே தெரியவந்தது. சொந்தப் பெயர் Mohamed Moulessehoul. தனது புனைபெயரின் புதிரை அவிழ்த்து விட்ட வேளையில்தான், தனது உண்மையான அடையாளத்தையும் உலகிற்கு அறிவித்தார். ஆம், இவர் அல்ஜீரிய இராணுவத்தில் உயர் அதிகாரியாக இருந்தவர். இன்று இந்த இராணுவப் பதவிக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு, இலக்கியத்தை தனது வாழ்க்கையாக்கிக் கொண்ட இவர் "நான் எழுதுவதற்காகப் பிறந்தவன்" எனச் சொல்கின்றார். பிரெஞ்சுப் பத்திரிகை ஒன்றுக்கு இவர் வழங்கிய பேட்டியிலிருந்து சில தகவல்கள்:



**கேள்வி: ஏன் நீங்கள் பிரெஞ்சில் எழுதுவதைத் தெரிவாகக் கொண்டீர்கள்?**

பதில்: இது எனது தெரிவு அல்ல. நான் எழுத விரும்பினேன். ரஷ்ய, சீன அல்லது அரபு மொழியாக இருந்து விட்டுப் போகலாம், ஆனால் எழுதுவதே எனது இலக்காக இருந்தது. தொடக்கத்தில் அராபில் எழுதினேன். எனது அரபு மொழி ஆசிரியர் என்னை விழுங்கிவிட்டார். பின்னர் பிரெஞ்சில் எழுத வெளிக்கிட்டேன். எனது பிரெஞ்சு ஆசிரியர் என்னை ஊக்குவித்தார்.

கேள்வி: ஏன் இந்தப் புனைபெயர் தேவை உங்களுக்கு வந்தது?

பதில்: 1989 இல், அல்ஜீரிய இராணுவத்துள் ஓர் எழுத்தாளன் இருப்பது இராணுவ உயர் அதிகாரிகளுக்கு இடைஞ்சல் தருவதாக இருந்தது. நானோ தடைசெய்யப்படக்கூடியன எனக்கருதப்படக்கூடிய புத்தகங்களை எழுதவில்லை, ஆனால் இராணுவ அனுமதியைக் கேட்காமல் ஓர் இலக்கியப் போட்டியில் பங்கு பற்றினேன். பாதுகாப்பு அமைச்சின் சுற்றறிக்கை ஒன்று இராணுவ எழுத்தாளர்களின் எழுத்துகள் யாவும் ஓர் இராணுவத் தடைக் கொமிசனுக்குள் சென்று வரவேண்டும் என விதி செய்தது. இந்த சுற்றறிக்கை என்னையே கருத்தில் கொண்டிருந்தது. இந்த விதியை ஏற்றுக் கொள்ளுதலை என்னால் நினைக்கவே முடியாமல் இருந்தது. ஓர் கொமிசனுக்கு முன்னால் எனது படைப்பைப் பரிசோதனைக்குக் கொடுத்தலை விடுத்து, எழுதுவதை நிறுத்துதல் என முடிவெடுத்தேன். இந்த முடிவு என்னைப் பைத்திய நிலைக்குள் கொண்டு வந்தது. இந்தக் கட்டத்தில்தான் என் மனைவி என்னிடம் ஓர் புனைபெயரில் எழுதலாம் என அறிவுரை தந்து இப்படிச் சொன்னாள்: "நீ உனது பெயரை எனக்குத் தந்தாய் வாழ்விற்காக, நான் எனது பெயரைத் தருகின்றேன்...!" Yasmina Khadna அவளது பெயர். இந்தப் பெயருடன் ஒழிந்திருந்து, ஓர் இனம் தெரியாத வேகத்தில் மூன்று நூல்களை எழுதினேன்.

கேள்வி: வெறுப்புக்கு எதிரான சுவரா இலக்கியம்?

பதில்: எழுத்தாளர்கள், தீர்க்கதரிசிகள், எதனையும் முனைப்பாகப் பார்ப்பவர்கள், மனித இனத்தைக் காப்பவர்கள். இவர்கள் உலகை மொழிபெயர்ப்பவர்கள், இதனை மனிதத்துவப் படுத்துபவர்கள். மிருகத்தனத்தை எதிர்த்து மனிதத்தனத்துக்கான சேவையில் ஈடுபடுவதே எனது இலக்காக எப்போதும் இருந்தது.

Notes-By Mithila



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எங்களைக் கேட்டுக் கொண்டிருக்கும் இந்த மதில்கள்" சிறுகதைத் தொகுதியை பாரசீக மொழியில் எழுதிய ஆப்கானிஸ்தான் எழுத்தாளியான Spôjmaï Zariâb பிரான்ஸில் அகதியாக 1991இல் இருந்து வாழ்கின்றார். ஆப்கானிஸ்தானின் மிகப்பெரும் எழுத்தாளிகளில் ஒருவராக இவர் கருதப்படுகின்றார். முதலாவது தடவையாக இவரது எழுத்துகள் பிரெஞ்சு மொழியில் 1988இல் இருந்து மொழிபெயர்க்கப்பட்டு வருகின்றன. அரசியல் அடக்குமுறை, போர் இவைகளுக்கு எதிரான எழுத்துகளே இவரது பேனா முனையிலிருந்து பிறப்பன.

பெண்கள் அடக்கு முறையின் சம்பியனாகத் தன்னைக் காட்டிவரும் ஆப்கானிஸ்தானில் இருந்து பெண்கள் சுயமாக எழுதமுடியும் எனக் கருதமுடியாது. இவர்கள் தங்களைப் பற்றியும், தமது தேசத்தில் நடக்கும் கொடுமைகளைப் பற்றியும் எழுதப் புகலிடத்தைத் தெரிவு செய்தல் தவிர்க்க முடியாத ஒன்றாகின்றது.

Spôjmai Zaniâb இன் எழுத்துக்கள் எவ்வாறு இராணுவத்தால் பெண்கள் கொடுமைக் குள்ளாக்கப்பட்டனர் என்பதைத் துணிச்சலுடன் வரைகின்றன. இதேவேளையில் அடையாள அட்டையைப் பெற பெண்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளின் பலகட்டங்களைப் பச்சையாகக் காட்டுகின்றன. "புகலிடம் என்பது திடீர் வீழ்ச்சியும், கோரமானதுமாகும். இதனால் ஏற்படும் அதிர்ச்சி மிகப்பெரியது இந்தச் தலைச்சுற்றில் இருந்து மீள நிறைய ஆண்டுகள் தேவை" என்கின்றார் Zariâb.



இஸாபெல் அட்ஜானி. உலகப் புகழ்பெற்ற பிரெஞ்சு நடிகை. சினிமாவிற்காக நடிப்பதைக் காட்டிலும் நாடகத்தில் நடிப்பதிலே ஓர் ஆன்மதிருப்தி உள்ளதெனக் கருதுபவர், இதனைச் செயலிலும் காட்டுபவர். தகப்பன் அல்ஜீரியாவின் கபிலி இனம், தாய் ஜேர்மனி. இந்த இரண்டு இனக் கலாச்சாரச் சேர்க்கையினை ஓர் சுயபார்வைக்குள் உள்ளாக்கி தன்னை ஓர் விதிவிலக்கான நடிகையாக்கிக் கொண்டுள்ளார். இயக்குனர்கள் அட்ஜானியின் ஆற்றலைப் பயன்படுத்தினாலும், அட்ஜானியோ பாத்திரப் பொருத்தம் பார்த்தே தனது ஒப்புதலைக் கொடுப்பதுண்டு. அட்ஜானியின் ஆற்றலை உடைக்கும் நோக்கில் இவருக்கு Aids வருத்தம் உள்ளது எனக்கட்டப்பட்ட கதை பொடிப் பொடியாகி விட்டது. "நான் இடது சாரியும் இல்லை, வலது சாரியும் இல்லை" எனக் கூறும் அட்ஜானி சமூக நெருக்கடிகளைக் கண்டு விலகிப் போகின்றவர் அல்லர். வெளிநாட்டவர் மீதான அடக்குமுறைக்கு எதிரான பெட்டிஸங்களில் இவரது கையெழுத்து அண்மைக்காலங்களில் இடம் பெறத்தவறியதில்லை. ஜூன் 2000இல் அல்ஜீரிய ஜனாதிபதி புற்பிளிக்காவிற்கு பிரெஞ்சு ஜனாதிபதி மாளிகையில் ஓர் வரவேற்புக் கொடுக்கப்பட்டபோது அட்ஜானிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இந்த அழைப்பை மறுத்து இவர் கொடுத்த விளக்கம்: "என்னை அழைத்ததென்பதே ஓர் மோசமான விஷயம். கடந்தகாலத்தில் தனது தேசத்தில் நடந்த கொடுமைகளையும், இராணுவத்தின் குற்றச் செயல்களையும், நீதியின்மையையும் மறைக்க முயற்சிக்கும் ஓர் ஜனாதிபதிக்கு கொடுக்கப்படும் வரவேற்பில் என்னால் எப்படிக் கலந்து கொள்ள முடியும்? எத்தகைய கொடூரமான அழைப்பு! சதிகாரியாக இருக்க எனக்கு விருப்பமில்லை."

"இதே வேளையில் ரஷ்யப் பிரதமர் விலாமிடிர் பூத்தின் உங்களது நாடகம் ஒன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தால் நீங்கள் அவரை வரவேற்றிருப்பீர்களா?" எனப் பத்திரிகையாளர் ஒருவர் அட்ஜானியிடம் கேட்டபோது கொடுக்கப்பட்ட பதில்: "மாஸ்கோவில் தத்துவஞானி குளுக்ஸ்மான் செய்தது போல செய்திருப்பேன். அதாவது, செச்செனியில் கொல்லப்பட்டவர்களுக்காக ஒரு நிமிட அஞ்சலி செய்யவேண்டும் எனக் கேட்டிருப்பேன். அதன்பின், பூட்டின் நாடக அரங்கினை விட்டுவெளியேறியபின்னரே என்னால் நடிக்கமுடியும் என அறிவித்திருப்பேன்."

பிரான்ஸின் சேரிப்பகுதி ஒன்றில் பிறந்த அட்ஜானி கம்யூனிஸக் குடும்பம் ஒன்றினால் புடம் போடப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ்ச்சூழலில் இஸ்லாம்:
# சூபிகள் குறித்து தொடரும் உரையாடல்

ஹெச்.ஜி.ரசூல்

சூபிகள்:-

இஸ்லாமிய மெய் ஞானிகளாக, இஸ்லாமிய சித்தர்களாக அடையாளப்படுத் தப்படுகின்றனர். இஸ்லாமிய ஆன்மீக ஞானம் என்கிற வகையில் இஸ்லாத்தின் முக்கியதொரு சமயப்போக்காக இது வரலாறெங்கும் நிகழ்ந் திருக்கிறது. நபிகள் நாயகம் இஸ்லாமியத்தை பிரச்சாரம் செய்து நடைமுறைப்படுத்திய மக்கா, மதினா அரேபிய பிரதேசங்களில் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் நபிகள் உற்ற ஸகாபாக்கள்- அஸ்ஹா புஸ்ஸுபா என்னும் திண்ணைத் தோழர்களின் அறிமுகத்தி லிருந்தே இதற்கான துவக்கக் கூறுகள் தென்படுகின்றன.

நபிகள் நாயகத் தின் மறைவுக்குப் பின்னரும், இமாம்கள் அபூபக்கர், உமர், உஸ்மான், அலி ஆகிய கலீ பாக்களின் ஆட்சிக்குப் பின்னரும் இஸ்லாம் பேசிய ஒற்றுமை உணர்வு, சமாதான சகவாழ்வு, வறியவருக்கு உதவுதல் உள்ளிட்ட மனிதப் பண்புகளின் சிதைவாக்கம் நிகழ்வுறத் துவங்கியது. உமய்யாக்கள், அபாசித்துகள் ஆட்சிக்காலத்தில் இதன் கோரம் விரிவானபோது இஸ்லாம் முன்வைத்த எளிமை சார்ந்த மனிதநேயமிக்க வாழ்வை மீட்டுருவாக்கம் செய்யும் நோக்கில் மதஞானிகள் சிந்திக்கவும், செயல்படவும் துவங்கினர்.

> சூபித்துவத்தை தத்துவ சொல்லாடல் களத்தில் வைத்து ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக மட்டும் பார்த்து விடக்கூடாது. சூபிகளுக்கு இது தவிர பிற்சமூக கலாச்சார பரிமாணங்களும் உண்டு.

ஆடம்பரத்திற்கு எதிராக எளிமை, பொய்மைக்கு எதிராக தூய்மை, சண்டைச் சச்சரவுகளுக்கெதிராக சமா தானம், ஏற்றத்தாழ்வுகளுக் கெதிராக சமத்துவம் என்கிற அடிப்படை உணர்வுகளுடன் இஸ்லாமிய ஆத்மஞான சிந்தனையை செலவிட ஆரம்பித்தனர்.

உலக வாழ்வை இஸ்லாமியத்தை முரண் பாடுகளுள்ள நடைமுறைத் தத்துவமாக ஆக்கப்பட்டதை சகிக்காமல் இஸ்லாமிய ஞானத்தை இந்த நடைமுறை இருப்பியல் வாழ்விற்கு அப்பால் தேடினர். முரணற்ற, நிரந்தரத் தன்மை கொண்ட உண்மையை எதிர்நோக்கினர். புலன் உணர்வு களாலும் அறிவாலும் உணர முடியாத அந்த உண்மையைத் (இறைவனை) தேடி தியானம், தவம் செய்ய முயன்றனர்.

இத்தகைய அனு பூதவியல் தன்மை கொண்ட இறைவனை அறிதலுக்கு, மனதை தூய்மைப்படுத்துதல் என்கிற உபாயத்தை முன்வைத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தனர். மனம் சார்ந்த எல்லாவிதமான வாழ்வியல் பின்னணி கொண்ட வஞ்சகம், ஏமாற்று, பொறாமை, கோபம், ஆணவம், மனோஇச்சை உள்ளிட்ட உணர்வுகளுக்கு அப்பால் பரிபக்குவ நல் உணர்வுகளால் சூழப்பட்ட தூயபேருண்மையை தரிசிப்பது என்பதான நடவடிக்கையை கோட்பாட்டுருவமாக்கினர். இதற்கென உடல் பற்றிய ஞானத்தை அறிய முற்பட்டனர். உயிரைக்காக்க உடலை வலுப்படுத்துதல், பாதுகாத்தல், மரணமில்லா பெருவாழ்வை பற்றி சிந்தித்தல் என்பதாகவும் இது நிகழ்ந்தது.

«அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் தெரியும்»,

«தன்னை அறிந்தவனே இறைவனை அறிந்தவன்».

«நல்ல மூமீனின் இதயம் இறைவன் உட்கார்ந்திருக்கும் அர்ஷ்»

(நபிமொழி) என்பதான கருத்துருவங்கள் பேசவும், மீட்டுருவாக்கமும் செய்யப் பட்டன. சூபி என்ற அரபுச் சொல் தூய்மை என்ற பொருள் கொண்ட ஸ.்.பா என்ற மூலச் சொல்லி லிருந்து பிறந்தது என்றும், அணி-வரிசை என்னும் பொருள் கொண்ட ஸ.்.ப் என்ற மூலத்திலிருந்து உருவானது என்ற கருத்தும் உண்டு. சூபி என்ற சொல்லை சோபோஸ் என்ற கிரேக்கச் சொல்லுடன் இணைத்து அறிஞன் என்றும் பொருள் கொடுப்பர். சூபி என்றால் அரபில் முரட்டுக் கம்பளி என்று அர்த்தம். ஆடம்பர வாழ்வை துறந்து மனோ இச்சைகளை அடக்கி எளியவாழ்வின் சின்னமாக கம்பளியை விரும்பி அணிந்து கொண்டவர்கள் என்பதும் இதன் கண்ணோட்டம்.

உலகை, உயிரை, அறிவை இறைவனை புரிந்து கொள்ள முயன்ற ஆத்ம ஞானிகளின் இறையியல் தத்துவமான சூபிசம் பல்வேறு நாடுகளின், சூழல்களின் தன்மைகளைக் கொண்டு முகிழ்த்தன. எகிப்தில் துன்னுன் மிஸ்ரி (796-862) பாரசீகத்தில் பாயஜீது பிஸ்தாமி ஈரானின் மன்சூர் ஹல்லஜ் (கி.பி.858-922) இமாம் கஸ்ஸாலி (கி.பி. 1058-1111) ஈராக் பக்தாதின் ஜீனைத் பகுதாதி, ஸ்பெயினில் முஹியத்தீன் இப்னுஅல் அரபி (கி.பி.1165) அப்துல் காதிர்ஜீலானி (1078-1166) காஜா முகீனுதீன் சிஷ்தி, (1141-1236) ஷெய்கு ஸிஹாபுத்தீன் ஸுஃக்ரவர்த்தி, மௌலவி ஜலாலுத்தீன் ரூமி (1207-1273) என உலக அளவில் சூபி ஞானிகள் முக்கியத்துவம் பெறத்துவங்கினர். இந்திய மண்ணில் டில்லி சுல்தான்களின் ஆட்சிக்குப்பின்பு அலிய் யுப்னுல் ஹஜ்வீரி, பரீதுத்தீன் கஞ்சேஷகர்(1175-1265) அலாவுத்தௌலா சிம்னானி (1261-1336), ஷேக் ஸிஹாபுத்தீன், ஷேக்நிஜாமுதீன் அவுலியா (1325 மறைவு) ஷாஒலியுல்லா, ஷராபுத்தீன் அகமது மனேரி உட்பட முக்கியமான மெய்ஞானிகளின் பங்களிப்பு முக்கியமானதாக அமைந்தது.

சூபிச் சிந்தனைகளின் பல்வேறு தத்துவப் போக்குகள் பின்பற்றுதல்கள் நிகழ்ந்ததன் விளைவாக சிஸ்தியா (அஜ்மீர்) காதிரிய்யா, சுக்ரவர்த்தியா, (பக்தாத்) நக்ஷபந்தியா, ஷாதிலிய்யா, (வடஆப்ரிக்கா-தூனிஸ்) உள்ளிட்ட ஞான வழி மார்க்க பிரிவுகள் (தரீகாக்கள்) உருவாகின.

இஸ்லாமிய சூபிச சிந்தனைப் போக்கு பல்வேறு கருத்துப்போக்குகளை உள்வாங்கிய, முன்நிறுத்திய தத்துவஇயலாக பரிணமிக்கிறது.

இறைவன் ஒருவன் என்பதை ஏற்றுக் கொண்ட சூபிகள் இறைவனை அறிதல் குறித்த பாதையைப் பற்றி வித்தியாசமான கருது கோள்களைக் கொண்டிருந்தனர். «வஹ்தத்துல் 'ஷுஹூத்» என்னும் «ஏகஉள்ளமை» உடையவன் இறைவன் மட்டும்தான். இறைவன்வேறு, படைப்பினங்கள்வேறு, இறைவன் இறைவன் தான், நீ நீதான், நீ-இறைவனில் ஒன்றாக கலக்க முடியாது. இறை நெருக்கத்தை உருவாக்கிக் கொள்ளலாம் என்பது ஜீனைத் பக்தாதி, முஹியத்தீன் இபுனுல்அரபி, அலிய்யுப்னுல் ஹஜ்வீரி உள்ளிட்ட மெய்ஞானிகளின் கருத்துநிலை.

இறைவனை படைப்பினங்களில் உணரலாம், அவனிலிருந்தே எல்லாமும் வெளிப்படுகிறது. இறைவனை தெரிந்து கொள்ளும் வழி என்பது அவனில் ஒன்றி விடுவதே, உலகியல் உணர்வை விட்டு வெளியேறி விடுதலை பெறும் அகமே, நிரந்தர இன்பத்தில் திளைக்கும், «தான்» என்பதும் உள்ளமை உடையது, இறைவனில் ஒன்றும் போது «கைரியத்» என்னும் உருவெளித்தோற்றம் பார்வையை விட்டு விலக, ஐனியத் என்னும் அசல்மூலத்தில் மூழ்கி அத்தன்மைகள் தானில் தங்கிவிடும், «தன் உள்ளமையில் இறைவனின் உள்ளமை பிரதிபலிக்கிறது» என்பது வஹ்தத்துல் உஜூத் என்னும் பிறிதொரு கருத்து நிலையாகும். இஸ்லாமிய மரபு வழி உலமாக்கள் இக்கருத்துக்களை தீவிரமாக எதிர்த்ததின் விளைவாக «அனல்ஹக்கு», «நானே உண்மை» (நானேஇறைவன்) என்பதாக உச்சநிலைக்கு சென்று பேசிய சூபிமன்சூர் ஹல்லாஜ் ரகுமத்துல்லா கொல்லப்பட்டார். பல சூபிகள் நெருக்கடிக்கு ஆளாகினர்.

சூபிகள் புறவடிவ நிலைபெற்ற வணக்கமுறைகளைத் தாண்டி, அகவணக்க முறையால் இறைவனை உணரலாம் என்கிற வகையிலும் பேசினர். ஷரீஅத் என்னும் புறவடிவ ஒழுங்குகளிலிருந்து அடுத்தகட்ட நிலைகளாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மனதால் இறைவனை தியானிக்கிறநெறியினை தரீகத், ஹகீகத், மஃரிபத் என்கிற வழிமுறைகளாக முன்வைத்தனர்.

இந்த அடிப்படையிலான மெய்ஞானப் படித்தரங்கள் கீழ்க்கண்டவாறு பகுக்கப்பட்டது.

உலகியல் ரீதியாக, புறவடிவத்தில் நிகழும் உடல் ரீதியான இஸ்லாமிய அடிப்படை வணக்கநெறிகள் «ஷரீஅத்» - இறைநெருக்கம் உருவாக்க புலன்களை கட்டுப்படுத்தி திக்றுகள், தஸ்பீகுகள் (இறைநாமங்கள் உச்சரித்தல்) வழி தவநிலையில் அகவணக்கம் புரிதல் «தரீகத்» - சித்தநிலையில் ஆன்மாவைக் கொண்டு இறையின் தெளிவை உண்மையை உணர்தல் «ஹகீகத்»- பேசா அனுபூதி நிலையில் இறைதரிசனத்தை பெறுதலும், «பனா» வாகி இறைவனில் கலத்தல் «மஅரிபத்» என்பதாக படிநிலைகள் கட்டமைக்கப்பட்டன.

இவற்றில் தரீகத் நிலையில் ஷரீஅத் விடுபட்டுவிடும் என்கிற நிலைப்பாடானது, இஸ்லாமியர்களுக்கு வரையறுத்து கட்டாய மாக்கப்பட்ட ஒருநாளைக்கு ஐந்து தடவை «தொழுகை»யின் மூலமாக இறைவனை வணங்கவேண்டும் என்கிற நிறுவப்பட்ட கடமையை மறுத்துவிடுகிறது. எனவே மரபு வழி இஸ்லாமிய சிந்தனைக்கும், சூபிகளின் சிந்தனைக்கும் இடையே முரண் உருவாகியது. இதைத்தவிர்க்கவே சூபிஞானிகளில் சிலர் ஷரீஅத்-தரீகத் இரண்டிற்குமிடையே தரீகத் நிலையிலும் ஷரீஅத் விடுபடாது எனவும் சில இணைப்பு நிலைகளை மேற்கொள்ளவும் முயற்சித்தனர்.

இப்படியாக இறையியல் தத்துவ அடிப்படையில் சூபிசம் பொதுவாக விளக்கிக் காட்டப்படுகிறது. சூபித்துவத்தை தத்துவ சொல்லாடல் களத்தில் வைத்து ஒற்றைப் பரிமாணம் கொண்டதாக மட்டும் பார்த்து விடக்கூடாது. சூபிகளுக்கு இதுதவிர பிறசமூக கலாச்சார பரிமாணங்களும் உண்டு.

2. இஸ்லாமிய சிந்தனையுலகம் மொழியின் மூலமாகவும் கட்டமைக்கப் பட்டிருக்கிறது. சூபிக்கவிஞர்கள் தத்தம் சிந்தனைகளை எண்ணற்ற பாடல் தொகுப்புகளாக தமிழுக்கு வழங்கியுள்ளனர். இஸ்லாமிய இலக்கியமரபில் சுட்டிக்காட்டப்படுகிற பெருங் காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் தவிர சூபிச இலக்கியங்கள் தமிழ் இஸ்லாமிய மக்களால் இன்றளவும் அக்கவிஞர்களின் சமாதிகளிலும் தர்காக்களிலும், நினைவூட்டப்படுகின்றன. குறிப்பிட்ட வட்டாரத்தில் இலங்குகின்ற சூபிகளின் பாடல்களை அம்மக்களின் பிறப்பு, இறப்பு மற்றும் விழாக்கால விஷேச சமயங்களில் வீடுகளிலும், கூட்டிசையாகப் பாடப்படுகிற நிகழ்வும்கூட நடைபெறுகிறது.

சூபிகளின் பாடல்களை ஞானப்பாடல்களாகப் போற்றி புனிதம் ஏற்றப்பட்ட நிலையில் அப்பாடல்களில் வெளிப்படும் மொழிமரபின் புதுப்பாங்கு குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தில் இஸ்லாமியர்கள் குடியேறிய போது தமிழ்-அரேபிய பண்பாட்டு கலப்பாலும், உறவாலும் மொழிரீதியான சில மாற்றங்கள் நடந்தேறியது. அவற்றில் ஒன்று தமிழ் அரபு மரபு, இதில் தமிழின் உச்சரிப்பும் வாக்கியமும் அரபுலிபியில் எழுதப்பட்டது. பின்பு அரபுத்தமிழ் மரபு உருவானது. இதில் அரபு உச்சரிப்பும், வாக்கியமும் தமிழில் எழுதப்பட்டது. சூபி பாடல்களின் மொழிமரபில் தமிழ் மரபு சார்ந்த பாவடிவங்கள் விருத்தங்களாக, வெண்பாக்களாக இன்னும் பலப்பலவாக பயன்பட்டிருக்கும் அதேவேளையில் «அரபுத்தமிழ்» என்கிற ஒரு புதுவகை கிளை மொழிக்களம் உருவாகியது. இன்றும் தமிழ் முஸ்லிம்களின் நடைமுறை வாழ்க்கையிலும் இத்தகைய மொழிப்பாங்கு இடம் பெற்றிருப்பதைக் குறிப்பிடவேண்டும். சூபிகளின் பாடல்கள் இந்தவகை மொழிக்களத்தை மிக லாவகமாகவும், இஸ்லாமியக் கருத்துக்களை மக்கள் மத்தியில் எடுத்துச் செல்லும் ஊடகமாகவும், தமிழ்-இஸ்லாம் இணைவு நிலையின் முக்கியப் புள்ளியாகவும் நாம் கவனிக்க வேண்டும்.

மனிதனின் ஆன்மாவை, அகத்தை தூய்மைப்படுத்தி, புறஉலகின் தீமை, துன்பங்களிலிருந்து விலக்கி வைத்து இறையை உணரமுயலும் ஞானஒழுங்குகளின் தொகுப்பே சூபிச பாடல்களாக படைக்கப்பட்டுள்ளன.

இறைக்கும், மனிதனுக்குமான உன்னத உணர்வுப் பரிமாற்றத்தின் தடங்களை நோக்கியப் பயணமாக அமைவதற்காக «தன்னை வருத்துதல்» என்கிற சுயம்மிக்கும் பண்பையும் இஸ்லாமிய

**உலக வாழ்வை இஸ்லாமியத்தை முரண் பாடுகளுள்ள நடைமுறைத் தத்துவமாக ஆக்கப்பட்டதை சகிக்காமல் இஸ்லாமிய ஞானத்தை இந்த நடைமுறை இருப்பியல் வாழ்விற்கு அப்பால் தேடினர்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மெய்ஞானிகள் வலியுறுத்தியுள்ளார்கள். இத்தகைய சூபியிச மெய்ஞான ஆழங்களை வெளிப்படுத்தும் மெய்ஞானிகளின் பாடல்கள் பலப்பல.

தமிழக மெய்ஞான இலக்கியப் பங்களிப்பில் முக்கிய இடம் வகிப்பவர் தவஞானி தக்கலை பீர்முகம்மது ஒலியுல்லா அவர்கள் 16ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் வாழ்ந்த இவர்தம் பெரும்பாலான படைப்புகளும் «ஞான» என்ற அடைமொழியைச் சுமந்தே உள்ளன. ஞானப்புகழ்ச்சி, ஞானமணிமாலை, ஞானப்பால், ஞானக்குறம், ஞானரத்தினக்குறவஞ்சி, ஞானமுச்சுடர்ப்பதிகங்கள், ஞானவிகடசமர்த்து, என இந்த மெய்ஞான இலக்கியங்கள் தொடர்கின்றன.

கடையநல்லூர் ஷெய்கு உதுமான் ஒலியுல்லாவின் ஞான இலக்கியங்கள் மெய்ஞானக்கும்மி, வண்ணப்பாக்கள், கீர்த்தனைகள் முதலியவைகளாகும். மேலப்பாளையம் முகைதீன் பஷீர் ஒலியுல்லா எழுதிய மெய்ஞான சதகம், மெய்ஞான ஆனந்தக்களிப்பு உள்ளிட்ட இலக்கியங்கள் குறிப்பிடத் தகுந்தவையாகும்.

கோட்டாறு ஞானியார் சாகிபு ஒலியுல்லா என்று அழைக்கப்பட்ட ஷெய்கு முகியிதீன் மலுக்கு முதலியார் அவர்களின் இலக்கியங்களும் வெளிப்படுத்துகின்றன. ஞானகாரணம், ஞான தோத்திரம், ஞானப்ப:. றொடை, ஞானஅம்மானை, ஞானக்குருவடிவிளக்கம், ஞானத்திருப்புகழ், ஞானக்கும்மி, ஞானஅந்தாதி என இந்த ஞான இலக்கியங்களின் வரிசைகள் தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

தொண்டியில் பிறந்து ஞான இலக்கியத்திற்கும், இஸ்லாமிய மக்களின் வாய்மொழிப் பாடல்களுக்குமான வடிவத்திலும் மெய்ஞானப் பாடல்களைப் படைத்தளித்த குணங்குடி மஸ்தான் சாகிபு என்னும் சுல்தான் அப்துல் காதர் பாடிய முகியிதீன் சதகம், அகத்தீர் சதகம், கண்ணிப் பாடல்கள், ஆனந்த களிப்பு மற்றும் கீர்த்தனைகள் இவற்றில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த வரிசையில் மெய்ஞானப் பாடல்களின் தூதுவர்களாகத்திகழ்ந்த கோட்டாறு ஞானி செய்குபாவா செய்கு சுலைமான் காதிரி, சூரங்குடி ஷெய்கு தர்வேஸ் மீரானொலி, மேலப்பாளையம் ஷெய்கு பூஅலி ஷாஹ்மதார் ஆலிம், மெய்ஞான சொருபரான மௌனமணி மஸ்தான் என்றழைக்கப்படும் ஷெய்கு அப்துல் ஹசன், கனியாபுரம் ஷெய்கு அப்துல் காதிறு வாலைமஸ்தான், தென்காசி தந்த சூபி பெண் கவிஞர் ரசூல் பீவி, கீழக்கரை செய்யது ஆசியா உம்மா உள்ளிட்ட எண்ணற்ற ஞானஇலக்கிய படைப்பாளிகளின் மெய்ஞானப் படைப்புகள் இஸ்லாமிய தமிழிலக்கிய மெய்ஞான மரபுக்கு ஆழமும் அர்த்தமும் சேர்க்கின்றன.

இலங்கை மண்ணின் சூபிக் கவிஞர்கள் அருள்வாக்கி அப்துல்காதர், அக்குறளை இஸ்மா லெவை, புலவர் அக்கரைப் பற்று முகம்மது ஆஷிம் ஆலின்பாவலர், ஒலுவில் யூசுப்பாவலர், வேருவலை ஷெய்குமுஸ்தபா, மட்டக்களப்பு அப்துற்றஹ்மான் ஆலி, கொழும்பு ஹாஜிமுகம்மதுகாசி, மற்றும் செய்யது இப்றாஹீம் மௌலானா, செய்யது முகம்மது மௌலானா, ஹபீப் முகமது ஷேக், காலிகாதிர் சம்சுதீன், மன்சூர்அப்துல் காதிர் உள்ளிட்டவர்களின் ஞானப்படைப்பிலக்கியங்கள் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

சூபிகளின் கவிதைமொழிச் சொல் லாடல்களில் பலவும் ஒற்றை அர்த்தத்தை மீறியும், வாசகதளத்திற்கு புதிய அர்த்தங்களை உற்பத்தி செய்வதற்கான பன்முக இடைவெளிகளை உள்ளடக்கியும் இருப்பதைக் காணலாம். சூபிகள் ஒரு தீர்மானிக்கப்பட்ட அர்த்தத்தை இச்சொல்லாடல்களின் மூலமாக வெளிப்படுத்த விரும்பினார்கள் என்று உறுதியாகக் கூறமுடியாது. இறைக்கருத்தை, புகழ்ச்சியை மையமாகக் கொண்டாலும் அதைவிளக்க உருவாக்கிய பிரதிகளில் பல மையங்களுக்கு இடமளிக்கும் விதத்திலான தத்துவம், அறிவியல், உடலியல், மருத்துவயியல் என வாழ்வின் வகைப்பட்ட அறிவுத்தொகுதி உணர்வு கூட்டிணைப்பாக இடம்பெற்றும் உள்ளன.

தக்கலை பீர்முகமது சாகிபுவின் ஞானப்புகழ்ச்சி பாடல் தொகுப்பில் இடம் பெறும் ஒரு சொல்லாடலை இங்கு குறிப்பிடலாம்.

ஆறாறுக்கப்பால் அணுவணுவாய் வந்துலகில்
வேறாரு மொப்பில்லா மேலோனே

-இப்பாடலில் இடம்பெறும் «ஆறாறுக்கப்பால்» என்ற சொல்லாடல் இடமளிக்கும் பன்முகப் பொருள் கூறுகளைக் குறித்துயோசிக்கலாம். ஆறாறுக்கப்பால் என்ற குறிப்பானுக்கும் இதுசுட்டும் குறிப்பீடான கருத்துருவம் என்கிற அர்த்தத்திற்குமான உறவு என்பது தற்செயலானது. எனவேதான் பல்வித சூழல்களுக்கும் அனுபவங்களுக்கும் ஏற்ப இதன் அர்த்தங்கள் ஒத்திப்போடப்பட்டு புதிய வாசகப் பிரதிகள் உருவாகின்றன.

எல்லாங்கடந்த பேருண்மையாக உலகியல் ரீதியாக, பிரபஞ்ச அணுத்துகள்களில் இறைவனை தரிசிக்க முயலும். இக்கவிதைக் குரலில் கருத்துப் பொருள் என்கிற எதிர்வுகள் இடம்பெற்றுள்ளது. ஆறாறுக்கப்பால் என்பது இக்கருத்துருவங்கள் பற்றிய வாசிப்பை முன்நிறுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1- ஆறாறுக்கப்பால் என்பதில் வரும் «ஆறு» என்பது சரக்கலை விஞ்ஞான அடிப்படையில் உடலின் ஆறு ஆதாரங்களை குறிப்படுவதாக அர்த்தப் படுத்தலாம். உடலின் ஆறு ஆதாரங்கள் 1. மூலாதாரம் (மூலம்) 2. சுவாதிஷ்டானம் (கொப்புள்) 3. மணிபூரகம் (மேல்வயிறு) 4. அநாகதம் (நெஞ்சு) 5. விசுத்தம் (மிடறு) 6. ஆக்நேயம் (புருவநடு)

2- தமிழக சித்த மருத்துவப் பின்னணியில் அனைத்து நோய்களுக்கும் சர்வநிவாரணியாக «ஏலாதி» கருதப்படுகிறது. ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி எனும் ஆறுவகை மருந்துக்குணங்களின் சேர்க்கையின் ஆற்றலாக உருவகப்படுத்தலாம்.

3- இஸ்லாமிய தத்துவ விளக்க அடிப்படையில் «ஆறும்ஆறும்» பனிரெண்டு எனவும், «லாயிலாஹா இல்லல்லாஹு« எனவரும் இஸ்லாமிய மூலமந்திரக் கொள்கையில் எல்லாவிதமான இறைவனைத் துதிக்கின்ற திக்றுகளும், தியானமுறைகளும் உள்ளடக்கியதை மீறியது என்பதாகவும் விளக்கலாம்.

4- இஸ்லாமிய எண் கணித அடிப்படையில் ஆறு ஆறு (66) என்னும் எண் «அல்லாஹ்» என்னும் திருநாமத்தை குறிப்படுவதாகவும், இரண்டு 'லாம்' (முப்பது + முப்பது = அறுபது) ஒரு 'ஹே' (ஐந்து) 'அலிபு' (ஒன்று)-(அ+ல்லா+ஹ்) என அறுபத்தாறு ஆக அமைந் திருப்பதாகவும் கூறலாம்.

5- தமிழக தத்துவ சிந்தனை மரபின் அடிப்படையில் 'ஆறாறு'- முப்பத்தாறு தத்து வச் சிந்தனை முறைகளாகும்.

ஆத்மதத்துவம் 24, வித்தியா தத்துவம் 7, சிவத்தத்துவம் 5 என வரும் முப்பத்தாறு தத்துவச் சிந்தனைகள் கீழ்க் கண்டவாறு பகுக்கப் படுகிறது. ஆத்ம தத்துவப் பகுதிகளாக பஞ்சபூதங்கள் (நீர், நிலம், ஆகாயம், நெருப்பு, காற்று) ஞானேந்திரியங்கள் (கண், காது, மூக்கு, மெய், வாய்) கன்மேந்திரியங்கள் (வாக்கு, பாதம், பாணி, பாயு, உபத்தம்) தன்மேந்திரியங்கள் (சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம்) அந்தக் கரணங்கள் (மனம், புத்தி, அகங்காரம், குணம்) என்பதாக குறிப்பிடப்படுகின்றன. இது உடல், மனம் இரண்டையும் இணைக்கிறது.

வித்தியாதத்துவம், சக்தியின் குணங்களாக காலம், நியதி, கலை, வித்தை, அராகம், புருடன், மூலப்பிருகிரதி ஆகியவற்றை குறிப்பிடுகிறது.

சிவத்தத்துவம், மனிதனுக்குள் உறைந்து கிடக்கும் சக்திகளான சுத்தவித்தை, ஈசுரம், சகாக்கியம், விந்து, நாதம் ஆகியவற்றைப் பேசுகிறது.

உடல், உலகம், கருத்து எல்லாமும் நிலையற்றதாக, மாயையாக «தான்» உள்ளமையற்ற ஒன்றாக கருதவும் செய்கிற நிறுவப்பட்ட ஒற்றை அர்த்தத்தை மீறி வாழ்க்கை சார்ந்த பன்முக அர்த்தங்களை உருவாக்கும் விதத்தில் சூபிகளின் சொல்லாடல்களும், பிரதிகளும் அமையப் பெற்றிருப்பதை குறிப்பிடவேண்டியுள்ளது.

3. திருக்குர்ஆனில் ஆழ்ந்த அறிவும் ஞானமும், நபிமார்கள் வரலாறு பற்றிய தெளிவும், நபிகள் நாயகத்தின் வாய்மொழி, செயல்கள் சார்ந்த ஹதீசுகள், இஸ்லாமிய மரபுகள், இஸ்லாமிய பிக்ஹு சட்டங்கள் என இஸ்லாமிய சிந்தனை உலகம் விரிந்து கிடக்கிறது. இவற்றோடு தமிழ்ச் சிந்தனை மரபில் நிலைபெற்றிருந்த பல்வேறு வகைப்பட்ட சிந்தனை மரபு களையும், புராதன விஞ்ஞான அறிவின் நுட்பங்களையும் உள்வாங்கிய பேரறிஞர்களாகவும் சூபிகள் நிலைபெற்றிருந்தார்கள். அணுவிலிருந்து துவங்கி பிரபஞ்ச பொருட்களிலும், படைப்பினங் களின் நுட்பங்களிலும் இறை வனின் ஆற்றலைக் கண்டு பரவச நிலைபெறுதல் என்பது ஒருபுறம். மனிதபிறப்பு, மனித உருவின் உருவாக்கம் பற்றியும் சிந்தித்தல் என்பது உடலியல் ஞானம் பற்றிய அறிவினைத் தேடும் முயற்சிகளாக மறுபுறமும் நிலைபெற்றிருப்பதைப் பார்க்கலாம்.

இந்த உடலுக்குயிர்
வந்ததெப்படி சிங்கி - அது
தொந்தி நடுக்குழி தொப்புள்

> மனித உடம்பையே தீட்டென சொல்லி வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளிலும் மேல்கீழென பாகுபடுத்தப்பட்ட தீவிரத்தாலும், ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்கள் சூபிகளின் சகோதரத்துவ உணர்வு ததும்பிய சமயப்பிரச் சாரத்தாலும் ஈர்க்கப்பட்டு சாதீயக் கொடுமை களிலிருந்து விடுதலை பெற்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வழியடா சிங்கா
தன்னை அறியுந் தலமேது சொல்லடி சிங்கி - அது
கண்ணிடையான நடுநிலை யல்லவோ சிங்கா
(தக்கலை, பீர்முகமது சாகிபு)

சரக்கலை ஞானம் இவ்வாறே பாடல்களின் மூலமாக முக்கியமாக பேசப்படுகிறது. சரம் என்பதே சுவாசக்கலை பற்றிய விஞ்ஞானமாகும். ஒரு நிமிடத்திற்கு எத்தனை சரங்கள் ஓடுகிறது இடக்கலை, வலக்கலையில் ஓடும்சரத்தை சுழிமுனைக்கு கொண்டு நிறுத்துவது எப்படி என இக்கலையின் நுட்பங்கள் சூபிகளால் பேசப்பட்டுள்ளது.

இடதுநாசி வழியாக ஓடும் சரம் (சுவாசம்) இடகலை (சந்திரக்கலை), வலதுநாசி வழியாக ஓடும் சரம் பிங்கலை (சூரியக்கலை), நடுவில் நிற்கும் சரம் (கண்ணிடையான நடுநிலை) சுழிமுனை (அக்கினிகலை) எனவும் முக்கிய மூன்று நாடிகளைப் பற்றி சூபிகள் பேசுகின்றனர். இத்தகைய மூச்சுப் பயிற்சி மூலம் நீண்டநாள் உயிருடன் வாழும் வாய்ப்பினை உருவாக்கிக் கொள்ளவும் சூபிகள் முயன்றுள்ளனர். சந்திரக்கலை நடக்கும் போது நல்ல காரியங்களைத்துவங்கினால் (பிரிந்தவரை சேர்த்து வைக்க, விஷமிறக்க, நோய்நொடி தீர்க்க, வியாபாரம் செய்திட, குழந்தைகளுக்குப் பெயர் சூட்ட, குடித்தனம் செல்ல) அவை வெற்றியடையும் என்கிற உளவியல்சார்ந்த நம்பிக்கை தொனியை நடைமுறை அறிவின் அடிப்படையிலும் பேசுகின்றனர்.

பஞ்சபட்சிகளான மயில், காகம், வல்லூறு, ஆந்தை, சேவல் ஆகியவற்றின் பண்புகளின் அடிப்படையில் உடலியல் அறிவும், மனித எதிர்காலம் பற்றிய சிந்தனையையும் ஒப்பிட்டுச் சொல்கின்ற பஞ்சபட்சி சாஸ்திரத்தை பேசுபவர்களாகவும் சூபிகளில் ஒருசிலர் இருந்துள்ளனர். (தக்கலை பீர்முகமது சாகிபுவின் ஞானமுச்சுடர் பதிகம்)

இதுபோன்றே வர்மக்கலை விஞ் ஞானத்தின் அடிப்படைகளை தெரிந்துள்ளவர் களாகவும், போகஞானம், யோகஞானம், சித்தமருத்துவ மரபு பற்றியும் பல்வித தளங்களில் பேசுபவர்களாகவும் சூபிகள் அடையாளம் தெரிகின்றனர்.

நப்ஸ் என்னும் மனம் பற்றிய கருத்தோட்டத்தின் அணுகுமுறை கூட சூபிகளிடம் பலவாறாக விரிந்துள்ளது. ஏழுவகைத் தன்மைகள் கொண்டதாக மனத்தை பகுத்து ஆராய்கிறார்கள். நப்ஸ் அம்மாரா (தீயதை தூண்டுகிற அடங்காத ஆத்மா) நப்ஸ் லவ்வாமா (சுயபரிசோதனை செய்யும் ஆன்மா) நப்ஸ் முல்ஹிமா (நன்மையான காரியத்தை செய்யும் ஆன்மா) நப்ஸ் முத்ம இன்னா (பரிபக்குவம் பெற்ற ஆன்மா) நப்ஸ் ராளிய்யா (தனக்குத்தானே திருப்தியுறும் ஆன்மா) நப்ஸ் மரளிய்யா (இறைவனின் மனநிறைவுக்கு ஆளாகும் ஆன்மா) நப்ஸ் காமிலா (முழுமை பெற்ற இறைஞானம் பெற்ற ஆன்மா) என்பதாக இந்த கருதுகோள் முன்வைக்கப்படுகிறது.

நவீன விஞ்ஞானம் இவற்றில் பலவற்றை நிராகரிக்கக் கூடும். சிலவற்றை ஏற்கக் கூடும். இன்னும் பரிசீலிக்கப்படாதவைகளும் உண்டு. எனினும் இன்றைய விஞ்ஞானத்தின் மூலவேர்கள் அவற்றிலுண்டு. 'விஞ்ஞானம்' என்கிற அறிவுசார்ந்த வன்முறையென்னும் கருதுகோளைத்தாண்டி உளவியல் சார்ந்த வாழ்க்கை நம்பிக்கைகளும் அவற்றில் இணைந்திருப்பதைப் பார்க்கலாம்.

4. சூபிகளின் இறையியல் கருத்து தனிமைப்பட்ட, வாழ்விலிருந்து துண்டிக்கப்பட்ட ஒன்றானதுபோல் தெரிந்தாலும், அவற்றின் அடிப்படை புறவயவாழ்வில் மனிதனைச் சிறுமைப் படுத்தும் குணங்களை விட்டொழித்து அகவய உயர்பண்புகளின் உணர்வுகளால் மனத்தை தூய்மையுறச் செய்வதே ஆகும். இதன் இன்னொரு பரிமாணமாகவே மனிதகுலத்திற்குப் பணியாற்றும் பண்பினை சூபிகள் முதன்மைப்படுத்தினர். எனவே சூபிகளின் சமூக செயற்பாட்டு இயக்கம் குறித்தும் இவற்றினூடே நாம் கவனிக்க வேண்டியுள்ளது.

தமிழ்கத்தில் இஸ்லாமிய சமய பிரச்சாரம் செய்வதற்கு வந்து வாழ்ந்து மறைந்த தமீம் அன்சாரி, உக்காஸா சகாபி ஆகியோரைத் தொடர்ந்து கி.பி. 969 முதல் 1039 வரை வாழ்ந்த சையித் நத்ஹர் ஷாஹ் கி.பி 13ம் நூற்றாண்டில்எகிப்திலிருந்து புறப்பட்டு வந்த சைத் ஜமாலுதீன் 16ம் நூற்றாண்டின் ஷாகுல் ஹமீது ஆண்டகை போன்றோர் முக்கியமானவர்கள். வடஇந்தியா மாணிக்கபூரில் பிறந்து பல பகுதிகளுக்கும் சென்று இஸ்லாமியப் பிரச்சாரம் செய்து, இறுதியில் நாகூர் பகுதியில் உறைந்த ஷாகுல்ஹமீது ஆண்டகையின் சமுதாயப் பணி குறித்தும் இதனூடே கவனிக்க வேண்டும்.

இஸ்லாமிய சிந்தனைகளை அதுபேசிய ஆன்மீக, சமூக, சமத்துவ நோக்குகளை கி.பி. ஏழாம் நூற்றாண்டு முதல் கடல்வழி அரேபிய வணிக குழுக்களாகவும், மார்க்க பிரச்சார குழுக்களாகவும் வருகை புரிந்து சமயப்பிரச்சாரம் செய்த வரலாறும் முக்கியமானது.

இந்திய மண்ணில் வர்ணாசிரம மேலாதிக்கத்தாலும் சாதிப்படிநிலை வரிசை முறையினாலும், மனித உடம்பையே தீட்டென சொல்லி வாழ்வின் அனைத்து நடவடிக்கைகளிலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேல்கீழென பாகுபடுத்தப்பட்ட தீவிரத்தாலும், ஒடுக்கப்பட்ட அடித்தட்டு மக்கள் சூபிகளின் சகோதரத்துவ உணர்வு ததும்பிய சமயப்பிரச் சாரத்தாலும் ஈர்க்கப்பட்டு சாதியக் கொடுமை களிலிருந்து விடுதலை பெற்றனர். தொட்டாலே, பார்த்தாலே தீட்டு என்கிற கொடூர சமூகச்சூழலில் இஸ்லாத்தில் ஒருவருக்கொருவர் கையை இறுகப் பிடித்து ஸலாம் கொடுத்தல், உடம்போடு உடம்பை அரவணைத்து முஸாஹபா செய்தல், மூவர், நால்வராக தாலாவில் சேர்ந்திருந்து உண்ணுதல் என்பதான வழக்கங்கள் சகோதரத்து வத்திற்கு வலுவான அடித்தளங்களை உருவாக்கியது.

குணங்குடி மஸ்தான் சாகிபு, தக்கலை பீர்முகமது சாகிபு, கோடை நகர மெய்ஞானி ஷெய்கு முகியத்தீன் மலுக்கு முதலியார், காலங்குடி இருப்பு மச்சரேகைசித்தர், அய்யம்பேட்டை அப்துல்கனி சாகிபு, காயல்பட்டணம் செய்யது முஹம்மதுல் காதிரி, கணியாபுரம் ஷெய்கு அப்துல்காதர் வாலைமஸ்தான் யாகோபுசித்தர், தென்காசி இறசூல்பீவி, கீழக்கரை ஆசியாவும்மா, இளையான்குடி கச்சிப்பிள்ளையம்மாள் போன்றோரின் வாழ்க்கை, பாடல் மரபு வழியாக இந்த உண்மைகளை நாம் உணர முற்படலாம்.

பெண்சூபியான ராபியத்துல் அதவியா மனிதகுலத்திற்கு தொண்டாற்ற வேண்டிய கடமையை தன்னைகாணவந்த அறிஞர்களிடம் கீழ்கண்டவாறு கூறியதாக ஒரு வரலாற்று குறிப்பு தெரிவிக்கிறது.

«நீங்கள் விளக்கைப் போலவும், ஊசியைப் போலவும் ஆகிவிடுங்கள் என்று» தனக்காக அன்றி பிறருக்காகவே எரிந்து எரிந்து ஒளிதருகின்ற விளக்கு போலவும், நிர்வாணியாக இருந்துகொண்டே கிழிந்த ஆடைகளைத் தைக்கும் ஊசியைப் போல தன்னலமற்று மனிதகுல மேன்மைக்காக பணியாற்ற வேண்டும் என்பதாகவும் இது அமைகிறது.

இந்திய சூபிஞானி ஷெய்கு நிஜாமுத்தீன் அவுலியா (கி.பி.1325) «எல்லா மக்களுக்கும் சாந்தி வேண்டும்» எனவும் «மன்பதையின் நலனுக்காக இறைவனை நேசிப்பவரும், இறைவனுக்காக மன்பதையை நேசிப்பவரும் இறைவனின் நெருக்கத்துக்கு உரியவர்கள்» எனவும் பேசினார்.

வடஇந்திய பக்தி மார்க்கத்தின் முக்கிய மூலவரான கபீர் (1380-1440) இந்துமுஸ்லிம் சிந்தனை இணைப்பின் முக்கிய சரடாகத் திகழ்ந்தார். சமயங்களின் பெயரால் புறமத அடையாளங்கள், குறியீடுகளை முன்வைத்து நடைபெறும் சண்டைகளுக்கும் அநியாயங் களுக்கும் முடிவு கட்ட ஒரு சமரச வழித்தடத்தை உருவாக்கினார். «கடவுள் இராமனும் அல்ல, அல்லாவும் அல்ல, அவன் உள்ளத்தில் உறை கிறான்» என்பதாக பிரச்சாரம் செய்தார்.

தமிழ் சூபிகளின் பாடல்களில் இத்தகையதொரு கருத்து சற்றே மாறுபட்டு சமயசகிப்புணர்வு எல்லாவற்றையும் சமமாக பார்க்கும் சகோதரத்துவ உணர்வு என்பதாக வெளிப்பட்டுள்ளது.

தமிழக சிந்தனை மரபில் பரிபாஷை சொற்களென விளக்கப்படும் சைவ, வைணவ சமய குறியீட்டு சொல்லாடல்கள் சூபிகளின் பாடல்களில் ஒருங்கிணைந்து வெளிப்பட்டுள்ளன. இதன்வழி ஒருவித இஸ்லாமிய - பிறசமய இணைப்புச் சரடு மொழிவழியாக உருவாகியுள்ளது. குணங்குடிமஸ்தான் சாகிபுவின் பாடல்களில் தட்சணாமூர்த்தி, துளவமணிமார்பன், சிற்றம்பலம், சிவம், சக்தி, அம்பிகை, மனோன்மணி, வாலை, கணபதி, சாம்பவகேசரி எனப்பலவாறாக இடம்பெறுகிறது. தாயுமானவரின் பாடல்கண்ணிகள் பலவற்றை குணங்குடியாரின் பாடல்களோடு ஒப்புமைப்படுத்த முடியும்.

தக்கலை பீர்முகமது சாகிபுவின் ஞானப் பாடல்களிலும் சமயஞ் சார்ந்த சொல்லாடல்கள் வந்து போகின்றன. பெண்ணுருவாய், ஆணுருவாய் என விளக்கப்படும் சக்தி, சிவன் என்கிற சொல் லாடலிலிருந்து இது துவங்கு கிறது.

1. சக்தியாய் சிவனாய் இந்த தாரணிதன்னிலாக்கி
2. ஓம்பிள்ளை என்றதுக்குள்ளே யுலாவும் உல்லாசப்பிள்ளை
3. முத்தரள மொன்றாய்முளைத்த சிவமரத்தின் வித்தாக வந்து விளைந்தோனே
4. சங்கரனுக்கன்பு தருபவனே - தாமரைக்குள அங்கதரனுக் காதாரமானவனே

மாணிக்க வாசகரின் திருவாச கம், திருமூலரின் திருமந்திரம்,

**சாதிசமய வேறுபாடுகள், அடையாளங்கள் கடந்த ஒன்றாய் இறையை தரிசிப்பதன் மூலம்வாழ்வியல் சார்ந்த சாதிசமய ஆதிக்க முரண்பாடுகளின் இருப்பிற்கு எதிரான நிலைப்பாடு சூபிகளிடமிருந்து வெளிப்படுகிறது**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இராமலிங்க அடிகளாரின் திருவருட்பா உள்ளிட்ட பக்தி இலக்கிய மரபின் கூறுகளோடு பீர்முகம்மது சாகிபுவின் பாடல்களின் சில பகுதிகள் ஒப்பிட்டுப் பேசப்பட வேண்டியவையாகும். எனினும் «சிவன்» பற்றிய கருத்துருவாக்கத்தில் சைவர்களும், தமிழக சித்தர்களும் மாறுபட்ட பார்வையைக் கொண்டிருந்தனர் என்பதும், சித்தர்கள் சைவசித்தாந்த நிறுவனத்தை எதிர்த்தவர்கள் என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

சூபிகளின் பாடல்களில் இஸ்லாம் தவிர்த்த பிறசமயக் குறியீடுகள் இடம்பெற்றாலும் அவை சாதிய அதிகாரத்தோடு செயல்படும் வணக்கமுறைகளை எதிர்க்கிற பண்பாகவும் வைதீக சாதி சமயங் கடந்த நிலையில் மாற்றுசமய மரபாக இறைவனைப்பாடும் போக்காகவும் வெளிப்பட்டுள்ளது.

1. சாதிபல பேதகமதாக வருந்தீனே
 தாமரையுள்ளாடு மொளி தாக்குமிறையோனே
 வேதியர்களாரு மறியாத பொருளே யான்...
2. சாத்திரத்தி லெட்டாச் சதுர் ஞானத்
 தவக்குறைசெய்
 தேத்துமதற்கப்பா லிருப்பவனே
3. சருவ குருவாய் சருவ சமயவடிவாய்
 நின்றுறுவருன்னைதெரிசிப்பவர்க் குறுந்துணை
 செய்பவனே
4. தலையூறித் தேன்வடியத் தருவன மக்கென்று
 சிலர் தரையிற்தேட
 சிலைமீதிற் சிலர்தேட தீயிற் சிலபேர்தேடத்
 தெரியாவண்ணம்
 கலையூறித் தரும்பொருளாய் கருதுமவர்க்
 கெங்குமொன்றாய்
 கலந்தகோவே.

குணங்குடிமஸ்தான் சாகிபுவின் பாடல்களிலும் நிறுவனமயப்படுத்தப்பட்ட சாதி, சமய மரபுகளுக்கும், நம்பிக்கைகளுக்கும் எதிராகப்பேசும் பண்பை கேட்கலாம்.

1. வேதங்களாலும் வெளிப்படாச் சுந்தரமாஞ்
 சோதி எனக்கென்றே குலங்கு நிராமயமே
2. சாத்திரங்கள் ஓதுஞ் சதுர்மறையோர்க் கெட்டாத
 சூத்திரமாய் நின்ற சுழியே பராபரமே
3. மதபேத மோதி மதிகெட்டவர்க் கெட்டாத
 வான்கருணை வெள்ளமாகி. .

இப்படியாக சாதிசமய வேறுபாடுகள், அடையாளங்கள் கடந்த ஒன்றாய் இறையை தரிசிப்பதன் மூலம் வாழ்வியல் சார்ந்த சாதிசமய ஆதிக்க முரண்பாடுகளின் இருப்பிற்கு எதிரான நிலைப்பாடு சூபிகளிடமிருந்து வெளிப்படுகிறது எனக் குறிப்பிடலாம்.

வாழ்க்கை இருப்பின் தொடர்ந்த சமய முரண்களுக்கு அப்பால் நின்று எல்லாவற்றையும் இறைபண்புடையதாக காணுகின்ற, பிறசமய குறியீடுகளையும் இஸ்லாமிய இறையியல் கருத்தில் உள்ளடக்கி காணுகின்ற ஒரு வித்தியாசமான போக்காக சூபிகளிடத்தில் இதுதொனிக்கிறது.

அன்புததும்பும் ஞானநெறியின் உயர்நிலை அடைந்தவர்கள் புறசமய அடையாளங்களைந்து, வேற்றுமை பாராட்டும் பண்பினை மறுப்பவர்களாக, பரந்த பண்பட்ட நோக்கில் எல்லாமும் அவர்களுக்கு ஒன்றாகவே தெரிந்துள்ளது. எனினும் சைவ, வைணவ மதக்குறியீடுகளின் தாக்கம் பெற்ற சூபிகளின் பாடல்களை இஸ்லாமிய சிந்தனை வட்டாரத்திற்குள் பிறசமயக் குறியீடுகளையும் உள்வாங்க முயற்சித்த சமய நோக்கின் விளைவாகவும் கருதலாம். ஏனெனில் «ஒவ்வொரு வகுப்பினருக்கும் நாம் ஒரு திருத்தூதரை அனுப்பினோம்» (16:36) என்ற திருமறை வசனத்தின் அடிப்படையில் இந்துமக்களையும் «அஹ்லேகிதாப்» என்னும் வேதம் பெற்ற மக்கள் தான் என்று சூபி ஞானிகளில் ஒரு பிரிவினர் கூறியுள்ளதை இங்கு நாம் கவனத்திற் கொள்ளலாம்.

மக்கள் சார்ந்த நம்பிக்கைகளில் ஆழ்ந்த அறிவுள்ளவர்களாகவும், வாழ்வியலோடு சாதி மத எல்லைகளைக் கடந்து அனைத்து மக்களுக்குமான நன்மை, உய்வு, விடுதலை என்கிற இலட்சிய நோக்கை உடையவர்களாகவும், தன்னைவருத்தி பிறருக்கு உதவுதல் அதன்மூலமாக இறைநேசத்திற்கு உரியவர்களாக உயர்தல் என்பதான அடித்தளங்களில் சூபிகளின் சிந்தனையும் செயல்வடிவங்களும் அமையப் பெற்றிருந்ததாக கருதலாம்.

தமிழ் சிந்தனை மரபுக்கு இஸ்லாமும், இஸ்லாமிற்கு தமிழ் சிந்தனை மரபும் ஒன்றுக்கொன்று கொடுத்தும் வாங்கியும் தத்தம் மரபுகளை கட்டிக்காப்பாற்றி வளர்த்துள்ளன. தமிழகத்தில் நிலைபெற்றிருக்கும் ஏராளமான தர்காக்கள் இந்த மரபின் ஒரு குறியீட்டு அடையாளமாகும். சூபிகள் என்னும் மெய்ஞானிகள், இஸ்லாமியத்திற்காக உயிர்நீத்த தியாகிகளின் நினைவுச்சமாதிகள் தர்காக்களாக அமையப் பெற்றுள்ளன. குறிப்பாக திருச்சியின் நத்ஹர்ஷா வலியுல்லாதர்கா, கீழக்கரை ஏர்வாடியில் சையது இபுராகீம் வலியுல்லாதர்கா, நாகூரில் ஷாகுல்ஹமீது நாயகம்தர்கா, தக்கலையில் பீர்முகமது ஒலியுல்லா தர்கா என தமிழகமெங்கும் பெரிய அளவில் புகழ்பெற்றதும், சிறிய அளவில் அறியப்பட்டதுமான நூற்றுக்கணக்கான தர்காக்கள் உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இடைமறிப்பு – 4

ஐரோப்பாவில் எந்த அமைப்பாயிருந்தாலும் எந்தக் குழுவாய் இருந்தாலும் சொல்லாத ஒன்றை இந்த இலக்கியச் சந்திப்பு சொல்கிறது. அதாவது நாங்கள் வடபகுதி முஸ்லிம்கள் புலிகளால் துரத்தப்பட்ட நடவடிக்கையை பகிரங்கமாகக் கண்டித்து இந்தப் 10 ஆண்டை மிக வேதனையுடன் நினைவு கூருகின்றோம். இந்த மக்களின் அக்கறை குறித்து கேள்வி யெழுப்பாத தமிழன் என்றும் உண்மையான விடுதலையைப் பெற முடியாது.

நான் சிறுபிராயத்தில் இருந்தே நல்லூர் வீதிகளில் வளர்ந்தனான். அங்கே நல்லூர் கந்தசாமி கோயிலில் கற்பூரம் விற்று எங்களோடு ஒன்றோடு ஒன்றாக வாழ்ந்தவர்கள் இந்த முஸ்லிம்கள். ஆனபடியால்தான் எந்தவொரு விடுதலையும் எங்களோடு சேர்ந்து வாழ்ந்த மக்களின் சுதந்திரம் இன்றி மலர முடியாது.

நன்றி - இலக்கியச் சந்திப்பு



பராஜசிங்கம்

ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலை குறித்து தீவிர அக்கறைகொண்ட பாரா மாஸ்ரர் அவர்கள் முன்னாள் இடதுசாரிப் போராளிகளில் ஒருவர். புகலிட இலக்கியப் பரப்பில் ஓயாது செயற்பட்டு வருவதோடு தமிழ் - சிங்கள உழைக்கும் மக்களின் நல்லுறவுக்காகவும் குரல் கொடுத்துவருபவர்.

---

இஸ்லாமிய அடையாளங்களை சிதறவிடாமலும், அதேசமயம் தமிழக சமய கலாச்சார கூறுகளை உள்வாங்கியும் நிகழ்த் தப்படுகிற தர்கா விழாக்கள், அது தொடர்பாக நடைபெறும் சடங்குகள் எல்லாமும் இந்த உண்மையை உணர்த்துகின்றன.

«கொடிக்கெட்டு» நிகழ்வில் விழாக்கால துவக்கம் பச்சைப் பிறைக்கொடி தர்காவில் ஏற்றுவதிலிருந்து துவங்கி, பெரு வாரியான அடித்தட்டு மக்களை பக்தியின்பாலும், ஒருவித பிரமிப்பினாலும் ஒன்றுபடுத்தி திரட்டுகின்ற சந்தனக்கூடு ஊர்வலம், யானை மீதான ஊர்வலம் என நகர்ந்து, இஸ்லாமியப் பண்புகளைப் புதுப்பிக்கின்றவகையில் மௌலிது ஓதுதல், ஹுதீசுகள் நடத்துதல் என நிகழ்ந்து, இறுதியில் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கு அன்னதானம் நேர்ச்சை வழங்குதல் என்கிற நேயமிக்க செயலோடு முடிவுறுகிறது.

இந்நிகழ்வில் சாதிசமய எல்லைகள், கட்டுப்பாடுகள் உடைபட்டு இஸ்லாமியர்களும் பிறசாதிசமய மக்களும் பாகுபாடின்றி கலந்து கொள்கிற காட்சி இயல்பானதாக உள்ளது. இதனை நடைமுறை ரீதியாகவும், மனோவியல் ரீதியாகவும் சிதைக்க முயலும் சக்திகளினூடே நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே அபாயகரமானது.

### துணை நூற் பட்டியல்


1. கா.முகமது பாரூக் (பதிப்பாசிரியர்) «மெய்ஞ்ஞானி பீர்முகமது அப்பா இலக்கிய ஆய்வுக்கோவை» (நன்னெறி பதிப்பகம், திருவிதாங்கோடு, அக்டோபர் 1976)

2. கொ.அ.அன்தோனவா (மொ) «இந்தியாவின் வரலாறு» (முன்னேற்ற பதிப்பகம், மாஸ்கோ) 1979

3. தக்கலை M.S. பஷீர் «ஞானப்புகழ்ச்சி ஓர் ஆய்வு» (தக்கலை) மே 1981

4. மணவை முஸ்தபா (தொகுப்பாசிரியர்) «தமிழில் இஸ்லாமிய மெய்ஞான இலக்கியங்கள்» (மீரா பொண்டேஷன், சென்னை-40)

5. டாக்டர் அப்துல் ரகுமான் «குணங்குடியார் பாடற்கோவை» (செல்மா, சிவகங்கை) டிசம்பர் 1990

6. டாக்டர். மீ.அ.மு.நாசீர் அலி «இஸ்லாமிய தமிழ் இலக்கியங்களில் சூபித்துவம்» (எம்.ஜி.இ.டி.சொசைட்டி, திருச்சி) பெப்ரவரி 1991.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காவாரின் விமர்சனச் சித்திரங்கள்



பாரிஸில் 25 வருடங்களாக வாழும் காவார் (Khavar-N.V.Rakhshani) சர்வதேச புகழ்பெற்ற ஓர் ஈரானிய ஓவியராவார். 1964இல் இருந்து 2001 இற்குள் 18க்கும் மேற்பட்ட ஓவியக் கண்காட்சியை நடத்தியும், கண்காட்சிகளில் பங்கு பற்றியும் உள்ளார். 1966/1969களில் அழகியல் கலைகளுக்கான படிப்பில் ஈரானில் பட்டங் களைப் பெற்றவர். பாரிஸ் சோர்போனில் 1976ல் கலையும், கலைவிஞ்ஞானத்திலும் புலமைப்பட்டம், பின்னர் இதே பல்கலைக்கழகத்தில் 1979இல், அதே துறைக்கான ஆழமான படிப்புகளுக்கான டிப்ளோம், 1989இல் கலையும், விஞ்ஞானக் கலைக்குமான கலாநிதிப் பட்டத்தைப் சோர்போன் பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்ட காவாரின் ஓவியங்களைப் பிரசுரித்த பத்திரிகைகளில் சில! Le Monde, Le Nouvel Observateur, Jeune Afrique, Chronique d'Amnesty International, Documentation Refugiés, Cimande Information, The Iran Star Canada. பல பிரபல ஈரானியக் கவிஞர்களினது தொகுப்புகளிற்கு இவரது ஓவியப் பங்களிப்புக் கிடைத்துள்ளது. ஈரானில் நடக்கும் மனித உரிமை மீறல்களுக்குகளுக்கு எதிரான குரலாக ஒலிக்கும் ஓவியங்களைக் கீறிய வராவார், குழந்தைகளுக்கான ஓவியங்களையும் கீறியுள்ளார்.





"நான் தனிப் பட்ட ரீதியாக சொல் வதற்கு ஏதுமில்லை, நான் சொல்ல விரும்பியவைகள் எனது ஓவியங்களுக்குள்ளேயே உள்ளன." என மிகவும் அடக்கமாகச் சொல்லும், தனது ஓவியங்களில் சிலவற்றை Exil பிரசுரத்துக்காகத் தந்துள்ளார். அவருக்கு எமது நன்றி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## நுழைவதற்கு முன்:

மேலப்பாளையம் முஸ்லிம் மக்கள் குறித்த இக்கட்டுரை எழுத நேர்ந்த சூழலை குறிப்பிட்டாக வேண்டும். தென் மாவட்டங்களில் சாதிய, மத ரீதியிலான முரண்களை குறித்த ஒரு பல்கலைக் கழக மான்ய குழு உதவியிலான ஆய்வுத் திட்டத்தின் ஆய்வு உதவியாளராக மேலப் பாளையத்தினுள் நுழைந்தேன். களத்திற்குப் போவதற்கு முன்பு திட்ட இயக்குனர் முதலான என்னுடைய ஆசிரியர்கள் எனது பாதுகாப்பு குறித்து மிகவும் கவலைப் பட்டனர். மேலப்பாளையம் குறித்த ஊடகங்களின் கட்டமைப்பு ஏற்படுத்தி இருந்த நியாயமான கவலை. மேலப்பாளையத்தினுள் சென்று களப்பணியில் ஈடுபடும் பொழுதுதான் இம்மக்களைக் குறித்து அறிந்து கொண்டதுடன் அம்மக்களுக்கு அரசு நிர்வாகம், ஊடகங்கள் இழைத்துள்ள அநீதியை அறிய முடிந்தது. காவல் துறையின் அத்துமீறல்கள் இளைய தலைமுறையினரை சீரழித்துக் கொண்டிருந்ததை நேரடியாக அறிய முடிந்தது. இக்கொடுமைகளுக்கானத் தீர்வை கொடுக்க முடியாவிட்டாலும், இக் கொடுமைகள் குறித்த தகவல்கள் வெளியுலகை எட்டி இம் மக்களின் பரிதாபமான நிலைமையைப் புரிந்து கொண்டு மேலப்பாளையம் முஸ்லிம்கள் - தீவிரவாதிகள் என்று ஊடகங்கள் கட்டமைத்துள்ள மாயை சிறிது விலகினாலும் அதுவே இக்கட்டுரையின் பெரிய வெற்றியாக அமையும்.இக்கட்டுரை முழுக்க முழுக்க பாதிக்கப்பட்டுள்ள மக்களின் குரலாகவே எடுத்து வைக்கப்படுகிறது. இதில் கட்டுரையாளரின் பார்வையை விட அம்மக்களின் குரல் எடுபட வேண்டும் என்பதே இதற்குக் காரணம். களப் பணியின் பொழுது பெரிதும் உதவிய சகோதரர், உ.அ.மீ. யூசுப் அலி (தலைவர். விழி மனித உரிமை மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு). நண்பர்களுக்கு நன்றி.)

—சாந்தி—

# மேலப்பாளையம் முஸ்லிம் மக்கள் மீதான காவல்துறையின் மனித உரிமை மீறல்கள்

## இனி...

'மேலப்பாளையம் நல்ல ஊருங்க. இது மாதிரி அமைதியான ஊரே கிடையாது. இப்போ இந்த மாதிரி ஆக்கிப்புட்டானுங்க போலீஸ்காரனுங்க'.

*- ஷேக் மதார்* (வைத்தியர்)

'1992க்கு முன்னால எங்க ஊரு ஒன்னுமே விவரம் தெரியாத ஊரு. பள்ளிய (பாபர் மசூதி) இடிச்சத எதிர்த்து ஜனநாயக முறையில்தான் போராடினாங்க. அவங்க மேலே காவல்துறை துப்பாக்கிச் சூடு (நரேந்திர பால்சிங் ந.ட) நடத்தினது கொடுமைங்க.'

*- முத்து வாப்பா* (த.மா.கா. பிரமுகர்)

'ஊர் மேலப்பாளையம்னு சொன்ன உடனே கண்மூடித்தனமா அடிச்சாங்க (பாளை) காவல் நிலையத்திற்கு கொண்டு போயி அடிச்சாங்க எழுத்தர் கந்தசாமி. "அல்உம்மா தீவிரவாதியா நீ? துலுக்க நாயே, மாட்டுக்கறி தின்னு கொழுப்பு ரொம்படா உங்களுக்கு? தேவ்டியா மகனே, குண்டு கேஸ்ல 2 வருஷம் உள்ள தள்றேன்" என்று சொல்லி இரண்டு மணிநேரம் அடிச்சாங்க'

*- அப்துல்லா* (24)

'மக்கள் (ஆண் பிள்ளைகள்) வெளியில் போயிட்டு வர்ற வரை குலைய (உயிரை) கையில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிடிச்சிட்டு இருக்கோம்' *-மேலப்பாளையத்தில் உள்ள அப்பாவி தாய்*

'மேலப்பாளையத்தில் சோதனை என்ற பெயரில் அவங்க செஞ்ச அட்டூழியம் கொஞ்சம் இல்லை. பள்ளி வாசலுக்குள்ளே எல்லாம் பூட்ஸ் காலோட போலீஸ் புகுந்து தேடுது. நஜாத் பள்ளிவாசல்தான் அதிகமான அளவு போலீஸ் சோதனை போட்ட பள்ளி, பல பள்ளிவாசல்களில் சோதனை பண்ணி, ஜனாஸா (சவம்) அடக்கம் செய்யத் தேவையான கருவிகளை மண்வெட்டி, கடப்பாறையை ஆயுதம்னு எடுத்துட்டுப் போனாங்க."

*- அப்துல்லா* (24)

"பக்கத்துல தாமிரபரணி ஆறு ஓடுது போய் நாங்க குளிக்கக் கூடாதாம் பக்கத்தில் இந்துக் கோவில் (பீடங்கள்) இருக்கு. அதை எதுவும் பண்ணிருவோம்னு போலீஸ் சொல்லுது. இங்க இருக்கிற மக்களுக்குத் தெரியும் எவன் கோவில இடிப்பான்னு. போலீஸ் திட்டம் போட்டு, இந்து - முஸ்லீம்னு வேறுபாட்டை வளக்குது. இந்து முஸ்லிம் சேர்ந்துட்டா அவன் வேலை துட்டு சம்பாதிக்கிறது போயிடும்னு நெனைக்கிறான்."

*- மைதீன்*

"அம்மா இத்தால இருக்காங்க உள்ளே போகக் கூடாதுன்னு சொன்னோம் எதையுமே போலீஸ் காதுல வாங்கிக்காம இஸ்லாமிய சட்டத்தை மீறி உள்ளே நுழைந்து தேடுது." *-நூர் முகம்மது*

"உண்மையான ஆளப் பிடிக்காமல் அடிக்கடி இங்க தேடி வர்றதால என் பொம்பளப் புள்ளீங்க வாழ்க்கை பாதிக்கப்படுது மருமகனை போலீஸ் போய் விசாரிச்சதால என் பொண்ணை அம்மா வீட்டுக்கே போன்னு அனுப்பிட்டாங்க. இன்னொரு பொண்ணுக்கு மாப்பிள்ளை வீடே வர மாட்டேங்குது போலீஸ் வர்ற வீடுன்னு தட்டி தட்டிப் போறதுங்க." *- மைமூன்*

"போலீஸ் வர்ற வீடுன்னு யாரும் சம்பந்தம் பேச வரமாட்டேங்கிறாங்க. எங்கக்கா கல்யாணம் அமையவே மாட்டேங்குது." *- ஷா ஆலம்*

"போலீஸ் லாடம் கட்டியதுல இடது உள்ளங்கால்ல இரத்தம் கெட்டி வீங்கிட்டு காலை ஊண முடியலே. ஆஸ்பத்திரிலே போய் காலை பிளேடால வெட்டினாங்க. ரத்தம் கரித்துண்டு போல கட்டியா வந்து விழுந்ததுங்க"

*- நூர் முகம்மது* (22)

"தொடர்ந்து போலீஸ் என்மேல பொய் கேஸ் போட்டதால வழக்குக்காக மட்டும் இந்த 5 வருஷத்திலே இரண்டு லட்ச ரூபாய் இதுவரை செலவழிச்சிருக்கு. வாய்தா, வாய்தான்னு இழுத்தடிக்கிறதால ஒசூருக்குப் போய் வியாபாரத்தையும் கவனிக்க முடியலை. இங்க போலீஸ் தேடி வர்றதால வேலையும் யாரும் தரமாட்டேங்கிறாங்க அக்கம் பக்கம் உள்ளவர்கள் கூட எங்கூட வந்து பேச பயப்படுறாங்க. அதனால அவங்களுக்கும் போலீஸ் தொந்தரவு வந்து விடும்னு பயப்படுறாங்க." *- காஜா மொய்தீன் (21) த/பெ அகமது அலி*

"எதுனாச்சிம்னா (டிசம்பர் 6, விநாயகர் சதுர்த்தி பி.ஜே.பி. தலைவர்கள் வருகை) 12, 1 மணிக்கு வேன் நிறைய போலீஸ் வந்து தேடும். இராத்திரி போலீஸ் வந்து தேடும்போது தூக்கக் கலக்கத்தோட எழுந்திரிச்சி நின்னேன். போலீஸ்காரங்களைப் பார்த்தும் பயம் என்னால பதில் பேச முடியலை. அதுக்குக் கேக்கான் (போலீஸ்) போதை மருந்து சாப்பிடறியா? எனக்கு தன்னால அழுவையா வருது உங்கம்மா போல இருக்கேன் இப்படிக் கேக்கயேன்னு அழுதேன்."

*- ஷாஜகானின் தாய்*

"என்னை விசாரணைக்குன்னு கூட்டிட்டுப் போனாங்க உன் நண்பன் காஜா எங்கயிருக்கான்னு சொல்லுன்னு போலீஸ் இன்ஸ்பெக்டர் செவிட்டில் அடித்து, பூட்ஸ் காலால் நெஞ்சில் மிதித்தார். நான் வலி தாங்காமல் 'அல்லா'ன்னு அலறினேன். 'உன் அல்லா என்னைத் தண்டிப்பானாடா' என்று கேட்டு போலீஸ் அடிச்சது." - கலீல் ரகுமான், த/பெ. யூசுப் சேட்

"என் இரண்டு மருமகனையும் புடிச்சி உன் மச்சினன்களை காண்பின்னு 15 நாள் கஸ்டடில வைச்சிருந்தாங்க என் மூத்த மருமகன் என் பொண்ணை வீட்டுக்கு திருப்பி அனுப்பி வ்ச்சிட்டார். உன் தம்பி போலீஸ்ல கிடைச்சதும் வந்தா போதுமுனு அனுப்பிட்டாங்க

என்னை விசாரிக்கனுமென்று பாளை, மகளிர் போலீஸ் ஸ்டேஷனுக்குக் கொண்டு போயி ரெண்டு செவிட்டிலயும் மாறி மாறி அடிச்சாங்க கம்பால அது பிரம்பு மாதிரி இருக்கு அதால கம்பு ஒடியற மட்டும் அடிச்சாங்க. ரஸியான்னு ஒரு பொம்பளை போலீஸ்தான் ஈவு, இரக்கம் இல்லாம அடிச்சாள். வீட்டுக்கு கொண்டு வந்து அடிச்சிட்டு பிறகு பாளையங்கோட்டை ஸ்டேஷனுக்கு கொண்டு போறப்ப ஜீப்பில கொண்டு போகும் போது நான் மயக்கமாகி விழுந்திட்டேன். பிறகு என்னைக் கொண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போயி ஒரு பிரைவேட் ஆஸ்பத்திரியில சேத்தாங்க.. எங்க வீட்டில பின்பக்கமா வீட்டை உடைச்சி சோதனை போட்டாங்க என் பையனோட சான்றிதழ்கள் எல்லாம் எடுத்துகிட்டு போனாங்க குர்-ஆனைத் தூக்கிப் போட்டு மிதிச்சாங்க." ***- மைதீன் பாத்திமாள்.***

"அடிச்ச அடில கம்பு ஒடையுது அவன் பொழைப்பான்னே நான் நெனைக்கலே ஒரு பொம்பளைய சித்ரவதைப் படுத்தியா தகவல் வாங்கனும் போலீஸ்க்கு கண்டுபிடிக்க எவ்வளவு வழி இருக்கு."

***-அபுதாகிரின் பெரியப்பா***

"எங்கப்பா பீடிக் கம்பெனியில வேலை பார்க்கிறார். போனஸ் போட கொண்டு போன பணம் ரூபாய் 80 ஆயிரத்தை மூன்றடைப்பு கிட்ட வைச்சி யாரோ கொள்ளை அடிச்சிட்டாங்க அந்தக் கொள்ளையை நான்தான் செஞ்சேன்னு என்மேல வழக்கு போட்டாங்க. இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் இராத்திரி 11 மணிக்கு கதவைத் தட்டி கூட்டிட்டுப் போனான். நேராக மேலப்பாளையம், பாளை பை-பாஸ் ரோட்டில உள்ள சர்ச் பக்கத்தில வச்சி அடி அடின்னு அடிச்சாங்க கம்புல உள்ள ஆணியால் ஓங்கி தடிவீரன் என்கிற போலீஸ் குத்தினான் (வலது காலில் முழுங்காலிற்கு கீழ் ஆணி குத்திய ஓட்டை இருக்கிறது) அவங்க எழுதி வைத்திருந்த பேப்பரில கையெழுத்துப் போடச் சொல்லித்தான் அடிச்சாங்க." ***- காஜா மொய்தீன்***

"அழூப் என்ற என் நண்பரை எங்கேன்னு கேட்டு போலீஸ் அடிச்சாங்க ஒரு காட்டுக்குள்ள கொண்டு போயி லாடம் கட்டினாங்க. தொடை, முட்டியிலேயே அடிச்சாங்க சுமார் 4 மணி நேரம் அடிச்சாங்க வாயில சத்தம் போடுறேன்னு கல்லை எடுத்து வாயில் வைத்து அடித்தனர். காது, மூக்கிலிருந்து இரத்தம் வந்தது. கால்ல வீக்கத்துக்கு களிப்பாக்கு அரைத்துப் பத்துப்போடு என்று கோடிலிங்கம் எஸ்.ஐ. அடிச்சிட்டு மருந்து சொல்றார். இப்பவும் சிறிது நேரம் நின்றால் கால்ல வலி இருக்கு எதையாவது தாங்கி பிடிச்சிட்டுத்தான் நிக்க முடியும். பாதத்தில் வலி இருந்துக்கிட்டே இருக்கு ரொம்ப தூரம் நடக்கல்லாம் முடியாதுங்க."

***- செய்யது அப்துல் காதர் (25)***

"தீவிரவாதிகளை தேடுகிறோம் என்ற பெயரில் மேலப்பாளையத்தை இந்திய வரைப்படத்தில் ஒரு ஆபத்தான இடமாக காவல் துறையினர் காட்டி விட்டனர். உழைத்துப் பிழைக்கின்ற ஏழைகளை எல்லாம் நள்ளிரவில் கதவைத் தட்டி எழுப்பி காவல் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று பொய் வழக்கு போடுகிறார்கள். மேலப்பாளையத்தில் மட்டும் அறுபதுக்கும் மேற்பட்டவர்கள் குண்டர்கள் தடுப்புக் காவல் சட்டத்தில் இருப்பதாக அறிகிறேன். அவர்களை நிபந்தனையின்றி உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

***- அப்பாவு (எம்.எல்.ஏ. த.மா.கா)***

(மேலப்பாளையத்தில் பஜார் திடலில் நடைபெற்ற தமிழ் மாநில காங்கிரஸ் நான்காவது ஆண்டு துவக்க விழாவில் அப்பாவு எம்.எல்.ஏ பேசியது (நன்றி 27.04.99 மாலைமுரசு).

"ஒரு சனிக்கிழமை இராத்திரி 2 மணி இருக்கும். தார்சாவில் ரிபாயி படுத்திருந்தான். ஆசிக்க தேடி வந்த போலீஸ் தம்பி ரிபாயை கூட்டிட்டு போயிருச்சி. மறுநாள் ஞாயிறு திங்கள் ஆகட்டும் என்று சொல்லிட்டாங்க. மூன்று நாள் பையன் எங்கே இருக்கான் என்ற விவரமே தெரியலே. புதன்கிழமை பேப்பரிலே மசூதி வாசல்ல அரிவாளோடு ரிபாயி பிடிப்பட்டதாக செய்தி வருது." ***-உதுமான் பாத்திமா*** (ரிபாய், ஆசிக் மைதீனின் தாய்)

"சிலை உடைப்பு கேஸ்ல என் தம்பிய போலீஸ் கைது செய்தது. டிசம்பர் 23ந் தேதி சிலை உடைப்பு நடக்குது. என் தம்பி பெங்களூர்ல இருந்தே 25ந் தேதி கிளம்பி 26தான் வந்தான். போலீஸ் இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் என் தம்பிய மட்டும் இல்லை மேலப்பாளையம் மக்களின் வாழ்க்கையைச் சீரழித்தவர்." ***-இக்பால்***

"இராத்திரி 2 மணிக்கு விசாணைக்கு என்னை கூட்டிட்டு போயி ஹைகிரவுண்ட் ஆஸ்பத்திரில கைது பண்ணினதா சொன்னாங்க. குற்றப்பத்திரிக்கை நகல் படிச்சித்தான் என்னை தேசிய பாதுகாப்புச் சட்டத்தில குண்டு வைச்சதா பிடிச்சதே தெரியும்."

***-ஹசன் தபெ. சையத் மொய்தீன்***

## மேலப்பாளையத்தில் இதுவரை :

*திருநெல்வேலி மாவட்டத்தில் தாமிரபரணி ஆற்றுக்கு மேல் பக்கத்தில் திருநெல்வேலி சந்திப்பிலிருந்து 6 கி.மீ தூரத்தில் அமைந்துள்ள மேலப்பாளையம் ஒரு நகராட்சி பகுதியாகும். தமிழ்நாட்டிலேயே அதிகளவு எண்ணிக்கையிலான ஒரு லட்சத்துக்கும் அதிகமான முஸ்லிம் மக்கள் 200*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெருக்களில்நெருக்கமாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களின் தாய்மொழி தமிழ். 1992 ஆம் ஆண்டின் இறுதி வரை ஊடகங்களின் கவனத்தைப் பெறாத மேலப் பாளையம், டிசம்பர் 6க்குப் பிறகு உலகத்தின் கவனத்தை பெறலாயிற்று. பாபர் மசூதி இடிக்கப்பட்ட விவரம் முஸ்லிம் மக்கள் மனத்தில் ரணத்தையும், இளைஞர்கள் மத்தியில் கொந்தளிப்பையும் ஏற்படுத்தியது. இந்த ஆவேசம் மக்களை பாபர் மசூதியைக் காக்கத் தவறிய அரசாங்கத்தின் மீதான எதிர்ப்புணர்வாக வெளிப்பட்டதே தவிர, மும்பைப் பகுதிகளில் நடந்தது போன்று இந்து முஸ்லிம் கலவரமாக வெடிக்கவில்லை. மேலப்பாளையத்தில் ஒரு தபால் தந்தி அலுவலகமும், சார்-பதிவாளர் அலுவலகமும், உணர்ச்சி வசப்பட்ட மக்களினால் தீயிடப்பட்டன. அக்கால கட்டத்தில் பாபர் மசூதி இடிக்கப்பட்ட உடனேயே மேலப்பாளையத்தில் வன்முறை தலைதூக்குமோ என்று நினைத்த அரசாங்கம் தொடர்ந்து நான்கு நாள்களுக்கு மின்சாரம், குடிநீர், பால் போக்குவரத்தை தடை செய்து, மேலப்பாளையம் பகுதியை பிற பகுதிகளிடமிருந்து துண்டித்தது. மக்களிடம் அமைதி ஏற்படுத்த, என்ற பெயரில் மாவட்ட ஆட்சியாளரிடம் அனுமதி பெறாமல் காவல்துறை துப்பாக்கிச் சூடு நடத்தியது. இதில் 18 பேர் மீது குண்டு பாய்ந்தது. இதில் இருவர் இறந்துவிட, 16 பேர் சிகிச்சைக்குப் பின்பு உயிர் பிழைத்தனர்.



துப்பாக்கிச் சூடு தொடர்பாக அன்று இருந்த ஜெயலலிதா அரசு எவ்விதமான கண்டனத்தையோ, விசாரணை கமிஷனோ ஏற்பாடு செய்யவில்லை. அரசு சாராதபிற அமைப்புகளும் விசாரணை நடத்தவோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கு எவ்விதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. காயமடைந்த 16 பேர் மற்றும் இறந்து போன இரண்டு உயிர்களும் எவ்விதமான மதிப்பையும் பெறாமல் காவல் துறையின் அத்து மீறலுக்கு காவு கொடுக்கப்பட்டன.

காவல்துறையினர் ஜமா-அத் தலைவர்களை அழைத்து, குண்டடி பட்டவர்கள் மீது எந்த வழக்கும் போடாமல் விட்டுவிட்டோம். நீங்களும் அப்படியே விட்டுவிடுங்கள் என்று சமரசம் (பயமுறுத்தி) பேசி முடித்து விட்டது. காவல்துறை மக்களை ஒடுக்கி அராஜக சக்தியாக மாற இது அடித்தளம் அமைத்தது. இயல்பாகவே, காவல்துறையின் மீது பயம் கொண்ட மேலப் பாளையம் மக்கள், காவல்நிலையத்திற்கேச் செல்ல பயப்படும் மக்களை மேலும் அச்சுறுத்திய நிகழ்வாக மக்கள் மனத்தில் பதிய வைக்கப்பட்டது.

மேலப்பாளைய மக்கள் மனதில் பள்ளி வாசல் இடிக்கப்பட்ட சம்பவம் நிரந்தர வடுவை ஏற்படுத்தியதோடு, காவல்துறை மீது இனம் புரியாத பயத்தையும் ஏற்படுத்தியது. அவ்வப்போது சென்னை ஆர்.எஸ்.எஸ். அலுவலகம் மீது குண்டு வீசப்பட்ட வழக்கு, இராஜகோபால் கொலை வழக்குத் தொடர்பாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் என்று சில நபர்களை காவல்துறையினர் பிடித்துச் சென்று தடா கைதிகளாக மாற்றும் போக்கு நடந்தது. பாபர் மசூதி இடிக்கப்பட்ட சம்பவம் தொடர்ந்து மும்பையில் ஏற்பட்ட கலவரங்கள் வடமாநிலங்களில் முஸ்லிம்களை தீவிரவாதிகள் எனக் கருதுவது போல இங்குள்ள மக்கள் 1998 கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவம் வரை பார்க்கப்படவில்லை என்று கூறலாம்.

கோயம்புத்தூர் குண்டு வெடிப்புச் சம்பவம் நடந்த பின்பு ஒட்டு மொத்தமாக மேலப்பாளைய முஸ்லிம் மக்கள் குறிப்பாக 16 வயதில் இருந்து 19 வயதான பையன்களை தீவிரவாதிகள் என்று சித்தரிக்கும் போக்கு காவல் துறையினரால் திட்டமிட்டு வளர்க்கப் பட்டது. ஊடகங்களும் பரபரப்பாகத் தகவல்களை வெளியிட்டு, மேலப்பாளையத்தில் பாகிஸ்தான் உளவாளிகள், தீவிரவாதிகள் நிறைந்திருப்பதாக உலகிற்கு மேலப்பாளையத்தை கட்டமைக்கலாயிற்று. திருட்டு, வாய்தகராறு என்று கைது செய்யப்படும் வாலிபர் மேலப்பாளையத்தைச் சேர்ந்தவர் என்றால், தொடர்ச்சியாக தீவிரவாதியா? என்று போலீஸ் விசாரணை என்று தினப்பத்திரிக்கைகள் அனைத்துமே செய்தி வெளியிடலாயிற்று.

திட்டமிட்ட பிரச்சாரம் உச்ச வேகத்தில் நடை பெற காக்கிச் சட்டையினரின் அராஜக போக்கும், அச்சுறுத்தலினால் பயந்திருந்த முஸ்லிம் மக்களின் படிப்பறிவில்லாத அறியாமையும் காரணம்.

மார்ச் 24, 2001 தேதி நிலவரப்படி மேலப்பாளைய இளைஞர்களில் 51 பேர் சிறையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலப்பாளைய இளைஞர்களில் 51 பேர் சிறையில் உள்ளனர். இவர்களில் 12 பேர் தடா கைதிகள், 40 பேரின் மேல் குண்டர்கள் தடுப்புச்சட்டம் தேசிய பாதுகாப்புச் சட்டமும் பாய்ந்துள்ளது.

மேலப்பாளையத்தினுள் காவல் துறையின் மனித உரிமை மீறலுக்கு பின்புலமாக அமைந்தது பண்டாரம் என்ற நபர் காவல் நிலையத்தில் புகுந்து செய்த அட்டூழியம்.

பண்டாரம் என்ற நபர் மேலப்பாளையம் முஸ்லீம் மக்களிடம் வட்டிக்கு (கந்து வட்டி) இந்த வைத்து வட்டி வியாபாரம் செழித்து வளர்ந்தது. பண்டாரம் என்பவரின் உதவியாளர் ஆறுமுகம் என்பவர் பண வசூலுக்குச் செல்வார். அவர் பணத்தை வசூலிக்க பெண்களிடம் தாறுமாறாக, வாய்க்கு வந்தபடி பேசுவது, தவறான வார்த்தைகளைப் பயன்படுத்தியும் வந்தார். ஒரு வயதான பெண்மணியை இவர் பேசிய பொழுது அங்கு வந்த ஒரு சில இளைஞர்கள் 'அவங்கதான் நாளைக்கு கொடுத்துடறேன்னு சொல்றாங்களே இப்படியெல்லாம் பேசாதீங்க' என்று கூறயிருக்கிறார்கள். இதைத் தொடர்ந்து அவர்களுக்கும் ஆறுமுகத்திற்கும் வாயத் தகராறு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நடந்து ஒரு சில மாதங்களில் பண்டாரத்தின் கார் மீது ஒரு சிலர் கல்லை வீசியதில் கார் கண்ணாடி, உடைந்தது. காவல் துறையினர் இதற்கு காரணம் என்று கிச்சான் புகாரி மற்றும் அவருடைய நண்பர்கள் இருவரையும் கைது செய்துவிட்டனர். காவல் நிலையத்தில் இவர்கள் இருக்கும் பொழுது, அங்கு வந்த பண்டாரம் தன்னுடன் இரண்டு ஆட்களையும் அழைத்து வந்து, போலீசிடமிருந்து லத்தியை வாங்கி அப்போது சப்-இன்ஸ்பெக்டராக இருந்த காசிபாண்டியன் முன்னிலையில் அடித்துள்ளனர். இதனை காவல் துறையினர் தடுக்க வில்லை கிச்சான் புகாரியும் அவருடன் கைது செய்யப்பட்ட இளைஞர்களும் போலீஸ் நிலையத்திற்குள் வந்து எப்படி நீ அடிக்கலாம் என்று தட்டிக் கேட்டதைத் தொடர்ந்து காவல்துறையினராலும் தாக்கப்பட்டுள்ளார்.

பின்னர் குறிப்பிட்ட சமூகத்தைச் சேர்ந்தவர்களை திருப்தி செய்வதற்காக, சாதாரண வழக்கில் கைது செய்யப்பட்ட கிச்சான் புகாரி மற்றும் நண்பர்களை மனோகரா பாணியில் இரும்புச் சங்கிலியில் பிணைத்து அடித்து. மேலப்பாளையம் காவல் நிலையத்தில் இருந்து குறிச்சி வரை காவல்துறையினர் ஊவலமாக இழுத்துச் சென்றனர். செல்லும் வ ழியில் சாலை ஓரங்களில் உள்ள கோவில்கள் முன்பு குப்புற படுக்கச் வைத்து சாமியை கும்பிடும்படி கட்டாயப்படுத்தினர். இதனால் கிச்சான் புகாரியும் நண்பர்களும் மிகுந்த அவமானத்துக் குள்ளானார்கள். இந்த அளவுக்கு துன்புறுத்த என்ன தவறு செய்தோம். தவறு செய்தாலும் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தாமல் இவ்வாறு வெளிநபர் வந்து காவல் நிலையத்தில் வைத்து அடிப்பதும், தொடர்ந்து சங்கிலியால் கட்டி இழுத்து சென்றதையும், தங்களுக்கு இழைத்த மிகப் பெரும் அநீதியாகக் கருதினர்.

இச்சம்பவம் இளைஞர்கள் மத்தியில் காவல் நிலையம் குறித்த அதிருப்தியையும, ஒடுக்குமுறையை கேட்க ஆளில்லையே என்ற எண்ணத்தை ஏற்படுத்தி, இளைஞர்கள் ஒன்றிணைந்து ஒடுக்குமுறைகளை தட்டி கேட்க வேண்டும் என்ற எண்ணத்தை ஏற்படுத்தியது.

இவ்வழக்கு தொடர்பாக காவல்துறை விசாரணை என்ற பெயரில் வீடு புகுந்து, பெண்கள், குழந்தைகள் வரை விசாரணைக்கு என்று காவல் நிலையத்திற்கு அழைத்து வரப்பட்டு துன் புறுத்தப்பட்டனர். பையனை விசாரணைக்குத தேடி செல்பவர்கள் அவன் கிடைக்காத பட்டசத்தில் அவனின் தந்தை சகோதரன், (பள்ளியில் படிக்கும் சிறுவயது பையன் வரை) தயார், சகோதரி என்று இழுத்துச் செல்வர். இச் சோதனைகள் பெரும்பாலும் நள்ளிரவு 2 மணி வாக்கில் நடைபெறும். தேடப்படட நபர்கள் கிடைக்கும் வரை விட மாட்டோம் என்று காவல்துறையினர் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் உட்பட அனைவரையும் 4,5 நாட்கள் காவலில் வைத்திருந்தனர். சரியான உணவும் வழங்கப் படவில்லை. பிற உறவினர்கள் இவர்களைப் பார்க்கவும் அனுமதிக்கப்படவில்லை. 96 ஏப்பிரல் அந்நாட்களில் 'பத்தாம் வகுப்பு தேர்வு நடை பெற்றுக் கொண்டிருந்த நேரம் 10 வகுப்பு தேர்வு எழுத அனுமதி வேண்டியும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

பண்டாரத்தின் உதவியாளர் ஆறுமுகம் என்பவர் கொலை செய்யப்படுகிறார். காவல் துறையின் பார்வை முஸ்லிம் இளைஞர்கள் குறிப்பாக, 16 வயதிலிருந்து 19 வயது வரையிலான இளைய நபர்கள் மேல் விழுகிறது. குறிப்பிட்ட நபர், அவருடைய நண்பர்கள், அவருடன் சாதாரணப் பழக்கம் கொண்டவர்களைத் தேடி வேட்டையாட காவல்துறை தொடங்கியது.

இத் தேடுதல் வேட்டையின் பொழுது பெருமளவு மனித உரிமை மீறல்கள் அரங்கேறத் தொடங்கின. நள்ளிரவு நேரங்களில், தேடிச் செல்வது, தேடுதலின் பொழுது தேடிச் சென்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செல்லும் சிறுவன் வரை சட்டத்திற்கு புறம்பாக போலீசார் விசாரணைக்கு என்று காவல் நிலையத்திற்கு இழுத்துச் சென்று இம்சிக்கத் தொடங்கினர்.

இக்காலகட்டத்தில் மேலப்பாளையம் பகுதியில் பொறுப்பேற்றுக் கொண்ட இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் பணக்கார இளைஞர்களைக் குறிவைத்து தேடுதல் வேட்டை செய்து, அவர்களது பெறோர்களிடம் பணம் கொடுத்து விட்டால் பையனை விட்டுவிடவும் கூறி பண வசூல் செய்துள்ளதாக தகவலாளிகளின் வாக்குமூலம் வாயிலாக அறிகிறோம். காவல் துறை மீது பயம் கொண்டிருந்த மக்கள், வசதியானவர்கள் தங்கள் மகனை பணம் கட்டி வெளியில் எடுத்தனர். பணம் பண்ணும் சுலப வழியாக இதைத் தேர்ந்தெடுத்துக் கொண்ட இவர் தொடர்ந்து அப்பாவி முஸ்லீம் இளைஞர்களை வேட்டையாடத் தொடங்கினர். பணம் கொடுக்க முடியாத இளைஞர்கள் மீது தீவிரவாத முத்திரைக் குத்தப்பட்டு தேசிய பாதுகாப்புச் சட்டம், தடா, குண்டர் சட்டத்திற்குள் சிறையில் அடைக்கப்பட்டதாக ஆய்விலிருந்து அறிகிறோம்.

தொடர்ந்து அக்குடும்பத்தின் பிற உறவினர்கள் மீதும் காவல்துறையின் அராஜகம் தொடர்கிறது. காவல்நிலையத்தில் விசாரணைக் கைதியாக ஒருவரை வைத்துக் கொண்டே உறவினர்களிடம் சென்று அவ்விளைஞன் எங்கே என்று விசாரிப்பது. நள்ளிரவில் இளைஞர்களை பெற்றோர் கதறக்கதற விசாரணைக்கு என்று இழுத்துச் சென்று நாட்கணக்கில் அவனைக் குறித்து எந்தத் தகவலும் கொடுக்காது சில நாட்கள் கழித்து அவ்விளைஞரை அரிவாளுடன், கையில் குண்டுகளுடன் பிடித்ததாக தகவல் வெளியிடுவது. பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் மகனை காவல்துறை அழைத்துச் சென்ற விபரம் குறித்து ஒரு வாரம் பத்து நாட்களுக்குப் பிறகு செய்தித்தாள்கள், தொலைக்காட்சி மூலமாகவே அறிந்து கொண்டுள்ளனர்.



செல்வகுமார் என்ற டாக்டர் மற்றும் இரண்டு நபர்களும் மேலப்பாளையத்தில் படுகொலை செய்யப்பட்டனர். இதற்கு அடிப்படைக் காரணம் டாக்டர் இளம் பெண்களிடம் தவறாக நடந்து கொண்டது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கு காவல்துறை இந்து, முஸ்லிம் கலவரம் என்ற சாயத்தைப் பூசி, முஸ்லிம் இளைஞர்களை வேட்டையாடியது. இஸ்லாமிய மக்கள் அதிகமாக வாழும் மேலப்பாளையத்தில் மிகுந்த காவல்துறையின் பாதுகாப்போடு இந்து முன்னணி ஊர்வலம் நடத்தப்பட்டது. அந்த ஊர்வலத்தில் காவல்துறையின் உயர் அதிகாரிகளின் முன்னிலையில் இஸ்லாமியர்களை இழிவுபடுத்தி இந்து முன்னணியினர் கோஷங்களை எழுப்பினர். தொடர்ந்து போக்குவரத்து இன்னபிற வசதிகளைத் துண்டித்தது மட்டுமின்றி மேலப் பாளையத்தினுள் பிற மக்கள் செல்ல முடியாதபடி கலவர பூமியாக ஊடகங்கள் வாயிலாக சித்தரிக்கப்பட்டது.

பிற மக்கள் மத்தியில் மேலப்பாளையம் தீவிரவாதிகள் நிறைந்த ஊராக, மேலப்பாளைய முஸ்லிம் இளைஞர்கள் அனைவரும் அல்-உம்மா தீவிரவாதிகள், பாகிஸ்தானிய உளவாளிகள் என்ற பிம்பத்தை கட்டமைக்க காவல்துறை முயற்சி செய்தது. ஊடகங்களின் உதவியுடன் மிக வெற்றிகரமாகவே இப்பிம்பங்கள் பதிய வைக்கப்பட்டன.

சோதனை என்ற பெயரில் நள்ளிரவில் வீடு புகுந்து வீட்டில் உள்ள பொருள்களை கலைத்து சோதனை செய்து அதனை வீடியோ படம் பிடித்துள்ளனர். சோதனையின் போது வீட்டில் பயன்படுத்தப்படும் கத்தி, அரிவாள் மனை போன்ற பொருட்கள் தவிர்த்து பிற பொருட்கள் கிடைக்கவில்லை. கச்சாத்து என்று அழைக்கப்படும் பீடிக் கம்பெனியின் பாஸ்புக் பள்ளிச் சான்றிதழ்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடிதங்களை எடுத்துச் சென்றுள்ளனர். சோதனையின் போது வீடுகளில் இருந்த தங்க நகைகள் காணாமல் போயுள்ளன. அப்பாவி மக்கள் மீது காவல்துறையின் இத்தகைய கைவரிசையை என்ன சொல்வது.?

வாவர் பள்ளிவாசல் அருகே வைத்து முத்துகிருஷ்ணன் என்ற சோப் கம்பெனி டிரைவர் கொலை செய்யப்படுகிறார்.

வின்சென்ட் அபூபக்கர் என்ற முஸ்லிம் வியாபாரி (தி.மு.க) படுகொலை செய்யப்படுகிறார். இவர் போலீஸ் இன்ஸ்பெக்டர் கையாளாக இருந்து அப்பாவிகள் குறித்து துப்பு கொடுத்ததால் கொலை செய்யப்பட்டுள்ளதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அடுத்து பத்தமடையில் நடைபெற்ற மாடசாமி கொலை வழக்கிலும் முஸ்லிம் இளைஞர்கள் சம்பந்தப்படுத்தப்பட்டனர். 2000 டிசம்பரில் ரம்ஜான் நோன்பு மாதத்தில் பாளை கிரசென்ட் பள்ளி வாசலில் வைத்து தப்லீக் இயக்கத்தைச் சேர்ந்த அப்துல் ரஸீத் என்பவர் கொலை செய்யப்படுகிறார்.

டிசம்பர் 23 ல் சாமி சிலைகள் (பீடங்கள்) குறிப்பாக தலித் மக்கள் வசிப்பிடங்களில் உள்ள சிலைகள் உடைக்கப்படுகின்றன. சேதப் படுத்தப்படுகின்றன. முஸ்லிம் சமுதாயத்தின் மீதே இப்பழியும் சமத்தப்பட்டு அப்பாவிகள் வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளனர். இச்சம்பவங்கள் அனைத்திற்கும் பெரிய பின்னணி இருந்தும் அப்பாவி முஸ்லீம் இளைஞர்கள் சம்பந்தப் படுத்தப்பட்டுள்ளனர் என தகவலாளிகள் குறிப்பிடுகின்றனர். 2001-ல் சத்திய சீலன் கொலை, இதற்கும் பின்னணி இருந்தும், மீண்டும் அப்பாவி முஸ்லிம் இளைஞர்களே குறிவைக்கப் பட்டுள்ளனர்.

இங்கு நடைபெறும் ஒவ்வொரு சம்பவத்துக்கும் மதச்சாயம் பூசி மேலப் பாளையத்தை கலவர பூமியாக சித்தரிப்பது காவல்துறையின் வேலையாக உள்ளது.

இங்கு பிடிபட்டு, சிறையில் வாடும், ஜாமினில் வெளிவந்துள்ள ஒவ்வொரு நபர்கள் மீதும் குறைந்தது மூன்று வழக்குகள் இருக்கின்றன. தேசிய பாதுகாப்புச் சட்டம் குண்டர், தடாவில் வழக்கைப் போட நிறைய வழக்குகள் இருக்க வேண்டும் என்பதற்காக ஒரு கொலை வழக்கு குண்டு வெடிப்பு தொடர்ந்து திருட்டு கேஸ் என்று ஒருவர் மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. வேறு வழக்குகள் கைவசம் இன்றி ஏற்கனவே இருக்கும் வழக்குகளில் 14ஆவது, 15ஆவது குற்றவாளியாக என்று கடைசியாக பெயர்கள் சேர்க்கப்படுகின்ற குரூரம் இங்கு நடந்தேறுகிறது. போலீஸ் சிறையில் இருக்கும் காலத்தில் நடந்த திருட்டுக் கூட அப்பாவியின் கணக்கில் ஏற்றப்பட்டுள்ளது. வாய்தா, வாய்தா என்று இழுத்தடித்து, குற்றவாளி மாட்டவில்லை என்று வழக்கை வருடக்கணக்கில் இழுக்கவும் செய்வர். வழக்கு விசாரணைக்கு வந்த பின்புதானே குற்றம் சாட்டப்பட்டவர்களால் குற்றத்தை உடைக்க முடியும். அதுவரை கணக்கிற்கு வழக்காக இருக்கட்டும் என்ற நோக்கிலேயே இவ்விளைஞர்கள் மேல் வழக்குகள் போடப் பட்டுள்ளன. என்பதை தகவலாளிகள் தரும் தகவல்களில் இருந்து அறிய முடிகிறது. தேசிய பாதுகாப்புச் சட்டத்தின்படி ஒரு வருடம் முடிந்த பின்பு பெயில் கிடைத்து வெளியில் வரப் போகிறார் என்றால் அவரை வெளியில் வரமுடியாதவாறு செய்வதற்காகவே பிற வழக்குகள் போடப் படுகின்றன என்ற தகவலாளி களின் கூற்றுக்கள் இதை உறுதி செய்கின்றன. வழக்கை உடைத்து வெளிவரும் இளைஞர்களும், தொடர்ந்து காவல்துறையின் கவனிப்பில் இருந்து வரவேண்டிய நிலை.

விசாரணைக்கு என்று அழைத்துச் செல்லப்படும் சிறுவர்கள் முதற்கொண்டு அனைவரையும் காவல் துறையினர் புகைப்படங்கள் எடுத்து வைத்துக் கொள்கின்றனர். புகைப்படம், கைரேகை, கால்ரேகை முதலியவைகளை பதிந்து வைத்துக் கொள்கின்றனர். சாதாரண விசாரணைக்கு அழைத்துச் செல்பவரையும் குற்றவாளி போல புகைப்படம், கைரேகை, கால்ரேகை பெற்றுக் கொள்வதன் மூலம் மேலப்பாளையம் இளைஞர்கள் அனைவரையும் குற்றவாளி களாகவே காவல்துறை கருதுகிறது என்பது புலனாகும்.

ஊருக்குப் பொதுவான நீர் நிலைகளில் குளிக்கவும் முஸ்லிம் இளைஞர்களுக்குத் தடை விதிக்கப்படுகிறது. நீர் நிலைகள் அருகில் சிறு கோவில்கள், பீடங்கள் முதலியவை இருப்பதால் அவற்றை பாதுகாக்க என்றும், இந்துக்கள் வசிப்பிடங்களில் இருக்கிறது என்ற காரணத்தினாலும் இத் தடை விதிக்கப்படுகிறது. குளிக்கச் செல்லும் இளைஞர்களிடம் அவர்களது பெயர், முகவரி வலிந்து பெறப்படுகிறது.

குற்றவாளிகள் என்று காவல் துறையினரால் தயாரித்து வைக்கப்பட்டுள்ள லிஸ்டில் உள்ள நபர்களின் பெயரைப் போல, ஒருவரின் பெயரும் தந்தை பெயரும் அமைந்துவிட்டால் உடனே விசாரணைக்கு வரச் சொல்லி அனுப்பி விடுகின்றனர். மேலப் பாளையத்தில் காஜாமொய்தீன் என்ற பெயரில் ஒரே தெருவிலேயே பலர் இருப்பதும், தந்தை, மகன் இருவரது பெயரும் ஒன்று போல அமைந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுவதும் யதேச்சையானது. உடன் அவர்களைப் பிடித்து விசாரணை என்ற பெயரில் சித்திரவதைப் படுத்துகின்றனர்.

டிசம்பர் 6, விநாயகர் சதுர்த்தி, சுதந்திர தினம், குடியரசு தினம் போன்ற நாட்களும் பி.ஜே.பி. தலைவர்கள் தமிழகத்தில் எங்கு வந்தாலும் Preventive arrest என்ற பெயரில் இங்கு ஏற்கனவே காவல்துறை கைவசம் வைத்துள்ள லிஸ்டில் உள்ள நபர்கள் மற்றும் அவர்களது நண்பர்கள் கைது செய்யப் படுவார்கள்.

இவர்களது விசாரணை முறை மிகக் கொடுமையானது. நள்ளிரவில் பிடித்துச் சென்ற இளைஞர்களை உடன் காவல் நிலையத்திற்கு கொண்டு செல்வதில்லை மாறாக அருகிலுள்ள காவல்நிலையம், காட்டுப் பகுதி, ஆள் நடமாட்டம் குறைந்த பகுதிகளுக்குக் கொண்டு சென்று லாடம் கட்டுகின்றனர். கால்பெருவிரல்கள் இரண்டையும் இறுகக் கட்டி விடுகின்றனர். படுக்க வைத்து கால்களில், தொடைகளில் அடிக்கின்றனர். கால் முட்டியிலேயே அடிப்பது. கால் பெருவிரல்களை இணைத்துக் கட்டி அதன் மீது மேஜையை வைத்து 4 காவலர்களை மேசை மேல் ஏறி நிற்க வைக்கின்றனர். கால் பெருவிரல்களைக் கட்டி உள்ளங்கால்களில் லத்தியில் அடிக்கின்றனர். இவர்கள் அடிப்பதற்கு என்று பிரம்பு போன்ற நீண்ட கழியைப் பயன்படுத்துகின்றனர். கம்புகள் உடையும் வண்ணம் அடிக்கின்றனர். சிலரை 12 கம்புகள் நொறுங்க அடித்துள்ளனர். என தகவலாளிகள் தெரிவிக்கின்றனர். இவ்வாறு அடிக்கும் பொழுது கால் நகங்கள் பெயர்ந்து விடுகின்றன. கால் நகங்கள் வழியே இரத்தம் வழிந்தோடுகிறது. சித்தரஞ்சன் என்ற இன்ஸ்பெக்டர், செய்யது அப்துல்லா என்ற இளைஞரை அடிக்கும் போது உள்ளங்கால்களை உற்றுப் பார்த்து, இன்னும் சிவக்கலை. அடி பத்தாது அடிங்க என்று கூறியிருக்கிறார். விசாரணை என்ற பெயரில் சென்று மீண்டு வரும் இளைஞர்களுக்கு காலில் பெருவிரல்நகங்கள் பெயர்ந்து இருக்கின்றன. இவர்களை சிகிச்சைக்கு அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்வதில்லை. அவர்களுக்கு சில மருத்துவமனைகள் காவல் துறையினரைக் கண்டுப் பயந்தோ, அல்லது பணத்திற்காகவோ போலீஸ் துறையின் அராஜகத்தை கண்டு கொள்ளாமல் அவர்களுக்கு சிகிச்சை அளிக்கின்றன.

சிகிச்சை முடிந்து வெளிவரும் நபர்களிடம் அடித்ததை வெளியில் சொன்னால் இன்னும் நான்கு கேஸ்ஸில் போட்டு வெளியே வரமுடியாதபடி பண்ணடுவேன் என்று மிரட்டுகிறது காவல்துறை. பையன் வெளிவந்தால் போதும் என்ற நினைப்பில் காவல் துறையின் அராஜகங்களை அனேகர் வெளியில் சொல்லாமல் மறைத்து விடுகின்றனர். பணம் படைத்தவர்கள் பணத்தைச் செலவழித்து பிள்ளையை வழக்கில் இருந்து விடுவித்து, வீட்டை விற்றோ கடன் வாங்கியோ மகனை வெளிநாட்டிற்கு அனுப்பி விடுகின்றனர்.

லஞ்சம் கொடுத்து மீட்கப்பட்டவர்களும் முழுயைாக காவல்துறையின் பிடியில் இருந்து விடுபடுகிறார்களா என்றால் இல்லை என்றே சொல்ல வேண்டும். ஒரு ஆய்வாளர் பணம் பெற்றுக் கொண்டு விடுவித்த நபர் மேல் அடுத்த இன்ஸ்பெக்டர் விசாரணைக்கு என்று அழைத்து இம்சிக்கிறார், தன் பங்கிற்கு பணம் சம்பாதிக்கும் நோக்கில். சையது அலி என்பவர் இம்முறையிலே பிடிக்கப்பட்டுள்ளார்.

1998 கோயம்புத்தூர் குண்டு வெடிப்பிற்குப் பிறகு ஜெயிலில் இருந்த, கைது செய்யப்பட்ட முஸ்லீம் இளைஞர்களை அல்-உம்மா தீவிரவாதிகள் என்று மூன்று மாதமும் தனித்தனி செல்லில் ஆடைகளை களைந்து நிர்வாணமாக விட்டு ஈவு இரக்கமின்றி அடித்துள்ளனர். வாய்தாவுக்கு வரும் கைதிகள் கை உடைந்து கால் உடைந்து, கண்பார்வை மங்கி இருந்ததாக தகவலாளிகள் தெரிவிக்கின்றனர்.

நீதிபதியிடம் சொன்னாலும் அதைக் குறித்து அக்கறைக் காட்டப்படவில்லை. தனி பெட்டிசனாகக் கொடு என்று நீதிபதி கேட்டுள்ளார். ஆடையேயின்றி இருக்கும் கைதி பேப்பருக்கும், பேனாவுக்கும் எங்கே போவான்? திரும்பவும் செல்லுக்குப் போக வேண்டும் அங்கு போனதும் ஜெயில் வார்டன்கள் அடித்து நொறுக்குவர்.

(சில தகவலாளிகள் தங்களுக்கு நேரிட்ட கொடுமைகளை விரிவாக சொல்கின்றனர். பத்திரிக்கையில் வந்தால் தாங்கள் பாதிக்கப் படுவோமோ என்று பயந்து எழுத வேண்டாம் என்ற கோரிக்கையையும் வைக்கின்றனர். அவர்களின் கருத்துக்கிணங்கி அவர்கள் கொடுத்த தகவல்கள் இக்கட்டுரையில் சேர்க்கப்படவில்லை)

வாய்தா சென்றுவிட்டு வரும் கைதிகள் தாமாகவே ஆடைகளை களைந்து அட்மிஷன் அடி பெற்று கொட்டறைக்கு (செல்) செல்ல வேண்டும் சாதாரணமாக தங்களது சட்டைப் பைகளை உதறிக் காட்டி விட்டுப் போய் விடலாம். 1998 குண்டு வெடிப்பிற்கு பின் வந்த மூன்று மாதங்கள் அனைத்துச் சிறைச் சாலைகளிலும் தீவிர சோதனை என்ற பெயரில் வாய்தா சென்று திரும்பும் முஸ்லீம் இளைஞர்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆடைகளை களையச் செய்து ஆயுதங்கள் ஏதும் இருக்கிறதா என்று சோதித்தனர்.

(பெயிலில் வெளியில் வந்து வாய்தாவுக்கு அலைந்து கொண்டிருக்கும் இளைஞர்களை விசாரணை என்று துன்புறுத்துவதோடு விட்டு விடாமல், வாய்தாவின்போது பெயில் கிடைக்காது கைதியாக வந்து போகும் நண்பர்களிடம் பேசுவதையே தவறு என்று அச்சுறுத்துகிறது காவல்துறை. என்ன பேசினாய் என்று கேட்டு மிரட்டுவதுடன் மேலும் பொய் வழக்குகளைப் போட்டு விடுவேன் என்று பயமுறுத்துகின்றதாகவும் சில தகவல்கள் தெரிவிக்கின்றன.)

வழக்கை நடத்தி பிள்ளையை மீட்கலாம் என்று வரும் பெற்றோர்கள் அடுத்து ஏமாறுவது ஒரு சில கருப்புக் கவுன்களிடம் வழக்கிற்காக என்று பணம் பிடுங்கிக் கொண்ட சில வழக்கறிஞர்கள் தங்களது கடமையை சரிவரச் செய்வதில்லை. பெற்றோர்கள் கல்வி அறிவின்மையைப் பயன்படுத்திக் கொள்கின்றனர் பணம் வாங்கிக் கொண்ட தங்களது கட்சிக்காரர்களுக்காக நீதிமன்றத்தில் கூட ஆஜராவதில்லை என்பது இம்மக்கள் கொடுத்த தகவல்களில் இருந்து தெரியவருகிறது.

இம்மக்கள் பிற அரசியல் கட்சிகளின் மீது முழுமையான நம்பிக்கையை இழந்துவிட்ட நிலையில் தங்களின் ஆதரவை தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்திற்கு அளிக்க முற்பட்டனர். (இந்த அமைப்பு கூட்டத்திற்கு மக்கள் திரண்டு வந்ததே இதற்கு சாட்சி) இவர்களாவது இந்த அவல நிலைக்கு குரல் கொடுத்தனரா என்றால் இல்லை என்றே சொல்ல, வேண்டும். ஏனெனில் சமீபகாலங்களில் இவர்களை தேடி வரும் பாதிக்கப்பட்ட மக்களுக்காக காவல் துறையை நாடி அவர்கள் செல்வதே இல்லை. 'பாதிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் எங்களிடம் வந்து கண்ணீர் சிந்தினாலும் நாங்கள் எந்தவித உதவியும் செய்யப்போவதில்லை. ஏனெனில் நாங்களே பாதிக்கப்பட்டாலும் எங்களை காப்பாற்ற ஆள் இல்லை' என்று இந்த அமைப்பின் பிரமுகர் உரை நிகழ்த்தியதை தகவலாளிகள் குறிப்பிடுகின்றனர். இந்த அமைப்பின் மீது தீவிரவாதச் சாயை பூசப்பட்டுள்ளதால் காவல்துறையின் தொடர்ந்த கண்காணிப்பிற்குட்பட்டு இந்த அமைப்பு இருந்து வருகிறது. கட்சியின் மேல்மட்டத் தலைவர்கள், தங்கள் மேல் பொய் வழக்காக பெரிய வழக்குகள் போடப்பட்டு விடுமோ என்று அஞ்சி அப்பாவிகள் மீது போடப்படும் பொய் வழக்குகளைக் கண்டும் காணாமல் இருந்து விடுகின்றனர் எனத் தகவலாளி தெரிவிக்கிறார்.

காவல்துறை செய்யும் மனித உரிமை மீறல்கள் ஒரு புறமும், நம்பிப் போகும் ஒரு சில கறுப்புக் கவுன்களின் புறக்கணிப்பு ஒருபுறமும் இவைகளுடன் தங்கள் குடும்பம் மீது காவல்துறையின் பார்வை விழுந்து விடக்கூடாது என்ற பயத்தினால் ஒதுங்கும் பெரிய மனிதர்கள் அப்பாவி மக்களின் நிலையினைக் கண்டு இரங்கினாலும் எதுவும் செய்வதில்லை.

இந்தச் சூழல்களினால் தொடர்ந்த வறிய முஸ்லிம் இளைஞர்கள் செய்யாத குற்றங்களுக்கு தண்டனை பெற்று சிறையில் வாடுகின்றனர்.

மேலப்பாளையம் பகுதியில் நடக்கும் இம்மாதிரியான மனித உரிமை மீறல்கள் குறித்து சில விழிப்புணர்வு பெற்ற முஸ்லிம் இளைஞர்கள் சிலர் அமைப்புகள் ஏற்படுத்தி மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்று வருகின்றனர். அவர்கள் மக்கள் கண்காணிப்பகம், போன்ற மனித உரிமை அமைப்புகளை அழைத்து மேலப்பாளையத்தில் மனித உரிமை மீறல் குறித்து 13-08-1999 அன்று குழு விசாரணைக்கு ஏற்பாடு செய்தனர். இக்குழுவின் விசாரணை அறிக்கை தமிழகத்தில் மனித உரிமைகள் 1998-2000 என்ற புத்தகத்தில் வெளிவந்துள்ளது. அதில் தவறிழைத்த ஆய்வாளரும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளார்.

இதே போன்று காவல் நீதிக்கான பிரச்சாரம் என்ற அமைப்பினரும் மேலப் பாளையத்தில் நடந்த மனித உரிமை மீறலை ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டுள்ளனர். அறிக்கையின் விபரமாவது.மேலப்பாளையம் ஹமீம்புரம் 3ஆவது தெருவில் வசித்து வரும் சுல்தான் அலி என்பவரைத் தேடிச் சென்ற போலீசார் அவர் வீட்டில் இல்லாததால், அப்போது அங்கிருந்த மும்தாஜ் (16) என்ற பெண் குழந்தையையும், காதர் மைதீன் (12) என்ற சிறுவனையும் வீட்டை விட்டு வெளியே இழுத்து அடித்திருக்கின்றனர். அப்போது அவ்வழியாகச் சென்று கொண்டிருந்த பீர் முகம்மது (65) என்ற பெரியவர் போலீசாரிடம் சென்று ஏன் இப்படிக் குழந்தைகளை நடு ரோட்டில் அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு போலீசார் 'எங்களை எதுக்கிற அளவு துலுக்கனுக்குத் தைரியம் வந்து விட்டதா' என்று பேசி அவரைத் தெருவில் போட்டு அடித்தனர். இரவு எட்டு மணிக்கு மேல மும்தாஜும் சிறுவன் காதர் மைதீனும் கைது செய்யப்பட்டு மேலப் பாளையம் காவல் நிலையத்தில் வைக்கப்பட்டனர். அவர்களைப் பார்க்கச் சென்ற சித்தி நூர்ஜஹானையும் போலீஸ் பிடித்து வைத்துக் கொண்டது. மும்தாஜை கைது செய்யும் போதும், அடிக்கும் போதும் பெண் போலீசார் அருகில் இல்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைக்கப்பட்டனர். அவர்களைப் பார்க்கச் சென்ற சித்தி நூர்ஜஹானை யும் போலீஸ் பிடித்து வைத்துக் கொண்டது. மும்தாஜை கைது செய்யும் போதும், அடிக்கும் போதும் பெண் போலீசார் அருகில் இல்லை.

இச்சம்பவம் காவல் நீதிக்கான பிரச்சார இயக்கத்திற்கு புகாராக அனுப்பப்பட்டது. காவல் நீதிக்கான குரல் இச்சம்பவம் குறித்து விசாரணை நடத்தி காவல் துறையின் மனித உரிமை மீறலை வெளிப்படுத்தியுள்ளது. மேலும் இவ்வமைப்பின் விசாரணையில் குழந்தைகளை விடுவிக்க ஜமா-அத் உறுப்பினர்கள் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்று குழந்தைகளை விட்டுவிடக் கேட்ட பொழுது போலீசார் தங்களுக்குத் தேவையான பணத்தைக் கொடுத்து விட்டு குழந்தைகளை கூட்டிச் செல்லக் கூறியதும். ஜமா-அத் உறுப்பினர்கள் குழந்தைகள் ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்று விளக்கிய போது, அப்படியெனில் குழந்தைகளின் எதிர்காலத்தை என்ன செய்கிறோம். பாருங்கள் என்று சவால் விட்டதையும் வெளிப்படுத்தி இச்சம்பவம் காவல் துறையின் திட்டமிட்டச் செயல் என்பதையும் விளக்கியுள்ளது.

இன்றும் போலீசுக்கு கொடுத்து விட்ட மகனைத் தவிர்த்து மற்ற பையன்களை காப்பாற்றித் . தக்க வைத்துக் கொள்ள படிப்றிவில்லாத, ஏழைப் பெண்கள் போராடிக் கொண்டுள்ளனர். தாய்க்கோழி தன் செட்டைக்குள் குஞ்சுகளை மூடிப் பத்திரமாக பாதுகாப்பது போல தங்கள் ஆண் பிள்ளைகளை இரவு ஆகாரம் கொடுத்து, பாதுகாப்பாக பிற வீடுகளில் இரவு தூங்க வைக்கின்றனர். எந்த இரவு போலீஸ் வந்து தங்கள் ஆண் பிள்ளைகளை பிடிக்குமோ என்று விழி மூடாமல் காவல் காத்து வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மக்களின் குரல்கள், குமுறல்கள் பின்வரும் பக்கங்களில் பதிவு செய்யப்படுகின்றது.

அப்துல்லாஹ் (24)

நான் ஹாமிம்புரம் நான்காவது தெருவில இருக்கேன் முன்னால தமிழ்நாடு முஸ்லீம் முன்னேற்றக் கழக நகர செயலாளர் ஆகவும் இருந்தேன். ஹாமிம்புரம் நான்காவது தெருவுக்கு ஜமாத் துணை தலைவராக இருந்திட்டிருக்கேன். 10.09.1998 காலைல நாகர்கோவில் போக பாளை-பஸ்டாண்டு ரூட்

---



*வரலாறு, பண்பாடு என இரு தலைப்புகளில் தொகுக்கப்பட்டுள்ள இந்நூலில் யாழ்ப்பாண முஸ்லிம்களின் குடியேற்றமும் பரம்பலும் குறித்து விளக்குவதோடு போர்த்துகேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர், மற்றும் சுதந்திரத்தின் பின் என பல்வேறு கால பிரிவுகளில் முஸ்லிம்களின் வரலாற்றினை விரிவாக விபரிக்கின்றது.*

*யாழ்ப்பாண முஸ்லிம்களுக்கென தனித்துவமிக்க வரலாறுண்டு என ஆணித்தரமாக கருத்துக்களை சான்றுகளோடு முன்வைக்கும் ஆசிரியர் போர்த்துக்கேயருக்கெதிராக தமிழ்மன்னர்கள் யாழ்ப்பாண ராட்சியத்தைக் காப்பாற்றுவதற்காக நடத்திய போர்களில் முஸ்லிம்களின் பங்களிப்பினை விளக்க முனைகின்றார்.*

ஆசிரியர்: எம்.எஸ்.அப்துல்ரஹீம்

வெளியீடு: மு.ஜமால்தின்

75, அபூபக்கர் வீதி, யாழ்பாணம்

ஆண்டு – 1979



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

போகச் சொல்றீங்க' எனக் கேட்டேன். 'உனக்கு எந்த ஊர்டானு' கேட்டார். நான் 'மேலப்பாளையம்னு' சொன்ன உடனே கண் மூடித்தனமாக அடிக்கத் தொடங்கி 'துலுக்கப்பயலே'ன்னு திட்டி ஆட்டோவில ஏத்தி பாளையங்கோட்டை ஸ்டேஷனுக்கு கொண்டு போயி அடிச்சாங்க. அங்க இருந்த எழுத்தர் கந்தசாமி 'அல்-உம்மா தீவிரவாதியா நீ?' துலுக்க நாயே மாட்டுக்கறி தின்னு கொழுப்பு ரொம்படா உங்களுக்கு' என ஒட்டு மொத்த மேலப்பாளைம் முஸ்லீம்களையும் திட்டினார். 'தேவடியா மகனே உன்னைக் குண்டு கேஸில் உள்ளே தள்றேன்' என சுமார் இரண்டு மணி நேரம் அடித்தார்கள்.

சாதாரண உடையில் இருந்த சில காவல் துறையினர், 'இவன் மீது குண்டு கேஸ் போட்டு உள்ளே தள்ளுங்கள். இந்த வயதில் என்னடா தாடி வைக்கே. உனக்கு வக்கீல் ஹனிபா மகன் மூஸாவைத் தெரியுமா எனக் கூறி அடித்தார்கள். அத்துடன் உங்கள் ஊரில்தான் மாட்டை வெட்டறது போல் மனுஷனை வெட்டறீங்க எங்களை வெட்டுங்கடா பார்ப்போம்னு சொல்லிட்டு சரி பணம் கொடு, விட்டுடறேன் என்று கந்தசாமி (எழுத்தர்) சொன்னார். நான் போன் நம்பர் கொடுத்தேன். 11 மணிக்கு த.மு.மு.க. நகர தலைவர் கே. அப்பாஸ் த.மு.மு.க. மாவட்ட துணை தலைவர் இ.எம். ஜாபர் மற்றும் சிலர் வந்து ஸ்டேஷனில் வந்து விசாரித்தார்கள் அவர்கள் போனவுடன் என்ன கோயமுத்தூரா நான்கு பேர் வந்து மிரட்டிட்டுப் போறான்னு சொல்லிட்டு பூட்ஸ் காலால் மிதித்து தேவ்டியாப் பயலே நீங்களெல்லாம் கையில பேக்கை எடுத்துகிட்டு காலையிலேயே குண்டு வைக்கவாடா போறீங்க என அடிச்சாங்க. என்கிட்ட இருந்து 200 ரூபாய், விலை கூடின பேனா ரெண்டையும் எடுத்துகிட்டாங்க அப்புறம் மத்தியானமா விட்டாங்க.

ரேசன்கார்டு கொண்டு போலீஸ் பரிசோதனை செய்தாங்க. மக்கள் தொகை இங்க அதிகமா இருக்கு கார்டு கம்மியா இருக்காம். பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் தீவிரவாதியை நாங்க அடைக்கலாமா வைச்சிருக்கமான்னு சோதனை பண்றானாம்.

சீமராஜ்னு ஒரு இன்ஸ்பெக்டர் மனசில பெரிய விஜயகாந்த்னு நெனைப்பு எதற்கெடுத்தாலும் துப்பாக்கி தூக்கிக் காட்டி சுட்டுடுவேன்னு மிரட்டறார். கடையை காலால் மிதித்து வியாபாரிகளை துப்பாக்கிய காண்பிச்சி சுட்டுடுவேன்னு மிரட்றார்.

மேலப்பாளையத்தில் வாழுற முஸ்லிம்களை குற்றவாளிகளாக சித்தரிக்கும் போக்குக்கு முற்றுப் புள்ளி வைக்கனும். இனி வருங்காலம் பொறுமையா போக முடியுமான்னு தெரிலாது.

முத்து வாப்பா (தா.மா.கா) பிரமுகர்

சித்தரஞ்சன் பணக்காரப் பையன்களா பார்த்து பொய் கேஸ் போட்டுடறது. 10,000 ரூபாய் வாங்கிட்டு, விட்டுடறது. கொடுக்க முடியாதவங்க மேல் நான்கு, ஐந்து வழக்கு போடுறது இதையே வழக்கமாக வைச்சிருக்காரு. இத நான் மேடை போட்டே பேசினேன்.

ஷா ஆலம் (19) த.பெ. காஜா

வேலைக்குப் போயிட்டு வந்திட்டிருந்தேன். பிடிச்சிட்டாங்க. வீட்டுக்கு பிடிச்சிட்ட தகவல் அனுப்பி டவுன் ஸ்டேஷனில் (சித்தரஞ்சன்) வைச்சிருந்தாங்க. 25,000,- ரூபாய் கொடுத்தால் விட்டுறதா சொன்னாங்க அப்பா சமையல்காரர். கொடுக்க முடியல. அவங்க ஒரு வாரம் பார்த்துட்டு ரூபாய் வராதுன்னு தெரிஞ்சி என்மேல கேஸ் போட்டுட்டாங்க (தேசிய பாதுகாப்புச் சட்டம்) இப்பவும் இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் என்னைப் பார்த்து என்ன ஒழுங்கா இருக்கியா? இல்லை உள்ளே போடனுமான்னு கேட்பார். மாதத்திற்கு இரண்டு தடவையாவது இது மாதிரி கேட்பார். டிசம்பர் 6, பிரதமர் வந்தப்ப எல்லாம் என்னடா செய்யப் போறீங்கன்னு மிரட்டுறார்.

ராபியா பீவி (64)

காவல்துறையே முஸ்லீம் நடமாடக் கூடாதுன்னு அலையுது. சம்பாதித்துக் கொடுக்கற பிள்ளையை அவுங்ககிட்ட கொடுத்துட்டு பீடி சுத்தி காலம் கழிக்கோம். இதுலயும் பையன்களை வாய்தா, வாய்தான்னு ஊரு ஊரா கொண்டு போறாங்க. பிள்ளை சாப்பிட நாமதான் பணம் கொடுக்க வேண்டியிருக்கு பீடி சுத்தி காலம் கழிக்கயில்ல. வாய்தாவுக்கு, வக்கீலுக்கு பணம் கொடுக்க முடியலே. சொந்த வீடு இருந்தா வீட்டுமேலே கடன் வாங்கலாம் நாங்க என்ன செய்வோம். கச்சாத்து (பீடிக் கம்பெனி பாஸ் புக்) ரத்து பண்ணிருக்கேன். பணம் வரும் அத நம்பிதான் கடன் வாங்கியிருக்கேன். (பாஸ் புக் ரத்து செய்து விட்டால், பீடி சுற்றும் பொழுது பிடிக்கப்படும் பி.எப். பணம் கிடைக்கும்)

அஸன் பாத்திமா (நாகூர் மீரானின் தாய்)

வேலை பார்த்து வர்றப்ப என் பையனை, ஒரு பீடிக்கம்பெனி சேட்டை அடிச்ச கேஸ்ல பிடிச்சிட்டாங்க. அவன ஸ்டேஷன்ல வைச்சி அடிஅடின்னு அடிச்சி நகத்தை எல்லாம் பிச்சிட்டாங்க கோர்ட்லே கேஸ் தள்ளுபடி ஆயிடுச்சி அதன் பிறகும் போலீஸ் வீட்டுக்கு விசாரணைன்னு அடிக்கடி வந்தது. வீட்டில நான்கு பொண்ணுங்க. என் பையனை போலீஸ்ட்ட இருந்து காப்பாத்த கடனை வாங்கி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளிநாட்டுக்கு அனுப்பிட்டோம்.

ராபியா பீவி (சையது அலியின் பெரியம்மா)

ராத்திரி பையனைத் தேடி சப்-இன்ஸ்பெக்டர் சரவணன் வந்தார். ராத்திரின்னா அடிப்பாங்கன்னு பயந்து காலையிலே கூட்டியாரேன்னு, காலைல நான்தான் ஸ்டேஷன்ல கொண்டு போய் விட்டேன். ஒரு வாரம் தகவல் தெரியலை. அப்புறமா, ரயில்வே தண்டவாளத்திலே வைத்து மூட்டை நிறைய குண்டு வெடி பொருட்களோடு பிடிச்சதா பத்திரிக்கைல செய்தி வந்தது. பச்சப்பூ 17 - 20 வயதுள்ள சின்ன புள்ளீங்க என்ன செய்ததுன்னு இப்படி தூக்கிட்டு போயிடறாங்க. பையன போலீஸ் புடிச்சிட்டு போன சோகத்திலே அவங்க வாப்பாவும் தவறிட்டார். அம்மாவும் நோயாளியா கிடக்கா. இன்னொரு பையன் (சையது அலியின் தம்பி) இருக்கான். அவனையாவது நல்லபடியா காப்பாத்தனும். தினமும் அவன் வெளியில வேலைக்குப் போயிட்டு வர்ற வரை பயந்துகிட்டுதான் இருக்கேன்.

நான்தான் அந்தப் பயலை பக்கத்திலே படுக்க வைச்சி காவல் காத்துகிட்டு இருக்கேன்.

அபூபக்கர்.

இப்ப உள்ள இன்ஸ்பெக்டர் முரளி நல்ல மாதிரிங்க, விசாரிச்சிப் பார்த்து பொய் கேஸ் மாதிரி தெரிஞ்சா விட்டுடுவாரு, அவருதான் 'எங்க டிபார்ட்மென்ட்ல செஞ்ச தப்பை நாங்கதான் சரி செய்யனும் நீங்க உங்க மச்சினன் சையது அலி வழக்கை எடுத்து பெயிலுக்கு மூவ்பண்ணுங்க உள்ளே (சிறையில்) இருக்கறவனை நீங்க பார்க்க உதவுகிறேன். சரியான வழியில போங்க. தவறான வழியில் போய் விடாதீர்கள்' ன்னு சொன்னார். இப்போ பெயிலுக்கு வக்கீலைப் பார்த்து முயற்சி செய்துட்டு இருக்கேன்.

மைமூன் (55) முகைதீன் அப்துல்காதரின் தாய்

அவங்க வாப்பா சின்ன வயசிலேயே போயிட்டாரு. பீடிசுத்தி கஷ்டப்பட்டுத்தான் மூன்று பொண்ணு இரண்டு பையன் வளத்தினேன். சின்னவன் 13 வயதிருக்கும்போதே ஒழுங்கா காசு கொடுக்கமாட்டான், வேலைக்குப் போக மாட்டான். நான் சத்தம் போட்டேன். அப்பவே வீட்டை விட்டுப் போயிட்டான். மைதீன் அப்துல்காதர்னு வீட்டுக்கு தேடி போலீஸ் வருது. நாங்க அப்படி யாரும் இல்லைன்னு சொன்னோம். ரேசன்கார்டு எடுத்துப்பார்த்தாங்க அதுலயும் முகைதீன் அப்துல் காதர்னுதான் இருக்கு அப்படியும் விடலை.

ஜீப் நிறைய ஆட்கள் வந்து தேடுறேன்னு வர்றாங்க. ஆயுதம் இருக்கான்னு இரண்டு, மூணு வாட்டி சோதனை போட்டாங்க. மைதீன் அப்துல் காதரப் பிடிச்சிக் கொடுத்தா 2 லட்சம் ரூபாய் பரிசு அறிவிச்சிருக்காங்க. 2 லட்சத்தை விட முடியுமா அதுதான் வர்றோம். உண்மையான ஆளப் பிடிக்காமல் அடிக்கடி இங்க தேடி வர்றதால என் பொம்பளப் புள்ளீங்க வாழ்க்கை பாதிக்கப்படுது மருமகனை போலீஸ் போய் விசாரிக்கதால என் பொண்ணை அம்மா வீட்டுக்கே போன்னு அனுப்பிட்டாங்க. இன்னொரு பொண்ணுக்கு மாப்பிள்ளை வீடே வர மாட்டேங்குது போலீஸ் வர்ற வீடுன்னு தட்டி தட்டிப் போறதுங்க.

தெருக்காரங்க எங்கள ஒருமாதிரியா பார்க்கிறாங்க (இவர்கள் வீட்டிற்குச் சென்றபொழுது, அப்பொழுது ஒரு மாப்பிள்ளை வீட்டார் வருவதால் விசாரிக்க என்று ஆட்கள் வருவது தெரிந்து இந்த மாப்பிள்ளை வீடும் தட்டிப் போய் விடுமோ என்று மிகவும் பயந்தனர்)

முகைதீன் அப்துல் காதரின் சகோதரி

மாப்பிள்ளைமார் வேலை செய்ற இடங்களுக்குப் போய் மச்சினன் இருக்கற இடத்தப்பத்திச் சொல்லு 2 லட்சம் தர்றேன்னு சொல்றான். ஒரு மாதம் முன்பு சிலை உடைப்பு நடந்தப்ப வந்து விசாரிக்கிறான். சின்ன வயசில போனவன் என்ன ஆனான்னே தெரியல இங்க வந்து விசாரிக்கேன்னு தொந்தரவு பண்றாங்க. வெளியில தலை காட்ட முடியல. கொமரு வாழ்க்கையை நெனைச்சா கவலையாய் இருக்கு கண்ணீர் வடிச்சிட்டு இருக்கோம்.

அஜ்மீர் (26) த. பெ. பீர்முகம்மது

எனக்கு பையன் பிறந்து 40 நாள் ரம்ஜானுக்கு அம்மா வீட்டில இருந்தேன். எங்க வீட்டில பூட்டை உடைத்து சோதனை போட்டுட்டு விசாரிக்கனும்னு 99 பிப்ரவரி 4ந் தேதி நள்ளிரவு 2 மணிக்கு கூட்டிட்டுப் போனாங்க நேரே வீரவநல்லூர் போலீஸ் ஸ்டேஷனுக்கு கொண்டு போய் அடிச்சாங்க 5ந்தேதி இரவு சேரன்மகாதேவி, ஆர்.சி. ஸ்கூலுக்குப் பின்னால உள்ள தண்டவாளத்தில குண்டு வைக்க குழி தோண்டும் பொழுது பிடித்ததாக புகார் போட்டு 6ந் தேதி கோர்ட்ல ஒப்படைச்சாங்க அப்புறம் கொலை கேஸ் திருட்டு கேஸ் எல்லாம் போட்டு தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் சிறை. போன வருடம் தேசிய பாதுகாப்புச் சட்டம் மார்ச் 2000 த்தில பாதுகாப்புச் சட்டம் முடியுது. ஒரு வழியாக வெளியே போயிடலாம்னு நெனைச்சப்போ கொள்ளை கேஸ்ல சம்பந்தப்பட்டிருக்கேன்னு வாரண்ட் வருது. திரும்பவும் ஒன்பது மாதம் ஜெயில்ல போட்டுட்டாங்க எனக்கும் இதுல எந்தக் கேஸிற்க்கும் சம்பந்தம் இல்லை.

அப்துல்ரகுமான் (24)

என்னை கொலை கேஸ்ல பிடிச்சாங்க.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்தில பாதுகாப்புச் சட்டம் முடியுது. ஒரு வழியாக வெளியே போயிடலாம்னு நெனைச்சப்போ கொள்ளை கேஸ்ல சம்பந்தப்பட்டிருக்கேன்னு வாரண்ட் வருது. திரும்பவும் ஒன்பது மாதம் ஜெயில்ல போட்டுட்டாங்க எனக்கும் இதுல எந்தக் கேஸிக்கும் சம்பந்தம் இல்லை.

அப்துல்ரகுமான் (24)

என்னை கொலை கேஸ்ல பிடிச்சாங்க. (இவர் வீடு மேலப்பாளையம் காவல் நிலையத்திற்கு எதிர் வீடு) சாதாரணமா தொழுகைக்குப் போறப்போ, பாய் குடிக்கத் தண்ணீர் குடுன்னு கேட்டாங்க. கொண்டு போய் கொடுத்தேன். விசாரிக்கனும்னு சொல்லி உட்கார வைச்சி கொலையை ஒத்துக்கச் சொன்னாங்க. ஊர் நிலவரம் மோசமாக இருக்கிறது. நீ ஒத்துக் கொண்டால் சால்வ் பண்ணலாம்னு சொன்னாங்க. 4 மாதம் கழிச்சி பெயில்ல வந்தேன். இரண்டு நேரம் காலை மாலை கையெழுத்துப் போடனும். சாயந்திரம் கையெழுத்துப் போடப். போனேன். கொஞ்சம் இரு விசாரிக்கனும்னு சொன்னாங்க இன்ஸ்பெக்டர் வீரமணி ஆள் கிடைக்கவில்லை உன் மேல இரண்டு கேஸ் போட்டிருக்கேன்னு சொன்னார். பாம் கேஸ் எல்லாம் சேர்த்து குண்டர் சட்டத்தில் போட்டாங்க வீட்டு சோதனைன்னு அம்மா, அப்பாவை மிரட்டினாங்க எங்க அப்பா வாயக்குள்ள லத்தியை விட்டு அடிக்கிறது போல மிரட்டிருக்காங்க மறுநாள் எல்லாப் பத்திரிகையிலும் தீவிரவாதிகள் வீட்டில் சோதனை போட்டா போட்டு தீவிரவாதி அப்துல்ரகுமான்னு செய்தி போட்டாங்க.

காஜா மொய்தீன் (மண்ணெண்னை காஜா)வின் தந்தை ஷாகுல் அமீது

இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் மேலப்பாளையத்தில் ஜாயிண்ட் பண்ணி மொதமொதல்ல பொய் கேஸ் போட்டது என் பையனாகத்தான் இருக்கும். ராத்திரி 11.00 மணிக்கு விட்டுக்கு வந்து விசாரிக்கன்னு மேலப்பாளையம் ஸ்டேஷனுக்கு கூட்டிப்போய் ரவண்ட்ல விட்டு அடிச்சாங்க 11 நாளாக நாங்க கலெக்டருக்கு பையனைக் காணோம்னு தந்தி, டெலகிராம் கொடுத்தோம். மறுநாள் மத்திய சிறையில் அடைச்சிருக்குன்னு சொன்னாங்க அப்புறம்தான் கொலை கேஸ் போட்டிருக்காங்கன்னு தெரியும்.

மூன்று மாதம் கழிச்சி பெயில்ல எடுத்தேன், பஸ்சை உடைச்சான்னு பொய் கேஸ் போட போலீஸ் வந்தது. இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் 5000 ரூபாய் வாங்கிட்டு அந்த கேசை போடாமல் விட்டுட்டார். அப்புறம் வெட்டுக்கேஸ் அது இது நான்கு, ஐந்து கேசை போட்டாங்க லஞ்சமா மட்டும் இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் மற்ற போலிசுக்கும் 30,000க்கும் மேல் கொடுத்திருப்பேன்.

நூர் முகம்மது (22) த/பெ. காஜா மொய்தீன்

நள்ளிரவு 2 மணிக்கு போலீஸ் வந்தது. அப்போ எங்க வாப்பா இறந்து எங்க அம்மா இத்தாவுல இருந்தாங்க. (இத்தா என்பது இஸ்லாமிய சட்டப்படி கணவன் இறந்த பின்பு மனைவி பிற ஆடவர் கண்ணில் படாமல் 4 மாதம் இருப்பர். அப்பொழுது மனைவி வழி இரத்தச் சம்பந்தம் உள்ளவர்கள் தவிர பிற நெருங்கிய உறவு ஆண் உறவினர்களே அப்பெண்ணைப் பார்க்க கூடாது. ஒரு வீட்டில் இத்தாவில் பெண் இருக்கிறாள் என்பதற்கு அடையாளமாக வீட்டின் குறுக்கே வெள்ளைத் துணியால் திரை கட்டியிருப்பர்) அப்ப நாங்க இத்தால இருக்காங்க உள்ளே போகக் கூடாதுன்னு சொன்னோம் எதையுமே போலீஸ் காதுல வாங்கிக்காம உள்ளே நுழைந்து தேடுது என்னைப் பிடிச்சுட்டு நேரா பை பாஸ் ரோட்டுக்கு கொண்டு போயி அடிச்சாங்க எட்டு ஆள் அடிச்சாங்க லாடம் கட்டி அடிச்சாங்க.

ஊர்ல முக்கிய பிரமுகர்கள் எல்லாம் வந்து இஸ்லாம் சட்டம் விரோதமாக போலீஸ் செயல்பட்டிருக்குன்னு எல்லோரும் எதிர்த்து கிளம்பினாங்க என்னைக் காணோமனு முதல்வர், மனித உரிமை ஆணையத்துக்கு எல்லாம் தந்தி கொடுத்தாங்க.

போலீஸ் வந்தது. பையனை நாங்க விடனுன்னா நாங்க யாரும் உங்களை தொந்தரவு செய்யலைன்னு எழுதிக் கொடுங்க இல்லன்ன உங்கள் பையன் மீது கேஸ் போடுவோம்னு போலீஸ் இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் மிரட்டினார். எங்கம்மா வெள்ளை தாளில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தாங்க என்னையும் வெளியில் விடும் பொழுது யார் சொல்லையும் கேட்டு ஏதாவது செஞ்சேன்னா வேற கேஸ்ல போட்டுடுவேன்னு மிரட்டினார்கள்.

நாகூர் மீரான் (தமிமுல் அன்சாரியின் தாய்) ஷாகுல் அமீது.

போலீஸ் வந்து விசாரிக்கனும்னு சொல்லி வந்தாங்க. பையன் இல்லை என் மருமகனை, ஊர்ல இருந்து வந்திருந்த எங்க சொந்தக்காரப் பையன் (ஸ்கூல் படிப்பவன்) விருந்துக்கு வந்திருந்த புதுமாப்பிள்ளையை வீட்டில வாடகைக்கு குடி இருந்த ஆளை இப்படி பிடிச்சிட்டு போயிட்டாங்க. காலையில் எம் பையன் வந்தான். அவனை ஸ்டேஷனுக்கு போக வேண்டாம்னு சொன்னேன். எனக்காக இவ்வளவு பேரை பிடிச்சிருக்கான் நான் போறேன். அல்லா பார்த்துக்குவான்னு போனான் என் பையனை விசாரணைன்னு அடிச்சி அவனைத் தெரியுமா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழுவான் அவன் எப்படி பொய் பேசுவான்? அவனைப் பொய் கேஸ்ல போட்டாங்க பெயில செலவு பண்ணி எடுத்தேன்.

'கண்ணகி (அலங்கார்) தியேட்டர்ல படம் பார்த்துட்டு இருந்தவன் பிடிச்சிட்டுப் போயி திருச்சில அரிவாளோட பிடிச்சதா போட்டோவோட நியூஸ் போட்டாங்க பேப்பர்லயும், டி.விலயும்பார்த்துட்டு வயறெறிஞ்சு போச்சுங்க'.

என் பையனை ஐடி ஐடி ன்னுதான் கூப்பிடுவாங்க போலீஸ்காரன் வந்து என் பையனை பிடிக்கும்போது சொல்றான். ஐடி ன்னா பெரிய ஆளுன்னு நெனைச்சேன் . சின்ன பயலா இருக்கானேன்னு சொன்னான்.

60,000 க்கு மேலே செலவு பண்ணி தேசிய பாதுகாப்புச் சட்டத்தை உடைச்சி இங்கக் (பாளை சிறை) கொண்டு வந்தேன்.

என் பையனை வாய்தான்னு திருச்சி, மதுரைன்னு கொண்டு போவாங்க அவன் சாப்பாட்டுச் செலவுக்கு 300 ரூபாய் நாதான் கொடுக்கனும். வீட்டை வித்து கேஸிக்கு செலவு பண்றேன். பீடி சுத்தி அவ்வளவு கொடுக்க நம்மால ஏலுமா. பீடிக்கம்பெனி கச்சாத்தை (பாஸ் புக்) முறிச்சித்தான் கிடைக்கிற ரூபாயை செலவு பண்ணனும்ம்னு நெனைச்சிருக்கேன்.

அவன் முதல்ல பிடிக்கும்போதே எனக்கு நெஞ்சுவலி வந்தாச்சு. இப்பவும் ரொம்ப முடியலே. அவன் வெளியே வர்றதுக்குள்ளே நான் போயிடுவேன்

காஜா மொய்தீன் (பாட்ஷாவின் தந்தை)

என் பையனை இராத்திரி ஒன்பது மணிக்கு விசாரிக்கன்னு கூட்டிட்டுப்போனான். மூன்று நாள் எங்கே என்னன்னு ஒண்ணுமே தெரியாது வேனை கொண்டு வந்து இறக்கி என் கண்ணு முன்னால் ஆம்புலன்ல ஏத்தினான் என்னடா பாவின்னு நான் போறதுக்குலே தூக்கிட்டு போயிட்டான்.

திருச்சி மலைல கொண்டு போயி மரத்தில தலகீழாக் கட்டித் தொங்கவிட்டு அடிச்சிருக்கான் வாயில பன்னை வைத்து 10 கம்பு நொடியிறப்புலா அடிச்சான்.

7000 கொடு கேஸ்ல ஓய்ச்சிரேன்னு இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் சொன்னான். அன்னேரம் அவ்வளவு பணம் இல்லை.

15 நாள் கழிச்சி டி.வி. பேப்பர் பார்த்துதான் என்ன கேஸ் போட்டிருக்கான்னு தெரியும்.

எஸ்.எஸ். அப்துல் லத்தீப் (64)

நானும் வின்சென்ட் அபூபக்கரும் நெருங்கிய நண்பர்கள் அவர் கொலையான அன்னிக்கு நான் டவுனுக்குப் போயிட்டேன். இருந்திருந்தா என்னையும் சேர்த்து வெட்டி போட்டிருப்பான்ங்க. போலீஸ் என்னை பிடித்து வின்சென்ட்ட கொலை பண்ண எவ்வளவு பணம் கொடுத்தேன்னு கேட்டது. எதுவும் தெரியாதுன்னு சொன்னேன். விசாரிச்சிட்டு விட்டாங்க. ஒரு வருடம் கழித்து வின்சென்ட் நான் கொலை பண்ண பணம் கொடுத்து ஆள ஏற்பாடு செய்ததாகவும், 10 மாதம் தலை மறைவா இருந்ததாகவும் அப்ப கைது பண்ணதாவும் போலீஸ் கேஸ் போட்டுடிச்சி 10 மாதமும் நான் ஜமா - அத் தலைவன் என்ற முறையில நான்கு, ஐந்து நிக்காஹ் நடத்தி வைத்திருக்கேன். ஊரில நல்லது, கெட்டதுல கலந்திருக்கேன். காவல் துறையினரால் நடத்தப்படும் அமைதிக் கூட்டங்களில் கலந்துட்டிருக்கேன். என்மேல பொய்யா இப்படியெல்லாம் கேஸ் போடுறாங்க 45 நாள் ஜெயில்ல இருந்து பெயில்ல வந்தேன் 2 வருஷம் ஆவுது இன்னமும் குற்றப்பத்திரிக்கை தரலை. வழக்கு விசாரணைக்கு வந்தால்தான் உடைக்க முடியும் எப்ப முடியும்னு தெரியலை.

மைதீன் பாத்திமாள் (48) சித்திக் அபுதாகீரின் தாய்

என் இரண்டு பிள்ளைகளையும் போலீஸ் அடிச்சி, இம்சித்தது, மூத்தவன் அடிப் பொறுக்க முடியாமல் பெயில்ல வந்தவன் வெளியூர் எங்கேயோ போயிட்டான் என்ன ஆனான்னே ரொம்ப நாள் தெரியலை.

அண்ணனைத் தேடி வந்த போலீஸ் என் இரண்டாவது பையன் அபுதாகீரைப் பிடிச்சிட்டு போச்சு. வீட்டை அடமானம் வைச்சி பையன பெயிலில் எடுத்தேன் அவனையும் தொடர்ந்து விசாரணைன்னு இராத்திரி வந்து போலீஸ் பிடிச்சிட்டுப் போயி சித்ரவதை பண்ணினாங்க என் இரண்டாவது பையனும் ஓடிப் போயிட்டான்.

என் பையங்க இரண்டு பேரையும் தேடி வந்து போலீஸ் ரொம்ப தொந்தரவு செஞ்சது. வீட்டில குமரு (திருமணமாகாத பெண்) இருந்தது. போலீஸ் வந்துகேட்பான். இப்படியொரு பிள்ளைய பெத்து கொலை செய்ய விடுறியேன்னு கேட்பான். எங்க வீட்டில பின்பக்கமா வீட்டை உடைச்சி போலீஸ் சோதனை போட்டிருங்காங்க நெறைய பேப்பரை, என் பையனோட சர்டிபிகேட்ஸ் எல்லாம் எடுத்துட்டுப் போயிட்டாங்க.

குர்-ஆனைத் தூக்கிப் போட்டு மிதிச்சாங்க. நாங்க மனித உரிமை ஆணையம் எல்லாத்துக்கும் எழுதினேன். போலீஸ் வந்து பையனை விட்டுறேன்னு சொல்லி இரண்டு, மூன்று வெற்று பேப்பர்ல மிரட்டி கையெழுத்து வாங்கிட்டுப் போயிட்டாங்க ஆனாலும் என் புள்ளைய இன்னும் விடலை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சித்திக் அபுதாகிரின் பெரியப்பா:

காவல் நிலையத்தில் மைதீன் பாத்தீமாளை அடிக்கும் போது பக்கத்து ரூம்ல இருந்தார் நான் இவளை போலீஸ் அடிக்கறதைப் பார்த்து சொல்லிக்கிட்டே இருக்கேன் அவளை அடிக்காதிங்க. அவள் ஹார்ட் பேஷண்ட் செத்துப் போயிடுவாள். அவளுக்கு 13 வருஷமாக ட்ரீட்மெண்ட் எடுத்துட்டு இருக்கேன். டாக்டர் கோபாலை வேணும்னா கேளுங்கன்னு நான் கதர்றேன் காதிலேயே வாங்கலை. (அடிச்ச அடில கம்பு ஒடையுது அவள் பொழைப்பான்னே நான் நெனைக்கலே ஒரு பொம்பளைய சித்ரவதைப் படுத்தியா தகவல் வாங்கனும் போலீஸ்க்கு கண்டுபிடிக்க எவ்வளவு வழி இருக்கு

காஜா மொய்தீன் (21) அகமது அலி

நான் ஒசூரில் ஆட்டோமொபைல் கடை வைத்திருந்தேன். ஊருக்கு வந்திருந்த நேரத்தில் நண்பர்களுடன் டூர் போனபோது பேட்டையில வைச்சி போலீஸ் பிடிச்சி பொய்யாக கொலை வழக்கு போட்டார்கள். 3 மாதம் கழித்து பெய்லில் வந்தேன் அடுத்து ஒரு மூன்று மாதம் ஆயிஷாவிட மிருந்து குண்டு வாங்கினேன்னு அடுத்த கேஸ் போட்டார்கள். வீட்டுல இருந்து விசாரணைக்குன்னு கூட்டிட்டுப் போயி கேஸ் போட்டிட்டாங்க ஆறு மாதம் ஜெயில்ல இருந்தேன். அப்புறம் பெயில்ல வந்து நான்கு மாதம் இருந்தேன். எங்கப்பா பீடிக் கம்பெனியில வேலை பார்க்கிறார். போனஸ் போட கொண்டு போன பணம் மூன்றடைப்பு கிட்ட வைச்சி யாரோ கொள்ளை அடிச்சிட்டாங்க அந்தக் கொள்ளையை நான்தான் செஞ்சேன்னு என்மேல வழக்கு போட்டாங்க. இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் இராத்ரி 11 மணிக்கு கதவைத் தட்டி கூட்டிட்டுப் போனான். நேராக மேலப்பாளையம், பாளை பை-பாஸ் ரோட்டில உள்ள சர்ச் பக்கத்தில வச்சி அடி அடின்னு அடிச்சாங்க கம்புல உள்ள ஆணியால் ஓங்கி தடிவீரன் என்கிற போலீஸ் குத்தினான் (வலது காலில் முழுங்காலிற்கு கீழ் ஆணி குத்திய ஓட்டை இருக்கிறது) அவங்க எழுதி வைத்திருந்த பேப்பரில கையெழுத்துப் போடச் சொல்லித்தான்அடிச்சாங்க.

பணம் கொள்ளை வழக்குல 10,000 ரூபாய் கொடுத்தால் என்னை விட்டுடறதா இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் சொன்னார். அப்பாவும் பணம் கொடுக்கப்போனார். பக்கத்தில் வக்கீல் இருந்ததால இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் பணம் வாங்கலே என் மேலே கேஸ் போட்டார்.

1998ல் என்னைக் கொண்டு போயி திருச்சி ஜெயில்ல வைச்சிருக்கும் போது ஜெயில்ல ரொம்பக் கொடுமை பண்ணினாங்க ஜெயிலுக்குள்ளேப் போகும் போது அட்மிஷன் அடி அடிச்சி ஆடைகளை எல்லாம் உரிந்து நிர்வாணப் படுத்தி கொட்டறைக்குள்ளே போட்டு அடிச்சாங்க வாய்தாவுக்கு வரும் போது மட்டும் ஒரு லுங்கியும், சட்டையும் கொடுப்பாங்க. பிறகு ஜெயிலுக்குள்ளேப் போகும் போது நாமளே டிரஸ்ஸை கழட்டிடனும். இல்லேன்னா அடிச்சி கழட்டுவாங்க. நாங்க கோர்ட்டுக்குப் போயிட்டு வரும்போது எதையும் கொண்டுட்டு வருவோமோன்னு Searching பண்ணுவாங்க. திரும்பவும் தனித் தனி கொட்டறையில நிர்வாணமா அடைச்சிடுவாங்க. இராத்திரியானா ரூம்க்குள்ளே தண்ணி ஊத்திவிட்டுடுவாங்க கொசு கடிக்கும் உட்காரக் கூட முடியாது மூணு மாதம் இப்படி பண்ணினாங்க.

வாய்தாவுக்கு போகும் போதுதான் எங்களை(முஸ்லீம்) மட்டும்தான் எல்லா ஜெயில்லயும் இப்படி அடிச்சாங்கன்னு தெரியும் நாங்க கோர்ட்ல சொன்னால் எஸ்கார்டு ஜெயிலர் கிட்ட சொல்லிக் கொடுத்து ரொம்பவும் அடிப்பாங்க. சில பேர் ஜட்ஜ்கிட்ட சொன்னாங்க அதுக்கு ஜட்ஜ் தனி பெட்டிஷன் கொடுன்னு சொன்னாரு. அவங்களை எல்லாம் திரும்ப ஜெயிலுக்குப் போகும் போது ரொம்ப அடிச்சாங்க என்னோட ஜீன்ஸ், சட்டை, ஷீ எல்லாம் வார்டன் போட்டுட்டு அலைஞ்சான்.

ஹபிபுல்லாஹ்:

29-12-2000 அன்று அதிகாலை 3.00 மணிக்கு முகம்மது ஹபிபுல்லாஹ் என்பவரது வீட்டுக் கதவுத் தட்டப்பட்டது. அவர் கதவைத் திறந்த போது இன்ஸ்பெக்டர் சித்தரஞ்சன் மற்றும் சில காவலர்களுடன் வாசலில் நின்று உங்கள் மகன் பெயர், வயது சொல்லுங்கள் என்றார். எனக்கு மகன் கிடையாது ஐந்து பெண்மக்கள்தான் என்று சொல்லியிருக்கிறார். உடனே காவலர்கள் அவர் வீட்டிற்குள் நுழைந்தனர். உறங்கிக் கொண்டிருந்த பெண் குழந்தைகள் பதறி பயந்து விட்டனர். இந்நேரத்தில் உடன் எந்தப் பெண் போலீசாரும் வரவில்லை. பெண் குழந்தைகள் இரவு உறங்கும் நேரத்தில் காவல் துறையின் பெண் காவலர் இன்றி உள்ளே சென்று சோதனையிடுவது காவல்துறையின் ஒடுக்கு முறையைக் காட்டுவதாக உள்ளது.

## தொடரும் சம்பவங்கள் :

சிறுவர்களை 16 - 21 வயதுள்ள பையன்களை விசாரணை என்று அழைத்துச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**நீங்கள் எதிர்பார்ப்பது ஒரு மேம் போக்கான நோக்கில், வடக்குக்கு திரும்பி அங்கு வாழ்வது மாத்திரம் தானா?**

வடக்கு எங்கள் தாயகம். நாம் வடக்கிற்கு உரிமையோடு சென்று சுயகௌரவத்துடனும் தன்மானத்துடனும் எவருக்கும் அடிமைப்படாமல் எங்கள் தனித்துவத்துடனேயே நாம் வாழவேவிரும்புகின்றோம்.



வடக்கு முஸ்லிம்களின் உரிமைக் கான அமைப்பின் செயலாளர் மௌலவி B.A.S.சுப்யான்

உள்ளே சென்று சோதனையிடுவது காவல்துறையின் ஒடுக்கு முறையைக் காட்டுவதாக உள்ளது.

## தொடரும் சம்பவங்கள் :

சிறுவர்களை 16 - 21 வயதுள்ள பையன்களை விசாரணை என்று அழைத்துச் சென்று மிரட்டி, கைரேகை, போட்டோ எடுத்து வைத்துக் கொள்ளும் நிலை (கலீல் ரகுமான் (21) 25-03-2001) இன்று வரை தொடர்கிறது.

விசாரணைக்கு என்று அழைத்துச் சென்ற ஷேக்மைதீன் என்ற சிறுவனை குறித்து விசாரிக்க காவல் நிலையம் சென்ற கே.எஸ். சாகுல் ஹமீது என்ற வரும் உடன் சென்ற ஜமாத் தலைவர்கள், பெரியவர்களை காவல் தறை உதவி - ஆய்வாளர்கள் மரியாதையின்றி தரக்குறைவாகப் பேசி விரட்டும் நிலைதான், இன்றும் நீடிக்கிறது.

முடிக்கும் முன்பாக

சிறுபான்மைச் சமயத்தாருக்குச் சட்ட ரீதியான பாதுகாப்பு கொடுக்கப்பட்டு வருகின்றது எனினும் பெரும்பான்மை சமய அடிப்படையில், மக்களை ஒருங்கிணைத்து அரசியல் ஆதாயம் காணும் வகையில் வளாந்து வரும் பெரும் பான்மை வகுப்பு வாதம், மதச் சிறுபான்மை யினரை எதிரிகளாக்கி அரசியல் நடத்திட வருவது அண்மைக் கால நிகழ்வுகளாகும். எங்கோ ஒரு இசுலாமியரும், சிறித்தவரும் மக்கள் எதிரிகளாகக் காட்டப்பெறு கின்றனர். சிறிய சிறிய பூசல்கள் மதப்பூசல்களாகக் காட்டப்பட்டு, மக்களைப் பிளவுபடுத்தி, வன்முறை கட்ட விழ்த்து விடப்படுகிறது.

1998-ல் கோவையில் நடத்தப் பெற்ற கலவரம், தொடர்ந்த குண்டு வெடிப்பு, ஒரு நாளில் நடந்த தனித்த நிகழ்வல்ல. பலவாண்டு களாகத் திட்டமிட்டு சிறுபான்மையினருக்கு எதிரான பிரச்சாரத்தின் விளைவு என்பதை பி.யு.சி.எல். அறிக்கை நிரூபிக்கிறது. கோவை கலவரத்தினால், கிடைக்கும் அதிர்ச்சி தரும் செய்தி என்னவெனில், மக்களிடம் மட்டுமல்ல போலீஸ்சாரிடமும் வகுப்பு வாதக் கருத்துக்கள் ஊடுருவியுள்ளன என்பதுதான் என்று மக்கள் தன்காணிப்பகம் என்ற மனித உரிமை அமைப்பு சமீபத்தில் வெளியிட்டுள்ள தமிழகத்தில் மனித உரிமைகள் 1998 - 2000 என்ற ஆய்வறிக்கையில் தெரிவிக்கிறது.

கோவை கலவரம் தொடர்பாக மக்கள் சிவில் உரிமைக் கழக அறிக்கையின் முக்கிய குறிப்புகள் சிலவற்றை இங்கு அறியத் தருவது தேவையானது.

* இந்து முன்னியின் தலைவர் திரு. ராமகோபாலன் கோவைக்கு பலமுறை வருகை தந்து, பொதுக்கூட்டங்களில் முஸ்லீம்களை பற்றியும் இஸ்லாம் குறித்தும் இழிவுபடுத்தி கோபத்தை தூண்டும் வகையில் பேசியுள்ளார்.

* சில வருடங்களுக்கு முன் ஆர்.எஸ்எஸ். அலுவலகத்தில் நடைபெற்ற குண்டு வெடிப்பைத் தொடர்ந்து கோட்டைமேடு பகுதியில் போலீசார் நுழைந்து சேதப்படுத்தியுள்ளனர். ஒட்டுமொத் தமாக அனைத்து முஸ்லீம் இளைஞர்களையும், சிறுவர்களையும் பொய்க் காரணங்களின் அடிப்படையில் கைது செய்து சிறைக்காவலில் வைத்து கொடூரமாக தாங்கியுள்ளனர். இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாங்கள் நாள் முழுமைக்கும் குற்றவாளிகள் போன்று நடத்தப்படுவது போன்ற மனநிலையை அடைந்தனர்.

* கோட்டைமேடு பகுதியில் கிட்டத்தட்ட 80 சதவிகிதத்தினர் முஸ்லீம்கள் ஆவார்கள். மீதமுள்ளவர்கள் இந்துக்களும் மற்றவர்களுமாவர். மேலே குறிப்பிடப்பட்ட மோசமான காலக்கட்டங்களில் கூட இங்குள்ளவர்கள் அமைதியாகவே வாழ்ந்து வந்துள்ளனர்.

* முஸ்லீம் சமூகத்தினர் மீதான இத்தகைய தாக்குதல் அவர்களுக்குத் தேவையான ஒன்றுதான் என்று கருதும் போக்கே இந்துக்களிடம் காணப்படுகிறது. ஆனால் இவர்களுடன் தொடர்ந்து விவாதிக்கும் போது அவர்களது மேற்சொன்ன உணர்வுகளை நியாயப்படுத்தும் வகையில் எந்த ஒரு நேரடி அனுபவமோ மற்ற தகவல்களோ அவர்களிடம் இல்லை என்று தெரியவருகிறது.

* இந்து முன்னணி, வி.ஹெச்.பி., ஆர்.எஸ்.எஸ் போன்ற சங்பரிவாரங்களால் தொடர்ந்து ஊதிப் பெருக்கப்படும் இந்து மதவெறி உணர்வின் விளைவுதான் ஒரு சில முஸ்லீம் அமைப்புகளின் சீற்றம் கொண்ட எதிர்வினைகளாகும்.

* போலீசாரில் ஒரு பகுதியினரிடம், எவரும் அறியக்கூடிய வகையில் வளர்ந்துள்ள முஸ்லீம் மக்களுக்கு எதிரான மனோநிலைதான், முஸ்லீம் மக்களுக்கு எதிரான இவர்களின் நியாயமற்ற ஒரு தலைபட்சமான அதிகாரச் செயல்பாட்டுக்கு காரணமாகும்.

* இந்து-முஸ்லீம் பிரச்சனைகள் குறித்த செய்தி தொடர்பு சாதனங்களின் முழுமையற்ற, ஒரு தலைப்பட்சமான செய்தி வெளியிட்ட முறை.

* பெரும்பாலும் உண்மைக்குப் புறம்பான, ஆதாரமான தகவல்கள் ஏதுமின்றி, இந்து மத அறிவுஜீவிகள் பரப்பிவரும், திட்டமிட்ட பகை உணர்வைத் தூண்டக்கூடிய பிரச்சாரங்களை எந்தவகையிலும் எதிர்கொள்ளாத அரசியல் கட்சிகளின் வெறுமை, இத்தகையப் பொய் பிரச்சாரங்களை எத்தகையப் பரிசீலனைக்கும் உட்படுத்தாமல், அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ளும் பொதுமக்களின் சோம்பல் மனோநிலை, இப்பிரச்சாரங்கள் மேலும் பரவுவதற்கான மற்றொரு இரண்டாம் களமாகியுள்ளது.

எனினும்,மேலப்பாளையம் மக்களின் இன்றைய நிலையுடன் மேற்குறிப்பிட்ட காரணங்களுள் ஒத்திருப்பதை அறியலாம்.

மேலப்பாளையம் மக்களின் அன்றாட வாழ்வில் இந்து-முஸ்லிம் மக்களிடையேயுள்ள அன்னியோன்யத்தன்மை குறையவில்லை என்பதை களப்பணியின் போது கிடைத்த தகவல்கள் நிருபிக்கின்றன. இந்து வியாபாரிகள் சகஜமாக தாங்கள் வணிகத்தை மேலப்பாளைய வீதிகளில் தொடர்ந்து கொண்டுதான் உள்ளனர். மேலப்பாளையம் முஸ்லீம மக்கள் பிற சாதி இந்துக்களுடன் மாமன், மச்சான் சித்தி, சித்தப்பா என்ற உறவுகளுடன் தங்கள் நெருக்கத்தை உறுதி செய்து கொண்டுதான் வாழ்ந்து வருகின்றனர்.

காவல் துறையில் புகுந்துள்ள கருப்பு ஆடுகள், தங்களது சுய நலத்திற்காகவும், அரசியல் ரீதியான சில அரசியல் கட்சிகள், பிரமுகர்கள் தங்களது செல்வாக்கினை காட்டுவதற்காகவும் தொடர்ந்து அப்பாவி முஸ்லிம் மக்கள் பலியிடப்படுகின்றனர்.

இவர்களை இனம் கண்டு, களையெடுத்து விட்டாலே மேலப்பாளையம் எக்காலத்திலும் சமாதான பூமியாகவே இந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு இந்தியாவிற்கு வழிகாட்டியாக விளங்கும். என்பது மேலப்பாளையம் மக்களின் ஒட்டுமொத்த எண்ணமாக உள்ளது. அரசு நிர்வாகத்தின் கையிலேயே மேலப்பாளையத்தின் விதி உள்ளது. அரசு நிர்வாகம் விழித்துக் கொண்டு, காவல்துறை கருப்பு ஆடுகளையும், பிரச்சினைக்கான வேர்களையும் அடையாளம் கண்டு களையப் போகிறதா? அல்லது அரசியல் ஆதாயத்திற்காக கண்டும் காணாமல் இருந்து விடப் போகிறதா? என்பதைப் பொறுத்தே இனி மேலப்பாளையம் முஸ்லீம் மக்களின் குறிப்பாக இளைஞர்களின் தலைவிதி எழுதப்படும்.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எச்சரிக்கை

நஸீறுதீனின் சிறு கதைகள் தினக்குரல் பத்திரிகையில் வெளி வந்ததாலும், முஸ்லிம் சமூகத்திற்கு யாழ்ப்பாணியத்தின் மீதான எச்சரிக்கை அவசியம் எனக்கருதுவதாலும் இச்செய்தி மிக முக்கியமானதே.

பிரான்ஸில் நடைபெற்ற 27 வது இலக்கியச் சந்திப்புத் தொடரின் முதல் நாள் அமர்வில் சுசீந்திரன் அவர்கள்,உயிர்நிழல் பத்திரிகை விமர்சனம் தொடர்பாக பேசுகின்ற பொழுது, முஸ்லிம் காங்கிரசின் தலைவர் அஸ்ரப் அவர்களின் அகால மரணமும் அதன் விளைவாக முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட அரசியல் இழப்பையும் புகலிடப் பத்திரிகைகள் ஆய்விற்கு எடுக்காததை தனது விமர்சனமாக முன்வைத்தார்.
அதன் விளைவு

இடைவேளையின்போது தினக்குரல் பத்திரிகையின் சார்பாக கலந்து கொள்வதாக தன்னை அறிமுகம் செய்து கொண்ட நரேந்திரன் என்பவர் ஆடினார் சன்னதம்.

1, «முஸ்லிம் மக்கள் இலங்கைப் பிரஜைகள் என்பதற்கு என்ன வரலாறு இருக்கின்றது»

2, «முஸ்லிம் இனம் எப்படி இலங்கையில் பெருகியது? எங்கட பெண்களுடன் உரசித்தானே அவங்கள் தமது இனத்தைப் பெருக்கிக்கொண்டவங்கள்.»

3, «நாங்கள் நினைத்திருந்தால் இருபத்திநான்கு மணி நேரத்தில் அக்கரைப்பற்று பள்ளிவாசல் தரைமட்டமாக்கியிருப்போம்.»

4, «இங்க நீங்கள் நடத்திறது புகலிட இலக்கியமா? வந்தேறுகுடிகள் இலக்கியமல்லோ».

மேற்படி நரேந்திரனின் சன்னதத்திற்கெதிரான விவாதத்தில் கலந்து கொண்டவர்கள்.

சுசீந்திரன், பராமாஸ்டர், மணி, மோகன், தேவதாஸ், கற்சுறா(எக்ஸில்), ஸ்ராலின்(எக்ஸில்) இன்னும் பலர்.

ஒரு பானை தினக்குரலுக்கு ஒரு நரேந்திரன் பதமா....!! என்பதை முஸ்லிம் சமூகம் எச்சரிக்கையுடன் அவதானிக்கும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

# «பெண்ணே போற்றி....»

**நாதன்**

எனும் சிறுகதைத் தொகுப்பின் மதிப்பீட்டிற்கும், தீவிர வாசிப்பிற்கும், அதன் படைப்பாளியான நஸீறுதீன் அவர்களின் அட்டகாசமான முன்னுரையும் ஒரு காரணம் எனலாம். நேர்கோட்டுவாதத்திலோ தத்துவார்த்த இனம்காணுதலையோ மறுத்து கதைகளின் உள்ளடக்கம், உருவாக்கம், கதைகளை சுமந்து நிற்கும் பாத்திரங்கள், படைப்பாளியின் மையக்கருத்து, சமூகம்–உளவியல், போன்றவைகளே எனது வாசிப்பின் பிடிமானங்களாகி, அவ்வழியே இத்தொகுப்பை சுருக்கமாக மதிப்பிட முனைகிறேன்.

இத்தொகுப்பில் எட்டுச் சிறுகதைகள் உள்அடங்கியிருக்கின்றது.

«பெண்ணே போற்றி......! என்பதன் மூலம் நான் சொல்ல வருவதில் நிறையப்பேருக்கு உடன்பாடு கொள்ளல் கடினமாயிருக்கும், கவலையில்லை அதிலும் பெண்ணிலைவாதிகள் புரட்டிப்போடக்கூடும் அஞ்சவில்லை» என்பதாக நஸீறுதீன் முன்னுரைத்துள்ளார். இத்தொகுப்பானது பெண்களைப் பேசுபொருளாக முன்னிலைப் படுத்தியிருப்பது முதல் மூன்று கதைகளில் மட்டுமே.

1, «போதுமடி நீ எனக்கு»

2, «இனியெ (ல்)லாம் மனமே...».

3, «பாம்பின் கால்.»

«போதுமடி நீ எனக்கு» «சரிகாணல்», எனும் கதைகள் பற்றிய எனது நோக்கு நிலையையே பிரதானப்படுத்தியிருக்கிறேன். படைப்பாளியிடம் முஸ்லிம் பண்பாட்டுக் கலகத்திற்கான நெருக்கமும், அவைகளை செழுமைப்படுத்திட இயலாக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கலக்கமும் இத்தொகுப்பின் வழி நான் உணருகின்றேன்.

இலக்கியம் தன்னிலையை பூரணப்படுத்துவதில்லை, யதார்த்த வெளிப்பாடு இலக்கியமாகாது, ஒரு படைப்பிலக்கிய தகைமைக்கு, இலக்கிய திறனாய்விற்கு, வருணனை, அசாதாரணம், சொற்செதுக்கல், இயல்பற்றவை, அது ஒரு புனைவு, அது உலகை பேசக்கூடாது...! என்பதாகவே வரையறைகள்.

இவ்வாறே படைப்பிலக்கிய வகைமைகள் வெறும் இலக்கியம் சம்பந்தப்பட்ட விஷயங்களாக மட்டுமே பேணப்பட்டு தொடர்கின்றது. அதை வாழும் சமூகம் சம்பந்தப்பட்டதாக, மனிதர்களின் வாழ்நிலை சம்பந்தப்பட்டதாக, அவர்கள் உணர்வு நிலைக் கற்பனைத் தளத்தினூடாக இலக்கியச்சட்டகத்தின் மறு உருவாக்கம் அவசியமானது.
(நிர்ணயவாதப்போக்காக அல்ல)

போதுமடி நீ எனக்கு எனும் கதையின் உள்ளடக்கமானது ஆண், பெண் செக்ஸ் உறவைப் பின்புலமாகக் கொண்டுள்ளது.(அடுத்து வரும் இரண்டு கதைகளும்கூட)

மாமா அரசியல் வாதி அவருக்கு காரியதரசியாகவும், செக்ஸ் உறவிற்காகவும் ஒரு பெண்ணுக்குத் தாயகவுள்ள ஒரு அழகிய விதவைப் பெண். கதை நகர்த்துபவர் விதவைப் பெண் வீட்டில் மாமாவின் தயவில் தங்கியிருக்கின்றார்.
அவருக்கும் மோகம் மைமூனா அன்ரியிடம் (விதவை) இறுதியில் புணர்வு, மகள் அறிந்து வெளியேறுகிறார். «போதுமடி நீ எனக்கு».......

«இக்கதை எழுதியதும் நிறையப்பேரால் பேசப்பட்டேன் அதுவும் முஸ்லிமாக இருந்து கொண்டா? என்ற கேள்வியினால் நிறையவே காயம் பெற்றேன்» என்கிறார் நஸீறுதீன்.
இக்கதையின் உள்ளடக்கமானது, சமூகச்சூழலில் கற்பனையற்றதும் நிகழ்பவையும்கூட. இக்கதையில் சொற்களினூடாக உருவகப்படுத்தப்பட்டிருக்கும் உளவியல் பரிமாற்றங்களின் செயற்கைத்தனத்தை, அல்லது மரபியல் இலக்கியத் தொடர்ச்சியாக, பின்வரும் உரைநடைகளை அவதானிக்கலாம்.

«................ இவ்வளவு அழகும் அவர் விதவை என்றறிந்ததும் பழுத்த பலா வீணாகிறதே என்ற சோகம்தான் அவரைக்காணும்போது ஏற்படுவதுண்டு பின்னர் அல்ல. அன்ரிக்கும் மாமாவிற்கு மான தொடர்பு என்ன என்பதில் விடைகிடைத்ததும் மனது ஆறுதலையே கொண்டது....................எனது இறந்து போன தாயின் நெருகத்தேடுதலா? அன்ரியைக் காணாத நாட்களெல்லாம் வெறுமையாய் போகுமளவில் நான் பித்தனானதன்



காரணம் என்ன?....................நான் அன்ரியிடம் எதை யாசிக்கின்றேன்....................»

«..........சின்னப்பையனே உனது தேவை எதுவென்பதிலேயே உனக்குத் தெளிவில்லையா? உனது காமிராவைத் தேடிப்போனபோதுதான் இது கிடைத்தது. இத்துடன் நீ ஓய்ந்து போகமுடியு மென்கிறாயா?»

«அன்ரியின் கையில் அவரது றவிக்கைத் துணி................இது சரியா தவறா என்ற யோசிப்பின்றி இருவருமாய் மயங்கிக்கிடந்தோம்».

உயிரியல் விஞ்ஞான – பட்டதாரிஆசிரியரும், உளவியல் பருசோதனையின் ஸ்தாபகருமான sigmund freeud கற்றவருமான நஸீறுதீனுக்கு (இத்தொகுப்பில் அடங்கியிருக்கும் சரிகாணல் கதையில் பேசப்படுகிறார். freeud இன் ஆய்வறிக்கைகள் தத்துவம் சம்பந்தப்பட்டதென்பதற்காக மார்க்சியமும், தேசியமும், freeudயை சொந்தம் கொண்டாடும் சூழ்நிலையும் நிலவுகிறது. மனநோய்,மனச்சிதைவு,மனக்குழப்பம் போன்ற உளவியல் பகுதிகளின் பரிசோதனையாளராக மட்டுமே என்னால் அவரை வாசிக்கமுடிகிறது.) திருமண உறவுமூலமாக மட்டுமே செக்ஸ் உணர்வை அனுபவிக்கும் அனுமதியுள்ள எமது சமூகப் பண்பாட்டு பிரக்ஞையுள்ள மனிதர்களின் வெளிப் படுத்தாத உளவியல் பகுதிகள்(நனவிலிமனம்) தெரியாததல்ல...... இக்கதையின் பாத்திரங்களுக் கிடையிலான உரையாடல்கள் அவர்கள் நனவிலிமனங்களுக்கு பொருந்துமா! .

உரையாடல், பாத்திரங்களின் குரல் களுடனான விவாதங்கள், வியாக்கியானங்கள்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விளக்கமளிப்புக்கள் போன்றவைகளுக்கு பொறுப்பானவர்கள் படைப்பாளிகள்தானே.? பாலியல் உணர்வின் நனவிலி மனங்களுடன் இக்கதையின் உரையாடல்களைப் பொருத்திப் பார்ப்போமாயின்!.....பொருந்தாது.. இதற்கே நஸீறுதீன் இலக்கிய பிரமுகர்களால் வாங்கிக் கட்டியிருக்கிறார். «அவன், என்னா இது...ஒன்னோட சாமான்ல இவ்ளோ பெரிய பொத்தல். அவள், ஏன் இவ்ளோ பெரிய பொத்தலை அடைக்கிறமாதிரி சாமான் ஒன்னட்ட இல்லையா.» என எழுதும் சாருநிவேதிதாவும், «அப்போதே அவனை அணைத்து திண்ணையில் கிடக்க வேண்டும்» எனவும் «திருமகள் ஒருவினாடிகூட தாமதிக்க வில்லை எழுந்து நாலு எட்டுநடந்து வலதுகாலால் அவன் கொட்டையில் ஓங்கி ஒரு உதைவிட்டாள்» என எழுதும் பாமாவும், இந்த இலக்கிய வரையறுப்பாளர்களிடமிருந்து எப்படித் தான் தப்பித்து உயிர் வாழ்கிறார்களோ?

இத் தொகுப்பின் மூன்றாவதுகதையான «பாம்பின் கால்» குடும்பப் பெறுமானமும், பெண் என்பவள் ஆண்களுக்கான ஒரு அத்தியாவசியம் என்பதாகவும் நகருகின்றது. இதில் வாசகனுக்கும் படைப்பாளிக்கும் முரண்அற்ற சூழல் கையாளப்பட்டிருக்கிறது. அதாவது குடும்ப அமைப்பு முறையில் பெண்களின் நிலை,பெண்களின் அவசியம், என இரு முகப் பார்வைக்கு உகந்ததாக உருவாக்கப்பட்டிருக்கிறது.

«சரிகாணல்» எனும் கதையில் மகன், தந்தை பாத்திரங்களின் பின்னால் படைப்பாளி மறைந்திருப்பது தெரிகிறது. பாத்திரங்களின் சுயேச்சைத்தனமான தோற்றங்களை இக்கதையில் உணரமுடியாது. சமூகம்-குடும்பம் போன்ற நிறுவனங்களின் கருத்தியல் உதிர்வுகளுக்கான அவசியம் பற்றிப் பேசப்படுகின்ற அதேவேளை, சிந்தனைகளை பலவீனப்படுத்தும் முரணான உரையாடல்களையும் வெகு இலகுவாகவே அடையாளம் காணலாம்.

«தொழும்படி குர்ஆனில் சொல்லப்பட்ட எண்ணிக்கை யைவிட ஐந்து மடங்கு சிந்திக்கச் சொல்லியிருக் கின்றது. சிந்தனையின் அடிப்படையே கேள்விதான் ஆனால் எல்லா மதத்தினது பெரியவர்களும் சிந்திக்காதே,கேள்வி கேட்காதே எனச்சொல்லியே மதத்தை சடங்காக மாற்றிக்கொண்டிருக்கிறார்கள்.» «.........உனக்குச் சுவாசிக்கக் காற்றும்; உண்பதற்கு பச்சையம் கொண்ட தாவரம், கடைசியாய் இந்த உலகத்தையே அடக்கியாளும் வல்லமை, இதற்கெல்லாம் சேர்த்து நீ நன்றி சொல்ல வேண்டாமா(அல்லாஹ்விற்கு) நீ ஒரு நல்ல மனிதன்தானே?»
என்பதாகவும்.

«.......நீயாக சிகரட் பிடிப்பது பிழைஎன்ற எண்ணத்தில் குற்ற உணர்வுக்கு ஆளாகாதே எப்போதும் எந்நிலை யிலும் நீ எதுவோ அதுவாய் இரு»
«அவளது தேடல் இந்த அரைவேக்காட்டுத் தனமான, சினிமாவும் சொப்பிங்கும், சாறி, நகைகளுமாகயிருக்க எவ்வளவு காலம் என்னால் இவற்றைச் சகித்துக்கொண்டிருக்கமுடியும். எவ்வளவு எடுத்தோதியும் விளங்கு வதாயில்லை......»
மகனுக்கு நீ நீயாக இரு என போதனையும், மனைவிக்கு நீ நானாக இரு எனச் சோதனையுமாய் தொடர்கிறது.
இத்தொகுப்பின் பிடித்தமான «எங்கடை ஆட்கள்» யாழ்ப்பாணச் சாதிச் சொற்களைத் தலைப்பாகக் கொண்ட சரியான உதாரணம். «அன்பின் வழியது» எமது கல்விமுறையில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்குமான உறவுகள்பற்றியும், ஆசிரிய அதிகாரத் துஷ்பிரயோகங்கள் பற்றியும் விரிவாக நகர்த்துகிறார்.
«எண்ணங்கள், உணர்வுகள் எல்லோருக்குமே ஒன்றுதான், அத்துடன் மூளையின் கன அளவு ஓமோன்களின் செல்வாக்குகளும்கூட இதில் இனரீதியில் ஏதுபிரிவு? (ஆண்,பெண்)» என முன்னுரையில் பதித்திருக்கின்றார்.
உயிரியல் விஞ்ஞானம் ஆண், பெண் இருபாலருக்கு மிடையிலான உயிரியலை நிரூபிக்கட்டும். ஆட்சேபனை இல்லை!!! அரசியல்ரீதியாக, சமூகரீதியாக, குடும்பரீதியாக பெண்களின் எண்ணங்கள், உணர்வுகள் என்னவென்பதை எந்த விஞ்ஞானத்தால் நிரூபிக்கமுடியும்? பெண்களைத் தவிர.

அறிவொளிக்கால இலக்கிய வாதிகளான monesquieu (1689-1785)rousseau (1712-1778) voltaire (1694-1778)diderot (1713-1784) போன்றவர்கள் மீதான விமர்சனங்களில், இவர்களுடைய இலக்கியவரைய்றைகளும், தத்துவங்களுக்கு நிகரானதாகவே கருதப்பட்டன. அறிவொளிக்கால இலக்கிய வரையறைகளின் உடைவுகளுக்கான காரணிகளில் மிக முதன்மை யானதாக கருதப்படுவது வாசிப்புமீதான பெரும்பான்மையே. கல்லுக்கும், மண்ணுக்கும் முன்பாகவே தோன்றிய எமது இலக்கிய வரையறைகள் தொடர்வதற்கும், பாதுகாக்கப்படு வதற்கும் சிறுபான்மை வாசிப்பும் ஒரு காரணமாகும். தொடர்ச்சியான வாசிப்பையும், கேள்விகளிலான வன்முறையையும், பிரயோகிக்காமல் தத்துவமும், வரையறையும், நொருங்கப்போவதில்லை.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்கரவர்த்தியின் கதைகளில் முஸ்லீம் மக்கள். தமிழ் இயக்கப் பயங்கரவாதங்கள்.

தமிழரசன் (பேர்லின்)



**முஸ்லீம் மக்கள் துரத்தப்பட்ட பத்தாவது வருட நினைவுகூரலில் சக்கரவர்த்தியின் "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" தமிழ் ஈழங்களின் அதீத ஆதிக்கக் குரல்கட்கு எதிரான இலக்கியக் குரலாக வந்துள்ளது. தமிழ் மக்கள் தரப்பிலான மனிதக் கடமையை நிறைவேற்றியுள்ளது. இக்கதைகள் யுத்த காலத்தை உடைத்து, பேசப்படாத பகுதிகளை ஆவணமாக்கியுள்ளது.**

"துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகிக் கிடக்கும் நிலவைப்பற்றிப் பேசிய கவிஞன் சோலைக் கிளியின் கிழக்கு மண்ணிலிருந்து மனிதத்தின் தீவிர மொழியோடு ஒரு இலக்கிய மனிதன் கதை சொல்லி சக்கரவர்த்தி" எவனும் எவளும் தமிழ் மக்கள் மத்தியில் எழுதிப் பேசி சிந்தித்துக் காட்டக்கூடாது. அனைத்துமே தமிழ் மக்களுக் காக எம் பிரச்சாரத் தொழிற்சாலைகளில் தயார் எனும் கொலைச் சுவை அறிந்த தமிழீழ ஆயுதங் கள் முன்பு மாற்றுக் கருத்தை தலை வெடி வைத்து அகற்றுவதே தமிழீழ தாகங் களினதும் ஏனைய தமிழ் இயக்க வில்லாதி வில்லர் களதும் குணநல மாய் கலாச்சார மாய் ஆகிவிட்ட நிலையில் எம் தேசத்தின் மெய்க் கதையை மனித அழுகுரலை பதிவு செய்ய ஒரு சக்கர வர்த்தி!

ஒரு கிழக்கான்!! மாவீரர்கள், மாமனிதர்கள் பிரகடனங்கள், சமாதிகள், ஊர்வலங்கள், நினைவுதினங்கள், இயக்கச் சடங்குகள், பாடல்கள் இவைகளின் அமளி முன்பு இலங்கை அரச மற்றும் இயக்கப் பயங்கரவாதங்களின் முன்பு மனித நியாயம் பேசிப் பறைய ஒரு எழுத்து. சிங்களப் பெருந் தேசிய வாதத்தினதும் தமிழ் குறுந்தேசிய வாதத்தினதும் சுடுகாட்டுப் பேச்சாளர்கள் முன்பு புகலிடத்தில் என்னைவிட்டால் ஆள் கிடையாது எனும் புலிகளின் அதீத தமிழ் வெறியாட்டம் முன்பு சக்கரவர்த்தியின் "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" எனும் சிறுகதைத் தொகுப்பு 10 கதைகளை உள்ளடக்கி வெளிவந்துள்ளது. கடந்த வருடம் ஜெர்மனியின் Stuttgart நகரில் நடந்த 26வது இலக்கியச் சந்திப்பில் எக்ஸில் குழுவினரால் வெளியிட்டு விமர்சிக்கப் பட்டது. புகலிடத்தில் தமிழ்வானொலிகளும் ஈழநாடு,ஈழமுரசுகளும் குறுந்தமிழ்த் தேசிய விச ராடி கூத்தடிக்கையில் தமிழின மேலாண்மைச் சிந்தனைகளால் உருக் கொண்டு ஆடுகையில் சக்கரவர்த்தி இந்தப் போக்கோடு கரைய மறுத்து மானுடத்தின் மொழியைப் பேசுகின்றார். தேசியத் தலைவர்களை தொழுது பணிந்து உழவாரத் திருப்பணி செய்து திரியும் தமிழ் ஈழ அடியார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூட்டம் முன்பு அரசியல் சுயம் தொலைத்த ஆயுத வழிபாட்டாளர் மத்தியில் மனித மொழி பேசுகின்றார். போர்க்காலத்தின் மானுட இரக்கமற்ற பொழுதுகளில் கொலைக் கலாச்சாரத்தின் மனநோய்க் கூறுகளின் ஆதிக்கம் நிறைந்த சமயத்தில் கொலையின்றி ஒரு கணமேனும் வாழமுடியாத ஆயுத மேந்திகளின் அதிகாரத்தின் நிழல்கள் எம்மீது படிந்துள்ள வேளையிலும் அழுதும் இரந்தும் அஞ்சியும் வாழும் தேசத்தினது கதையை பதிவு செய்துள்ளார்.

மனிதர்களின் மௌன மொழிகளை மறைவாய் இரகசியமாய் கோடிப்புறங்களில் உலாவிய உண்மைச் செய்திகளை அம்பலம் வர அஞ்சி அடங்கிக்கிடந்தவைகளை பேசும் இலக்கியத் துணிவு சக்கரவர்த்தியினுடையது. இலங்கை அரசின் பயங்கரவாதத்திற்கு சற்றேனும் சளைக்காத தமிழ் இயக்கங்களின் பயங்கரவாதங்கள் ஆயுத மேந்திகளின் உண்மை மீதான வன்முறை, பொய் புனைந்துரைகள் மேலான தமிழ்த்தேசியவாதச் சோடனைகள், அதிகாரத்தை தொழும் கூட்டமாய் மனிதர்கள் சுயமழிந்து போயினர். சந்தர்ப்பவாதமும் வேடம்தாங்கலும் பிழைத்துக்கொள்ளும் வழியாயிற்று. வாழ்வதற்காக தப்பிப் பிழைக்க மக்கள் மீண்டும் மீண்டும் போராடினார்கள். மனித அவமதிப்புக்களை சுமக்கத் தயாராகினர். கடந்தகால மனிதத் துயரங்களை மறந்து நடப்பின் மனித அழிவுகளில் புதைந்து நின்றனர். தமிழ் தேசியவாதத்தின் சிறுபிள்ளை வேளாண்மை விளைந்தும் வீடு வந்து சேராது என்பதை எந்தத் தத்துவத்தினது உதவியும் இன்றியே அவர்கள் விளங்கி தம் அனுபவத்தால் நிரம்பி நின்றனர். மாற்றுக் கருத்துக்களையும் விமர்சனங்களையும் கடுகத்தனையும் சகித்துக் கொள்ளாத ஆயுதபாணிகளின் மண்ணில் கால் பதிந்துள்ள காலடி மண்ணளவு சுதந்திரமும் கூட மண்டியிட்டு இரங்கி உயிர்ப்பிச்சை எடுத்து வாழும் பூமியில், மாற்றுக் கருத்தை மனித சுதந்திரத்தை முஸ்லீம் மக்களும் சிங்கள மனிதர்களும் மனித குலத்தின் அங்கமே எனப் பேசும் துணிவு கொண்டவர் சக்கரவர்த்தி. முஸ்லீம் மக்களை வடக்கை விட்டு துரத்திப் பத்து வருடப் பரதேசி வாழ்வுக்கு ஆளாக்கியவர்களை பள்ளிவாசல்களில் முஸ்லீம் மக்களை படுகொலை செய்து மனித மாமிசப் படையல்களை நடத்தியவர்களை மறந்து விட இந்த இலக்கிய எழுத்தனுக்கு சம்மதமில்லை.

“இனச்சுத்தம் இனச்சுத்தம் எனச்
சொல்லி
சோனகரை எல்லாம்
ஒற்றை நாள் இடைவெளியில்
நாட்டை விட்டு விரட்டியடித்தோம்.
நாம் என்ன நாசிகளுக்கா பிறந்தோம்
நம் பூர்விகம் என்ன ஜெர்மனியா?”



**இப்படி எத்தனை மனித இழிவுகளை; துன்ப துயரங்களை ; மரணத்தைத் தாங்கிக்கிறது இந்தப் போரின் வயப்பட்ட பூமி. சிதறிப் போய்க்கிடக்கும் மனித வாழ்வை கூட்டியள்ள முடியுமா? சாதாரண மனிதனுக்கு சாதாரண மனிசிக்கு தமிழ் ஈழம் அல்லது ஐக்கிய இலங்கை என்பதல்ல கனவுக் காட்சி. தன் கண்முன்னே வியாபித்து நிற்கும் தன் சொந்த வாழ்வைத் தொடர அனுமதி வேண்டும் என்ற மனிதக் கதறலே அவர்களது செய்தி.**

முஸ்லீம் மக்களை நாற்பத்தியெட்டு மணி நேரத்தில் வடக்கை விட்டு கலைத்த மனித விரோதத்திற்கு எதிராகப் பேசாது மூச்சடக்கிக் கிடந்தவர்கள் அனைவர் மீதும் அவருக்கு கொடும் சினம். புலிகளை மட்டுமல்ல அதை மௌனமாய் சகித்துக் கிடந்த அனைத்து மனிதர்கள் மேலும் கோபம். மனிதநீதி தொலைந்ததே என்ற சினத்தில் எல்லோரும் நாசிகட்கா பிறந்தோம்? என்று அநீதிகட்கு எதிராய் கிளர்ச்சி செய்யாத உறங்கிக் கிடக்கும் மனித குணத்தைச் சாடுகின்றார்.

அதிகாரத்தை துப்பாக்கிகளில் இட்டு நிரப்பிக் கொண்டு உயிர்வதை செய்வோம்! உடல் பறிப்போம்! என்று மக்கள் முன்பு ஊர்வலம் போனவர்களை மக்கள் மௌனமாய் அவமதித்தார்கள், இயக்க அதிகார அதட்டல்களை மூலைமுடுக்குகளிலும் முதுகுப் புறங்களிலும் மூச்சடக்கிப் பேசினார்கள். மறைமுகமாய் கலகம் செய்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உயிர்வாழப் போராடிய மனிதப் பெறுமதிமிக்க உண்மைகளை அப்பாவிகளாய் மரித்துப்போன தமிழ்த்துரோகி, சோனீ, சிங்களவர், என்ற பெயர்களில் உயிர் வாங்கப்பட்ட மனித ஜீவன்களை சக்கரவர்த்தி பேசுகின்றார். நோய்ச் சமூக உயிர்ப் பறிப்பாளர்களை எதிர்த்துப் போரிட்டமைக்காக குரல்வளை நெரிக்கப்பட்ட பல நேர்மையான சமூகஜீவிகளையும் அவர் பேசுகின்றார். மக்களின் சிதைந்துபோன போராட்ட நம்பிக்கைகள், எதிர்காலம் மீதான அவநம்பிக்கை, இவைகளின் மூலங்களையும் இவரின் கதைகள் தேட முயல்கின்றன. வீடுகளும் முற்றமும் குச்சொழுங்கைகளும் தெருவும் வேவுபார்க்கப்பட்டு கண்காணிக்கப்பட்டு தண்டனை வழங்கும் அதிகாரம் கொண்டுள்ளதை, மக்களுக்கும் இயக்கங்கட்கும் இடையேயான உறவு அதிகாரவகைப்பட்ட உறவாக வளர்ந்து விருட்சமாய் நிற்பதை அவர் கதைகள் காட்டுகின்றன. மனித உயிர்வதைப்பும் அழிப்பும் சாதாரணமாகி இழிவும் அவமானமும், அடிமைத்தளமும், பணிவுப்பாசாங்கங்களுமே சுதந்திரம் கோரும் மக்களின் இயல்பாகி விட்டதோ? என்று மனிதப் பண்பாட்டு வாழ்வு மேலான கேள்வியைக் கிளப்புகின்றார் சக்கரவர்த்தி.

இவரின் கதைத் தொகுதியில் யுத்த காலத்தைப் பேசும் கதைகளாக, படுவான்கரை, எண்ட அல்லாஹ், பிசாசுகளின் வாக்கு மூலம், இரண்டாம் பாகமும் போன்ற கதைகள் பேசத்தக்கவை.பெண்கள் பற்றிய சக்கரவர்த்தியின் எழுத்துக்கள் அவரின் ஆணாதிக்கப் பார்வையால் கெட்டழிந்து நிற்கின்றன. யாழ்ப்பாணியம் மேலான அவரது நியாயமான ஆத்திரம் யாழ்ப்பாணப் பெண்ணின் சமூகப் பின்புலங்களை சமூக ஒடுக்குமுறைகளை காணமுடியாதளவு உக்கிரமடைந்துள்ளது. வர்க்கம் பற்றிய கவனமும் யாழ்ப்பாணச் சமூகம் பற்றிய ஆய்வும் இவரிடம் காணாமையே இந்தப் போக்குக்கு காரணமாகும். இதைப்பற்றிப் பேச இது தருணமல்ல என்பதால் அவரின் போர்க்காலச் சூழலைப் பேசும் கதைகளை மட்டுமே இப்போ காணமுயலலாம்.

இதில் "படுவான்கரை" கதை சிறீலங்கா, இயக்கம் இருபகுதியாலும் சந்தேகம், அனுமானம் இவைகளின் அடிப்படையில் துன்புறுத்தல், சித்திரவதை, உயிரிழப்பு, இவைகட்கு ஆளாகும் குடும்பத்தைப் பேசுகின்றது. யுத்தத்தால் சுற்றிவளைக்கப்பட்டுள்ள நிலையிலும் நாளாந்த வாழ்வுகளை போராட்ட துன்பத்திற்கு இடையிலும் மனிதர்களின் வாழ்வின் மீதானகாதல் தம் இருப்பை பாதுகாக்க நடத்தும் தம் சக்திக்கு மீறிய பிரயத்தனங்கள் இங்குகாட்டப்படுகின்றன. ஆயுதம் ஏந்திய இராணுவம் ஒருபுறம், தமிழ் மக்களுக்காய் போரிடுவதாய் சொல்லும் இயக்கம் மறுபுறம். இருபகுதியுமே தம் அதிகாரத்தையும் விருப்புகளையுமே மக்கள் மேல் சுமையேத்துகிறார்கள். ஆயுதப்பயங்கரவாதம் முன்பு எந்தவித ஆதாரமும் நீதி கேட்கும் குறைந்தபட்ச வாய்ப்பு மற்று மனிதர்கள் விடப்பட்டுள்ளனர். தம் சொந்த உயிர் வாழ்வு அச்சுறுத்தப்பட்ட வேளையிலும் தமது சொந்தங்கள் உறவுகளின் இருப்பை கடைசி ஆதாரங்களை பாதுகாக்க முயல்கின்றனர். இங்கு கணவனை மீட்க அரசு, இயக்கம் என்ற இரண்டு பேய், பிசாசுகளோடும் சரசு போராடுகின்றாள். கண்ணீர், அழுகை , கெஞ்சல் முடிவில் ஆற்றாமையின் பிரசவிப்பாய் எதிர்க்கும் துணிவு இயக்கத்தால் பிடித்துச் செல்லப்பட்ட கணவர்களை, சகோதரர்களை, மகன்களை, மீட்கப் போராடி பல நூறு சரசுகளுக்கான சாட்சியமாய் இந்தச் சரசு.

"அவரப் பொடியனுகள் புடிச்சித்துப் போரானுகள்" கிழக்கின் மொழியை வீக்கமின்றிச் சொல்கின்றார் சக்கரவர்த்தி, "புள்ளய ஒள்ளம் புடிகா" "மெனேய்" என இவை மண்ணின் வாசனையோடு வெளிப்படுகின்றன. புதிதாய் யாழ்ப்பாணத்திலிருந்து வரும் இயக்கப் பொறுப்பாளரைத் திருப்திப்படுத்த அவர் வருமுன்பு "எல்லாக் காட்டிக் கொடுக்கிறவர்களையும் தட்டி" சுத்தம் செய்யும் அவசரத்தில் ஆதாரமின்றியே இழுத்துச் செல்லப்பட்டுவிட்டு விட்ட சரசுவின் கணவன், யாழ்ப்பாணியத்தின் ஆழுமை, அதிகார இயக்கம் கிழக்கின் வாழ்வுள் கண்மூடி நுழைவதை ஊடுருவுவதை கதை உணர்த்துகிறது.

"பொட்ட கத்தாத" இயக்க எச்சரிக்கைகளை தாண்டி தன் உயிர் வாழ்வின் ஆதாரத்தை மீட்டும் வெறியோடு நிற்கும் சரசு "நான் கத்துவன் கத்தினா சுடுவியா? சுடு" பின்பு இயக்கத்திடமிருந்து கெஞ்சிக் கூத்தாடி சண்டையிட்டு மீட்டுவந்த தன் உயிர் வாழ்வின் ஆதாரமானவனை மீண்டும் அள்ளிச் செல்ல வந்துள்ள இலங்கை அரசுப் படைகள் தமிழ் கூட்டுக் கூலிப்படை ஆட்காட்டிகள் முன்பு தம் வாழ்வைத் தப்பிக்க வைக்க முயல்கின்றாள்.

"அவரு இஞ்ச இல்ல மய்யோரிச் சேனைக்கு காவலுக்குப் போயித்தாரு"

காவலுக்குப் போயித்தானா? ஆருக்கு விசுக்கோத்துக்கால உடுறா? அன்னா படுக்கிறது ஆரு?

சொற்களால் அவள் வாழ்வை நடுங்க வைத்து அவளின் வாழ்வுத் தொடரை மிச்சமீதியின்றிப் பிடுங்க முனையும் அரச அதிகாரம் ஆயுத மொழி.

"வாடா வெட்டைக்கு"

"பற வ்ள்ளா வாடா வெட்டைக்கு"

இப்படி எத்தனை மனித இழிவுகளை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துன்ப துயரங்களை, மரணத்தைத் தாங்கிக்கிறது இந்தப் போரின் வயப்பட்ட பூமி. சிதறிப் போய்க் கிடக்கும் மனித வாழ்வை கூட்டியள்ள முடியுமா? சாதாரண மனிதனுக்கு சாதாரண மனிசிக்கு தமிழ் ஈழம் அல்லது ஐக்கிய இலங்கை என்பதல்ல கனவுக் காட்சி. தன் கண்முன்னே வியாபித்து நிற்கும் தன் சொந்த வாழ்வைத் தொடர அனுமதி வேண்டும் என்ற மனிதக் கதறலே அவர்களது செய்தி.

அடுத்த கதையான "எண்ட அல்லாஹ்" வெங்காய வியாபாரம் செய்யும் தங்கராசா ஹாஜியார் அவரது மகன் முஸ்தபாவின் கதி பற்றி உரையாடுகிறது. கிழக்கிலங்கை இஸ்லாமிய மக்கள் தமிழ் மக்கள் என்று பிளவுபடாத சிங்களப் பெருந் தேசியத்திற்கு எதிரான கருத்தியல்கள் நிலவியதை சக்கரவர்த்தி காட்டுகின்றார். அதைப் பாடைக்கு அனுப்பியவர்கள் யார்? எவர்? இருபிரி வினரையும் பிளந்தெறிந்த மனிதக் குற்றம் இழைத் தவர்கள் எங்கே?

"என்ன காசியாரு நீ ஒரு மயிரும் தெரி யாத ஆளாய் இரிக்காய். விடியம் மல்வத்தையில் வச்சி முப்பது பேரை ஜீப் போட கௌப்பித்தானுகள் எலுவா. அந்த உம்மாட மக்கள் காரதீவுக்குள்ள அநியாயம் செய்கிறானுகளாம்."

தன் கடையின் தட்டிகளை அவசரமாய் பூட்டிவிட்டு பத்திரமாய் வீடு போய்ச் சேர முயலும் தங்கராசா ஹாஜியார் மனிதர்களைக் கொல்லவும் காயப் படுத்தி இரத்தம் காணவும் காத்திருக்கும் தெரு வில் இறங்கி நடக்கின்றார். இராணுவத் தொடர் வண்டிகள் மேல் அவருக்கு பயக்கெடுதி இருந்த தோடு மனிதர்களை கொல்லும் ஆயுதமேந்தி யவர்கள் மேலான வெறுப்பும் இருக்கிறது.

"ஹறாம் குட்டிகள் களுவாஞ்சிக்குடி யிலிருந்து வாறானுகள் போல."

கை காட்டியும் நிற்காமல் ஓடித் தப்பும் வாகனங் களை திட்டுகின்றார் ஹாஜியார்,

"வம்புல பொறந்த உம்மாட மக்கள் ஏத்த மாட்டன் எண்டுதானே"

யதார்த்தத்தின் ஆபாசங்களோடு அவர் காட்டப்ப டுகின்றார். யுத்தம் வித்தியாசமின்றி தமிழ், முஸ் லீம் மக்கள் சகலரையும் தின்கின்றது. இராணுவக் கெடுபிடிகளால் சகலரும் சமமாகவே வேட்டை கொள்ளப்படுகின்றனர். வீட்டையடையும் ஹாஜி யார் தன் காலில் ஏற்பட்ட காயத்துக்கு லாம்பெண் ணை தேய்த்து மரமஞ்சள் அவித்துக் குடித்து நாட்டு வைத்தியம் வீட்டு வைத்தியம் நடக்கிறது. கிராமிய வாழ்வுத் தொடர்ச்சி காட்டப்படுகிறது. கடைக்கு தொழிலுக்கு வராமல் போன மகனை கடிந்து கொள்கின்றார் ஹாஜியார்.

"முசுதப்பா"

"ஓவ்"

"எங்க இரிக்காய்"

"இஞ்ச சோறு தின்றன்"

"சோறு தின்றாயா? என்னடா ஒப்பாய் இது ஊத்துக் கெட்ட நேரத்தில... ஒழைக்கிற நேரத்தில ஒழைக்க ஒணும், தின்ற நேரத்தில தின்னோணும் எண்டு அல்லா சொல்லியிருக்கார்ரா வாப்பா... நீ ஊத்துக் கெட்ட நேரத்திலை யெல்லாம் திண்டா மார்க்கத்துக்கு அடுக்குமா வயது வந்த புள்ளக்கி ஒள்ளமெண்டாலும் லோசின இருக்கிறல்லையா?"

இஸ்லாமிய மாந்தரின் பேச்சு மொழியோடு சக்கரவர்த்திக்குள்ள நெருக்கம் கூர்மையானது. தான் வெங்காயம் வாங்கிய கணபதிக்கு வெங்கா யக் காசின் ஒரு பகுதியைக் கொடுத்து தன் மகன் முஸ்தபாவை களுதாவளைக்கு ஹாஜியார் அனுப்புகின்றார். கணபதியின் மகனுடன் முஸ்தபா வின் உரையாடல்

"உங்கட வாப்பா எங்க?"

"ஆரு?"

"வாப்பா"

"ஆரு?"

"உங்கட அப்பா!"

"அவரு வெங்காயக் காலைக்குள்ள பொயித்தாரு"

"அம்மா"

"அவவு நெல்லுக்குத்த பொயித்தாவு!"

கிழக்கு தமிழ், இஸ்லாமிய, கூட்டு வாழ்விலும் மொழியிடையான குறிப்பிடத்தக்க மாறுபாடுகள் வடக்கு மாகாணத்தில் புதினமாய் பார்க்கப்படும் உரைநடையாடல் ஆயிரத்து ஐநூறு ரூபாய் எண்டதும் முகம் சுருங்கிப் போகின்றான் கணபதி. கஸ்ட நேரத்தில் கையில காசு முழுக்க வராததின் ஆற்றாமையோடு கலந்து நிற்கும் இயக்கங்கள் விதைத்துப் பரப்பிய தமிழ் குறுந் தேசிய வாதத் தின் அற்பத்தனம் முஸ்லீம் மக்கள் மேலான வெறுப்பாய் கரைகட்டி நிற்கின்றது.

"என்ன ஆயிரத்தி ஐநூறுதான் இரிக்கி?..."

"வசாரில என்னவோ பிரச்சன எண்டு யாவாரிமாரு வரல்லையாம்"

"அதுக்கு?"

"மறுகணி சொச்சத்த கொண்டு தாறாராம்"

"என்ன புழுத்தின வேல இது. நாங்க வெங்காயத்தை புடுங்கி கட்டிக் குடுத்தா பூழலியாரு அவற்ர வேலய பாத்துத்து திரியி றாரா?"

காசு கொடுக்கல் வாங்கல் இவைகட்கு அப்பால் பதுங்கியுள்ள இஸ்லாமிய மக்கள் மேலான மனித அநாகரீகத்தால் வழிகாட்டப்படும் அதீத நோய்க் குறி கணபதியிடம், முஸ்தபாவிடம் சமரசம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ஊருக்குப் புதியவர்கள் ஆடு; மாடு; வியாபாரம் செய்த சாதாரண சிங்கள; முஸ்லீம் வர்த்தகர்கள்; பச்சை மிளகாய் கட்டித்திரிந்தவர்கள்; ஓட்டை உடைசல் வியாபாரம் செய்தவர்கள்; பிச்சைக்காரர்கள்; மனநோயாளிகள் இப்படி எத்தனை மனிதர்கள் கண்டும் கண் காணாமலும் மண்டையிலேயே போடப்பட்டனர்?**

செய்யும் சமாதானமாக்கும் போக்கு இன்னமும் சாகவில்லை.

"ஏன் அண்ணாச்சி இப்படிக்க தைக்கிறாய்?"

"கதைக்காம"

"பசள தந்தவன் வெத வெங்காயம் தந்தவனுக்கெல்லாம் என்ன பணியாரத்தை குடுக்கிறது...?" "ஓங்களுக்கென்ன நீங்க தொப்பிய பெரட்டிப் போட்டு போயிருவியள்"

"எங்க தொப்பி பெரட்டுன நாங்கள்?"

முரண்பாட்டை படிப்படியாய் வளர்த்து விளக்கியிருக்கின்றார் சக்கரவர்த்தி. மனித அத்துமீறல்களை தமிழ் தேசியத்தின் அடாத்தை காண்பிக்கின்றார். கணபதியிடம் பிணக்குப்பட்டு விட்டு பஸ்சுக்காக முஸ்தபா காத்திருக்கின்றான். தமிழ் மக்களின் விடுதலைக்காக எங்கும் நீக்கமற நிறைந்துள்ளதாய் தம்மைத் தாமே பிரகடனப் படுத்திக் கொண்டுள்ள இயக்கங்களின் ஆயுத நபர்கள் முஸ்தபாவை விசாரிக்கின்றனர். எந்த அரசியல் பண்பாட்டாலும் சித்தாந்தம் சிந்தனைகளாலும் பண்படாத அடக்குமுறையாளனின் இராணுவத்தான் பொலிஸ் பாசையில் கௌரவ மொழியில்

"டேய் ஆர்ரா நீ"

"அது நான் முஸ்தபா"

விசாரணைக்கு முன்பே அடியுதை. சந்தேகத்தைக் கொண்டே தீர்மானிக்கப்பட்டுவிட்ட வழக்கமான "மண்டையிலே போடும்" கருமத்தை நோக்கிய திசையில் விசாரிப்புக்கள். 17வயது முஸ்தபாவின் வாழ்வு தொடருமா? முடியுமா? என்பதை தீர்மானிக்கும் வல்லமை ஒரு சில இயக்க அரக்கர்களின் கையில். மனிதத்தோடும் சமூக இயக்கத்தோடும் பரிச்சயமற்ற அரசியல் நோஞ்சான்களின் முடிவுள்

"என்ட உம்மோவ்"

கிழக்கிலங்கையில் கொல்லப்பட்ட எல்லா முஸ்லீம் மக்களும் முஸ்தபாவின் தன் உயிர் வாழ்வுக்காக கெஞ்சும் குரலில் அடக்கமா? இந்தக் குரலோடு சுத்தியுள்ள வீடுகளில் குப்பி விளக்குகள் அணைவதை சாதாரண தமிழ் மக்களுக்கும் தமிழ் இயக்கங்களுக்கும் இடையேயுள்ள தொலை தூரத்தை அச்சம் நிறைந்த விலகலை சக்கரவர்த்தி காட்டுகின்றார்.

"எங்களுக்கு தெரியுமடா வெங்காயம் வாங்கிறம், கத்தரிக்காய் வாங்கிறம் எண்டு போட்டு ஊருக்குள்ள எங்க எங்க நாங்க இரிக்கம் எண்டு ஆமிக்கு சொல்றாக்கள்"

இப்படி எத்தனை நூறு நடுத்தெரு நீதிமன்றங்களை குற்றவாளிகளால் நடத்தப்பட்ட நியாயத் தீர்ப்புகளை எம் தேசம் கண்டிருக்கிறது. காசு ஆசை சோனக விரோதம் இரண்டும் கணபதி முஸ்தபாவுக்கு நம்பிக்கைத் துரோகம் செய்யப் போதுமானதாக இருந்தது. "மருத முனை முக்கால்" எனப் பழிக்கப்பட்டு இயக்க அலுக்கோசுகளால் முஸ்தபா முடிக்கப்படுகின்றான். ஊருக்குப் புதியவர்கள் ஆடு, மாடு, வியாபாரம் செய்த சாதாரண சிங்கள, முஸ்லீம் வர்த்தகர்கள், பச்சை மிளகாய் கட்டித்திரிந்தவர்கள், ஓட்டை உடைசல் வியாபாரம் செய்தவர்கள், பிச்சைக்காரர்கள், மனநோயாளிகள் இப்படி எத்தனை மனிதர்கள் கண்டும் கண் காணாமலும் மண்டையிலேயே போடப்பட்டனர்? இந்த மனித நெட்டுரங்கள் என்றாவது ஒரு நாள் விசாரிக்கப்புடுமா? என்று தெரியாது. ஆனால் சக்கரவர்த்தியின் எழுத்து விசாரிக்கிறது!

அடுத்த சிறுகதை "பிசாசுகளின் வாக்குமூலம்" மனிதமும் அரசியலும் வரண்டு போன தமிழ் ஈழ ஆயுதங்களின் இயக்க உள் முரண்பாடுகள், பகை பழி வாங்கல்கள் இங்கு பேசு பொருள். தேசிய விடுதலைப் போரில் தறி கெட்டு இலக்கழிந்து போன இயக்கப் பொடியள் கதைப் பொருள்.

"போரின் பகைப் புலம் அறியாது
போர் பரணி பாடும் பாட்டுக்காரர்கள்
எவரோ- அவரே ஈழம் இன்னமும்
எரிந்து கொண்டிருக்க முதற் காரணி
என்பேன்"

என்று சக்கரவர்த்தி தன் மட்டில் காரணமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தருகின்றார். இக்கதை உருவாக்க ----- துவக்கு, காசு, அதிகாரம், ஆடை, உணர்ச்சி, உயிர் யாவற்றையும் இழந்து இயக்க நபர்கள் ஆவியாகி புளிய மரத்தில் குடியிருக்கின்றனர். "உதிர்ந்த இறகு போன்றும் நீரில் மூழ்கும் தகட்டுத் துண்டு போலவும் இந்த ஆவிகள் உலவுகின்றன. சூரிய ஒளியில் கரைகின்றன. தம் மரணத்துக்குப் பின்னர் இயக்கங்களின் கொலை முகவர்கள் தம்மிடையே தாம் வாழ்ந்த காலத்தில் ஒப்பேற்றிய "விடுதலைக்கான கடனை"ப் பேசுகின்றன. வானத்தில் பிசாசாய் அலைந்து பூமியைப் பார்க்கின்றது பிசாசு. பின்பு வாக்கு மூலம் தருகிறது.

"துவக்கு சிறுவர்கள்
துவக்கு மிருகங்கள்
துவக்குக்குப் பயந்த குருட்டுச்
சனங்கள்
வீர வணக்கம் செலுத்தப்படும் எனது
உடல்
சகலமும் எனக்குத் தெரிந்தது என்னைத்
தான் யாருக்கும் தெரியவில்லை"

சாந்தி அடையாத பிசாசின் ஆத்மா "சுடுகாடு, இருள், சாம்பல் மேடு உக்கியா... உக்கியா... ஊ ஊ ஊ..."

பிசாசுகளின் வாக்கு மூலத்தின் நாயகனான பிசாசு பல இயக்கங்களின் தணிக்கைக்கு உள்ளான சம்பவங்கள் செய்திகளைப் பேசுகிறது. உடலோடு இரகசியங்களும் உண்மைகளும் புதைக்கப்பட்ட பின்பும் மரணத்துக்கு அப்பாலும் வாழ்ந்து, சொல்லத் தவறிய மறைபட்ட விட்டுப்போன விடயங்களை சொல்கின்றன. இயக்கத்தில் கூட இருந்தவர்கள் கூடச் சந்திக்கின்றார்கள்.

"என்ன மச்சான் உன்னையும் தட்டிப் போட்டானுகளா?"

இன்னொரு பிசாசை எங்கோ கண்ட ஞாபகம் கண்ணுக்கு கறுப்புத் துணி கட்டினால் கண்டுபிடித்து விடலாம், இப்போ ஞாபகம் வருகிறது.

"அண்ண அண்ண... என்னை விட்டுங்கோ
அண்ணஉங்க கால புடிச்சி கெஞ்சிறன்,
அண்ண
துவக்கைக் காட்டி காசு கேட்டா எப்படி
அண்ண இல்ல எண்டு சொல்றது
அதுதான் ஒரு புணயல் மாட்ட வித்து,
காசு குடுத்தனான்.
சத்தியமா நான் அவங்கட இயக்கம்
இல்ல..."

"மாற்று இயக்கமா? மண்டையிலே போடு! இருந்த வாழ்ந்த தடயம் இன்றி அழி"

"உயிர்ப் பிச்சை கேட்டு முழங்காலில நிண்டவனை மார்பில் உதைத்து மல்லாக்க விழுத்தினேன். கையும் கண்ணும் கட்டப்பட்டவனை மண்டையிலே சுட மூளை வெளிவந்தது" இப்படி எத்தனை அப்பாவிகள், தன்னைச் சொல்லத் தெரியாதவர்கள், நடந்தால் புல்லுச் சாகாதவர்கள் கொஞ்சிக் கூத்தாடக் கூத்தாடக் கொல்லப்பட்டு இருப்பார்கள். தன் சவக் குழியைத் தானே தோண்டும்படி நிர்ப்பந்திக்கப்பட்டவர்களும் முன்னே காரில் சவப் பெட்டியை போகவிட்டு சுட்டுக் கொல்லப்பட வேண்டியவனை பின்னே மற்றய காரில் ஊர்வலமாய் கொண்டு சென்றவர்களை கண்ணாரக் கண்ட மனிதக் கருணையின் தேசமல்லவா எம் தேசம்? இங்கு சக்கரவர்த்தி யுத்தத்தின் மத்தியில் வாழ்ந்து மனித அனுபவங்களை சேமித்துக் கொண்டவர் எனத் தெரிகிறது. எனவேதான் காற்றிலே கரைந்து போய்விட்ட அந்த பலி கொள்ளப் பட்ட மனிதர்களின் இறுதிக் குரலை மறக்காதிருக்கின்றார். இவர் கதை எழுதவில்லை. தன் நினைவுப்பறியுள் இருந்து மீட்டெடுத்து மனிதர்களை மறுபடி உலாவவிடுகின்றார். இந்தியாவிலிருந்து பயிற்சி முடிந்து வந்து மூன்று மாதத்துள் தட்டப்பட்டோர், அடித்துக் குத்தி சித்திரவதை செய்து சாக முதலே உயிரோடு தாழ்க்கப் பட்டோரின் கண்கண்ட இலக்கியச் சாட்சியாக இவர். அரசு இராணுவம் மட்டுமல்ல தமிழ் ஈழத்தின் இராணுவங்களும்கூட இழைத்த பயங்கரவாதத்தை மறக்காதவர் இந்த எழுத்தாளர். "உப்பகந்த சிங்களக் கிராமத்தில் சுட்டால் சத்தம் வருமென்று கத்தியால் 33 பெண்கள், குழந்தை குஞ்சுகள், வயதுபோனதுகள் என்ற பேதமின்றி தலையறுத்த கதை", "படுவான்கரை 39வது கொலனியில் 113 சிங்கள மக்களை குடும்பம் குடும்பமாய் நடுச்சாமத்தில் எழுப்பி சங்கக் கடையில் அடைத்துப் பூட்டி 8கைக்குண்டுகளால் கருகிச் சாகப் பண்ணிய கதை" இவையெல்லாம் கிழக்கு மாகாணத்தில் தமிழ் இயக்கப் பயங்கரவாதம் நிகழ்த்திய நூற்றுக் கணக்கான ஏழைச் சிங்கள மக்கள் மேலான அழிப்புகளில் சிறு துளிகள்.

"அதன் இரண்டாம் பாகமும்"

இக்கதையும் ஆயுதம் ஏந்திய தமிழ் ஈழக் கடவுளர்களின் கதையே. கொல் என்றால் கொல்லவும் கொழுத்து என்றால் கொழுத்தவும் தயாரான மனிதம் மறந்து போனவர்களின் கதை. பல நூறு வருடங்கள் கூடிவாழ்ந்த மக்களை எப்படி பத்து எண்ணுவதற்கு இடையில் பகைவர்கள் ஆவதற்கான அரசியல் தயாரிப்புச் செய்யப் பட்டது? தமிழ், முஸ்லீம் மக்களிடையேயான உறவுகள் எப்படி அசிங்கப்படுத்தப்பட்டன?

காத்தான் குடியைக் கொழுத்து- சரி
எல்லா சோனகனையும் துரத்து- சரி
மக்காவுக்கு போறவனை, ஒரேயடியாய்
மக்காவுக்கு அனுப்பு- சரி
தொழும் நேரம் வெட்டிக் கொல்- சரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது எப்படி நிகழ்ந்தது? முஸ்லீம் மக்கள் மேலான வன்முறைகளின் ஆதாரத்தோடு இலக்கிய எழுத்துப் பரிசீலனை செய்கின்றார் சக்கரவர்த்தி. முஸ்லீம் மக்களின் சுதந்திரத்தை மட்டுமல்ல தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் இருப்பையும் மறுத்துக் கொலைகளை ஏவிவிட்டவர்கள் அரசியல் வெற்றுக் கோம்பைத்தனத்தால் மட்டு மல்ல யாழ்ப்பாணியத்தின் வழி நடத்தலா லுமேஎன்று காரணம் காட்டுகின்றார். ஆயுதம் மானுடத்தின் விரோதி எனப் பிரகடனப்படுத்தும் சக்கரவர்த்தி. கொலைகளற்ற ஒருவாரம் சுகமா னது என்று பெருமூச்சு விடுகின்றார்.

சக்கரவர்த்தி வரலாற்று ஞாபகம் மிகுந்தவர். காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைகளை மட்டுமல்ல அங்கு ஒரே இரவில் 53 நெற்சூடுகளை நெருப்பு வைத்து பலநூறு மனிதர்களின் உழைப்பை பல ஆயிரம் மனிதர்களின் உணவை சோனகனின் சொத்தாய் கருதி அழித்ததை மறவாதவர். ஒவ்வொரு நெல்மணியும் மாதக் கணக்காக உழைத்த விவசாயின் உழைப்புச் சேமிப்பு என்று மனமுருகத் தெரிந்தவர்.

"குடல வெள்ளாமைக்கு இல்லாட்டிக்கூடப் பரவாயில்லை எண்டு போட்டு சக்க கட்டுறதுக்கு எண்டு கேட்ட ஒடனே மூட்ட மூட்டயா யூரியாவ தூக்கித் தரல்லயா தம்பி நாங்க?"

"அறுத்துப் போட்ட வெள்ளாமைய எரக்கமில்லாம கொழுத்திப் போட்டயே. வகித்துப் புள்ளத்தாச்சிய உயிரோட போட்டு பத்தவக்கிர மாதிரி எலவா நீ இந்த சூட்டக் கொழுத்தினது"

அழுத கண்ணுடன் சின்னலெவ்வை காக்காவின் நீதிகோரல். நிலத்தை நம்பி வாழ்ந்த தம் உடல் உழைப்பின் பயனை பறிகொடுத்த சோகம் இக்கதையில் யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம் மக்களை குடியெழுப்பி உடுத்த உடு பிடவையோடு கலைத்தது 1984இல் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட முஸ்லீம் மக்களின் ஆடு, மாடுகளை பழு காமம் சாச்சுக்கொண்டு போய் தமிழ் இயக்க விடுதலை வீரர்கள் கிலோ ஆட்டுக்கறி ஒரு ரூபாய்க்கும் மாட்டுக்கறி ஐம்பது சதத்துக்கும் வித்து ஊரான் சொத்தை வாயில் போட்டது என்பனவும் பேசப்படுகிறது. 25மைல் தூரம் சைக்கிள் ஓடி துணி வித்து பிழைப்பு நடத்திய "பொட்டணிக்காக்கா" சுட்டுக் கொல்லப்பட்டு கிரான் குளத்தில் அரைகுறையாய் புதைக்கப்பட்ட சங்கதி தெரியாமல் பொட்டணிக் காக்காவிடம் பள்ளி போகும் மூத்தவனுக்கு சட்டை தைக்க இரண்டு யார் பப்பிளினும் தனக்கு மேற்சட்டை தைக்க சீத்தையும் வாங்க காவலிருக்கும் அம்மா! சோனகர் மேல் பகையறியாத கிழக்கின் தமிழ்த்தாய்!! அதிகாரத்துக்கு எதிரான கோபமும் அருவருப்பும் மாத்திரம் கொண்டவரல்ல சக்கரவர்த்தி. ஒரு தாய் பிள்ளையாய் இஸ்லாமிய மக்களோடு வாழ்ந்த உறவுகளின் ஞாபகத்திலும் தோய்ந்தவர்.

"சோனகத்து முட்டாசே என்று தன் குழந்தைக்கு தாலாட்டுப் பாடிய தாய்"

"கையில் உள்ள பாலுண்ணி போக கல்முனை கடற்கரைப் பள்ளிவாசலுக்கு உப்புக் கட்டுவதாய் நேர்த்தி வைத்த நாட்கள்"

"இக்பால் வீட்டுமுற்றத்தில் தலையில் துண்டுத் துணி கட்டி அவனோடு பிறை பார்த்த நாட்கள்"

தன் கிழக்கு மாகாண மண்ணின் வாழ்நாளை பால் குடிப் பருவ பசுமைகளை நினைத்து ஏங்கியழுபவர் இந்த இலக்கியப் பிறவி. மனித உணர்வுகள் வரண்டுபோன போரின் பூமியில் மானுட உணர்வுக்காய் இரங்கும்! வேண்டும்!! மனிதப் பிரார்த்தனையாளர், இலங்கையில் 1200 வருட கால வரலாறு கொண்ட முஸ்லீம் மக்கள், தம்தனித்துவத்தில் கவனமுடையவர்கள், சிறீலங்கா அரசினது மட்டுமல்ல தமிழீழக்காரர்களதும் அவர்களை அடையாளமற்றவர்களாக ஆக்கும் முயற்சிகட்கு எதிராக கலகம் செய்தவர்கள். அதற்காக இருபகுதியாலும் தண்டிக்கப் பட்டவர்கள். வடமாகாணத்திலிருந்து பாசிச நியா



முஸ்லீம் மக்களின் சுதந்திரத்தை மட்டுமல்ல தமிழ் மக்களின் சுதந்திரத்தையும் இருப்பையும் மறுத்துக் கொலைகளை ஏவிவிட்டவர்கள் அரசியல் வெற்றுக் கோம்பைத்தனத்தால் மட்டுமல்ல யாழ்ப்பாணியத்தின் வழி நடத்தலாலுமே என்று காரணம் காட்டுகின்றார். ஆயுதம் மானுடத்தின் விரோதி எனப் பிரகடனப்படுத்தும் சக்கரவர்த்தி. கொலைகளற்ற ஒருவாரம் சுகமானது என்று பெருமூச்சு விடுகின்றார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

யம் பேசி முஸ்லீம் மக்களை அவர்களின் பூமியிலிருந்து புலிகள் துரத்தினர். முஸ்லீம் மக்கள் துரத்தப்பட்ட பத்தாவது வருட நினைவுகூரலில் சக்கரவர்த்தியின் "யுத்தத்தின் இரண்டாம் பாகம்" தமிழ் ஈழங்களின் அதீத ஆதிக்கக் குரல்கட்கு எதிரான இலக்கியக் குரலாக வந்துள்ளது. தமிழ் மக்கள் தரப்பிலான மனிதக் கடமையை நிறைவேற்றியுள்ளது. இக்கதைகள் யுத்த காலத்தை உடைத்து பேசப்படாத பகுதிகளை ஆவணமாக்கியுள்ளது. கதை என்பது மனிதர்களைப் படிப்பதுதான். கதை வழியே மனிதர்களைப் படிப்பதுதான். கதைககளில் நெகிழ்வு, மிகையுணர்ச்சி, இலட்சிய வாதத்தையும் வெளியிடும் சக்கரவர்த்தி கதைக்கரு, உத்தி, வர்ணனை, உவமானம், பாத்திரப் படைப்பு போன்ற பிரதேசங்களிலும் ஆழமாய் புகவேண்டும். பல்வகை களங்களை அணுக வேண்டும். கதையை அமைப்பதிலும் இயக்குவதிலும் தன் பிள்ளைப் பிராயத்தை தாண்ட வேண்டும். சக்கரவர்த்தி மார்க்சியத்தோடு பழகாதவர் என்று தெரிகிறது. மார்க்சிய பரீச்சயம் இருந்திருக்குமேயாயின் இவர் இன்னமும் தன் கதைகளில் ஊடுருவி மனிதப் பிரபஞ்சத்தை தழுவியிருப்பார். சக்கரவர்த்தியிடம் பின்நவீனத்துவப் போக்குகளின் பாதிப்பு எதுவும் அவரின் எழுத்துக்களில் கிடையாது. அப்படியிருக்க அவரை பின்நவீனத்துவ எழுத்தாளராய் கட்டமைப்பது வெறும் கோஸ்டிகானத்துக்கே உதவும்.

**யுத்தத்தின் இரண்டாம் பாகம்**

**சக்கரவர்த்தி சிறுகதைகள்**
**(எக்ஸில் வெளியீடு)**
**exil**
**B-P:204**
**92604 Asnieres Cedex**
**france**

# ஒடுக்கப்பட்ட மனம் சார்ந்த அணுகுமுறையினூடு யாத்ரா

முகன்

ஈழத்து முஸ்லீம்களின் வாழ்வியலை அவர்களின் ஊடாக எழுத்தில் கொண்டு வருகின்ற செயற்பாட்டில் முக்கிய கடமையாற்றிக் கொண்டிருக்கின்றது யாத்ரா. கவிதைக்கான இதழான யாத்ரா, பல கவிஞர்ககளின் கவிதைகளோடு, கவிதைபற்றிய விமர்சனங்கள்,கட்டுரைகள், கவிஞர்களின் நேர்காணல்கள் என காலாண்டிதழாக வெளிவந்து கொண்டிருக்கிறது. அத்தோடு பல கவிஞர்களின் கவிதைத் தொகுப்புக்களையும் வெளியிட்டு ஒரு வெளியீட்டு நிறுவனமாகவும் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஈழத்திலிருந்து கவிதைக்காக ஒரு தனி இதழை கொண்டுவருவதென்பதும், அதிலும் கவிஞர்களைத் தேடிப் பிடித்து கவிதைகளை வாங்கியெடுத்து மூன்றுமாத காலத்தில் இதழை வெளியிடுவதென்பதும் இலகுவான காரியமில்லை. எனவே யாத்ரா தோழர்களின் செயற்பாடு அளப் பெரியது.

இதுவரை யாத்ரா நான்கு இதழ்கள் வெளிவந்து இருக்கின்றன.நான்காவது இதழ் யாத்ராவின் முதலாவ்து ஆண்டு மலராக வெளிவந்துள்ளது. யாத்திராவின் கவிதைகள், அவை முன்னிறுத்துகின்ற விடயங்கள் என்பவற்றை நோக்கும் போது, காணாமல் போன மனங்கள், அவர்களின் பிரசுரிக்கப்படாத கவிதைகள் , அவர்களின் வாழ்வு என்பவற்றையே அதிகம் சார்ந்து இருக்கின்றது. இது இலங்கையில் முஸ்லீம்களின் ஒருவித ஒடுக்கப்பட்ட மனம் சார்ந்த அணுகுமுறையாகவும் இருக்கலாம். ஆனாலும் தற்கால கவிதைகளின் போக்குகள் குறித்தும், கவிதையின் அதீத நிகழ்வுகள் குறித்தும் , அவற்றைப் பரீட்சித்துப் பார்க்கவும் கவிதைக்கான ஒரு இதழிலேயே சாத்தியப்படும். அதற்கான சூழலை யாத்ரா வளர்த்தெடுக்க வேண்டும்.

இறுதியாக படைப்புக்களுக்குப் படைப்பாளிகளே பொறுப்பானவர்கள் என்ற யாத்ராவின் வாசகம் படைப்பாளிகள் மீது வன்முறையைப் பிரயோகிப்பதாகவேயுள்ளது. ஒரு படைப்பாளியின் படைப்புக்களுக்கு அவன் சார்ந்த சமூகமும், வாசகனும் கூட பொறுப்பாளியாகிறான். இதில் பிரதியை உருவாக்குபவன் மட்டும் பொறுப்பாகும் எனச் சுட்டுவது அவன்மீது பிரயோகிக்கும் ஒருவித வன்முறையாகவே கருத இடமுண்டு. எனவே இனிவரும் யாத்ரா இதழ்கள் இதனைக் கவனத்தில் கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

தொடர்புகளுக்கு:
37 Dhankanatta Road
Mabola
Wattala-11300
Srilanka





www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆணுக்கொரு சிலுவையும்
அறைந்து கொள்ள
ஆணிகளும் தந்து
ஆண்டுகள் பலவாச்சு...!

இன்னும்
உயிரோடுதான் இருக்கின்றோம்
வாழ்வைத் தின்று-
கொண்டிருக்கிறது மரணம்!

காலத்துயர் முழுதும்
கண்ணீரின் கறைகள்
கறள் பிடித்துப் போயிற்று
வாழ்க்கையின் கதைகள்!

முக்காட்டுப் பிறைகளின்
நெஞ்சினில்...
தொப்பிக்குள் சுடர்கிற
நிலவு முகங்களில்...
வேர் பிடித்திருந்த நம்பிக்கை
அத்தனைக்கும்-
ஒரு நல்ல நாளில்
அவர்கள் கொள்ளிவைத்தனர்!

கழிவுகளை அகற்றுமொரு
இழிவொடு
மானுட வரலாற்றுக்கே
கரி பூசினர்.

கூடுகள் குலைந்தன
குஞ்சுகள் பொரித்துக்
குலாவிய திசைகளுமிருண்டன
யாவையும் இழந்தோம்.

எத்தனை வம்சங்கள்
வேர் கொண்ட மண்
அத்தனை தலைமுறையின்
தலைவிதியும்...
துப்பாக்கிகளின் நிர்ப்பந்தத்தில்
தலை கீழாயிற்று.


காலம் முழுவதற்குமாய்
அந்த நிலத்தின் மீதுதான்
எங்கள் உயிரை வைத்திருந்தோம்.

நாம் வாழ்ந்த வீடு
நம் தோட்டங்கள்
நமது சந்தோசம்...
நம் உரித்து
சகலமும் பறித்தெடுத்து
வெறுங்கையுடன் விரட்டப்பட்டதும்,

சதி செய்தவர்களென்ற
சந்தேகப் பழி சுமந்து
சதிகாரப் பழிவாங்கலுக்குப்
'பலி' யாகிப் போனதுவும்...
அதே- நிலத்தில் இருந்துதான்.

ஒளி பொருந்திய
எங்கள் ஜீவிதத்தை
ஒரு ஒலிபெருக்கியின் மூலம்
இருட்டடிப்புச் செய்ததே
தமிழ் மறவர் வீரம்...?

தமிழை வரமாக நினைத்து
வாழ்ந்திருந்த நன்றிக்கு





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆறாத சாபத்தை எமக்களித்தனர்:
வாழ்வையே
துயர்களின் : வதைகூடமாக்கினர்

கூடுகளை விட்டு விரட்டி
குழிகளிலே தள்ளினர்...

அன்றவர்கள்
இரக்கமற்று குத்தியேற்றிய
கூர் முட்கள்தானே
இன்றுவரை... கூவமுடியாமல்
எம்மவர் குரல்வளையை அடைத்தது?

பனையோடு வளர்ந்த எண்ணங்களில்லை,
பசியாறிக் கிடந்த திண்ணைகளில்லை,
கயிற்றூஞ்சல் ஆடிய...
சோலைகளில்லை...
சுற்றமும் சொந்தமும்...
இன்னும் நாசிக்குள் மணக்கிற...
மல்லிகை முற்றமும்
காதலும்... கனவும்...

தொட்டில்களில் கேட்கிற- தாய்மையின்
தாலாட்டுக்களுமில்லை!

வெறிச்சோடிப் போனோம் நாம்,
ஐவேளை குரல் கனியும்- தனித்த
பாங்கொலியினூடே...
அநீதியிழைக்கப்பட்டதெங்களின்
ரூஹ்ஹீ...

அழுது "துஆ" கேட்கும்
கண்ணீரின் ஈரங்கள் காய்வது என்று?

கிடுகுக் கூடாரங்களுக்குள்
முதுகு கூனிக்
கனவுகள் முறிந்து
நிம்மதியிழந்து வேகுமுயிர்களின்-
ஈறல்... தீர்வது என்று?

---

# சதுரங்கம்

தாக்குவதோ பாதுகாப்பதோ
நோக்கங்களாக
நகர்வுகள் தீர்மானிக்கப்படுகின்றன.

தாக்கும் தருமங்கள்
கைவிடப்பட்டு வெகுநாளாயின.

இருந்தும்
கட்டாயப்படுத்தப்படுகிறது
சதுரங்க விதிகளும்
நகர்வின் வரம்புகளும்.

மீள்சக்தியற்று முன்னகர்கிற
சேனைகளின் இரத்தம்
ராஜ்ஜியத்தின் மகுடங்களில்
தெறிக்கும்.

எதிரி யாரென்று தெரியாமலே
சதுரங்கக் கட்டங்களாகி
வருகின்றன
நிற்குமிடங்கள்.

-செல்மா பிரியதர்ஸன்-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை முஸ்லிம்களை நசுக்கும் பேரினவாதம்

**இக்கட்டுரை அண்மைக் காலமாக இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள, தமிழ் அரச பேரினவாதம் மேற்கொண்டு வரும் சில தகவல்களை சொல்வதற்கு முயல்கிறது. வரலாற்றுக் குறிப்புக்களைக் கையாள முனையும் ஆய்வாளர்களுக்கு இத்தகவல்கள் பயனுள்ளதாக அமையும் என நினைக்கின்றேன்.**

**சுஹறா**
2000/7/25

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரை அரசியல் இலக்கற்ற ஒரு சமூகமாகவே இன்று மாறிக்கொண்டிருக்கின்றது. உதைபடும் திசைக்கு எகிறிச்செல்லும் பந்துபோல் «பேரினவாதிகளின் ஈவிரக்கமற்ற உதைபடல்» உபாதைகளை முஸ்லிம் சமூகம் எதிர்கொள்கின்ற ஆபத்தான சூழலில் சிக்கியுள்ளது. ஒருபுறம் சிங்களப் பேரினவாதம், மறுபுறம் தமிழ்ப் பேரினவாதம். இவற்றிக்கிடையே, கிழக்கு தென்னிலங்கை முஸ்லிம் அரசியல்வாதிகளின் தலைமைத்துவ அக்கப்போர் எனப் பல்வேறு திசைகளில் முஸ்லிம்கள் அல்லல் படுகின்றனர்.

19ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிங்களத்தமிழ் தலைமைகள் முஸ்லிம்களின் தனித்துவத்தையும் உரிமையையும் மறுதலிக்கும் கடும் போக்கை கைக்கொண்டு வந்தன. தென்னிலங்கை முஸ்லிம்களின் வர்த்தக மேலாண்மையை நசுக்கும் சதிகளில் சிங்கள வர்த்தகர்கள் முனைப்புடன் செயற்பட்டனர். இதற்கென வரலாற்றுத் திரிபுகளையும் அவர்களின் புத்திஜீவிகள் எனப்படுவோர் மேற்கொண்டனர். முஸ்லிம்களின் பூர்விகத்தையும் தனித்துவத்தையும் கொச்சைப் படுத்துவதற்காக அவர்களை «மரக்கலமினுசு», «கள்ளத் தோணிகள்» என எழுதியும், பேசியும் வந்தனர். மறுபக்கம் தமிழ்த் தலைமைகள் முஸ்லிம்களை தம் பிடிக்குள் அடக்கி வைத்திருக்க முனைந்தன. எனினும் முஸ்லிம் சமூகத்தின் சிந்தனைச் சிற்பிகள் சிலர் தாம் தனியான ஓர் சமூக அமைப்பு என்பதை வரலாற்று ரீதியாக நிருபித்து அதில் வெற்றியும் கண்டனர். இப்பேரினவாதத்தின் வளர்ச்சி, 20ஆம் நூற்றாண்டில் மிகத் தீவிரமாக முனைப்புக் கொண்டது.

சிங்களப் பேரினவாதம் ஒரு நிறுவனமாக இயங்க ஆரம்பித்துள்ளதை அவர்களின் «சர்வதேச வலைப் பின்னல் வியாபகத்தை நோக்கும்போது தெளிவாகின்றது.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உதயமான சிங்களத் தேசியவாதம் 20ஆம் நூற்றாண்டில் பிரதான அரசியல் சக்தியாக சகல வழிகளிலும் தன்னை நிலைநிறுத்தியுள்ளது. அநாகரீக தர்மபால சிங்கள தேசிய சிந்தனையின் பிதாமகனென போற்றப்படுகின்றார். இந்த வரிசையில் 40க்கும் மேற்பட்ட சிங்கள அமைப்புக்கள் ஒன்றிணைந்து «சிங்களஉருமய» என்ற அரசியல் கட்சியை கடந்த மே மாதம் 26ஆம் திகதி (2000) உருவாக்கியுள்ளன.

இவர்களின் ஒட்டுமொத்த நோக்கம் முஸ்லிம்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழ் வாக்குகளுக்கு அடிமையாகாமல் சிங்களவர்களை ஒன்று திரட்டி நீண்டகால இலக்கைக் கொண்ட வேலைத்திட்டமொன்றை ஆரம்பிப்பதேயாகும். 1939 இல் சட்ட சபையில் இருந்த மார்க்கான் மார்க்கர் போன்ற முஸ்லிம் தலைமைகள் அன்றைய சிங்கள பேரினவாத கருத்துக்களுக்கு ஒத்துப்போகக் கூடியவர்களாக காணப்பட்டதும் இப்பேரினவாதம் நிறுவனமயமாக இயங்குவதற்கு உறுதுணையாக இருந்தது எனலாம்.

1939 சட்ட சபையில் «நான் ஒரு முஸ்லிமாக இருந்து கொண்டு இந்த நாட்டை பெரும்பான்மையான சிங்களவர்கள் ஆளவேண்டும். நாங்கள் இப்பணியில் அவர்களுக்கு உதவுவோம்» என இந்த நாடு சிங்களவர்களுக்கே உரியது. நாம் «வந்தேறுகுடிகள்» என சொல்லாமல் சொல்லி அடிமைச் சேவகம் செய்த சில முஸ்லிம் தலைமைகள் செய்த மோசடிகளால் முஸ்லிம் சமூகத்தின் வரலாறு பேரினவாதத்தால் காழ்ப்புணர்ச்சியுடன் நோக்கப்பட்டது. இதே வரலாற்றுத் தவறை 1939 சட்டசபையில் தற்போது பொதுஜன ஐக்கிய முன்னணியின் அரசாங்கத்தில் பௌசியும், அலவியும், சில முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் எனப்படுவோரும் செய்து வருகின்றனர். 1889 இல் முஸ்லிம்கள் தமக்குத் தனியான ஆசனம் தேவை எனக் குரலெழுப்பியபோது முஸ்லிம்கள் வேறு சமயத்தை பின்பற்றும் இனரீதியில் தமிழர்கள் என்று பொன்.இராமநாதன் போன்ற தமிழ் தலைமைகள் அதைக் கடுமையாக எதிர்த்தனர். மட்டுமன்றி முஸ்லிம்களை «கலகக்காரர்» என பிரித்தானி யாவுக்குச் சென்று வழக்காடிய வரலாற்றுத் துரோகியும் என பொன்.இராமநாதனை முஸ்லிம் தேசியம் கணிக்கின்றது.

1889 இல் முஸ்லிம்கள் தமக்குத் தனியான ஆசனம் தேவை எனக் குரலெழுப்பியபோது முஸ்லிம்கள் வேறு சமயத்தை பின்பற்றும் இனரீதியில் தமிழர்கள் என்று பொன்.இராமநாதன் போன்ற தமிழ் தலைமைகள் அதைக் கடுமையாக எதிர்த்தனர்.

அரசியல், ஆள் பலம், பொருளாதாரச் சுரண்டல், பிரச்சாரம் என்பவற்றிற்கு மேலாக ஊடகத்துறை போன்றவற்றையும் பின்பலமாகக் கொண்டு இனவாதச் சக்திகள் முஸ்லிம்களை நசுக்கி வருகின்றன. சிரச, ஹிரு, ரி.என்.எல். (T.N.L), திவயின, சன்ரேரைம்ஸ் உட்பட பல்வேறு பெயர்களில் இயங்கும் சிங்கள சிற்றிதழ்களும், நாளிதழ்களும் முஸ்லிம் விரோதப் போக்கினை தொடர்ந்தும் பிரச்சாரப்படுத்தி வருவதுடன் «இன்ரர் நெட்» மூலமாகவும் இவ்வெதிர்ப்பை வெற்றிகரமாக வெளிக்காட்டி வருகின்றன.

நீதி அமைச்சர் G.L. பீரிஸினால் சமவாய்ப்புச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டபோது, 23க்கும் மேற்பட்ட சிங்கள இனவாத அமைப்புக்கள் அதை எதிர்த்து கிளர்ச்சி செய்தன. 1999-அக்டோபர்-3ஆம் திகதி திவயின பத்திரிகையின் தலைப்புச் செய்தியாக சமவாய்ப்புச் சட்டமூலம் கொண்டு வரப்பட்டால் அதை எதிர்த்து நீதிமன்றம் செல்ல ஒரு கூட்டம் தயார் என எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இச்சட்டத்தினால் முஸ்லிம்களுக்கு அதிக சலுகையும் உரிமையும் கிடைக்கின்றது. சிங்களவர்களோ ஓரங்கட்டப் படுவார்கள் என சிங்கள அமைப்புக்கள் கிளர்ந்தெழுந்தன.

கொழும்பு மாநகர சபைக்குட்பட்ட பிரதேசத்தில் தமிழ், முஸ்லிம் சனத்தொகை 70 வீதமாக இருப்பதாகவும் இச்சட்டம் அமுலுக்கு வந்தால் சிங்கள பௌத்த பாடசாலைகளின் தனித்துவத்திற்கு பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்றும் பிரச்சாரப்படுத்தப்பட்டது.

இதே திகதியில் திவயின பத்திரிகையில் «சாணக்கே லியனராச்சி» என்பவர் «சமவாய்ப்புச் சட்டத்தின் ஆபத்து» என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதில் முழுக்க முழுக்க முஸ்லிம்களையும் முஸ்லிம் காங்கிரசின் தலைவர் மர்ஹூம் அஷ்ரப் அவர்களையும் சாடி முஸ்லிம்களின் கலாச்சார தனித்துவத்தை பௌத்த பாடசாலைகளில் அஷ்ரப் நுழைத்து, அப்பாடசாலைகளைச் செயலிழக்கச் செய்வது தான் அஷ்ரப்பின் நோக்கம். எனவே இந்நிலையை விளங்கி, சரியான சிங்களத் தலைமை உருவாக வேண்டும் என சாணக்கே அக்கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இதில் வேடிக்கை என்னவென்றால், அஷ்ரப் அவர்கள் கூறாதவற்றையும் மிகைப்படுத்தி திவயின, பி.என்.எல். போன்ற ஊடகங்கள் பிரச்சாரப்படுத்தியதுதான். இது தொடர்பான திவயின முழுப்பக்க விளம்பரம் 8.10.99 இல் சமவாய்ப்புச் சட்டத்தை எதிர்ப்பதற்கான ஒரு பொதுக்கூட்டத்திற்கு மக்களை பகிரங்கமாக அழைத்திருந்ததை இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

இவ்வாறே கடந்த 1998 ஜன- 18ஆம் திகதி வெளியான திவயின ஆசிரியர் தலையங்கத்தில் அஷ்ரப் ஆயுதம் தரித்த

www.tamilarangam.net

நபர்களுக்கு ஆதரவளித்து வருகிறார் என்றும் பயங்கரவாதிகளுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகிறார் என்றும் எழுதப்பட்டிருந்தது. இதுதவிர «சிங்கள வீரவிதான»யின் தேசிய அமைப்பாளர் «சன்டே ரைம்ஸ்» பத்திரிகையில் «கும்பகர்ண» என்ற பத்தியை தொடர்ந்து எழுதி வருகின்றார். இப்பத்தியில் முழுக்க முழுக்க முஸ்லிம் விரோதக் கருத்துக்களையே எழுதி வருகிறார். «சோமஹிமி, முஸ்லிம்களின் மதரீதியான அனுஷ்டானங்களை கேலி செய்யும் வரலாற்றுத் தகவல்களை திரிவுபடுத்தியும், பிரச்சாரப்படுத்தி வருகின்றார்.

அண்மையில் தெரிவு செய்யப்பட்ட 11ஆவது பாராளுமன்ற ஆசன ஒதுக்கீட்டு விவகாரத்தில் முஸ்லிம் காங்கிரசின் இணைத் தலைவரான ரவூப் ஹக்கீம் அவர்களை சிங்கள ஊடகங்கள் கடுமையாக தாக்கி எழுதின. உண்மையில் அவர் பேரம்பேசாத விடயங்களைக் கூட இந்த ஊடகங்கள் ஊகங்களாக எழுதியும் பேசியும் வந்தன.

«சிங்கள வீரவிதான» அமைப்பானது கண்டியில் வெளியிட்டுள்ள ஒரு துண்டு பிரசுரத்தில் முஸ்லிம் விரோதக் கருத்துக்களை பகிரங்கமாக முன்வைத்துள்ளது. அனைத்து சிங்களவர்களும் அரசியல், கட்சி பேதங்களை மறந்து ஒரு பௌத்த தலைமையின் கீழ் ஒன்றுபட வேண்டும் இல்லையேல் இந்த நாடு இன்னும் 25 வருடங்களில் ஒரு முஸ்லிம் நாடாக மாறிவிடும். உங்கள் பிள்ளைகள் அல்லாவிடம் உதவி தேடுபவர்களாக இருப்பார்கள். 1948ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இலங்கை பௌத்தர்களின் வீதம் 80ஆக இருந்தது. 1993ஆம் ஆண்டு 52 வீதமாக குறைந்துள்ளது. முஸ்லிம்களே இலங்கையில் அதிகரித்து வருகிறார்கள். முஸ்லிம் தனவந்தர்களின் வீடுகளில் சிங்களப் பெண்கள் அடிமைகளாக வேலைக்காரிகளாக இருக்கின்ற நிலைமை மிகக் கேவலமானது. எனவே முஸ்லிம்களின் வியாபார நிலையங்களில் சிங்களவர்கள் கொடுக்கல் வாங்கல்கள் எதுவும் செய்ய வேண்டாம். காணி, சொத்துக்களை விற்க வேண்டாம். திட்டமிட்டு அவர்களின் இளைஞர்கள் நமது யுவதிகளைக் கவர்ந்து மணம் புரிகிறார்கள். இப்படி ஆதாரமற்ற செய்திப் புள்ளிவிபரங்களை உள்ளடக்கி சிங்களப் பேரினவாத சக்திகள் முஸ்லிம்களுக்கெதிரான சதிகளில் செயற்பட்டு வருகின்றன.

பல்கலைக்கழக மாணவர்கள், புத்திஜீவிகள், படையதிகாரிகள், படைவீரர்கள், அரச பணியாளர்கள், உயரதிகாரிகள், பாராளுமன்ற உறுப்பினர்கள், வியாபாரிகள், பெண்கள் என எல்லாத் தரப்பினரையும் ஒருங்கிணைத்த ஓர் முஸ்லிம் எதிர்ப்பு இயக்கமாக பேரினவாதம் வளர்ந்து வருகின்றது.

1999 ஏப்ரல் லுணுகம்வெகர கொலனி முஸ்லிம்களை சிங்களப் பேரினவாதம் திட்டமிட்டு எழுப்பும் நடவடிக்கையில் இறங்கியது. இம்மக்களுக்குச் சொந்தமான 40 ஏக்கர் காணியை ஓர் அரசியல் வாதியின் அதிகாரப் பலத்துடன் சிங்களப் பேரினவாதிகள் அபகரித்துள்ளனர். «முஸ்லிம்களை இங்கு விட்டு வைக்க மாட்டோம். இது எங்கள் நிலம்» என்று கூச்சலிட்டு அங்கு குடியேறி வாழ்ந்த முஸ்லிம்களை பெண்கள் உட்பட சிறுவர்களையும் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

1981ஆம் ஆண்டு அம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களில் இருப்பிட வசதியற்ற நூற்றுக்கணக்கான குடும்பங்களுக்கே இக்காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டன. மொத்தம் 21 கொலனிகளில், «லுணுகம்வெஹர» என்ற கொலனி மட்டுமே முஸ்லிம்களின் குடியிருப்பாக இருந்தது. ஏனைய 20இல் சிங்களவர்களே குடியேறியிருந்தனர். தற்போது 50க்கும் குறைவான குடும்பங்களே இக்கொலனியில் எஞ்சியுள்ளன.

இவ்வாறு திட்டமிட்ட கலவரங்களை சிங்கள பேரினவாதிகள் முஸ்லிம் கிராமங்களில் ஏற்படுத்தி பொருளாதாரத்தினையும் அழித்து வருகின்றனர். 99ஆம் ஆண்டின் இறுதிப் பகுதியில் நிகழ்ந்த பன்னல, அலபடகம, கலகதர, கொட்டியாகும்புற, நாச்சியாதீவு அனர்த்தங்கள் இதை துல்லியமாக காட்டுகின்றன.

மேற்குறிப்பிட்ட முஸ்லிம் கிராமங்களில் முஸ்லிம்களின் பொருளாதார மையங்களை இலக்கு வைத்தே தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதை புள்ளிவிபரங்கள் தெரியப்படுத்துகின்றன. இத்தகைய நில ஆக்கிரமிப்பு, பொருளாதார அழிப்பு போன்ற சதிநாச வேலைகளின் பின்னணியில் இராணுவத்திலிருந்து தப்பியோடியவர்களும், பொலிஸ், இராணுவமும் உந்து சக்தியாக இருப்பதால் வேலியே பயிரை மேய்கின்ற நிலை, சிங்கள கிராமங்களை அண்டிவாழும் முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ளது. சில நேரங்களில் முஸ்லிம்களுக்கு எதிரான தாக்குதல்களை இராணுவமும் பொலிசும் சிவில் உடையில் சென்று தாக்கி வருவதையும் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

கிண்ணியா பூவரசந்தீவில் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பாடசாலை 92ஆம் ஆண்டிலிருந்து இராணுவம் கைப்பற்றி வைத்துக் கொண்டு தர்மாட்டேன் என அடம் பிடிக்கின்றது. 1990ஆம் ஆண்டின் ஜூலைக் கலவரத்தின் போது இம்மக்கள் இடம் பெயர்ந்து 92இல் மீளக்குடியேறிய போது பாடசாலையிலும் சில குடியிருப்புக்களிலும் இராணுவம் குடியேறியிருந்ததைக் கண்டு மேலிடங்களுக்கும் அரசியல் தலைவர்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறிவித்தும் பயன் கிடைக்காமல் போகவே கொட்டகைகளை அமைத்து கல்வியைத் தொடர்ந்து வருகின்றனர்.

இவ்வாறே 90ஆம் ஆண்டு வாழைச்சேனைப் பகுதியில் உள்ள கேணி நகர் பள்ளிவாசலை இராணுவம் ஆக்கிரமித்து முகாமிட்டுள்ளது. எத்தனையோ வெற்றுத் தரைகளும், மறைவிடங்களும் இருக்க முஸ்லிம்களின் புனித வணக்க ஸ்தலங்களை முகாம்களாக மாற்றி திட்டமிட்டே முஸ்லிம்களின் வரலாற்று ஆவணங்களை சிதைத்து வருவதில் இராணுவத்திற்கும் பொலிசுக்கும் பாரிய பங்குண்டு. கேணிநகர் பள்ளிவாசல் இன்றும் இராணுவ முகாமாக இயங்கி வருவதை கண்டித்து எந்தவொரு முஸ்லிம் அரசியல்வாதியும், பாராளுமன்றத்தில் குரலெழுப்பவில்லை என்பது இங்கு மிக வருத்தத்துக்குரிய, விசனத்திற்குரிய நிகழ்வாகும்.

அம்பாறையில் திட்டமிட்ட குடியேற்றங்களை செய்துவரும் பேரினவாதம், முஸ்லிம்களுக்கு சொந்தமான விவசாய நிலங்களான பொன்னன்வெளி, ஆலிம்சேனை ஆகிய இடங்களில் நில ஆக்கிரமிப்பு செய்துள்ளதை- காத்திரமான எந்த நடவடிக்கை களையும் எடுக்காமல்- அந்தமக்களின் உரிமைக் குரலையும், அம்மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்துவதாகச் சொல்லும் தளத்து முஸ்லிம்கட்சி நசுக்கியது. அண்மையில் சிங்களப் பேரினவாதம் அம்பாறைப் பள்ளிவாசல் சுற்றுமதிலை இடித்து பௌத்த விகாரைக்கு சொந்தமான காணியென்று பள்ளி நிலத்தை ஆக்கிரமிக்க எத்தனித்தது. நில ஆக்கிரமிப்பு ஒரு பக்கம் தொடர, பொருளாதார அழிப்பும், கல்வி, வேலைத் திட்டங்களில் மோசடியும், திட்ட மிட்டபடி தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

இலங்கையில் 14 கல்விக் கல்லூரி களில் ஒரேயொரு கல்விக்கல்லூரி மட்டுமே முஸ்லிம் களுக்கு ஒதுக்கப் பட்டுள்ளது. தொழில் நுட்பக் கல்லூரிகளின் நிலையும் இதுவே. தொழில் வாய்ப்பு, பாராளுமன்ற பிரதிநிதித்துவம், முஸ்லிம் அமைச்சர்களின் பொறுப்புக்கள், எல்லாவற்றிலும் சிங்களத் தேசியவாதத்தின் மர்மக்கரங்கள் இரகசியமாகவும், பகிரங்கமாகவும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

சிங்கள தேசியத்தின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடும் தமிழ் விடுதலை இயக் கங்கள், முஸ்லிம் களுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிர மித்து அடர்ந்தேறுவது அவர்களின் விடு தலைப் போராட்டத்தை மிகுந்த கேள்விக் குள்ளாக்குகிறது.

இது ஒருபுறமிருக்க பெரும்பான்மை இனத்தின் அடாவடித்தனங்களைத் தொடர்ந்து தம் உரிமைகளை மீட்கப் போராடும் ஓர் சிறுபான்மை இனம், தன் சகதேசத்து மக்களும், ஒரு மொழி பேசுபவருமான முஸ்லிம் தேசம் மீது திட்டமிட்டபடி தாக்குதல்களையும், இனச்சுத்திகரிப்பையும் தொடர்ந்து நடத்தியே வருகின்றது. ஒருபக்கம் முஸ்லிம்களை நோக்கி சர்வதேச வலைப்பின்னல் ஊடாக நேசக்கரம் நீட்டுவதாக நடித்துக் கொண்டு மறுபக்கம் முஸ்லிம்களின் இருப்பையும், வாழ்வுரிமையையும் முழுமையாக அழிப்பதற்கு தமிழ் பேரினவாதம் முயற்சி செய்து கொண்டே இருக்கின்றது. தமிழ் தேசிய வாதத்தினதும், பன்முகப்படுத்தப்பட்ட இந்துத்துவத்தினதும், தாக்குதல்களும், பொருளாதார சேதங்களும், இனஅழிப்பு, ஆட்கடத்தல், கப்பம் பெறும் நடவடிக்கைகளும், மிக அவதானமாக திட்டமிட்டபடி நடந்து வருகின்றன. சிங்கள தேசியத்தின் நில ஆக்கிரமிப்புக்கு எதிராக போராடும் தமிழ் விடுதலை இயக்கங்கள், முஸ்லிம்களுக்குச் சொந்தமான நிலங்களை ஆக்கிரமித்து அடர்ந்தேறுவது அவர்களின் விடுதலைப் போராட்டத்தை மிகுந்த கேள்விக்குள்ளாக்குகிறது.

காத்தான்குடி கர்பலா நகரில் 1980ஆம் ஆண்டு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த அஹமட் பரீத் மீராலெப்பை அவர்களால் உருவாக்கப்பட்ட இக்கிராமத்தில் 100க்கும் மேற்பட்ட வீடுகள் அமைக்கப்பட்டு வறிய மக்களுக்கு வழங்கப்பட்டன. 1990ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நடந்த போர் அனர்த்தங்களினால் இக்கிராமம் முற்றாகப் பாதிக்கப்பட்டது. எனினும் ஜனநாயக வழிக்கு வந்துள்ளதாக தம்பட்டம் அடிக்கும் தமிழ் பேரினவாதக் கும்பல், இம்மக்களை (முஸ்லிம்களை) ஆயுத முனையில் விரட்டியடித்து விட்டு, தமிழ் மக்களை அவ்விடத்தில் குடியேற்றியுள்ளனர்.

கர்பலா கிராமத்தின் பள்ளிவாசலில் கோவில் கட்டுவதற்கும், ஆயத்தங்கள் செய்து வருகின்றனர். இந்துத்துவத்தின் இனவெறுப்பு வடகிழக்கில் மட்டுமன்றி, மலையகத்திலும் பரவி இருப்பதை பதுளை தமிழ் பாடசாலையில் கல்வி கற்பித்த முஸ்லிம் ஆசிரியைகளின் பர்தா விவகாரம், அம்பலப்படுத்தியது. முஸ்லிம் ஆசிரியைகளை தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இஸ்லாமிய மார்க்க உடையுடன் பாடசாலைக்கு வரவேண்டாம் என்று தடுத்ததுடன் அதை மாணவ போராட்டமாக மாற்றியதும் ஒரு தமிழ் அரசியல் வாதியின் துணையுடன்தான் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

1999 அக்டோபர் 17-ந் திகதி MULF பாடசாலையில் ஷிஜாப் அணிவதை தடை செய்ததை எதிர்த்து ஓர் ஆர்ப்பாட்டத்தை கொழும்பில் நடத்தியது. எனினும், ஐக்கிய தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் மேல்மாகாண சபை உறுப்பினருமான மனோ-கணேசன் இவ்வார்ப்பாட்டத்தை கண்டித்து 18.09.2000 வீரகேசரியில் ஓர் அறிக்கை விட்டிருந்தார்.

பதுளை மகளிர் வித்தியாலய பர்தா உடை விவகாரம் தொடர்பாக ஏற்கனவே உயர்நீதி மன்றத்தில் முஸ்லிம் ஆசிரியைகள் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தும், அதை எதிர்த்து பாடசாலை அதிபர் (இவரும் ஒரு பெண்தான்) ஒரு வழக்கை தாக்கல் செய்ய அதை உச்சநீதிமன்ற நீதியரசர் களான R.N.M.தீரரத்ன, அமீர் இஸ்மாயில், பிரியந்த பெரேரோ ஆகியோர் நிராகரித்தனர். இந்த அளவுக்கு தமிழ் பேரினவாதத்தின் இனவெறுப்பு மேலோங்கி நின்றதற்குக் காரணம், தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துவதாகச் சொல்லிக் கொள்ளும் சில தமிழ் அரசியல்வாதிகளின் விஷமத்தனமான நடவடிக்கைகளேயாகும்.

1990ஆம் ஆண்டிலிருந்து தமிழ் பேரினவாதிகள் பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் மக்களை அநியாயமாக கொலை செய்துள்ளனர். வயது அடிப்படையில் அவர்களின் கொலைகளை (90 இல் மட்டும்) இவ்வாறு வகைப்படுத்த முடியும்.

| வயது | தொகை |
|---|---|
| 6-10 | 6பேர் |
| 11-15 | 17 |
| 16-20 | 17 |
| 21-25 | 36 |
| 26-30 | 22 |
| 31-35 | 26 |
| 35-40 | 18 |
| 41-45 | 18 |
| 46-50 | 12 |
| 51-55 | 03 |
| 56-60 | 06 |
| 61-65 | 04 |
| 66-70 | 02 |

இதுதவிர கொலை செய்யப்பட்ட ஆண்கள் 112, பெண்கள் 85, இது நீங்கலாக இன்னொரு புள்ளிவிபரம் இப்படிக் கூறுகின்றது.

மதபோதகர்-03, பள்ளிவாசல் பராமரிப்பாளர்-01, ஆசிரியர்-09, மாணவர்-29, சிப்பந்தி கள்-06, சாரதிகள்-05, நடத்துனர்-05, டாக்டர்-01, சாதாரண தொழிலாளர்-07, வியாபாரிகள்-73, அங்காடிகள்-09, மீன்பிடித் தொழிலாளர்-13. இப்புள்ளி விபரங்கள் 2000ஆம் ஆண்டில் இருமடங்காக அதிகரித்துள்ளது. இதில் கடத்தப்பட்ட, கடத்தப் பட்டுக்கொண்டிருக்கின்ற, உழவு இயந்திரங்கள், மாட்டுவண்டிகள், துவிச்சக்கரவண்டிகள் இங்கு கவனத்திற் கொள்ளப்படவில்லை. வடக்கு கிழக்கு முஸ்லிம்களின் சொத்துக்கள், உடமைகள் பற்றிய கணக்கெடுப்புக்கள் தனியாக ஆய்வுக்குட்பட்ட விடயம் என்பதால் அவற்றையும் இங்கு தவிர்க்கப்பட்டுள்ளது.

ஏறாவூரில் 62 உறுப்பினர் வீதம் மரணித்த குடும்பங்கள் 4, ஒரு குடும்பத்தில் 4பேர் வீதம் புலிகளாலும், ஏனைய தமிழ்க்குழுக்களாலும் கொல்லப்பட்டுள்ளனர். ஒரே குடும்பத்தில் 11 பேர் உட்பட மொத்தமாக 116 பேரை - 74 குடும்பங் களை 90ஆம் ஆண்டு ஒரே இரவில் விடுதலைப் புலிகள் வெட்டிக்கொன்றனர். இதில் பிறந்து 7நாள் கழியாத ஒரு குழந்தையும் அடங்கும். ஒரு 11 வயது சிறுவனின் உடலில் மட்டும் 23 துப்பாக்கிச் சன்னங்களை பாய்ச்சி தமிழ்ப்பேரினவாதம் தனது இரத்த தாகத்தை தீர்த்துக் கொண்டது.

இன்னும் முஸ்லிம் கிராமங்களில் கப்பம், கொலை, கொள்ளை, ஆட்கடத்தல் போன்ற நடவடிக்கைகளை தமிழ்ப் பேரினவாதிகள் மேற்கொண்டே வருகின்றன. இவற்றில் ஜனநாயக வழிக்கு திரும்பியதாக கூறிக்கொள்ளும் தமிழ் இயக்கங்களின் அட்டகாசம், ஆயுதம் தரித்த புலிகளின் அட்டகாசம் என இரு பேரினவாதிகளின் கெடுபிடிகளுக்கு முஸ்லிம் எல்லைக் கிராமத்து மக்களும் தனவந்தர்களும் முகம் கொடுத்து வருகின்றனர்.

கிண்ணியா, குச்சவெளி முஸ்லிம் கள் மீது அண்மைக்காலமாக தமிழ்ப்பேரினவாதம் தனது வன்முறைகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. பொருட்களை சுமந்து வரப்பணித்தல், பணம் அறவிடல், தங்களின் கட்டளைகளைச் சொல்லி அனுப்புதல் போன்ற சுமைகளை பொதுமக்கள் மீது திணிக்கின்றனர். அதுமட்டுமன்றி வாகனங்கள், கடைகள், வள்ளங்கள், வீட்டிலுள்ள T.V., வானொலிகள் என்பவற்றிற்கும் புலிகள் அமைப்பு முஸ்லிம்களிடம் வரி அறவிட்டு வருகின்றது. குச்சவெளிப் பிரதேசத்தில் அண்மைக்காலமாக முஸ்லிம் கிராமத்தின் முஸ்லிம் மக்களுக்குச் சொந்தமான கடைகள் கொள்ளையிடப்பட்டு 5 இலட்சம் பெறுமதியான சாமான்களை வாகனங் களில் ஏற்றிச் சென்றுள்ளனர். ஏன் இப்படிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்கின்றீகள் என முஸ்லிம்கள் கேட்டதற்கு, நீங்கள் வாழும் இம்மண் எங்களுடையது. எனவே இம்மண்ணிலிருந்து பிரயோசனம் பெறும் நீங்கள் எல்லா வழிகளிலும் எங்களுக்குப் பிரயோசனம் தரவேண்டும் என்று திருப்பிக் கூறியுள்ளார்கள். கிண்ணியாப் பிரதேசத்தில் ஒரு முஸ்லிம் வாலிபரின் மோட்டார் சைக்கிளை தர வில்லை என்பதற்காக அவ்விளைஞனை அதே இடத்தில் சுட்டுக்கொன்று விட்டு மோட்டார் சைக்கிளையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

கல்குடாத் தொகுதியிலுள்ள முஸ்லிம் கிராமங்களில் புலிகள் கப்பம் கேட்டு கடிதங்கள் அனுப்புவதும் இரவில் ஊடுருவி கடைகளைக் கொள்ளையடித்துச் செல்வதுமாக இருக்கின்றனர்.

கடந்த 26-10-2000 அன்று காத்தான் குடி மக்கள் ஒரு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தினர். பூநொச்சிமுனையில் முஸ்லிம்களுக்கு சொந்தமான காணிகளில் கிறிஸ்தவர்கள், கிறிஸ்தவ சிறுவர்கள் இல்லக்கட்டடமும் தேவாலயமும் கட்டப்படுவதை எதிர்த்தே இவ்வார்ப்பாட்டத்தை நடத்தினர். இந்நில ஆக்கிரமிப்பும் தமிழ் இயக்கங்களின் அனுசரணையுடன் நடந்து வருகின்றன. 1990ஆம் ஆண்டு வன் செயல்களின் போது இடம் பெயர்ந்த மக்களுக்கு 190 காணித்துண்டுகள் வழங்கப்பட்டன. இப்படி இருக்க மட்டக்களப்பின் பொறுப்பு வாய்ந்த? பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜ சிங்கம், இக் கிராமம் பாரம்பரிய தமிழர்களின் கிராமம் என அறிக்கை விட்டு, தனது தமிழ் தேசிய இன வாதத்தைக் கக்கியுள்ளார். (24-10.2000 வீரகேசரி)

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆறுமுகநாவலரால் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட சைவ வேளாள சித்தாந்தமானது முஸ்லிம் விரோதப் போக்கை மேற்கொள்ளும் தமிழ் விடுதலை அமைப்பினருக்கு பெரும் துணையாக இருந்து வருகின்றது.

கடந்த பொதுத் தேர்தலின் போது 2-10-2000 மூதூரில் தமிழ் முஸ்லிம்கள் மேற்கொண்ட தற்கொலைத் தாக்குதல்

> ஒரே குழியுள் நூறு முறை விழுகின்ற குருட்டு சித்தாந்தத்தையும் வரலாற்றுத்தவறையும் தமிழ்ப் போராளிக் குழுக்கள் விசேடமாகப் புலிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

ஏ.எல்.உபைதுல்லாஹ் என்ற வேட்பாளரை குறிவைத்தே நடத்தப்பட்டன. எனினும் அவர் முஸ்லிம் என்றதினாலும் முஸ்லிம் கிராமத்தில் அரசியல் கூட்டம் நடைபெற்றதாலும் ஒரு தனிநபரைக் குறிவைத்து நடத்தப்பட்ட இத்தாக்குதலானது அநியாயமாக 24க்கும் மேற்பட்ட அப்பாவிகளின் உயிரைக்குடித்து விட்டது.

புலிகள் தொடர்ந்தும் திட்டமிட்டு முஸ்லிம் தலைமைத்துவங்களை அழித்தே வருகின்றன. கிழக்கில் பல புத்திஜீவிகளும், சமுதாயத் தலைவர்களும் புலிகளின் நரவேட்டைக்கு இரையாகிப் போயுள்ளனர். அலிரகுமான் தொடக்கம் (அக்கரைப்பற்று) ஒரே நேரத்தில் இரு அரச அதிபர்கள், பாடசாலை அதிபர், சட்டத்தரணி என வாழைச்சேனை மியான்குளம் என்ற இடத்தில் குண்டுவைத்து 1990ஆம் ஆண்டு புலிகள் கொன்றனர்.

ஒரே குழியுள் நூறு முறை விழுகின்ற குருட்டு சித்தாந்தத்தையும் வரலாற்றுத் தவறையும் தமிழ்ப்போராளிக் குழுக்கள் விசேடமாகப் புலிகள் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இப்பேரினவாத சக்திகள் நிறுவமையப்பட்டு இயங்கி முஸ்லிம் சமூகத்தை அழிக்கும் நடவடிக்கையில் முனைப்புக் காட்டுவது குறித்து முஸ்லிம் அரசியல் வாதிகள் மௌனமாகவே இருக்கின்றனர். முஸ்லிம்களுக்கென உருவாக்கப்பட்ட கட்சியும் சரி, முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினரும் சரி முஸ்லிம்களுக்குப் பேரினவாதிகளால் இழைக்கப்படும் கொடுமைகளை பாராளுமன்றத்துக்குள்ளேனும் குரல் கொடுத்து நிவாரணம் தேட முடியாத அளவிற்கு, பேரினவாதம் அரசியலில் சங்கமித்து மௌனித்துள்ளதை இங்குஅவசியம் சுட்டிக்காட்டியே ஆக வேண்டும்.

முஸ்லிம்களுக்கு நடக்கும் இக்கொடுமைகளை சில புத்திஜீவிகளும், நடுநிலையான பத்திரிகைகளுமே வெளியிட்டு தம் மனக்குமுறலை கொட்டி வருகின்றன. தவிர, முஸ்லிம்களை வழிநடத்துவதாக பீற்றிக் கொள்ளும் இந்த அரசியல் வாதிகள் வெறும் பார்வையாளர்களாகவும், முஸ்லிம் தேசத்தின் நலனில் அக்கறையற்றவர்களாகவுமே தொடர்ந்தும் இயங்கி வருகின்றனர். இதுமுஸ்லிம் சமூகத்தின் அரசியல் வங்குரோத்துத் தனத்தையும், தனித்துவமற்ற தலைமைத்துவ வறட்சியையுமே அடையாளப்படுத்துகிறது. இதிலிருந்து முஸ்லிம்கள் விடுபட வேண்டும். அரசியல்வாதிகளை விடுத்து புத்திஜீவிகள் இன்னும் தீவிரமாக சிந்திக்க வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவழும் பராயத்தில்
தாய்ப்பாலைத் துப்பி
யாரும் ஊட்டிவிடாமலே
அள்ளியுண்டு பழகிய மண்!

பின்னர்
வாயில் போட்டு
பல் விளக்கிய மண்!

தடக்கி விழுந்த காயத்திற்கு
மருந்தாய் அமைந்த மண்!

நான் குளித்த நீரையும்
கழித்த நீரையும்
பருகிக் கொண்ட மண்!
கத்தரித்த நகங்களையும்
சிக்கெடுத்த
கூந்தல் மயிர்களையும்
புதையலாய் கொண்ட மண்!
எனதும்
என்னவரதும்
பாதங்களை பத்திரமாய்
பதிந்திருக்கும் மண்!

குமரிப் பருவத்திலும்
கிளித்தட்டு விளையாடி
நான் பழம் பதித்த மண்!
மௌத்தான
உம்மாவும் வாப்பாவும்
மௌனித்திருக்கும் மண்!

வெள்ளி இரவுகளில்
குர்ஆன் ஓதுகையில்
கன்னத்தில் மண்ணை நிறைத்து
ஊதுபத்தி குத்திய புனித மண்!

இப்போது
மண்ணைப் பிரிகையில்
உயிரைப் பிரிந்ததாய்
பாய்யும் படுக்கையுமாய் போன
உங்கள் பாட்டி கேட்கிறேன்!

நீங்கள் வந்து கேட்க
என் உயிரைத் தவிர
அனைத்தையும் தந்துவந்த
அதே நான் கேட்கிறேன்!

என் குழந்தைகளின்
அகதி நாமம் அழியவேணும்.

என் தாய் தந்தையர்
அடங்கியிருக்கும்
புனித மண்ணில்
நானும் மரணிக்கவேணும்.

ஈறலோடு கேட்கிறேன்
என் மண்ணின்
குழந்தைகளே
என் மண்ணைத் தாருங்கள்!

எஸ்.நளீம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முஸ்லிம்களின் இனத்தனித்துவத்தின் வளர்ச்சியும் சவால்களும்

## (I)

**“1505 முதல் 1915 சிங்கள-முஸ்லிம் கலகம்வரை” சில அவதானங்கள்**

கலாநிதி
எம்.எஸ்.எம்.அனஸ்

பௌத்த, ஹிந்து மக்களின் இன எழுச்சியும் சமயப் புத்துயிர்ப்பும் ஆரம்பமாகி சுமார் 30 ஆண்டுகளுக்குப்பின்னர்தான் அதாவது 1880 களிலேயே தமது இனத்தனித்துவம், நவீன கல்விப்பிரவேசம், இஸ்லாமியப் புத்துயிர்ப்புவாதம் ஆகியவற்றில் நவீனயுகத்திற்குரியவாறு முஸ்லிம்கள் செயற்பட ஆரம்பித்திருந்தனர். இனரீதியான வேற்றுமை உணர்வுகளை ஒரு கருத்தியலாகவும், எழுச்சியாகவும் வளர்ப்பதில் சிங்கள மக்கள் இன வேற்றுமையின் ஆழமான எல்லைகள் வரை பிரவேசித்துக் கொண்டிருந்த காலப்பகுதி இதுவாகும். குறிப்பாக கிறிஸ்தவ சமயத்துடனும், இஸ்லாமியருடனும் அதிகவிரோத மனப்பான்மையை அவர்கள் வளர்த்து வந்ததாக 1850 களிலிருந்தே இலங்கை வரலாற்றில் தெளிவாக காணமுடியும்.

1900ம் ஆண்டின் பின்னர் அநகாரிக்க தர்மபாலாவிடம் சிங்கள பௌத்த இனவாதம் அதன் முழுஅளவிலான வடிவ ஒழுங்குகளைப் பெற்றுக்கொண்டது. குறிப்பாக முஸ்லிம்கள் பேரில் தீவிரமாகவும், இரக்கமின்றியும் எதிர்ப்புணர்வுப் பிரச்சாரங்கள் நாடு முழுக்க விஸ்தரிக்கப்பட்டன. அந்நியர்கள் எனவும் சிங்கள மக்களின் இரத்தத்தை உறுஞ்சுபவர்கள் என்றும் தொடுக்கப்பட்ட பிரச்சாரத் தாக்குதல்களின் உணர்ச்சிவேகம் 1915 இல் சிங்கள முஸ்லிம் கலகத்தில் அதன் வகிபங்கை (role) ஆற்றாமல் விடவில்லை.

எனினும் முஸ்லிம்கள் இலங்கையின் பாரம்பரியமிக்க தனிப்பெரும் மக்கள் குழுவினராவர். அரபுகளாக இலங்கையில் பிரவேசித்ததிலிருந்து கி.பி 8 ஆம் நூற்றாண்டில் முஸ்லிம்களாக கரையோரக் கப்பல் துறைமுகங்களில் வாழ்க்கையைஆரம்பித்ததிலிருந்து முஸ்லிம்கள் தமது அரபு மூதாதைத் தொடர்பை இரண்டாயிரம் ஆண்டுப் பழமை வாய்ந்ததாகக் கோருகின்றனர்.

முஸ்லிம்களின் இனத்தனித்துவம், அவர்களின் பிரத்தியேகமான சமயப்பண்பாட்டுப் பாரம்பரியம் என்பன இலங்கையில் பாதுகாக்கப்பட்ட காலப்பகுதி, முறிவடைந்த காலப் பகுதியிலிருந்துதான் முஸ்லிம்கள் தமது சமூகப்பிரிவின் தனித்துவத்திற்கான விழிப்புணர்வைப் பெறத்தொடங்கினர். இதன் வெளிப்படையான செல்நெறி 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தோற்றம் பெற்றபோதும் அதன் வரலாற்றை போர்த்துக்கேயர் காலத்திலிருந்துதான் ஆரம்பிக்கவேண்டும்.

சுதந்திர வர்த்தகச் செயற்பாடு, சமயப்பண்பாட்டுச் சுதந்திரம் என்ற இரு பிரதான அம்சங்கள் முஸ்லிம்கள் இலங்கையில் குடியேறிய காலத்திலிருந்து அவர்கள் அனுபவித்து வந்தவையாகும். அரபுப்பிரயாணிகள் விட்டுச் சென்றுள்ள பல தகவல்கள் இதனை உறுதிப் படுத்துகின்றன. அரபுப்பிரயாணி இத்ரிஸின் குறிப்பொன்று கிபி 12ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த முஸ்லிம்கள் சமயசுதந்திரத்தை அனுபவித்தனர் என்பதையும் தமது சொந்த சட்ட திட்டங்களதும் மரபுகளதும் அடிப்படையில் தமக்கிடையே இருந்த பிரச்சனைகளைத் தீர்த்துக்கொள்வதற்கு அனுமதிபெற்றிருந்தனர் என்றும் கூறுகிறார் (எம்.ஐ.எம்.அமீன்)

முஸ்லிம்கள் சுதேச ஆட்சியாளர்களின் மனதை வெற்றிகொண்டிருந்தனர்.அவர்களது வர்த்தக நடவடிக்கைகளை அரசன் அங்கீகாரத்தோடு அதற்கு ஊக்கமளித்து வந்தான். உள்நாட்டுப் பொருட்களுக்கு முஸ்லிம்கள் நல்லவிலை தந்தனர். பொருட்களை இடத்திற்கிடம் கொண்டு சென்று மக்களின் தேவைகளை நிறைவு செய்தனர். அவர்கள் வழங்கிய துறைமுகவரிகளால் திறைசேரி நிரம்பியது. முஸ்லிம்களுக்குக்குரிய நிர்வாகச் செயற்பாடுகளை முஸ்லிம்களே செய்துகொள்ள அரசன் அனுமதித்தான். முஸ்லிம்கள் தமது சட்டங்களின் ஊடாகவே வர்த்தக நடவடிக்கைகள், விவாக, விவாகரத்துச்சட்டங்கள், கப்பற் போக்குவரத்து ஆகியனவற்றில் எழுந்த பிரச்சனைகளை தீர்த்துக்கொண்டனர்.

திருமணம் செய்து கொள்வதற்காக சிங்கள, தமிழ் பெண்கள் மதமாற்றத்திற்கு உட்பட்டதைத்தவிர முஸ்லிம்கள் சமயமாற்றம் செய்வதை ஒரு கட்டாயச்செயற்பாடாக கொண்டிருக்கவில்லை. அவர்கள் சமய போதனைகளில் ஈடுபட்டபோதும் அந்நிய சமயத்தவர்களை மதமாற்றத்திற்கு கட்டாயப் படுத்தும் போதனை முறையாக அது இருக்கவில்லை. (பார்க்க எல். தேவராஜா) இதனால் சமயரீதியில் சுதேசிகளின் எதிர்ப்புக்குள்ளாக வேண்டிய தேவை இருக்கவில்லை.

சுதந்திர வர்த்தகச் செயற்பாடு, சமயப் பண்பாட்டுச் சுதந் திரம் என்ற இரு பிரதான அம்சங் கள் முஸ்லிம்கள் இலங்கையில் குடியேறிய காலத் திலிருந்து அவர்கள் அனுபவித்து வந்தவையாகும்.

முஸ்லிம்களின் வர்த்தகம் சர்வதேசத் தொடர்புகளையும் உள்நாட்டின் ஆழமான உட் பகுதிகளையும் உள்ளடக்கிய விரிவான சுதந்திர வர்த்தக நடவடிக்கையாக வியாபித்திருந்தது. பதினாறாம் நூற்றாண்டில் இலங்கையின் ஏற்றிறக்குமதி வர்த்தகத்தில் முஸ்லிம்களே முழுப்பாத்தியம் பெற்றிருந்தனர்.(எ.எம்.எ.அஸீஸ்) எனினும் இந்த அழகியகாட்சி பதினாறாம் நூற்றாண்டிற்கு அப்பால் செல்ல விதிக்கப் படவில்லை.

கிழக்குச்சமுத்திரத்தில் வாஸ்கோடகாம பிரவேசித்ததும் இலங்கையில் முஸ்லிம்கள் பெற்றிருந்த வர்த்தக பலமும் சமய பண்பாட்டுச் சுதந்திரமும் சுயநிர்வாக ஆதிக்கமும் ஆட்டங் காணத்தொடங்கியதுடன் வாழும் சுதந்திரம் பறிக்கப்படும் நிலையும் உருவாகியது. 12ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கை முஸ்லிம்கள் அரபுலகத்துடன் கொண்டிருந்த தொடர்புகள் கிலாபத் வீழ்ச்சியால் பலவீனமுற்றது. போர்த்துக் கேயரின் வருகையினால் கிழக்குச் சமுத்திரத்தில் அரபுநவாப்களின் நடமாட்டம் குன்றியது. உலகளாவிய வர்த்தகவேட்கையினாலும் மத்தியகாலத்தில் ஐரோப்பியக் கிறிஸ்தவர் நடத்திவந்த சிலுவையுத்தங்களாலும் அரபுகளுடனும் முஸ்லிம்களுடனும் தீராப்பகை கொண்ட போர்த்திக்கேயரை எதிர்கொள்ள வேண்டிய இக்கட்டான நிலைக்கு முஸ்லிம்கள் தள்ளப்பட்டனர்.

சந்தேகத்திற்கிடமின்றி போர்த்துக்கேயரின் வருகை முஸ்லிம்களின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது. அப்போது வர்த்தகக்கேந்திர முக்கியத்துவமும் துறைமுக வசதிகளும் உள்ள இடங்களில் முஸ்லிம்களின் ஆதிக்கம் வெளிப்படையாக இருந்துவந்தது. கல்பிட்டி, புத்தளம், சிலாபம், மாதம்பை, நீர்கொழும்பு, கொழும்பு, களுத்துறை, பேருவளை, மக்கோனை, பயாகலை, அளுத்கமை, பெந்தொட்டை, காலி, வலிகாமம், மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் குறிப்பிடத்தக்க முஸ்லிம் குடியேற்றங்கள் இருந்தன. வர்ததகத்தினால் மாத்திரம் அல்ல மதரீதியாகவும் போர்த்துக்கேயர் முஸ்லிம்களைத் தமது எதிரிகளாகக்கருதினர். சுதேச மன்னர்கள் போர்த்துக் கேயருக்கு அடிபணிய முற்பட்ட போதும் சாதாரண வர்த்தகக் குடிகளான முஸ்லிம்கள் போர்த்துக்கேயரை எதிர்க்க மன்னர்களுக்கு உதவ முன்வந்தனர். இதற்காகத்தமது செல்வத்தையும் ஆட்பலத்தையும் திரட்டித்தர முஸ்லிம்கள் தயாராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்தனர். அரசனின் ஆயுதப்படைகளில் முஸ்லிம்கள் தாமாகவே இணைந்தனர். எனினும் சுதேசமன்னர்கள் முஸ்லிம்கள்பற்றிய சில ஐயஉணர்வுகளாலும் தமது கையாலாகாத் தனத்தினாலும் போர்துக்கேயருக்கு விட்டுக் கொடுத்தனர். அல்லது முஸ்லிம்களைக் காட்டிக் கொடுத்தனர். பிரபு டென்ஹாம் கூறியுள்ள டெனட்டின் பின்வரும் வார்த்தைகளை இங்கு நினைவு படுத்துவது பொருத்தமானது. "சரியான நேரத்தில் கிறிஸ்தவ ஆதிக்கம் இத்தீவைக் கைப்பற்றி இருக்காவிட்டால் அது பிரித்தானிய முடியாட்சிக்குள் இன்று இருப்பதைவிட அது ஒரு அறேபிய வெற்றி வீரனின் ஆதிக்கத்தின்கீழ் ஒரு இஸ்லாமிய ராஜ்யமாகவே இருந்திருக்கும்." (டெனன்ட்)

முஸ்லிம்கள் மீதான போத்துக்கேயரின் விரோதம் இருமுனைத்தாக்குதலைப் பெற்றிருந்தது. முஸ்லிம்களிடமிருந்து வர்த்தகத்தைக் கைப் பற்றுவது மற்றது அவர்களின் சமயப் பண்பாட்டு வாழ்வைச் சீர்குலைப்பது. போர்த்துக்கேயர் முஸ்லிம்களை அரசனினதும் கடவுளினதும் எதிரிகளாகக் கருதினர். முஸ்லிம்களை போர்த்துக்கேயரின் ஆட்சிக்குட்பட்ட பிர தேசத்திலிருந்து துரத்தி அடிப்பது அரசனுக்குச் செய்யும் சேவையாகவும் அவர்களைக்கொன்று இரத்தப்பழி வாங்குவது கடவுளுக்குச் செய்யும் சேவையாகவும் போர்த்துக்கேயர் நம்பினர். உண்மையில் இது இரண்டையுமே அவர்கள் செய்தனர் (அமீர் அலி) lopo soarez என்ற போர்த்துக்கேய அதிகாரி "எமது வருகை சோனகனுக்கு (moors) எவ்வளவு வேதனை தரக்கூடியது என்பதை நான் அறிவேன் எமது வாள்களில் படிந்துள்ள இரத்தக்கறைகளின் சொந்தக்காரர்கள் முஸ்லிம்கள்தான்." என்று 1516 இல் தனது கொலை வெறியை வெளிப்படுத்தினான்.

லிஸ்பனில் நடந்துகொண்டதைவிட இலங்கை முஸ்லிம்களுடன் போர்த்துக்கேயர் பொறுமைகாத்தனர் என்று கூறப்பட்டது. அது உண்மையாயினும் அந்தப்பொறுமை 1643 இல் மாத்தறையில் பல முஸ்லிம்களைப் படுகொலை செய்தது, நான்காயிரத்திற்கும் மேற்பட்ட முஸ்லிம்களை கரையோரப்பகுதியிலிருந்து விரட்டியடித்தது போன்ற பல பழிவாங்கல்களை உட்படுத்தியதாகவே இருந்தது.

இவற்றைவிட முஸ்லிம்கள் வர்த்தகத்தில் பெற்றிருந்த ஆதிக்கத்தைப் போர்த்துக்கேயர் ஆயுத முனையில் பறித்துக்கொண்டனர். சில கப்பல்துறை முகங்களையும் சிலவகைப்பொருட்களையும் அரசுக்குரியதாய்ப் பிரகடனம் செய்தனர். கப்பல்களின் கடற்பிரயாணத்திற்கும், பொருட்களுடன் அவை துறைமுகங்களை அடைவதற்கும் கப்பங்களையும் அதிகபட்ச வரிகளையும் முஸ்லிம்கள்மீது திணித்தனர். முஸ்லிம்கள் மீது திணிக்கப்பட்ட இவ்வரிச்சுமைகள் இலங்கையிலும் ஏனைய இடங்களிலும் முஸ்லிம்களைச் சீரழிக்கப் போதுமானதாக இருந்தது. (எல். தேவராஜா)

யாழ்ப்பாணத்திலும் முஸ்லிம்கள் போர்த்துக்கேயருடன் முரண்பட்டனர். அவர்களின் மதமாற்றத்திட்டங்களை நிராகரித்தனர். முஸ்லிம் களுக்கு எதிரான போர்த்துக்கேயரின் அடக்கு முறைகளுடன் போராட 1517, 1520 களில் காதர்வாலா தலைமையில் படையணியொன்றையும் உருவாக்கினர். போர்த்துக்கேயருடன் இப்படை பொருதியபோதும் 1560 களில் யாழ்ப்பாணத்தில் போர்த்துக்கேயர் முஸ்லிம்களை முற்றாக முறியடித்தனர். (அப்துல்றஹீம்) முஸ்லிம்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டதுடன் அவர்களின் பள்ளிவாசல்களும் தரைமட்டமாக்கப்பட்டன. பாரிய இஸ்லாமியக் கட்டிட அமைப்புக்கொண்ட பல பள்ளிவாசல்களையும் மத்ரஸாக்களையும் போர்த்துக்கேயர் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் உடைத்தெறிந்தனர்.

இதன்பின்னர் ஆட்சி செய்த டச்சுக்காரர் காலத்திலும் முஸ்லிம்களுக்கு விமோசனம் கிடைக்கவில்லை. சிறு சிறு மாற்றங்கள் காணப்பட்டாலும் ஒடுக்குமுறைகளும் விடுதலை மறுப்பும் தொடர்ந்து கடைப்பிடிக்கப்பட்டது. 1505ல் இருந்து 1795 வரை கரையோர முஸ்லிம்கள் தொடர்ச்சியாக வேதனைகளை அனுபவித்து வந்ததை இக்காலப்பகுதிக்குரிய வரலாற்றுப் பதிவுகளில் காணமுடியும்.

## (II)

முஸ்லிம்கள் அனுபவித்துவந்த அநேக வசதியீனங்களும் துயரங்களும் பிரித்தானி யராட்சியின் முற்பகுதியில் பெரிதும் நீக்கப்பட்டன. வியாபாரமும் மதப்பயிற்சியும் பகிரங்கமாகவும் தடைகளற்ற முறையிலும் பின்பற்றவாய்ப் பளிக்கப்பட்டது. (A.M.A.அஸீஸ்) பிரித்தானியரின் சந்தைப்பொருளாதாரத்தை முஸ்லிம்கள் ஆதரித்ததோடு பிரித்தானியருடன் இணங்கிச் செல்லும் கொள்கை ஒன்றை அவர்கள் கடைப்பிடித்தனர்.

முஸ்லிம்களின் வர்த்தக மற்றும் சமயகலாச்சார நடவடிக்கைகள் மீண்டும் மலர்ச்சிபெற்றன காலனித்துவவாதிகள் வசமிருந்த ஏற்றிறக்குமதி வர்த்தகத்திலும் முஸ்லிம்கள் பிரவேசித்தனர். அரசாங்கம் தோட்டங்களை விற்றபோது அவற்றை வாங்கினர். கறுவா, கோப்பி, முத்து, நகை, இரத்தினக் கற்கள், பாக்கு உட்பட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசனைத்திரவிய வியாபாரம் வரை முஸ்லிம்கள் செல்வாக்குப் பரவியது. இதன் விளைவுகளில் ஒன்று பெரும்பான்மைச் சமூகத்தினரின் பொறாமைக்கும் வெறுப்புக்கும் ஆளாகியதில் முடிந்தது.

பாக்கு வியாபாரத்தில் முஸ்லிம்கள் ஆதிக்கம் செலுத்தியதை சிங்கள மக்கள் விரும்பவில்லை. 1802ல் கண்டிய அதிகார் பிலிமத்தலாவை புத்தளத்தைச்சேர்ந்த பாக்கு வியாபாரிகளை அவர்களின் பாக்குகளோடு தடுத்து நிறுத்தி அவர்களை அச்சுறுத்தியதில் அரசியல் நோக்கங்கள் இருந்தன. (அமீர் அலி) 1880இல் பாக்கு வியாபாரம் தொடர்பாக கேகாலை, ரத்னபுரி, ரம்புக்களை ஆகிய ஊர்களில் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்களவர்களால் பல முறைப்பாடுகள் செய்யப்பட்டன.

கொழும்பிலும் கண்டியிலும் ரப்பர் வியாபாரத்தில் கணிசமான முஸ்லிம்கள் பங்குகொண்டிருந்தனர். மாத்தளையிலும் கேகாலையிலும் கணிசமான கொக்கோ வியாபாரம் முஸ்லிம்களின் கைகளில் இருந்தது. கண்டியில் கோப்பி வர்த்தகத்தில் முஸ்லிம்கள் முன்னணி இடத்தை வகித்தனர். கண்டியைச்சேர்ந்த சின்னலெப்பை என்பவர் கோப்பித்தொழிலில் பெருவளர்ச்சி பெற்றிருந்தார். 6500 ஏக்கர் பரப்பளவுள்ள 15 தோட்டங்கள் அவருக்குச் சொந்தமாய் இருந்தன. கண்டியில் மொத்தம் 21 கோப்பி நிறுவனங்கள் முஸ்லிம்களின் கைகளிலிருந்தன. (அமீர் அலி)

முஸ்லிம்கள் நேரடியாக உற்பத்தித் துறையில் ஈடுபடுவதை விட உற்பத்திப் பொருள்களை வியாபாரம் செய்வதிலேயே அதிக அக்கறை காட்டினர். முஸ்லிம்களின் நாடளவு வியாபித்திருந்த வியாபார நடவடிக்கைகளை சிங்கள பௌத்த இயக்கங்கள் எதிர்த்தன. பல சந்தர்ப்பங்களில் முஸ்லிம் வியாபாரிகளின் நடவடிக்கைகள் சம்பந்தமாக அரசிற்கு முறைப் பாடுகள் செய்தனர். அதில் ஒரு முறைப்பாடு பாக்கு உட்படப் பல விவசாய உற்பத்திகளை முஸ்லிம்கள் களவாடி விற்று வருவதாக செய்யப்பட்ட முறைப்பாடாகும். இதனை விசாரிப்பதற்கு பிரித்தானிய அரசு விசாரணைக்குழு ஒன்றை நியமித்தது. 340 முஸ்லிம் வர்த்தக உரிமையாளர்கள் விசாரிக்கப்பட்டனர். விசாரணை முடிவுகள் அவர்கள் பொருள்களைக் கொள்ளையிடவில்லை என்பதை உறுதிசெய்தது. ஆனால் அவர்கள் கொள்ளைப் பொருள்களை விலைக்கு வாங்கியுள்ளனர் என்பது தெரியவந்தது.

கண்டி இராச்சியத்திற்கும் பிரித்தானியர் கட்டுப்பாட்டிலிருந்த பகுதிகளுக்குமிடையில் நடைபெற்றுவந்த வர்த்தக நடவடிக்கைகளில் முஸ்லிம்களே முக்கியபங்கு வகித்தனர். கண்டிய அதிகாரிகள் இதைச் சந்தேகக் கண்கொண்டு பார்த்தனர். 1803, 1804, 1814 களில் கண்டி இராச்சியத்துடன் ஆங்கிலேயர் தொகுத்த யுத்தங்களுக்குத் தமது இராச்சியத்திலிருந்து சென்ற முஸ்லிம் வியாபாரிகள் கொலைசெய்யப்பட்டதும் துன்புறுத்தப்பட்டதுமே உடனடிக்காரணங்களாக இருந்துள்ளன. (அ.முகமது சமீம்)

கண்டிப்பிரதானிகளால் முஸ்லிம்கள் பல்வேறு இன்னல்களுக்குள்ளாக்கப்பட்டனர். அவர்களின் வர்த்தக நடவடிக்கைகளில் தலையிட்டனர். போலிக்குற்றச் சாட்டுக்களைச் சுமத்தினர். இதனால் முஸ்லிம்களின் விசுவாசம் ஆங்கில அரசுக்குச் சாதகமாயமைவது இயல்பாயிற்று. 1818ஆம் ஆண்டில் ஆங்கில அரசாங்கத்திற்கு எதிராக நடந்த கண்டிப் புரட்சியில் முஸ்லிம்கள் தங்கள் அரசாங்கத்திற்கு விரோதமாக நடக்கவில்லை (அ. முகமது சமீம்) இவ்வாறு சிங்களவர் மத்தியில் ஒன்றன்பின் ஒன்றாக உருவாகிவந்த வர்த்தக நடவடிக்கைகளுக்கு எதிரான விரோத மனப்பான்மையின் ஒட்டு மொத்தமான விளைவுதான் 1915ஆம் ஆண்டுக்காலமாகும். அது எதேச்சையானதல்ல.

**கிழக்குச் சமுத்திரத்தில் வாஸ்கோடகாம பிரவேசித்ததும் இலங்கையில் முஸ்லிம்கள் பெற்றிருந்த வர்த்தக பலமும் சமய பண்பாட்டுச் சுதந்திரமும் சுயநிர்வாக ஆதிக்கமும் ஆட்டங் காணத்தொடங்கியதுடன் வாழும் சுதந்திரம் பறிக்கப்படும் நிலையும் உருவாகியது.**

## (III)

1830ல் கொண்டு வரப்பட்ட கோல்புறூக், கெமன் சீர்திருத்தங்கள் அரசியலிலும் பொருளாதாரத்திலும் பெரு மாற்றத்தைக் கொண்டுவந்தன. முஸ்லிம்கள் மீது விதிக்கப் பட்டிருந்த பொருளாதாரத் தடைகள் நீக்கப்பட்டன. கொழும்பில் முஸ்லிம்கள் நிலம் வாங்குவதற்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் நீக்கப்பட்டது. இது முஸ்லிம்கள் கொழும்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குடியேறுவதற்கும் வர்த்தக நிறுவனங்களை உருவாக்குவதற்கும் வாய்ப்பளித்தது. 1875ல் புறக் கோட்டையில் 73 வர்த்தக நிலையங்கள் முஸ்லிம்களுக்குச் சொந்தமாக இருந்தன. மேலும் கண்டி, காலி, மாத்தளை, நுவரெலியா போன்ற நகரங்களில் ஆங்கிலேயர்களுக்கும் இந்தியர்களுக்கும் நிகரான வர்த்தக நிறுவனங்களை முஸ்லிம்களும் பெற்றிருந்தனர். ஆங்கிலேயர் ஆட்சியில் வர்த்தக வாய்ப்புக்கள் மாத்திரமன்றி சமய பண்பாட்டு நடவடிக்கைகளிலும் முஸ்லிம்கள் சுதந்திரத்தை அனுபவித்தனர்.

இலங்கைச் சோனகர் தாம் குடியேறிய காலத்திருந்து இஸ்லாமிய ஷரிஆச் சட்டங்களின் ஆதாரத்திலேயே தமது பிரச்சனைகளைத் தீர்த்துக்கொண்டனர். போர்த்துக்கேயர் காலத்தில் இதை நடைமுறைப்படுத்துவதில் சில சிக்கல்கள் இருந்தபோதும் ஒல்லாந்தர் தமது ஆட்சியில் முஸ்லிம்களின் சட்டம் தொடர்பாக சில நடவடிக்கைகளை மேற்கொண்டனர். 1806ல் செர்.அலெக்சாண்டர் கொழும்பு முஸ்லிம்கள் பின்பற்றிய இஸ்லாமியச் சட்டக்கோவை (code of mohemedan law) யைச் சமர்ப்பிப்பதற்கு முன்னரே முஸ்லிம்களுக்கான சட்ட நூற் கோவை ஒன்றை டச்சுக்காரர் பயன்படுத்தினர் வாரிசுரிமை, சொத்துரிமை, விவாகம், விவாகரத்து, போன்ற பலவகைப் பிரச்சனைகளுக்காக இச்சட்டம் பயன்படுத்தப்பட்டது. குறிப்பிட்ட இம் முஸ்லிம் சட்டக்கோவை பத்தேவியாவிலிருந்து தேசாதிபதி falck என்பவருக்கு 1770ல் அனுப்பிவைக்கப் பட்டது. இச்சட்டம் இலங்கை முஸ்லிம்கள் பின்வற்றிவந்த ஷாபிமத்ஹும் (shafi school of law)வை சேர்ந்ததாயிருந்ததால் இலங்கை முஸ்லிம்கள் இதைத் தயக்கமின்றி ஏற்றுக்கொண்டனர். (சல்தீன்)

டச்சுக்காலத்தில் இருந்த அதே சட்டங்களையே நீதிமன்றங்களில் பயன்படுத்தப் போவதாக 1799ல் ஆங்கில அரசாங்கம் அறிவித்தது. சிங்களவராயினும் முஸ்லிம்களாயினும் – அவரவர்களது மரபுரிமைகளும் நிலத்துக்கான வாரிசுரிமைத் தத்துவங்களும் வாடகை மற்றும் ஆதனங்கள் தொடர்பான பிணக்குகளுக்கான தீர்வுகளும் – முஸ்லிம்களின் சட்டங்களே முஸ்லிம்களுக்கு பயன்படுத்தப்படும் என 1801ல் அரசு முஸ்லிம்களுக்கு உறுதியளித்தது. இதுபற்றிய முகம்மது சமீமின் பின்வரும் கருத்தை இங்கு தருவது பொருத்தமானது.

1806ஆம் ஆண்டில் "முஹம்மதிய சட்டப்பிரிவு" என்று சட்டத்தில் முஸ்லிம்களுக்கு என ஒரு தனிப்பிரிவை அமைப்பதற்கு ஆங்கிலேயர் முஸ்லிம்களை ஒரு தனிச் சிறுபான்மை இனமாகக் கணிக்கப்படவேண்டும் என்பதே காரணம். இச்சட்டக் கோவையில் குறைகள் இருந்தபோதும் நூற்றி ஐம்பத்தைந்து வருடங்களாக இச்சட்டத்தின் பிரகாரமே முஸ்லிம்கள் நடத்தப்பட்டார்கள்.

## (IV)

19ஆம் நூற்றாண்டில் தோட்டத் தொழிலாளர் வருகையுடன் தென்னிந்தியாவிலிருந்து முஸ்லிம்களும் இலங்கைக்கு வந்தனர். இவர்களும் வர்த்தக முயற்சிகளிலேயே ஈடுபட்டனர். ஒரு பிரிவினர் கொழும்பிலும் ஏனைய கரையோரப் பகுதிகளிலும் வர்த்தகத்தில் ஈடுபட்டனர். மற்றும் சில பிரிவினர் மலையகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று அங்கு கடைகளையும் வர்த்தக நிலையங்களையும் உருவாக்கினர். 1915க்கு முற்பட்ட நூறு வருடங்களுக்குள் புதியவர்க்கங்களின் தோற்றமும் வர்த்தகப் போட்டாபோட்டியும் ஆரம்பித்தன. முஸ்லிம்களின் வர்த்தக மேலாண்மையை சிங்களவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தூரநோக்கற்ற பிக்குகளும் இனவாதிகளும் தேசிய எழுச்சியை சிங்கள பௌத்த இனவாத எழுச்சியாக மட்டுப்படுத்தினர். சிங்கள மக்களை வீறுகொண்டெழச் செய்ததில் அதற்குப் பங்கிருந்தது போல் ஏகாதிபத்தியவாதிகளைவிட உள்நாட்டில் பல நூற்றாண்டுக்காலமாக வாழ்ந்து வந்த ஏனைய சுதேசிகளுடன் முரண்படுவதிலும் அதன்பங்கு முக்கிய இடத்தைப்பெற்றிருந்தது.

கிறிஸ்துவ சமயத்தின்மீது மாத்திரமின்றி பௌத்தமல்லாத எல்லாச் சமயங்களையும் அவர்கள் தாக்கினர். முஸ்லிம், ஹிந்து வர்த்தகர்கள்மீது கடுமையான வெறுப்புணர்வை அவ்வினவாதிகள் வளர்த்தனர். அந்நியர்களை மட்டுமல்ல முஸ்லிம்களையும் இந்துக்களையும் அந்நியர்கள் என்ற வார்த்தைகளால் அழைக்கும்படி மக்களுக்குக் கற்றுக்கொடுத்தனர். அவர்கள் தமது தேசியவாதத்தை இவ்வாறுதான் வளர்க்க முயன்றனர்.

ஆங்கிலேயர் ஆட்சியில் முஸ்லிம்களுக்கு எதிர்ப்புக்களும் அரசியல்ரீதியான இடையூறுகளும் சகதேசிய இனத்தவர்களிடமிருந்தே எழுந்தன. 1870க்கு முன்னரே பௌத்தவர்களும் ஹிந்துக்களும் தத்தமது தேசியத் தனித்துவத்தை வெளிப்படுத்தவும் இனரீதியான கோரிக்கைகளுக்கான களங்களை உருவாக்கவும் ஆரம்பித்து விட்டனர். 1880களில்தான் அப்போது உருவாக்கிக்கொண்டிருந்த மத்தியதர மற்றும் சிறிய படித்தவட்டத்தினின் ஊடாக முஸ்லிம்களிடேயும் இதற்குச் சமமான எழுச்சியைக்காண முடிகிறது.

புதிய கல்வியுடன் முஸ்லிம்களைத் தொடர்பு படுத்துதல், சட்டவாக்கச் சபையில் முஸ்லிம்களிற்கான ஆசனங்களுக்குக் கோரிக்கை விடுதல், முஸ்லிம் சட்டங்களில் சீர்திருத்தங்களை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஏற்படுத்துதல், முஸ்லிம்களின் சமயப் புத்துயிர்ப்பிற்கான (muslim revivalism) உத்வேகத்தை உருவாக்குதல் என்பன நடைபெற ஆரம்பித்தன. எம்.சி.சித்திலெப்பை, எகிப்தியரான அகமத்ஒறாபிபாஷா, வாப்சி மரைக்கார், போன்ற தலைவர்கள் இம்முயற்சியில் அல்லது போராட்டத்தில் முன்னணி இடத்தை வகித்தனர்.

சட்டவாக்கசபையில் ஒரு முஸ்லிம் அங்கத்தவராவது இடம் பெறுவது அவசியம் என எம்.சி.சித்திலெப்பை தமது சொந்தப் பத்திரிகையான முஸ்லிம் நேசனில்(1882) குரல் எழுப்பினார். முஸ்லிம்களுக்கென சட்டவாக்க சபையில் ஒரு அங்கத்துவத்தை வழங்குவதற்கு ஆங்கிலேயரும் ஆலோசித்து வந்தனர். இத்தருணத்தில்தான் கீர்த்திபெற்ற தமிழ் தலைவரும் கல்விமானுமான சேர்.பொன்னம்பலம் இராமனாதன் "இலங்கை முஸ்லிம்கள் இஸ்லாத்திற்கு மதம்மாறிய தென்னிந்தியத் தமிழர்கள்" என்ற இனமரபுத்துவக் கோட்பாட்டை அரச ஆசியக் கழகத்திலும் (1885) சட்டவாக்கச் சபையிலும் முன்வைத்து இனரீதியில் முஸ்லிம்கள் தனித்துவமானவர்கள் அல்ல என்ற பிரச்சனையைப் பகிரங்க விவாதப் பொருளாக்கினார்.

இராமநாதன் துரை முஸ்லிம்கள் இனத்தில் தமிழர்கள் என்று காட்டுவதற்கு அநேக ஆராய்ச்சிச் சான்றுகளை முயன்று வெளிப்படுத்தியிருந்தார். ஆனால் அது ஆராய்ச்சி மட்டுமன்று முஸ்லிம்கள் அரசியல்ரீதியாக தமக்குரிய தலைமைத்துவத்தை தாமே உருவாக்கிக்கொள்ள முயற்சி செய்ய ஆரம்பித்த முதல் சந்தர்ப்பத்தையே முறியடிக்கும் அரசியல் உள் நோக்கம் அவ்வாராய்ச்சியின் பின்னால் இருந்துள்ளதாக முஸ்லிம்கள் கருதினர். முஸ்லிம் தலைவர்கள் பொன். இராமநாதனின் இம்முயற்சியைக் கண்டித்தனர். அவரது சுயஅரசியல் எத்தனங்களையும் வெளிப்படுத்தினர். தாம் ஒரு தனித்துவம் வாய்ந்த இனக்குழுவினர் என்பதை விட்டுக்கொடுக்க முஸ்லிம்கள் விரும்பவில்லை.

இராமநாதனின் ஆய்வுகளில் காணப்பட்ட வரலாற்றுத் தவறுகளையும் ஆதாரமற்ற தகவல்களையும் எடுத்துக்காட்டியதோடு சமயம் பண்பாடு என்ற தமது இலட்சியத்தையும் தாம் வரலாற்றுரீதியாக அறபுப் பரம்பரையினர் அத்துடன் அறபு – இந்தியக் கலப்பின்

**1806ஆம் ஆண்டில் "முஹம்மதிய சட்டப்பிரிவு" என்று சட்டத்தில் முஸ்லிம்களுக்கு என ஒரு தனிப்பிரிவை அமைப்பதற்கு ஆங்கிலேயர் முஸ்லிம்களை ஒரு தனிச் சிறுபான்மை இனமாகக் கணிக்கப்படவேண்டும் என்பதே காரணம்....**

வழித்தோன்றல்கள் என்பதற்கு அப்பால் இராமநாதனின் வாதாட்டங்களில் உண்மையில்லை என்று எடுத்துக் காட்டினர்.அவரது ஆய்வுகளில் உண்மை இருந்ததா இல்லையா என்பதைவிட முஸ்லிம்கள் தம்மை ஒரு தனிச்சமூக அலகாகக் காண்பதற்கு அவரது இனக் கொள்கை தடையாயிருந்ததை வெறுப்புடன் நோக்கினர்.

இராமநாதனின் இனக்கோட்பாடு தமிழ் முஸ்லிம் உறவில் பெரும்மனக்கசப்பைத் தோற்றுவித்த முதல் சம்பவம் ஆகியது. 20 வருடங்களுக்கு மேலாக முஸ்லிம்கள் இராமநாதனின் இக்கோட்பாட்டுக்கு எதிரான சர்ச்சையைத் தொடர்ந்தனர். 1915ஆம் ஆண்டு சிங்கள –முஸ்லிம் இனக்கலவரம் முஸ்லிம்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்தது. வடக்கு கிழக்கு தவிர நாடுபூராவும் விரைவாகக் காட்டுத்தீபோல் பரவிய அக்கலவரத்தில் முஸ்லிம்களின் உடமைகள், உயிர்கள், பள்ளிவாசல்கள், கௌரவம் என்பன அழிக்கப்பட்டன. முஸ்லிம்கள் விரக்தியினாலும் பீதியினாலும் அதிர்ச்சியுற்றிருந்த போது சேர். பொன்னம்பலம் இராமநாதன் சிங்களவர் சார்பாக ஆங்கில அரசாங்கத்துடன் வாதாடினார்.

ஆங்கில அரசாங்கம் சிங்களவர்மீதும் சிங்களத் தலைவர்கள்மீதும் கடும்நடவடிக்கைகளை எடுத்ததையும் சிங்களவர்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்கு நஷ்டஈடுகள் வழங்கப்படாததையும் கண்டித்தும் அவர்கள்மீது கருணைகாட்டும்படி இரங்கியும் நீண்ட உரைகளை நிகழ்த்தினார். ஆனால் இக்காலத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம்கள் சார்பாக அவர் பேசாதது மீண்டும் மனக்கசப்பிற்கு வழிவகுத்தது. 1885லும் 1915லும் இராமநாதன் ஏன் இவ்வாறு செயற்பட்டார் என்பது தனியொரு ஆய்விற்குரியது. ஆனால் முஸ்லிம் தமிழ் உறவின் எதிர்காலத்தை அவரது கொள்கைகளும் செயற்பாடுகளும் பாதிப்படைவதற்கு சாதகமான காரணியாக அமைந்தது என்பது மட்டும் உண்மை.

தமிழ் ஆய்வாளர்களும், தலைவர்களும் பேசாது கைவிட்ட தமிழ் முஸ்லிம் உறவிற்குப் பாதகமாயமைந்த இராமநாதன் காரணியை "முஸ்லிம்களின் நலன்களுக்கு விரோதமாக சிங்கள பௌத்த தேசியவாதிகளிடம் தமது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொந்த நலன்களை முதன்மைப் படுத்தி தமிழ் பேசும் முஸ்லிம்களைத் தமிழ்த் தலைமை துரோகத் தனமாகக் காட்டிக்கொடுத்தது." என 1983 ல் வ.ஐ.ச.ஜெயபாலன் முதன் முதல் பகிரங்கமாக விமர்சித்தார்.

பொன் இராமநாதன் ஆற்றிய சேவைக்காக சிங்களத் தலைவர்கள் அவரை ரதத்தில் ஏற்றித் தாமே வடம்பிடித்து இழுத்துச் சென்று தமது நன்றி உணர்வை வெளிப்படுத்திக் கொண்டனர். சிங்கள பௌத்த இனவாதத் தலைவர் அநகாரிக்க தர்மபாலா "கைவிடப்பட்ட அபாக்கியவான்களான அப்பாவிச் சிங்களவர் சார்பாக நீங்கள் தோன்றி இலங்கைச் சட்டசபையில் ஆற்றிய வரலாற்றுப் புகழ்மிக்க உரைக்காக மனப்பூர்வமான எனது பாராட்டை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்ற நீண்ட நன்றிக் கடிதத்தை கண்ணீர்மல்க எழுதி இராமநாதனுக்கு சமர்ப்பித்தார். இராமநாதனின் புகழ்பெற்ற அவ்வுரைகளில் முஸ்லிம்களுக்கென எந்த இடமும் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. நாடுபூராவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட சிறுபான்மை(த்தமிழ்பேசும்) முஸ்லிம்களுக்காகப் பரிந்து பேசஅவரிடம் வார்த்தைகள் இருக்க வில்லை.

1915 கலகம் சிங்கள-முஸ்லிம் உறவைத் தகர்த்தது. சிங்களவர்கள் மீது முஸ்லிம்கள் நம்பிக்கையிழந்தனர். 1885லும் 1915லும் இராமநாதனின் செயற்பாடுகள் தமிழ்-முஸ்லிம் உறவைப்பாதித்தது. ஆகவே முஸ்லிம்கள் அடுத்த இரு தசாப்தங்கள் இலங்கை அரசியலிருந்து எந்த சமூகத்தவர்மீதும் நம்பிக்கையற்றவர்களாகவும் ஒதுங்கி வாழும் முறையொன்றிற்கு தள்ளப்பட்டனர்.

☛ 1920ன் பின்னர் முஸ்லிம் தலைமை சேர் பொன் இராமநாதனின் தலைமைத்துவத்திற்கு அவர் மரணிக்கும்வரை (1930) மதிப்பளித்தது.

## குறிப்புகள்


- அமீர் அலி.ஏ.சி.எல்,muslim participation in the export sector of sri-lanka, 1984.
- வ.ஐ.ச. ஜெயபாலன், தேசிய இனப்பிரச்சனையும் முஸ்லிம் மக்களும், 1983.
- அஸீஸ்,ஏ.எம்.ஏ. இலங்கையில் இஸ்லாம்,1963.
- முகம்மது சமீம், அ, ஒரு சிறுபான்மைச் சமூகத்தின் பிரச்சனைகள், 1998.
- அமீன், எம்.ஐ.எம், இலங்கை முஸ்லிம்கள் வரலாறும் கலாச்சாரமும், 1994. (பிரசுரிக்கப்படாத ஆய்வுக் கட்டுரை(M.A)
- லோனா தேவராஜா, the muslim of sri-lanka, 1994
- அப்துல்ரஹீம், யாழ்ப்பாண முஸ்லிம்கள் வரலாறும் பண்பாடும், 1979.
- ஐல்டீன், எம் இ.எஸ், the muslim law, 1990.


## வடகிழக்கு முஸ்லிம்களின் பிரித்தானிய ஒன்றியம்

ஒன்றியத்தின் பிரதிநிதிகள் அடங்கிய குழு நோர்வே தூதுவராலய உயர் அதிகாரிகளை 19 ஏப்ரல் 2001 இல் லண்டனில் சந்தித்த போது முன்வைக்கப்பட்ட கோரிக்கை களாவன-

1- முஸ்லிம்களின் தனித்துவ இன அடையாளத்தை அங்கீகரித்தல்

2- வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழர்களது மட்டுமல்லாது முஸ்லிம்களினதும் பாரம்பரிய பிரதேசம் என்பதை ஏற்றுக் கொள்ளல்.

3- இலங்கை முஸ்லிம்களின் சகல உரிமைகளும் பாதுகாப்பும் யாப்பு ரீதியாகவும் நிறுவன ஏற்பாடுகள் மூலமும் உத்தரவாதப்படுத்தப்படல்.

4- அதிகாரப் பரவலாக்கல் அலகு ஒன்று தொடர்பாக இணக்கம் காணப்படுகையில் இவ்வதிகார அலகினுள் ஏற்றுக்கொள்ளக் கூடிய நியாயமான, சாத்தியமான அளவு அதிகாரத்தை முஸ்லிம் கட்சிகளிடையேயும் பகிர்ந்தளித்தல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இது செய்து வைத்த முகம்
செய்துவைத்த தலை
செய்துவைத்த கால்
செய்துவைத்த கை
செய்யமுடியாமல் போனது
மனம்.

செய்துவைத்த குடில்
செய்துவைத்த பாத்திரங்கள்
செய்துவைத்த நிலா
செய்துவைத்த ஊர்
செய்ய முடியாமல் போன சந்தோஷம் ஒன்றாலே
கடதாசி மனிமனிதர்கள்
இரத்தம் கொப்பளிப்போர்
நகம் இப்போதும் இவர்களுக்கு
முளைத்த
ஊர்ப்பக்கம் வளைகிறது.
முடி இழுக்க இழுக்க
பிறந்த திசை பார்த்து
சுருள்கிறது இவர் நெஞ்சில்
காந்துகின்ற புகைபோல
எப்போது நிமிரும்
அன்பு ஊரவர்கள் மயிர் என்று
சாப்பாடே இல்லாமல் அந்தப் பொன் ஊரில் தவமிருந்து
கறள்பிடிக்கும் கத்தரிக்கோல் மண்ணுக்குள் விக்கியதாம்
பெரும் சோகம்.

எங்கும்
இரும்பு போட்டுவைத்த சத்தங்கள் ஒலிக்கும்
நம்மவர்கள்
இங்கு
கடதாசி மனிதருக்குப் பூட்டியவை
குறைந்த தூரத்தில் ஒலிப்பவைதான்
அதனால்தான் கடவுள்
இவர்கள்
சமைக்கும்
நெய்
அழுக்குப் பானைக்குள் தன் மூக்கை நீட்டி
இதை ஏன் உண்ணுகின்றீர் என்று கேட்கவில்லை
சுத்தமானவர் அல்லவா கடவுள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கலைக்கப்பட்ட தேன் கூடுகள்

இண்டைக்கு அப்பாவின்ர பிறந்தநாள். அப்பா நேரத்தோட வீட்ட வந்திட்டார். ஒரு நாளக்கி ரெண்டு வேலக்கி போற அப்பா இண்டைக்கு வீட்ட நிக்கிறார். அப்பாவ ஒரு முழுநாளா பாக்கலாம். அவசர அவசரமா சோத்த, கறியில பிரட்டி 'வாயில திணிச்சு முழுங்கி, அதுக்குமேல பிளாஸ்டிக் போத்தல் தண்ணிய அண்ணாந்து ஊத்திட்டு சப்பாத்துக்குள்ள கஸ்ரப்பட்டு கால நுழைச்சு, ஜாக்கெட்ட அரவாசி போட்டும் போடாமலும், போட்டுவாறன் என்டுகூட சொல்லாம, கதவபடாரெண்டு திறந்து அடிச்சு மூடிட்டு வேலைக்கு ஓடிற அப்பாவ, லீவெண்டா நாள் முழுதும் படுத்திருக்கிற அப்பாவ பாத்து பாத்து எனக்கும் பழகிட்டு. அப்பா எங்களுக்காகத்தான் இப்படி உழைக்கிறாரெண்டு அம்மா நெடுக நாங்க இஞ்ச வந்தநாளயில இருந்து, இப்ப வரயும் சொல்லுகிறார். எனக்கு, தங்கச்சிக்கு, தம்பிக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கவேணும் என்டுதான் அப்பா கஸ்ரப்பட்டு வேலைசெய்யிறதாய் அம்மாவும் அப்பாவும் சேர்ந்தே சொல்லுவினம். நாங்கள் ஜெர்மனிக்கு வந்த 6வருசமா இததான் கேட்டுக் கொண்டிருக்கிறன். சிலவேளையில அம்மா கத்தி அப்பாவுக்கு சொல்லுவார். நானும் ஒரு வேலைக்குப் போறனே. அப்ப உங்களுக்கும் எல்லா சுமையும் இருக்காது. அதை எப்பவும் அப்பா மறுத்துத்தான் கதைப்பார். அங்க உன்ன முறிச்சுப் போடுவான்கள். அதேட நீர் வேலைக்கு போனா பிள்ளைகள் பாவம். என்பார். அம்மாவும் கேட்டுக் கேட்டு அலுத்துப்போனா. எங்கள பெறுகிறதிற்கும், வளக்கவும், அப்பாவுக்கும், எங்களுக்கும் சமைச்சி போடறதுக்கும், வீட்டுவேல செய்யிறதற்கும், அப்பா கண்டபடி காசு செலவழிக்காம கவனிச்சுக்கொள்றதுக்கும், காசு மிச்சம் பிடிச்சு நகையா செய்து தானும் போட்டு, எங்களுக்கும் போட்டு, பிறந்தநாள்-கலியாண-காமர்த்திய வீடுகளுக்குப் போய்வாறதுக்கும்தான் அம்மா பிறந்திருக்கிறா எண்டுதான் நான் நினைக்கிறன். அம்மா இப்பிடித்தான் இருக்க வேணும் எண்டு அப்பா மட்டுமில்லாம மற்றமாமா, மாமிமாரெல்லாம் சொல்லுகினம். பதினாலு வயசான எனக்கும் சொல்லுவினம். அம்மாவுக்கு ஆதரவா, அம்மா எப்பிடி இருக்கிறாவோ அதுமாதிரி நீயும் நடந்து கொள்ள வேணுமெண்டு. அம்மா பாவம் எண்டு நான் சொல்லமாட்டன். அவவுக்கு தான் விரும்பியத செய்யிறதுக்கு தெரியாமகிடக்கு.

அப்பா சுறுசுறுப்பாயிட்டார். என்னப்பா நேரத்துக்கு சமையல் முடியுமோ? இவன்கள் வந்தால் தெரியும்தானே உமக்கு உதவிசெய்ய முடியாது. நீ தானே சமையலும்? என்பான்கள்

தேவா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அப்பா வேகமாக சமையலுக்கு உதவுகிறார். தமிழ் ரேடியோவை சத்தமாக வைக்கிறார். அவருக்குக நல்ல சந்தோசம் வந்தால் இப்பிடி ரேடியோ கேக்கிறது வழமை. அதுமட்டுமில்ல இந்த சந்தோசத்துக்கு காரணம் என்னெண்டால்... அவர்ட பிறந்தநாள் எண்டு தமிழ் டிவி பார்க்க இண்டைக்கு காடும் வாங.குீயுர்நு.துீடு.டுர்ர். தன்ர பிரண்மார்களோட இருந்து டிவி பாக்கிற பிளானிலை வலுசந்தோசமாயிருக்கிறார். அப்பாவின்ர நண்பர்களெல்லாம் நிறையக் கதைப்பினம். இரவிரவா அடிச்சுக் கொள்ளிறமாதிரி கதைப்பான்கள். இவங்களுக்கு அரசியல்மதான் கதைக்க தெரியும். உளறுவான்கள எண்டு அம்மா சொல்லிக்கொண்டே குசினியில் கிடந்து மாயிறா. நாங்கஎல்லாம் ஊரில வேறவேற இயக்கத்தில இருந்தனாங்கள். எண்டாலும் இஞ்ச வாந்தாப்பிறகு நாங்கள் எப்பிடி சண்டை பிடிச்சுக்கொண்டாலும் மறுபடி சேர்ந்துகொள்ளுவம். பாத்தியா நாங்கள் எவ்வளவு வளந்திட்டம் என்டு. அப்பா இத பெருமையா சொல்கிறார். இந்த இடத்தில நான் யோசிக்கிறன். ஏன் அம்மா மட்டும் அப்படியே இருக்கிறா? ஊரில இருந்தமாதிரியே. ரெண்டு மணித்தியாலத்துக்கு பிறகு அப்பான்ர பிரண்ட்மாரெல்லாம் வந்திட்டினம். எல்லாரும் கோலுக்கு போயிட்டினம். அப்பாவும் டிவி அவங்களுக்கெல்லாம் போட்டுக் காட்ட தொடங்கிட்டார். எல்லாரும் செய்தி வாசிக்கிற பொம்பிளய கவனிக்கினம். சாரி உடுத்து, பொட்டுவச்ச சிவத்த பொம்பிள வாசிக்கிறத அப்பா உள்பட எல்லா ஆம்பிளையளும் டிவியில வச்ச கண் வாங்காம பாக்கினம். அம்மாவுக்கு எரிச்சலாயிருக்கு. தானே மீதி வேல எல்லாம் செய்யவேண்டிக்கிடக்கெண்டு. பிரண்ட்மாரத்தான் குசினிக்குள்ள நிண்டு புறுபுறுக்கிறா. நானும், அம்மாவுமா சோறு, கறி எல்லாத்தையும் கோல் மேசையில கொணந்து வைக்கிறம். கடைசியா வெளிநாட்டு செய்திகளும், படங்களும் போகுது. தச்செயலா நானும் நிண்டு டிவியப் பார்க்கிறன். எங்கயோ ஆபிரிக்காவில போல சனங்கள் சட்டி முட்டிகள, துணிமணிகள அடுக்கடக்கா தலையில சுமந்து பிள்ளகுட்டிகள முதுகுல செருகி, ஆடுகள், கோழிகள கட்டி இழுத்துக் கொண்டு, சரியான வெளியில... பாதமெல்லாம் வெடிக்க நடக்குதுகள். எறும்பு ஊர்வது மாதிரி தலைகளே தெரியுது. செய்தியில இந்தச் சனங்கள் இருபதினாயிரத்துக்கும் மேல இருக்கும் எண்டு சொல்லுப்பட்டுது. அப்பாட பிரண்ட் ஒருத்தர் சொல்றார்: இப்பிடித்தானே எங்கட சனங்களும் ஆமிக்காரன் வந்தவுடனே ஊரைவிட்டு வெளிக்கிட்டு வன்னிக்கும் வேற இடங்களுக்கும் போயிருக்கும். இத அவர் சொல்லேக்கை துக்கத்தில அவருக்கு நாக்குழறிச்சு. அப்பாவும், மற்ற பிரண்மாரும் கூட கொஞ்சம் கண்கலங்கினமாதிரி தெரிஞ்சுது. எனக்கு பொறிதட்டினாப்போல ஒருவிசயம் ஞாபகத்துக்கு வந்துது. அத சொல்லித்தான் ஆக வேண்டும் எண்டு முடிவெடுத்தன். இவையெல்லாம் கதைச்சுக் கொண்டிருக்கையில நடுவில கதைக்க எனக்கு அனுமதியில்ல எண்டாலும், அப்பாட்ட நான் நினைச்சத சொல்லுவன். இப்பிடி நான் அவர்ர பிரெண்டுகளுக்கு முன்னால கதைக்கிறது சில நேரத்தில அப்பாக்கு எரிச்சல் தரும். அதுக்காக அம்மா மாதிரி நானும் வாய மூடிக் கொண்டிருக்க முடியுமோ. நாங்க ஊரில இருக்கேக்க, ஒருநாள் பக்கத்துவிட்ட இருந்த சலீமாண்ட அண்ணன்மார், அக்கா, தங்கை, அம்மா, அப்பா திடீரெண்டு எல்லாரும் நிலத்தில விழுந்து அழுது குளறின சத்தம் கேட்டு, என்ன நடந்தது, ஏது நடந்தது எண்டு கேட்க அதுகள் சொன்னத கேட்டு திகைச்சு போய் நிண்டம். உடனடியா முழுக்குடும்பமுமே இருக்கிற ஊரைவிட்டு வெளியேறிவிட வேண்டுமாம். நாங்கள் ஏன் ஊரைவிட்டு போகவேணும் எண்டு எங்களைக் கேட்டினம். எங்களுக்கும்தான் புரியேல்ல. அதுகள் அண்டைக்கு அழுத அழுகை எங்களுக்கும் நெஞ்சு அடைச்சுது. சலீமா நாளயில இருந்து பள்ளிக்கூடத்துக்கும் வரமாட்டாள் எண்டு நினைக்கேக்குள்ள எனக்கும் அழுகை வந்துது. கொஞ்சநேரத்துக்குள்ள எல்லாருமே சாமான்கள் கட்டவேணுமாம். அதுகள் எத எடுக்கிறது, எத எடுக்காம விடுறது எண்டு குழம்பி... சலீமா என்ன தன்ர வீட்டுக்கு கூப்பிட்டா. கூடப்போனேன். சலீமாட வாப்பா, ஒண்டுமே செய்யாம முகட்டப் பார்த்துக் கொண்டிருந்தார். உம்மா, ஐயோ அல்லாவே நாங்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன அநியாயம் செய்தம்?
இப்பிடி 2 மணித்தியாலத்தில
பிறந்து வாழ்ந்த இடங்கள பறி
குடுத்திட்டு போறதெண்டால்...
எங்களுக்கு இப்பிடி
செய்யிறவங்கள் நாசமாவே
போவாங்கள் எண்டு
முத்தத்துக்கு ஓடிப்போய் மண்
அள்ளி அள்ளி வீசிறா.
சாமான்கள வீட்டுக்குள
இருந்து வெளியில போட்டா.
அதப்பாத்துக்கொண்டிருந்த
என்ன சலீமா கையில பிடிச்சு
இழுத்துக்கொண்டு போய்
தன்ர ஸ்கூல் கொப்பிகள
என்னட்ட தந்தா. நாங்க இஞ்ச
வீட்டுக்கு பிறகு திரும்பி
வருவம். அப்ப
திருப்பித்தரவேணும். எண்டாள்.
பள்ளிக்கூடத்துக்கு பென்சில்,
அழிரபர், தையல்ஊசி,
சின்னதுணி
வச்சுக்கொண்டுவாற
தகரப்பெட்டிய எடுத்து, அதுகள
சரிபாத்தா. அவட வாப்பாட்ட
கரச்சல் குடுத்து வாங்கின
தமிழ் 3 புத்தகத்தையும்
எடுத்து வச்சா. அக்காமாரும்
வீட்டுக்குள்ள ஓடினம்,
வெளியே வருகினம்.
தோட்டத்த சுத்தி ஓடினம்.
கண்ணீர் தாரையா ஓடுது.
அண்டைக்கு அதுகள்
பட்டபாடு இண்டைக்கும்
நினவில நிக்குது.
அண்ணர்மார் எப்போயோ
போயிட்டினம். சலீமா வடிவா
கலர் படங்களெல்லாம் ஒரு
சித்திரப் புத்தகத்தில ஒட்டி
வச்சிருக்கிறாள். வடிவா
சித்திரமும் கீறுவாள்.
அதுகளயும் அவள்
கொண்டுபோயிட வேணும்
எண்டு நான் யோசிச்சன்.
ஆனால் அந்தக் கொப்பிய
தூக்கி என்னட்ட தந்தாள்.
அந்த கொப்பிய நாங்க ரெண்டு
பேரும் சேந்து எத்தின தரம்
திருப்பி திருப்பி பார்த்திருப்பம்.
அவளுக்கு தெரியம் அத பாக்க
எனக்கு சரியான விருப்பம்
எண்டு. இப்ப அவள் எங்க
இருக்கிறாளோ தெரியேல்ல.
அவவோட விலாசத்த
கண்டுபிடிச்சு அவளோட
தொடர்பு எடுக்க முயற்சி
செய்ய வேணுமெண்டு அப்பா
உங்களிட்ட எத்தின தடவ
சொல்லியிருப்பன். அப்பாவ
பார்த்துக் கேட்டன். இப்பதான்
நானும் கவனிச்சன் அங்க
இருந்த ல்லாருமே
என்னத்தான்
பாத்துக்கொண்டிருக்கினமெண்டு.




## கடைசிச் சொட்டு உசிரில்

கடைசிச் சொட்டு உசிரில் என்ற எஸ்.நளீம் அவர்களின் கவிதைத் தொகுதி ஈழத்தின் கவிதைப் பரப்பில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும்.அச்சுறுத்தப்பட்ட, வேள்விக்கிடாய் நிலையிலுள்ள, எப்பொழுதும் அகதி மனோநிலை கொண்ட முஸ்லீம் சமுகத்தின் நெருக்கடியான இன்றைய சூழலை - அவர்களை யார் வேண்டுமானாலும் துன்புறுத்தலாம்என்பதுவும், இரண்டு தேசிய இனத்தாலும் பந்தாடுகின்ற அறுதலி நிலையையும் கவிதைளாகக் கொண்டிருக்கிறது எஸ். நளீம் அவர்களின் கடைசிச் சொட்டு உசிரில் எனும் கவிதைத் தொகுதி.யாத்ரா வெளி யீடாக வந்திருக்கின்றது. அந்தத்தொகுப்பிலிருந்து......

சொல்லுங்கள்
பூர்வீக மண்ணை விட்டு
பிரிந்து போகிறேன்
சொல்லுங்கள்
இறந்து போகவும் சம்மதம்.

சுட்டுக் கொல்ல வேண்டுமா?
சொல்லுங்கள்
பள்ளிவாசலில் வந்து
வசதியாக வரிசையில்
நிற்கிறேன்.

அதற்கு முன்
சொல்லுங்கள்

நண்பர்களே
நீங்கள் நாடு கேட்கிறீர்கள்
அதனால்...
நீங்கள் நாடு காக்கிறீர்கள்

ஆனால்....
நான் என்ன கேட்டேன்
இறக்கவும்...
இழக்கவும்...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இடைமறிப்பு – 5

# சாவகச்சேரி முஸ்லிம்கள்

## சில குறிப்புகள்:

-உதயகுமார்-

இலங்கையின் வரலாறு தொட்டு நிற்கும் மூவின மக்கள் என்று குறிக்கப்படும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களின் வரலாற்றுப் பிணைப்புகள் கொண்டதாக இலங்கைவரலாறு காணப்படுகிறது. இந்தியாவின் வடபகுதியில் இருந்து இலங்கையில் குடியேறிய விஜயன் என்னும் இளவரசனின் பரம்பரையினரே இன்றைய சிங்கள மக்கள் என இலங்கையின் வரலாற்றைக் கூறும் மகாவம்சம், சூளவம்சம் ஆகிய நூல்கள் கூறுகின்றன. இவர்களின் வருகைக்கு முன்னே இலங்கையின் பூர்வீகக் குடிகளான நாகர்களின் வழித்தோன்றல்களாகிய திராவிடர் பின் காலத்துக்குக்காலம் தென்னிந்தியாவிலிருந்து குடியேறிய தமிழர்களும் இணைந்த இனமே இலங்கையின் இன்றைய தமிழர்கள் என திராவிட தமிழர் வரலாறுகளைக் கூறும் வரலாற்று நூல்கள் கூறுகின்றன. மத்திய ஆசியாவில் இருந்து வியாபார நோக்கமாகவும் இங்குள்ள மன்னர்களின் படைவீரர்களாகவும் இந்தியாவில் பிருதிவிராஜனின் வீழ்ச்சியின் பின் நிறுவப்பட்ட மொகலாயர் ஆட்சிக்காலத்திலும் இலங்கையில் முஸ்லிம்கள் குடியேறியதாக வரலாறுகளில் காணக்கிடக்கிறது. இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றில் வடபகுதியில் முஸ்லிம்களின் குடியேற்றம் முதல்முதலில் **அலுப்பாந்தி** என்னும் இடத்திலும் **சின்னக்கடை, பறங்கித்தெரு** ஆகிய இடங்களிலும் தென் மராட்சியில் **உசன், மீசாலை, சாவகச்சேரி**யிலும் **நாவாந்துறைப்** பகுதியிலும் ஏற்பட்டது. பிற்காலத்தில் தென்மராட்சியில் சாவகச்சேரியில் இவர்கள் அதிகமாக நிலைகொண்டனர். நான் இங்கு பேசவருவது இவர்கள் பற்றியே.

சாவகச்சேரியில் கச்சாய்வீதி, டச்சுவீதி ஆகிய இடங்களில் அதிகமாகவும் அதன் சுற்றுப்புறங்களில் பரவலாகவும் வாழ்ந்த இவர்கள் தமிழர்களுடன் இணைந்த ஒருவாழ்க்கையையே மேற்கொண்டு இருந்தனர். தமிழர்களை விட்டு விலகியிருக்க முயற்சித்தது இல்லை.


உதயகுமார்

தமிழ் மாணவர் பேரவையின் செயற்பாடுகளின் ஊடாக 1970களில் அரசியலில் தீவிர பங்கெடுத்த உதயகுமார் அவர்கள் தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டத்துக்கு வழிவகுத்த தமிழ் இளைஞர் பேரவையின் சாவகச்சேரித் தொகுதி அமைப்பாளராகச் செயற்பட்டவர். பிரான்சில் தஞ்சம்கோரி வாழும் இவர் "சிந்து" சஞ்சிகையில் தொடங்கி இன்றுவரை மாற்று இலக்கிய அரசியற் செயற்பாடுகளில் பங்கெடுத்துவருகிறார்.

சாவகச்சேரி முஸ்லிம்களைப் பொறுத்தவரை பெரும்பான்மையோர் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்களாவார்கள். சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களாக ஜனாப் அசீஸ், ஜனாப் முத்துராஜா ஆகிய இருவரும் தமிழர் விடுதலைக் கூட்டணி மூலம்வெற்றி பெற்றவர்களாவார்கள். அத்துடன் தமிழ் இளைஞர் பேரவையில் திரு.கமீம், இமாம், ஜிபரி ஆகியோர் உறுப்பினர்களாக இருந்தனர். இதில் தமிழ் இளைஞர் பேரவையின் சாவகச்சேரித் தொகுதியினர் பொலிசாரால் தேடப்பட்ட காலத்தில் அவர்களுக்குப் புகலிடம் அளித்தவர்களும் இந்த முஸ்லிம் இளைஞர்களேயாகும்.

சாவகச்சேரி இஸ்லாமிய தமிழர்களைப் பொறுத்த வரையில் அநேக மானோர்கள் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் கல்வி கற்றார்கள் கல்லூரியின் விளையாட்டுத் துறையில் இவர்களின் பங்கு அளப்பெரியது. டிறிபேக் கல்லூரியின் உதைபந்தாட்ட அணியின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தலைவராக விளங்கிய திரு.கமீம் மிகச் சிறந்த உதைபந்தாட்ட வீரராவர். அவருடன் அவர் காலத்தில் முகமது ஜிப்றி, இமாம், ஜனூஸ், ஆஷாத், அனாஷ், அன்ஷார் ஆகியோர் கல்லூரியின் முக்கிய உதைபந்தாட்ட வீரர்களாகத் திகழ்ந்தனர். இதே காலத்தில் கல்லூரியின் கரப் பந்தாட்ட அணியின் தலைவராக இருந்த திரு.R..நவாஷ் என்பவராவர். கரப்பந்தாட்ட அணியின் மற்றைய அனைவரும் தமிழர் களாயிருந்தும் நவாஷ் அவர்களே தலைவராகத் தொடர்ந்து இருந்தார் என்பதில் மாணவர்களுக்கு இடையே இருந்த ஒற்றுமையை உணர்ந்து கொள்ளலாம். இதே போல் கல்லூரியின் ஆசிரியர் களாக இருந்த இரு இஸ்லாமியர்கள் முக்கியமானவர்கள். ஒருவர் ஆசிரியர் பசீர். மற்றையவர் ஆசிரியர் ஜமால்தீன். டிறிபேக் கல்லூரியில் மட்டுமல்ல சாவகச்சேரியின் விளையாட்டுத் துறையில் தென்மராட்சி விளையாட்டுக் கழகத்திற்கு பெரிய பங்குண்டு. இதன் தலைவராக இருந்தவர் திரு.அசீஸ் ஆவார். இவர் ஒரு பிரபல தையல் நிறுவனத்தையும் நடாத்தி வந்தார். அத்துடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சாவகச்சேரி முக்கியஸ்தர்களில் ஒருவர். தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் சாவகச்சேரி நகர சபையின் உறுப்பினராகவும் இருந்தார். தென்மராட்சி விளையாட்டுக்கழகத்தில் தலைவராக இருந்தவர் அன்றைய சாவகச்சேரி பாராளுமன்ற உறுப்பினரான வ.ந.நவரத்தினத்தின் அலுவலகப் பொறுப்பாளராகவும் டிறிபேக் கல்லூரி, இந்துக்கல்லூரி ஆகியவற்றின் உதைபந்தாட்ட பயிற்சியாளராகவும் இருந்த எஸ். ஜெயரத்தினம் அவர்களாவார். தென்மராட்சி விளையாட்டுக் கழகத்திலும் அதிகமான உறுப்பினர்கள் இஸ்லாமிய இளைஞர்களாகவே இருந்தனர். அதேகாலத்தில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய சில்வா, றியாஸ் எனப்படும் இரு பொலிசாரும் ஸ்ரீதரன் எனப்படும் உதவிப் பொலிஸ் அத்தியட்சரும் எம்முடன் தென்மராட்சி விளையாட்டுக்கழகத்தின் விளையாட்டு வீரர்களாகவே இருந்தனர். சாவகச்சேரியின் விளையாட்டுத்திடல் என்றால் அது மகிளங்கேணி மைதானமாகும். இது கச்சாய் வீதியில் கடற் கரையில் அமைந்துள்ளது. இதன் அயலிலேயே தலைவர் அஸீஸின் வீடும் இருந்தது. அவர் வீட்டின் ஒரு பக்க அறைதான் தென்மராட்சி விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு உபகரணங்களைக் கொண்டதாக இருந்தது. பயிற்சி முடிந்து களைத்து வரும் வீரர்களுக்கு சூடான தேனீருடன் களைப் பகற்றி அனுப்பிவைப்பார். அவர் மூன்று புதல்வர் களாகிய ஆஷாத், அனாஷ், நவாஷ் ஆகியோரும் தென்மராட்சி விளையாட்டுக்கழகத்தின் வீரர்களாவர்.

சாவகச்சேரியின் வியாபாரத் துறையிலும் இவர்கள் முக்கியபங்கு வகித்தனர். தையல் நிலையங்கள், இறைச்சிக் கடைகள், மீன் மற்றும் கருவாட்டுக் கடைகள், பலசரக்குக் கடைகள், மரக்காலைகள் எனவும் தேனீர்க்கடை, மணிக்கூட்டுக்கடை என சாவகச்சேரி சந்தையை அண்மித்த பகுதியில் இவர்களின் முக்கியவியாபார நிலையங்கள் அமைந்திருந்தன.

இவ்வாறு அரசியல் விளையாட்டு, அரசியல், வியாபாரம் போன்ற அனைத்திலும் தமிழ் மக்களுடன் இணைந்த வாழ்க்கையை மேற் கொண்டிருந்த அந்த மக்கள் தான் வடபகுதியில் இருந்து முதல் முதலில் வெளியேற்றப்பட்டவர்கள் ஆவார். யாழ்ப்பாண முஸ்லிம் மக்கள் ஒட்டுமொத்தமாக வெளியேற்றப் படுவதற்கு ஒரு கிழமை முன்பே சாவகச்சேரி முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு விட்டார்கள். ஒருகிழமையின் பின்னே யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் அனைவரும் அழைக்கப்பட்டு வெளியேறும்படி கூறப்பட்டது. பெரும்பான்மையின மக்களிடம் வாழ்வுரிமை கேட்டு போராட்டம் நடத்திவரும் நாம் எம்முள் வாழ்ந்த ஒரு சிறுபான்மை இனத்தை வெளியேற்றியதன் மூலம் எம்நிலத்திற்காகப் போராடும் தார்மீக உரிமையை இழந்துவிட்டோம். எமக்குப் பெரும்பான்மையினம் செய்வதை நாம் எம்முள் இருந்த சிறுபான்மை இனத்திற்கு செய்வதால் எமக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம் என்று தெரியாத நிலையில் இன்றைய தமிழினம் இருக்கிறது.


## நன்றி

ஆதவன், சரிநிகர், அமுது, தினகரன், அகதி... ஆகிய பத்திரிகை, சஞ்சிகைகளில் இருந்து தகவல்கள், படங்கள் ஆகியவற்றை முஸ்லீம் சிறப்பிதழின் தேவை கருதி நன்றியுடன் பெற்றுக்கொண்டோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மௌனங்களை சாதகமாக்கி
பொய்களாலான பிரகடனங்களினூடு
தன்னை இன்னும் இன்னும் நிறுத்தி
அழிவுகளின் தெரிவை வகை வகையாக்கும்
சட்டம்.
உறவுகள், உடமைகள்
இனிதான வாழ்வின்-
அனைத்தும்
பறித்துவிட்ட கையறு நிலையில் துரத்தப்பட்டார்கள்-
துப்பாக்கிகளோடு
நடக்கும் சர்வாதிகாரத்தால்.
ஆனாலும்
புனிதமும், புதினமுமாக
இன்னமும்
இயல்பாகத்தான் போகிறது
எங்கள் வாழ்வு
எதுவும் நடவாதது போல்.

ஜெபா
11-06-01

.Musjeba1-P1.assg



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கை முஸ்லீம்களின் வாழ்வு நிலையில் காலம் எழுப்பும் கேள்விகள்!

ஏனைய இனங்களால் அவர்கள் புறக்கணிக்கப்படுதலும், அவ்வினங்களால் முஸ்லீம்கள் பல இன்னல்களை எதிர் நோக்குவதாலுமே முஸ்லீம்களும் ஆயுதம் ஏந்தும் ஒரு இழிநிலை வரலாம்.

இலங்கை முஸ்லீம்களின் வாழ்க்கையில் எவராலுமே மறக்க முடியாத அந்தக் கோரச்சம்பவங்கள் நடைபெற்று ஒரு தசாப்தம் முடிவடைந்திருக்கிறது. "முஸ்லீம்கள்" என்ற ஒரே காரணத் துக்காகத் தண்டிக்கப்பட்ட அப்பாவி முஸ்லீம்களின் வாழ்க்கையில் அந்தக்கோர நிகழ்வுகளெல்லாம் மறக்க முடியாத வரலாறுகளாகவே இருந்து வருகின்றன. இலங்கையின் பேரினவாதச் சக்திகளுக்குத் துணை போகாமல், அவர்களாலும், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து செயற்பட்டும் அவர்களாலும் கொடூரமான முறை களில் முஸ்லீம்கள் தண்டிக்கப்பட்டது வரலாற்றில் ரணம் விழுந்த சுவடுகளாகவே பதியப்பட்டிருக்கிறது.

இலங்கையில் பௌத்த/சிங்கள மக்களே பெரும்பான்மையினமாகக் காணப்படுகின்ற போதிலும், இந்து-முஸ்லீம்-பறங்கியர் என பல சிறுபான்மை இனங்களும் வாழுகின்றன. இதில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்த பல இனவாத தீய சக்திகள் தமிழர்களுக்கெதிரான அடக்கு முறைகளைக் கைக்கொண்டன. அதுமட்டுமல்லாமல் தமிழர்கள் மீது சிங்களவர்களை வன்முறையில் ஈடுபடும்படி தூண்டியும் விட்டனர். இந்த இன முரண்பாட்டு

**பாலை நகர் ஜிஃப்ரி**



வன்முறையினால் ஏராளமான தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் கொல்லப்பட்டனர், பாலியல் வல்லுறவுக் குட்படுத்தப்பட்டனர். இவ்வாறு இந்த இரு இனங்க ளுக்குமிடையிலான முறுகல் நிலை உச்ச நிலையை அடைகின்ற போதுதான் இவ் அடக்கு முறைக்கு எதிராக தமிழ் தேசிய இயக்கங்கள் முனைப்புப் பெறத் தொடங்கின. இவ்வாறு முனைப்புப் பெற்ற இவ்வியக்கங்கள் பேரினவாதத்திற்கெதிரான ஆயுதப் போராட்டத் தையும் முன்னெடுத்துச் சென்றது. பிற்காலப் பகுதியில் இவ்வியக்கங்கள் வீழ்ச்சியுறத் தொடங்கின. இலங்கை இராணுவத்திடம் சரண் புகுமளவுக்கு அவை வலுவிழந்தன. அதன் பிற்பாடு வே.பிரபாகரன் தலைமையில் உருவான "விடுதலைப் புலிகள்" என்ற இயக்கம் பலம் பொருந்திய ஒரு இயக்கமாக இன்றும் அரசுக்கெ திரான போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லக் கூடியதாக வளர்ச்சியடைந்(தது)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவ்வியக்கப் போராட்ட காலத்தில்தான் முஸ்லீம்கள் மீதும் இவர்கள் தம் கைவரிசையைக் காட்டத் தொடங்கினர். பெரும்பான்மையினரின் அடக்குமுறைக்கெதிராகப் போராடுகிறோம் எனக் கூறிக் கொண்டு மற்றுமொரு சிறு பான்மையினத்தைக் கொன்று குவித்தனர். ஒரு சமூக விடுதலைக்காய்ப் போராடுவதாகச் சொல்லிக் கொண்டு அநாதரவாய் நின்ற முஸ்லீம்களுக் கெதிராக மேற் கொண்ட இந்த இனச் சுத்திகரிப்பு நடவடிக்கையானது வெறுமனே ஒரு வரலாற்றுக் கறை மட்டு மல்ல, எதிர்காலத்தில் இவர்களது கட்டுப்பாட்டின் கீழ் எவ்வாறு முஸ்லீம்கள் வாழ முடியும்? என்ற அச்சத்தையும் அது ஏற்படுத்தியுள்ளது.

முஸ்லீம்கள் புலிகளை எதிர்த்தோ, அவர்கள் மீது வெறுப்பான பார்வையை முன் வைத்தோ வரவில்லை. முஸ்லீம்கள் தமிழர்களை தம் சகோதரர்களாகவே கருதி வந்தனர். அவர்களின் விடுதலைப் போராட்டத்துக்கும் ஏராளமான முஸ்லீம் இளைஞர்கள் அவர்களுடன் இணைந்து தாங்களும் ஆயுதம் தரித்தனர். இந்நிலையில் புலிகளுடன் முஸ்லீம்களும் இணைந்திருப்பதாகக்கூறி பெரும்பான்மையினரிடமிருந்தும் முஸ்லீம்களுக்கெதிரான வன்முறைகள் தூண்டிவிடப்பட்டன. இது இவ்வாறிருக்க, காலப்போக்கில் புலிகளும் முஸ்லீம்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும், அவர்களைத் துன்புறுத்துவதுமாக தங்களது இனச்சுத்திகரிப்பை மெல்ல மெல்ல ஆரம்பிக்கத் தொடங்கினர்.

இதன் விளைவாகவே கிழக்குப் பிராந்தியத்திலுள்ள காத்தான்குடி- ஏறாவூர்-ஐம் ஆப்பள்ளிவாசல்களுக்குள் இஷாத் தொழுகையின் நேரத்தில் ஊடுருவிய ஆயுதம் ஏந்திய தமிழ் வேங்கைகள் பள்ளி வாசல்களை முற்றுகையிட்டு தொழுகையில் ஈடுபட்டிருந்த அப்பாவி முஸ்லீம் சகோதரர்கள் மீது மிலேச்சத்தனமான தாக்குதலை நடத்தினர். இதில் சிறுவர்கள், வயோதிகர்கள் உட்பட 101பேர் ஷஹீ தாக்கப்பட்டதோடு, 80 பேரளவில் படுகாயமடைந்தனர். காத்தான் குடியில் இச்சம்பவம் நடைபெற்று ஒரு வாரத்தின் பின் 11.08.1990அன்று இரவு ஏறாவூரில் தாய்மார்கள், கர்ப் பிணிகள், பச்சிளம்பாலகர்கள், வயோதிகர்கள் உட்பட 116பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

ஒருவர்பின் ஒருவராக சுட்டு வீழ்த்தப் பட்டமையும், கருணைத் தாயின் முன் அன்பு மகன் சயனைட் பூசப்பட்ட வாள் கொண்டு முகத்தில் கொலை செய்யப்பட்டதையும், ஏழு நாட்கள் மட்டுமேயான பச்சிளம் பாலகனின் உயிரைக் கூட கொடூரமான முறையில் பறிக்கப்பட்டதையும், ஒரு தாயின் கர்ப்பம் கிழிக்கப்பட்டு சிசு வெளியே எடுக்கப்பட்டு வதைக்கப்பட்ட ஈனச் செயலையும் முஸ்லீம்கள் யாரிடம் சொல்லி அழுவார்கள்? மரண ஓலங்களையும், இரத்த வெள்ளங்களையுமே அவர்களால் காணவும், கேட்கவும் தரிசிக்கவும் முடிகிறது.

இந்தச் சம்பவங்களெல்லாம் நடைபெற்று அதன் வடுக்கள் ஆறுமுன்னமே மீண்டும் முஸ்லீம்கள் மீது புலிகள் கைவைக்கத் தொடங்கினர். ஓட்டமாவடி, வாழைச்சேனை முஸ்லீம் சகோதரர்களை தொழில்களுக்குச் சென்ற இடங்களிலெல்லாம் சுட்டுக்கொன்று குவித்தனர். காடுகளுக்கு விறகு வெட்டப் போகும் முஸ்லீம் இளைஞர்கள் மாலையில் வீடு திரும்பாத சோக நிகழ்வுகளும், கடலுக்கு மீன் பிடிக்கச் செல்பவர்கள் துரத்தித் துரத்தி சுடப்பட்டு கொல்லப்படுவதும் பின்னாட்களில் வழமையான சம்பவங்களாக மாறத் தொடங்கின.

இந்தக் கோர நிகழ்வுகளெல்லாம் கொஞ்சங் கொஞ்சமாக தணிந்து கொண்டு வந்த காலப்பகுதியில்தான் தமிழ் ஈழவிடுதலைப் புலிகளுக்கு மற்றுமொரு தலைகுனிவும், முஸ்லீம்களுக்கு மற்றுமொரு பாரிய இழப்பும் புலிப்பயங்கரவாதிகளால் உருவாக்கப்பட்டது.

வடக்கு முஸ்லீம்கள் தமது பூர்வீகப் பிரதேசங்களிலிருந்து ஆயுத முனையில் புலிகள் முஸ்லீம்களது அனைத்து உடைமைகளையும் அபகரித்துக்கொண்டு இரண்டு மணி நேர அவகாசம் வழங்கி அவர்களை வெளியேற்றினர். தன் உடைமைகளையும் உரிமைகளையும் இழந்து தெற்கு நோக்கி இடம் பெயர்ந்து வந்து முஸ்லீம்கள் பல இன்னல்களுக்கும் முகம் கொடுத்து இன்றும் அகதிகளாகவே வாழ்ந்து வருகின்றனர்.

எல்லா வசதிகளையும் இழந்து வெறுங் கையுடனேயே அவர்கள் அகதிகளாகத் துரத்தியடிக்கப்பட்டனர். இதனால் பல முஸ்லீம் சிறார்களின் கல்வி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. பள்ளி செல்ல வேண்டிய வயதில் அவர்கள் தொழில் தேடிச் செல்ல வேண்டிய ஒரு துரதிஸ்ட நிலைக்கு தள்ளப்பட்டார்கள். அடிப்படை உரிமைகளுமின்றி அகதி வாழ்வில் அல்லல் பட்டே தினமும் செத்துக் கொண்டு வாழ்கிறார்கள்.

அப்பாவி முஸ்லீம்கள் மீது பிரயோகிக்கப் பட்ட புலிகளின் பலப்பிரயோகம் எந்தளவுக்கும் புலிகளுக்கு சாதகமாக இருக்கவில்லை என்பதை அவர்களே இப்போது படிப்படியாக உணர்ந்து வருகிறார்கள். காரணமின்றித் தண்டிக்கப்பட்ட முஸ்லீம்கள் புலிகளிடம் காரணம் கூறும்படி வற்புறுத்திய போதெல்லாம் அவர்களால் பதிலிறுக்க முடியாத தலை குனிவை தாமாகவே ஏற்படுத்திக் கொண்ட அவல நிலையை எண்ணி அழ வேண்டிய சந்தர்ப்பத்தை காலம் ஒரு நாள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருக்கிறது.
அவர்களுக்குத் தெரியப்படுத்தும்.

முஸ்லீம்கள் பலஹீனர்கள், அவர்களால் எம்மை ஒன்றும் செய்துவிட முடியாது என்ற ஒரு மனோநிலையும் புலிகளிடம் இருந்தே வந்திருக் கிறது. ஆயினும் ஒன்றை மட்டும் புலிகள் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது "முஸ்லீம்" என் றாலே போராடப் பிறந்தவன்தான், போராட்ட வாழ்வுக்கு அஞ்சும் கோழைகளாக முஸ்லீம்கள் வாழ்ந்த தில்லை. முஸ்லீம்கள் வடபுலத்திலிருந்து துரத்தியடிக்கப்பட்ட போதும் புலிகளுக்கெதி ராகப் போராட்டத்தில் குதிக்க துடியாய்த் துடித்துக் கொண்டிருந்தபோதும் மார்க்கக் கோட் பாடுகளை முன்வைத்து முஸ்லீம் தலைமைத் துவத்தினால் அந்த முயற்சி முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. ஆனால் முஸ்லீம்கள் குட்டக் குட்ட தலையைக் குனிந்து கொண்டிருக்க இனியும் தயாராகவில்லை. பேரினவாதச் சக்திகளோ, புலிப்பயங்கரவாதிகளோ இனியும் முஸ்லீம் களுக்கெதிரான வன்முறைகளை மீண்டும் தொடர்ந்தால் அவர்கள் மீது செலுத்தப்படும் பலப்பிரயோகம் மிகவும் பாரதூரமானதாகவே இருக்கும். ஆயினும் முஸ்லீம்கள் இவ்வாறான போராட்ட முயற்சிகளிலெல்லாம் தாமாகவே வரிந்துகட்டிக் கொண்டு போகவில்லை. ஏனைய இனங்களால் அவர்கள் புறக்கணிக்கப்படுதலும், அவ்வினங்களால் முஸ்லீம்கள் பல இன்னல்களை எதிர் நோக்குவதாலுமே முஸ்லீம்களும் ஆயுதம் ஏந்தும் ஒரு இழிநிலை வரலாம். அப்பாவி முஸ் லீம்கள் மீது இனியும் அநீதிகள் இழைக்கப் படாமலும், முன்பு அவர்களிடமிருந்து அபகரிக் கப்பட்ட உடைமைகளையும் மீண்டும் வழங்கு வதன் மூலமே பழையபடி அவர்கள் சகோதர வாஞ்சையுடன் வாழமுடியும்.

முஸ்லீம்களுக்கு எதற்காக இந்த அநீதிகள் இழைக்கப்பட்டன? முஸ்லீம்கள் என்ன தவறிழைத்தார்கள்? அப்பாவி முஸ்லீம்களை வஞ்சித்ததினால் அவர்களுக்குண்டான பல னென்ன? முஸ்லீம்களின் கண்ணீருக்கு என்ன பதில்? என எழுகின்ற கேள்விகளுக்கு சம்பந்தப் பட்டவர்கள் பதிலிறுப்பது காலத்தின் தேவை யாகும்!

**● பாலைநகர் ஜிஃப்ரி அவர்கள்இலங்கையில் 11ம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவன். எழுத்துத் துறையில் தற்போது தீவீரமாக ஈடுபட்டுக் கொண்டுவருகிறார்.** ■

●●●

கிண்ண்ண நேர்சசை
நேற்றுப் பிறந்த குழந்தைக்கும்.
வந்தேறிகளாய் முத்திரை குத்தப்பட்டு
எங்களுக்கு மட்டும் கைநேர்ச்சை
நூறு வருஷ எங்களின் பாரம்பர்யத்தை
மசுராகக் கூட மதிக்காதவன் நீ.

பெண் என்றால் ஒரு ஆடு
ஆண் என்றால் ரெண்டு ஆடு
அகீகா கொடுப்பதற்கு
குழந்தை வாழ்வையும் விட்டுவைக்கவில்லை
உன் பாரபட்சம்

●●●




**மைலாஞ்சி**
**கவிதைத் தொகுதி**
**H.G.Razool**
**charam**
**21/77Gnaniyar street**
**Thuckalay-629175**
**Kanyakumari**

இஸ்லாமியர்களது
புற, அக வாழ்வின் நம்பிக்கைகளில்,
சடங்குகளில்,
உறவுகளில், புனைவுகளில்வாழ்ந்தும்- அனுபவித்தும்
பன்மைத் தன்மையாய் விரித்துப் போடப்பட்ட
ஓவியச் சித்திரங்களாக ரசூலின் கவிதைகள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Un Poéme de Mahieddine Nabet



பிரான்ஸ்ஸில் வாழும் நீண்டகால அல்ஜீரிய அகதியான மஹீதியன் நாபே (Mahieddine Nabet) “புதிய நாவல்” போக்கால் வசீகரிக்கப்பட்டவர், Alain Robbe-Grillet இனதும் அண்மையில் காலமான Editions de Minuit பணிப்பாளர் Gerôme Lindon இனதும் நண்பர், நிழலில் வாழும் ஓர் கவிஞர். அவரது அனுமதியோடு ALGER VILLE OUVERTE இதழில் வெளியான மனிதப் படுகொலைகளுக்கு எதிரான கவிதை ஒன்றை நன்றியுடன் பிரசுரிக்கின்றோம்.

## HALTE AUX MASSACRES

J'ai beau
m'en aller sans laisser de trace
mon poème demeure
parmi les disparus
comme une espérance
vous avez beau tirer dessus
dans les rues
mon ombre repasse
dans les rues
sur le cheval noir
emportant les blessés
Je mets le feu à ce territoire
de la mort
Le feu pour que l'herbe repousse
dans la foulée des Huns

Octobre-1988

(Réfugié politique de longue date bien que d'origine algérienne, passionné par le "Nouveau Roman" français, ami d'Alain Robbe-Grillet et de Gerôme Lindon directeur des Editions de Minuit, Mahieddine Nabet est un poéte de l'ombre. Nous publions dans L'Exil, avec son aimable autorisation, "Halte aux massacres", un de ses plus beaux textes, paru dans la revue ALGER VILLE OUVERTE (Poèmes posthumes) Nous le remercions pour cette contribution.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கருத்தியல் மோதல்:

# முஸ்லீம் தேசியவாதத்தை நிராகரிக்கும் தமிழ்த் தேசியம்.

-அழகு குணசீலன்.



வடக்குக்கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும், முஸ்லீம்களினதும் பாரம்பரிய பிரதேசங்களாகவுள்ளன. இந்த நிலையில் விடுதலைப் புலிகளைத் தமிழர்களுக்கான ஏகப்பிரதிநிதிகளாக மட்டுமன்றி, முஸ்லீம்க ளினதும் ஏகப்பிரதிநிகள் என்று குறிப்பிட்டிருப்பது யாழ்ப்பாண, இந்துவேளாள, உயர்குடி ஆதிக்கத்தின் மிகக் கொடூரம் நிறைந்த முஸ்லீம் தேசிய மறுதலிப்பாக

தேசிய இனங்களின் இனத் தனித்துவம், மொழி, மதம் என்பன சார்ந்த அடையாளங்களை மறுத்து நாடுகளின் அதிகார எல்லைப்பரப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்த கற்பனையான மரபுசார் தேசியவாதம் தோல்வி அடைந்துள்ளது. இதனால்தான் தமது சுய அடையாளங்களைப் பாதுகாத்துக் கொள்ளத்தக்க வகையில் ஒரு நாட்டிற்குள் வாழுகின்ற பல்வேறு தேசிய இனக் குழுக்களும் தமது இனத்தேசியம் குறித்து விழிப்புப்பெற்றுள்ளன. சமகாலத்தில் ரஸ்யா, யூகோசிலாவியா, இந்தியா, இலங்கை, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்ற பல நாடுகளின் தேசியம் சிதைந்து, இனக்குழுக்களின் தேசியம் முதன்மையடைந்து இருப்பது இந்தப் போக்கிற்கு சிறந்த உதாரணமாக அமைகின்றது. ஒருவகையில் கடந்த நூற்றாண்டின் முன் அரைப்பகுதியில் அதி முக்கியத் துவத்தினைப் பெற்றிருந்த வர்க்க விடுதலைப் போராட்டதிற்கு மாறாகத் தற்போது தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டமானது முக்கியத்துவத்தினைப் பெற்றிருப்பதும் இதன் பிரதான வெளிப்பாடுகளில் ஒன்றுதான்.

இந்த வரலாற்றுப் போக்கு மாற்றத்தின் அடிப்படையிலேயே இலங்கைத்தேசியம், தமிழ்த் தேசியம், முஸ்லீம் தேசியம் என்பன குறித்து நோக்கமுடியும். முன்னர் குறிப்பிட்டது போன்று இலங்கைத் தேசியம் என்பது தோற்றுப் போயுள்ளது. இலங்கைத்தேசியமானது சிங்கள, பௌத்த பேரினவாத தேசியமாகத் தன்னைக் குறுக்கிக் கொண்டு, சக தேசிய இனங்களான தமிழ், முஸ்லீம் தேசிய இனங்களின் தனித்துவ அடையாளங்களையும், அடிப்படை உரிமைகளையும் அங்கீகரிக்க மறுத்ததனால்தான், இலங்கைத் தேசியம் தோல்வியைத் தழுவியது. இன்னொரு வகையில் நோக்கினால் காலனித்துவ அடிப்படையில், நிர்வாக வசதிகளை முதன்மைப்படுத்தி ஏற்படுத்தப்பட்ட இந்தத் தேசியங்கள் வெறுமனே ஒரு மாயையாகவே இருந்துள்ளன. இதன் அடிப்படையிலான இந்தியத் தேசியமும் இலங்கைத்தேசியமும் பொய்யானவை. இந்தியத் தேசியமானது பார்ப்பனர்களையும், இந்துமதத்தையும், ஹிந்தி மொழியையும் முதன்மைப்படுத்துவதாக இருக்கின்றது. இலங்கைத் தேசியமானது சிங்களவர்களையும், பௌத்த மதத்தினையும், சிங்கள மொழியையும் முதன்மைப்படுத்துவதாக உள்ளது. இதன் அர்த்தம், இவை மற்றைய சிறுபான்மைத்தேசிய இனங்களின் இன, மத, மொழி சார்பு சுய அடையாளங்களைத் தமது ஆதிக்கத்தினுள் விழுங்கிவிட்டன என்பதாகும்.

சுதந்திரத்தின் பின்னரான காலப்பகுதியில் இலங்கையில் வளர்ச்சி பெற்று வந்த தமிழ்த் தேசியமானது இன்று தேசியவிடுதலைக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆயுதப்போராட்டமாகப் பரிணமித்து நிற்கின்றது. இந்த நிலையில், தமிழ்த் தேசியத்துடன், வரலாற்றுரீதியாக வாழ்ந்துவரும் முஸ்லீம் தேசியத்திற்கு எதிராகத் தமிழ்த்தேசியம் செயற்படத்தொடங்கியுள்ளது. இது சிங்களத் தேசிய மானது எவ்வாறு தமிழ்த்தேசியத்தினை நிராகரிக்கின்றதோ, அதிலிருந்து எந்தளவிற்கும் குறையாதவாறு தமிழ்தேசியம் முஸ்லீம் தேசியத்தினை நிராகரிப்பதாகவுள்ளது. தேசிய இனம் ஒன்றிற்கான லெனினால் கொடுக்கப்பட்ட வரைவிலக்கணமே, தற்போது பெரும் நெகிழ்ச்சிப் போக்கைக் கொண்டுள்ள நிலையில், மகாவம்சப் புனைகதைகளைக் கூறித் தமிழ்த்தேசியத்தினை, சிங்களத் தேசியம் நிராகரிப்பது போன்றுதான், தமிழ்ப் புனை கதைகளைக்கூறி தமிழ்தேசியம் முஸ்லீம் தேசியத்தினை நிராகரித்து வருகின்றது. இந்தநிலைதான், தேசியவாதமானது முற்போக்கானதா? பிற்போக்கானதா? என்ற வாதத்தினை ஏற்படுத்துவதுடன், ஒருதேசியம், இன்னொரு தேசியத்தினை நிராகரித்து, அதனை அழிக்கப் புறப்படும் போது, தேசியம் என்ற எல்லையைத் தாண்டி அது பாசிசமாகவும், பயங்கரவாதமாகவும் உருமாற்றம் பெறுவதாகவும் உள்ளது.

தமிழ்த்தேசியத்திற்காக ஆயுதம் ஏந்திய போராளிகள் குழுக்களின் கடந்தகால நடவடிக்கைகள் இந்த எல்லையைத் தாண்டிவிட்டனவாகவே உள்ளன. வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாரம்பரியமாக வாழ்ந்துவரும் முஸ்லீம் தேசிய இனம் குறித்த தமிழ் ஆயுதப் போராட்டக் குழுக்கள், தமிழ் அரசியல்கட்சிகள், தமிழ்த் தேசியவாதிகள் ஆகியோரின் செயற்பாடுகள் தான் இதற்குக் காரணமாக அமைந்துள்ளன.

தமிழ்த்தேசியமானது, முஸ்லீம்தேசியத்தினை நிராகரிக்கின்ற அல்லது அவர்களின் அடையாளங்களை இல்லாமல் செய்கின்ற வகையில் பலவகையான நடவடிக்கைகளைத் திட்டமிட்டவகையில் மேற்கொண்டு வந்துள்ளது.

□ முஸ்லீம்களைக் குறிக்க, தமிழர்களால் பயன்படுத்தப்பட்ட வார்த்தைப் பிரயோகங்களால் முஸ்லீம்களின் தனித்துவ அடையாளங்கள் மறுக்கப்பட்டு வந்துள்ளன.

□ விடுதலைப்புலிகளால் வடக்கிலிருந்து முஸ்லீம்கள் பலாத்காரமாக, வெளியேற்றப்பட்டுள்ளார்கள்.

□ ஈழப்போராட்டக் குழுக்களால், திட்டமிட்டவகையில் முஸ்லீம் தேசிய இனம் மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள்.

□ வடக்குக்கிழக்கு மக்களின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப்புலிகளைக் காட்ட முற்படுகின்ற போக்கு.

□ இதுவரையான சமாதானமுயற்சிகளில் முஸ்லீம் பிரதிநிதித்துவத்தை உள்ளடக்காது அவர்களின் அபிலாசைகளை நிராகரித்தல்.

□ சர்வதேச, பிராந்திய மட்டத்தில் முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்சதியின் ஒரு பகுதியாக அமைந்துள்ள நடவடிக்கைகள்.

முஸ்லீம் மக்களின் விருப்பத்திற்கு மாறாகத் தமிழ்த்தரப்பினர், தன்னிச்சையாக முஸ்லீம்களைக் குறிக்கும் வகையில் தமிழ்பேசும் மக்கள், இஸ்லாமியத் தமிழர்கள், ஈழவர் என்ற வார்த்தைப் பிரயோகங்களைப் பாவித்து வருகின்றார்கள். இந்த வார்த்தைப் பிரயோகங்கள் அனைத்தும் முஸ்லீம் தேசிய இனத்தின் தனித்துவ அடையாளங்களை மறுதலிப்பனவாகவே உள்ளன. தமிழ்பேசும் மக்கள் என்பது, அவர்கள் தமிழ் மொழியைப் பேசுகின்றவர்கள் என்பதை மட்டுமே வெளிக்காட்டி நிற்கின்றது. இதில் அவர்களுடைய எந்த தனித்துவப்பண்பும் வெளிக்காட்டப்படாததுடன், மொழியால் ஒன்றுபட்டவர்கள் என்பதை மட்டும் வெளிக்காட்டி, மற்றைய தனித்துவ இன அடையாளங்களை இருட்டடிப்புச் செய்வதாகவுள்ளன.

இஸ்லாமியத் தமிழர்கள் என்பது முஸ்லீம் மக்களைத் தமிழர்களாகக் காட்டுகின்ற ஒரு முயற்சியாகும். அதாவது அவர்கள் மதத்தினால் வேறுபட்டவர்களேயன்றி, மற்றைய அம்சங்களில் அவர்கள் தமிழர்கள்தான் என்ற கருத்தியலை வலியுறுத்துவதாக உள்ளது. கிறிஸ்தவ மதத்தினைச் சார்ந்துள்ள தமிழர்களை நாம் கிறிஸ்தவத் தமிழர்கள் என்று சொல்வது வேறு, முஸ்லீம்களை இஸ்லாமியத்தமிழர்கள் என்று சொல்வது வேறு. முதலாவதில் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த தமிழர்கள் என்பது சரியான கருத்தினை வெளிப்படுத்துகின்றது. ஆனால் இரண்டாவதில் இஸ்லாமியத் தமிழர்கள் என்பது இஸ்லாம் மதத்தைத்தழுவும் முஸ்லீம்களைத் தமிழர்கள் என அழைப்பதாகவுள்ளது.

ஈழவர்கள் என்ற வார்த்தையும் பயன்படுத்தப்படுகின்றது. இது ஈழத்தில் வாழ்பவர்கள் எல்லோரும் ஈழவர்கள் என்ற ஈழத்தேசியத்தினை முன்னிறுத்துகின்றது. இதே தேசியத்தினைத்தான் இலங்கையர், இந்தியர் என்பனவற்றின் மூலம் அந்த நாட்டு அரசுகள் வலியுறுத்துகின்றன. இதன்மூலம் சிறுபான்மைத் தேசிய இனங்களின் தனித்துவ அடையாளங்கள் மறுக்கப்படுகின்றன. மேலெழுந்தவாரியாக நோக்கும் போது ஈழவர் என்பது முற்போக்கான ஒன்றாக, இரு தேசியங்களையும் கொண்டதாக உள்ளபோதும் இலங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கைத் தேசியத்தில் சிங்களவர்களும், சிங்கள மொழியும், பௌத்தமதமும் முதன்மைப் படுத்தப் பட்டது போன்று, இங்கும் ஈழத்தேசியத்தில் தமிழர்களும் தமிழ்மொழியும், இந்து மதமும் முதன்மைப்படுத்தப்படமாட்டாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை. தமிழீழம், மதச்சார்பற்ற, சோசலிச அரசு என்ற வாசகம் மட்டும் முஸ்லீம் களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தப்போவ தில்லை. தமிழ்ஈழம் என்பதன் பெயரால் இதுவரை இடம்பெற்றுள்ள கசப்பான நிகழ்வுகள் அவர்க ளுக்கு இந்தச் சந்தேகத்தினை ஏற்படுத்துவது நியாயமானதே.

ஆக, தமிழ்த்தரப்பினரால் முஸ்லீம்களை அழைக்கப் பயன்படுத்தப் பட்டுள்ள வார்த்தைகள் அவர்களைத் தமிழர்களாகக் காட்டுவனவாகவும், தமிழ்தேசியத்தினுள் விழுங்குவனவாகவுமே உள்ளன. இது முஸ்லீம் தேசியத்தினைத் தமிழ் தேசியம் மறுக்கின்ற போக்கின் ஒரு வெளிப்பாடே யாகும். முஸ்லீம்களை, முஸ்லீம்கள் என்று அழைக்க வேண்டுமேயன்றி எமக்கு விரும்பிய எந்த வார்த்தைகளாலும் அவர்களை அழைக்க முடியாது. முஸ்லீம் எனும் வார்த்தைதான் அவர்களின் சகல தனித்துவ அடையாளங் களையும் வெளிக்காட்டுவதாக அமையுமேயன்றி இதற்குப் பிரதியீடாக எந்த ஒரு வார்த்தையையும் நாம் பிரயோகிக்க முடியாது. அப்படி முனைவது முஸ்லீம் தேசியத்தினை மறுதலிப்பது தான். முஸ்லீம்களை ஒரு தேசிய இனமாக அங்கீகரிக் காததன் ஒரு கட்டமாகத்தான் அவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தும், வடக்கின் வேறுசில பகுதிகளில் இருந்தும் விடுதலைப்புலிகளால் வெளியேற்றப் பட்டிருக்கிறார்கள். இதற்கு என்ன காரணங்கள் கூறப்பட்டபோதும் அடிப்படையான காரணம் முஸ்லீம்கள் குறித்த விடுதலைப் புலிகளின் பார்வைதான். விடுதலைப்புலிகளின் அன்றைய அரசியல்பிரிவுப் பேச்சாளர் யோகி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில், முஸ்லீம்கள் வடக்கிலிருந்து பலாத்காரமாக வெளி யேற்றப்பட்ட பின் ஆற்றியுள்ள உரை யில் முஸ்லீம்கள் தமிழர்கள்தான். அவர்கள் தமிழர்கள் என்பதை ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும் எனக் குறிப் பிட்டிருப்பது, இது விடயத்தில் விடுத லைப்புலிகளின் நிலைப்பாட்டை தெளி வுபடுத்துகின்றது. யோகியின் இந்தக் கூற்றானது முஸ்லீம் தேசியத் தினை நிராகரிப்பது மட்டுமன்றி, பலாத்கார அடிப்படை யில் அவர்கள் தமிழர்கள் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று வன்முறையைப் பிரயோ கிப்பதாகவும் உள்ளது.

ஸ்ரீலங்கா அரசுகூட இதுவரை சிங்களம் பேசுகின்ற முஸ்லீம்களைப் பார்த்து நீங்கள் முஸ்லீம்கள் அல்ல, நீங்கள் சிங்களவர்கள்தான் என்பதை ஏற்றுக்கொண்டுதானாக வேண்டும் எனக் கூறியதில்லை என்பதை இங்கு நினைவு கூர்ந்தால், தமிழ்த்தேசியம் நான் குறிப்பிட்ட அந்த எல்லையைத் தாண்டிச் சென்று விட்டது என் பதை விளங்கிக்கொள்வதில் சிக்கல்கள் இருக் காது என நினைக்கிறேன். இதன் அர்த்தம் சிங்களத் தேசியம் அதன் எல்லையைத் தாண்டவில்லை என்பதல்ல. தமிழ்தேசியம் சில சந்தர்ப்பங்களில் சிங்களத்தேசியத்தையும் விஞ்சி இருக்கின் றதுடன், பல சந்தர்ப்பங்களில் அதேபாணி யில்தான் உள்ளது என்பதையும் இது காட்டு வதாக உள்ளது.

தமிழ்த்தேசியத்திற்கான ஆயுதப்போராட்ட வரலாற்றில் முஸ்லீம்தேசிய இனத்தினை அங்கீ கரிக்க மறுப்பதன் தொடராகப் பல வன்முறைகள் தமிழ்க்குழுக்களால் முஸ்லீம்கள்மீது கட்டவிழ்த் துவிடப் பட்டுள்ளன. மிகவும் கொடூரமான வகை யில், முஸலீம்களின் மதவழிபாட்டுத் தலங்கள் மீதும், அவர்களின் கிராமங்கள்மீதும், உடை மைகள் மீதும் தாக்குதல்கள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. இவை அனைத்தும் தற்செயலாக இடம் பெற்றவை அல்ல. நன்கு திட்டமிட்ட வகையில், முஸ்லீம் தேசியத்தினை நிராகரிக் கின்ற வகையில் மேற்கொள்ளப்பட்டவை. யாழ்ப்பாணத்திலிருந்து முஸ்லீம்கள் பலாத்கார மாக வெளியேற்றப்பட்டது மட்டும்தான் அவர் களுக்கெதிராக இடம்பெற்ற வன்முறையல்ல. பாவற்கொடிச்சேனைக் குடியேற்றக்கிராமம் முற் றாக அழிக்கப்பட்டது. பல முஸ்லீம்கள் கொலை செய்யப்பட்டதுடன், முஸ்லீம் இளம்பெண்கள் பாலியல் வல்லுறவிற்கும் உட்படுத்தப்பட்டனர். புளட் இயக்கத்தினரால் ஆரம்பிக்கப்பட்ட இந்த வன்முறைகளை பின்னர் EPRLF தொடர்ந்து நடாத்தி முடித்துவைத்தது. விவசாய உற்பத்திக்

சிங்களத் தேசியம் நிராகரிப்பது போன்றுதான், தமிழ்ப் புனைகதைகளைக் கூறி தமிழ்தேசியம் முஸ்லீம் தேசியத்தினை நிராகரித்து வருகின்றது. இந்தநிலைதான், தேசியவாதமானது முற்போக்கானதா? பிற்போக்கானதா? என்ற வாதத்தினை ஏற்படுத்துவதுதான், ஒருதேசியம், இன்னொரு தேசியத்தினை நிராகரித்து, அதனை அழிக்கப் புறப்படும் போது, தேசியம் என்ற எல்லையைத் தாண்டி அது பாசிசமாகவும், பயங்கரவாதமாகவும் உருமாற்றம் பெறுவதாகவும் உள்ளது.

www.tamilarangam.net

குப் பெயர்போன பாவற்கொடிச் சேனைக் கிராமத்தில் முஸ்லீம்களின் சொத்துக்கள், அறுவடைகள், கால்நடைகள் அனைத்தும் சூறையாடப்பட்டன. காத்தான்குடி, ஆரையம்பதிக் கிராமங்களுக்கிடையே நிலவிய பதட்டம் காரணமாகக் கொக்கட்டிச்சோலைப் பகுதிக்கு இடம்பெயர்ந்த ஆரையம்பதித் தமிழர்களுக்கு, முஸ்லீம் வயல்வாடிகளில் கொள்ளையடித்த உணவுப்பொருட்களைத்தான் இயக்கங்கள் சமைத்துக்கொடுத்தன என்பதையும் இங்கு பதிவுசெய்வது பொருத்தமானதாக இருக்கும்.

பனாகொட மகேஸ்வரனால் மேற்கொள்ளப்பட்ட காத்தான்குடி வங்கிக்கொள்ளை, ரெலோ இயக்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட காத்தான்குடிப் பலநோக்குக் கூட்டுறவுச்சங்கக்கொள்ளை போன்ற முஸ்லீம் கிராமங்களில் இடம்பெற்ற கொள்ளைகள் அரச பொதுச் சொத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கில் அரச இயந்திரத்திற்கு எதிராக மேற்கொள்ளப் பட்டவையாக இருந்தபோதும், இந்த இலக்குகளைத் தெரிவு செய்வதில் முஸ்லீம் விரோதப் போக்குக் காணப்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட காத்தான்குடிப் பள்ளிவாசல்ப் படுகொலைகள், அம்பிளாந்துறைச் சந்தியில் இடம்பெற்ற ஹஜ் யாத்திரிகர்கள் மீதான தாக்குதல்கள், மட்டக்களப்புப் பொலநறுவை எல்லைக் கிராமங்களான சுங்காவில், அலிஞ்சிப் பொத்தானக் கிராமங்களின் தாக்குதல்களும் திட்டமிட்டவகையில் முஸ்லீம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட வன்முறைகளாகும். நூற்றுக்கணக்கான ஏழைக்கிராமவாசிகளான முஸ்லீம்கள் குறிப்பாகப் பெண்கள், பிள்ளைகள் எனப்பலரும் இதில் படுகொலை செய்யப்பட்டார்கள். தமிழ் முஸ்லீம் தேசிய இனங்களுக்கிடையிலான உறவில் விரிசல்களை ஏற்படுத்துவனவாகவே இந்தக்கறைபடிந்த நிகழ்வுகள் அமைந்திருந்தன. முஸ்லீம் தேசியத்தினை மறுக்க, அவர்களின் மதவழிபாட்டுத்தலங்கள், கிராமங்கள் என்பனவற்றை அழித்து, அவர்களின் சுய இனத்துவ விழுமியங்களை ஒழிப்பதற்காகவே இவ்வாறான தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இலங்கையின் இனப்பிரச்சனையில் நோர்வேயின் சமாதானம் குறித்துப் பேசப்படுகின்ற இன்றைய நிலையில், வடக்குக்கிழக்கு மக்களின் ஏகபிரதிநிதிகள் விடுதலைப்புலிகள்தான் என்ற கருத்தினை அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் கட்சி வலியுறுத்தி வருகின்றது. இக்கட்சியுடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்துவரும் தமிழர்விடுதலைக் கூட்டணி உள்ளிட்ட மற்றைய கட்சிகளும், முன்னாள் குழுக்களும் கூட இக்கூற்றினை ஏற்றுக் கொண்டிருக்கின்றன. வடக்குக்கிழக்கு மாகாணங்கள் தமிழர்களினதும், முஸ்லீம்களினதும் பாரம்பரியப்பிரதேசங்களாகவுள்ளன. இந்த நிலையில் விடுதலைப் புலிகளைத் தமிழர்களுக்கான ஏகப்பிரதிநிதிகளாக மட்டுமன்றி, முஸ்லீம்களினதும் ஏகப்பிரதிநிகள் என்று குறிப்பிட்டிருப்பது யாழ்ப்பாண, இந்துவேளாள, உயர்குடி ஆதிக்கத்தின் மிகக் கொடூரம் நிறைந்த முஸ்லீம் தேசிய மறுதலிப்பாக அமைகின்றது. தமிழர்களின் அரசியல் தலைவிதியை நிர்ணயிக்கின்ற உரிமை தமிழர்களுக்கு உரியது என்று கூறுகின்ற தமிழ் மிதவாதக் கட்சிகள், முஸ்லீம்களின் அடிப்படை சனநாயக உரிமையான, தமது சமூகத்தின் நிலைப்பாட்டைத் தீர்மானிக்கின்ற உரிமையை, விடுதலைப் புலிகளிடம் கையளிப்பதற்கு இந்தக் கட்சியினர் யார்?

தமிழ் ஆயுதக் குழுக்களால் முஸ்லீம்கள் மீது கடந்த 15 ஆண்டுகளுக்கும் மேலாக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள மனித உரிமை மீறல்கள், வன்முறைகள் குறித்து இதுவரை ஒரு கண்டனத்தையோ, அனுதாபத்தையோ தெரிவிக்காத அரசியல் ஊனமுற்றவர்களாக உள்ள இவர்கள், வடக்குக்கிழக்கின் ஏகபிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளைப் பிரகடனம் செய்வது, முஸ்லீம்களின் உரிமைகளை மறுக்கின்றதும் பறிக்கின்றதுமான செயலாக உள்ளது. இதன் அடிப்படையிலும் தமிழ் இனவாதத்தின் கருத்திலினதும் அடிப்படையில்தான் இது வரையான சமாதானப் பேச்சுக்களில் முஸ்லீம் இனத்திற்கு வாய்ப்பளிக்காமல் மறுக்கப்பட்டு வந்துள்ளது. இலங்கை, இந்திய அரசுகள் இதில் ஆர்வம் காட்டாமல் இருந்ததை தமிழ்த்தரப்பினர் தமது நிலைப்பாட்டிற்குச் சாதகமாகப்பயன்படுத்தி வந்துள்ளனர். இலங்கை, இந்திய அரசுகள் முஸ்லீம் தேசியத்தினை மறுக்கின்றன என்பது ஆச்சரியத்திற்கு உரிய ஒன்றல்ல. மாறாக, தேசிய விடுதலைக்காகப் போராடும் ஒரு இனத்தின் பிரதிநிதிகளாகக் கூறிக் கொள்ளும் இந்த அமைப்புக்களும், கட்சிகளும் கூட அதற்குத்துணை போய்த் தாமும் அந்த முஸ்லீம் தேசியத்தினை நிராகரிப்பதுதான் இவர்கள் குறித்த கேள்வியை எழுப்புவதாகவுள்ளது.

முஸ்லீம் தேசியத்தினை மறுக்கும் வகையில், தமிழ்த்தேசியத்தினால் மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகளின் தொடர்புகளை நோக்கும் எவரும், இவற்றிற்கும், இஸ்ரேல், இந்திய அரசுகளுக்கும் இடையிலான தொடர்பினை விளங்கிக்கொள்ள முடியும். தமிழர்தரப்பில் முஸ்லீம்கள்மீது மேற்கொள்ளப்பட்ட வன்முறைகள், இஸ்ரேலைத் திருப்திப்படுத்தவும், இஸ்ரேலிடமிருந்து ஆயுதங்களையும், பயிற்சியையும் பெறவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெறவும் செய்யப்பட்டவை எனக் கூறப்பட்டு வந்துள்ளது. ஸ்ரீலங்கா அரசபடையினருக்கும், விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கும் தாம் பயிற்சி அளித்ததை இஸ்ரேலின் முன்னாள் படையதிகாரி ஒருவர் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இந்தியாவில் பாரதீய ஜனதாவின் ஆட்சிக் குப்பின்னர், முன்னர் இருந்த இந்துத்துவ அடிப்படைவாதம் மேலும் வலுப்பெற்றுள்ளது. இதன் அடிப்படையில் சிவசேனை, விஷ்வ இந்து பரிசத், ஆர்.எஸ். எஸ். போன்ற அமைப்புக்கள் மற்றைய மதங்களுக்கு எதிரான நிலைப்பாட்டை வலுப்படுத்திவருகின்றன. வை.கோபாலசாமி போன்றவர்களும் இவர்களின் நிலைப்பாட்டை ஆதரிப்பதுடன், காஷ்மீர் விடுதலைப் போராட்டத்தையும், பாகிஸ்தானின் நிலைப்பாடுகளையும் நிராகரிப்பவர்களாக உள்ளனர். இந்த அம்சங்களுடன் இருந்து முற்றாகப் பிரித்து தமிழ்த் தேசியம், முஸ்லீம் தேசியத்தின்மீது மேற்கொள்ளும் அடக்குமுறையினை நாம் பார்க்கமுடியாது. இந்தவகையில் வடக்குக்கிழக்கிற்கு வெளியேயும், இந்தியா, இஸ்ரேல் என்பனவற்றின் அரசியல், இராணுவ நலன்களின் ஊடாகவும்தான் தமிழ்த் தேசியம், முஸ்லீம் தேசியத்தின் மீது செலுத்துகின்ற ஆக்கிரமிப்பையும், நிராகரிப்பையும் நோக்க வேண்டிய தேவையுள்ளது.

இலங்கையில் சிங்களத்தேசியம், சிறு பான்மைத் தேசியஇனங்களை அங்கீகரிக்காததனால்த்தான் இன்று முழு இலங்கையும் யுத்த பூமியாக மாறியுள்ளது. இதனை ஒரு படிப்பினையாகக் கொண்டு தமிழ்த்தேசியம், தொடர்ந்தும் முஸ்லீம் தேசியத்தினை நிராகரிப்பதைத் தவிர்த்து, அதன் தனித்துவ அடையாளங்களையும், அடிப்படை ஜனநாயக உரிமைகளையும், அங்கீகரிக்க வேண்டும். இல்லையேல் தமிழீழம் மதச்சார்பற்ற ஒரு சோசலிச அரசு என்பது, வெறும் வார்த்தைகளாக மட்டுமே இருக்கமுடியும்.

***

> ஸ்ரீலங்கா அரசுகள் இதுவரை சிங்களம் பேசுகின்ற முஸ்லீம்களைப் பார்த்து நீங்கள் முஸ்லீம்கள் அல்ல, நீங்கள் சிங்களவர்கள்தான் என்பதை ஏற்றுக் கொண்டுதானாக வேண்டும் எனக் கூறியதில்லை என்பதை இங்கு நினைவு கூர்ந்தால், தமிழ்த்தேசியம் நான் குறிப்பிட்ட அந்த எல்லையைத் தாண்டிச் சென்று விட்டது என்பதை விளங்கிக் கொள்வதில் சிக்கல்கள் இருக்காது.

'நாங்கள் முஸ்லீம்களை வெளியேற்றியது ஏன்? கிழக்குமாகாணத்தில் 4000 தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 2000 பேர் முஸ்லீம் ஆயுதக் கும்பல்களாலும், ஊர்கவற் படையினராலுமே கொல்லப்பட்டனர். முஸ்லீம்களோ தாம் சிங்களவரும் அல்ல, தமிழரும் அல்ல. மாறாக அராபியர்கள் என உரிமை பாராட்டுகின்றனர். தங்களது சுயநல நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளவே அவர்கள் இதைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் அவர்கள் தமிழர்களே. தமிழ்ப்பாடசாலைகளில் தமிழிலேயே அவர்கள் கல்விகற்கின்றனர். அவர்களது கலாச்சாரம் அராபியக் கலாச்சாரம் அல்ல. அப்படியானால் அவர்களுடைய பெண்கள் பர்தா அணிந்திருப்பார்கள். 'அப்படி இங்கு நடக்கவில்லை.' முஸ்லீம்கள் கிழக்கில் 35 சதவீதத்தையும், வடக்கில் 5 சத வீதத்தையும் கொண்டுள்ளனர். இலங்கையில் அவர்கள் 7வீதமானோரே. இணைந்த வடக்குக் கிழக்கில் அவர்கள் 17 சத வீதத் தைக் கொண் டுள்ளனர். கிழக்கிலுள்ள முஸ்லீம்கள் தாம் 35சத வீதத்திற்கான சலுகைகளை இழப்பதாக வாதிடுகின்றனர். அதேவேளை வடக்கிலுள்ள 5சதவீதமான முஸ்லீம்கள் 17சத வீதத்திற்குரிய சலுகையைப் பெறுவதை ஏன் அவர்களால் உணரமுடியவில்லை? எனவே முழு இலங்கையிலுமே 2சதவீதமான சலுகைகளையே பெறமுடியுமான அவர்கள், இணைந்த வடக்குக் கிழக்கிலோ 17வீதத்தினைப் பெறுவார்கள். ஆனால் கிழக்கு முஸ்லீம்கள் இதை உணரவில்லை.'

'வடக்கு முஸ்லீம்களைப்பற்றி கிழக்கு முஸ்லீம்களுக்கே அக்கறை இல்லையென்றால், நாம் ஏன் அவர்களைப் பற்றிக் கவலைப்பட வேண்டும்.'

'அம்பாறை மாவட்டத்தில் பத்து தமிழ்க் கிராமங்கள் தற்போது இல்லை..... எழுபதாயிரம் தமிழர்கள் அகற்றப்பட்டுள்ளனர். இந்த அக்கிரமங்கள் பற்றிய செய்திகள் வெளி வரவில்லை. ஏனெனில் அங்கு இது பற்றி எழுதுவதற்கு ஒருவர்கூட விட்டுவைக்கப்படவில்லை. எழுபதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யிரம் தமிழர்கள் பற்றிக் கவலைப்படாதவர்கள் ஏன் இப்போது நாற்பதாயிரம் முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டது பற்றிக் கவலைப் படுகின்றனர்? தமிழர்களுக்கு நடந்தது போன் றல்லாமல் நாம் அவர்களைக் கொல்லவில்லை. அவர்களது கற்புகளைச் சூறையாடவில்லை. அல்லது உடைமைகளை அபகரிக்கவில்லை. நாம் செய்ததெல்லாம் அவர்களை வெளியேற் றியது மட்டுமே.'

'நாம் முஸ்லீம்களுக்கு அநேகமான வாக் குறுதிகளை வழங்கியுள்ளோம். முஸ்லீம்கள் அதற்குச் செவி சாய்க்கவில்லை. அதற்கு எதிராக சிங்கள இராணுவத்தோடும், இலங்கை அரசுடனும் இணைந்து எம்மை அழிக்க ஆயத்தமானார்கள். தமிழீழம் சமய அல்லது சாதி வேறுபாடுகளற்ற, ஒரு மதச் சார்பற்ற அரசு. இங்கு பிரிவினைக்கு இடமில்லை. தாங்கள் தமிழர்களே என்பதை முஸ்லீம்கள் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும்.'

(-விடுதலைப்புலிகளின் அரசியல் பேச்சாளர் யோகி- யாழ்ப்பாணத்தில் இருந்து முஸ்லீம்கள் வெளியேற்றப்பட்டபின் யாழ்.பல்கலைக்கழகத்தில் ஆற்றிய உரையில் இருந்து.......)

'முஸ்லீம்கள் இலங்கைக்கு வியாபார நோக்கமாகப் பெருமளவு பாகிஸ்தானிலிருந்தும், சிறிதளவு தமிழ் நாட்டிலிருந்தும் (இந்தியாவி லிருந்தும்) இடம் பெயர்ந்த வணிகர்கள். கால கதியில் சிங்கள, தமிழ்ப் பிரதேசங்களில் குடி யேற்ற வாசிகளாக மாறியுள்ளனர். இவர்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையே இனக்க சப்புநிலை (1915ஆம் ஆண்டு முஸ்லீம் சிங்கள இனக்கலவரம்) நீடித்ததாலும், தமிழ் அரசர்களுக்கு குதிரை வியாபாரிகளாகவே பெரும்பாலான முஸ்லீம் வணிகர்கள் வந்ததினாலும், தமிழ்நாட்டில் நவாப் மன்னர்களின் ஆட்சி தோன்றி, இஸ்லாமிய மதம் தமிழ்நாட்டில் வேரூன்றியதாலும், இம் முஸ்லீம்கள் தமிழையே தமது மொழியாகத் தத்தெடுத்துக் கொண்டனர். இதனால் சிங்களப் பேரினவாத அரசு தமிழ்தேசிய இனத்துள் இவர்களையும் ஒரு அங்கமாக அடக்கித், தனது நிர்வாகத்தை நடத்திவந்துள்ளது. இம் முஸ்லீம்கள் குடி யேற்றவாசிகளாகக் காணப்படுகின்றனர். ஆகவே இவர்கள் ஒரு தேசிய இனம் அல்ல. என்பது தெளிவாகின்றது.....இலங்கைத் தமிழர்கள்தான் தேசியஇனம் என்பது பெருந்தோட்டத் தமிழர்களுக்கோ, அல்லது முஸ்லீம்களுக்கோ எதிரான வகுப்பு வாதக் கோசமல்ல. நமது விடுதலைப் போராட்டத்தின் நியாயத்தன்மையை நிறுவுவதற்கான செயற்பாடேயாகும்.'

(1992, சித்திரைமாத எரிமலையில் பற்றிமாகரன்)

'1970ஆம் ஆண்டு பாராளுமன்றப் பொதுத் தேர்தலில், இரட்டை அங்கத்தவர் தொகுதியான மட்டக்களப்புத் தொகுதியில் செ.இராசதுரையும், ராசூன் செல்வநாயகமும் வெற்றி பெறலாம் என்றால், 1977 தேர்தலில் காசி ஆனந்தனும், இரா சதுரையும் ஏன் வெற்றிபெறமுடியாது?

(1977இல் வீரகேசரிப் பேட்டியொன்றில் உடுவில் பாராளுமன்ற உறுப்பினர் வி.தருமலிங்கம் முஸ்லீம்களுக்கும், தமிழர்களுக்கும் என தலா ஒரு பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் என்ற இரட்டைத் தொகுதி சனநாயகத்தினை மறுத லித்து முஸ்லீம் பிரதிநிதித்துவத்தை அபகரிக்க எடுத்த முயற்சி இது.)

***

'முஸ்லீம் தேசியவாதம் என்பது தமிழத் தேசியவாதம் முனைப்புப் பெறும்வரை முடங் கித்தான் கிடந்தது. தமிழ்த்தேசிய வாதத்தின் எழுச்சியின் பயனாகத் தமிழ் மக்களிடையில் அதிகாரம் வந்து சேரும் என்ற ஓர் நிலை ஏற்பட் டமைதான் முஸ்லீம் தேசியவாதத்தின் பிறப்பிற்கு உண்மையான காரணமாகும். இந்த உதயம் எவ்விதத்திலேனும் தவறானதா? என்று விவாதிப் பதில் பிரயோசனம் இல்லை. ஆனால் தமிழ்த் தேசியவாதத்தின் அடக்குமுறை அல்லது தவறான போக்குத்தான் முஸ்லீம் தேசியவாதத் தின் உதயத்திற்குக் காரணம் என்று கூறப் படுவதில் எனக்கு நிறையவே ஆட்சேபனையுண்டு.'

(1999இல் கொழும்பில் இடம்பெற்ற கருத்தரங்கு ஒன்றில் வி.ரி.தமிழ்மாறன்.)



அகதி

பெப்ரவரி 94 இல் வடக்கு முஸ்லிம்களின் உரிமைக்கான அமைப்பினால் வெளியிடப்பட்டு வந்த இதழ்.

15, ரோஹினி வீதி
வெள்ளவத்தை
கொழும்பு - 06



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இரண்டு:
# பிரதிகளுடான வெற்றுப் பட்டறை

### காப்பியடிக்கப்பட்ட சிறுகதை

கற்சுறா

சபிக்கப்பட்ட இரவு. அரைத்தூக்கம். ஓலைச் சுவடிகளும் இறந்து போன காகிதத்துண்டுகளுமான கனவு. எவனோ ஒருவனின் பொத்திப் பொத்தி வைக்கப்பட்டதான வாழ்வு. சீரான பாதையில் மட்டுமே ஓடக்கூடியதாகச் செய்யப்பட்ட சக்கரம். எல்லாமே பொய் எனச் சொன்ன பிற்பாடும் நம்பிவிடக் கூடியதாக ஒருத்தி. நம்பிக்கையில் அவள். மலிவான விலை தேடி அலையும் தாய். தண்ணியைக் கூட எடுத்துத்தா எனக் கேட்கும் புருசன். எப்போதும் கொலைகார வேடத்தில் அலையும் வாத்தியார்.சித்திரவதைக் கூடமாக பாடசாலை. ஊரின் ஒதுக்குப் புறமாக இருக்கிறது ஆஸ்பத்திரி. வெள்ளைப்பிரம்பு. தவறிப் போனால் கண்டு பிடிக்கமுடியாதபடி வழிகள். தினம் அச்சுறுத்திக் கொண்டிருக்கும் மணிக்கூடு. பழகிப் போன மனிதர்கள். தப்பித்தலைத் தவிர வேறெதையும் யோசிக்காத மூளை. தப்பித் தலும் ஆகாது திரும்பத் திரும்ப பயமுறுத்தலுக்கு உள்ளாகி விடப்பட்டிருக்கிறது. தொடர் பயமுறுத்தலில் களைத்துத் தூங்கும் போது மீளவும் மற்றவர்களின் தொந்தரவுக் குள் அகப்பட்டுக் கொள்கிறது.



மக்கள் எல்லோரும் ஆசுவாசமாக உட்காந்திருந்து கொண்டு நிலத்தின் மீது பரவியிருந்த கற்களைப் பொறுக்கிக் கொண்டிருந்தனர். அவை அவர்களுக்கான பாதுகாப்பையும், உயிரையும், உணவையும் கொடுக்கும் என நம்பி மிக நிதானமாகப் பொறுக்கி எடுத்துக்கொண்டு தங்கள் இருப்பிடத்திற்கு கொண்டுவந்து சேர்த்தனர். அவர்கள் தங்கள் இருப்பிடத்தை தெரிவுசெய்யும் நிலைக்கு ஏற்கனவே வந்திருந்தனர். குறிப்பாக எந்தத்திசையை நோக்கிப் பயணம் செய்தபோதிலும் அவற்றின் இலக்கு எதுவென்று இல்லாத போதிலும் இருப்பிடத்தின் திசையை குறியிட்டு அடையாளப்படுத்தியே நகர்ந்தனர். அப்பொழுது அது கற்காலத்தை கடந்து கொண்டிருந்தது.அது அவர்களுக்கு பெரு நகரமாக மாறிக்கொண்டிருக்கிற தோற்றத்தைக் கொடுத்தது. சந்தோசத்தைக் கொடுத்தது. தங்களுக் கென்று ஒரு தேசம் உருவாகிக் கொண்டிருப்பதையிட்டு எல்லோரும் ஆனந்தக் களிப்பில் மிதந்தனர்.அவர்களின் மொழி அவர்களை வாழவைக்கும்- பாதுகாக்கும் என நம்பினர்.

ஆனால் அம்மக்களின் வாழ்நிலத்தின் கீழ் கோடிக்கணக்கான எலும்புத்துண்டங்கள் புதைக்கப்பட்டு வைத்திருப்பது எனக்கு மட்டும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எப்படித் தெரியும். இன்னொரு இனத்தை இவர்களால் எப்படி அழிக்க முடிந்தது. அந்த இனம் பேசிய மொழியும் அவர்களின் கடவுளும் இவர்களுக்கு இடையூறாக எப்படி இருந்தது. சரி, இவ்வளவிற்குப் பின்னால் ஏதோ தாங்கள் தான் முதன்மை இனம் என்ற கற்பனையில் எப்படி இவர்களால் வாழமுடிகிறது? நிலத்தைத் தோண்டி அவர்களது உயிர் மூச்சை இழுத்து வந்து இவர்களிடம் காட்டவேண்டாமா? அவர்களின் கொலை முனகல்தானா இவர்களின் மொழி. எப்படி இவர்களுக்கு அந்த மகா சாத்தியம் உண்டாயிற்று. அதுவும் இவ்வளவு குறுகிய காலத்தில்.

தங்களுக்கென்று உருவாக்கிய தேசத்தை மிக அழகியல்படுத்தலில் தங்களின் திறமைக்கு ஏற்றால் போல் செய்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒழுங்கமைக்கும் தேசம் அவர்களை அறியாமலேயே பயமுறுத்தலுக்கும் அசசுறுத்தலுக்கும் உரியதாக வடிவெடுத்துக் கொண்டிருந்தது.அவர்கள் அழகியல் என்று திருப்திப்பட்டுக் கொண்டதெல்லாம் இன்னொருபக்கம் அதி வன்முறைகொண்டதாக காட்சியளித்துக் கொண்டிருந்தது. முடியுமானவரை அதனை மறைக்கப் பார்த்தாலும் அது அவர்களின் உயிரோடு கலந்திருந்ததால் சில இடங்களில் பளிச்சென்றே தெரிந்தது. அவர்களின் கோயில் வாசல்களில்,வீட்டுமுகப்புகளில் என தங்களின் தினப்புழக்கமான தளங்களை எப்போதும் இரத்தக் கறை படிந்த ஆயுதங்களாலே நிரவி வைத்தனர். இவ்வாறான அச்சுறுத்தலே என்னை திரும்பத் திரும்ப களைப்படைய வைத்துக் கொண்டிருந்தது.இந்தக் களைப்பில் தூக்கம் மறுத்தலைகின்றது மனம். இர்ஃபா மூசி மூசித் தூங்கிக் கொண்டிருந்தாள். அவள் தனக்கான பிரச்சனைப்பாடுகளில் தன்னை அதிகம் களைப்படைய வைப்பதில்லை. மிகவும் தெளிவான முடிவுகள் எடுப்பவள் போல் மிகவும் அமைதியாகவே இருப்பாள். ஆனால் அவை எப்போதும் பலவீனமானதாகவும் அவளின் இயலாமையினின்று வெளிப்படுவதாகவும் எல்லாவற்றையும் இழந்த பின்னால் இருக்கும் கையறு நிலையினையுடையதாகவும் இருக்கும். என்மனதின் களைப்பில் அவளின் உள்மன பிரச்சனைகளின் தாக்கமே கூடுதலாகத் தெரிகிறது. இவள் எதற்காய் என்னோடு கூடினாள்? ஏன் இவளை மாத்திரம் மூடுகிறது என் மனம்.ஏன் இவளுக்கான தருணங்களை என் மனவெளியில் பரவ விட்டு களைத்தொடுங்குகிறது என் உடல்? எனது உடலின் இருப்பை அல்லது தேவையை ஒரு கற்பனை வெளியில் வைத்து உணர முடியுமெனில் இவள் யார்? இவளது உடலும் எனது உடலும் ஒரு மொழியின் இலாவக்கட்டில் இறுக்கப்பட்டனவா? மொழியற்ற உடலாகத் தானே எனது உடலை அவளிடம் கொடுத்தேன்.எவ்வாறு தனக்குள் இருந்த மொழியை எனக்குள் பிரதி வார்த்தாள். மொழிகளின் சித்து விளையாட்டில் சிதைக்கப்பட்ட உடல்களை எமக்குப் பக்கவாட்டில் அடுக்கி வைத்துக் கொண்டே எமது உடல்களை வெற்று உடல்களாக்கி எம்மை இன்னொரு காலத்திற்குள் தள்ளினோம்.அப்பொழுது அவளிடம் நிறையவே மொழிகளும் நிறையவே சிதைவுகளும் இருப்பதை உணர்ந்தேன். அவளை எனக்கருகில் இழுத்து இறுக்கி முத்தமிட்டு அணைத்தபடி உறங்கிப்போனேன்.

இர்ஃபாவிற்கு பாரீசில் வதிவிட உரிமை மறுக்கப்பட்டு விட்டது. ரஸ்யாவிலிருந்து படித்துவிட்டு எங்கே போவதென்று தெரியாமல் இருந்தவளை பாரீசிற்கு வரவழைத்ததற்கான முழுப் பொறுப்பும் என்னுடையது. ஆனால் அவள் முஸ்லிம்கள் யாழ்நகரை விட்டு வெளியேற்றப் படுமுன்னமே ரஸ்யாவிற்கு வந்து விட்டாள் என்றும் அவள் தனிப்பட்ட முறையில் பாதிக்கப்படவில்லை என்றும், தொன்னூறாம் ஆண்டிற்குப் பின்னர் வருபவர்கள் அனேகமாக அரசியல் அகதிகள் கிடையாது என்பது போலவும் ஒரு விளக்கம் எழுதி பிரஞ்சு அகதி அலுவலகம் கடிதம் அனுப்பியிருந்தது. இர்ஃபாவிற்கு கடிதத்தை வாசித்துக் காட்டிக் கொண்டிருந்தேன். இர்ஃபாவின் உடல் சோர்வடைந்திருந்தது. இப்போது தான் அவளுக்கு பயம் வந்திருக்க வேண்டும். இது வழமையான கடிதம்தான் இப்படித்தான் எல்லோருக்கும் அனுப்புவார்கள் என்றேன். கடிதத்தைத் தொடர்ந்து வாசிக்க தனிப்பட்ட முறையில் அவள் அகதியில்லை என்பதும் அரசியல் சூழலில் தனிப்பட்ட முறையில் அவள் பாதிக்கப்படவில்லையென்றும், அதனால் தன்னுடைய நாட்டிற்கே அவள் திரும்பிப் போகவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டிருந்தது. இர்பாவின் முகத்தில் பாவம் விழ கிட்ட வந்து எனது நாடு எது என்றாள். எனக்கு அப்போதுதான் எனது நெஞ்சுக் குழி இருக்குமிடம் தெரிந்தது. வாயைக் கீழ் இழுத்து தெரியாது என்று சைகை செய்தேன். இப்போ நானும் அவளும் அவளுக்கான தேசத்தைத் தேடிப் புறப்பட்டோம். அப்போதுதான் என்னிடம் இருந்த குறைகளை-அவளின் வாழ்வியல் பற்றிய ஒரு சின்ன அறிவும் இல்லாததை- அவள் கண்டுகொண்டாள்.எனக்கு தங்கள் வாழ்வு பற்றிய எந்த அறிவும் இல்லையென்றும், அதுபற்றி அறிந்து கொள்ள நான் இவ்வளவு நாளும் முயற்சிக்கவில்லை என்றும், தங்களை எப்போதும் அந்நியராகப் பார்த்த சிந்தனையே அப்படி இருந்ததற்கான காரணம் என்றும், என்மீது ஒட்டுமொத்த குற்றத்தையும் சுமத்தினாள்.

எனக்கு இடப்பட்ட எல்லாம் கட்டளைகள். அவை ஒவ்வொன்றும் என்னை எல்லா அநியாயங்களில் இருந்தெல்லாம் காப்பாற்றப்படுவதற்காகவே இடப்படுபவையாக சொல்லப்பட்டன. அநியாயங்கள் என்பவை எல்லாம் எப்போதும் எனக்கு மட்டுமான வளர்ச்சிக்கும்-எனக்கு மட்டுமான பாதுகாப்பிற்கும்-எனக்கு மட்டுமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாழ்வுக்கும் என அவை கருதப்பட்டதால் நான் எப்போதும் ஒரு வித பூரிப்புடனும், ஒரு தன் அகங்காரத்துடனும் பயணித்தேன். என்னையே எல்லோரும் வரவேற்றனர். நான் எல்லோரிடத்திலும் கவனமாகவும், கைக் குழந்தை போலவும் தவழ்ந்து வரலானேன். என்னைப் பாதுகாப்பதன் மூலம், என்னைப் பற்றிப் பேசுவதன் மூலமும் ஒவ்வொருவரும் புனித மகான்களாயினர். யார் புனிதமகான்கள் என்பதற்கு என்னை அதிகம் பராமரிக்கும் அளவீடுகளிலேயே எல்லோரும் கணக்கிட்டுக் கொண்டார்கள். அளவீடுகள் எப்போதும் சமனாக இல்லாத ஒரு கணத்தில் சண்டைகள் மூண்டன. ஆனாலும் என்னை மிகவும் பாதுகாப்பாகவே அந்தக் கணங்களில் வைத்துக்கொண்டார்கள். அப்போதும் என்னைப் பேசவிடாது எனக்காக தாங்களே பேசியும் தாங்களே சண்டையிட்டும் என்னை சுரணை இல்லாதவனாக்கிவிட்டனர். எப்போதும் எனக்கு காவல் இருந்து என் கண்களை மூடினர். அந்தச் சில கணங்களின் பின் கண் திறந்து பார்த்தால் என்னைச் சுற்றிக் கொலைகளும், அழிவுகளும், இடப் பறிப்புகளும் நடத்தி என்னை இலகுவாக பாசிசமாக்கி தாங்கள் புனிதமாயினர். இப்போதும் என்னை மீட்கவே அவர்கள் வாழ்கிறார்கள் என்கின்றனர். ஆனால் நானோ இனி ஒரு போதும் நாடு திரும்புவதாகவே இல்லை என்பதனை அவளிடம் சொன்னேன். இவ்வளவு நாட்களும் நான் இங்கு தனிமைப்பட்டு வாழ்ந்தேன்தானே. இப்போது என் கூட நீயும் இருக்கிறாய். நீ என்னிடம் வந்தது தற்செயலானது என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். நீ என்னைவிட்டு விரைவில் போய்விடுவாய் என்பதும் அவர்கள் நம்பிக்கை. நீ என்கூட இருப்பதை எப்படி அவர்களால் ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது என்பதற்கு எந்தக் காரணங்களையும் நான் தேட முயற்சிக்கவில்லை. அதற்கு அவர்கள் பலவித காரணங்களைக் கற்று வைத்திருக்கிறார்கள். ஆனால் இஃபாவிற்கு நான் போய்விடுவேனோ என்ற பயம் தினமும் வரும் என்பதைவிட என்னைவிட்டு போய்விடக் கூடாது என்பதில் உறுதியாய் இருக்கிறாள். அவளிற்கு அந்தப்பயம் இருக்கிறது வழமை என்பதை நான் புரிந்து கொண்டேன். அவளுக்கு வழமையான நிறைய விதமான பயங்கள் இருக்கிறது. அவளுக்கு சுற்றியுள்ள எல்லாவற்றிலும் ஒருவத பயம் இருந்துகொண்டே இருக்கிறது. அவற்றின் மீது பயம் இருக்க வேண்டும் என்பதே அவளின் நம்பிக்கை. எல்லாவற்றிற்கும் கீழ்படிந்து-விலகி ஒரு வித நயனத்துடனே அவள் வாழப் பழகிவிட்டிருந்தாள்- பழக்கிவிட்டிருந்தார்கள். அந்த நயனம் இப்போது எனக்கு அந்நியப்பட்டுப் போய் நின்று கொண்டு ஏதோ ஒரு மயான அமைதியை நிலைநாட்டிக் கொண்டிருந்தது அவளின் அசைவுகள்- பாசைகள் எல்லாமே என்னிடம் இருந்து அந்நியப்பட்டன. அவளுக்கும் எனக்கும் இடைவெளி அதிகரித்திருப்பதாக உணர்ந்தேன். அந்த இடைவெளிக்காகவே வெளியில் பெருங்கூட்டம் காத்திருக்கிறது. ஆனாலும் நான் அவளை நெருங்கி அவளது மொழியை நானும், எனது மொழியை அவளுமாக பற்றி ஒரு மொழிக் கலவை செய்தோம். அப்போது என் மொழி பற்றியும் எனது இருத்தல் பற்றியும் ஓரளவுக்கு அதிகமாகவே ஏற்கனவே தெரிந்து வந்திருந்தாள். அது அவளுக்கு இலகுவில் புரிந்து கொள்ளும் தன்மையை ஏற்படுத்திக் கொடுத்தது. ஆனால் அவளிடம் நான் திரும்பவும் திரும்பவும் குற்றவுணர்வுக்குள்ளாகி-ஒரு வித சங்கடத்துடன் என்னை மன்னித்து விடும்படி மண்டியிட்டேன். அப்போதுதான் என்னை எப்படி ஒரு வன்முறையாளனாக ஆக்கி னார்கள் எனது மக்கள் என்பதை விளக்கி அதனை ஒவ்வொன்றாக நான் இஃபாவிடம் கூறிக் கொண்டிருந்தேன்.



வீட்டில் எங்களைப் பயமுறுத்தும் போதெல்லாம் எங்கள் ஊரில் ஆடு வாங்க வரும் காக்காவிடம் பிடிச்சுக் கொடுத்து விடுவேன் என்று மிரட்டி காக்காவை பயங்கரமான ஒரு விலங்காகவே காட்டி வளர்த்தார்கள். நிலாச்சோறு ஊட்டிவளர்த்த கதை மாறி, காக்காவை காட்டி பயமூட்டி சோறு ஊட்டப்பட்டது. பிசாசு என்றே கருதிவிடும் அளவுக்கு கொண்டுபோய் விட்டார்கள் அவர்கள். அப்போதுதான் எனக்கு முதலில் காக்கா எதிரியானார். பிறகு நாங்கள் வளர்த்த ஆடுகளையே காசுக்காக அப்பா காக்காவிற்கு விற்று விட்டு.காக்கா கொண்டு போட்டான் என்று கதைவிட்டபோது ,காக்கா எங்கள் மனதிலிருந்து அகலமுடியாத பகையானார். எடுத்ததற்கெல்லாம் வெங்காயம் தெரியாதவனுக்கு சோனகன் என்னத்தையோ(என்னத்தையோ என்பது ஆண்குறியின் நுனிப் பகுதியை குறிக்கின்றது) காட்டினனாம் என்று சோனகன் எப்போதும் ஏமாற்றுப் பேர்வழிகள் என்பது போல் இருக்கின்ற கதையாடலும் முஸ்லீம்கள் பற்றிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அச்சத்தை சிறுவர்களிடம் தோற்றுவிக்கின்றது. முஸ்லீம்கள் தொப்பி பிரட்டிகள் என்ற கதையாடலுக்கும் இதற்கும் அதிக ஒற்றுமை இருப்பதைக் காணமுடியும்.

சமூகத்தில் இருக்கின்ற அதீத பாலியல் கற்பனைக் கதைகளையெல்லாம் முஸ்லீம்களை பாத்திரமாக வைத்தே கட்டும் போது எப்போதும் பாலியல் கொடுமைக்காரர்களாக காட்டி அச்சமுற வைத்தார்கள். இப்படியே தொடர்ந்து முஸ்லீம்கள் மீதான வெறுப்பை தமிழ் சமூகம் முளையிலேயே வளர்க்கிறது என்ற விபரங்களையெல்லாம் இர்.'.பாவிற்கு பலவித வடிவங்களில் புரியவைத்து இதில் என்னை முற்று முழுதாகக் குற்றம் சுமத்த உன்னால் எப்படி முடிகிறது? என்று கேட்டு, என்னைக் குற்றமற்றவனாகக் காட்டிவிட எத்தனித்தேன். அவளோ அது பற்றிய எந்தச் சலனமும் இல்லாது கண்ணயர்ந்து கொண்டிருந்தாள். நேரம் இரவு நடுச்சாமத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. தூங்கலாம் என்றாள். காலையில் அவளில் அகதிக்கான மீள் விண்ணப்பம் செய்ய வேண்டி பொலிசுக்கு போகவேண்டி இருந்தது. எப்படியும் அவள் இங்குதான் இருப்பாள். அவளை எங்கும் போக விடமாட்டேன் என்கிறது மனம்.

ஆனால் என்னைச் சுற்றியுள்ளவர்களெல்லாம் இது என் வயசுக் கோளாறு என்றும் விரைவில் அவள் என்னை விட்டுவிட்டு ஓடிவிடுவாள் என்றும் கொஞ்சநாள் துடிப்படங்க அண்ணனுக்கு விடயம் புரியும் என்றவாறாக எல்லோரும் குசுகுசுத்துக் கொண்டார்கள். அவர்களது பேச்சுக்களில் இருந்து என் காதில் விழுந்தவை எல்லாவற்றையும் நான் பிரதி பண்ணிக் கொண்டிருந்தேன். இர்.'.பாவின் பாத்திரம் நின்ற இடத்தில் மட்டும் ஒளி பிரகாசமாக மையப்படுத்திக் கொண்டிருந்தது. எனது பாத்திரம் கரையின் இருண்ட பகுதியில் சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்தது. அது தனது கடைசிப் பிரதியின் வசனத்தை உரக்கப் படித்துக் கொண்டிருந்தது.

உனது வாழ்தலையும் நேரத்தையும் உனது வாழ்தலின் பகுதியையும் உனது இனிமையான காலத்தையும் பறித்தெடுத்தவர்கள் இதோ முன்னாடி இருக்கிறார்கள். உன்னையும் என்னையும் அரங்கத்தில் வைத்து ரசித்துக் கொண்டு அம்மணக் குண்டிகளாக முன்னால் இருக்கும் இவர்களே உண்மையான பாசிஸ்டுகள். உன்னைக் கலைத்த போது மௌனமாய் இருந்து எல்லாவற்றையும் இரகசியமாய் ஆமோதித்தவர்கள் இவர்களே. உன்னைப்பற்றிய தவறான இட்டுக்கட்டலை உருவாக்கி உனது உருக்குலைவை மெல்ல மெல்ல எனக்கூடாக வளர்த்து இன்று பேரழிவின் கடைசி நிமிடத்திற்கு கொண்டு வந்து விட்டிருக்கும் இந்த கூட்டத்திடம் இருந்து இப்போது நாம் தப்பியாக வேண்டும். இவர்கள் தமக்கு சாதகமாகவே மட்டும் சிந்தித்துப் பழகியவர்கள். தங்களுக்கு நிகரான எவருடைய இருத்தலையும் ஏற்க முடியாதவர்கள். தாங்களே எல்லோரிலும் விட புனிதமானவர்கள், முதன்மையானவர்கள் என்ற பெருங்கதையாடலுடன் தம்மை நிறுத்துபவர்கள். அதற்காகவே மற்றவர்கள் மீதான கொச்சைப் படுத்தும் கட்டுக் கதைகளை உருவாக்கி தம்மை இனம் காட்டுபவர்கள். இவர்களிடம் எமது வாழ்வு பற்றியஒரு நிமிட அர்த்தத்தையும் தேட முடியாது. நீ வாழ்ந்ததாக சொன்ன, இப்போது நினைவில் கூட நினைத்துப் பார்க்க முடியாத தேசம் இதோ அவர்களின் கைகளில் கிடக்கிறது. பார் அதிலிருந்து இரத்தமே தொடர்ந்தும் கசிகிறது. அது உனது குருதி. உன்னை பிடித்து இழுத்துப் போன போது, உன்னிலிருந்து ஒழுகிய குருதி அது. பார் உன் குருதியில் நனைந்து குழையக் குழைய அவர்களின் கைகளில் ஏந்தி வைத்திருக்கிறார்கள். உனது தேசம் நீ நினைத்திருப்பது போல் இப்போது இல்லை உனது இரத்தம் கசியும் தேசம் எனக்கு வேண்டாம். நீ என்ன சொல்கிறாய்?

உன்னிலிருந்து என்னை விலக்கி என்னை பாசிஸ்டாக வளர்த்தார்கள் இவர்களே. இப்போது இவர்களிடமிருந்து நாம் விலகி ஓடவேண்டும். உன்னிடம் இருந்த நாட்டைப் பறித்தவர்களும் உன்னை நாட்டிற்கு திரும்பிப் போ என்று சொல்பவர்களும் இவர்களே. இவர்களிடமிருந்து, எம்மை அப்புறப்படுத்துவதே எமது முதல் வேலை. எமக்கான காலங்களையும் வெளியையும் நாமே நிர்ணயிப்போம் என்று பெருக்கக் கத்தினேன். இர்.'.பாவின் பாத்திரம் இருந்த இடத்திற்கு சபையில் இருந்தோர் எல்லோரும் ஆவேசத்துடன் ஓடிப்போய் அவளை இழுத்து வந்து கீழே தள்ளி விட்டு பலத்த வசைமொழிகளோடு அவளின் முக்காட்டை கிழித்து அவளை நிர்வாணமாக்கினர். நானோ அரங்கத்தின் இறுதி வரிசையில் இருந்த கதிரையில் நடுங்கிப்போய் ஆனாலும் நாடகத்தின் இறுதிக் காட்சி நல்லபடி முடியும் நிலையை பார்த்துக் கொண்டிருந்தேன். பாசிஸ்டுகள் பாசிஸ்டுகளாகவே அரங்கத்தை விட்டு வெளியேறினார்கள். அவர்கள் தமது தேசத்தை எப்படி பயமுறுத்தலுக்கும் வன்முறைக்கும் உள்ளடக்கி உருவாக்கினார்களோ, அப்படியே தமது மொழியையும் மாற்றியமைத்தார்கள். என்மொழி என்னிலிருந்து மெதுவாகக் கீழிறங்கியது.
நாடகம் பார்வையாளர்கள் இல்லாது வெற்று அரங்கத்தில் போடப்பட்டதாகவே தோன்றிற்று.

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Un poème de K.Kalamogan

Restera-t-il encore
au moins quelques sourates
dans mon ciel?

mon ciel
mon pays
mes sourates
et mes respiration chaque matin

au pays sans eau
je n'ai jamais rêvé de la rivière
devant la petite mosquée de mon village
j'ai perdu mes soifs
et je n'ai respiré
que de l'eau

ciel c'est toi qui a de grands yeux
je te demande à toi

où est ma mosquée,

Paris 04/03/2000

# கலாமோகனின் ஒரு கவிதை

தமிழில்: விஜி

எனது வானத்தில்
இன்னும் சில வாங்கோசைகளாவது
எஞ்சியிருக்குமா?

எனது வானம்
எனது தேசம்
எனது வாங்கோசைகள் கூடவே
ஒவ்வொரு காலையினதும் எனது சுவாசிப்பு

தண்ணீரற்ற தேசத்தினுள்
நதியை நான் ஒரு போதும் கனவு கண்டதேயில்லை
எனது கிராமத்தின்
அந்த சிறிய பள்ளிவாசலிற்கு முன்னே
நான் எனது தாகங்களைத் தொலைத்துக் கொண்டேன்
நான் தண்ணீரை மட்டுமே சுவாசித்தேன்

பெரிய விழிகளைக் கொண்ட வானமே
உன்னைத்தான் கேட்கிறேன்

எங்கே எனது பள்ளிவாசல்?

பாரிஸ் 04/03/2000



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எங்கே போறாய்!

ஜெசீ எஸ். முகமது

முந்தி முந்தி போறவளே
முன்னால் போறவளே
பின்னால எனை அழைத்து
சொல்லாமல் போறதெங்கே

சாரப்பாம்பு கூந்தல்காரி
சளயாத உடம்புக் காரி
பொட்டகத்த தூக்கிக் கொண்டு
பேசாமல் போறதெங்கே

விட்டத்தை தொட்டவளே
வீராப்பு நடையழகே
பெட்டி மேலே கையப்போட்டு
ஒட்டகமாய் போறதெங்கே

சட்டி பான நிறத்தவளே
சன்னையோர, கிழிசல்காரி
சண்டையில்லா இடமேது
சளைக்காமல் நடபுள்ள

மண்ணைக் காக்க வந்தவனே
உன்னை தீண்ட வந்த போது
என்னையும் கேட்காம
எங்க புள்ள போகப் போறாய்

வந்த வழி தெரியுதெடி
போகும் பாதை புரியுதெடி
போகும் இடம் எங்கேயடி
பொல்லாத கோபக்காரி.

பொறுத்துக் கொஞ்சம் போ புள்ள
பருத்த உடம்பு உந்தனது
புள்ளத்தாச்சி வயித்தோட
பூப் போல நடபுள்ள

பொல்லாத புரட்சிக்காரன்
பொசுக்கெண்டு போகச் சொன்னா
இல்லாத ஏழைசனம்
எங்கே போய் சேருவதாம்?





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

VOL: III - No:11
Aug - 2001

## அவசியம் கருதிய பின்னிணைப்புகள்:

2- கவனி
16- போதையின்றியே கழரும் போர்வைகள்
-விஜி
19- குப்புற கவிண்டால் தன்முகத்திலே
-தேவா
அன்புடன் லக்ஷ்மிக்கு
-உமா
23- பாரிஸ் அழைப்பு
24- தீர்மானம்
26- சனதர்மபோதினி- வெளியீடு
-கற்சுறா
28- எக்ஸில் வெளியீடுகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எக்ஸில் இதழ் பொறுப்பாளர்களுக்கு

எக்ஸில் 10 ஆவது இதழ் கண்டேன் நதியின் மரணம் என்ற விவரணப் படம் பற்றிய முழு விபரத்தையும் அது குறித்து உணர்ச்சிப் பூர்வமாக நீங்கள் பேசிய குறிப்பையும் வாசித்தேன்.

தாமிரபரணி படுகொலைகள் தாழ்த் தப்பட்ட ஒடுக்கப்பட்ட தலித் மக்களின் சாவுகள் நதியின் மரணமாக மட்டுமே காஞ்சனை சீனிவாசனால் பார்க்கப்பட்ட விபரம் தங்களுக்குப் புரிந்ததா என்று தெரியவில்லை.

தாமிரபரணி படுகொலைகள் முழுக்க முழுக்க காவல் துறையினரால் நடத்தப்பட்ட படுகொலைகள் என்பதில் யாருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. ஆனால் அதனை ஆவணப் படுத்திய காஞ்சனை. சீனிவாசனின் அரசியல் பற்றிய தகவல்களைப் பதிவு செய்வதே இக்கடிதத்தின் நோக்கம்

சம்பவம் முடிந்த பின்பு அதனை ஒரு விவரணப்படமாக எடுத்து அனைத்துத் தரப்பின ரிடமும் எடுத்துச் செல்ல வேண்டும் என்ற எண்ணத்தில்தான் செய்தி நிருபர்கள் ஊர்வலத் தைப் பதிவு செய்த செய்தியாளர்களிடமிருந்து டேப்பை வாங்கி தொகுக்கப்பட்டது. குறிப்பாக அன்றைய ரபி பெர்னார்டின் நிலா டிவி செய்தியாளரிடமிருந்து வீடியோ கேசட்டை வாங்கி சம்பவம் பற்றிய தகவல்கள் தொகுக்கப் பட்டன.

அத்துடன் தலித் மக்கள் படுகொலைச் சம்பவத்தை அனைத்துத் தரப்பு மக்கள் மத்தியில் கொண்டு செல்ல வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களை ஒன்றிணைத்து அவர்களுக்குரிய நியாயம் கிடைக்கச் செய்வதற்கு பல தள இளைஞர்கள் முக்கியமாக பரதன் என்பவர் செயல்பட்டார். அவர் எடுத்துக் கொடுத்த புகைப்படங்கள் மற்றும் பலர் எடுத்த புகைப் படங்கள் காட்சிகள் இந்த விவரணப்படம் கூட்டு முயற்சியாக மக்களிடம் இப்பிரச்சினையைக் கொண்டு செல்ல உதவும் என்ற நோக்கில் தலித் மக்கள் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் தலித் மக்களிடமே பல உதவிகள் பெற்று (மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோல்போடக் கூட தலித் மக்களிடம் காசு வாங்கிய காஞ்சனை சீனிவாசன்) உருவான படம் இது.

ஆனால் காஞ்சனை சீனிவாசன் நதியின் மரணம் குறித்து குமுதம் இதழில் கொடுத்த பேட்டியில் இதனை மும்பை விவரண பட விழாவுக்கு அனுப்பவேண்டும் என்ற எண்ணத்தில் விரைந்து தயாரித்ததாகக் குறிப்பிட்டுள்ளதை இங்கு நினைவுப் படுத்திப் பார்க்கும் பொழுது அவரின் விவரணப் படம் குறித்த நோக்கம் புரியும்.

அங்குள்ள தலித் மக்களிடம் காசு வாங்கி தலித் இளைஞர்களின் செயற்பாட்டை பயன்படுத்தி உருவாக்கப்பட்ட விவரணப் படத்தை திருநெல்வேலியில் திரையிடாமல் அறிவு ஜீவிகள் மத்தியில் சென்னையில் திரையிட ஓடியதன் நோக்கம் கவனிக்கப்பட வேண்டியது.

ஆதாரமாக இருக்கும் என்று நம்பிய இப்படம் வியாபாரமாக்கப்பட்டதும். காசு கொடுத்த தலித் மக்களே இவ்வீடியோ படப் பிரதியைப் பெற பிரதிக்கு 300 ரூபாய் கொடுத்து வாங்க நேரிட்ட நிலை அவலமானது.

கடந்த ஆண்டு கன்னியாகுமரியில் நடைபெற்ற வானவில் கருத்தரங்கில் இத்திரைப்படம் திரையிடப்பட்டது. அன்று இவ்விவரணப் படம் நோக்கம் குறித்து தலித் இளைஞர் எழுப்பிய நியாயமான கேள்விக்குப் பதிலாக சீனிவாசன் சொன்ன தகவல் எனக்கு நதிக்கு ஏற்பட்ட களங்கம்தான் பாதிப்பை ஏற்படுத்தியது. நான் புரிந்து கொண்டதை என்னுடைய படத்தில் பதிவு செய்துள்ளேன் எனக் குறிப்பிட்டார். இவரைப் பொறுத்த வரையில் புனித நதியான தாமிரபரணி தலித் மக்களின் இறந்த உடல்களை சுமந்ததால் தனது புனிதத் தன்மையை இழந்து விட்டதுதான் நதியின் மரணமாகப் பட்டிருக்கின்றது.

தலித்தியம் குறித்து தலித் அல்லாத மக்கள் பேசுவது அவர்களுக்கு புகழைத் தரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதுவே இச்சம்பவத்திலும் நடை பெற்றுள்ளது. இப்படுகொலைகள் தொடர்ந்து இம்மக்களுக்காக இன்று தொடர்ந்து போராடிக் கொண்டிருக்கும் பரதன் மற்ற தலித் இளைஞர்களின் செயற் பாடுகள் மறைக்கப்பட்டு விவரணப் படத்திற்காக அதுவும் தலித் மக்கள் மீது உண்மையில் ஈடுபாடில்லாத ஒரு நபர் பட விழாவுக்காக மற்ற நபர்களின் உழைப்பில் உருவான ஒரு கூட்டு முயற்சியை தன்னுடைய படமாக மாற்றிக் கொண்டு இச்சம்பவத்தின் மூலம் சம்பாதித்துக் கொண்டதுதான் மிச்சம் தொடர்ந்து தலித் முரசு போன்ற பத்திரிக்கைகளில் ஒரு தலித் இளைஞனின் வேலை வாய்ப்பையும் பறித்துக் கொண்டு சம்பாதித்து வருவது. இவ்விவரணப் படம் மூலம் கிடைத்த புகழைக்கொண்டு தன்னார்வத் தொண்டு நிறுவனம் ஆரம்பிக்க பல லட்சங்களை அமைப்புகளிடம் இருந்து பெற்றுக்கொண்டு தன்னை வளப்படுத்திக் கொண்டதுமே நடந்துள்ளது.

நீதிபதி மோகனின் அறிக்கையை எதிர்த்தும் படுகொலைகளுக்கான நிவாரணம் குறித்தும் சட்ட ரீதியாக போராடி வரும் தலித்திய மக்களுக்குக் கிடைத்ததோ ஏமாற்றமே.

சேரன்
பாளையங்கோட்டை.

அன்புள்ள ஆசிரியருக்கு

26ஆவது இலக்கிய சந்திப்பு பற்றிய கட்டுரையுடன் வெளிவந்திருக்கும் எக்ஸில் இதழ் வடிவம் மற்றும் விசயகனம் உள்ளதாக இருக்கிறது. எக்ஸில் உடைந்த போது இருந்த நிலையை ஒப்பும் போது கிராபிக் டிசைனில் அவர்கள் காட்டும் ஆர்வத்தையும், பல பொருளாதார நெருக்கடிகளுக்கிடையிலும் நல்ல ஒரு பத்திரிகையைக் கொண்டு வரவேண்டுமென்ற துடிப்பையும் காண முடிகிறது. சாருநிவேதிதாவின் கோணல் பக்கங்கள் சுவாரசியமாக உள்ளன. தமிழ் இனி 2000 மகாநாட்டிற்கு வந்திருந்த அவரைச் சந்திக்க முடியாதது வருத்தமே!

எக்ஸில் «உடலரசியல்» பற்றி கட்டுரையை வெளியிட்டுக் கொண்டே இன்னொரு பக்கத்தில் ஆண்,பெண் உடலுறுப்புகளைப் பிரதானப்படுத்தி அப்படிப் பேசுவது முற்போக்கு என்று காட்டுவது ஏனென்று புரியவில்லை.

26ஆவது இலக்கிய சந்திப்பு பற்றி எழுதும் போது நான் அழையா விருந்தாளி போலும் இலக்கிய சந்திப்பின் சுதந்திரத்தை தவறாகப் பயன்படுத்துபவன் போலும், இலக்கிய சந்திப்பில் ஆழ்வார்களை பற்றிப் பேசுவதேன்? என்றும் கேட்டிருக்கிறார்கள். இலக்கிய சந்திப்புகளில், நிகழ்ச்சியில் இல்லாத துண்டு பிரசுர உத்தி மற்றும் கவனம் ஈர்க்கும் கலகங்களைச் செய்யும் அளவிற்கு நான் இன்னும் அவர்களால் உள்வாங்கப் படாமலே தான் இருக்கிறேன். அந்த சுதந்திரம் இல்லாததால் தான் நான் இது வரை அழைக்கப்பட்டதின் பெயரிலேயே கலந்து கொண்டு அவர்கள் விரும்பும் தலைப்புகளில் பேசிவருகிறேன். அமைப்புக் குழுவில் திரு அழகலிங்கம் «ஆழ்வார்களைப்» பற்றிப் பேசச் சொன்னார். அவர் ஈழத்தில் அதிகம் அறியப்படாத வைணவத்தைப் பற்றி பேசுவது பயனளிக்கும் என்றார். பொதுவாக பேசியிருக்கலாம் இருந்தாலும், வைணவத்தின் கலகக்குரலைப் பற்றிப் பேசினேன். சாதி எதிர்ப்பு என்பது ஆழ்வார்களின் ஒரு தீர்மானமான கலகக்குரல். விளிம்புநிலை மாந்தர்களைப் பற்றி இந்து சமூகம் நினைக்காத காலகட்டத்தில் அவர்களைப் பற்றி பேசிய «சூத்திரனாகக்» கருதப்பட்ட மாறன் (நம்மாழ்வார்) அவர்களின் பாடல்களைக் கோயில் ஒழுங்கில் கொண்டு வருவது ஒரு இமாலய முயற்சியாக இருந்திருக்கிறது என்பது தான் நான் பேசிய 'மாறன், மனமும் மறந்து போன புரட்சியும்' கட்டுரை.

வைணவத்தின் கலகக்குரல் பற்றி அ.மார்க்ஸ் நடத்திய ஒரு கருத்தரங்கில் கட்டுரை வாசிக்கப்பட்டு அது தலித் ஆதரவான





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மதம் என்று கண்டு கொள்ளப்பட்டுள்ளது. இந்திரா பார்த்தசாரதி எழுதிய
«இராமானுசர் நாடகம் இன்று» சரஸ்வதி சம்மான் பரிசு பெற்றுள்ளது. இதைத் தலித் குரல் ஓங்கி ஒலிக்கும் இலக்கிய சந்திப்பில் பேசாமல் பாரிஸ் இந்து மகாநாட்டில் பேசுமாறு சொல்கிறது எக்ஸில். நான் பாரிஸிக்கு போனது பாண்டித் தமிழர்கள் நடாத்திய «வள்ளலார் மாநாடு» வள்ளலாரும் ஒரு சமய புரட்சியாளர், சாதி எதிர்ப்பாளர். இன்று நடக்கும் நல்ல முயற்சி களுக்கு முன்னோடிகளாக இருந்தவர்களைப் பற்றிப் பேசுவது அறிந்து கொள்வது ஒரு ஊக்கம் தரக்கூடிய விஷயம். ஈழ சரித்திரத்தில் ஆழ்வார்கள் இல்லை, வள்ளலார் இல்லை, பெரியார் இல்லை. அவர்கள் இன்று வரை இம்மாதிரி விஷயங்களுக்கு தமிழகத்தை எதிர்பார்ப்பது அ.மார்க்ஸின் தலைமையில் செயல்படுவதிலிருந்து தெரிகிறது.

'டல்பெர்க் பல்கலைக்கழகப் பேராசிரியர் தாமோதரனை அழைக்குமாறு என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர் சங்க இலக்கி யத்தைப் பற்றிப் பேசுவதாக இருந்தது. நல்ல வேளை அவர் கலந்து கொள்ள வரவில்லை. இருந்தால் அவரும் வாங்கிக் கட்டிக் கொண்டிருப்பார். «இலக்கியச் சந்திப்பு» என்ற பெயர் மயக்கம் தருவதாக உள்ளது.

பெரியார் கட்டுரை பற்றிய விமர்சனத்தில் அவரது பங்களிப்பை நான் குறைத்து மதிப்பிடுவது போன்ற ஒரு தோற்றம் வருமாறு எழுதியுள்ளது எக்ஸில். பெரியார் «மாற்றிய» சமூகத்தில் பிறந்து வளர்ந்தவன் நான். அவரது பங்களிப்பை எப்படி என்னால் குறைத்து மதிப்பிட முடியும்? புனிதமாக்கப்படுதலை எதிர்க்கும் எக்ஸில் பெரியாரும் திரு உருவாக்கப்படாமல் இருப்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அவரும் கட்டுடைக்கப் படவேண்டியவரே என்ற அளவில் நான் அசோக்கின் கட்டுரையை பாராட்டினேன்.

அந்தக் கட்டுரை வாசிக்கப்பட்ட போது அதற்கு நேர ஒதுக்கீடு தரப்படவில்லை ஆயின் எனது கட்டுரை வாசிக்கப்பட்டபோது தாரளமாக ஒதுக்கப்பட்டது என்பதுபோல் காட்டுவது எக்ஸில் புகழும் இலக்கிய சந்திப்பை குறைத்து மதிப்பிடுவது போலாகும். இவை வெவ்வேறு தலைமைகள், நேரம் என்பதைப் பற்றிய கவனம் மனிதருக்கு மனிதர் வேறுபடுவது இயல்பு.

மேலும் மையமற்ற ஒரு அமைப்பு ஒரு நிகழ்வை நடத்துவதே பெரிய காரியம். அதிலும் கால, நேர நிகழ்ச்சிக் கட்டமைப்பும் இல்லாமல் ஒரு இலக்கிய சந்திப்பு நடப்பதென்பது இயலாது. இதைப்பற்றி ஜெர்மானிய ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி அமைப்பு நடத்திய பட்டறையில் நான் கலந்து கொண்டிருக்கிறேன். அமைப்பின் அதிகாரத் தன்மை பற்றி நாம் கேள்விகேட்டு கவனத்தைக் கொண்டு வர முடியுமேயன்றி, அமைப்பின்றி செயல்பட முடியாது. இது சமூகஜீவியான மனிதனின் முன் உள்ள பெரிய சவால்.

«நாங்கள் மாற்றுக் கருத்துகளுக்கும் சிறு சஞ்சிகையாளருக்குமாக காப்பாற்றி வரும் இந்த சந்திப்பில் மண்ணை அள்ளிப்போடலாமா? கடைசி தமிழினி 2000 என்று காலச்சுவடு கடை விரித்துள்ளதே அங்காவது போய் பேசலாமே? என்று ஒரு பெரும் பழியைச் சுமத்தி, இலக்கியச் சந்திப்புகளில் இனி பங்குபெற வேண்டாமென்று சூசகமாகச் சொல்லியுள்ளது எக்ஸில். இந்த அறிவுரைக்கு உண்மையில் பாராட்ட வேண்டும். கழுதை தேய்ந்து கட்டெறும்பானது போல் இத்தகைய போக்கினால் இலக்கிய சந்திப்புக்கு வரும் கூட்டம் வருடா வருடம் குறைந்து கொண்டே வருகிறது. சென்ற பேர்லின் சந்திப்பு முழுக்க முழுக்க எக்ஸில் உடைந்தது பற்றிய கைகலப்பாகவே போய்விட்டது. இவர்களுக்குள் ஒரு சுமுகத்தை உருவாக்கி கலாமோகனின் புத்தகத்தை வெளியிட நானும் மற்றவர்களும் எவ்வளவு தூரம் உதவினோம் என்பதை எக்ஸில் மறந்திருக்கலாம். அங்கு பங்கு கொண்டவர்கள் உண்மை அறிவார்கள்.

எக்ஸில் சொல்லும் «தமிழினி2000» கருத்தரங்கில் பங்கு கொண்டேன். «இணையமும் இலக்கியமும்» பற்றி சுமார் 500பேருக்கும் அதிகமாகக் கூடியிருந்த அரங்கில் பேசினேன். ஈழத்து இலக்கியங்களை எப்படி காலத்தால் அழியா வண்ணம் மின்பதிப்பாக்க முடியும் என்பது பற்றியும் இதுவரை நான் மேற்கொண்டுள்ள முயற்சிகள் பற்றியும் பேசினேன். இது உண்மையில் பல இலக்கிய சந்திப்புகளில் நான் தமிழ் இணையம் பற்றி ஒரு பிரக்ஞையைக் கொண்டு வர செய்த முயற்சிகளின் நீட்சிதான். சுகன் கொண்டு வந்த «இருள்வெளி» மலரையும் நான் மின் பதிப்பாக்க முன்மொழிந்ததை கற்சுறா மறந்திருக்கமாட்டார் என்று நம்புகிறேன். சிங்கப்பூரில் நடந்த தமிழ் இணையம் 2000 மாநாட்டில் புலம்பெயர் வாழ்வு பற்றி புகலிட இலக்கியம் கலந்துரையாடல் செய்யும் வாய்ப்பை உருவாக்கினேன். இதையெல்லாம் சொல்வதற்கு காரணம் எக்ஸில் போன்ற இதழ்களுக்கு நண்பன் யார்? பகைவன் யார்? என்பது புரியாமலே போய்விடுமோ என்ற பயத்தில்தான். ஒரு தமிழனை அவன் சாதி வைத்துப் பார்த்து எடை போடும்போது மற்றவை தெரியாமல் போய்விடுவது அதிசயமில்லை. இந்த வகையில் இவர்களுக்கும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பார்ப்பனர்களுக்குமுள்ள வேறுபாடு இன்றளவும் எனக்குப் புரியவில்லை!

கடைசியாக ஒன்று. இலக்கியச்சந்திப்பு இதுவரை பெரியவர்களின் சுய இருப்பு பற்றிய ஈழ அரசியல் பற்றியே பேசி வந்துள்ளது. இவை இரண்டிலும் நேரடியாகச் சம்பந்தப்படாத ஒரு தலைமுறை வந்துவிட்டது. அவர்கள் தாய் மொழியில் நடக்கும் முற்போக்கான இலக்கிய சந்திப்புகளில் கலந்து கொண்டு பயன்பெறத் துடிக்கிறார்கள். அவர்கள் தேவைகளை அறிவதிலோ, அவர்களை அரவணைத்துச் செல்வதிலோ இலக்கியச் சந்திப்பு கவனம் கொள்வதாகத் தெரியவில்லை. சென்ற முறை ஒரு இளைஞி என்னிடம் சொன்னாள் இப்படியே இலக்கியசந்திப்பு போய் கொண்டிருந் தால், நீங்கள் «மெண்டல்» (கிறுக்கு) என்பது மட்டுமல்லாது எங்களையும் «மெண்டல்» ஆக்கிவிடுவீர்கள் போலுள்ளது என்று இவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டும் என்பவர்களையும் விலகி ஓடுங்கள் என்று சொல்லி ஹைநூன்(High Noon) நாடகம் நடத்துவதால் யாருக்கு என்ன பயன்??

நா. கண்ணன்.
(ஜேர்மன்)

பிகு: வாசகனின் கடிதங்களில் கை வைக்காமல் வெளியிடுவதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ள தாக பிரகடனப்படுத்தியுள்ள எக்ஸில் இதையும் வெளியிடும் என்று நம்புகிறேன்.

## நந்திகளும் நந்தன்களும் - தமிழின் அறிவுஜீவிதம்.

தமிழில் அறிவுஜீவிகளாக அறியப்பட்டிருப் பவர்களில் எப்பொழுதும் ஒருவகை முரண் அமைப்பான செயல்பாடு உண்டு. ஒரு வேளை அறிவின் நேர்க்கோட்டு வளர்ச்சியில் (லீணியாரிட்டியில்) நாம் நம்பிக்கை கொண்டி ருந்தால் இதனை தலைமுறை இடை வெளியாகக் கூடக் கொள்ளலாம். எவ்வளவுதான் நான்-லீணியாரிட்டி பேசினாலும் நமது சிந்தனைப் படிவு லீணியர் தளத்தை தாண்டுவதில்லை. அதாவது இளமையில் புதுமையாகவும் புரட்சிகரமாகவும் நுழையும் அறிவுஜீவிகள் எல்லா கேள்விகளையும் உடைத்தெறிந்து பழைய சிந்தனை தளத்திற்கு ஒரு சவாலாக நுழைகிறார்கள். பின் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அவர்களாகவே ஒரு கருத்துலகை படைத்து விட்ட கற்பிதத்தில் தான் படைத்த கருத்துலக அங்கீகாரம் தேடும் போக்கில் வரும் புதிய தலைமுறையினரின் கேள்விகள் சிந்தனைகளை வழிமறிப்பவர்களாக நின்று விடுகிறார்கள். போராட்டம் மீண்டும் தொடர்கிறது. இது இப்படித்தான் காலங் காலமாக நடந்து வருகிறது. வரலாறு இவ்வாறாக ஒரு திரும்பவரல் நிகழ்வாகவே தொடர்கிறது போலும்.

இன்று நமது நிலையும் அதுதான். நமக்கு பின்நவீனத்துவத்தையும், அமைப்பியலையும், பின் அமைப்பியல் இத்யாதிகளையும் சொல்லித் தந்த நமது ஆசான்கள், அல்லது அவர்களில் யார் ஆசான்? என்கிற போட்டிகள்கூட இருக்கலாம், இன்று அறுவடைக்கு காத்திருப்பதைப் போல படுகிறது. சிலவேளை இப் போட்டியில் களையுடன் பயிரை பிடுங்கும் நிலைக்கு ஆளாகி விடுகிறார்கள். இதற்கு காரணம் சகிப்புத் தன்மையற்ற போக்கும், வரலாற்றுத் தன்னிலை என்கிற அடையாளம் தரும் பிம்ப-இருத்தல்-வினையின் வேட்கையாகவும் இருக்கலாம் என்றே நினைக்கிறேன். அல்லது தனது அறிதல் முற்றும் முழுமை அடைந்து விட்டதான எண்ணமாக கூட இருக்கலாம். இதற்கு மேல் வளர்வதற்கு எதுவும் இல்லை என்று முழுமுதலான ஒரு முடிவிற்கு வந்து விடுகிறார்கள். அதனால் அவர்களது கட்டமைப்பு அல்லது அவர்களது உரிமம் பெற்ற (patented) அறிவுத் துறை பற்றி எந்த எதிர்ப்புணர்வும் அற்ற ஒரு சூழலை விரும்பு-கிறார்கள். சின்ன முனுகல்கூட ஒரு பெரும் அதிர்வாக அவர் களுக்கு தோன்றுகிறது. இந்த அதிர்வின் ஒரு அலைதான் மதிப்பிற்குரிய பேரா. மார்க்ஸ் (இந்த மதிப்பிற்குரிய என்பது முழுமனதுடன் சொல்லப்படுவது. எனக்கு மார்க்சீயம் சமூக சிந்தனை, விமர்சனப் பார்வை எல்லாம் தோழர் மார்க்ஸ் அவர்கள்தான் கற்று, தந்தவர். அவருடன் 3-ஆண்டுகளுக்கு மேலாக ஒன்றாக இயங்கியதில் பல்வற்றை கற்றுக் கொண்டிருக்கிறேன். எடுத்த எடுப்பில் மனம் விட்டு பேசும் சுபாவம் கொண்ட எனக்கு அன்று முதல் ஏனோ அவரிடம் மட்டும் அப்படி பேசும் சூழல் உருவாகவே இல்லை. அது அவர்மீது கொண்ட மதிப்பா அல்லது எனது இயல்பான மத்தியதர வர்க்க கூச்ச சுபாவமா? தெரியவில்லை இன்றுவரை) அவர்கள் தனது இடைமறிப்பில் கூறியிருக்கும் காலக்குறி பற்றிய கருத்து.

பல கருத்துக்கள், பன் முகப்பட்ட பார்வை என்றெல்லாம் கூவித் திரியும் நம்மில் யாருமே அதனை நடைமுறைப்படுத்துவதற்கான குறைந்தபட்ச சகிப்புத் தன்மைக்கூட அற்று இருக்கிறோம். பல இடங்களின் ஒற்றுமையாதல் பன்மைத்தன்மை பல கருத்துக்களின் ஜன நாயகம் பற்றி எல்லாம் பேசும் அ. மார்க்ஸ்



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவர்களால் இப்படி ஒரு கருத்து அல்லது சந்தர்ப்பவாதம் (ரொம்பவும் என்பதை விட்டு விடலாம் அது பேச்சின் லயத்தில் வந்ததாக) என்கிற முத்திரை குத்தப் படுவது ஆச்சர்யமாக இருக்கிறது. இம் முத்திரைக்கு நாம் எல்லோருமே (மார்க்ஸ் உட்பட) ஒரு காலத்தில் வேறு ஒரு குழுவினரால் ஆளாக்கப்பட்டவர்கள் என்பது மற்றொரு கிளைக்கதை போகட்டும். மதிப்பிற்குரிய பேரா. அ. மார்க்ஸ் அவர்களின் கருத்துக்கான என் இடைமறிப்பின் இடைமறிப்பை இங்கு தருகிறேன்.

1. காலக்குறி பத்திரிக்கையைப் பொறுத்த வரையில் அதனுடைய இரட்டை முகம் ரொம்பவும் சந்தர்ப்பவாத தன்மையுடையது.
(அ.மா.:இடைமறிப்பு: பக்.91:எக்ஸில்.)

முதலில் காலக்குறியில் பங்குபெற்றவன் என்ற முறையில் காலக்குறி ஆரம்பிக்கப் பட்ட நோக்கமே பல முகத்திற்குதான். காலக்குறிக்கென்று ஒரு ஒழுங்கமைக்கப்- பட்ட மையமான அரசியல் நோக்கம் எதுவும் இல்லை அதனை சந்தர்ப்பவாதம் என்று போகிற போக்கில் விமர்சித்த போதிலும் அதில் எழுதுபவர்களுக்கு ஒரே ஒரு அடிப்படை நிபந்தனை மட்டுமே உண்டு. அது திருத்தல்வாதமோ, எதிர்புரட்சி தன்மையோ அற்ற கருத்துக்களாக இருக்க வேண்டும். பலரும் பல கருத்துக்களை பேசுவதற்கான ஒரு விரிந்த தளம் அவ்வளவுதான். அதற்குமேல் அதில் வரலாற்றை எட்டிப் பிடிக்கும் எண்ணமெல்லாம் இல்லை. பொறுப்புக் குழுவில் இருப்பவர்கள் அனைவருக்கும்கூட ஒரு ஒருமித்த அரசியல் பார்வை இருப்பதாக சொல்ல முடியாது. அப்படி இருக்க வேண்டும் என்கிற அவசியமுமில்லை தானே.

நமது அரசியல் சூழலில் மிகை தாராளவாதமும், கறார் அரசியல் வாதமுமே கருத்து சுதந்திரத்தை நீர்த்துப் போகச் செய்வதும், பறித்து அழித்தொழிப்பதுமாக இருந்து வந்திருக்கிறது. இச்சூழலில்தான் ஒரு குறைந்தபட்ச அரசியல் ஓர்மையுடன் மக்கள் நலத்தில் அக்கறை கொண்ட அடிப்படை ஜனநாயகத் தன்மை கொண்ட ஒரு விவாதக் களமாக செயல்படக்கூடிய பத்திரிக்கை ஒன்றின் அவசியத்தை உணர்ந்து வந்ததே காலக்குறி. அதற்கு எந்த ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரியர் குழுவோ அல்லது நிறுவன அமைப்போ கிடையாது. (ஆசிரியர்: அ. ஜ. கான் அதன் நிர்வாகப் பொறுப்பு மற்றும் ஒருங்கிணைப்பு வசதிக்காகத்தான்.) அதன் அடிப்படையே தீண்டத் தகாததாக எந்த கருத்தையும் கதவடைப்பு செய்வதில்லை என்பதுதான். அதே போல் ஒடுக்கப்பட்ட மக்கள் நலம் கொண்ட எந்த தத்துவத்தையும், அரசியலையும் அது நிராகரிப்பதில்லை. அது காந்தியமாகவோ, மார்க்சீயமாகவோ, பின் நவீனத்துவமாகவோ, உடல் அரசியலாகவோ இருக்கலாம். வாசகனின் தேர்வுப் பரப்பை மனதில் கொண்டதே தவிர எழுதுபவரின் ஒற்றைக் கருத்து மையத்தை சுற்றி அமைந்ததில்லை. நமது சிறுபத்திரிக்கை எல்லாம் ஒரு குறிப்பிட்ட நபரின் சிந்தனைப் போக்கை சுற்றிய ஒற்றைக் குரலின் பல பிரதிபலிப்பாகவே வருவது கண்கூடு. அதனால் தான் உள்ளே வளரும் மற்றொரு குரலால் செல் பிளவுகளாக இவ்வியக்கம் பிரிந்து கொண்டே போகிறது.

இந்த அடிப்படையில் காலக்குறிக்கு பலமுகம் உண்டு. மார்க்ஸிற்கு இரட்டை முகம் மட்டுமே தெரிந்துள்ளது. ஒரு வேளை எல்லா வற்றிலும் முன்னொரு காலத்திய (?) அமைப்பியல் ஆய்வுமுறை தேடும் புரட்சிகர(?) முரண் இணைவினால் (binary opposititon) இது இரண்டு மட்டுமே தெரிந்திருக்கலாம். (இந்த முரண் இணைவு என்பதே ஒரு universal category ஆக்கப் படுவதால் பெருங்கதையாடலுக்கான சாத்தியத்தை கொண்டிருப்பது என்பதுவேறு.) சந்தர்ப்பவாதம் போன்ற தேர்ந்-தெடுக்கப்பட்ட அரசியல் சொல்லாடலானது கறாரான அரசியல் நோக்கர்கள் அல்லது மரபு மார்க்ஸிய வாதிகளுக்கு மட்டுமே வரும் என்று எங்கேயாவது அ.மா. அவர்களே எழுதியிருக்கக் கூடும். இப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட வார்த்தைகளை கறாராக பயன்படுத்துவது என்ன பின் நவீனத்துவ மனநிலையோ? அல்லது மிதக்கும் பாகியல் தன்மைக் கொண்டு நாடோடி தன்னிலையோ? (Floating & Fluid Nomadic Subject) என்கிற கேள்வி ஒரு புறம் இருந்தாலும், காலக்குறியின் இந்த இரட்டை முக சந்தர்ப்பவாதத்திற்கு அவர் காட்டும் ஆதாரம் என்னெவென்றால் பின் நவீனத்துவத்தை காய்வதும் நாங்களும் புரட்சி தான் என்பதற்காக சேகுவேராவை படம் போட்டுக் கொள்வதும் அல்லது பேன்ஸி பனியனும் என்பதும் தான்.

காலக்குறியின் 10-இதழ்களில் ஒரே ஒரு இதழ் (அது என்ன செம்பவள இதழோ) மட்டுமே சேகுவேரா பற்றியும் மற்றொரு இதழ் சாண்டினிஸ்டு புரட்சியில் பெண்களின் பங்கு பற்றியும் வந்தது. அதனால் தமிழ்நாடு முழுவதும் சே பனியன் போட்டு அலைவதைப் போல ஒரு கேள்வி கேட்கப்படுகிறது காலக்குறியை ஆதாரம் காட்டி. (அந்த கேள்வியின் பொதுமைப் படுத்துதல் என்கிற பின் நவீனத்துவத்திற்கு எதிரான தர்க்கத்தை விட்டு விடுவோம். அதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஷோபாசக்தி சே-வின் அளப்பரிய தியாகத்தை அதிசாகசம் என்று வர்ணிப்பது என்ன அரசியலோ...? அப்படிப் பார்த்தால் உலகம் என்பது சாகசங்களின் சர்க்கஸ் கூடார மாகத்தான் காட்சியளிக்கும். வரலாறு என்பது ஒருவர் காலை ஒருவர் பிடித்து ஆடும் பார் விளையாட்டாகத்தான் இருக்கும். மற்றொன்று சே-வும் காஸ்ட்ரே-வும் ஸ்டைலாக இருக்கிறார் கள் என்கிறார் மார்க்ஸ். இந்த ஸ்டைல் என்கிற சொல்லிற்குள் இருக்கும் அழகியலின் அரசியல் புரிதலுடன்தான் இதனை மார்க்ஸ் பயன் படுத்துகிறாரா? ஏனென்றால் இருவரும் மார்க் ஸிற்குதான் ஸ்டைலாக தெரிகிறார்கள். இதை வழக்கமான புனித கவிழ்ப்பு விளையாட்டாக கூற வாய்ப்பில்லை என்று நம்புவோம்.)

செகுவேராவை பற்றி பேசுவதில் என்ன தவறு இருக்கிறது? என்பது எனக்கு இன்னும் விளங்கவில்லை. புரட்சி என்று பேசுவதே பத்தாம்பசலித்தனமா? அல்லது லியோதார்த் கூறுவது போல் அது ஒரு பெருங்கதையாடல் என்பதால் அக் கதையாடலில் நம்பிக்கை கொண்டவர்கள் அதைப் பற்றி எழுதக் கூடாதா? அப்படியே எழுதினாலும் அது ஒரு கருத்துப் போக்கு என்கிற வகையில் அதற்கான இருத்தல் வெளி என்கிற ஒன்று இருக்காதா? எல்லோருமே பெருங்கதையாடல் பற்றி மட்டுமே கதைக்க வேண்டுமா? அப்படிக் கதைக்கத் தொடங்கியவர் கள் எத்தனை பேர் குறைந்த பட்ச ஜனநாயக உணர்வுடன் மாற்றுக் கருத்தை உள் வாங்கி விமர்சித்திருக்கிறார்கள்? அல்லது தமிழ் சூழலில் என்ன சிறுகதையாடல் சூழல்களை அல்லது localized political zone-ஐ உருவாக்கி இருக்கிறார்கள்? எல்லாம் சரி தமிழ் சூழலை அல்லது இந்திய சூழலை பின் நவீனத்து நிலமையில் இயங்கிக் கொண்டிருக்கும் ஒன்றாக விளக்கக்கூடிய ஒரு ஆய்வு நூல்கூட இந்த ஆசான்களால் ஏன் முழுமையாக எழுதப் படுவதில்லை? இன்று கட்டமைக்கப்படும் தத்துவம் நாளையே மறுக்கப்பட்டு பிறிதொன்று முன் வந்துவிடுகிறதே பிரஞ்சு சமூகத்தில் என்ன செய்வது? அதனால்தான் பக்க கட்டுரைகள் நூலாக விரிவடைவதில்லை போலும்? ஒன்றே நன்று அதிலும் நான் சொல்லும் ஒன்றே நன்று என்கிற ஒற்றைப் பரிமாண குதிரைப் பட்டை பார்வையிலிருந்து முதலில் விலக வேண்டும் நாம்.

2. ஒருபக்கம் ரொம்பத் தீவிரமாக Body Politics எல்லாம் பேசுவார்கள். இன்னொரு பக்கம் வேணுகோபால் அல்லது டெர்ரி ஈகிள்டன் போன்றோரின் மட்டையடிக் கட்டுரைகளைப் போடுவார்கள். (அ.மா.:இடைமறிப்பு:பக். 91:எக்ஸில்.)

ஒரு பத்திரிக்கையில் பல கருத்துக்கள் வருவதை அந்தப் பத்திரிக்கையின் ஒருமித்த கருத்தாக பார்ப்பதில் உள்ள நியாயம் எனக்கு புரியவில்லை. வேணுகோபாலின் கருத்து அவருடைய கருத்துதான். காலக்குறியில் அதனை பின்பற்றி மட்டை எடுத்துக் கொண்டு சுற்றும்படி யாருக்கும் அறிவுறுத்தப்படவில்லை. பின் நவீனத்துவம் என்பது என்ன விமர்சனத்திற்கு அப்பாற்பட்ட சீசரின் மனைவியா? அல்லது கன்னித்திரையை இரும்பால் செய்து கொண்டிருக் கும் கற்புக்கரசியா? (பெண்ணியவாதிகள் மன்னிக்கவும்) விமர்சனங்களுக்கு எதிராக இப்படி கருத்து உதிர்ப்பதை விட அவற்றை எதிர் கொள்வதே ஆரோக்கியமானது என்பதை சொல்லும் அளவிற்கு மார்க்ஸைவிட அறிவு முதிர்ச்சி எனக்கு அதிகம் இல்லை.

ஒரு காலத்தில் மிகப்பெரிய புரட்சி யாளராகவும் தத்துவ ஆசானாகவும் தெரிந்த வேணு கோபால் மற்றும் ஈகிள்டன் இன்று நாம் பின் நவீனத்துவத்தை ஏற்றுக் கொண்டு விட்டதால் மட்டையடி விமர்சகர்களாக மாறி விடுகிறார்களா? அப்பொழுது பல கருத்துக்களுக்கான தளம் என்பது என்ன ஒரு கிரிக்கெட் மைதானமா? இதென்ன மட்டையடிக்கு எதிர் மட்டையடியா? வேணு கோபாலோ அல்லது டெர்ரி ஈகிள்டனோ சொன்ன கருத்தை மறுப்பதன் வழிதான் அதனை முறியடிக்க முடியும் என்பது ஒரு அதிசய கூற்றாகிவிடாது. அவை மறுக்கப்பட்டு விட்டனவா? இதுவரை. காலக்குறி போன்ற சந்தர்ப்ப வாதிகளுக்காக (?) இல்லா விட்டாலும் அறிவுலகில் மட்டையில்லாமல் நுழையும் புதிய வாசகர்களுக்காக-வாவது அதனை மறுப்பது கடமையல்லவா? பின் நவீனத்துவ பிரதி நிதித்துவம் கோரும் யாருக்கும் அதனை மறுப்பது ஒரு அவசியம் என்று தோணவில்லையா? அல்லது மறுக்க தயாரில்லையா?

3. நடக்கிற விவாதங்கள் எதிலும் கலந்து கொள்ளாமல் கள்ள மௌனம் சாதிப்பார்கள். (அ.மா.:இடைமறிப்பு:பக்.91:எக்ஸில்.)

இக்கருத்து தர்க்கமற்றது. காரணம். காலக்குறி-க் கென்று ஒரு ஒருமித்த அரசியல் பார்வையோ நோக்கமோ கிடையாது எனும் போது, அதில் நடத்த விரும்பும் விவாதத்தை யார் வேண்டுமானாலும் நடத்தலாம். அதற்கு காலக் குறி தடையாக இருந்ததில்லை. இப்பொழுதும் அது தனது பக்கங்களை திறந்தே வைத் துள்ளது... விவாதத்திற்கு என.

காலக்குறி ஒரு பிரதிநிதித்துவ அரசியல் பத்திரிக்கை அல்ல. இதன் பொருள் காலக்குறி அரசியலுக்கு விலகி நிற்கும் ஒன்றல்ல. மாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்னை பிரதிநிதித்-துவம் செய்து கொள்ளும் ஒரு அரசியல் நிலைப்பாடு அதற்கு இல்லை. (அதற்கு இன்றைய சிதறுண்ட அமைப்பு (fragmented structure) அல்லது பிரதிநிதித்துவ அரசியல் (politics of reperesentation) என்பதான பின்-நவீனத்துவ விளக்கம் எல்லாம் நான் சொல்ல வரவில்லை) அதனால் காலக்குறியில் எழுதுபவரின் அரசியலுக்கோ அதன் தீவிர அல்லது மிதத் தன்மைகளுக்கோ அதனை எழுதுபவரின் அரசியல் பிரதிநிதித்துவமே காரணம். இப்படிக் கூறுவதால் அதன் வெளியீட்டு பொறுப்பிலிருந்து விலகிக் கொள்வது என்பது பொருளல்ல. மாறாக, காலக்குறி ஒரு தேடல் அடிப்படையில் துவக்கப் பட்டதே. அதன் தேடலுக்கு ஏற்ப அது எல்லா கருத்துக்களையும் வெளியிடுகிறது அவ்வளவு தான்.

இப்படிக் கூறுவதால் காலக்குறி ஒரு சுயேட்சையானதோ அல்லது அதி தூய அல்லது apolitical பத்திரிக்கையோ அல்ல. அதன் மைய நோக்கமே பண்பாட்டுத் தளத்தின் அரசியல் காரணிகளுக்கு அதிகம் அழுத்தம் கொடுப்பது தான். அந்த வகையில் இன்றைய தமிழ் சூழலில் பரவலாகி வரும் புதிய அல்லது பின்-நவீனத்துவ கருத்து குறித்த கட்டுரைகளை வெளியிடுகிறது. அது சார்பானதா? எதிர்ப்பானதா? என்பது வாசகர் அளவில் அல்லது விவாத அளவில் முக்கிய மானது. அ.மா. கூறுவது போல் அதில் (அதி தீவிர என்பதையும்கூட வார்த்தை லயம் என்று விட்டு விடலாம். அப்படி எல்லாம் எந்த அதி தீவிரமும் அதில் இல்லை.) உடல் அரசியல் பற்றியும் வரும். அதனை நிராகரிக்கும் கருத்தாளர்களது கருத்தும் வரும். (இதில் ஒரு முரண்நகை என்னவென்றால் உடல் அரசியல் பற்றி அ.மா. குறிப்பிடுவது என்னை மனதில் கொண்டுதான். காரணம் அத் தலைப்பில் எனது கட்டுரை ஒன்று வெளி வருகிறது... அது காலக்குறியில் இல்லை. அ.மா.-வை இடைமறித்துக் கொண்டிருக்கும் எக்ஸிலில்தான்.) இதனை ஒரு திறந்த களமாக பார்க்க வேண்டும். அதைவிட்டு விவாதங்களில் காலக்குறி தனக்கென்று கருத்து எதுவும் சொல்வது சாத்தியமில்லை. என் கருத்து அல்லது அதில் எழுதும் பிறர் கருத்துதான் விவாதம் பற்றிய கருத்து. இடைவெட்டாக... தமிழில் விவாதங்கள் என்பது தனிநபர் தாக்குதல் என்ற தளத்தை தாண்டவில்லை என்பதற்கு பல உதாரணங்கள் உண்டு. அதை தவிர்த்த அரசியல் விவாதங்கள் என்று பொதுவாக கருதினால்.. பின் நவீனத்துவம் குறித்த காலக்குறியின் அ.மா. சுட்டும் மட்டையடி கட்டுரைகள்கூட ஒரு விவாதம்தான். விவாதம் எதுவும் விவாதம் என்று அடையாளமிட்டுக் கொண்டு வருவதில்லைதானே.

4. தலித்துகளோ, சிறுபான்மையினரோ பாதிக்கப் படும்போது குறைந்தபட்ச எதிர்ப்பைக் கூட காட்ட மாட்டார்கள்.(அ.மா.:இடைமறிப்பு: பக்.91:எக்ஸில்.)

இதில் காலக்குறி மீதான விமர்சனத்தை விட அ.மா.-வின் தன்முனைப்பே எனக்கு அதிகம் தெரிகிறது. அதிலும்கூட ஒரு பிரதிநிதித்துவ குரலே ஓங்கி ஒலிப்பதை கேட்கலாம். என்ன விதமான பாதிப்புகளுக்கு என்ன விதமான எதிர்ப்பை அவர் எதிர்பார்க்கிறார் என்றும் அதனை காலக்குறி எப்படி செய்யாமல் கள்ள மௌனம் சாதித்தது என்றும் கூறுவது காலக் குறியை சரி செய்து கொள்ள உதவும். காலக்குறி அரசியல் களசெயல்களில் ஈடுபடுவது இல்லை என்பது உண்மை. திரும்பவும் அதே பிரச்சனை தான். காலக்குறி ஆசிரியர் கான் அல்லது நான் அல்லது அதில் பங்குபெறும் பிறர் ஒரு போராட்டத்தில் கலந்து கொள்வதற்கும், இயக்கம் கட்டுகிறேன் என்று கையில் சாக்குடன் அலைந்து ஆள் பிடிப்பதற்கும் காலக்குறிக்கும் எந்த உறவும் இல்லை. காலக்குறி ஒரு இயக்கமோ, நிறுவனமோ அல்லது ஒரு அரசியல் பிரதிநிதியோ அல்ல. காலக்குறியில் பங்கு பெறும் எங்களது அரசியல் பலவீனத்தை அல்லது செயலின்மையை சுட்டிக் காட்டுவது எங்களது தனிப்பட்ட பலவீனம் அல்லது கோளாறு சம்பந்தப்பட்டது மட்டுமே.

அது ஒருபுறம் இருக்க தலித்துகள் மற்றும் சிறுபான்மையினர் பற்றி காலக்குறியில் எதுவுமே இல்லை என்பது.. காலக்குறியின் மீதான ஒரு துவேஷத்தைதான் (prejudice) காட்டுகிறது. அதில் உள்ள பெரும்பாலான கட்டுரைகள் இன்றைய இந்து பாசிசவாதம் தலித், சிறுபாண்மை யினரை பிறராக (Other) மாற்றும் ஒரு செயல் போக்கு என்பது சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. ஏன் எங்கள் அளவிற்கு தீவிரமாக (அல்லது அதி என்பதை சேர்த்துக் கொள்ளலாம்?) எழுது வதில்லை என்று கேட்டால், சாருவைப் போல அவரவர் குசுவை அவரவர்தான் விடவேண்டும் என்று தான் பதில் சொல்ல வேண்டிவரும்.

இந்து பாசிசவாதம் மட்டுமின்றி எல்லா மத பாசிச வாதத்திற்கும் எதிரானதுமான கருத்துக்கள் அதில் வரவே இல்லை என்று கூற முடியுமா? போஸ்னியா, காஷ்மீர் துவங்கி இந்திய அணுச் சோதனை உட்பட கட்டுரைகள், கருத்துக்கள் வந்துள்ளது. (மார்க்ஸிற்கு முதல் நகழச்சு இதழிலிருந்து அனுப்பப்பட்டு வருகிறது. அச்சில் வந்ததை தவிர பிற இதழ்கள் பார்க்கும் வாய்ப்பு பெரும்பாலோருக்கு கிடைத்திருக்காது.) இதே நிறப்பிரிகையைச் சேர்ந்த முன்னாள் தோழர் ரவிக்குமார் கூட காலக்குறியின் ஆரம்பகால



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நகழச்சு இதழைப் பார்த்து விட்டு எங்களை இஸ்லாமிய தூயவாதிகளைப் போல சித்தரித்து கடிதம் எழுதினார். அதற்கு காலக்குறி ஒரு பதில் எழுதி இருந்தது. அதில் காலக்குறியின் அரசியல் நிலை தெளிவு படுத்தப்பட்டுள்ளது. அதற்கு அவர்கள் சாதித்தது நல்ல மௌனம் என்றால் நாங்கள் சாதிப்பது கள்ள மௌனம்தான்.

இப்பவும்கூட காலக்குறி ஒரு ஆரோக்கியமான அரசியல் விவாதக்களமாக திறந்த மனதுடன் தனது கதவுகளை திறந்தே வைத்துள்ளது. அதில் எதைப் பற்றியும் விவாதிக்க தடையில்லை. கருத்துக்கள் எதிர் புரட்சி தன்மை அல்லது மக்கள் விரோதமானதாக இருக்கக் கூடாது என்பதுதான். இதில் இரண்டு abstract வார்த்தைகள் உள்ளன. அவை 1. எதிர் புரட்சி தன்மை 2. மக்கள் விரோதமற்றவை. இவை இரண்டிற்கும் தனிச் சிறப்பான அல்லது பொதுவான சமூக அர்த்தங்கள் தவிர வேறு எதுவும் இல்லை என்றாலும் காலக்குறி சார்பாக விளக்க வேண்டும் அல்லது அதற்கான வரையறைகளை சொல்ல வேண்டும் என்று விரும்பினால்.. அதனையும் நாங்கள் விளக்கத் தயாராகவே இருக்கிறோம்....

5. எந்த அரசியல் செயல்பாடும் இல்லாத இவர்கள்..... (அ.மா.: இடைமறிப்பு: பக்.91: எக்ஸில்.)

இக்கூற்றில் உள்ள அரசியல் செயல்பாடு என்பதை விளக்கினால் எங்களால் அதனை புரிந்து செயல்பட ஏதுவாக இருக்கும். அரசியல் செயல்பாடு என்பது என்ன? என்பதையும் அதற்கு பழையவகைப்பட்ட களச் செயல் என்கிற பதிலை மனதில் கொண்டுமே இது இங்கு வெளிப்படுவதாக தோன்றுகிறது. மார்க்ஸ் அவர்கள் களச் செயல் மட்டுமே அரசியல் செயல்பாடு மற்றவை எல்லாம் குட்டி பூர்ஷ்வா சிந்தனை என்கிற பழையவகைப் பட்ட கருத்தோட்டத்தில் இன்னும் நம்பிக்கை கொண்டிருக்க மாட்டார் என்றே நம்புகிறேன். எழுத்தும், மொழியும்கூட ஒரு material medium-தான் என்பது என்னைவிட மிக ஆழமாகவும் நுட்பமாகவும் தெரிந்தவர்தானே அவர்.

ஜமாலன்.
ஜிட்டாஜ்

எக்ஸில் நண்பர்களுக்கு:

எக்ஸில் 10 படித்தேன். எக்ஸில் இதழ்களின் முழுத் தொகுப்பையும் நீங்கள் அனுப்பித்தர இயலுமெனில் Tamil.com உலகத் தமிழன் பகுதியில் எங்களால் அதலிருந்து தேர்ந்து வெளியிட முடியும். இதற்கு நீங்கள் ஒப்புதல் வழங்க வேண்டும். நேரடியாகவும் நீங்கள் பங்களிப்பு செய்யலாம்.

கலாமோகன், கற்சுறா, ஷோபாசக்தி மேலும் பெண்களும், தற்பொழுது சன்மானம் வழங்க எங்கள் நிறுவனத்தால் இயலாது. உங்கள் பங்களிப்பு எங்களுக்கு வளம் சேர்க்க வேண்டும்.

நன்றி.

«கோணல்» பக்கங்களில் சாரு என்னைப் பற்றிய தவறான தகவல்களை நேரடியாகவும் மறைமுகமாகவும் எக்ஸிலில் தொடர்ந்து பரப்பி வருகிறார். அவருடைய கரிச்சல் எனக்கு புரியக்கூடியதாக இல்லை. எக்ஸில் 10 கோணல் பக்கம் பத்தியில் முதல் பகுதியில் எனது கவிதைத் தொகுப்பு «சங்கருக்குக் கதவற்ற வீடு» வெளியீட்டுவிழா பற்றி மறைமுகமாக அவர் சொல்லும் தகவல்கள் தவறானவை. காதணி விழாவோடு சேர்ந்து எனது புத்தக வெளியீட்டைக் கொண்டாடியிருப்பதாகக் கூறுவது தவறு. எனது மகன் ரிஷிநந்தாவுக்கு பெயர் சூட்டு விழாவோடு சேர்த்து எனது கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவையும் கொண்டாடினேன். அழைப்பி தழிலேயே விழா என்று தான் குறிப்பிட்டிருந்தேன்.

குழந்தை பிறந்து 40 நாட்களே ஆன நிலையில் எனது மனைவி 100 பேருக்கு ஆட்டுக்கடா பிரியாணி செய்து கஷ்டப்பட்டதாக வருத்தப்படுகிறார் சாரு. அவரது வருத்தம் கற்பனையானது. எனது மனைவிக்கு இரண்டு பேருக்கு பிரியாணி செய்யவே தெரியாது. அது மட்டுமல்ல சமையலில் என்னைவிட படுமோசம் அவள். சந்தேகமிருப்பின் எங்கள் வீட்டு சமையலை ஒரு நாள் வந்து சாப்பிட்டுப் பார்க்கலாம் சாரு.

மேலும் காடன், வேடன், காத்தவராயன் போன்ற தெய்வங்கள் நான் அறியாதவை. காலன், முண்டன், உக்கிரமூர்த்தி, பண்ணிக்காரன், பலவேசம் இசக்கி, நீலன் போன்ற எனது பாரம்பரிய குணங்களோடு தொடர்பு கொண்ட எனக்கு பரிச்சயமான நெருக்கமான என்னோடு தொடர்ந்து இயங்கும் தெய்வங்களுக்கே கடா பலியிட்டு வழிபாடு செய்தேன். என்னோடு சேர்ந்து இயங்கும் தெய்வங்களை இந்துத்துவ மதவாத ஜாதிய தெய்வங்கள் என்று சொல்வது ஆர்.எஸ்.எஸ் மற்றும் பி.ஜேபியின் பார்வை. சாரு ஆர்.எஸ்.எஸ்:உறுப்பினரா என்ன? பிரேம் - ரமேஷ் சாருவின் பிரதியை இப்படித்தான் கட்டுடைத் தார்கள் சென்னையில் ஒரு கூட்டத்தில். 100பேர் இந்த விழாவில் கலந்து கொள்ளவில்லை. சுமார் 50பேர் அதிலும் கொண்டாட்டத்தில் பங்கெடுத்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்கள் என்று 20பேரைச் சொல்லலாம்.

கருத்தரங்குகள், கூட்டங்கள் ஆகியவற்றில் எனக்கு நம்பிக்கையில்லை. முன்கூட்டியே கருத்தரங்கில் பேசுபவர் என்ன பேசுவார் என்பதை என்னால் குறிப்பெடுத்துத் தந்துவிட முடியும். கூட்டத்தில் கலந்து கொள்ளாமலேயே துல்லியமாக என்னால் கூட்டத்தில் பேசியவர் களின் பேச்சை உள்ளடக்கி விமர்சனம் எழுதிவிடமுடியும். அவ்வளவு சோபையானவை தமிழ்நாட்டுக் கூட்டங்கள். இப்படி சோபையான கூட்டங்களைவிட வண்ணங்கள் நிறைந்த பண்டிகைகளே இன்று தமிழ் நாட்டில் நிகழ வேண்டியது என்பது எனது நம்பிக்கை.

மரபான வைபவங்கள் சடங்குகள் திருமணங்கள் அலங்காரங்கள் என்று தொடர்ந்து என்னை மிரட்டிக் கொண்டிருக்கிற எனது உற்றார், உறவினர், ஜாதியினர், பங்காளி, பகையாளி ஆகியோரை எனது பண்டிகையை மது கேளிக்கை, கவிதை பற்றிய உரையாடல் என்று வண்ணங்கள் கலந்து பதிலுக்கு மிரட்டுவதில் என்ன தவறு. தொடர்ந்து பல அருபங்களைக் கொலை செய்யவும் பண்டிகை விழாக்கள், சடங்குகள் என்று வண்ணங்களால் வாழ்வைப் பொலிவேற்றவுமே செயல்பட்டுக் கொண்டிருக் கிறேன். பகுத்தறிவு நிரம்பிய வைதீகமான பெருநகரத்து அந்நியனான சாருவுக்கு எனது தனிப்பட்ட செயல்பாட்டின் சூட்சுமங்கள் புரியாததில் வியப்பொன்றுமில்லை.

அன்புடன்
லஷ்மி மணிவண்ணன்

எக்ஸில்-8,9 ஆகியன பார்க்கக் கிடைத்தது. பிரான்ஸில் வெளிவருகின்ற போதிலும் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு இலங்கை எழுத்தாளர்களின் கவனத்தையும் "எக்ஸில்" ஈர்த்திருப்பதில் அதன் தரம் ஆளுமை புலப் படுகிறது. "கற்சுறா"வின் கவிதைப் பக்கம் புலம் பெயர் படைப்பாகவே தெரிகிறது, இலங்கைக்குப் பொருந்தும் படியாய் இல்லை.

எனது வயதை, மனநிலையை ஒத்த தமிழ் இளைஞனோடு நான் நண்பனாகப் பழகக்கூட இங்கே கிடைக்காமல் இருப்பது பெரிய துர்ரதிஸ்டமாகும். எதார்த்தம் என்கின்ற போது இங்கே தமிழர்களையும் முஸ்லிம்களையும் பிரித்து வைத்திருப்பதில் இங்கேயுள்ள பங்கர்களுக்கும், ஆயுதங்களுக்கும் அதிக பங்கிருக்கிறது.

சுமார் 15 வருடங்களுக்கு முன்னர் எனக்கு பத்து அல்லது பன்னிரண்டு வயதாக இருக்கும் போது எமது பிரதேசத்தின் சூழல் , இன அந்நியோன்யம், சமய நல்லுறவு என்பனவற்றை கற்பனை செய்கையில் அன்றில் சொர்க் கத்தையே அனுபவித்து இழந்ததான தவிப்பு.

உசிரு மீன்களை பெட்டியில் கட்டி அதிகாலையிலேயே கொண்டுதரும் வேலண்ண, விதைகளைக் கொடுத்தால் பழங்களை இலவ சமாகவே உண்ண அனுமதிக்கும் ஞானம் அக்காவும் முந்திரிய மரங்களும், கமகமக்கும் வாசனையோடு ஆடைகளை அயன் செய்து தரும் தெய்வம் (பெயர்), விதவிதமான டிசைனுகளில் தங்க நகைகளை செய்து புகழ்பெற்றிருந்த செல்லத்துரை போன்றவர்கள் மனதைவிட்டு அகலாதவர்கள், இன்னும் பேசப்படுபவர்கள்.

அது மாத்திரமன்றி மத நல்லிணக் கம்கள் கூட நமது பிரதேசங்களில் மேலோங் கியிருந்தது. அருகிலிருந்த பத்திரகாளி அம்மன் கோயிலுக்கு முஸ்லிம்கள் தேங்காய், கோழி நேந்து கொடுப்பதும் அபிசேக வட்டாவுக்கு முஸ்லிம்களும் சேர்ந்தே விலை வைப்பதும் அதே போல் மீராஜும்மா பள்ளிவாயல் கந்தூரியின் போது தமிழர்கள் மாடு, தேங்காய் எண்ணை, தேன், நெய் போன்றன வழங்குவதும் அந்த நாட்களின் வழக்கமானவைகள்.

ஆனால் இன்று இனஐக்கியம், நல்லுறவு என்பவை எதுவும் தெரியாது தமிழர்கள் என்றால் பயங்கரவாதிகளென்றும் தமது எதிரிகளென்ற உணர்விலும் இங்கே 15 வயதுக்கு உட்பட்ட யுத்தகால இளம் சந்ததியொன்று வளர்ந்து வருவது மிகப்பெரும் துர்ரதிஸ்டமாகும், அபாயகரமுமாகும்.

என்றாலும் இங்கே வாழ்கின்ற மக்கள் இருபாலாரும் இனநல்லுறவோடு, புரிந்துணர் வோடும் அந்நியோன்னியமாக வாழ்வதையே விரும்புகின்றனர். ஆனால் என்ன செய்ய முடியும். இரு கைகளைத் தவிரவும் அவர்களிடம் மூன்றாம் கையாக துப்பாக்கிகள் இருக்கும்போது நம்மால் என்ன செய்யமுடியும்.

எஸ்.நளீம்
மீராவோடை

புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களின் வாழ்வியல் சூழ்நிலைமைகளை, அல்லது தங்களது தேசத்திற்கான போராட்டம் பற்றிய அவர்களது கருத்து விவாதங்களை காணலாம் என்ற ஆர்வத்துடன் எக்சிலை எடுக்கும் போதெல்லாம் அது தமிழ்நாட்டு தொலைக் காட்சியின் விசுவின் அரட்டை அரங்கம் போலவே வடிவத்தில் வீராவேசமும் உள்ளடக்கத்தில் ஒதுங்கும் போக்கையுமே கொண்டுள்ளதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருக்கிறது. ஏப்ரல் இதழில் வாசக, எழுத்தாளர்களுக்கு தாங்கள் தந்துள்ள ஓர் அறிவிப்பில் பேரினவாத அரசுக்கெதிராய் எழுந்த தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை முன் வைத்து ஒரு ஆய்வு தொடர்பாக அறிக்கை விட்டிருப்பதுபோல பெரும்பாலும் இந்தவகை உருப்படியான முயற்சிகளுக்கு உதவாத கழிசடை அரட்டைகளை தமிழ்நாட்டில் இருந்து வேறு இறக்குமதி செய்வது எந்த நோக்கத்திற்கு என்று புரியவில்லை.

"பிட்டத்தைப் பிளப்பது, கால்களை விரிப்பது, எதிரெதிரே ஆண் பெண்ணை நிர்வாணப்படுத்துதல்..." இது ஏதோ சாருநிவேதிதாவின் வசனத்திலிருந்து எடுத்தது என்று நினைக்கவேண்டாம், தமிழகத்தில் வீரப்பனைப் பிடிக்கப்போன சிறப்பு அதிரடிப்படையினர் செய்த அத்துமீறல்கள்தான் இவை. இதையே இலக்கிய அந்தஸ்தோடு செய்கின்ற இலக்கிய சிறப்பு அதிரடிப்படை சாருநிவேதிதாவின் 'கைக்கிளையே' தங்களுக்கு பிடித்திருந்தால் ஒரு தனிப்பட்ட கடிதத்தின் மூலமாக நிறைவுசெய்து கொள்ளலாம்.

இந்த அக்கப்போரை மொத்த சமூதாய்த்திற்கும் முன்வைக்க வேண்டிய தேவை என்னவோ? இல்லை ஒரு இல்க்கிய அகதிக்கு ஈழ அகதிகள் சார்பாக செய்யும் ஜனநாயக சடங்கா? தமிழ்நாட்டில் தமிழின அமைப்புகளும், மார்க்சிய லெனினிய அமைப்புகளும் ஜனநாயகரீதியான கோரிக்கைகள், ஈழத்தமிழர் ஆதரவுப் பிரச்சாரங்கள் செய்தாலே பிரிவினைவாதம். பயங்கரவாத பீதியூட்டும் பார்ப்பன தினமலருடன் பவுசாக பழகிக்கொண்டு அங்கே அதன் ஜனநாயக விரோத செயல்களைக் கண்டிக்க அல்ல, காரிய சாத்தியமாக கதை, கப்சா விடுவது, புலம்பெயர்ந்த பத்திரிகைகளில் தோழர் ஸ்டாலினை ஜனநாயக விரோதி என சப்புக்கொட்டி எழுதுவது என்று பிழைப்பு நடத்தும் சாருநிவேதிதாவின் சிறுகும்பல் வக்கிரத்தை முன்வைத்து என்ன ஆக்கப்பூர்வமான கண்ணோட்டத்தை எழுப்பப் போகின்றது எக்ஸில். ஜனநாயகத்தின் குரல் தேவைப்படுகிற இடத்தில் சம்பளப்பணத்தை வைத்து வாயை அடைத்துக் கொள்வது, எங்காவது, யாராவது இலக்கிய மேடை போட்டுக்கொடுத்தால் அங்கு வந்து அப்பன் மவனே சிங்கன்டா என்று தொடை தட்டுவது இப்படிப்பட்ட கும்பல் தமிழ்நாட்டில் ஏராளம். ஈழத்தமிழர்களை இப்படி ஒரு கும்பல் கலாச்சாரத்தில் கலக்கவிட்ட பெருமை எக்சில் வரை நீளக்காண்கின்றேன். ரேசன் அரிசியா மானியம் கிடையாது, நிரோத்தா இந்தா இலவசமாக எடுத்துக்கொள் என்று வாரிவழங்கும் இந்திய அரசின் ஜனநாயக தத்துவத்தின் தொண்டர்படை வரிசையில் சாருநிவேதிதா வகையறாக்களுடன் எக்சிலே உமக்கும் இருக்க சம்மதமோ?

துரை.சண்முகம்
சென்னை-2

கலகக்காரர்களும் கலாச்சார மீட்பர்களும்

ஒரு நீர்க்கயிறாய் வலியின்றிப் பிணைத்திருக்கும் / உன் வார்த்தைகளிலிருந்து மீள/ வேறென்ன வழி மீந்திருக்கிறது சொல்! / கனிவு ததும்பும் உன் விழிகள் ஒளிர/ பரிவு சுமந்துவரும் அவ்வார்த்தைகள் புறப்படும்/ உனதந்தக் குரல்வளையைக் குதறுவதைத் தவிர...

-ம.மதிவண்ணன்

கடந்த நான்கு இதழ்களாக காசு கண்ணன் தன் கள்ள மவுனத்தின் சிறகடிப்பில் உதிர்த்துவிட்டுப் போன பொய்-புனை சுறுட்டுகளை எமக்குத் தெரிந்த அளவில் அடையாளங் காட்டவே கீழ்க்கண்ட சில செய்திகளை எழுத வேண்டிய தேவை எமக்கு எழுந்துள்ளது. காசு கண்ணன் ஆசிரியர் என்ற ஜம்பத்தில் பக்கம் பக்கமாகத் தன் பொல்லாச் சிறகு விரித்துக் காலவெளியில் நீந்திக்கொண்டிருக்க - ஸ்பாட்டகஸ்தாசன் அ.மார்க்சை நோக்கி கல்லடிபட்ட நாயாய் ரெண்டு பக்கத்துக்கு ஊளையிட... நாம்மட்டும் 750 சொற்களுக்குள் இழுத்துப்புடிச்சு எடுத்து வைக்க வேணும். அதிலும் காலச்சுவடின் பார்ப்பனியத்தை அம்பலப்படுத்தும் பகுதிகளை நம்ம குழலூதும் கண்ணன் தமது தருமச் சக்கரத்தால் emasculate பண்ணிவிட்டு (காயடித்துவிட்டு)த்தான் வெளியிடுவார். அந்த வெட்டி-ஒட்டி (Editor) வேலையின் மூலம் நாம் எழுதியதை தனக்கு ஆதரவான ஒன்றாகக்கூட மாற்றிவிடும் கூர்மதியும், குறுமதியும் கொண்ட நாகரீகக் கனவான்தான் நம்ம அண்ணன் காசு கண்ணன்.

சென்ற ஆண்டு இறுதியில் சென்னையில் நடைபெற்ற மரணதண்டனைக்கெதிரான எழுத்தாளர் மாநாட்டில் சுரா கனபாடிகளும், மநுஷ்யபுத்ரர் இஷ்டமித்ர பந்துக்களும் ப்ரசன்னமாயிருந்தார்களேயொழிய காசு கண்ணன் அரங்கில் காணப்படவில்லை. ரெண்டு நாள் தள்ளி நடைபெற்ற இடதுசாரி/தமிழ்தேசிய அமைப்புகள் நடத்திய - வெகுமக்கள் கலந்துகொண்ட - பேரணி, பொதுக்கூட்டத்தில் (பா.செ, எஸ்.வி.ஆர்...போன்ற சிலரைத்தவிர) மேற்கண்ட எழுத்தாளப் புடுங்கிகள் எவரும் கலந்துகொள்ளவில்லை என்பது இங்கே கூடுதல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்தி. மக்கள் வேறு எழுத்தாளர்கள் வேறு அல்லவா?

சரி... விடயத்துக்கு வருவம்.

மாநாட்டில் தினமணிக்காக எழுதப்பட்ட கட்டுரையை அட்சரம் பிசகாமல் ரெண்டுரெண்டு தடவை ஒளியலைகளாக உமிழ்ந்தபின் பிதாமகர் தோரணையில் கீழிறங்கிவந்த சுரா கனபாடிகளை சோதாப்பயல் வளர்மதி வழிமறித்து... "உங்களுக்கு இலக்கிய உலகின் எஸ்விரங்கா ராவ் என்று பேரிட்டிருக்கிறோம்." என்பதாகச் சொன்னார். கனபாடிகள் உள்ளுக்குள் வியர்த் துப்போனாரோ என்னவோ வெளியே பெருந் தன்மையாய்ப் புன்னகைத்துத் தலையசைத்தார்.

கூட்டமுடிவில் SVR ஐ எதிர்கொண்டு கேள்வியெழுப்பியபோதுகூட (ஹெய்டெக்கரைப் படிச்சிருக்கயா...?) அவரின் எழுத்துக்களுக்கும் தத்துவப் புரிதல்களுக்கும் மாறான பார்வைகளை தன்னால் வைக்கமுடியும் என்ற கிளர்வினால், வளர்மதி சொற்களைச் சுழட் டி எறிந்தாரேதவிர... நாகரீகக் கனவான்களைப்போல - தனிமனிதக் காழ்ப்பில் "ஞானபாரதி" வகையான உள்முக தீவிர இலக்கிய ஆய்வுக்கெல்லாம் 'குடிகாரன்' வளர்மதி போகவில்லை. மேலும் பொழிலனுடன் வளர்மதி எவ்வித போதையாடல்களையும் தொடங்கவில்லை. கண்முன்னே சிகப்பாய்ச் சுழலும் தமிழ்ப்புரச்சியை தனது தள்ளாட்டத்தால் வளர்மதி தள்ளிப்போடுகிறானென்ற "அறச் சீற்றத்தில்" வன்முறைக்கெதிரான -மரணதண் டனைக்கெதிரான - மாநாட்டு அரங்கின் "வெளியில்" தன்புரச்சிக் கரங்களால் (அந்த நேரத்தில் அவரிடம் வேறு ஆயுதம் ஏதும் இருந்திருக்கவில்லை) போட்டுப்புரட்டி எடுத்து விட்டார். "டேய் குடிகாரப்பயலே... நீயெல்லாம் மக்களுக்காகப் புரச்சி பண்ணப் போறயா?" குடிகாரா... குடிகாரா... என்று புரச்சிகர முழக்கமிட்டதை (மணியரகன் மகனும் அருகில் இருந்ததாய் நினைவு) நாங்கள் நேரில் கண்ணுற்றுக் களித்தோம் என்க!

இன்றைய தமிழ் இலக்கியச் சூழலில் 'விஞ்ஞானரீதியாக' பார்ப்பனிய ஆளுகைகளைக் கட்டியெழுப்பும் காலச்சுவடும் அதைத் தகர்ப் பதைத் தவிர வேறுவழியேதுமில்லையென்றி யங்கிவரும் மாற்று சிந்தனையாளர்களின் எழுத்துக்களுக்குமிடையே தமிழ் இலக்கியம் தத்தளித்தபடிதான் மேலெழும்பி வரவேண்டி யுள்ளது. ஆய்வுகளின் நுண்ணரசியலையும் அவை எழுப்பும் நியாயமான கேள்விகளையும் எதிர்கொள்ளத் திராணியற்றுப் போய் குடிவெறியன், போதைக்காரன், பெண்பித்தன்... போன்ற பிம்பங்களை உருப் பெருக்கிக் காட்டுவதென்பது வக்கிரம் நிறைந்த உள்மன அரிப்பன்றி வேறென்ன?

குடிகாரனோ போதையிலிருப்பவனோ ஒரு உரையாடலைத் தொடங்க முடியாதென் பதும், அப்படியே அது சாத்தியப்பட்டாலும் அவ்வுரையாடல் தீவிர இலக்கியத்தரமற்றதாய்த் தான் இருக்குமென்பதும் கண்ணனின் இடுகுறிப் பெயரான காலச்சுவடின் மனுநீதிப் பிரதி சொல்லும் அடிப்படை விதிபோலும்.

அரசு அரங்குகளில், உலகத்தமிழ் மாநாட்டில், RSS கூட்டத்தில் நமது கலகக் கண்மணிகள் இம்மாதிரி சிலுமிசம் எல்லாம் செய்வார்களா? என்று காசு கண்ணன் கேட்கிறார். அவர்களெல்லாம் - தீவிர இலக்கியம் படைப்பதற்கோ - தீவிர மாற்றுக் கலாச்சாரத்தை நிறுவுவதற்கோ... தம்மை மட்டுமே நேர்ந்து விட்டிருப்பதாகவோ, கடுமையான தத்துவ விசாரம் செய்பவர்களாகவோ தம்மைப் பிரகடனம் செய்துகொள்ளாதவர்கள். மேலும் மாற்றரசியல், உன்னதம்/புனிதம்... காலத்தை விஞ்சிநிற்கும் படைப்பு (ஒன்றுக்கொன்று முரணான) என்று கெல்லியடித்து இலக்கிய தாயத்துகள் விற்பவர்களுமல்ல. அவர்கள் தங்களது கடைகளை வெகு வெளிப்படையாகத் (Open Market) திறந்து வைத்திருக்கிறார்கள். காசு கண்ணன் மொழியில் சொன்னால் அவர்கள் வெகுசனக் கலாச்சாரத்தைஉண்டுவாழும் கோணங்கிகள். அங்கெல்லாம் அச்சத்தினால் அல்ல இயல்பாகவே போகவேண்டிய அவசியம் மாற்றுக்களைத் தேடுவோருக்கு இல்லை. ஆனால் Micro முதல் Mega வரையில் பல்வேறு கூட்டங்களை 'ஒருங்கிணைத்து' 'ஒழுங்கு' செய்துவரும் காசு கண்ணன் வேண்டுமானால் RSS முகாம்களுக்குச் சென்று எப்படி அவர்களால் சின்ன முணுமுணுப்புகள்கூட எழாதவாறு, குடிகாரர்களின் கலாட்டாக்கள் இல்லாதவாறு ஒழுங்காக கூட்டங்களை நடத்தமுடிகிறது என்று கண்டும் <u>கேட்டும்</u> வரட்டும். அங்கிருந்து பெறும் அனுபவத்தில் கலாச்சாரக் காவல்துறை ஒன்றை நிர்மாணிக்கட்டும். காலச்சுவடு காவல்துறை உருவாவதில் எங்களுக்கெல்லாம் மிக்க ஷந்தோ ஷமே. உலகத்தரம் வாய்ந்த லத்திகளை ஸ்ரீராம் சீட்டுக்கம்பனி ஸ்பான்சர் செய்ய - மாற்றுக்க ளைத் தேடுபவர்களின் கொட்டையை/யோனியை நோக்கிச் சவுட்டுவதற்கான வலுமிக்க காலணிகளை மகாலிங்கத்தின் தொழிற்சாலை வழங்கக்கூடும். குப்பாயம் வழங்கத்தான் இருக்கவே இருக்கிறது தரணிபுகழ் சுராபட்டு சென்ரர். தொடரட்டும் காலச்சுவடின் கலாச்சாரக் காவல்பணி.

இந்த நூற்றாண்டு தமிழ்க்கலாச்சாரச் செயல்பாடுகளின் உன்னத நிகழ்வென பீற்றித்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரியும் தமிழினி 2000 குறித்து கண்ணன் & CO விற்கு சொல்லிச் சொல்லி மாளவில்லை. அ.மார்க்ஸ், வளர்மதி, ஆர்.ஆர்.சீனிவாசன், அப்பணசாமி, சாரு... போன்றவர்களைப் பக்கம் பக்கமாய் தூற்றியும், மிரட்டியும் எழுதிவரும் காசுகண்ணன் தமிழினி 2000 குறித்து நியாயமான விமர்சனங்களை முன்வைத்து - நிறப்பிரிகை, காலக்குறி, சமவெளி, தாமரை, எக்ஸில்... போன்றவற்றில் வந்த விமர்சனங்களுக்கு இதுகாறும் கள்ளமவுனமே சாதித்துக் கொண்டிருக்கிறார். உலகளாவிய தமிழ் படைப்பாளிகள்/ வாசகர்களைத் திரட்டி தூக்கி வந்தும், பில்கேட்ஸின் மூளையில் உள்ள பாதி மடிப்புகளை இரவல் பெற்று தொழில்நுட்பமாக்கிச் செயல்பட்டும், ரூ 1,60,000க்கு புத்தகங்களை விற்றும் லாபமடைந்த காசு கண்ணன் பொறாமை பிடித்தலையும் கலாட்டாக்காரர்களைப் பார்த்து, எனக்குக் கூச்சம் ஏதும் இல்லை என்றும், கண்டதை விற்றுப் பிழைக்கவில்லை நாங்கள் 'மதிக்கும்' எழுத்துக்களையே விற்று இலக்கிய சேவை, இடியாப்பம், ரோஸ்ட்... எல்லாம் செய்து லாபமும் ஈட்டுகிறோம் என்கிறார். ('மதிப்பு' என்பதற்குப் பின்னே எவ்வித அரசியலும் இல்லை என்ற பாவனையில்). எங்களுக்குத் தெரிந்து 'கண்டது' என்று எதுவும் கிடையாது. நரிப்பல்லிலிருந்து Kalavhuvadu.com வரைக்கும் எல்லாரும் அவரவர் சரக்குகளை உரிய முறையில் விற்று வயிறு வளர்க்கிறார்கள். காசு கண்ணன் இலக்கியப் போர்வையில் காசு பண்ணுவதைக்கூட சரி தொலையட்டும் 'பிழைப்பு' என்று கருதலாம். ஆனால் அதனூடாகத் திட்டமிட்டுக் கட்டியெழுப்புகிற பிம்பங்களும், மதிப்பிற்குரிய படைப்பாளிகளும்... தமிழ் இலக்கியத்தின் அத்தாரிட்டிகளும், உன்னத இலக்கியத்தின் உயிராகவும் மயிராகவும் வறுமை, சுரண்டல், ராயல்டி... என்றெல்லாம் பேசித்திரிவதுதான் எரிச்சலை ஏற்றுகிறது. அடங்கொக்கமக்கா! காலச்சுவடு, இதுவரை வறுமையில் வாடும் தீவிர இலக்கிய படைப்பாளிகளுக்கு - இளம் படைப்பாளிகளுக்கு - எழுத்தை மட்டுமே உண்டுவாழும் எளிய படைப்பாளிகளுக்கு ... அவர்தம் செம்பதிப்புகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தி - அவர்களுக்கு லட்சலட்சமாய் உரிமைத்தொகையை அள்ளி வழங்கி இலக்கிய ஜீவனிற்கு உயிர் வளர்த்துக்கொண்டிருக்கிறது. எப்படிக் கண்ணன் உங்களால் கூச்சப்படாமல் இருக்கமுடிகிறது?

தமிழின் மிகச் சிறந்த படைப்பாளிகள் என்று ஒரு சிலரை ஊதிப்பெருக்கிவிடுவது, பின் சிலமாதங்கள் கழித்து அவர்களின் தொகுப்புகளை செம்பதிப்பாகக் கொணர்ந்து காசு பண்ணுவது எந்த அளவிற்கு தீவிர இலக்கியம் வளர்க்கப் பயன்படும்?

பு.பி, ஜி.நா, தகழி... என்று செத்துப் போன - சுரா, சேரன்... போன்ற வாழும் பிம்பங்களை விற்றுத்தானே பிழைப்பு நடத்திக்கொண்டிருக்கிறீர்கள். அதைவிட அனாதைப் பிணத்தைப் பிளாட்பாரத்தில் கிடத்திக் காசு தெண்டி வயிறு வளர்ப்பவன் எவ்வளவோ உசத்தியல்லவா...? ஜெயமோகனால் எடுக்கப்பட்ட யதியின் நேர்காணலில் வந்திருக்க வேண்டிய அவரின் பார்ப்பன / பார்ப்பனீய எதிர்ப்புக்கூறுகளை வெட்டியெறிந்துவிட்டு யதியை ஆகமங்களுக்குள் மட்டும் நிறுத்திக் காட்டியது - காலச்சுவடு கூட்டங்களில் புத்தகம் விற்க உதவும் கவிதை முயற்சியாளர்களின் ரெண்டுவரி, மூணுவரி கவிதைகளைக் கட்டங்கட்டி வெளியிட்டு அவர்களைக் கவிஞனாகிவிட்ட போதையின் பிடியில் வைத்துக்கொண்டு களவேலை வாங்குவது... போன்ற இவை எல்லாம் எழுத்தாளச் சுரண்டல் அல்லாமல் வேறென்ன...?

தீவிர மாற்று இலக்கிய நடவு, கலாச்சாரப் பயிர் வளர்ப்பு, அற விளைச்சல்... என்று அண்டப் புளுகுகள் எல்லாம் புளுகி வரும் காலச்சுவடு + co வினர் தமிழில் தீவிரமான மாற்று சிந்தனைகள் எவற்றையேனும் தொடங்கி வைத்ததுண்டா? அவைகள் குறித்த உரையாடல்களை தம்மை மட்டுமே முன்னிறுத்தாமல் - நேர்மையாக நடத்தியதுண்டா? மாறாக கடந்த பத்து ஆண்டுகளுக்கும் மேலாக பல்வேறு எதிர்ப்புகளுக்கிடையேயும் மாற்று சிந்தனைகளை உருவாக்கி வளர்த்தவர்கள் பலர் இருக்க, அதற்கான அறுவடைகளைக் கைக்கொள்ளும் வேலையைத்தானே காலச்சுவடு செய்துகொண்டிருக்கிறது. இன்றைக்கு தலித் இலக்கியம்/ அரசியல், மரண தண்டனைஎதிர்ப்பு, மனித உரிமைகள், மாற்றுக்கல்வி, தமிழ்மொழி வளர்ச்சி... போன்ற கருத்தாடல்களை முன்னிறுத்தி பேசுவதும் - எல்லாவற்றுக்கும் தான்தான் அத்தாரிட்டி என்று பாவனை கொள்வதும் எவ்வகையில் நியாயமாகும்?

மட்டியும் நானே - மாற்றும் நானே... என்று தொடர்ந்து பிதற்றிவரும் கண்ணனின் காலச்சுவடு தமிழின் நவீன இலக்கியத்துக்கு கணிசமான பங்களித்துள்ள தலித் கவிஞர்கள், சிறுகதையாளர்களின் எத்துனை படைப்புகளை வெளியிட்டு ஊக்கப்படுத்தியுள்ளது? மாறாக தலித் படைப்புகளின் மீதான விமர்சனங்களை மட்டுமே வெளியிட்டு இவர்கள் விமர்சிக்கப்பட வேண்டியவர்கள்/அங்கீகரிக்கப்பட வேண்டியவர்கள் அல்ல... என்ற நவீன தீண்டாமைக் கோட்பாட்டைக் கடைப்பிடித்து வருவது எவ்வளவு அருவருப்பான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்ப்பனிய உத்தி?

தமிழில் கலாச்சார மாற்றங்களுக்காகப் போராடியவர்கள் எவரும் இப்படி Side Business - ஆக இலக்கிய வியாபாரமெல்லாம் செய்த தில்லை.

தலித் இலக்கியமா! இதோ சுரா! இந்தாபுடி தோட்டியின் மகன் (லாபம்:1)

கல்விப் பிரச்சனையா! இதோ சுரா! இந்தாபுடி வசந்திதேவியுடன் உரையாடல் (லாபம்:2)

புலம்பெயர் இலக்கியமா! இதோ சுரா! இந்தாபுடி சேரன் கவிதைகள் (லாபம்!3)

உன்னத இலக்கியமா! இதோ சுரா! + Senior பிம்பங்கள் இந்தாபுடி சுரா, புபி, ஜிநா- தொகுப்புகள் (லாபம்:...)

பெண்ணிய இலக்கியமா! இதோ சுரா! இந்தாபுடி அம்பை, சல்மா நூல்கள் (லாபம்...)

இப்படி all in all அழகுராசாவாக சுரா-கண்ணன் - காலச்சுவடு... என்று வந்து வாய்த்தது தமிழுக்குப் பெரும் பேறுதான்.

காசு கண்ணன் உருவாக்கி வரும் சைலண்ட் பார்ப்பனியக்கூடம் கலாச்சார மாற்றுத்தளம் அல்ல. மாறாக ஒழிக்கப்பட வேண்டுமென ஏற்கனவே பேனா தூக்கிய ஒரு நூறு ஆண்டுகளின் எதிர்மரபுக் கலாச்சார விளம்பிகளின் ஆளுமைகளைக் காயடிக்கும் மடமே. எவ்விதக் குற்றவுணர்வும் கூச்சமுமின்றி கலாச்சார வன்முறையை செலுத்துபவர்கள் மாற்றுக்களைப் பற்றியும் விடுதலை குறித்தும் பேசுவதற்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

எழுப்பப்படும் எல்லாக் கேள்விகளுக்கும் எழுப்பியவரே விடைவைத்திருக்க வேண்டும் என்றும் எல்லாக் கேள்விகளும் கேட்கப்பட்டு விட்டன- எல்லாப் பதில்களும் சொல்லப்பட்டு விட்டன என்றும் - கேள்வியும் பதிலும் கலாட்டாக்களின் புறத்தோலே என்றும்... வரையறைகளை உருவாக்கும் இந்தக் கலாச்சார மீட்பர்கள் பின்னாளில் மிகப்பெரிய பாசிஸ்டுகளாக உருவாகி வளர்வதற்கான இலக்கணங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

குறிப்புகளாக சில...

1) தனக்கு சரியான உரிமைத் தொகையும், எழுத்துக்கூலியும் உடனுக்குடன் காலச்சுவடு பதிப்பகம் வழங்கி தனது கஷ்டஜீவனத்தைப் போக்குகிறது என்று ஒரு வேளைச் சோத்துக்கே சிங்கியடித்துக்கொண்டிருக்கும் எழுத்தாளர் சுரா கலிபோர்னியாவில் ஒருநேர்காணலில் குறிப்பிட்டார்.

"செவிவழி" ஏப்ரல் ஒண்ணாந்தேதி வந்த இதழில் கண்ட செய்தி.

2) தமிழ்த்தாத்தா உவெச, அய்யன் திருவள்ளவர்... வரிசையில் சிறுகதைத் தந்தை புதுமைப்பித்தன், கவிதை மாமா பசுவய்யா... என்று இலக்கிய உறவுகளை வளர்க்க காலச் சுவடு அரும்பணியாற்றி வருவதாக அதன் ஆசிரியர் கண்ணன் கூறினார். மேலும் புபி-யின் பெயரைச் சொல்பவர்கள் சிறுகதைத் தந்தை என்ற அடைமொழியுடனேயே அழைக்க வேண்டும். அதுவும் காலச்சுவடின் முன் அனுமதி பெற்ற பின்பே அந்தப்பெயரைப் பயன்படுத்த வேண்டும் என்று மீறினால் ஒரு தகவலாக தினகரி அவர்களிடம் சொல்லிவிடுவோம். பிறகு கம்பி எண்ண வேண்டி வரும் என்றும் பயமுறுத்தினார்.

-சட்டதினத்தன்று 'இலக்கிய நீதிக்காவலன்' கண்ணன் சுரா டிவிக்கு அளித்த பேட்டியில்...

3) "குமுதத்தில் கோணங்கிக்கு இத்தனை முக்கியத்துவமா..." என்றெழுதியிருக்கும் கண்ணனுக்கு இத்தனை பொச்செரிச்சல் தேவையில்லை என்று நினைக்கிறேன். குமுதம் வெகுமக்களின் மசாலா பத்திரிகை. ஆனால் காலச்சுவடு, இந்தியாடுடே... போன்றவை 'தமிழ்கூறும்' நல் - அறிவுலகக் கனவான்களின் கையேடுகள். எனவே அவைதான் எங்களால் வெறுக்கப்படுகின்றன. இன்னொரு விசயம் - அதே குமுதக் கும்பல் சுஜாதா, சிவசங்கரி, இந்துமதி, ப்ரசன்னா ராமசாமி... போன்றவர்களை வைத்து தமிழினி பஜனை மட்டும் கண்ணன் நடத்தலாமா?

-கோணங்கிதாசன்

(" கஜம்பா" சிற்றிதழுக்கு வந்த வாசகர் கடிதத் திலிருந்து)

**கண்ணன்/காளிங்கராயன்**

'எக்ஸில்' இதழில் திரு வளர்மதி அவர்கள் எனது பதிவுகளுக்கு மிகவும் பெரிய மனதுபண்ணி 'சில்லரைக் கணக்கில்' போனால் போகிறது என்று போகிறபோக்கில் 'மார்க்' போட்டுவிட்டிருக்கின்றார். எப்படியோ இங்கு கிடக்கும் அமாவாசைகள் எல்லாம் 'எக்ஸிலில்' 'பௌர்ணமி' வெளிச்சக் கூத்தாடுகின்றன. இது கிடக்க அடுத்துவரும் எக்ஸில் இதழின் அட்டை முகப்பில் அவசியம் தாங்கள் 'மேட்டூரானின் புடுக்குசிரை'ப்போட்டு எங்களையெல்லாம் கரையேற்றிவிட வேண்டுமாய்த் தங்கள் திசைநோக்கித் தெண்டனிட்டு வேண்டிக் கொள்கின்றோம்.

- 'மயிர்பிளக்கும் மார்க்சீய ஆய்வு' என்பதன் அர்த்தத்தை நான் மேட்டூரார் மூலமே உணர முடிந்தது.

-ஜெயமோகனை விமர்சிக்க வேண்டுமாயின் ஜெயமோகனை விமர்சிக்கட்டும். ஜெயமோகனின் குரு என்ற ஒரு புரிதலை மட்டுமே முன்வைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யதியைக் கூதியாக்கும் 'மேட்டூர்சங்கதி' களை 'எக்ஸில்' தூக்கிப்பிடிக்கவேண்டுமா?

-விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவர்கள் எவரும் இல்லை. உண்மைதான் விமர்சனம் விமர்சனமாக வெளிப்பட வேண்டாமா?

- 'வேறு வேறு' இதழ்கூடத்தான் யதியை விமர்சித்துள்ளது. 'யாதுமாகி நின்றாய் யதி' என அதுவும்கூட அவரை அணுக இயலாமல் அவற்றைப்பற்றிய ஜெயமோகனின் செவ்வி வெளிப்பட்டுள்ள விதங்குறித்த விமர்சனம் என்கிற அளவிலேயே நின்று போகின்றது.

-இந்திய மெய்ப்பொருளியலில் சமயஞ்சாரா சிந்தனை மரபினை ஆராய்ந்து வருகிறவன் என்கிற முறையில் நான் அபூர்வமாய்க் கண்டுணர்ந்த ஓர் அதிசயம். வேறெந்த சிந்தனைப் பள்ளியிலும் காணக்கிடைக்கா விந்தையாக அடுத்தடுத்து முப்பெரும் மேதைகளை அருங்கொடுப்பனை ஆக்கியதுஅவைதீக மரபின் பாற்பட்ட நாராயணக் குருவின் சிந்தனைப் பள்ளியே. நாராயணகுரு, நடராச குரு, குரு நித்ய சைதன்ய யதியென...

- 'உலகமெய்ப்பொருளியலுக்கு நித்யசைதன்ய யதியின் கொடை' பற்றிய ஆய்வினை திரு.இரா. குப்புசாமி ('உயிர்த்திரு' ஆர்.கே) மேற்கொண்டுள்ளார். யதியின் பதிவுகளுக்கூடாக அவரது மார்க்சியப் புரிதல்கள் குறித்தும் உணரமுடிகின்றது. 'ஈழவ' விடுதலைக்கான அவர்களது குருகுலத்தின் பணி மகத்தானது. மெய்ப்பொருளியல் தவிர கவிதை, ஓவியம் முதலான கலை ஈடுபாடுகளும், எல்லாவற்றுக்கும் மேலாக யதியின் சமூக அர்ப்பணிப்பும் நம்மை மலைக்க வைக்கின்றது. சமூகப்போராளிகளுடான அவரது அணுகுமுறைகள் மிகவும் காத்திரமானவை. 'உயிர்நிழலில்' வெளியான தமிழவனின் செவ்வி மீதான என் எதிர்வினையாக நான் முன்வைத்த 'இந்திய அவைதீக மரபும் பின்னை நவீனத்துவமும்' மூலம் யதி பற்றிய எனது புரிதல்களையும் விவாதத்திற்கான புள்ளிகளையும் ஏலவே முன்வைத்துள்ளேன்.

-மர்மஸ்தானங்களின் சங்கதியைக் காட்டுவது மட்டுமே எதிர்க்கலாச்சாரம் எனக் கூத்தடிக்கும் 'எங்கட ஆக்களின்' குறிகாட்டும் மாயைக்குள் எக்ஸிலும் ஆட்படுவதேனோ?

-இனியேனும் எதிர்மரபின் கூறுகளை இனங்காணப்புகுகின்ற எத்தனங்களில் 'எக்ஸில்' தலைப் படட்டும்.

பொதியவெற்பன்

கும்பகோணம்

## இலக்கியச் சந்திப்பு.

2000 டிசம்பர் 23-24 திகதிகளில் பரிசின் புறநகர் பகுதியான கார்ஜ் லே கோணேஸ் எனும் இடத்தில் நடைபெற்றது. சஞ்சிகைகள் நூல் விமர்சனங்கள் என்று வழமையான சத்துக் கெட்டவிமர்சனங்கள் கொண்ட நிகழ்வுகளுக்கு மத்தியில், இலங்கையிலிருந்து வருகை தந்த டொமினிக் ஜீவா அவர்களது 36வருட இலக்கிய வாழ்வு பற்றிய பேச்சும், சாரு நிவேதிதா அவர்களது எதிர் இலக்கிம் பற்றிய கட்டுரையும் நிகழ்வை பிரியோசனமானதாய் ஆக்கின. அதைவிட நீட்சே பற்றி தமிழரசன் வின்சண்ட், வாசுதேவன் ஆகியோரது மறு-மறு வாதங்கள் பலருக்கு பிரியோசனமானதாக இருந்தது.

## பெண்கள் சந்திப்பு

புகலிடத்தில் வாழும் பெண்கள் சந்தித்து தமது கருத்துக்களையும் அனுபவங்களையும் பரிமாறிக்கொள்ளும் முகமாக 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு ஐரோப்பாவின் வெவ்வேறு பாகங்களில் நடந்துவரும் பெண்கள் சந்திப்பின் 20ஆவது தொடர் 19/05/2001 பேர்ளின் நகரில் நடைபெற்றது. நிகழ்வில் பிரான்ஸ், சுவிஸ், நோர்வே, பிரித்தானியா போன்ற நாடுகளில் இருந்து வந்திருந்தவர்கள் உரையாற்றியதுடன் மட்டக்களப்பு சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையத்தை சேர்ந்த சட்டத்தரணியான மங்களேஸ்வரி அவர்கள் "கிழக்கிலங்கை பெண்களுக்கெதிரான வன்முறைகள்" குறித்து பேசியது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'போதை'யின்றியே கழரும் போர்வைகள்

"... ... ... ... .... ..... .. ...... ..... .... ... ... .... .... ..... ..... ...... ...... .... .... ..... ..... .......... ...... ..... ..... ... ...... .... ...... ..... .." என கூட்டத்தில் பங்கு கொண்டவர்கள் தெரிவிக்கின்றனர். என்று "வீரகேசரி நிருபர் பாணியில் இலக்கிய விமர்சனம் எழுதியிருந்த "உயிர்நிழல்" ஆசிரியை லக்ஷ்மி இன் "போதை கழற்றிய போர்வை" யை வாசித்ததைத் தொடர்ந்து இக்கூட்டத்தில் கலந்து கொண்டவள் என்பதாலும் ஒரு பெண் என்பதாலும் எனது கருத்தை முன்வைக்கவேண்டியவள் ஆகின்றேன்.

நீண்டகாலமாகவே பாலியற் சொற்கள் மற்றவரை நிந்திப்பதற்காக மிகவும் இலகுவாகப் பயன்படுத்தப்படுகிறது. அதுவும் பெரும்பாலும் பெண்பாலியல் உறுப்புகள், பெண்களை கொச்சைப்படுத்தும் சொற்கள் என்பவையே மற்றவரை நிந்திப்பதற்காக ஆண்களாலும், பெண்களாலும் பயன்படுத்தப்பட்டுவருகிறது. இதற்கெதிராக பலர் எழுதியும் பேசியும் இருந்தாலும் இன்னும் இது குறைந்தபாடில்லை. ஆகவே எங்களால் முடிந்தவரை இதற்கெதிராக கண்டனம் தெரிவிப்பதும், எழுதுவதும் இன்றைய அவசியமேயாகும்.

ஆனால் "உயிர்நிழல்" ஆசிரியையோ நடவாத ஒன்றைத் திரித்து தான் கேள்விப்பட்டதாக கொதித்தெழுந்து அதில் கலந்து கொண்ட பெண்களைப் பற்றியெல்லாம் மோசமாக எழுதியிருக்கிறார். அவருடைய இந்த வேக்காட்டுக்கான காரணங்களை நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அவை பற்றி பேசுமுன்...

சனதர்மபோதினி வெளியீட்டு விழா என்னுடைய பார்வையில்:

முதலில் "சனதர்மபோதினி" எனும் விளிம்புநிலை தொகுப்பினை சுகன், ஷோபாசக்தி ஆகியோர் பொதுவாக எல்லா இலக்கிய சஞ்சிகையாளரையும் போல் தங்களுடைய கடும் உழைப்பில் கொண்டுவந்தனர். இதனது வெளியீட்டு விழாவின் போது முதலில் சாப்பாடு, குடிபானம், தண்ணி, கிண்ணி எல்லாம் முடிந்தபின் தேவதாஸன் தலைமையில் தில்லையின் நாட்டுக் கூத்துடன் கூட்டம் ஆரம்பித்தது. தொடர்ந்து பலரும் தலித்பிரச்சனைகள், போராட்டங்கள் பற்றியும் அவைகுறித்துப் பேசுகின்ற இப்புத்தகத்தில் உள்ள கட்டுரைகளின் அவசியம் பற்றியும் தங்களது கருத்துக்களை வைத்ததுடன் புஸ்பராஜா, கற்சுறா போன்றோர் இதில் பிரசுரமாகிய "உன்னத சங்கீதம்" சிறுகதைமீது தங்களது காட்டமான விமர்சனத்தை வைத்தார்கள்.

இந்த விமர்சனத்தில் அக்கதையில் உள்ள யோனி, சுண்ணி ... போன்ற சொற்கள் பாவிக்கப்பட்டது உண்மையே. ஆனால் அதில் நிந்தனை நோக்கம் இருக்கவில்லை. இவ்வகைச் சொல்லாடல்கள் நிந்தனை நோக்கில் பயன்படுத்தக்கூடாது என்பதாகவே இருந்தது. இது தவிர அக்கூட்டத்தில் யாரும் யாரையும் நிந்திப்பதற்கு தூசணம் பாவிக்கவில்லை. மேற்சொன்னதையே தூசணமாக கருதினால் சரிநிகரில் வெளிவந்த கோணேஸ்வரியின் கவிதையை எதிர்த்த பிற்போக்குவாதிகளுக்கும் இதற்கும் என்ன வித்தியாசம் இருக்கமுடியும். மனித உறுப்புக்களில் சிலவற்றைப் பற்றி வெளியில் கதைக்கக்கூடாது, அவை மறைவிடங்கள் அல்லது மர்மஸ்தானங்கள் என்னும் கட்டுப்பெட்டித்தனமான சிந்தனை கொண்டோரே இவற்றைத் தூசணமாக கருதமுடியும்.

இக்கூட்டத்தில் "தூசணம்" கதைத் திருந்தால் கண்டிக்கப்பட வேண்டியது நியாயமே. ஆனால் நடவாத ஒன்றை நடந்ததாக திரித்தது மட்டுமன்றி அங்கு கலந்துகொண்ட பெண்களை மிகவும் மோசமாக பார்த்திருப்பதே லக்ஷ்மியின் பார்வைமீது சந்தேகத்தைக் கிழப்புகிறது.

லக்ஷ்மி சொல்கிறார்...

"ஒரு பெண் தலைமை தாங்குவது பெண்பாலியல் கவர்ச்சி அல்லது பெண்ணிய போலிக் கவர்ச்சி நோக்கிலோ?"

"போதாதற்கு இவர்கள் தங்களைப் பெண்ணியவாதிகள் என்றும் அறிமுகம் செய்து வருகிறார்கள். அதற்கு என்ன விலை(?)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள்."

1) "சனதர்மபோதினி" வெளியீட்டு நிகழ்வில் ஒரு பெண் தலைமை தாங்கியது என்பது தகவல் பிழையானது. அல்லது தங்கள் வசதிக்கேற்ப திரிக்கப்பட்டது.

கூட்டத்தை தேவதாஸன் அவர்களே தலைமையேற்று நடத்தியிருந்தார். ஆனாலும் கூட்டத்திற்கு ஜேர்மனியில் இருந்து கலந்துகொண்ட தேவாஹெராட் அவர்களையே நீங்கள் குறிவைத்து அடித்திருப்பது தெரிகிறது. அவர் தொகுப்பை வெளியிட்டு வைத்தவர். தகவல்தான் பிழையாக இருந்தால் அடுத்த உயிர்நிழலில் தகவல் பிழையானது என்பதை ஒப்புக்கொள்ளுவதோடு, இனிவரும் கூட்டங்களுக்கு கூட்டமொன்றை தலைமையேற்று நடத்துபவருக்கும் நூலின் பிரதியொன்றை வெளியிட்டு வைப்பவருக்கும் வித்தியாசம் புரியக்கூடியவர்களாகப் பார்த்து உங்களுக்காக செய்திசேர்க்க அனுப்பிவையுங்கள்.

2)மாறாக ஒரு பெண்ணேதான் தலைமை தாங்கியிருந்தாலும் அது குறித்து அப்பெண்ணை நோக்கியும் கூட்டத்தில் கலந்துகொண்ட ஏனைய பெண்களை நோக்கியும் லக்ஷ்மி சின்னத்தனமாக எழுதியிருப்பதன் காரணம் என்ன? புகலிடத்தில் இருக்கக்கூடிய குறைந்தபட்ச முதலாளித்துவ ஜனநாயக உரிமைகளைக்கூட அடைய முடியாமல் வெறும் இந்திய/தமிழ் குடும்ப அமைப்புமுறை குறித்தோ, அதையும் மிகவும் நுட்பமாக கலாச்சாரத்தின் பேரில் காப்பாற்றி வருகின்ற புகலிட வாழ்வுமுறை குறித்தோ லக்ஷ்மி அறியாதவரல்ல. கூடவே அதன் நெருக்குவாரங்களை அனுபவித்தவருமாவார். இப்படியிருக்க புகலிடத்தில் மிகச்சொற்ப அளவான பெண்கள் மட்டுமே ஆணாதிக்க சிந்தனைகளை, அதிகாரங்களை உடைத்து எழுதவும், எல்லோருடனும் விவாதிக்கவும், கூட்டங்களுக்கு தலைமை தாங்கவும், கூட்டங்களை நடாத்தவும் முன்வந்து கொண்டிருக்கிறார்கள் ஆனால் இப்பெண்களை ஒரே பார்வையில் பாலியல் கவர்ச்சி காட்டவும் அல்லது பெண்ணிய போலிக்கவர்ச்சி என்று ஒரு ஆணாதிக்க உச்ச சிந்தனைப் போக்கில் கூறுவதின் நோக்கம் எதுவாக இருக்கமுடியும்?

மேலும் அதற்கு என்னவிலை(?) கொடுக்கவும் தயாராக இருக்கிறார்கள் என்று எழுதுவதை யெல்லாம் என்னவென்பது? சராசரி ஆண்களாலும் பெண்களாலும் கூறப்படும், "இவர்கள் பெண்ணியம் பேசுவது எல்லா ஆண்களுடனும் படுப்பதற் காகத்தான்" என்கின்ற மோசமான ஆண் வக்கிர கருத்துக்கு ஒப்பவே காணப்படுகிறது.

கூட்டத்தில் கலந்துகொண்ட பெண்களைப் பற்றி இவ்வளவுதூரம் மோசமாகப் பார்க்கும் அளவிற்கு லக்ஷ்மியின் பார்வை பிற்போக்கானது என்பதை நான் நம்பவில்லை.

அப்போ பிரச்சனை எங்கே உள்ளது?

பெண்கள் போராடவேண்டும், உரிமைகளைக் கோரவேண்டும், அதற்காக இலக்கிய சந்திப்பு, பெண்கள் சந்திப்பு, இலக்கிய நிகழ்வு என்று விவாதங்களில் பங்கெடுப்பதெல்லாம் உடன்பாடு கொண்டவர் லக்ஷ்மி. ஆனால் இவையெல்லாம் தங்கள் விருப்பத்துக்கேற்ப மட்டுமே இருக்கவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறீர்கள். இவ்வுரிமைகள் உங்களுக்கும் நீங்கள் சார்ந்த பெண்களுக்கு மட்டுமேயன்றி எல்லாப் பெண்களுக்குமானதுமல்ல என்பதிலும் கவனமாக இருக்கிறீர்கள்.

* மேற்படி தொகுப்பை வெளியிட்ட சுகனோ, ஷோபாசக்தியோ கூட்டத்தை நடத்துவதற்கு முன்நின்ற ஏனைய பெண்களோ உங்களின் சைவவேளாளப்போக்குகளுக்கு உடன்படாதவர்கள்.

* தொகுப்பிலும் அதிகமாக தலித்திய, விளிம்புநிலை அரசியல் குறித்த அக்கறை காணப்பட்டமை.

* கூட்டத்தில் கலந்துகொண்டோர் அதிகமானோர் தலித்துகளாகவும், தலித்துகளுக்காய் குரல்கொடுப்போராய் இருந்தமை.

* இதுவரையான புகலிட நிகழ்வுகளில் இருந்து வித்தியாசப்பட்டு தன்னை ஒரு தலித் என அடையாளப்படுத்திக் கொண்டு தலைமைதாங்கிய தேவதாஸன் கூட்டத்தை நடத்தியமை.

* சாதாரண நாட்டுப்புற மக்களின் இசையான நாட்டுக்கூத்து மத்தளத்துடன் மிக இயல்பாக சாதாரணமாகவும் கூட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டமை.

* அனைத்துக்கும் மேலாக தமிழ்ப் பத்திரிகைகளின் யாழ் சைவவேளாள ஆதிக்க விளம்பரங்களை எதிர்க்கின்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்மானம் ஒன்று நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ளமை.

நிட்சயம் மேற்படி கூட்டத்தை உங்களால் ஜீரணிக்க முடியாது, இந்த வேகம் உங்கள் முற்போக்கு வேஷங்களின் எல்லைகளை கேள்விக்குள்ளாக்கும், நீங்களே உங்கள்மீது சூடிக்கொண்டிருக்கும் ஒளிவட்டங்களை மங்கச்செய்யும்.

எனவேதான் புகலிடத்தில் தலித்திய, விளிம்புநிலை விவாதங்கள் குறித்து வழமைபோல் கிண்டல்பாணியில் இந்தக் கூட்டத்தையும் திட்டமிட்டு திரித்து ஒரு மோசமான புரிதலை வாசகர்களுக்கு தர முயன்றிருக்கிறீர்கள். இல்லாமல் இவ்வெளியீடு மீதான உங்கள் விமர்சனம் நல்லெண்ணம் கொண்டதாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இருந்திருந்தால் அங்கு நிறைவேற்றப்பட்ட வேளாள ஆதிக்க வெளிப்பாட்டு விளம்பரங்கள் மீதான கண்டனத்தீர்மானம் பற்றி ஏன் வாய்திறக்கவில்லை. அதை உயிர்நிழலில் பிரசுரித்திருக்கலாமே. அதுபற்றிய அக்கறை உங்களுக்கில்லை. இவ்விளம்பரங்களின் ஊடாக பரிகசிக்கப்படும் எத்தனையோ தலித் பெண்களின் மன உணர்வுக்களை உங்களால் புரிந்துகொள்ள முடியாது. மற்றயோரின் தலித்தியச் செயற்பாடுகளை பூதக்கண்ணாடி வைத்து சேறடிக்க சந்தர்ப்பம் தேடும் நீங்கள் சைவவேளாள ஆதிக்கத்துக்கெதிரான குரல்களை சின்னாபின்னமாக்கும் முயற்சியில்தான் இறங்கியிருக்கிறீர்கள். இது உங்கள் யாழ் மேட்டுக்குடி நலன்களை மட்டுமே பாதுகாக்கும் எண்ணம் கொண்டது மட்டுமன்றி உங்கள் பெண்ணியப் புரிதல் கூட இன்றுவரை யாழ்சைவவேளாள எல்லைகளை தாண்டிவர மறுப்பதை அப்பட்டமாகத் தெரிவிக்கின்றது.

குறிப்பு:

இவை அவசியமற்றதென நான் கருதினாலும் லக்ஷ்மியின் சந்தர்ப்பவாதப் போக்கை பலரும் அறிந்துகொள்ள அவரிடம் சில கேள்விகள்:-

1- சுகனது முதலாவது தொகுப்பான "இருள்வெளி" வெளியீட்டின்போது:-
"விஸ்கி, பியர்... போன்றன கூட்டத்தில் வழங்கப்படும்" என்று நோட்டிஸிலையே அறிவிப்பு வெளியாகியிருந்தது. இந்நோட்டிசை தயாரித்ததே நீங்கள். தாங்கள் உட்பட பலரும் நல்ல போதையிலேயே கூட்டம் நடந்தது. அப்போதெல்லாம் யாரும் போர்த்திருக்கவில்லையா? (இவ்நோட்டீஸிற்கு எதிராக றயாகரனும் அப்போது றயாகரனுடன் கூட்டுச்சேர்ந்திருந்த அசோக்கும் இணைந்து இது சமூகச் சீரழிவின் தொடக்கம், கலாச்சாரக்கேடு என்று இப்புத்தகத்தில் பிரச்சனைக்குரிய விடயங்களான அரசியல் மாற்றுக் கருத்துக்களை புனைபெயரில் எழுதியவர்களை காட்டிக்கொடுத்ததை யாரும் மறந்திருக்கமுடியாது)

2- அதே கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்த கிருஷ்ணராசா அப்போது உங்கள் பார்வையில் புலியாய் இருந்த அ.ரவியை நிந்திப்பதற்காக பாலியல் (அதுவும் பெண் பாலியல் உறுப்புக்களை) நிந்தனைச் சொற்களை பாவித்தபோது அருகில் இருந்த நீங்கள் உட்பட யாரும் அதைத் தட்டிக் கேட்கவில்லையே?

3) எக்ஸில் சஞ்சிகையின் மூன்று இதழ்களை ஒன்றாக வெளியிட்டோம். நான்காவது இதழில் ஏற்பட்ட பிரச்சனையின் போது கிருஷ்ணராசா ரெலிபோனில் விஜிக்கு படுமோசமாக தூசணத்தில் பேசினார். (வேசை, பறைப்புண்டை உட்பட) இவர் ஏகப்பட்ட பெண்பாலியல் உறுப்புக்களையும், பெண்களை இழிவுபடுத்தும் சொற்களையும் ஒருவரை அதுவும் உங்களுடன் சேர்ந்து வேலை செய்த ஒரு பெண்ணை நிந்திப்பதற்காகவே பயன்படுத்தினார். அது பற்றி சேர்ந்து வேலை செய்தவள் என்கின்ற பாவத்திற்காகவாவது, அல்லது விஜி ஒரு பெண் என்கின்ற பார்வையிலாவது இது வரை என்ன விமர்சனத்தை வைத்திருக்கிறீர்கள்?
(எந்த விமர்சனமும் இன்றி அன்றுவரை வடிவமைப்பாளராக இருந்த கிருஷ்ணராஜாவுக்கு நீங்கள் புதிதாகத் தொடங்கிய உயிர்நிழல் சஞ்சிகையில் ஆசிரியராக்கினீர்கள்.)
இங்கும் லக்ஷ்மி மௌனமாக இருப்பது என்ன காரணமாக இருக்க முடியும்?

4) இங்கு புகலிடத்தை எடுத்துக் கொண்டால் இவ்வளவு காலமாக நடந்துவரும் இலக்கியக் கூட்டங்களிலும், சாதாரண சந்திப்புகளிலும், தனிப்படவும் பல இலக்கியதாரர்களாலும் இப்பாலியல் நிந்தனைச் சொற்களை தாராளமாக பாவித்திருக்கிறார்கள். உதாரணமாக சந்திப்புகளில் கலந்துகொள்ளும் பெண்களை தங்களுடைய கருத்துக்களுடன் ஒத்துவராத பட்சத்தில், திட்டவேண்டியிருப்பின் 'நீ அவனுடன் படுத்த நீ', 'நீ அவனுடன் ஓடிப்போய்விட்டு வந்துவிட்டாயா' 'அவள் பல பேருடன் படுத்தவள்' என்று அப்பெண்களை இழிவுபடுத்தும் நோக்கில் சில ஆண்களால் பேசப்பட்டவைகளை யாரும் மறுப்பதற்கில்லை. இங்கு யார் யாருக்கு கூறினார்கள் என்பதை அவன்களிடமும் அவள்களிடமும் (இப்பெண்களின் உடன்பாடின்மை காரணமாக இவர்களின் பெயர்களை பாவிக்கவில்லை.) விட்டுவிட்டு கூறியன மட்டும் கூறியிருக்கிறேன். (இதனால் பாதிக்கப்பட்ட பெண்கள் தாங்களாகவே முன்வந்து இவன்களின் முகமூடியை கிழிக்கும்வரை இவை தொடர்ந்துகொண்டுதான் இருக்கும். மாறாக இவற்றை வெளியில் சொல்வதற்கு இன்னும் அஞ்சிக்கொண்டிருப்பது இவன்களுக்கு இதுபோன்ற செயற்பாடுகளுக்கு நீங்கள் கொடுக்கும் அங்கீகாரமாகவே நான் கருதுகிறேன்.)
இந்த இடத்தில் எல்லாம் மௌனம் சாதித்ததற்கு என்ன காரணம்?

-விஜி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சக்தி, எக்ஸில், அம்மா, சமர், காலம், அசை, ஆகிய சஞ்சிகைகளுக்கும் மற்றும் புகலிட இலக்கியத்தில் ஈடுபாடு கொண்ட அனைவருக்கும்,

உயிர்நிழல் இதழ் -17 ல் வெளியான "போதை கழற்றிய போர்வை" என்ற குறிப்பில் லக்சுமியினால் வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு எம்மால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள எதிர்வினைகள் அனுப்பிவைக்கப்பட்டன. ஆனால் சமீபத்தில் வெளிவந்திருக்கும் இதழ் 18ல் 'உண்மைக்குப் புறம்பான, திரிக்கப்பட்ட தகவல்களைக் கொண்டு எழுதப்படும் கடிதங்களை "உயிர்நிழல்" தவிர்த்துக்கொள்கிறது." என்ற குறிப்புடன் எமது விமர்சனக் கடிதங்கள் நிராகரிக்கப்பட்டிருக்கின்றன.

இச்செயலை நாம் ஜனநாயகமற்றதும், கருத்துச்சுதந்திரத்திற்கு எதிரானதாகவுமே கருதுகிறோம். நாம் லக்சுமியுடன்கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவே விரும்பினோம். எமதுவிமர்சனங்களைப் பிரசுரித்துவிட்டு, அதன்பிறகு வெளிப்படையான கருத்துப்பரிமாற்றத்தை உருவாக்கியிருக்கலாம். அதைவிடுத்து எமது கருத்துக்களை வெளிவராது தடைசெய்தது ஜனநாயக கருத்துச் சுதந்திர மறுப்பே.
இக்கடிதங்கள்பற்றிய உங்கள் கருத்துக்களை நாம் எதிர்பார்க்கிறோம்....

தேவா(ஜேர்மனி), உமா(ஜேர்மனி)

## குப்புற கவிண்டால் தன்முகத்திலே...

ஜன-பெப். 2001 உயிர்நிழலில் "போதை கழற்றிய போர்வை" என்ற தலைப்பில் லக்சுமி கொட்டியிருக்கும் காழ்ப்புணர்வு குமட்ட வைக்கிறது. சனதருமபோதினி வெளியீட்டு விழாவில் கலந்து பங்குகொண்டவள் என்ற உண்மையாலும் பத்திரிகை தர்மம் என்றால் அது தவறான செய்திகளை கேள்வியுற்றால் அதனை வெளியிட முன் ஆராய்ந்தறிந்த பின் பதிப்பித்தல் சமூக பொறுப்புள்ள ஒருபத்திரிகை ஆசிரியருக்கு தேவை என்பதை அறிவுறுத்தியும் பின்வரும் விளக்கங்களை தருவது என் கடமையாகிறது.

??? பாலியல் நிந்தனைச்சொற்கள் பாவிக்கப்பட்டதாம்.
நிசம்.1 -
பங்குபற்றிய பல ஆண்கள் ஒருவரை ஒருவர் குற்றம் சாட்டி நாய்பட்டமும் கொடுத்து மாறிமாறிகுரைத்துக் கொண்டது அங்கு நடைபெற்றது. நாய்நிந்தனை இப்படி ஒருவாறாக நிறைவெய்தியபின், சனதருமபோதினியை வெளியீட்டுக்கு முன்பாகவே வாசித்துவிட்டு, அதனை விமர்சிக்க வேண்டும் என்ற மூர்க்கத்தோடு வந்திருந்தவர்களில் ஒருவரான கற்சுறா சாருநிவேதிதாவின் கதையில் கையாளப்பட்டிருந்த ஆண்பெண்பாலுறுப்புச் சொற்களைசுட்டிக்காட்டி கொதித்தார். புஸ்பராஜா அதற்கும் மேலே ஒருபடி போய் அக்கதையில் விலாவாரியாக வருணிக்கப்பட்டிருக்கும் பாலியல் உறவொன்றை மிக விஸ்தாரமாக வாசித்தார். சாருவின் எழுத்தில் ஆண்குறியும், யோனியும் (சாதகத்தில் யோனிப்பொருத்தம் என்று ஒன்று காலம் காலமாக இருப்பதைப் பற்றி ஏன் கேள்வி எழுப்பப் படுவதில்லை?) பாலியல் உறவும் படும் அல்லோல கல்லோலமும் கொஞ்ச நஞ்சமல்ல. அந்தக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கதைக்குரிய விமர்சனம்தான் அங்கு கையாளப் பட்டது. பெண்ணை இழிவு படுத்தும் பாலியற் சொற்கள் அங்கு பாவிக்கப்படவில்லை. ஆக விடயம் கதைக்குள் இருக்கும் போது, உரையாடல்களில் தூசண வார்த்தைகள் பாவிக்கப்பட்டன என லக்ஷ்மியின் காதுக்குள் போயிருக்கிறதன் அதிசயம் என்ன? பங்குபற்றியவர்களுக்கு புரிந்த இந்த உண்மை லக்ஷ்மிக்கு தெரிய வேண்டியிருப்பின் உரையாடல்களை பதிவுசெய்தவர்களுக்கு டேப்பைக் கேட்டு ஒரு மனுப்போட்டுப் பார்க்கலாம்.

??? பலரும் போதையில் இருந்ததால் தூசணவார்த்தை பாவிக்கப்பட்டதாக சமாதானம்கூறப்படுகிறதாம்.

நிசம்-2

போதையாலேதான் தூசணவார்த்தை வரும் என்ற விடயம் யாருக்குமே காது குத்தும்கதை. மதுவெறிக்கும் இவ்வார்த்தைப் பிரயோகத்திற்கும் சமரசம் செய்யப்பட்டுள்ளது. வெறியில் உளறுகிறான் என்று சமாதானங்கள் வேறு. பாலியல் நிந்தனைச் சொற்கள் பல சந்திப்புகளிலும் பேசப்பட்டுள்ளன. இதனை எத்தனை இலக்கிய காரர்கள் இல்லை என்று சொல்லுவர்? முன்னர் நடந்தவைகளெல்லாம் எந்தப் போர்வைக்குள் புகுந்தன்வாம் நிகழ்வுகளுக்கு முன்னமேயே போதை ஏறிவிடுவது சனதருமபோதினி வெளியீட்டில்தானா புதிதாக நடந்தது? (இவ்விடத்தில் இது விவகாரத்தை நிறுத்துகிறேன். விபரிக்க வெளிக்கிட்டால் எல்லாப்பக்கத்திலும் நாறலாம்.) இவ்வெளியீட்டுக்கு வந்திருந்த புதுமுகங்களுக்கு இந்த இலக்கிய காரர்களின் இலக்கியநயம் புரிய என்ன ஞாயம் உண்டாம்.

??? இந்தப்பெண்கள்... பெண்ணடிமைத் தனம்...விளிம்புநிலை மக்களுக்கான போலியானபோர்க்குரல்?

நிசம்-3
இக்கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் லக்ஷ்மியோடு சேர்ந்தே பெண்ணடிமைத்தனத்துக்கு எதிராக எப்போதும் கைகோர்த்தவர்கள். இன்னும் போர்க்குரல் எழுப்பிக் கொண்டிருப்பவர்கள். எழுப்பியவர்களைத் தூங்கவைக்க முடியாது. பாலியல் நிந்தனைச் சொற்கள் அங்குபாவிக்கப் பட்டதாம் என்ற வதந்தியை மட்டும் பற்றிக்கொண்டு நிகழ்வுக்கு வந்திருந்த பெண்களை சாடியிருப்பது தனிப்பட்ட காழ்ப்புணர்வேயன்றி வேறில்லை.

நிசம்-4.
இன, வர்க்க ரீதியாய், சாதிக்கொடுமையால், சமய அடக்குமுறையால்ஒடுக்குபவர்களுக்கெதிராக பெருங்குரலாகி அக்கறைப்படுவதும், செயல் படுவதும் பெண்ணியத்தின்கூறுகளில் ஒன்று. விளிம்புநிலை மக்களுக்காக புகலிடத்தில் குரல் எழுப்பியிருக்கும் இச்சிறியதுளியில் பெண்ணுரிமைவாதிகளும் கலந்துகொண்டு தம்பங்கினை செலுத்தியதை எப்படி போலிப்போர்க்குரலாக கூறமுடிகிறது? சனதரும போதினிஅறிமுக நிகழ்வில் கலந்துகொண்ட பெண்கள் குரல் போலிக்குரலானால் இலக்கிய, பெண்கள் சந்திப்பில் கலந்துகொள்ளும் முகங்களும் போலியே.

??? மேற்படி நிகழ்வுக்கு ஒரு பெண்தலைமை தாங்கியது, பெண்பாலியல் கவர்ச்சி,பெண்ணிய (தத்துவார்த்த) போலிக்கவர்ச்சி நோக்கிலோ...

நிசம்-5
கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் தேவதாஸ். இது அழைப்பிதழிலும் காணப்பட்டது. (விசேடமாக உயிர்நிழலுக்கு அழைப்பிதழ் கிடைக்காததால் இத் தவறு) புத்தக வெளியீடு தேவா என்று அதில் போட்டிருந்ததை லக்ஷ்மி கண்டிருக்க நியாயமில்லைதான். பெண்பாலியற் கவர்ச்சி ஒருதலைமை தாங்குதலுக்கு தேவைப்பட்டிருக்கிறது என அர்த்தம் கொடுக்கப்பட்டிருந்தால், இப்படித்தான் இன்றுவரை தலைமை தாங்க இலக்கியச் சந்திப்பிலும், மற்றய இலக்கிய நிகழ்வுகளிலும் பெண்கள் அவ்வாறுதான் பயன்படுத்தப்பட்டனரா? இக்கேள்வி எல்லாப் பெண்ணியவாதிகளையும் குறிக்கிறது. இனிமேல் இலக்கியக் கூட்டங்களுக்கு பெண்கள் தலைமை தாங்க வந்தால் அது பாலியல் பெண்கவர்ச்சிக்கும், விளம்பர வெற்றிக்குமே என லக்ஷ்மி கூறியிருப்பதை பெண்களே கவனியுங்கள். மிகக்கண்டனத்துக்குள்ளாக்கப்பட வேண்டிய இவ்வார்த்தைப் பிரயோகத்தை லக்ஷ்மி வாபஸ் வாங்க வேண்டும்.

பெண்ணியவாதியாக பிரகடனப்படுத்திக் கொள்ளுவதில் எனக்கொன்றும் அக்கறையில்லை. ஒடுக்கப்பட்டவர்களில் ஒரு அங்கமாகிய பெண்களுக்காக போராடுவதில் என்பங்கினை கொடுப்பதுதான் என் கொள்கை. மேற்படி கூட்டத்தில் பேசப்படாதவைகளை தனக்கு எதிரணியில் உள்ளவர்கள் கலந்து கொண்டார்கள் என்ற ஒரேயொரு பழிதீர்க்கும் காரணத்தை வைத்து, பாலியல் நிந்தனைச் சொற்கள் பாவிக்கப்பட்டதாக பொறுப்பற்றதன்மையில் சஞ்சிகையின் ஆசிரியரே சாடியிருப்பது அநாகரிகம். ஆண்கள் பாலியல் வார்த்தைகள் பாவித்தபோது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கிருந்த பெண்கள் தாம் அழைக்கப் பட்டிருந்ததற்காக வாயை மூடிக்கொண்டிருந் தார்கள். அதாவது அங்கு சமூகமளிப்பதற்காக என்ன விலையும் கொடுக்க அவர்கள் தயாராய் இருக்கிறார்கள் என வசைபாடியிருப்பது கண்டிக்கப்பட வேண்டியது. வேண்டாதவரை தாக்கவேண்டுமென்பதற்காக, அவனுக்குமேலே வேண்டாத பழிகளை ஏற்றி, தூற்றுவதும் அதிகாரபோதையில் இருப்பவனுக்குரிய சாகசம். நியாயத்துக்கு, உரிமைக்கு, நீதிக்கு, உண்மைக்கு போராட வேண்டி கங்கணம் கட்டிக்கொண்டவர் களும், கிசுகிசு சம்பவங்களைப் போடும் மலின சஞ்சிகைகளின் தரத்துக்கு இறங்கியிருப்பது கேவலம்.

-தேவா -

அன்புடன் லக்ஷ்மிக்கு,

உங்கள் "போதை கழற்றிய போர்வை" பற்றி உயிர்நிழலினூடாக உங்களுடன் தோழிமையுடன் சில கருத்துக்களைப் பரிமாறிக்கொள்ளவிரும்புகிறேன். பரிசில் நடைபெற்ற சனதருமபோதினி வெளியீட்டு விழாவிற்கு உங்களைப்போலவே நானும் செல்லவில்லை. அக்கூட்டத்தில் பெண்களை அவமதிக்கும் தூஷண வார்த்தைகள் பாவிக்கப்பட்டிருந்தால் அது நிச்சயமாக விமர்சிக்கப்படவேண்டியதாகும். இக்கூட்டத்திலேயே எதிர்க்கப்பட்டிருக்க வேண்டும். (உங்களுக்கு தகவல் தந்தவரும் இதை நிச்சயம் செய்திருக்க வேண்டும்)

அக்கூட்டத்திற்குச் சென்ற சில தோழிகளிடம் இது பற்றி வினவிய போது, அங்கு தூஷணம் பேசப்படவில்லையெனக் கூறினார்கள். அவர்கள் வார்த்தையில் எனக்கு நம்பிக்கையுள்ளது. அக்கூட்டத்தில் கலந்து கொண்டோர் சிலர் ஒருவரையொருவர் நாயே என விளித்துக் கொண்டதாகவும் ( நாய் தூஷண வார்த்தையல்ல. நாம் அப்படிக் கொள்வோமாயின் மனிதரை விட நன்றியுள்ள அந்த அப்பாவி மிருகத்திற்கு நாம் துரோகம் செய்கிறோம்), அத்தொகுப்பில் வெளியான சாருநிவேதிதாவின் "உன்னத சங்கீதம்" என்ற அபத்தமான கதை(?)யில் யோனிபற்றி எழுதியிருப்பதற்கு புஸ்பராஜவும், கற்சுறாவும் விமர்சனம் வைத்ததாகவுமே நான் கேள்விப்பட்டேன். யோனி எமது உரித்து. எமது உடலின்அங்கம். இதை நாம் தூஷணமாக எடுத்துக்கொள்ளலாமா? எமக்குச் சொந்தமான பொருளொன்னைப் பற்றி ஆண்கள் பரிகசிப்பதும், அதையொரு பண்டமாகப் பாவிப்பதையும் நாம் எதிர்க்கவேண்டும். அக்கூட்டத்தில் ஆண்கள் மட்டுமே இக்கதையை விமர்சித்தது கவலைக்குரியதுதான். எனக்கு கேள்விப்பட்டவற்றை வைத்து எழுதுவது சிறிது பயமாகத்தான் உள்ளது. (கேள்விச் செவியன் ஊரைக்கெடுத்தான் என்றொரு பழமொழி உண்டல்லவா? நானும் நீங்களும் சேர்ந்து ஊரைக் கெடுக்கமால் இருக்க முயற்சிப்போம்.)

இவை ஒருபுறமிருக்க . . .

உங்கள் விமர்சனத்தில் நீங்கள் குறிப்பிட்டிருந்த இரு விடயங்கள் என்னைக் கோபத்திலும் அதே சமயம் வேதனையிலும் ஆழ்த்தியது.

நிகழ்ச்சிகளுக்கு பெண்கள் தலைமை தாங்குவது முதலாளித்துவத்தின் விளம்பர வெற்றி அல்லது பெண்ணிய (தத்துவர்த்த) போலி கவர்ச்சி நோக்கிலா எனக் கேள்வியெழுப்பியுள்ளீர்கள். ஆண்களே கூட்டம் கூட்டி, அவர்களே தலைமை தாங்கி, அவர்களே பேசி, அவர்களே விமர்சித்து, நடைபெறும் நிகழ்வுகள்தானே காலகாலமாக நடைபெற்றுவருகின்றன. இவை பெண்களுக்குச் சம்பந்தமற்ற விடயங்களாகத்தானே கருதப்படுகிறது. பெண்ணைப்பற்றிக் கதைத்தாலும் நாம்தான் கதைப்போம். பெண் விடுதலை பற்றியும் தமக்குத்தான் தத்துவார்த்த ரீதியாகத் தெரியும் என்று தானே ஆண்களின் மண்டைக்குள் இன்னும் இருக்கிறது. பெண்களும் நிகழ்ச்சிகளை நடத்தலாம், எம்மாலும் தலமை தாங்கி ஒரு நிகழ்வை நடத்தமுடியும் ஆண்களுக்குச் சரிநிகராக விவாதிக்கமுடியுமென்று நாம் நிருபிக்கத் தொடங்கிவிட்டோம். புகலிடத்தில் நடைபெறும் இலக்கியச்சந்திப்பில் ஆரம்பத்திலிருந்து பெண்கள் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதும், கருத்துத் தெரிவிப்பதும் ஒரு போராட்டமாகத்தானேயிருந்தது. ஏனைய நிகழ்ச்சிகளை ஆர்வத்தோடு அமைதியாக செவிமடுத்துக்கொண்டிருப்போர், பெண்விடுதலை சம்பந்தமான நிகழ்ச்சிகள் ஆரம்பித்தவுடன் ஓரே மறுப்பும், சத்தமும், பரிகாசமும். இவையெல்லாம் தாண்டி நாங்கள் நிகழ்ச்சிகளை நடத்தினோம். கருத்துச்சொன்னோம், தலமை தாங்கினோம். இவையெல்லாம் முதலாளித்துவ விளம்பர வெற்றியா? அல்லது பாலியல் கவர்ச்சியா? அப்படி நினைத்திருந்தால் இந்நிகழ்ச்சி செய்த ஒரு பெண்ணும் நிச்சயமாகக் கலந்து கொண்டிருக்க மாட்டாள். ஏன் நாம் பத்து வருடங்களிற்கு மேலாக் பெண்கள் சந்திப்பைத் தனித்து நடாத்தி வரவில்லையா? எத்தனையோ தடைகள்? எத்தனையோ கேள்விகள்? எத்தனையோ கேலிகள்? லேடிஸ் கிளப் ஆகாமல் பார்த்துக் கொள்ளுங்கோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ற ஆண்களின் அட்டைவசுக்கள்? இதை நாம் விளம்பரத்திற்காகவா செய்கிறோம்? பெண்களுக்கு நிகழ்ச்சிகள் கொடுக்க வேண்டுமென்று சம்பிரதாயமாக ஒரு நிகழ்ச்சி கொடுக்கப்படும் நிகழ்வுகளும் உண்டு. இந்த பிச்சை போடும் செயலை நான் வெறுக்கிறேன். பெண்கள் பெண்கள் தொடர்பான விடயங்களில் மாத்திரம்தான் கருத்துத் தெரிவிக்கவேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால் நாம் இச்சமூகத்தில் ஒரு அங்கம். நாம் இரண்டாந்தர பிரஜையாக நடத்தப்படுகிறோம். நாம் இச்சமூகத்தில் ஒடுக்கப்படுகிறோம். ஆகையால் எம்மைப்பற்றிக் கதைக்க, அதுவும் எம்மை ஒடுக்கும் இச்சமூக அமைப்பில் ஆதிக்கநிலையிலிருக்கும் சமூகத்தின் பிரதிநிதிகளான ஆண்களுடன் சரிக்குச்சமன் உட்கார்ந்து எம்மை ஒடுக்கும் காரணிகள் பற்றி கதைப்பது முக்கியமல்லவா? இவையெல்லாம் நான் சொல்லித்தான் உங்களுக்குத் தெரியவேண்டு மென்பதில்லை.


அடுத்து . .

"போதாதிற்கு இவர்கள் தங்களைப் பெண்ணியவாதிகள் என்றும் அறிமுகம் செய்து வருகிறார்கள். அதற்கு என்ன விலை(?) கொடுக்கவும்தயாராக இருக்கின்றார்கள்." இவ்வரிகளின் அர்த்தம் எனது சிற்றறிவிற்குப் புரியவில்லை. என்ன விலையென்பதன் அர்த்தம் என்ன? பெண்விடுதலை பேசுபவர்கள் ஒழுக்கமற்றவர்கள்(?) எதையும் செய்ய துணிந்தவர்கள. இந்த எதையும் என்பதன் அர்த்தம்-எந்த ஆணுடனும் படுப்பார்கள், இந்த சந்திப்புகளுக்கு பெண்கள் வருவதே ஆண்களுடன் படுக்கத்தான் என்று ஆண்களால் சொல்லப்படும் கதைகளுக்கு உங்கள் கருத்து ஒப்பானதாக வேயுள்ளது.

உங்கள் விமர்சனத்தில் பெயர் குறிப்பிடப்படாவிட்டாலும் நீங்கள் இங்கு விமர்சித்திருப்பது தோழி தேவா ஹெரோல்டை. புகலிட இலக்கியத்திலும் சரி , இலக்கியம் மற்றும் நிகழ்வுகளிலும் சரி தேவாவின் பங்கு அளப்பரியது. தொடர்ந்து எல்லா நிகழ்வுகளிலும் தன்னை இணைத்துக்கொண்டு தனது காத்திரமான பங்களிப்பைச் செய்து வருபவள். தானே முன்வந்து பொறுப்புக்களை ஏற்று எந்தவித படாடோபமுமின்றி செய்துமுடித்து, ஒருவருக்கும் தெரியாமல் ஒருமூலையில் அமர்ந்திருப்பார். தன்னை அவர் எந்தவொரு குழுவினிலும் இணைத்துக் கொள்ளவுமில்லை. எமது துரதிஷ்டம். புகலிட இலக்கியச்சூழலின் அவலம். இன்றைய தனிப்பட்ட விரோதங்கள், குழுச்சண்டைகளிற்குள் தேவாவும் பகடைக்காயாக சிக்கித்தவிப்பதுதான். இவ் விமர்சனத்தைத் தொடர்ந்து, தம்மை எந்தப் பொது விடயங்களிலும் தம்மை இணைத்துக் கொள்ளாத வர்களும் தேவாவிற்கு எதிராக சேறு பூச முனைகிறார்கள்.

இலக்கியங்கள் இலக்கியங்களாக விருக்கட்டும். ஒருவரது உழைப்பிற்கு மதிப்பளியுங் கள். ஒருவரையும் ஒருவர் விமர்சிக்கக்கூடாது என நான் கூறவரவில்லை. விமர்சனத்தில் உண்மையும், நேர்மையும் வேண்டும். வெறும் குழுச்சகதிக்குள் ஒருவரையும் முத்திரைக்குத்தி தள்ளிவிடாதீர்கள். இது நேர்மையான இலக்கியத்திற்கு அழகல்ல

-உமா-




# வடிவங்கள்

(Slide Show)

கடனா "அகவி" வட்டம் நிகழ்த்தும் ஜீவனின் ஓவியக் கண்காட்சி.

காலம்: July $28^{th}$ 5 pm

இடம்: Scarborough village
Recreation centre
3600 Kingston Road
Scarborough
(Markham & Kingston)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 16 ஜுன் 2001 அகதிகள் நாடாளுமன்றம்


பிரான்சின் நாடாளுமன்றம் கடந்த ஜுன் 16ம் திகதி அகதிகள் நாடாளுமன்றமாகப் பிரகடனம் செய்யப்பட்டது. அகதிகள் உரிமையை முன்னிறுத்தி, ஓர் நாடு தனது நாடாளுமன்றத்தை அகதிகளுக்காக ஒரு தினம் முழுவதும் ஒதுக்கியது இதுவே முதல் தடவையாகும். பிரெஞ்சு நாடாளுமன்றத் தலைவரான (சபாநாயகர்) Reymond Forni இனதும் HCR (Le Haut Commissariat des Nations Unies Pour les Réfugiés) ஆர் இனதும் கடுமையான உழைப்பினாலேயே இத்தகைய ஓர் நிகழ்வு சாத்தியமாகியது.

ஜெனிவா அரசியல் சாசனம் கையெழுத்திடப்பட்டதினதும், HCR இனதும் 50வது 'ஆண்டு தினத்தைக் கொண்டாடும் இந்த ஆண்டில் இத்தைகைய ஓர் நிகழ்வு நடப்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 16ம் திகதி பிரெஞ்சு நாடாளுமன்றத்தின் 577 இருக்கைகளிலும் உலக நாடுகளைச் சேர்ந்த 577 அகதிகள் இருந்து, "பாரிஸ் அழைப்பை" ஜெனிவ்வாவை நோக்கி விடுத்தனர். 28 ஜுலை 1951 ஆம் ஆண்டு ஜெனிவாவில் கையெழுத்து வைக்கப்பட்ட அகதிகள் சாசனத்தை வலுப்படுத்துவதும், இதனை நடைமுறைப்படுத்துவதில் கூடுதல் அக்கறையை கையெழுத்திட்ட நாடுகள் காட்டவேண்டும், அகதிகளுக்குத் தஞ்சம் தரும் வறுமை நாடுகளுக்கு வளர்ச்சியடைந்த நாடுகள் பொருளாதார ரீதியாக கூடுதல் உதவிகளைச் செய்ய வேண்டும், அகதிகளாக வந்தவர்களை அவர்களது தேசங்களுக்குத்' திருப்பி அனுப்பக்கூடாது எனும் அம்சங்களைச் சாராம்சமாகக் கொண்டதே "பாரிஸ் அழைப்பு". ஜெனிவா அகதிகள் சாசனம் கையெழுத்திடப்பட்ட 50 ஆவது ஆண்டு நிறைவு தினம் ஜெனிவாவில் 12 டிசம்பர் 2001 இல் நடைபெறவுள்ளது. பிரஸ்தாப சாசனத்தில் கையெழுத்திட்ட நாடுகள் கலந்து கொள்ளும் இந்த நிகழ்வில், இவைகளது கவனத்திற்காக "பாரிஸ் அழைப்பு", 577 அகதிகளின் கையெழுத்தோடு அனுப்பிவைக்கப் பட்டுள்ளது. இந்த அழைப்பில் தமிழ் அகதிகள் பலரது கையெழுத்துகள் இடம் பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

16ஆம் திகதி அகதிகள் நாடாளுமன்ற வேலைத் திட்டத்தை முடித்து வைத்துப் பேசிய பங்களாதேஸ் எழுத் தாளரும், சொந்தநாட்டில் மரணதண்டனை விதிக்கப்பட்டு தற்போது ஐரோப்பாவில் அகதியாய் வாழ்பவருமான தஸ்லீமா நஷ்ரீன் பேசுகையில் "அகதிகளுக்குத் தஞ்சம் கொடுக்கும் நாடுகள், எந்த நாடுகளிலில் இருந்து அகதிகள் வந்தனரோ அந்த நாடுகளுக்கு ஆயுதங்களை விற்பதைத் தடைசெய்யவேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

இதேவேளையில் பிரான்ஸின் மனித உரிமைகளுக்கான ஆலோசனைக் கமிசன் (La Commision Consultative des droits de l'homme - CNCDH) பிரான்ஸின் அகதிகள் மீதான அரசியலின் பலகட்டங்கள் மனிதரீதியில் அதிர்ச்சியைத் தருவதாக உள்ளதாகவும், இது தொடர்பாக ஓர் அடிப்படை மாற்றம் தேவையென்றும் அரசுக்கு வழங்கிய பிரேரணையொன்றில் குறிப்பிட்டுள்ளது.






தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லாவற்றையும் சந்தேகியுங்கள்:
## விசேடமாக வெள்ளாளனைச் சந்தேகியுங்கள்

தன்னை திரும்பவும் திரும்பவும் சாதியத்துக்கு எதிரானவன் என்று நிரூபிக்காதவரை ஒவ்வொரு வெள்ளாளனும் சாதி வெறியனே!

**தோழர் யோவல் போல்**
**அவர்களின் நூற்றாண்டு நினைவாக 04.02.2001 ல் பிரான்சில் வெளியிடப்பட்ட சனதரும போதினி வெளியீட்டு நிகழ்வில் கீழ்வரும் தீர்மானத்தை நாங்கள் நிறைவேற்றுகிறோம்.**

# தீர்மானம்

இலங்கையிலிருந்து வெளிவரும் தேசிய நாளிதழ்களான வீரகேசரி, தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகளில் நீண்ட நெடுங்காலமாக விளம்பரப்பகுதிகளில் சமூகத்தின் ஆண்டாண்டு காலக் கசடாகிய சாதீயப் படிநிலைகளை முன்னிறுத்தி திருமண விளம்பரங்களைப் பிரசுரித்து வருகிறார்கள். வருணாச்சிரமச் சூதால் திணிக்கப்பட்ட சாதீய முரண்களை, சாதீயக் கொடுமைகளை, மானுடவிரோதத்தை கட்டிக்காப்பாற்றுபவர்களாகவே இவ் விளம்பரங்களைப் பிரசுரிக்கும் பத்திரிகையாளர்களை நாங்கள் கருதுகிறோம்.

எனவே சாதீயம் ' சொல்லி வெளியிடும் விளம்பரங்களை வீரகேசரி, தினக்குரல், தினகரன் போன்ற பத்திரிகைகள் உடனடியாக நிறுத்திக் கொள்ள வேண்டுமென நாங்கள் வலியுறுத்துகிறோம். நிர்ப்பந்திக்கிறோம்.

எழுந்தமானமாக நாங்கள் இந்த தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. வேறெந்த அமைப்புக்களினதோ, இயக்கங்களினதோ, நிறுவனங்களினதோ பின்னணியுடனும் நாங்கள் இந்த தீர்மானத்தை நிறைவேற்றவில்லை. நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்ட சாதீயக் கொடூரங்களுக்கு எதிராக களங்களிலும், நுண்தளங்களிலும் நடைபெறும் கலகங்களின் போராட்டங்களின் தொடர்ச்சியாகவே நாங்கள் இந்த தீர்மானத்தை நிறைவேற்றுகிறோம். சாதீயம் காப்பாற்றும் விளம்பரங்களை இப்பத்திரிகைகள் நிறுத்தும்வரை இப்பிற்போக்கு பத்திரிகைகளை நிராகரிக்குமாறு ஒவ்வொருவரையும் நாம் கோருகிறோம். குறிப்பாக இப்பத்திரிகைகளில் இலக்கியப்புனைவுகள், அரசியல் விவாதங்கள் எழுதியும், பேட்டிகள் வழங்கியும் வரும் ஊடகச் செல்வாக்கு மிகுந்தவர்களான கா.சிவத்தம்பி, சி.சிவசேகரம், எம்.ஏ.நுஃமான், சித்திரலேகா, செல்வி திருச்சந்திரன், கே.எஸ்.சிவகுமாரன், லெனின் மதிவாணம், மு.பொன்னம்பலம், வ.ஐ.ச.ஜெயபாலன், சு.வில்வரத்தினம், தெ.மதுசூதனன், ந.ரவீந்திரன்... போன்றவர்கள் இச்சாதீய விளம்பர ஒழிப்பு விசயத்தில் முன்கை எடுக்கவேண்டுமென்று நாங்கள் தோழமையுடன் கேட்டுக்கொள்கிறோம். மாற்றுப் பத்திரிகைகளான சரிநிகர், ஆதவன், மூன்றாவது மனிதன், பெண், யாத்ரா போன்ற பத்திரிகைகளும், சாதீயம் காப்பாற்றும் பத்திரிகைகளுக்குமேல் அழுத்தங்களை பிரயோகிக்க வேண்டுமென உரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

புலம்பெயர் சிறுபத்திரிகைகள், மாற்றுக்கலாச்சார அமைப்புக்கள் போன்றவை இத்தேசிய பத்திரிகைகள் 'சாதீய விளம்பரங்களை' நிறுத்தும்வரை இப்பத்திரிகைகளை நிராகரிக்கவேண்டுமென்றும், உரிமையுடனும், தோழமையுடனும் கேட்டுக்கொள்கிறோம்.

தேவா ஹெரால்ட்
சி.புஸ்பராசா
அ.தேவதாசன்
இ.அந்தோனிப்பிள்ளை
கைலைநாதன்
செ.சுந்தரலிங்கம்
கு.லீனஜா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விஜி
ஜெபா
கோவை நந்தன்
அர்விந் அப்பாத்துரை
சி. பிரியதர்சினி
தி.உமாகாந்தன்
எம்.ஆர்.ஸ்ராலின்-
சி.மனோகரன்
உதயகுமார்
ச.தில்லை நடேசன்
சு.கருணாநிதி
இயல்வாணன்-
இ.குணரத்தினராசா
அருந்தவம்
ஷேஷாபாசக்தி
சுகன் (இலக்கிய சந்திப்பு சார்பில்)
கற்சுறா

மேலே கையெழுத்திட்டவர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு இத்தீர்மானத்தை ஏற்றுக் கொண்டவர்கள்.

மேலும்

எக்ஸில், அம்மா, சுட்டுவிரல் போன்ற பத்திரிகைக் குழுக்களும் இதை வலியுறுத்துகின்றன. மேலும்

இத்தீர்மானத்தை பரந்த மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்காகவும், மாற்றுக் கருத்துக்கள், அபிப்பிராயங் களுக்காகவும் இச்சாதீய விளம்பர ஒழிப்புப் போராட்டத்தில் தங்களையும் ஈடுபடுத்துவோர் தங்கள் பெயர், முகவரி போன்றவற்றை தொடர்ந்து இவ் இணையத்தில் பதிந்து கொண்டு உங்கள் நண்பர்களுக்கும் அனுப்பி இறுதியாக இந்த மின்னஞ்சலுக்கே திருப்பி அனுப்பவும்.

மின்னஞ்சல் முகவரி : Exil-inba@infonie.fr

மேலும் இதில் மின்னஞ்சல் மூலம் கையெழுத்திட்டவர்கள்
சக்கரவர்த்தி (கனடா)
கருணா (கனடா)
ரஞ்சி (சுவிஸ்)
சித்தார்த்த சேகுவரா (அமெரிக்கா)
(இந்த தீர்மானத்துக்குள் இடம் பெறும் இலக்கிய பிரமுகர்கள் பட்டியலுக்கு அப்பால் நின்றும், தீர்மானத்துக்குள் நின்றும்)
கலாமோகன் (பிரான்ஸ்)
அனார் (இலங்கை)
அஸ்மி (பிரான்ஸ்)
ரவி (சுவிஸ்)
ராகவன் ஜேர்மனி)
சகீப் (இலங்கை)
மன்சூர் (இலங்கை-வடகிழக்கு முஸ்லிம்களின் உரிமைகளுக்கான அமைப்பு)
உமா (ஜேர்மனி)
அனுசியா (அமெரிக்கா)
முரளி (ஜேர்மனி)

மேலுள்ள அறிக்கையில் உள்ள கருத்துக்களோடு உடன்படும் நாங்கள் அதில் கண்ட விஷயங்களை வழிமொழிந்து கையொப்பமிடுகிறோம்.

அ.மார்க்ஸ் (சென்னை)
வளர்மதி (சென்னை)
யவனிகா ஸ்ரீராம் (சின்னாளப்பட்டி-தலைகீழ் இலக்கிய அமைப்பு)
சுகுணா திவாகர்- (திண்டுகல் - தலைகீழ் இலக்கிய அமைப்பு)
செல்மா ப்ரியதர்ஷன் (திண்டுகல்-தலைகீழ் இலக்கிய அமைப்பு)
இனியன் (திண்டுகல்-தலைகீழ் இலக்கிய அமைப்பு)
தமிழ் மன்னன் (திண்டுகல்-தலைகீழ் இலக்கிய அமைப்பு)
மார்டின்- (கோயம்பத்தூர் -விளிம்புகள்)
நெர்யல் (கோயம்புத்தூர் - விளிம்புகள்)

* மேலும் இவ்வறிக்கையுடன் உடன்படுபவர்கள் உங்கள் கையெழுத்துக்களையும் இணைத்து இப்பத்திரிகைகளுக்கு அனுப்பி வைக்கவும். ●

எழுத்தாளர் குமார் மூர்த்தி ஜுலை 27ம் திகதி சென்னையில் காலமானார். பல சிறுகதைகளும், கட்டுரைகளும் எழுதியுள்ள இவரின் "முகம் தேடும் மனிதர்கள்" சிறுகதைத் தொகுப்பு 1995இல் வெளியானது. வடக்கிலிருந்து முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டமை தொடர்பான அவரது "ஹனிபாவும் இரண்டு எருதுகளும்" சிறுகதை பிரபலமானது.

இலங்கையில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான சில நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தார். காலம் சஞ்சிகையோடு தொடர்பானவர். கனடாவில் வசித்துவந்த இவருக்கு இவரது உடல் நிலையைக் காரணம் காட்டி (சிறுநீரகக் கோளாறு) நிரந்தர வதிவிட உரிமையைக் கனடிய அரசு வழங்க மறுத்துவிட்டது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இருள்வெளியிலிருந்து சனதருமபோதினி...

**வெளியீடு**




**-கற்சுறா.**

**Sugan&Sobasakthi**
**Sana dharma Bodhini**
**adaiyalam**
**H15 193,IIFloor,**
**Karapur Road**
**Puthanatham621 310**

சனதரும போதினி சின்னக் கதையாடல்கள் தொகுப்பு வெளியீடு பாரிசில் சபாலிங்கம் மண்டபத்தில் ஒரு ஞாயிற்றுக்கிழமை பி. பகல் நடைபெற்றது. தொகுப்பு தலித்திய விடயங்களைத் தாங்கியும் மறுக்கப்பட்ட குரல்களை பேசுவதாகவும் அமைந்ததால் எல்லோரும் பலவித எதிர்பார்ப்புகளுடன் கலந்து கொண்டார்கள். நிகழ்வில் மதுவும்(மது என்ன மது ச...ர...க்..கு.) மாட்டிறச்சிக் கறியும் வழங்கப்பட்டது. ஏறத்தாழ 35 பேர்வரையில் இலக்கிய நண்பர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்வை தேவதாசன் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார். கூட்டம் தில்லை நடேசனின் நாட்டுக் கூத்து பாடலுக்கு .... ஆட்டத்துடன் தொடங்கியது. ஜேர்மனியில் இருந்து வந்திருந்த தேவா ஹெரால்ட் அவர்கள் உரையாற்றி தொகுப்பை வெளியிட்டு வைக்க ஜெபா அவர்கள் பெற்றுக் கொண்டார். நிகழ்வு வெகு அமர்க்களமாகத் தொடங்கியது. நான்கு வருடங்களுக்கு முன்னர் இருள்வெளித் தொகுப்பும் இதே மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டதை எல்லோரும்நினைத்துக் கொண்டார்கள். தொகுப்பின் விமர்சனங்களை நாதன், கற்சுறா, புஸ்பராசா, போன்றோர் தொடக்கிவைத்தனர். விமர்சனங்கள் தொகுப்பின் மீதே குறியாய் இருந்து கன்னா பின்னாவென கருத்துக்கள் பரிமாறப்பட்டன.(இங்கே விமர்சித்தவர்கள் குடித்திருந்தார்கள் என்பதைக் கவனிக்கவும்) கசடுதட்டிப்போன ஜகஜா பண்ணுகிற நூல்விமர்சனங்களையே எதிர்பார்த்திருந்தோருக்கு கொஞ்சம் விசரைக் கிழப்பியிருக்கும். விமர்சனங்கள் எவ்வித முகத்துதிபாடலும் இன்றி காரசாரமாக முன்வைக்கப்பட்டன.

இன்று சனதரும போதினி மாதிரியான தொகுப்புக்களின் அவசியத்தை எல்லோரும் உணர்ந்து கொண்டிருப்பார்கள். எப்படியாவது எழுகின்ற தலித்திய எழுச்சிகளை நல்லவர்களாய் நடித்து பூண்டோடு அழித்து விட சர்வதேச லெவலில் கூட்டுச் சேர்ந்திருக்கும் கோஸ்டியைக் நாம் கவனிக்க வேண்டும். எவ்வித சுரணையும் இல்லாது நல்ல இலக்கியம் காட்டிக் கொண்டு இருக்கும் இவங்களுக்கு, இதுதாண்டா இலக்கியம் எண்டு அடிக்கடி புட்டுக் காட்ட வேண்டியிருக்கிறது. அதைவிட புகலி டத்தில் எங்க சாதிப் பிரச்சனை இருக்கிறது? சாதியெண்டால் நைக்கா? அடிடாஸா? என்றுதானே கேட்கிறார்கள். எண்டுசொல்லி பம்மாத்து விடும் பாரதிதாசன் தரவளிகளுக்கு புகலிடத்தில் இருக்கின்ற கோவில் திருவிழாக்கள் எப்படி சாதிய அடுக்கில் கொண்டாடப்படுகிறது என்பதும் தெரியாமல் இல்லை. ஆனாலும் அந்த சொந்த சாதியைக் காப்பாற்றுகிற புத்தி போகுதா பாரு. இன்றைக்கு வெளிநாட்டில இருக்கிறவங்களே பத்திரிகைகளில், இன்டர் நெட்டில் (விதம்விதமாய் சாறிகட்டிய பெண்களின் அசையும்-அசையா படங்களை போடுகிறார்கள்)லண்டன் வாழ் இந்து உயர்குல, கனடாவாழ் சைவ வேளாள, என்று போடுகின்ற அளவுக்கே இன்னும் நிலைமை இருக்கிறது. இந்த லட்சணத்தில நாம் திருந்திவிட்டோம் என்று காட்டாப்புக் காட்டுகிறார்கள். புகலிடத்தில் எல்லோருமே தலித்துக்களாம்.ஆனால் புகலிட இலக்கிய ஆதர்சத்தின் பெயர் பத்மநாப, ஐயராம். எம்மால் குண்டியால் மட்டுமே சிரிக்க முடிகிறது. பார்ப்பானை ஐயரென்ற காலமும் போ...(எடிட்.டாரியலிலிருந்து.)இவர்களின் இந்தக் கருத்துக்களுக்கு இருள்வெளிக்குப் பின் இரண்டாவது தடவையாக கொள்ளி வைத்து விட்டிருக்கிறது சனதரும போதினி.

சனதரும போதினி இங்குள்ள சாதிமான்களின் குண்டியில் விளக்கெண்ணையை தடவி விட்டுள்ளது. சனதருமபோதினியின் பின்னட்டையில், பத்திரிகைகளில் காணப்படும் சாதி விளம்பரங்களை குறிப்பிட்டதுடன், வெளியீட்டில் அன்று கலந்து கொண்ட அனைவரும் பத்திரிகைகளில் சாதி



நாதன், ஜெபா, தேவாஹெரால்ட், தேவதாசன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விளம்பரங்களை நிறுத்தக் கோரி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அந்தத் தீர்மானம் எல்லாவற்றையும் சந்தேகியுங்கள். குறிப்பாக வெள்ளாளனைச் சந்தேகியுங்கள். என்ற தலைப்பில் காலங்காலமாக உயர்குல இந்து வேளாளன் என்ற சாதி அடையாளத்துடன் திருமண விளம்பரங்களை பிரசுரித்து வரும் பத்திரிகைகளை கண்டித்து சாதிவிளம்பரங்களை நீக்க வேண்டும் எனக் கோரி கலந்து கொண்டவர்கள் அனைவரும் கையெழுத்திட்டு நிறைவேற்றப்பட்டது. இந்தத் தீர்மானமே அனேக சாதிமான்களை கிலிகொள்ள வைத்துள்ளது என்பதற்கு, அவர்கள் சனதர்மபோதினி தொகுப்பையும், வெளியீட்டு நிகழ்வினையும் வெறும் விளையாட்டாகக் காட்டும் எத்தனிப்புகளிலிருந்து இலகுவாகப் புரிந்து கொள்ள முடியும்.

கலந்து கொண்டவர்கள் மதிமயங்கிய குடிபோதையில் இருந்தார்கள் என்றும், சாதிய விளம்பர எதிர்ப்பு தீர்மானத்தில் கையெழுத்திட்டதை குடிபோதையில் வெள்ளைத் தாளில் கையெழுத்து வாங்கினார்கள் என்றும் அசட்டுத் தனமான பொய்களை எழுதி(பார்க்க உயிர்நிழல் Jan- feb 2001) க் கொள்வதின் மூலம் இவர்கள் பரிந்துரைப்பது எதனை? தங்களுக்கேயான அதிகாரத் தொனியில் மீளவும் ஒருமுறை பொய்யும் புரட்டும் எழுதி மழுங்க டிக்க முயற்சிக்கிறார்கள்.

சனதரும போதினி தொகுப்பு தமிழீழ விடுதலைப் போராளிகளால் மின்கம்பங்களில் சுட்டுக் கொல்லப்பட்ட பாலியல் தொழிலாளர்கள்-திருடர்கள்-மனநோயாளிகளுக்கு...சமர்ப்பணமாகியிருப்பது ஒன்றும் விளையாட்டுக்குப் போடப்பட்ட விடயமல்ல என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். (கூடவே குடிகாரர்களையும் சேர்த்துக் கொண்டிருக்க வேண்டும்).கொன்றவர்களுக்கு வேண்டுமானால் விளையாட்டாக இருக்கலாம். தமிழீழ விடுதலைப் போராளிகள் எனப்படுபவர்களெல்லாமே திருடர்களாகவும், பாலியல் வக்கிரம் கொண்டவர்களாகவும், குடிகாரர்களாகவும் ஒருவித மனநோயாளர்களாகவுமே இருந்து கொண்டு மற்றவர்களை மின்கம்பத்தில் கட்டிச் சுட்டுக் கொன்றவர்கள். ஈழத்தில் உள்ள அத்தனை மின்கம்பங்களும் ஆகக்குறைந்தது ஒவ்வொரு உடலைத் தாங்கியே இருக்கும். எனது கிராமத்தில் குடிகாரன் ஒருவனை மின்கம்பத்தில் கட்டி விட்டு தாகத்திற்கு தண்ணீர் கேட்டபோதெல்லாம் சாரயம் பருக்கி அவன் குடும்பத்தின் முன்னால் சாகடித்தவர்கள் ஈழப்போராளிகள்தான். அதைவிட பாலியல் தொழிலாளர்கள் எனக் கூட்டிப்போய் தங்கள் பாலியல் தேவையையும் முடித்து விட்டு சுட்டுத் தெருவில் போட்டவர்கள் நமது ஈழப் போராளிகள். இப்படிக் கொல்லப்பட்டவர்களுக்கு சமர்ப்பணம் செய்திருப்பது தொகுப்பின் மீதான கவனத்தைக் அதிகரித்திருக்கிறது. இது ஒடுக்கப்பட்டவர்களின் தொகுப்பு.

இத்தொகுதி தாமிரபரணிப் படுகொலைகள், கண்டதேவி கோவில் பிரச்சனை, பழங்குடி மக்களின் வாழ்வியலையும், பாடசாலைகளில் சாதியம் எப்படிஇருக்கிறது என்பதை, தலித்துக்களின் வாழ்க்கையின் உண்மைத் தன்மையை,உயர்சாதிகளுக்கெதிரான தலித் மக்களின் கேலிக் கதைகளும், தலித் சிறுகதைகளும், கவிதைகளும் தாங்கி ஒடுக்கப்பட்டவர்களின் குரல்களை அதிகமாகக் கொண்டிருந்த போதிலும், அவற்றை ஒற்றைக் கம்பியினால் தள்ளிக் கொண்டு போய் காடாத்தி விடுகின்றது உன்னத சங்கீதம் என்ற சிறு கதை. இதுவே அனேக சாதிமான்களுக்கு இலகுவாய் தொகுப்பை துட்டிக் கழிக்க வசதியாய் போன விடயமும் கூட அந்தப் 12 பக்கமும் மற்றய 218பக்ங்களையும் கண்டுகொள்ளாமல் விட வசதியேற்படுத்திக் கொடுத்துள்ளது அவர்களுக்கு.

அதைவிட அன்றைய வெளியீட்டில் சாருவின் உன்னத சங்கீதம் கதை விளாவாரியாக அனேகரால் விமர்சிக்கப்பட்டது. அந்தக் கதையினை ஒருவர் விமர்சனத்துக்கு எடுத்துக் கொள்ளும்போது அதில் வருகின்ற சொல்லாடல்களைத் தவிர்த்து விட்டு விமர்சிக்கப்படவேண்டும் என்பதன் புனித வாதத்தை என்னவென்பது? சாருவின் கதையின் தாக்கம், அதில் ஒவ்வொரு வரிகளும் கட்டமைக்கப்பட்ட விதம் என்பவற்றை புஸ்பராசா வாசித்துக் காட்டியதையும், இதுவரை பாலியல் விவகாரங்கள், பாலியல் சொல்லாடல்கள், இந்த யோனி சுன்னி,முலை எல்லாம் எழுத, எழுத வாசித்து வெறுப்பு வந்து விட்டது, தயவு செய்து இனியாவது நிறுத்துங்கோ என்று கற்சுறா சொன்னதையும் மொண்ணைத் தனமாக கெட்ட வார்த்தையில் பேசினார்கள் என்று ஒற்றை வரியில் எழுதி (சக்தி- உயிர் நிழல்)கூட்டத்தை திசைதிருப்பிக் காட்டுவது போக்கிலித் தனம் இல்லாமல் வேறென்ன?

வழமையாக ஒரு சீரான பாதையில் மட்டுமே நடப்பதற்கு பழக்கப்பட்டவர்கள் இவர்கள். தங்களின் நடையிலும் இருப்பிலும் சிறு ஆட்டம் காணினும் தள்ளாடிப்போய் ஆய் கூய் கூச்சல் போடும் இவர்களே எப்போதும் சாதிகாப்பாற்றும் சாதிமான்களாக மறைவிலும் வெளியிலும் உடகாந்திருப்பவர்கள்.இவர்கள் தரவளிக்கே முதலில் சனதர்மபோதினிகள் தேவையாய் இருக்கின்றன. ●

## நூல்கள் அறிமுகமும் கலந்துரையாடலும்.



தொடர்புகட்கு:

Rajeswari Balasubramani
47, Norman Av
Woodgreen
London N22SES
U.K

08-04-2001 அன்று Garges Sazrcelles இல் Salle Pastur மண்டபத்தில் பாரிஸ் இலக்கிய நண்பர்களால் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டது. கூட்டம் ஜெபாவின் தலைமையுடன் ஆரம்பமாகியது.

ராஜேஸ்வரி பாலசுப்பிரமணித்தின் "தமிழ்க் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும்" என்ற நூலும், "அவனும் சில வருடங்களும்" நவலும், இளவாலை விஜயேந்திரனின் "நிறமற்றுப் போன கனவுகளும்" என்ற கவிதைத் தொகுதியும் விமர்சனங்களுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

தமிழ்க் கடவுள் முருகன் வரலாறும் தத்துவமும் என்ற நூலில் நிறையவே தகவல் பிழைகள் இருக்கின்றன என்று அவற்றைச் சுட்டிக் காட்டி அரவிந் அப்பாத்துரை அவர்கள் விமர்சனம் செய்தார். அதற்கு ராஜேஸ்வரி அவர்கள் பதிலளித்தார்.

அடுத்து விஜயேந்திரனின் கவிதைத் தொகுதியை ஈழத்துக் கவிதைச் சூழலுடன் ஒப்பிட்டு கற்சுறா கட்டுரை ஒன்று வாசித்தார். கூட்டத்தில் 25 பேர் வரையில் கலந்து கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எக்ஸில் வெளியீடுகள்:




"நிஷ்டை" சிறுகதைத்தொகுதி
க.கலாமோகன்



இந்தியத் தொடர்புகட்கு:
யாதுமாகி
9/3.முருகப்பெருமாள் தெரு,
பாளையங்கோட்டை,
திருநெல்வேலி-627 002.
தொலைபேசி : 0462-579575
மின்அஞ்சல் :
yadhumahi@yahoo.com

"யுத்தத்தின் இரண்டாம் பாகம்" சிறுகதைத்தொகுதி
சக்கரவர்த்தி

# அடுத்த எமது வெளியீடுகளாக:



புகலிடக் கேள்விகளை மையப்படுத்திய க.கலாமோகனின் "Et demain?". புகலிட தமிழர் வாழ்விலிருந்து முதலாவது பிரஞ்சுக்கவிதைத்தொகுதி இரண்டாவது பதிப்பாக கவிஞரின் புதிய முன்னுரையுடன்

ஆறுமுக நாவலனின் ஆசார கறை அதிகம் படியாமல் சைவம், யாழ்ப்பாணம், என்ற மையங்களிலிருந்து விலகி நிற்கும் தேசம் இது. பழந்தமிழும், அவர்தம் வாழ்வும் நாட்டுப்புற கலைகளும் இன்றும் ஜீவிக்கும் கிழக்கிலங்கையின் வரலாற்று ஆவணம் "மட்டக்களப்பு தமிழகம்" இது ஓர் மானுடவியல் புதையல்



நூல் - "மட்டக்களப்பு தமிழகம்"
பதிப்பு: இரண்டாவது பதிப்பு
ஆசிரியர்: பண்டிதர் வீ.சி.கந்தையா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**Published by Exil. R. INBAVALLI,**
**B.P.204, 92604 Asnieres Cedex, FRANCE**
**No d'enreg: 13022670**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்